3-10

சுதேசமித்திரன்

Vol 25 ஏப்ரல் - 1954

JL
144106.

SWADESAMITRAN WEEKLY 4,ஏப்ரல்'54 4 AS.

சுதேசமித்திரன்

சந்தா விகிதங்கள்

★

தினப்பதிப்பு

	(இந்தியா, இலங்கை, தபால் மூலமாக)	சென்னை	வெளி நாடு
	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.
1 வருடம் ...	26 0	24 0	32 0
6 மாதம் ...	13 8	12 8	16 0
3 மாதம்	7 0	6 8	8 0
1 மாதம் ...	2 8	2 4	—

தனிப்பிரதி

ஞாயிறு மலர் ... விலை 2 அணு
இதர நாட்களில் ... விலை 1 அணு

வாரப்பதிப்பு

		ரூ. அ.	ரூ. அ.
1 வருடம்	...	13 0	16 0
6 மாதம்	...	7 0	8 0
3 மாதம்	...	3 12	—

தனிப்பிரதி அணு 4

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன் ஆபீஸ், மவுண்ட் ரோட், மதராஸ். 2.

பொருளடக்கம்

Vol XXV] விஜயஸு பங்குனிமீ 22உ (4—4—54) [No 9

இலங்கையில் நிர்ப்பந்தம்		3
காற்றுவாக்கிலே......	சிரேயஸ்	4
குதர்க்கம்	தவளம்	5
வேதாவின் மனம்	ராமமூர்த்தி	6
சன்மானம்	எம். எஸ் ராஜலக்ஷ்மி	11
வளர்த்தபாசம்	ராமமூர்த்தி	17
பெண்மனம்	...ம்மாள்	20
ஊர்வலம்	...தயவாசி	23
நாலாவது கடிதம்	ஏ. வி. பத்மஜா	28
ஆரியர் சூழ்ச்சி	சீமன்	31
கூலிக்காரியின் மகன்	கலைப்பித்தன்	32
பேராசைக்காரன்	...ன்	35
அனுமந்தன் குன்று	...தனு	38
சாரணர் உலகம்	...ர்த்தன்	39
ஹிந்தி உலகம்	பண்டிதஜீ	40
தையற் கலை	எ. சுகுமார்	42
வள்ளல் வி. வி.	வி கே. பார்த்தசாரதி அய்யங்கார்	44
பெரம்பூரில் பிரம்மாண்ட தொழிற்சாலை		46
கலாமண்டபம்		47

'மித்திரன்' வாரப் பதிப்பில் கதைகளில் வெளியாகும் பெயர்கள் சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிபபிடுவன அல்ல.





பொய்க்கால்!

கிழக்கு வங்காளத்தில் ஐக்கிய முன்னணியிடம் முஸ்லிம் லீகுக்குக் கிடைத்த படுதோல்வியிலிருந்து முஸ்லிம் லீகின் உண்மை நிலை அம்பலமாகிவிட்டது

சுதேசமித்திரன் வாரப்பதிப்பு

வாழிய செந்தமிழ் — வாழ்க நற்றமிழர்

Vol XXV] விஜயஞூ பங்குனிமீ 22உ ★ 1954ஞூ ஏப்ரல்மீ 4உ [No 9

இலங்கையில் நிர்ப்பந்தம்

சமீப இந்தியா-இலங்கை ஒப்பந்தம், பலரும் எதிர்பார்த்தபடி, சிங்கள அதிகாரிகளிடை நல்லுணர்ச்சி விளைத்திருப்பதாகக் காணவில்லை. அதற்குமாருக, ஏதாவதொரு சாக்கில் அங்குள்ள இந்தியரது உரிமையைப் பறிப்பதிலேயே அவர்கள் நாட்டங் கொண்டிருப்பதாகத் தோற்றுகிறது. சென்ற சில தினங்களில் அவர்கள் திடீரென்று எடுத்துக்கொண்டிருக்கும் இரு நடவடிக்கைகளின் பொருள் வேறு யாதாக இருக்கக்கூடும்? முதலாவதாக, அவர்கள் இந்தியருக்கு அளித்துவந்த தற்காலிக வாசஸ்தல பர்மிட்டுகளைப் புதுப்பிக்கப் போவதில்லையென்று அறிவித்துவிட்டனர். அதாவது தற்போதைய பர்மிட்டுகள் காலாவதியானவுடன் அவ்விந்தியர் இலங்கையை விட்டுக்கிளம்ப வேண்டியதுதான். இன்னொரு நடவடிக்கை, இந்தியாவுக்கு வந்துபோக பல இந்தியருக்கு அளிக்கப்பட்டு வந்த அடையாளப் பத்திரங்கள் இனிக் கிடைக்காதென்பது. இவ்விரு அறிக்கைகளின்படியும் பாதிக்கப்படும் லக்ஷக்கணக்கான இந்தியர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கையில் நெடுநாளாக வசித்து வந்தவர்கள்; அங்கு பிரஜா உரிமை பெற மனுக் கொடுத்தவர்கள். அம்மனுக்கள் பற்றி ஒருவிதமாக முடிவாகு முன்பே இலங்கை சர்க்கார் இவ்வாறு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதன் பொருளென்ன?

உண்மையில் மேற்குறித்த இந்தியர் விஷயத்தில் இலங்கை சர்க்கார் இந்திய சர்க்காரைக் கலந்து பேசாமல் ஒரு தலைப்பட்சமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடாது. இதை சமீபத்தில் பண்டித நேருவும் இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனரும் தெளிவுபடுத்தியிருக்கின்றனர். எனினும் இலங்கை சர்க்கார் ஒரு தலைப்பட்சமாகவே அங்கிருந்து பெருவாரியான இந்தியர்களை விரட்டக்கூடிய இரு காரியங்களில் இப்போது முனைந்திருக்கின்றனர். இந்தியருக்கு அளிக்கப்பட்டுவரும் தற்காலிக வாச பர்மிட்டுகளைப் புதுப்பிக்க மறுப்பது இலங்கை குடியேற்றச் சட்டத்துக்கும் விரோதமானது. 1944-ம் ஆண்டிலிருந்து அத்தீவில் வசித்து வரும் இந்தியருக்கு அத்தகைய பர்மிட்டுகள் அளித்து அவற்றை தேவையானபோது புதுப்பிப்பது இலங்கை சர்க்காரின் கடமையென அச்சட்டம் தெளிவாக விதிக்கிறது. அத்தீவிலிருந்து அனுவசியமான அந்நியரை வெளியேறச் செய்து, வேலைகளைக் கூடியவரை இலங்கையர் மயமாக்குவது தங்கள் நோக்கமென்று இலங்கை சர்க்கார் அதிகாரி ஒருவர் கூறுகிறார். அந்நோக்கத்தைப்பற்றி நமக்கு எள்ளளவும் ஆட்சேபமில்லை. ஆனால் லட்சக்கணக்கான இந்தியரின் பிழைப்பில் மண்ணைப்போட்டு அவர்களை விரட்டியடிக்குமுன், அவர்கள் இலங்கைப் பிரஜைகளாகத் தகுதியற்றவர்களா என்பதை நிர்ணயிப்பது சாதாரண நீதி. அவ்வுரிமை பெற அவர்கள் சமர்ப்பித்துள்ள மனுக்கள் விஷயத்தில் ஏற்கெனவே நாம் குறிப்பிட்டதுபோல், இன்னும் முடிவேற்பட்டுவிடவில்லை.

வழக்கம்போல் இந்தியருக்கு அடையாளப் பத்திரங்கள் அளிக்க இனி மறுத்துவிடுவதென்று இலங்கை சர்க்கார் முடிவு செய்திருப்பதும் மேற்குறித்தது போன்றதொரு அநீதியே. இதுவரை இந்தியர் தங்கள் பிரஜா உரிமைக் கோரிக்கைக்குப் பங்கமின்றி இந்தியாவுக்கு வந்துபோக முடிந்தது. ஆனால் தற்போதைய அறிக்கைப்படி இனி அவர்கள் இந்நாட்டுக்கு வந்து போவதெனில் ஏதாவதொரு நாட்டுப் பிரஜையாகப் பதிவு பெற்றாகவேண்டும். இலங்கைப் பிரஜைகளாவதற்கு அவர்கள் அனுப்பியுள்ள மனுக்கள் பற்றியோ விரைவில் முடிவேற்படப் போவதில்லை. எனவே அவர்கள் இப்போது இந்தியா வந்து போவதெனில், தங்களை இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்வதைத் தவிர வேறு வழி கிடையாது. அவ்வாறு பதிவு செய்து கொண்டபின், பிறகு அவர்களை இலங்கையிலிருந்து எளிதில் வெளியேற்றிவிடலாமென்பது அத்தீவின் சர்க்காரது நினைப்பாயிருக்க வேண்டும். உண்மையில் இது இலங்கைப் பிரஜா உரிமையைத் துறக்கும்படி இந்தியரை நிர்ப்பந்திப்பதேயாகும். எனவே இதுவும் சமீப இந்தியா-இலங்கை உடன்பாட்டுக்கு முற்றிலும் விரோதமென்பது தெளிவு. அக்கிரம வழியில் இறங்கியுள்ள இலங்கை சர்க்காரைத் தடுக்க இந்திய சர்க்கார் விரைய வேண்டும்.

144 106

காற்றுவாக்கிலே..

எத்தனையோ மகான்களை, மகா வீரர்களைப் பெற்றெடுத்திருக்கிறது புராதன ரோமாபுரி. அத்தனை பேரிலும் தனிச்சிறப்பு வாய்ந்தவர் ஸின்ஸினாடஸ்—கனவிலும் கருதாத சர்வாதிகாரி பதவி தானாகத் தேடிவந்தது அவரை. ஸெனேட் சபை இவ்விதம் தம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறதென்ற செய்தி, வயலில் உழுது கொண்டிருக்கையில் கிடைத்ததாம் அவருக்கு. கலப்பையை அப்படியே போட்டுவிட்டு வாளேந்தி போர் முனைக்குச்சென்று எதிரிகளை விரட்டி வெற்றி வீரராக நகருக்குத் திரும்பினார். அதன்பின் பதினாறே நாளில் பதவியைக் கைகழுவிவிட்டு பண்ணைக்குத் திரும்பிவிட்டாராம் அவர். எண்பது வயதானபோது மறுபடியும் அதிகாரம் நாடிவந்தது அவரை. மக்களின் வேண்டுகோள் பேரில் அப்போதைய சர்வாதிகாரியை முறியடித்தார். உயர் கௌரவங்களும், மட்டிலா அதிகாரங்களும் கொடுக்க முன்வந்தது ஸெனேட் சபை. அத்தனையையும் துச்சமெனக்கருதி மூன்றே வாரத்தில் மீண்டும் விவசாயத்துறைக்குத் திரும்பிவிட்டாராம்!

இந்த இருபதாம் நூற்றாண்டில் பதவிமோகம் பழுத்திருக்கிற இந்நாளில், சந்து மூலைப் பிரசங்கிகூட 'சனாதிபதி' ஆகலாம் என்று மனப்பால் குடிக்கிற இந்தக் காலத்தில் இப்பேர்ப்பட்ட அதிசயம் நடக்குமென யாரும் எதிர்பார்க்கமுடியாதுதான். இருந்தபோதிலும் .... அவசரப்படாதீர்கள், ராஜாஜி, ஸின்ஸினாடஸின் ஸந்யாசத்துக்கிடையே பரிபூரண ஒற்றுமை இருப்பதாகக்கூற முற்படவில்லை நான். இருவரும் பதவியைவிட கடமை பெரிதென்றெண்ணி இருமுறை சேவை செய்ய முன்வந்தனரென்றாலும், நெருக்கடி நீங்கியதும் தாமாக விலகிக் கொண்டனரென்றாலும் ராஜாஜியின் துறவறத்துக்கு தேக நிலையே பெரிதும் காரணம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அந்த உடல் நோய்க்கு மனக்கஷ்டமே அதிகம் காரணம், மாற்றாரை விட சொந்த சகாக்களே சதா தொல்லை கொடுத்து அதைப் பெருக்கினார்கள் என்பதையும் ஒத்துக்கொள்கிறேன்.

ஆயினும் ராஜாஜி மனம் வைத்திருந்தால் இந்த மன நோயை நொடிப்பொழுதில் போக்கியிருக்கலாம், சற்றே விட்டுக்கொடுத்து சகாக்களிடம் சகஜமாகப்பழகி சௌஜன்யமாகப் பேசினால் உபத்ரவத்தை ஒழித்துக்கட்டியிருக்கலாம், ஓராண்டென்ன—ஒன்பதாண்டு கூடப் பதவியில் நீடித்திருக்கலாம் என்பது மறுக்கமுடியாத உண்மை. அப்படியே அவர்கள் மசிந்து கொடுக்காவிட்டாலும் கூட மேலிடத்தின் மூலம் வழிக்குவரச் செய்திருக்கலாம் என்பதும் பகிரங்க ரகசியம். இப்படியெல்லாம் அவர் செய்யாதது எதைக் குறிக்கிறது?—பற்றின்மையையா அல்லது வேறு ஏதாவதையா? ஸின்ஸினாடஸ் போன்ற ஞானியின் மனோபாவத்தையா அல்லது கௌடில்யரின் குல்லூகத்தனத்தையா?—உங்கள் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்.

"இல்லையில்லை, விரக்தியல்ல அவர் விலகக் காரணம், கல்வித் திட்டத்தை தம் கக்ஷியிலேயே சிலர் எதிர்க்கக் கண்டுதான், கருப்புச் சட்டைகளுடன் அவர்களும் கைகோர்த்தால் என்னாகுமோ என்று பயந்துதான் அவர் விலகுகிறார்" என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்குப் பதில் சொல்லும்பொறுப்பையும் உங்களுக்கே விட்டுவிடுகிறேன்—எதிர்ப்பைக் கண்டு அஞ்சுபவரல்ல ராஜாஜி; தேசத்தையே விரோதித்துக் கொண்டு, கட்டிக்காத்த காங்கிரஸ் ஸ்தாபனத்தையே விட்டு விலகி, காந்திஜிக்கே எதிராக தன்னந்தனியாக நின்று பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுக்கக் கோரியவர் அவர் என்பதை ஞாபகப்படுத்துங்கள் போதும். இன்று அவர் கூறுவது தப்பாகத் தோன்றினாலும் அதுவே சரி என்பது நாளை நிரூபணமாவதுதான் வழக்கம் என்பதையும் நினைவுபடுத்துங்கள் போதும்.

அதோடு, செல்லாக் காசாகி அவர் விலகிவிடவில்லை, இன்னமும் அவரது அறிவுத்திறன், தீர்க்க திருஷ்டி குறித்து பெரும்பாலோருக்கு — தெற்கே சிலரைத்தவிர — பெருமதிப்பு இருக்கிறது அவரிடம் என்பதையும் எடுத்துச் சொல்லுங்கள். அவரது உடல்நிலை இடம் கொடுத்தால், அவர் மட்டும் ஜாடை காட்டினால் மத்திய மந்திரி சபையில் மீண்டும் இடம் கொடுக்கத் தயாராயிருக்கிறார் நேரு, காங்கிரஸ் அக்ராஸனர் பதவியும் காத்துக்கிடக்கிறது ராஜாஜிக்கு என்பதையும் சொல்லிவையுங்கள் — இவற்றில் எதையாவது அவர் ஏற்பாரா என்பது எனக்குத் தெரியாது, ஜோஸ்யம் அறியாதவன் நான் என்பதை ஏற்கெனவேயே சொல்லியிருக்கிறேன். இருப்பினும் ஒன்றுமட்டும் நிச்சயமென்பேன்: காங்கிரஸுக்கு அவர் மீட்டுத்தந்த கொஞ்சநஞ்ச கௌரவம், அவர் விலகியதும் சேவா உணர்ச்சியால் உந்தப்பட்டு பலபேர் முதன் மந்திரிப் பொறுப்பேற்கப் போட்டியிட்டு முன்வந்ததால் ஊதிப் பெருத்து ஆகாசத்திலேயே கூடப்பறக்க ஆரம்பித்துவிட்டது! அடடா, இவ்வளவு பொறுப்பு உணர்ச்சி, தியாக மனோபாவம் உள்ளவர்களா காங்கிரஸ் எம். எல். ஏக்கள், ராஜாஜி வருமுன்பு எங்கே ஒளிந்திருந்தார்கள் இவர்கள் என்று அதிசயிக்க ஆரம்பித்திருக்கிறார்கள் பொதுஜனங்கள்!

இந்த அதிசயம் ஆனந்தமாகவோ அல்லது ஆத்திரமாகவோ மாறுவது, புடம் போட்டுப் பொறுக்கப்பட்ட புதுத் தலைவரையே பெரிதும் பொறுத்திருக்கிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை. 'சடாரிமரியாதை' பெற தம் பின்னால் டஜன் கணக்கில் ஆட்கள் இருக்கிறார்கள், சற்றே இடறினாலும் ஆபத்து என்பதை உணர்ந்து அவர் ஜாக்கிரதையாக நடந்து கொள்வாரென்றே நம்புகிறேன். இதோடு, மேதாவி டீன் இஞ்ஜ் சொன்ன வார்த்தைகளை, 'ஆரசியலும்' அதிகாரமும் அனுபவமும் சிறந்த ஆசிரியர்கள்: ஆனால் அவை கோரும் தக்ஷிணையோ மிகமிக அதிகம்' என்ற பொன்மொழிகளையும் அவர் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டுமென்பது அடியேனுடைய அவா.

அவருக்கு மட்டுமென்ன, இன்னும் பலருக்கும் இன்றைய நிலையில் பொருந்தக் கூடியதாக பல மணி வாக்குகளை உதிர்த்திருக்கிறார் இஞ்ஜ். உதாரணமாக ராஜாஜிக்குப் பொருந்தாத இது சொல்லுங்கள்: 'சரித்திரப் பெரும் புள்ளிகள் பலர், ஸீஸர்களும் லிங்கன்களும் — சரியான சமயத்தில் 'கொலையுண்டதன்' மூலம் மேலும் மேன்மை அடைந்திருக்கிறார்கள்' இதைப் பற்றியும் அவர் சிந்திக்கலாம்: 'சமூகம் பூராவாகக் குலைந்திருக்கிறது. ஈயப் பாத்திரங்களைக்கொண்டு தங்கக் கட்டியை (நேரிய நடத்தையை) தயாரிக்கக்கூடிய அரசியல் ரஸ்வாதம் ஏதுமில்லை'.

இன்னும் பலவுண்டு: 'ஈட்டிகளாலான சிம்மாசனத்தைச் செய்யலாம். ஆனால் செய்பவரே கூட அதில் உட்காரமுடியாது (யாருக்காக இதைச் சொல்கிறேன் என்பதை நான் கூறவும் வேண்டுமா?) 'நாசம் விளைவித்தவர்களைத் தூக்கிவைத்துக் கொண்டாடுகிறது நாகரீக உலகம்; ஆனால் நன்மை செய்தவர்களையோ நிர்மூலமாக்குகிறது'—நம் காங்கிரஸ் எம். எல். ஏ.க்களுக்கு சமர்ப்பிக்கிறேன் இதை.

பொதுஜனங்களுக்குப் பொருத்தமாகவும் ஒன்று உண்டு; 'நமக்குத் தகுந்த ஆட்சிதான் கிடைக்கும்' ஆமாம், 'மன்னன் எப்படியோ, மக்களும் அப்படியே' என்ற காலம் மலையேறிவிட்டது. இது ஜனநாயக யுகம். ஆகவே ஜனங்களுக்கேற்ற சர்க்கார்தான் ஏற்படும். அப்படிப் பட்டதுதானே இப்போதும் கிடைத்திருக்கிறது?

—சிரேயஸ்



இந்திய இணைப்பு இயக்கத்திற்கு வலுவூட்ட முற்பட்டுள்ள பிரஞ்சிந்திய மந்திரி குபேர், ஆடம்பரங்களையெல்லாம் துறந்து வெறுங் கட்டாந்தரையில் ஓய்வெடுத்துக்கொள்கிறார்.

—புதுவை செய்தி.

'குபேர்', 'குசேல்'ராக ஆனது தங்கள் பொருட்டுத்தான் என்று எண்ணும் போது, பிரஞ்சிந்திய மக்கள் தாங்கள் 'குபேர சம்பத்'தையே அடைந்துவிட்டதாகப் பூரிப்பு கொள்ளலாம்!

• • •

சங்கீத சபைகளுக்கு தமாஷா வரி விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பது பின்னும் நீடிக்கப்பட்டிருப்பதாக நிதி மந்திரி கூறினார்.

—சென்னைச் செய்தி.

அநேக சங்கீத சபைகளின் நிகழ்ச்சிகள் 'தமாஷா'வுக்குப் பதில் 'அழுது வடி'வதன் காரணமாக விருக்குமோ, இந்த முடிவு?!

• • • •

சாமான்களைப் பக்கத்தில் வைத்துவிட்டுப் பையன்கள் பட்டம் விடுவதை ஸ்வாரஸ்யமாக பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் தனது உடைமைகளைத் திருட்டுக்கொடுத்து விழித்தார்.

—ரத்மலான் செய்தி.

ஐயோ, பாவம்! அசட்டுப் 'பட்டம்' அல்லவா கட்டிக்கொண்டுவிட்டார்!!

• • •

ஹாலிவுட் படமொன்றில் நடிக்கும் ஒரு பூனைக்கு தினமும் ஆயிரம் தபால்களுக்குமேல் அதன் விசிறிகளிடமிருந்து வருகிறது!

—ஹாலிவுட் செய்தி.

'சீ! இந்தத் தபால்களால் எனக்கென்ன உபயோகம்? எனக்கு வேண்டியது பால்தானே!' என்று பிரஸ்தாப பூனை சலித்துக் கொண்டிருக்குமானால் வியப்பில்லை!

• • •

தங்கள் கணவன்மார்களின் சம்பளம், பஞ்சப்படி—ஆகியவைகளை உயர்த்த வேண்டும் என்று கோரி என். ஜி. ஓக்களின் மனைவியரிடமிருந்து வந்த கோரிக்கை சர்க்காருக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்ததாக அஸெம்பிளியில் நிதி மந்திரி கூறினார்!

—சென்னைச் செய்தி.

மனைவிமார்களின் கோரிக்கைகளைக் கண்டு தாங்கள் மாத்திரம் 'அதிர்ச்சி' அடைந்து வந்த என். ஜி. ஓக்கள், சர்க்காரே 'நடு நடுங்கி'ப் போவதைக் கண்டு மலைத்தே போயிருந்தாலும் ஆச்சரியமில்லை!

—தரணம்.

வேதாவின் மனம்

ராமமூர்த்தி

ரங்கு அப்படி ஒரு வார்த்தை சொல்வான் என்று கனவில்கூட நினைக்கவில்லை வேதா. ஸ்தம்பித்துப்போன அவள் கண்களிலிருந்து 'பொலபொல'வென்று நீர் உதிர்ந்தது. 'நீயா இப்படிப் பேசறே ரங்கு' என்றாள் துக்கத்துடன். பின்னே என்ன மன்னி பொறுமைக்குஎல்லையேயில்லையா நான் தான் பொறுத்துப் போறேன். அவளுக்கென்ன விதி' என்றான் ரங்கு. 'அவர் சொன்னதிலே என்ன தப்பு ரங்கு' அமாவாசையும் அதுவுமா எட்டு மணி வரைத் தூங்கலாமான்னு தானே கேட்டார். அதுகூடப் பொறுக்காமல் அவள் கோபித்துக்கொண்டு பிறந்தாத்திற்குப் போறதும், நீ எங்களைக் குற்றம் சாட்டுவதும் தான் நியாயமா. அவர்தான் கோபத்திலேசொல்லிவிட்டாரானாலும் நீ இப்படி சண்டித்தனம் பண்ணலாமா. பதினைந்து வருஷமாய் இந்த வீட்டில் வளர்ந்துவிட்டு இப்போ தனியாய்ப் போறேன்னு சொல்றயே உனக்கு அழகாயிருக்கா இது அப்படி என்ன கொடுமை பண்ணிவிட்டோம் உன் பெண்டாட்டியை என்றாள் வேதா. 'கொடுமையோ இல்லையோ, அவளுக்கும், இந்த வீட்டுக்கும் ஒரு நாளும் சரிபட்டுவராது. அவள் பெரிய இடத்துப் பெண் செல்லமாய் வளர்ந்தவள். மகா ரோஷக்காரியாகவும் இருக்கிறாள். எனக்குத்தான் தலையிலெழுத்து. சரி சரி மேலே பேச்சென்ன அண்ணாவிடம் சொல்லிவிடு. எங்கமாமனாத்து 'அவுட் ஹவுஸிலே' இந்த வாரமே தனிக்குடித்தனம் வைத்துவிடுவதாகத் தீர்மானம் செய்து விட்டேன்' என்ற ரங்கு மேற்கொண்டு பேச்சுக்கு இடம் வைத்துக் கொள்ளாமல் 'விடுவிடு' என்று வெளியேறினான். வேதா இடிந்துபோய் உட்கார்ந்து விட்டாள். 'என்னடி சொல்லிவிட்டு போறான் துரை' என்றபடி அங்கு வந்த துரைசாமி நீர் நிறைந்த வேதாவின் விழிகளைப் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டார். 'என்னத்தைச் சொல்ல அவன் பெண்டாட்டிக்கும் நமக்கும் ஒத்துவராதாம் அதனாலே குடித்தனம் வைக்கத்தான் போறானாம் என்ற வேதாவின் குரல் தழதழத்தது. 'ரொம்ப நல்லதாய்ப் போச்சு என்றார் துரைசாமி அலக்ஷியமாக ' நல்லதாய்ப் போச்சா நன்றாய்தானிருக்கிறது நீங்கள் பேசறது. இத்தனை வருஷமாய் பெத்தக் குழந்தைகளுக்கு மேலே பாசம் வைத்து வளர்த்த எனக்குத்தான் தாங்கல்லே துக்கம். நம்ம குழந்தைகளுக்குக் குறைத்தாலும் அவன் விஷயத்திலே ஒரு குறையும் இருக்கக்கூடாது என்று செய்யவில்லையா எந்த விஷயத்திலே அவன் மனம் நோக நடந்து கொண்டிருக்கிறேன். மாலதியைத்தான் கல்யாணம் செய்துகொள்வேன்னு ஒத்தைக் காலிலே நின்னானே, நீங்களாவது பெரிய இடத்துப் பெண் வேண்டாம் நமக்கு அடங்காதுன்னேள். நான் ஒரு வார்த்தை சொன்னேனா பிடிவாதம் பிடித்து அவளையே அவனுக்கு கல்யாணம் செய்து வைக்கவில்லையா, மாலதி இங்கு வந்துதான் ஒரு வருஷமாச்சே, ஆயிரம் இருக்கும் ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறேனா' என்ற வேதா கோபத்துடன் கணவனைப் பார்த்தாள். 'வேதாகாலம் ரொம்ப மாறிவிட்டது. பத்து வருஷத்திற்கு முன் இருந்த மாதிரியே இருக்கே நீ இன்னமும் அவனைக் குழந்தையாகவே நினைத்துக் கொண்டிருக்கே. அது தப்பு கொஞ்சம் விட்டுத்தான் பிடிக்கணும். எங்கே போறான் என்னிக்காவது உன்னைத் தேடி வரத்தான் செய்வான் வருத்தப்படாதே' என்றார் துரைசாமி.

எவ்வளவு முயன்றும் அவளால் மனதைத் தேற்றிக் கொள்ள முடியவில்லை.

பதினான்கு வயதிற்கே துரைசாமியைத் தேடி வாழ்க்கைப் பட்டாள் அவள். புகுந்தஇடத்திற்கும் பிறந்த இடத்திற்கும் நல்ல பெயரைத் தேடிக் கொடுத்தாள். நாலு வருஷத்திற்குப் பிறகு கடைக்குட்டி மைத்துனன் ரங்குவை அவள் கையில் ஒப்புவித்துவிட்டு கண்ணை மூடினாள் அவள் மாமியார். இருக்கிற நிலபுலன்களை விற்றுப் பணத்தை எடுத்துக்கொண்டு குடும்பத்துடன் சென்னை சென்றார் துரைசாமி. ஒரு சிறுவீட்டை விலைக்கு வாங்கிக் கொண்டு வாழ்க்கையை தொடங்கினார். ஆயிரம் ரூபாய் 'டிபாஸிட்' கட்டியதன் பேரில் வெகு சுலபமாகவே ஒரு நல்ல வேலை கிடைத்தது. எடுத்த எடுப்பிலேயே நூறு ரூபாய் சம்பளம். நாளாக ஆக முதலாளியின் அபிமானத்திற்குப் பாத்திரமானதுரைசாமிவெறும்குமாஸ்தா பதவியிலிருந்து தலைமை குமாஸ்தாவுமாகி இரட்டிப்பு சம்பளமும் பெற்றார். ஒருபிள்ளையும் இரண்டு பெண்ணும் பிறந்தும் ரங்குவிடம் உயிரையே வைத்திருந்தனர் தம்பதிகள். அவனும் அவர்களையே பெற்றோராக மதித்தான். ஒரு குறையும் இல்லாமல் பி. எஸ். ஸி. வரைபடித்த ரங்கு பிரபல மருந்து ஷாப்பின் அஸிஸ்டெண்ட் மானேஜரானான். போட்டிமேல் போட்டியாக வரன் வந்தது. அவனுடைய கம்பெனி மேனேஜரின்பெண்மாலதியையே விரும்பினான் ரங்கு. வேதாவே முன் நின்று அவன் விருப்பத்தை நிறைவேற்றினாள். மாலதியும் புக்ககம்வந்தாள். தான் பணக்கார வீட்டுப் பெண் படித்தவள் என்பதையே வெளிப்படுத்திக் கொண்ட மாலதி மன்னியின் குடித்தனப் பாங்கையும், கர்னாடகப் பழக்க வழக்கங்களையும் வெளிப்படையாகவே அலட்சியம் செய்தாள். நடை, உடை பாவனை எல்லாவற்றிலும் புதியவனாகவே மாற்றி விட்டாள் ரங்குவை. 'பழைய ரங்குவா' என்று பார்த்தவர் எல்லோரும் வியப்புறும் வண்ணமாக மாறிய ரங்கு கொஞ்சங் கொஞ்சமாக மாலதியின் கைப்பொம்மையாகினான். ஹோட்டலில் வசிக்கும் விருந்தாளியைப்போல் நடந்து கொண்டாள் மாலதி. பொறுத்துப் பார்த்தாள் வேதா. ஓர்ப்படி வந்தால் குடும்பப் பொறுப்பைஅவள் கையில் ஒப்புவித்துவிட்டு ஹாய்யா இருக்கலாம் என்று கோட்டை கட்டிய அவளுக்கு மாலதியின் போக்கு கசப்பையளித்தது. ரொம்ப முடியாமல் போனபோதுகண்டித்தாள். அதன் பலன் பிறந்தகத்தில் ஒரு கால், புக்ககத்தில் ஒரு கால் என்று ஆனாள் மாலதி. மாலதியின் பெற்றோர் வேதாவை ஏசியதுடன் தனிக்குடித்தனம் வைக்கும்படியும் ரங்குவைத் தூண்டினர். எப்படியோ 'மாலதியைப் பாடாய்ப் படுத்துகிறாள் மன்னி' என்ற அபிப்பிராயம் ரங்குவின் மனதில் தீவிரமாக ஏற்பட்டுவிட்டது.

அன்று அமாவாசை. விடியற்காலையிலேயே எழுந்துவிட்ட வேதா மடியாய் காரியம் செய்து கொண்டிருந்தாள். மணி எட்டடித்தும் மாலதி வராமற்போகவே மாடிக்குப் போன வேதா 'மாலதி மணி எட்டாயிடுத்து எழுந்திரம்மா. இன்னிக்கு அமாவாசை' என்று அழைத்தாள். தடாரென்று கதவைத் திறந்து கொண்டு வந்த மாலதியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. தடதடவென்று மாடியிலிருந்து இறங்கினாள். தர்ப்பணம் பண்ணி முடித்த துரைசாமி கோபத்துடன் 'வரவர ரொம்ப நன்றாயிருக்கு. அவ ஒண்டியாய்த் திண்டாடறா அமாவாசையும் அதுவுமாய். எட்டு மணிக்கா எழுந்து வரது' என்று படபடத்ததைக் கேட்டு ஒரு கணம் அப்படியே நின்றாள். அவளைத் தாண்டி சமையலறைக்குப்போன வேதா "வாம்மா மாலதி காப்பி ஆறிப் போகிறது" என்றாள். "மளமள" வென்று மாடிக்குப் போன அவள் "எழுந்திருக்கக் கொஞ்ச, நாழியாச்சுன்னுட்டு உங்கள் அண்ணாவும் மன்னியும் என்ன பேச்சுப் பேசறா தெரியுமா ஒரு நிமிஷங்கூட இருக்க முடியாது என்னால் இங்கே"என்று படபடத்து விட்டு அடுத்த நிமிஷமே பிறந்தகத்திற்கு யாருடைய உத்திரவும் இன்றிப் போயே விட்டாள். "குடித்தனம் வைக்கத்தான் போறேன்" என்ற ரங்குவும் வேட்டகத்திற்கு ஓடினான்.

மாலதி ரங்கனாதனின் தனிக் குடித்தனம் ஆரம்பமாகியது. முதல் இரண்டு வாரத்திற்கு வாழ்க்கையை ஸ்வர்க்க போகமாகவே நினைத்தான் ரங்கு. ஆனால் மாலதியின் உறவினர் ஒவ்வொருவராக அவன் வீட்டில் "காம்ப்" போட்டு அவனைத் திவாலாக்கப் பார்ப்பதையறிந்த போது கோபம் கோபமாக வந்தது. ஜில்லுன்னு "மாரீஸ் மைனர்" காரில் வந்திறங்கிய மாலதியின் சித்தப்பா சித்தி "மாலதி பாயசம் பலே ஜோர், கேசரி பிரமாதம், அந்தத் தயிர் வடையிலே இன்னும் ரண்டு போடு"என்று அட்டகாசத்துடன் சாப்பிட்டபோது ரங்குவிற்குச் "சொரேர்" என்றது. கடனல்லவா ஏறுகிறது. மாலதி காரியம் செய்யத் தெரியாதவளல்ல. பிறந்தகத்தார் மெச்சக் குடித்தனம் செய்தாள். குடித்தனம் வைத்து விட்டுப் போனவர்தான் துரைசாமி. எட்டிக்கூடப் பார்க்கவில்லை. வேதா மட்டும் இரண்டொரு முறைப் போனாள். மாலதி அவளை மதிக்கவேயில்லை. கடைசி முறையாகப் போனபோது மாலதியின் மாமா மாமி வந்திருந்தனர். "உன் ஓர்ப்படியா" என்று வியப்புடன் மாமி கேட்டபோது "ஆமாம்" என்று அஸ்வாரஸ்யமாக பதிலளித்தாள் மாலதி. "படுத்தினதெல்லாம் போதாதுன்னு இங்குமா வந்து விட்டாள்" என்று மாலதியின் மாமி கூறியதைக் கேட்ட வேதாவிற்கு "சுளீர்" என்று சாட்டையால் அடித்ததுபோலிருந்தது. துக்கத்துடன் எழுந்த அவள் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் வந்துவிட்டாள். வருஷம் இரண்டாகியது. மாலதிக்குப் பிறந்த குழந்தையைக்கூடப் பார்க்கவில்லை.

அன்று மாலதியின் குழந்தைக்குக் கடுமையான ஜுரம். அரை உடம்பாய்க் காணப்பட்ட மாலதி கண்ணும் கண்ணீருமாகத் தலை மாட்டின் கீழ் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய மனம் ஆடிக் காற்றிலகப்பட்ட சருகுபோல் தத்தளித்துக்கொண்டிருந்தது.

அவள் நினைத்ததென்ன நடந்ததென்ன பிறந்தகத்தோடுப்போய் விட்டால் நன்றாயிருக்கலாம். கணவனும் தானும் "ஜாலியாய்" தினம் காரிலே போகலாம். செட்டும் கட்டுமாய்க் குடித்தனம் பண்ணி நாலு காசு சேர்க்கலாம் என்ற எண்ணத்தில்தான் மைத்துனர் வீட்டை விட்டுப் புறப்பட்டாள். தடபுடலாக மாப்பிள்ளையை வரவேற்ற வேட்டகத்தார் நடத்திய உபசரணையைக் கண்டு ரங்கு முதலில் திகைத்தே போய்விட்டான். அவர்களுடைய மனதைக் கவர தாராளமாய் செலவழித்தான். நாளாக ஆகப் பொருளாதார நிலை அவனை விழிப்படையச் செய்தது. தலைகால் புரியாமல் துள்ளிய மாலதிக்கு சில மாதங்களுக்குப் பிறகுதான் கணவனுடைய கஷ்டம் தெரிந்தது. தெரிந்தும் கௌரவத்தை விட மனமில்லாமல் பழையபடி வாழ்க்கை நடத்தியதால் ரங்குவின் அதிருப்திக்கு ஆளானாள். தம்பதிகளுக்குள் அடிக்கடி மனஸ்தாபம் ஏற்பட்டது. மாலதியின் தகப்பனார் பெரிய குடும்பஸ்தர். காலேஜிலே படிக்கிறப் பையன் கல்யாணத்திற்கு நிற்கும் பெண் என்று மாலதிக்குப் பிறகும் இருந்தனர் உடன் பிறந்தோர். வருகிற வரும்படி சாப்பாட்டிற்கே போதாமல் தான் மாப்பிள்ளைக்கு "அவுட் ஹவுஸ்" போர்ஷன் கொடுத்தார். அவனிடம் "அகப்பட்டவரைச் சுருட்டுவோம்" என்று அவர்

நினைத்ததன் பலன் அவனே அவ ரிடம் கடன் கேட்க ஆரம்பித் தான். "சீ இந்தப் பழம் புளிக் கும்" என்பது போலாகிவிட்டது அவருக்கு. மாலதியிடமே அலட் சியமும் வெறுப்பும் கொண்டார். 'உன் பேச்சைக் கேட்டுக் கெட் டுத்தான் அண்ணாவை வெறுத் துக்கொண்டேன்" என்று ஏச ஆரம்பித்தான் ரங்கு. அப்போது தான் மாலதியின் கண்களும் திறந்துகொண்டன. வேதா மன்னியோடு இருந்தால் இந்தக் கஷ்டம் வருமா,பெற்றவர் கடமை எல்லாம் ஒருத்தன் கழுத்திலே கட்டுகிற வரைக்கும்தான். உண்மை தெரியாமல் உயிருக் குயிராய் நேசித்த ஓர்ப்படியை மதிக்காமல் வந்தேனே. வந்து என்ன சுகத்தைக் கண்டேன். இருந்த நாலு நகையும் போச்சு. கட்டின கணவனுக்கும் வெறுப் பேற்பட்டது. பிறந்தகத்து மதிப் பும் போச்சு. கடனும் கவலையும் தான் மிஞ்சியது. இரண்டு நாளாய் கடுமையாய் ஜுரம் அடிக்கிறது குழந்தைக்கு. திரும் பிக்கூடப் பார்க்கல்லே அப்பா அம்மா. டாக்டரோ பழைய பாக்கி ஐம்பது ரூபாய் எங்கே அதைக் கொடுங்கோ முதல்லேங் கார். "அவர்" தான் என்ன செய் வார், யாரைக் கடன் கேட்பார். பிராணன் போனாலும் அண்ணா விடம் மன்னிப்புக் கேட்கக்கூடா துன்னுவேற வைராக்யம்.எல்லாம் இந்த பாவியாலே வந்ததுதானே" என்று வருந்தி வருந்திக் கண் ணீர் சொரிந்த மாலதி "விஷம் ஏறுவதுபோல் ஜுரம் ஏறு கிறதே குழந்தைக்கு. என்ன செய்வேன்அவரையும் காணோமே" என்று வாய்விட்டுப் புலம்பினாள்.

சோர்ந்த முகத்துடன் உள்ளே வந்தான் ரங்கு. "டாக்டரைப் பார்த்தேளா என்ன சொன்னார்? பணம் எங்கேயாவது கிடைத் ததா? கண்ணை முழிக்கல்லையே குழந்தை" என்றபடி பரபரப் புடன் வரவேற்ற மாலதியின் கண்கள் நீரைக் கக்கியது. "சும்மா தொந்தரவு பண்ணாதே மாலதி. ஆயிசு இருந்தால் பிழை ப்பான் குழந்தை. இல்லாட்டா சாகட்டும். நான் என்ன செய்ய றது? ஒருத்தர் பாக்கியில்லாம கேட்டாச்சு கடன். காலணா கிடைக்கல்லே, டாக்டர் வீட்டுக் கும் நடையாய் நடந்தேன். அந் தப் பாவியின் மனசு கல்லாயிரு க்கு உங்கப்பன் மனசைப்போல. கடைசியாய் டாக்டரின் காலி லேயே விழுந்து கெஞ்சினேன். சரிதான் போய்யான்னுட்டான் தாக்ஷண்யமில்லாமல். விசிட்டிங் -ஹாலிலே மன்னி குழந்தை ரமாவோட உட்கார்ந்திருந்தாள். அவள்மூஞ்சியிலே முழிக்கஎன்ன யோக்கியதையிருக்கு எனக்கு. ஓடிவந்து விட்டேன்" என்று விரக்தியுடன் பேசிய ரங்கு "உஸ்" என்று ஆயாசத்துடன்

சாய்ந்தான் ஈசிசேரில். "மன்னி யைப் பார்த்தேளா பேசாமல் வந் துட்டேளா" என்று படபடத்த மாலதி "ஐயோ இந்த சமயத் திலே கூடவா இப்படியிருக் கணும் நீங்கள் நான் போறேன். உங்க மன்னி காலிலே விழறேன். கட்டாயம் மனசு இரங்குவாள். என் குழந்தையைக் காப்பாற்று வாள்" என்று விம்மியபடிப் புறப் பட்டாள். ஏதோ பேச வாய் திறந்தான் ரங்கு.

"டக்டக்"கென்ற பூட்ஸ் ஒலி கேட்டது. "யாராயிருக்கும்" என்று விழித்தனர் இருவரும். அவர்களுடைய பிரமை நீங்கு வதற்குள் உள்நுழைந்த டாக்டர் சேகர் "மிஸ்டர் ரங்கனுதன் இந் தக் குழந்தைக்கா உடம்பு சரி யில்லை" என்று அதன் அருகில் வந்தார். கால்லே விழுந்து கெஞ் சிக்கூட வராத டாக்டர் வீடு தேடி வந்தது "கனவா நினைவா" என்று புரியாமல் திகைத்த ரங்கு விற்குப் பேசவே நா எழவில்லை. மளமளவென்று குழந்தையைப் பரிசோதித்து இஞ்செக்ஷனும் செய்து நல்ல மருந்துகளையும் கொடுத்து விட்டுப் புறப்பட்ட டாக்டர் சேகர்"நாளைக்கு வரேன் சார்" என்றபடிக் காரில் ஏறி னார். "என் நன்றியை எப்படித் தெரிவிக்கிறது உங்களுக்குன் னுத் தெரியல்லே. தெய்வந்தான் நீங்கள்" என்று குழறினான் ரங்கு. அவர் போன பிறகு "டாக் டர் வந்த விதம் எப்படி" என்று யோசித்து யோசித்து மூளை யைக் குழப்பிக்கொண்டனர் தம் பதிகள். உண்மை புலப்பட வில்லை. நாலே நாளில் குழந்தை யின் உடம்பு தேறியது.

அன்று முதல் தேதி. சம்பள த்தை வாங்கிக்கொண்ட ரங்கு "கடன்காரர்களுக்குப் பணத்தை கொடுப்பதா, குடித்தனத்திற்கு செலவழித்து விடுவதா, டாக்ட ருக்குக் கொடுப்பதா" என்ற குழப்பத்துடன் வீடு வந்தான். குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்த மாலதி "சம்பளம் வாங்கி விட்டேளா" என்றாள். "வாங்கியாச்சு மாலதி இந்த நூத்தி ஐம்பது ரூபாயைக் கொண்டு என்ன செய்யறதுன்னு தான் யோசிக்கிறேன். கடனோ கழுத்து மட்டும் இருக்கு. டாக் டருக்குக் கொடுக்காவிட்டாலும் நன்றாயிராது. வீட்டுச் செலவிற் கும் போதாது" என்றான் ரங்கு. "நான் சொல்றதைக் கேளுங்கோ பட்டினிக் கிடந்தாலும் கிடப் போம். டாக்டருக்குப் பாதிப் பணத்தையாவது கொடுத்து விடு வோம். அவர் மட்டும் இரங்கியிரா விட்டால் நம்மக் குழந்தையைப் பார்க்க முடியுமா உயிரோடு" என்ற மாலதி குழந்தையை அணைத்துக்கொண்டாள். "சரி

மாலதி நீயும் வா" என்று ரங்கு புறப்பட்டான்.

தம்பதிகளையும், குழந்தையையும் கண்ட டாக்டர் மலர்ந்த முகத்துடன் "வாங்கோ வாங்கோ உட்காருங்கோ" என்று உபசரித்தார். "சமயத்திலே தெய்வம் மாதிரி வந்து காப்பாற்றினேள். நாங்கள் பணம் கொடுக்கவேண்டியவாங்கறதைக்கூட மறந்து" என்று தழதழத்த குரலில் பேசியபடி பணத்தை எடுத்தான் ரங்கு. "பணமா எல்லாம்தான் வந்துடுத்தே சார்" என்றார் டாக்டர். "வந்துடுத்தா யார் கொடுத்தது" என்றான் ரங்கு ஆச்சரியத்துடன். "உங்கள் மன்னிதான்". "மன்னியா, அவளுக்கெப்படித் தெரியும்" என்று பரபரப்புடன் குறுக்கிட்ட ரங்குவின் கண்களில் நீர் துளிர்த்தது. "கடைசியாய் நீங்க வந்தேளே அன்னிக்கு அவளும் குழந்தைக்கு உடம்பு சரியில்லாத காரணத்தால் வந்திருந்தாள். உங்களை நான் விரட்டினதும் உள்ளே ஓடிவந்த அவள் "டாக்டர் ரங்கு ஏன் வந்தான்?யாருக்கு என்ன உடம்பு? அவன் குழந்தை சௌக்கியமா யிருக்காமா" என்றாள் கவலையுடன். உங்கள் குடும்பத்தைப்பற்றி அரைகுறையாய்த் தெரியும் எனக்கு. ஆகையால் அலட்சியமாகப் பேசினேன். "குழந்தைக்கு உடம்பு ஜாஸ்தியாயிருக்கு காப்பாத்துங்கோன்னு மன்றாடறான். கொடுக்கவேண்டிய பணத்துக்கு நாமத்தைப் போடறான்" என்றேன். ஒரு நிமிஷம் யோசித்த அந்தம்மாள் "எவ்வளவு பணம் கொடுக்கணும் சொல்லுங்கோ டாக்டர்; நான் கொடுக்கிறேன் சாயந்திரத்திற்குள். தயவு செய்து உடனே போய் காப்பாத்துங்கோ குழந்தையை" என்றாள். "நீங்களா ஏம்மா பைத்தியமா உங்களுக்கு. நன்றி விசுவாசமே இல்லாத அவன் விஷயத்திலே இரங்கவேகூடாது" என்றேன். "அப்படியெல்லாம் சொல்லாதங்கோ டாக்டர் என் ரங்குவை. ஏதோ போதாத காலம் தான் எங்களைப் பிரித்தது. அந்தப் பெண்ணும் தங்கமானவள்" என்றாள் உங்கள் மன்னி. அப்புறம் நான் என்ன பேசுகிறது, வந்தேன் உங்கள் வீட்டிற்கு என்றார் டாக்டர்.

அதைக் கேட்ட ரங்குவின் மனம் துடித்தது. அண்ணா குடும்பத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலில் வாங்கோ போகலாம் மன்னியைப் பார்த்தால்தான் என் மனசு நிலைபடும் என்றாள் மாலதி. "மிஸ்டர் ரங்கனாதம் உங்கள் அண்ணா-மன்னியைப்போல குணசாலிகளைப் பார்ப்பதேஅபூர்வம். உங்களிடம் உயிரையே வைத்திருக்கிறார்கள். இனியாவது அவா மனசைப் புண்படுத்தாமலிருங்கள்" என்ற டாக்டரிடம் விடை பெற்ற இருவரும் குழந்தையுடன் வேதாவின் வீட்டிற்கு ஓடினர். வீட்டில் காலடி வைத்தபோதே ஒருவித சாந்தி ஏற்பட்டது மனதில். குழந்தைகளுக்கு சாதம் போட்டுக்கொண்டே கணவனிடம் பேசிக்கொண்டிருந்தாள் வேதா.

"நம்ம ரங்குவிற்குக் கல்யாணமாகி இன்னியோட மூணு வருஷமாகிறது. மகாலக்ஷ்மி மாதிரி மாலையும் கழுத்துமாய் அவன் பக்கத்திலே மாலதி நின்ன காட்சி இன்னமும் என் மனஸை விட்டு மறையவில்லை" என்று பெருமூச்சு விட்டாள் வேதா. "பைத்தியம் தினம் நூறு தரமாவது அவா பேச்சை எடுக்காமலிருக்க மாட்டேங்கறயே அப்படி என்ன பாசம்" என்று சிரித்தார் துரைசாமி. தம்பதிகளின் மனம் உருகியது. தடதடவென்று ஓடி வேதாவின் காலில் விழுந்தனர். வேதாவும் துரைசாமியும் தம் கண்களையே நம்பாமல் திகைத்தனர். "மன்னி,எங்களை கட்டாயம் மன்னிக்கத்தான் வேணும் நீங்கள். உங்க மனஸைத் தெரிந்துகொள்ளாமல் ஓடினோம். வேண்டிய கஷ்டங்களையும் அனுபவித்தோம். கடைசியில் உங்களுடைய தயாளம்தான் என் குழந்தையைக் காப்பாற்றியது. என் அகங்காரமெல்லாம் தொலைந்தது. நல்ல புத்தி வந்தது. இனி ஒருநாளும் உங்களை விட்டுப் போகமாட்டேன்"என்று மாலதியின் கண்களிலிருந்து உதிர்ந்த நீர் வேதாவின் பாதத்தை நனைத்தது. சரேல் என்று எழுந்து அவளையணைத்துக்கொண்ட வேதா "மன்னிப்புக் கேட்கும்படியான குற்றம் எதுவும் நீ செய்யல்லே மாலதி. பார்க்கப்போனால் நீதான் என்னை மன்னிக்கணும். இரண்டு வருஷமாய் உன்னை திரும்பிக்கூடப் பார்க்காமலிருந்தேனே" என்ற வேதா அவள் குழந்தையை வாங்கி முத்தமழை பொழிந்தாள். "குழந்தைகளுக்கு இலையைப் போடுடி வேதா" என்ற துரைசாமி ரங்குவின் கண்ணீரைத் துடைத்து அணைத்துக்கொண்டார். "அண்ணா அண்ணா" என்று விம்மினான் ரங்கு. "வருத்தப்படாதேப்பா ஏதோ காலவித்யாசத்தால் பிரிந்தோம், சேர்ந்துவிட்டோம். இனிமேல் நமக்கு என்ன குறை" என்று தேற்றினார். அரைமணி நேரத்திற்குப் பிறகு வேதாவின் வீடு ஆனந்த வீடாக மாறியது.பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா?

அன்றிரவே போய் குடித்தனத்தைக் கலைத்தனர் மாலதியும் ரங்குவும். "எங்கேடி போறே அசட்டுப் பெண்ணே" என்றாள் மாலதியின் தாயார். "எங்கே போகணுமோ அங்கேதான்" என்று ஆத்திரத்துடன் பதிலளித்த மாலதி சாமான்கள் ஏற்றப்பட்ட டாக்ஸியில் ஏறிக்கொண்டாள். மறுபடியும் அந்த நரகத்திற்கா என்றாள் மாலதியின் சகோதரி. நரகம் எதுங்கறதைத்தான் இரண்டு வருஷமாய் பார்த்துவிட்டேனே என்ற மாலதி "போகலாமா" என்றாள் கணவனை நோக்கி. அவமானத்தால் தலை குனிந்த வேட்டகத்தாரிடம் விடைபெற்றுக் கொண்ட ரங்கு கவலையை மறந்து சிரித்தான் மாலதியை நோக்கி. மாலதியின் முகமும் ஆனந்தத்தால் மலர்ந்தது.

சன்மானம்

எம். எஸ். ராஜலக்ஷ்மி

இளவேனிற் காலத்து அந்தி மாலை. தருக்களடர்ந்த பூஞ்சோலையினூடே சலசலத்வனியோடு ஓடும் நீரோடை; அவ்வோடைக் கரையிலே மரகதப் பச்சைப் பாயென விரிந்த புற்றரையின் மீது, சிந்தையில் மூழ்கியவளாய் ஓர் நங்கை வீற்றிருக்கிறாள். கதிரவனது பிரிவால் முகம் சுருங்கும் செந்தாமரைபோல் அந்நங்கை நல்லாளின் கமல முகம் வாடியிருக்கிறது. அவளது கண்ணிமைகள் சிறிதே பூமியை நோக்கி கவிழ்ந்திருக்கின்றன. கருங்குழல் பாதி யவிழ்ந்து புழுதியில் புரள்வதையும் அவள் கவனிக்கவில்லை. மருட்சி தரும் கண்களில் நீரில்லை; வரட்சியே தென்படுகிறது. செவ்விதழ்கள் ஏதோ முணுமுணுக்கின்றன. ஆனால் சப்தம் மட்டும் வெளிவரவில்லை. தொண்டையும் அடைபட்டு விட்டதோ கண்ணீரைப்போல. நிமிஷத்திற் கொரு முறை வெளிப்பட்ட நெட்டுயிர்ப்பு அவளது பாரமுற்ற இதயத்தை வெளிப்படுத்துகிறது.

அவள் பக்கலில் ஒரு மாதவிக் கொடி வெண்மலர் பற்களைக் காட்டி கொல்லெனச்சிரிக்கிறது. அச்சிரிப்பொலி நறுமணமாய் எங்கும் பரவுகிறது. மதுப் போதையில் மூழ்கிய வண்டினங்கள் ரீங்கார சுருதி கூட்டிக் கீதமழை பொழிகின்றன. அப்பூஞ்சோலையும் தடாகமும் இனம் தெரியாத இன்பப் போதையில் ஆழ்ந்து அபூர்வ சோபையுடன் திகழ்கிறது. வசந்தத்தின் இவ்வரிய அந்தி வேளையிலும் அந்த அணங்கின் சிந்தையில் தோய்ந்த மனம் சிறிதும் அசையவில்லை. அப்பொற் கொடிக்கு என்ன சோகமோ?

இவ்வேளையில் மற்றொரு பூங்கொடி வருகிறாள். பாதங்களைத் தரையில் ஊன்றினால் ஒலி கிளம்பி விடுமோ என்றஞ்சி, பச்சைப் புல் தரையின் மீது நடந்து வருகிறாள். சோக பிம்பமாய்த் தன்சகி வீற்றிருப்பதைக் கண்டு திகைப்படைகிறாள். ஆயினும் ஓசைப்படாமல் பின்புறமாய் வந்து சகியின் மலரையொத்த கண்களை மூடுகிறாள். இது கரு வண்டை தாமரையின் இதழ்கள் மூடுவது போல் இருக்கிறது. சகி திடுக்கிடுகிறாள். பற்பல கற்பனைகளில் தன் உணர்வையே இழந்திருந்த அவளுக்கு கண்களைப் பொற்றிய கரங்கள் கடினமாய்த் தோன்றியது போலும். கண்களைப் பொற்றியவரை தவறாய் எண்ணிக்கொண்டு 'யாரது கண்களை மூடுவது? என்னைத் தொடும் உரிமை யாருக்குமில்லை. தயை செய்து கையை எடுத்து விடுங்கள். யாருடைய உறவும் எனக்கினி வேண்டாம்' என்கிறாள் கடுமையான குரலில்.

கரங்களை விலக்கிய தோழி, கல கல வென்று நகைத்துக்கொண்டே அவள் முன் தோன்றுகிறாள். சகி வெட்கமும், துக்கமும் ஒருங்கே அடைந்தவளாய் தலை குனிகிறாள்.

'ஓஹோ! நாயகனை எதிர் நோக்கும் அரிய வேளையில் நாயேன் வந்து விட்டேன் போலும்! நங்காய், நாணுவதில் பயனேதும் இல்லையடி!' என்கிறாள்.

'சீ! உனக்கு வேளை, சமயமென்பதேயில்லை குறும்புத்தனம் செய்ய!' எனச் சீறுகிறாள் சகி. 'சீ' என்ற திரஸ்காரச் சொல் சோகம், சினம் இரண்டின் மிகுதியை வெளிப்படுத்துகிறது.

அந்த பொல்லாத தோழி சிறிதும் சினம் கொள்ளவில்லை. குறும்புப் புன்னகை இதழில் நெளியக் கூறுகிறாள். 'தேவி! தங்களைத் தொடும்உரிமைஎனக்கில்லைதான். அவ்வுரிமை இவ்வகண்ட உலகத்திலேயே ஓரே ஒரு மனிதர்க்குத் தான் உண்டு. அவர்....'

சோகத்தின் சாயை படிந்த சகியின் முகத்தில் சிறிதே நாணம் கலந்த மலர்ச்சி தோன்றி மறைகிறது. ஒருகணம் மூண்டெழுந்த உணர்ச்சிகள் அவளைப் பேசமுடியாமல் செய்து விடுகின்றன.

தோழி எப்பொழுதும் மௌனத்தை விரும்பாதவள். பிரிய சகியின் நிலை வேறு அவள் உள்ளத்தை இளக்குகிறது. அவள் சகியின் தோளைப்பற்றி அன்புடன் கேட்கிறாள்: 'அன்பிற்குரியவளே! இன்று உன் முகத்தாமரை ஏன் வாடிக்கிடக்கிறது? அதில் முல்லைச் சிரிப்பைக் காணவில்லையே ஏன்? காண்போர் உள்ளத்தையும், உயிரையும் ஒருங்கே ஈர்க்கும் அக்கண்களின் காந்தி இன்று எங்கே மறைந்துகொண்டது? சுகி, என்னிடம் சொல்லலாகாதா?'

சுகன்னிகை நீண்ட நெட்டுயிர்ப்புடன் 'தோழி! உன் உயிர் நேசியாகிய உனக்கு ஒன்றுமே தெரியாதா? அல்லது நொந்த புண்ணில் கோலிட விரும்புகிறாயா?' என்கிறாள்.

தோழி தன் ப்ராண சகியை அன்புடன் அணைத்துக்கொள்கிறாள். 'ப்ரிய நேசி! உன் துக்கத்தின் காரணத்தை அறிகிறேன். எந்த உணர்ச்சியையும் பாராட்டுவதனால் அதிகமாகும் என்பதை அறியாயா? பெண்ணே! கவலைப்பட்டுக்கொண்டுகாலத்தை போக்குவது அசட்டுத்தனம். நீ ஒரு ராஜ கன்னிகையல்லவா? ஒரு துன்பம் வந்து விட்டால் தான் என்ன, இவ்விதம் தைரியமிழப்பதும்தீனமடைவதும்உனக்கழகாகுமா' எனத் தேற்றுகிறாள்.

வேதனை தோய்ந்த குரலில் சுகன்னிகை சொல்கிறாள்: 'சகி! அதை- அந்த நாட்களை- அவரை எப்படி மறப்பேன்? என் இதயத் துடிப்பு உனக்குக்கேட்கவில்லையா? இனி இந்த ஜன்மத்தில் ஹா! நெஞ்சை ஏதோ அழுத்துகிறது. தோழி, என்ன செய்வேன்'

விம்மித் துடிக்கும் அரசகுமாரியைத் தோழி தாங்கிப் பிடிக்கிறாள். அன்பின் மிகுதியால் குழைவடைந்த குரலில்

ஆறுதல் சொல்லுகிறாள். 'அன்பே! அழுது புலம்புவதால் ஆவதொன்றுண்டோ? சகி, இந்த சோகத்தை விடு. விரைவிலேயே அவரை அடைவாய்!'

'சகி, அவர் வருவார் என நம்பிக்கை வைப்பது வீண். கவியானாலும் சபல சித்தத்திற்கு அடிமையானவரல்ல. திட சங்கல்பமுடையவர். வீரம் பொருந்திய அப்புருஷோத்தமர் மதியாதார் நாட்டை மதிப்பாரோ?'

தோழி அரசகுமாரியிடம் தீவிர அன்புடையவள். தீட்சண்ய புத்தியுடையவள். அத்துடன் ஆபத்துகளுக்கு அஞ்சாத சாகஸக்காரி. இத்தகைய ஸ்திரீகளின் சூட்சம புத்திக்கு எட்டாத உபாயம் என்ன இருக்கிறது? எவ்விதமேனும் தன் நேசியை இவ்விரக வேதனையினின்று விடுவிக்கத் தீர்மானிக்கிறாள்.

'சுகன்னி! உன் தந்தை கடுங் கோபத்தில் இருக்கிறார். அவர் முன் கவியின் பெயரையே எடுக்காதே. நாம் தகுந்த உபாயம் செய்வோம். அது வரையில் பொறுமையோடு இரு.'

சுகன்னிகை ஏளனமாய்ச் சிரித்து 'சகோதரி! எனக்கு கேடு விளைந்திடும் என்றஞ்சி என் ப்ராண நேசரின் பெயரைக் கூட உச்சரியாமல் இருந்தேனாயாகில் நான் உண்மையில் அவரிடம் அன்புடையவளாவேனா' என கேட்கிறாள்.

'உள்ளத்தில் ஆயிரம் ஆசைகள் இருந்தாலும் வெளியில் மூச்சு விடாதே. உன் அன்பனை அடைவதற்கு நீ பொறுமையை கைக்கொள்ள வேண்டும். இருட்டி விட்டது. வா, இப்போது அரண்மனைக்குப் போவோம்'

தோழி! என் மனம் எதிலும் லயிக்கவில்லையடி. அரண்மனை என்றாலே ஆத்திரமாய் வருகிறது. ஏனோ அரச குமாரியாய் பிறந்தேன்' புத்தி மயங்கி வார்த்தை குழறி, நினைவு தடுமாறும் நேசியின் கரம் பற்றி அழைத்துச் செல்கிறாள் தோழி.

இரவின் இருட்சாயை நாற்புறமும் கவிந்துகொள்கிறது. சந்திரனில்லாத வானமண்டலத்தை நட்சத்திர நங்கையர் தனியாட்சி புரியத் தொடங்கினர்.

2

சுதேயபுரி புலவர்களால் போற்றப்பட்டதும், பெரியோர்களின் ஆசியைப் பெற்றதும், கலைஞர்களால் பெருமைப்படுத்தப்பட்டதுமான நந்நாடு. நலன்களெல்லாம் ஒருங்கே நன்கமைந்த அந்நாட்டின் அதிபனான சுந்தர வர்மன் கல்வியிற் சிறந்தவன். கலா ரஸிகன். கவி மோகன். புலவர்களைப் பெரிதும் ஆதரிக்கும் அப்புரவலனை நாடி, புலவர்கள் நாள் தோறும் வந்த வண்ணமிருப்பர்.

ஒரு நாள்வழக்கம்போல் ராஜ தர்பார் கூடியது. அரசன் ஆரியாசனத்தில் அதிகம்பீரமாய் வீற்றிருந்தான். கவிகளும், கலைஞர்களும் தங்கள் தங்கள் திறமைக்குத் தகுந்த சன்மானம் பெற்றுச் சென்ற வண்ணமிருந்தனர். சிலர் அரசனது பெருமைகளையும், அவன் வம்சத்தவரது வீரப் பிரதாபங்களையும் புகழ்ந்து பாடினார். சிலர் அரசனது கொடைக் குணத்தையும், செங்கோல் சிறப்பையும் போற்றிப் பாடினர். மற்றும் சிலர் அவனது நாட்டின் சிறப்பை அதன் செழுமையைச் சிறப்பித்துப் பாடினர்.

அனைவர்க்கும் கடைசியாக ஒரு கவி வந்தான். நட்சத்திரக் கூட்டங்களிடையே பூர்ண சந்திரன் பிரகாசிப்பதைப்போல அக்கவி புலவர் கூட்டத்தினிடையே தோன்றினான். அவனது தேக காந்தியும் முகத்தின் சோபையும் கம்பீர உருவும் காண்போர் கண்களைக் கூச வைத்தன. அவன் அரசனைத் தலைத் தாழாமலே கரம் குவித்து வணங்கி கர்வத்துடன் நின்றான். அவன் சபையைச் சுற்றிப் பார்த்த பார்வை எனக்கு நிகர் யார் எனக் கேட்பது போலிருந்தது.

அரசன் அவனை நோக்கி புன்முறுவலுடன் கேட்டான். 'இளங் கவியே! நீ எந்நாட்டினின்று வருகிறாய்? உன் நோக்கமென்ன? உன் பெயர்?'

இறுமாப்புடன் தலையை உயர்த்தி அரசனைப் பார்த்துக் கவி 'அரசே! நான் விஜய நாட்டினின்று வருகிறேன். என் பெயர் சாருதத்தன்என்பது.விஜயநாட்டு அரசனின் நண்பன். நான் பல தேசங்களைச் சுற்றிப் பார்க்கும் ஆவலுடன் வந்தேன். கவி பாடி சன்மானம் பெறும் நோக்கம் எனக்கில்லை' என்றான்.

சினத்தினால் அரசனது புருவங்கள் நெற்றிக்கு மேலேறின. 'கவியே! நீ யாருடன் பேசுகிறாய் என்பதை மறந்தனையோ? அரசனை அவமதித்தால் தகுந்த தண்டனை கிடைக்கும்! நீ இளங் காளை. அதனால் பயமறியாது பேசுகிறாய். இம்முறை மன்னித்தேன். ஆனால் இந்த அலட்சிய சுபாவம் அழகாகாது உனக்கு' அரசனும் அவனது ரூப சௌந்தரியத்தில் மயங்கிவிட்டானோ என்னவோ? சினத்தினால் குற்றவாளியைக் கொடுமையாய்த் தண்டிக்க வல்ல அக் கொற்றவனும் சாந்தனாகி விட்டான்.

இளங்கவி தன் வார்த்தையில் சிறிது பணிவைக் காட்டினான். 'பிறரை அவமதிக்கும் எண்ணம் எனக்கில்லை. என் யாத்திரையின் நோக்கத்தை தங்களுக்கு அறிவித்தேன். அரசே சினங்கொள்ள வேண்டாம்!' என்றான்.

'உன் நோக்கம் எதுவாயினும் பெரியோர்களிடம் பழகும்முறை தெரியாதவனாய் இருக்கிறாய். உலக அனுபவம் பெறாத காளைப் பருவம். அனுபவமாகிய அலை களால் மோதுண்டால் இந்த இறுமாப்பு அடங்கிவிடும். அது போகட்டும். கவியே! உன் கவிதைகளைப் பாடிக் காட்டுவாய். கேட்க ஆவலுடன் இருக்கிறோம்!'என்று அரசன் உபதேசத்தில் ஆரம்பித்து, வேண்டுகோளில் முடித்தான்.

சிங்க ஏறையொத்த அக் கவிஞன் அதிகம்பீரமாய் சபையைச்சுற்றி ஒரு முறை பார்த்து விட்டு, பாட ஆரம்பித்தான். நவநவமான இசையை எழுப்பும் குழலோசை போல இனிமையும் மாதுரியமும், கம்பீரமும் நிறைந்த குரலில் கான மழைப் பொழிந்தான்.

'வசந்தத்தின் புதுமை அழகும் அந்தி மாலையின் மனோகரமும் இளந் தென்றலின் குளுமையும், இமயத்தின் கம்பீரமும் ஒருங்கே அமைந்த அவ்விசைப் பெருக்கிலே தம் இதயத்தைப் பறி கொடுத்தனர். ராஜ சபையினர், கவியின் கீத மழை நின்றது. சொப்பன லோகத்திலே சஞ்சரித்து கொண்டிருந்தமக்கள் கனவினின்று விழித்தவர்போல் நெட்டுயிர்ப்புடன் நிமிர்ந்தனர். கவி அரசுகான திலக சாருதத்தர் வாழ்க! வாழ்க' எனக் கோஷம் கிளம்பியது.

ஆனந்த மிகுதியால் அரசன் தன் ஆசனத்தை விட்டெழுந்து கவியை ஆலிங்கனம் செய்து கொண்டான் 'கவி குல திலகமே! நீ பொழிந்த கானாம்ருதத்திற்கு கனகாபிஷேகம் செய்தாலும் போதாது. உனக்குத் தகுந்த சன்மானம் என்ன செய்வேன்' எனத் திணறினான்.

கவி சபையினரைப்போல் உணர்ச்சிப் பெருக்கில் ஆழ்ந்து விடவில்லை. அரசனை நோக்கி அடக்கத்துடன் கூறினான். தங்கள் அன்பே எனக்குத் தகுந்த சன்மானம். அரசே வேறு சன்மானம் அளிக்கத் தாங்கள் விரும்பினால் வேண்டிய சமயம் கேட்டுப் பெற்றுக் கொள்கிறேன்.'

'கவியரசே! எந்த சமயம் எது வேண்டுமானாலும் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். சில நாட்கள் மட்டும் இங்கு தங்கிப்போக வேண்டும்' என்றான் அன்புடன்.

அரசனது அன்பு ஆணையை மீற முடியாமல் அரச விருந்தாளியாய் தங்க சம்மதித்தான். இளங் கவியைப் புகழ்ந்த வண்ணம் சபை கலைந்தது.

3

சுந்தர வர்மனின் செல்வக் குமாரி சுகன்னிகைக்கு தோழிகளின் மூலம் ராஜதர்பாரில் நடந்த விஷயங்கள்எட்டின.கவியின் மேனியழகிலும், அபூர்வ இசையிலும் தேனில் திளைந்த வண்டென மயங்கியிருந்த தோழிப் பெண்கள் அரசகுமாரியிடம் அளவுக்கு மிஞ்சியே வர்ணித்தனர். சுகன்னிகை அவர்களைக் கேலி செய்தாள் என்றாலும் அவள் உள்ளமும் கவியைக் காண ஆவல் கொண்டது.

அன்று புதல்வியைக் காண அந்தப்புரம் வந்தான் அரசன்.



அவனும் மற்றவர்களைப்போல் வந்ததும் கவியின் புகழைப் பாடினான். கவியின் கட்டழகும், கானமும் அவனை வசியப்படுத்தியிருந்தது.

தோழிப் பெண்கள் கொடுத்த தகவல்களினால் சுகன்னிகை தன் மனத்திரையில் தீட்டியிருந்த கவியின் உருவம், தந்தையின் புகழுரைகளால் உயிர் கொண்டது. சுகன்னிகையின் மனம் ஆவல் மேலீட்டினால் துடித்தது. அவள் கொஞ்சும் குரலில் தந்தையிடம் 'அப்பா, உங்கள் கவி என்ன அப்பேர்ப்பட்ட அபூர்வ பிறவியா? எல்லோரும் அவனைப் புகழ்ச்சியிலே உட்கார வைக்கிறார்களே? எனக்கும் அவனைப் பார்க்க ஆவலாயிருக்கிறது' என்றாள்.

செல்வக் குமாரியின் சொல்லை என்றுமே மறுத்தறியாத மன்னன் உடனே கவியைக் காண கன்னிகையுடன் புறப்பட்டான்.

* * *

அரண்மனைப் பூங்காவில் தனிமையாய் அமைந்த மண்டபத்தில் கவி தங்கியிருந்தான். அம்மண்டபத்தைச் சுற்றி எழிலரசி நடனமாடிக் கொண்டிருந்தாள். அழகும், அமைதியும் குடிகொண்டிருந்த அவ்விடத்தே, பளிங்காசனத்தில் அமர்ந்திருந்த கவி கற்பனையிலே திளைத்திருந்தான். அந்திச் சூரியனின் பொன்னொளிர் கிரணங்கள் அவனது பொன் மேனிக்குப் புது மெருகு கொடுத்துக் கொண்டிருந்தன. அச்சமயம் அரசன் தன் குமாரியுடன் வந்து சேர்ந்தான்.

சுகன்னிகை தன் முன்னே கண்டாள் அதிரூப சுந்தர புருஷனை. மனத்திரையில் சமைத்திருந்த உருவம், நிலை உருவத்தின் முன்னே மங்கி மறைந்தது. ஆம், அவள் கற்பனையிலும்கண்டிராத ரூப சுந்தரனைக் கண்டாள் கண்முன்னே. முந்தைப் பல பிறவிகளில் அவனுக்கும் தனக்கும் தொந்தம் உண்டென்ற உணர்வு பெற்றாள். இந்த உணர்வால் அவள் உடலும் உள்ளமுமட்டுமல்ல. அவள் உயிரே கிளர்ந்து துடித்தது. தன்வயமிழந்து தடுமாறி நின்றாள்.

சௌந்தரிய உபாசனாகிய கவியும் அரச கன்னியின் எழில் வெள்ளச் சுழலிலே சிக்கித் திணறினான். அவனது கவித்வத்தின் சாரமெல்லாம் ஒருங்கே திரண்டு, ஓர் உருவமாய் நின்றது அவன் முன்னே.

ஏதுமறியாத அரசன்இடையே புகுந்தான். "கவிமணியே இவள் தான்என் குமாரி. சுகன்னிகை என்பவள். ரஸிக உள்ளம் படைத்தவள் கலைகளில் ஆர்வம் கொண்டவள்; கவிதைப் பித்துடையவள். உன் பரிச்சயம் கிடைத்தால் அவளிடம் வித்யைப் பூரணமாய்ப் பிரகாசிப்பாள்!" என்றான்.

தேனை மாந்திய களி வண்டின் நிலையை யொத்திருந்த கவியின் வதன மண்டலத்திலே இள முறுவல் பூத்தது. "வேந்தே! வித்யா தேவி என்றும் பூரண ப்ரகாசமுடையவள் தான். என்போன்ற எளியோர்களின் பரிச்சய மற்றுவிடுவதனால் அவள் வாடிவிடப் போவதில்லை' என்றான். இந்தப் பொருள் பொதிந்த பேச்சு அரசனுக்கு எங்கே புரியப் போகிறது!

ஏண்டா, அகோரத்தின் பிள்ளை மேறு வாடா நீ! எப்படிடா இந்த மாதிரி பெருமனு ஆனே!"

"அதுவா; நான் ஒரு டானிக் தயார் செய்யறேன். மாமா......"

"ஓஹோ! அதை நீயே சாப்பிட்டயோ!"

"அதை நான் சாப்பிட்டால் எப்படிப் பெருக்க முடியும்? அதை வியாபாரம் செய்து நிறைய சம்பாதித்தேன், அதிலேருந்து இப்படி ஊதிட்டேன்."

"சாருதத்த! உன் வினயமான சொல். உனது உயரிய குணத்தையே காட்டுகிறது. உன் கவிதைகளைக்கேட்டு களிக்கடலாடாதவர் யார்? நின் இசைப் பெருக்கில் இதயத்தை பறி கொடுக்காதவர் யார்?" என்றான் அரசன்.

சுகன்னிகை மதுரமான குரலில் தந்தையை விளித்து, "ஏன் அப்பா, நான் ஒருத்தியிருக்கிறேனே, அவரது அற்புத கவிதைகளையும், அமுத கானத்தையும் அனுபவிக்கும் பாக்கியத்தைப் பெறுமல்!" என்றாள்.

"ஆம், இந்த மனோகரமான மாலை வேளையில் உன் கவிதைகளைப் பாடவேண்டும். அந்த ஆனந்தத்தை அள்ளிப் பருகவே வந்தேன்" என்று வேண்டுகோள் விடுத்தான் அரசன்.

கவி மந்தகாச முகத்துடன் அரச குமாரியின் பக்கம் பார்த்துக்கேட்டான். "தேவி! தங்களுக்கு எந்தவிதமான கவிதை பிடிக்கும்?"

நாணமும், இன்பமும் கலந்த உணர்ச்சியால், இளங் கவியைக் காணவும் இயலாது தலையைக் கவிழ்ந்து கொண்ட சுகன்னிகை, "தங்களுக்கு விருப்பமான கவிதை எதுவோ, அதுவே எனக்கும்..." என்றாள்.

அப்பதிலைக் கேட்ட கவிஞன் களிப்பெய்தினான். அதில் அவனுக்கு என்ன சங்கேதம் கிடைத்ததோ, நமக்கென்ன தெரியும்? "தேவி! இதுவே நல்ல ரஸிகைகளுக்கு அடையாளம். கவிஞனது உள்ளத்து உணர்ச்சியை உள்ளபடி அறிந்துகொள்ளும் வல்லமையுடையவர்களே, கவிக்குகந்த ரஸிகர்களாவார்கள்" என்றான்.

கவிக்கும், ரஸிகைக்கும் நடந்த இந்த ரஸமான சம்பாஷணையை ரஸிக்க இயலாத அரசன், மனதிற்குள்கவியின் அருங்குணத்தைப் பாராட்டினான்.

இரு இள இதயங்களின் உணர்ச்சிகள் ஒன்று கலந்தன. கவி தன் இதய வீணையை மீட்டினான்; அது ரஸிகையின் உள்ளத்திலே ஒலியை எழுப்பியது. சுருதிலயத்தோடு லயித்தது! மணம் மலரை அடைக்கலம் கொண்டது; ஒளி நிழலோடு உறவாடியது. கடலும், வானும் கலந்தன: கவிஞனும், ரஸிகையும் உள்ளத்தால், உணர்ச்சியால், உயிரால் ஒன்றேயாயினர்.

4

அன்றிலிருந்து சாருதத்தன் தன் யாத்திரை நோக்கத்தை அறவே மறந்துவிட்டான். இந்திர லோகத்தையும், சுவர்க்க லோகத்தையும் அவன் கண்டவனல்ல: ஆனால் அவனுக்கு இப் பூ உ ல க மே—சுதேயபுரியே—சுவர்க்க புரிய ா கி வி ட் ட து. அவன் கருத்தில் ஒரே ஒரு எழில் உருவத்தைத் தவிர வேறெதுவும் இடம் பெறவில்லை.

அரச குமாரி வாழ்ந்த உலகமே வேறாகிவிட்டது. அவள் கண்களுக்கு எல்லாம் புதுக்காட்சிகளாய்த் தோன்றின. ம ல ரி ன் மணத்திலே, கனியின் ருசியிலே காற்றின் குளுமையிலே என்றும் கண்டிராத புதுமையைக் கண்டாள்; வானிலே, வண்ண நிலவிலே, வையகத்திலே இன்ப ரசம் பெருக்கெடுத்தோடியது.

கவி ராஜமாளிகையில், விருந்தாளியாக வந்து ஒரு திங்களாகி விட்டது. முதல் நாளன்று சன்மானத்தை வெறுத்தவன், அதை கேட்டுப் பெற்றுக்கொள்ள நிச்சயித்தான்.

சுக்லபட்சத்துப் பூர்ண சந்திரன் தன் நிலவை அள்ளிச் சொரிந்துகொ ா ண் டி ருந்தான். உலகம் அம்மோகன நிலவில் மயங்கிக் கிடந்தது. அரண்மனைப் பூங்காவில், வண்ண நிலவு பொழிந்த அமிர்த தாரையிலே திளைந்த வண்ணம், உரையாடிக்கொண்டிருந்தனர் சுந்தரவர்மனும், சாருதத்தனும். மறுநாள் விடைபெற்றுப் போகும் கவிக்கு எந்தவிதமான சன்மானமளித்து கௌரவிக்கலாம் என்ற யோசனையுடன் பேச்சில் ஈடுபட்டிருந்தான் அரசன். கவியும் தன் கருத்தை வெளியிட சமயம் பார்த்துக்கொண்டே சம்பாஷணை நடத்தினான்.

"சாருதத்த! எங்களுடன் நீ நெருங்கி பழகிவிட்டாய். உன்னுடன் என் மனமும் ஒன்றிவிட்டது. நாளை பிரிந்து செல்லப் போவது அளவில்லாத மனவேதனையைத் தருகிறது" என்றான் அரசன்.

"ஆம், அரசே! எனக்கும் இப் பிரிவு துன்பத்தைத்தான் கொடுக்கும். ஆனால் போகத்தான் வேண்டும். தங்கள் அன்புக்கும், ஆதரவுக்கும் அடிமையாகி தங்கிவிட்டேன். இனியும் தாமதிக்க இயலாதவனாய் இருக்கிறேன்" உண்மையிலேயே அவன் மனம் சங்கடத்தில்தான் இருந்தது.

"யாத்திரை முடித்துக்கொண்டு மீண்டும் இங்கு வரவேண்டும். நீயே நமது ஆஸ்தான கவியாகி விட்டால் நாமும், நமது நாடும் பெருமையும், பெருமகிழ்ச்சியும் கொள்வோம். புறப்படு முன் வேண்டியதைக் கேட்டுப் பெற்றுக்கொள். சன்மானத்தைக் கேட்டுப் பெற்றுக்கொள்வதாக சொன்னாய். கவிகளை வெறுங் கையோடு அனுப்பும் வழக்கம் எனக்கில்லை."

"கேட்டுப் பெற்றுக் கொள்ளவே நானும் நிச்சயித்துள்ளேன். எதைக் கேட்டாலும் தாங்கள் அளிப்பீர்களா?"

"விரும்பியதைக் கேள்; எதுவாயினும் அளிப்பேன். உன் போன்றவனுக்கு அளிக்கக்கூடாதது ஒன்றும் என்னிடமில்லை."

சாருதத்தன் சிறிது நேரம் யோசித்தான். "வேந்தே! தாங்கள் வாக்குத் தவறமாட்டீர்களென்பதை அறிவேன். அந்த நம்பிக்கையுடனே துணிகிறேன். நாளை புறப்படும் சமயம் கேட்கிறேன்" என்றான் கவி.

அரசன் மன நிம்மதி பெற்றவனாய் நித்திரை புகச் சென்றான். கவியோ பலவித கற்பனைகளில் முழு இரவையும் தூங்காமலே கழித்தான்.

* * *

மறுநாள். பொழுது புலர்ந்தது. கவி தன்னை அலங்கரித்துக் கொண்டு அரசனைக் காணப் புறப்பட்டான். நிறைந்த சபை அவனை வழியனுப்பக் காத்திருந்தது. அரசன் கவியை அன்புடன் வரவேற்றான். "கவிகுல திலகமே! புறப்படும் சமயம் மகிழ்ச்சியோடு இருக்கவேண்டும்: நீ பெற விரும்பியதைக் கேள்" என்றான்.

சாருதத்தன் அவனை வணங்கி, "மன்னவ, நேற்றிரவு தாங்கள் வாக்களித்தபடி எதைக் கேட்டாலும் அளிப்பீர்களா?" எனக் கேட்டான்.

அரசன் அலட்சியமாய்ச் சிரித்தான். "நான் கொடுத்துவிட்ட வாக்கை என்றும் மீறியதில்லை. நிச்சயமாய் நீ விரும்பியதைப் பெறுவாய். தயங்காமல் கேள்" என்றான்.

கவிஞன் சிறிது தயங்கினான்: செவ்வரி படர்ந்த அவனது கண்கள் ஒருமுறை நாற்புறமும் சுழன்றன. பின்பு அரசனை நோக்கி திடமான குரலில் கேட்டான்.

"வேந்தே! எதில் என் மனம் முற்றிலும் ஈடுபட்டு விட்டதோ அதையே பெற விரும்புகிறேன். தாங்கள் கோபம் கொள்ளலாகாது. எனக்குத் தங்கள் குமாரியை அளிக்கவேண்டும்!"

சபையினர் சமைந்து விட்டனர். பயத்தினால் சிலரது உடல்



சில்லிட்டு விட்டது. அரசன் அயர்ந்துவிட்டான். கனவிலும் நினைத்திராத அதிர்ச்சி ஏற்பட்டதில் சற்று முன்பு கொடுத்த வாக்கையே மறந்து விட்டான்.

"ஹா, கவியே! என்ன கேட்டாய் அசட்டுத் துணிவினால் உனக்கு என்ன கதி நேரும் என்பதை அறியாயா?" எனக் கர்ஜித்தான்.

அனைவரும் அரசனைக் காணவும் தைரியமற்றுத் தலை குனிந்தனர். கவி சிறிதும் கலங்கவில்லை. சினங்கொண்டு பாய வரும் புலியை எதிர்க்கும் காளையைப்போல் அச்சமற்று நின்றான். "அரசே! வீணே ஆத்திரம் கொள்ளவேண்டாம். தங்கள் குமாரிக்கு நான் எந்தவிதத்திலும் தாழ்ந்தவனல்ல. அன்பினால் இணைந்த உள்ளங்களை அந்தஸ்தின் அகம்பாவத்தினால் இரண்டாக்கத் துணியாதீர்கள்!" என்றான்.

சினத்தினால் அரசனது உடல் பதறியது. "நீயும் ஒரு கவியென்று கௌரவமளித்தேன். என் உயிரையே விலை கேட்கிறாய்! அல்பனே! உன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால் இந்த நாட்டின் எல்லையை விட்டுப் போய்விடு!" என்றான்.

அவமானத்தினாலும், ஆத்திரத்தாலும் கவியினது உள்ளம் கொதித்தது. "கொடுத்த வாக்கை மீறுவது அரசனுக்கு அழகல்ல. அகங்காரத்தின் பலனை யாரும் அனுபவியாமல் போனதில்லை. நீதி வழுவா மன்னனே! ஆத்திர மிகுதியால் விருந்தாளியாய் வந்தவனை வேதனைப்படுத்தி அனுப்புகிறாய்! இதற்குரிய வெகுமானத்தை விரைவிலேயே பெறுவாய்!" என்றான் ஏளனத்துடன்.

பல கண்கள் அவனை அச்சத்தோடும், ஆச்சரியத்தோடும் நோக்கின. இளங்கவி கம்பீர நடையுடனே சபையை விட்டு வெளியேறினான்.

இச்செய்தி நாடெங்கும் பரவியது. அரசன் செய்வதறியாமல் திகைத்து நின்றான். சுகன்னிகை ஸ்மரணையற்றவளானாள். கவியோ கண்காணாது எங்கோ மறைந்தான்.

5

அச்சம்பவம் நடந்து நாட்கள் பதினைந்தாயின. அன்று அமாவாசை தினம். அரண்மனை அல்லோல கல்லோலப்பட்டது; அந்தப்புரத் தாதியர்கள் கலவரத்துடன் அங்கும் இங்கும் ஓடினர்; அரண்மனைக் காவலர்களின் அஸ்தியில் ஜுரம் பற்றிக்கொண்டது; கோட்டைக் காவலர்கள் கதிகலங்கினர்; நகரமெங்கும் அமர்க்களம்; மக்கள் பரபரப்புடன் கூடிக் கூடி ஏதோ பேசினர். அரசனது உயிரில் பாதி போய்விட்டது போலிருந்தது. அவனை அவமானமும், துக்கமும் தலைதூக்க முடியாதபடி செய்துவிட்டன.

'அரச குமாரி சுகன்னிகையைக் காணவில்லை!'— ஆம் இந்த கூக்குரலின் விளைவுதான் அந்தக் 'கோலாகலங்கள்!'

வீரர்கள் வாயு சமானமான புரவிகளில் ஏறி எண் திசையும் பறந்தனர். பாவம் காரியம் கைமீறி விட்டதென்பதை அறியவில்லை: வீணே காட்டையும் மேட்டையும் கடந்து ஓடினார்கள்.

• • •

பாதகண்டத்தின் தென் கோடி முனை. இருள் பரவி விட்ட வேளையிலே, தேவி கன்னிகா பரமேஸ்வரியின் ஆலயத்தினின்று இரு உருவங்கள் வெளிப்பட்டன. நெடுந்தூர பிரயாணத்தினால் களைத்துப் போயிருந்த காதலியைக் கரம் பற்றித் தாங்கி வந்தான் கட்டிளங் காளை ஒருவன். அவன் உடலும் சோர்ந்திருந்தது, என்றாலும் உள்ளம் சலித்துவிடவில்லை. கடற்கரை ஓரத்தில் காத்திருந்த சிறு கலமொன்று அவ்விரு காதலர்களையும் ஏற்றிக்கொண்டது. வெகு தொலைவிலுள்ள ஒரு சிறு தீவை நோக்கிப் புறப்பட்டது.

கவிஞன் தன் காதலியை விளித்து, "தேவி! இன்றிலிருந்து நீ அரச குமாரியல்ல; ஓர் எளிய

"நீங்க இந்த ஊருக்கு வந்து 4 மாதத்துக்கு மேலே ஆயிடுத்துன்னு தெரிஞ்சிருந்தும் டங்களை வந்து பார்க்காதத்துக்கு செருப்பாலே அடிச்சுக்கணும் நான். அது கிடக்கு. நீங்க என்ன செய்துக்கிட்டிருக்கீங்க இப்ப?"

"புதுசா ஒரு செருப்புக்கடை ஆரம்பிச்சிருக்கேன்."

கவியின் மனைவி: ரஸிகை" என்றான்.

கடற்கரையை நோக்கியிருந்த அவள் கண்களில் நீர் துளித்திருந்தது. "ஆம்; ராஜகுமாரி நேற்றுடன் இறந்துவிட்டாள். கவிஞரின் கற்பனா லோகத்திலே திளையப் போகும் ரஸிகைக்கு கடந்த கால நினைவே இராது."

"காதலுக்காக நீ செய்த தியாகத்தை உலகம் வியந்து பாராட்டும்!"

"இல்லை; நான் செய்தது ஒரு தியாகமா? தந்தையின் வாக்கைக் காப்பாற்றினேன். கவிஞரை ஏமாற்றும் பாவத்தினின்று அவரை மீட்டேன்."

"எவ்விதமோ, கவி வேண்டிய நிகரற்ற 'சன்மானம்' அவனுக்குக் கிடைத்து விட்டது!"

"தங்களுக்கு 'சன்மானம்'தான் கிடைத்தது: எனக்கோ 'சாம்ராஜ்யமே' கிடைத்து விட்டது!" என்றாள் தேவி.

கப்பல் கரையை விட்டு மெல்ல, மெல்ல நகர்ந்தது. கடல் 'ஓ' வென்ற இரைச்சலுடன் அலைகளை வீசி எறிந்தது.

குமரி முனையில் தவக்கோலம் பூண்ட கன்னிகா பரமேஸ்வரி, அந்த அதிசய காதலர்களை ஆசீர்வதித்து அனுப்பினாள்.

வளர்த்த பாசம்

நீலா ராமமூர்த்தி

"சந்திரா கொஞ்சம் குழந்தையைப் பார்த்துக்கொள்ள முடியுமா சினிமாவிற்குப் போய் வரேன். அவர் காத்திண்டிருக்கார்" என்றாள் இந்து கெஞ்சிய குரலில். "அத்தே" என்று ஆவலுடன் தன்னை நோக்கித் தாவிய குழந்தையை மகிழ்வுடன் வாங்கிக்கொண்ட சந்திரா, "இந்து, ஏன் குழந்தையின் முகம் வாடியிருக்கு" என்றாள் கவலையுடன். "ஒன்றுமில்லையே" என்று அலட்சியமாய் பதிலளித்த இந்து குழந்தையை நோக்கி "டீ பாப்பா அத்தை கிட்ட சமத்தாய் இருக்கிறாயா" என்று கேட்டுவிட்டுப் போய்விட்டாள். சந்திரா பெருமூச்செறிந்தாள். "அத்தே நீயும் வா சினிமாவிற்கு" என்று தன் முந்தானையைப் பிடித்த குழந்தையை அணைத்துக்கொண்ட சந்திரா, "வேண்டாண்டா கண்ணு உள்ளே வா ஒரு கதை சொல்றேன்" என்றாள். சிறிது நேரத்திற்குப் பிறகு குழந்தை பாப்பாவிற்கு சாதம் ஊட்டி கதை சொல்லி பாட்டுப் பாடி தூங்க வைத்தாள். எட்டு மணிக்குத்தான் சங்கரநாராயணன் ஆபீஸிலிருந்து வந்தான். குழந்தையின் அருகில் உட்கார்ந்திருந்த மனைவியைப் பார்க்க அவனுக்கு சிரிப்பு வந்தது. கேலியாக "சந்திரா எங்கே உன் யஜமானி" என்றான். "சினிமாக்கு" என்று சுருக்கமாய் பதிலளித்த சந்திரா மேலே பேச விரும்பாதவள்போல் சமையலறைப்பக்கம் செல்ல "ஏண்டி உனக்கு எவ்வளவுதரம் சொல்றது. ஊரான் வீட்டுக் குழந்தையோடு நீ பாடுபடறது. பெத்தவாளாய்யா இருக்கிறது. அதுக்கு ஒரு தலையைக் காலை வலித்தாலும் உனக்குக் கெட்ட பேர்" என்றான் சங்கரன் கோபத்துடன். அதற்கு பதிலளிப்பதற்குள் வீல் என்று பாப்பா கத்தியதைக் கேட்டு திகிலுடன் அருகில் ஓடிய மனைவியைத் தொடர்ந்த சங்கரன் "ஐயையோ குழந்தைக்கு ஜுரம் போலிருக்கே. உடம்பு அனலாய்க் காயறதே" என்று கண்களில் நீர் மல்க துடித்த சந்திராவையே உற்றுப் பார்த்தான். "இப்போ என்ன செய்யறது" என்று பதறிய சந்திராவைப் பார்த்த சங்கரனின் மனமிளகியது. "ஏண்டி இந்தத் தொல்லை உனக்கு? பேசாமல் அவா வந்ததும் ஒப்புவித்து விடு" என்றான். ஆகட்டும் உள்ளே எல்லாம் ரெடியாயிருக்கு சாப்பிடுங்கோ இந்து வரும்வரை என்னால் எழுந்திருக்க முடியாது" என்று கூறிய சந்திரா பாப்பாவை எடுத்து மடியில் போட்டுக்கொள்வதைப் பார்த்த சங்கரன் "பைத்தியம்" என்று முனகியபடி தன்னறைக்குச் செல்ல சந்திரா சிந்தனையிலாழ்ந்தாள்.

"சந்திரா குழந்தை ரொம்ப அழுதாளா" என்றபடி சந்திராவின் மடியிலிருந்த பாப்பாவை எடுத்துக்கொண்ட இந்து, "என்னடி சந்திரா குழந்தை உடம்பு சுடறதே" என்றாள் கலவரத்துடன். "ஆமாம் நீ போன கொஞ்ச நாழிக்கெல்லாம் ஜுரம் வந்துடுத்து. கார்த்தாலேயே பச்சை ஜலத்திலே குளிப்பாட்டாதேன்னேனே கேட்டயா" என்றாள் சந்திரா வருத்தத்துடன். முகத்தை சுளித்துக்கொண்ட இந்து விடுவிடென்று குழந்தையுடன் போவதைப் பார்த்த சந்திரா "இந்து ராத்திரி குழந்தை அழுதால் கூப்பிடு" என்றாள் கண்ணீர் பெருக. அவள் போய் வெகு நேரம் சிலைபோல் நின்றுவிட்ட சந்திரா படுக்கை அறைக்குச் செல்ல நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்த கணவனைப் பார்த்தாள். அவளுக்கு சாப்பிடவோ படுக்கவோ பிடிக்கவில்லை.. தணலில் நிற்பவள்போல் தவித்தாள் மணி பத்தடித்தது. மெதுவாய் புழக்கடைப்பக்கம் சென்றாள். இந்துவின் அறையில் எலக்ட்ரிக் லைட்டின் வெளிச்சம் தெரிவதைப் பார்த்த சந்திரா ஆவலுடன் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். இந்துவின் கணவன் மடியில் தன்னருமை பாப்பா படுத்திருக்க, இந்து ஏதோ புலம்பிக்கொண்டிருந்தாள். "வரவர நீ குழந்தையை கவனிக்கிறதேயில்லை. அவளுக்கு மட்டும் என்ன அக்கரை" என்றான் இந்துவின் கணவன். "கவனிக்காமல் என்ன? சாயந்திரம் குழந்தையை அவள் கிட்ட கொடுக்கிறபோது நன்றாய் சிரித்து விளையாடிக்கொண்டுதானிருந்தாள். எப்படி ஜுரம் வந்ததோ எனக்கே ஆச்சரியமாயிருக்கு" என்றாள் இந்து. சந்திராவின் தலை சுழன்றது. மெதுவாய்த் தன் அறையை நோக்கி நடந்த சந்திராவின் காதில் பாப்பாவின் முனகல் கேட்டது. அந்த நிலையிலும் அவள்மனம் "தாயே குழந்தையைக் காப்பாற்று" என்று வேண்டியது. உள்ளே வந்த சந்திரா தன் கணவன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து திடுக்கிட்டாள். "எங்கே போய்ட்டு வரே" என்று ஆத்திரத்துடன் வினவினான் சங்கரன். "குழந்தை உடம்பு எப்படியிருக்குன்னு விஜாரிச்சு வரப்போனேன் கதவு சாத்தியிருந்தது." என்ற சந்திராவின் இரு விழிகளிலும் நீர் நிறைந்தது. "அதற்காக ராத்திரி வேளையிலே பிசாசு மாதிரி அலையறையே பார்க்கறவா என்ன நினைப்பா? அப்படி என்ன பாசம்" என்று மொண மொணத்தபடி படுக்கையில் சாய்ந்தான் சங்கரன். இன்னொரு படுக்கையில் படுத்த சந்திரா விம்மி விம்மியழலானாள்.

மீனாக்ஷி ஸ்டோரில் நான்கு வீடுகள். அடுத்தடுத்த வீட்டில் சந்திராவும் இந்துவும் வசித்தார்கள். இந்துவின் கணவன் நாகராஜன் கன்னிகா பரமேஸ்வரி பாங்க் மேனேஜர். சங்கரன் ஒரு கம்பெனியில் 100 ரூபாய் சம்

பளம் வாங்கும் குமாஸ்தா. கல்யாணமாகி கணவனுடன் தனிக்குடித்தனம் செய்ய மீனாக்ஷி ஸ்டோருக்கு வந்த இந்துவின் இன்னுயிர்த் தோழியானாள் சந்திரா. அப்பொழுது சந்திரா ஒரு பெண் குழந்தைக்குத் தாயாயிருந்தாள். எட்டுமாத கர்ப்பிணியாக வந்தஇந்துவிற்கு தன் சக்திக்கு மீறியே சேவை செய்தாள். சந்திராவின் அழகும் குணமும் இந்துவின் மனதைக் கவர்ந்ததால் அவளுடைய அன்பிற்கு அடிமையானாள். காலக்ரமத்தில் இந்துவிற்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. சந்திராவின் மகிழ்ச்சி எல்லையை மீறியது. திடீரென்று சந்திராவின் தலையில் இடி விழுந்தாற்போல் அவள் குழந்தை ஒரே நாள் காய்ச்சலில் மண்ணுலகை நீத்தது. விதி வசத்தால் இந்துவின் குழந்தையும் அத்துடன் போய்விட்டது. யாரை யார் தேற்றுவது மறு வருஷமே இந்து இன்னொரு பெண் குழந்தையைப் பெற்றாள்.

அந்தக் குழந்தையை வளர்ப்பதிலும் அதன் அழகிய முகத்தைப் பார்ப்பதிலும் தன் துயரத்தை ஒருவாறு, மறந்தாள் சந்திரா. சங்கரனுக்கு மட்டும் இந்துவின் முதல் குழந்தை பிறந்தவேளை தான் தன் குழந்தை போய்விட்டது என்று மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து ஒருவித வெறுப்பை வளர்த்துவிட்டது. மூன்று வருஷம் உருண்டோடியது. இந்துவும் சந்திராவும் உடன் பிறந்தவர்போல் பழகிவிட்டனர். கண்களை இமைகாப்பதுபோல் பாப்பாவை பாதுகாத்தாள் சந்திரா. குழந்தையை சந்திராவிடம் எவ்வளவோ முறை ஒப்புவித்துவிட்டுப் போயிருக்கிறாள் இந்து. தன்கணவன் சொல்லையும் லக்ஷியம் செய்யாது குழந்தையிடம் உயிரை வைத்து பெற்ற தாயைவிட அருமையாக வளர்த்த சந்திராவின் உள்ளம் இந்துவின் வார்த்தைகளால் உடைந்தது.

மறுநாள் காலை கண்விழித்த சந்திரா மிகுந்த சிரமத்தின் பேரில் மனதையடக்கிக்கொண்டு வேலையிலீடுபட்டாள். சுமார் ஒன்பது மணிக்கு டாக்டர் இந்துவின் வீட்டிற்குப் போவதைப் பார்த்த சந்திராவின் இதயம் துடித்தது கவலையால். கணவனை ஆபீசிற்குஅனுப்பிவிட்டு ஓடினாள் இந்துவின் வீட்டிற்கு. சாப்பிட்டுக்கொண்டிருந்தாள் இந்து. சந்திரா தன் உள்ளக்கிடக்கையை மறைத்துக் கொண்டு ஆவலும் அவசரமும் கலந்த குரலில் "இந்து, குழந்தை எப்படியிருக்கிறாள் ஜுரம் தேவலையா என்ன சாப்பிட்டாள் டாக்டர் என்ன சொன்னார்" என்றாள். "தேவலை" என்று சுருக்கமாய் பதிலளித்த இந்து சாப்பிடுவதில் ஈடுபட்டாள். ஒரு நிமிஷம் திகைத்துவிட்ட சந்

திரா விடுவிடென்று பாப்பா படுத்திருந்த அறைக்குச் சென்றாள். முகத்தில் வியர்வையரும்ப நிச்சலனமாய் தூங்கிக்கொண்டிருந்த குழந்தையைப் பார்த்த சந்திரா அன்புடன் வியர்வையை தன் புடவைத் தலைப்பால் துடைத்துவிட்டு நெற்றியில் முத்தமிட்டாள். அப்போது "சந்திரா குழந்தையை தொந்தரவு செய்யாதே" என்ற இந்துவின் எதிர்பாராத அதிகாரக் குரல் கேட்கவே. சந்திரா தீயை மிதித்தவள்போல் துள்ளினாள். "என்ன நான் கேட்பது கனவா நினைவா என்னுருயிர்த் தோழியின் வாயிலிருந்தா இப்படிப்பட்ட வார்த்தைகள் வருகிறது இது என்ன காலக்கொடுமை இந்துவின்பால் போன்ற உள்ளத்தில் விஷம் எப்படிப் புகுந்தது" என்று ஒரு நிமிஷம் குழம்பிய சந்திரா மறு நிமிஷம் இந்துவின் எதிரில் வந்து "போறேனம்மா மன்னித்துக்கொள்" என்று கண்ணீரைச் சொரிந்தபடி வீட்டிற்குச் சென்றுவிட்டாள். ஒரு பெருமூச்சுவிட்ட இந்து "இனிமேல் உன் பசப்பு மொழியிலே மயங்கரவள் இந்து இல்லை நல்ல சமயத்திலே சானுப்பாட்டி காப்பாற்றினாள்" என்று கூறிக்கொண்டாள் தனக்குள். ஒரு வாரம் சென்றது. திடீரென்று இந்து தன்னுடைய வீட்டிற்கு வருவதையும், பேசுவதையும் நிறுத்திக் கொண்டதன் காரணமறியாமல் சந்திராவின் மென்மையான இதயம் துடித்து தவித்தது. அன்ன ஆகாரம் விஷமாகப்பட்டது. உடல் இளைத்துத் துரும்பாகியது. அவள் கணவன் அவளைப் பலவிதமாகத் தேற்றப் பார்த்தார். அன்று மாலை நான்கு மணிக்கு வாசற்புறம் வந்த சந்திரா அடுத்த வீட்டு இந்திராவுடன் சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருப்பது காதில் விழுந்தது. 'நல்ல வேளை இந்திரா குழந்தையை அவளுடைய மோச வலையிலிருந்து காப்பாற்றினாள் பாட்டி' என்ற இந்துவின் குரல் கணீரென்று சந்திராவின் காதில் ஒலிக்கவே 'ஐயோ தெய்வமே நானா மோசக்காரி' என்று துடித்தபடி உள்ளே சென்றாள்.

மறுநாள் சந்திராவுக்கு கடுமையான ஜுரம். ஜாக்கிரதையாக இருக்கும்படி சொல்லிவிட்டுச் சென்றார் அவள் கணவர் டாக்டரை அழைக்க. திடீரென்று அங்கு ஓடிவந்த இந்து 'சந்திரா என்னை மன்னிக்க மாட்டாயா' என்று அழுதாள். 'யார் இந்துவா' என்ற சந்திரா அப்படியே துக்கம் தாங்காமல் குலுங்கக் குலுங்க அழுதுவிட்டாள். 'சந்திரா அநியாயமாய் சானுப்பாட்டியின் பேச்சைக் கேட்டு உன் மனதைப் புண்படுத்திவிட்டேன்.' நீ குழந்தையை சரியாககவனிப்பதில்லை சதா பிறரிடம் என்னைத் திட்டுகிறாய். உன் கணவர்கூட ஒருநாள் குழந்தையை அடித்து விட்டாராம்' என்றெல்லாம் சொல்லி என் மனதைக் கலைத்து விட்டாள். நிஜமென்று நம்பி அழ அழக் குழந்தையை உன்னிடமிருந்து பிரித்தேன். சற்று முன்தான் பாட்டியின் சூது வெளிப்பட்டது. அடுத்தாத்து கல்யாணியிடம் என்னைப்பற்றி தூஷித்து 'பாவம் அந்தப்பெண் சந்திரா தங்கமான பெண். இவளுடைய குழந்தையை உயிருக்குயிராய் வளர்த்தாள். திடீரென்று யார் பேச்சையோ கேட்டுக் கொண்டு அவளுடன் சண்டை போட்டாள். குழந்தையைஎவ்வளவோ அருமையாக வளர்த்தாளே என்ற நன்றிகூட இல்லை. இந்துவாம் இந்து ஆம்படையானோடுகூட ஒத்து வாழமாட்டாள் போலிருக்கு' என்று சொல்லிக்கொண்டிருந்தாள். அது சாப்பிட்டு இலை எறிய வந்த என் காதில் விழுந்தது. கோபம் வந்தது. மளமளவென்று பாட்டியிடம் போய் சண்டை போட்டேன். கதவைக் கூடப் பூட்டாமல் உன்னிடம் ஓடிவந்தேன்என்றாள் இந்து. 'அது கிடக்கட்டும் இந்து பாப்பா எங்கே' என்று சந்திரா ஆவலுடன் கேட்டதும் திடுக்கிட்டாள். 'ஐயோஎங்கேயா என்னோடு வந்தாளே என்று இந்து முடிப்பதற்குள், வாசலுக்கு ஓடினாள் சந்திரா. பாப்பாவைக் கையிலெடுத்துக் கொண்டு உள்ளே வரும் கணவனைப் பார்த்த சந்திரா கன்றைக்கண்ட தாய்ப் பசு போல் 'பாப்பா' என்று கதறியபடி கணவன் கையில் சாய்ந்தாள் காம்பொடிந்த தாமரைப் போல். அவளை ஆச்வாசப் படுத்திய சங்கரன் 'சந்திரா உன் பாச பித்து என்னையும்பிடித்துக் கொண்டு விட்டது போலும். டாக்டரைக் கூப்பிடப் போனவன் நம்தெருக்கோடியில்பாப்பா அழுது கொண்டே நிற்பதையும் வேகமாக ஒரு குதிரை வண்டி வருவதையும் பார்த்த நான் திடுக்கிட்டேன். ஒரு நிமிஷம் நான் தயங்கியிருந்தால் குழந்தை சட்டினியாகியிருப்பாள். ஒரே ஓட்டமாக ஓடி தூக்கிக் கொண்டேன். கூட்டம் கூடிவிட்டது. சந்திரா உன்னைச் சொல்வேனே வளர்த்த பாசம் எவ்வளவு சக்தி வாய்ந்தது என்று இப்போது தான்தெரிகிறது. பாப்பாவை அவா வீட்டில் கொண்டு விடட்டுமா என்னைப்பார்த்தால் உன் தோழி ரொம்ப கோபித்துக் கொள்வாளோ' என்றார். அது வரை கூடத்தில் ஒளிந்து கொண்டு நின்ற இந்து சந்திராவிடம் வந்து 'சந்திரா என்னை மன்னித்துவிடு. இனிஅவள் உன் குழந்தைதான்' என்றாள். சந்திராவின் முகம் மலர்ந்தது. 'சந்திரா போய்ப்படுத்துக்கோ டாக்டரை அழைத்து வருகிறேன்' என்று புறப்பட்டார் சங்கரன். டாக்டரா இனி எதற்கு. இதோ இருக்கிறாளே டாக்டர் இந்து இவள் தான் எனக்கு அம்ருத சஞ்சீவி போன்ற பாப்பாவையே கொடுத்து விட்டாளே உடம்பு தானே சரியாய்ப் போய் விடுகிறது' என்று சந்திராகூறும்போது இந்துவின் கண்களில் நீர்துளிர்த்தது.

பெண்மனம் ::

என். பட்டம்மாள்

"போயிட்டு வரட்டுமா, கமலா."

என்று பத்தாவது தடவையாக அவளிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டான் சங்கரன். கமலா, தன் கணவன் போகும் திக்கைப் பார்த்துக்கொண்டே நின்றாள். அவள் கண்களில் நீர் நிரம்பியது. பாவம், ஆறு மாதத்திற்குள் எப்படி இளைத்து உருமாறிப் போயிருக்கிறார்! கவனிப்பாரில்லாமல், வேளாவேளைக்கு பார்த்து சாப்பாடுகூடப்போடுவாரில்லாமல் எப்படி மாறிப்போய்விட்டார்! கடவுளே! 28 வயது ஆகவில்லையே, அதற்குள் தலைகூடவா இப்படி நரைத்து போக வேண்டும்! கமலா, கண்ணை துடைத்துக்கொண்டு நிதானமாக நடந்து 'சானடோரியத்தின்' ஒரு கோடியிலிருந்த வேப்பமரத்தை அடைந்தாள். அதற்கு அருகில் போட்டிருந்த ஈஸிசேரில் சாய்ந்துகொண்டாள். அவளையறியாமல் மனம் பழைய குப்பைகளை கிளறியது.

கமலா, ஜட்ஜ் சிவராமய்யரின் பெண். தாயில்லாப் பெண் என்று கமலாவை செல்வமாக வளர்த்தார் சிவராமய்யர். கமலாவும் செல்லப்பெண், பணக்காரப் பெண் என்பதற்குரிய அசட்டு குணங்கள் ஒன்றுமில்லாமல் இருந்தாள். தந்த பதுமைபோன்ற அவள் உருவமும், இனிய குணமும் சிவராமய்யருக்கு இல்லாத கவலைகளையெல்லாம் கொடுத்தன. இவ்வளவு நல்ல பெண்ணை, அருமை தெரியாதவனிடம் ஒப்புவித்துவிடக்கூடாதே என்பதுதான் அவைகளில் முக்யமானது. அதற்காக காசி முதல் கன்யாகுமரிவரை என்பார்களே அதுபோல், எத்தனையோ இடங்களில் எவ்வளவோ வரன்களை பார்த்துக்கொண்டே இருந்தார். சொத்து முதலியவைகளைப்பற்றி அவர் கவனிக்கவேயில்லை. அவரிடம் ஐந்து தலைமுறைகளுக்கு போதுமான ஆஸ்தி இருந்தது. பிள்ளையின் படிப்பைப்பற்றியும் அவர் அவ்வளவாக கவலைப்படவில்லை. அமெரிக்காவிற்கும், சீமைக்கும்போய் படிக்கவைக்க வசதியளிக்கும் சக்தி அவருக்கு இருந்தது. ஆனால் பையன், கண்ணுக்கு நன்றாகவும், பெண்ணை நன்றாக வைத்துக் கொள்பவனாகவும் இருக்கவேண்டுமென்றும் விரும்பினார். நான்குவருஷங்கள் சல்லடை போட்டு சலித்தபின் சங்கரனை பிடித்தார். அவன் அப்போது பி. எல். படித்துவிட்டு, கோர்ட்டிலேயே சின்ன குமாஸ்தாவாக இருந்தான். அவனுடைய பணிவான குணமும், அடக்கமான சுபாவமும், சுறுசுறுப்பான வேலைத்திறமையும் அவருக்கு வெகுவாக பிடித்துப் போய்விட்டது. ஜட்ஜ் சிவராமய்யர் தம் ஏகபுத்ரியை ஊர் பேர் தெரியாத ஏழைப் பையன் சங்கரனுக்கு கல்யாணம் செய்து கொடுப்பதாக சொன்னதும் ஊரே அல்லோகலப்பட்டது. உறவினர்கள் எல்லோரும் பெருமை பொங்க.

"சிவராமனுக்கு புத்தி பேதவித்து விட்டதாஎன்ன? அருமை பெண்ணை எங்கள் பிள்ளைகளில் ஒருத்தருக்கு கொடுக்காவிட்டால் வேண்டாம். மாப்பிள்ளை என்று கௌரவமாக சொல்லிக் கொள்ளக்கூடிய இடத்திலாவது கொடுக்கக்கூடாதா? இப்படிப் பட்ட பணத்தை கண்டிராத ஜன்மங்களிடம் பணத்தைக் கொடுத்தால் அப்புறம் என்ன ஆகுமோ?" என்றார்கள் இன்னும் சிலர்.

"இதில் ஏதோ சூது இருக்க வேண்டும்" என்றார்கள். இதையெல்லாம் கேட்கக் கேட்க கமலாவின் மனம் விண்டுவிடும்போலிருந்தது. தன் தந்தைதான் அறியாமல் இப்படி செய்கிறாரோ என்ற சந்தேகம் உதித்தது. ஆனால் சங்கரனின் கள்ளங்கபடமற்ற பேச்சையும், அழகான வதனத்தையும் பார்க்கும்போது சற்று முன் அப்படி நினைத்ததற்கு தன்னைத்தானே நொந்து கொள்வாள்.

கல்யாணமாயிற்று. காலபலனோ இல்லை கமலாவின் அதிர்ஷ்டமோ சங்கரன் கோர்ட் வேலையை விட்டு விட்டு 'பிரைவேட் பிராக்டிஸ்' ஆரம்பித்து இரண்டு வருடங்களிலேயே பிரபல வக்கீலானான். மாப்பிள்ளையும், பெண்ணும் இருக்கும் அன்யோன்யத்தையும், அவர்களுக்கிடையில் இருக்கும் பாசத்தையும் பார்த்து சிவராமய்யர் பூரித்துப்போனார். கமலாவும் சங்கரனின் காதலில் மூழ்கி, திளைத்து களித்தாள். ஆனால் சிவராமய்யர் மனதில் ஒரு குறை இருந்தது. தாம் கண்ணை மூடுவதற்குள் தம் பேரப் பிள்ளையை பார்க்கவில்லையே என்று. அதேபோல் சிறு குழந்தைகள் என்றாலே ரொம்ப பிடிக்கும். தனக்கு கல்யாணமாகி நான்கு வருஷங்களாகியும் ஒரு குழந்தைகூட இல்லையே என்று இருந்தது கமலாவுக்கு. சங்கரனுக்கு அவள் ஆதங்கம் தெரியாமலா இருக்கும்? ஆனால் அவன் சாமர்த்தியக்காரன். அதனால் அவள் தன் குறையைப்பற்றி பேசும்போது, "நான் இருக்கிறேனே ஒரு குழந்தை, அது போதாதா கமலா?" என்று பேச்சை ஹாஸ்யத்தில் திருப்பி விடுவான். அதனாலெல்லாம் கமலாவின் மனது சாந்தமடைந்து விடவில்லை. யாரோ சொன்னதை கேட்டு வைத்துக்கொண்டு திடுதிப்பென்று ஒருநாள் ராமேசுவரம் போகவேண்டுமென்றாள். அப்போதோ நல்ல மழை காலம். கமலாவின் துர்பலமான சரீரத்திற்கு அந்த காலத்தில் சமுத்ர ஸ்நானம் ஒத்துக்கொள்ளாது என்று எவ்வளவோ தடவை சொல்லிப் பார்த்தான் சங்கரன். கமலா கேட்பதாக இல்லை. ராமேசுவரம் போய்விட்டு வந்தார்கள். வரும்போதெல்லாம் கொட்டும் மழை. ஒரே குளிர். சங்கரன் சொன்னதுபோல், உண்மையில் அந்தக் குளிரில் கமலாவுக்கு சமுத்ர ஸ்நானம் ஒத்துக்கொள்ளவில்லை. ஊருக்கு வந்ததும் வராததுமாக படுத்த படுக்கையானாள். முதலில் இன்னதென்று கண்டுபிடிக்க முடியாத வெறும் ஜுரமாக இருந்தது. அப்புறம் சிணுக் இருமல் ஒன்று எங்கிருந்தோ முளைத்தது. அப்புறம் சாயங்காலம் மாத்திரம் ஜுரம் அடிக்கத் தொடங்கியது. கடைசியில் பிரபல டாக்டர்களெல்லாம் டி. பி. என்று கையை விரித்துவிடும் அளவுக்கு அவள் வியாதி வளர்ந்தும் விட்டது. டாக்டர்களின் சொற்படி சங்கரன் டி. பி. சானடோரியத்திலும் கமலாவைக் கொண்டுவந்து சேர்த்தான். தம் அருமை பெண் எலும்பும் தோலுமாக போயிருக்கும் இந்தக் காட்சியை கண்டது போதும் என்பதேபோல் சிவராமய்யரும் காலமானார்.

இதையெல்லாம் பற்றி யோசித்துக்கொண்டே கமலா வேப்பமரத்தை அண்ணாந்து பார்த்தாள். அதன் பச்சை பசும் கிளையில் ஒரு பறவைக் குடும்பம் கொம்மாளம் போட்டுக்கொண்டிருந்தது, அவள் மனதை என்னவோ செய்தது. கண்ணை மூடிக்கொண்டு மறுபடி ஈஸிசேரில் சாய்ந்தாள். லேசாக மாலை வேளையின் மெல்லிய காற்று வீசியது. தூரத்தில் மாதா கோவில் மணி அடிப்பது மெல்லியதாக கேட்டது.

"உன்னிஷ்டம் அதுவானால் சரி கமலா. உன் சந்தோஷந்தான் எனக்குப் பெரிது" என்றான் சங்கரன். அதுவரையில் நிம்மதியுடன் இருந்த கமலாவின் மனது சட்டென்று கறைப்பட்டது. இருந்தாலும் தன் ஏமாற்றத்தை வெளிக்காட்டாமல் மேலும் சொன்னாள்.

"உங்களுக்கு இந்த ஏற்பாட்டில் துளிக்கூட இஷ்டமில்லை என்பது எனக்கு தெரியும். இருந்தாலும் என் மனச்சாந்திக்காக நீங்கள் இதை செய்யவேண்டும். இனிமேல் நான் பிழைத்து வருவதோ வந்தபின் சந்தோஷமாக மணவாழ்க்கை நடத்துவதோ சந்தேகம்தான். இதற்காக நீங்கள் ஏன் இந்த இளம் வயதில் சன்யாசி போல் வாழவேண்டும்? பேசாமல் ஒரு ஏழைப் பெண்ணைப் பார்த்து கல்யாணம் செய்துகொள்ளுங்கள். அப்படியே ஒருசமயம் நான் குணமாகி வந்தாலும், என்னிடம் பிரியமாக இருக்கும் நல்ல குணமுள்ள பெண்ணைப் பார்த்து செய்துகொள்ளுங்கள். அவள் குழந்தைகளையாவது பார்த்து என் தாபத்தை தீர்த்துக்கொள்கிறேன்."

சங்கரன் தலைகுனிந்தபடி உட்கார்ந்திருந்தான். அவன் முகம் வெளிறிப்போயிருந்தது.

ஒரு மாதமாயிற்று. திடீரென்று ஒருநாள் சங்கரன் சொன்னான்.

"கமலா, உன் விருப்பத்தை பூர்த்தி செய்ய துணிந்துவிட்டேன். அடுத்த வெள்ளிக்கிழமை கல்யாணம்" என்றான் சுருக்கமாக. கமலாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

வெள்ளிக்கிழமையன்று 'சானடோரியத்'தில் இருப்பே கொள்ளவில்லை கமலாவுக்கு. இவ்வளவு நாழி மாலை மாற்றி இருப்பார்கள். இவ்வளவு நேரத்திற்கு அம்மி மிதித்திருப்பார்கள் என்றெல்லாம் நினைத்துக்கொண்டேயிருந்தாள். கூடவே தன் மணக் காட்சிகளும் நினைவுக்கு வந்தன. மாலை மாற்றும்போது முதன் முதலாக அன்பு ததும்ப சங்கரன் அவளை பார்த்த பார்வை! அப்புறம் முதன் முதலில் கையை கோர்த்துக்கொள்ளும்போது அவன் வேண்டுமென்றே தன் கையை இறுக்கி பிடித்தது! இந்த இன்ப நினைவுகளெல்லாம் துயரக் கனவுகளாக அவளுக்கு இப்போது தோற்றமளித்தன. கமலா குலுங்கி, குலுங்கி அழுதாள். ஒரு வாரமாக சரியாக தூங்காததினாலும் வீணாக மனதை அலட்டிக்கொண்டதாலுமே அவள் வியாதி அதிகரித்துவிட்டது. டாக்டர் வந்து ஒரு 'இஞ்செக்ஷனை' குத்திவிட்டு சென்றாள். பலத்த இருமல் தாக்குதல் ஒன்றிற்குப் பின் குத்துயிரும் குலையுயிருமாக படுக்கையில் ஜீவனற்றுக் கிடந்தாள் அவள். திடீரென்று நர்ஸ் 'விஸிடர்ஸ்' என்று முணுமுணுப்பது காதில் விழுந்தது. அயர்ந்த கண்களை சிரமத்துடன் திறந்து பார்த்தாள். ஆமாம்! சங்கரன்தான், அவள் கணவன்தான், தன் புது மனைவியுடன் அவளை பார்க்க வந்துகொண்டிருந்தான்.

வந்ததும் வராததுமாக "அக்கா!" என்றாள் வாத்ஸல்யத்துடன் அந்த புதுப் பெண். அவள் அழகை பருகின கமலாவின் கண்கள். சொர்ண பொம்மை போன்ற அவள் உருவம் புது மண வேகத்தில் பதின்மடங்கு அழகுடன் பிரகாசித்தது. அவளுடைய வனப்பு மிகுந்த தேகத்துடன், எலும்பும் தோலுமாக பார்க்க அருவருப்பாக இருக்கும் தன் தேகத்தை ஒப்பிட்டு பார்த்துக்கொண்டாள் கமலா. அவளுக்கு பேசத் தோன்றவில்லை. பேசாமலிருந்தாள்.

"கமலா, லக்ஷ்மியை பாரேன். நீயே என்னை கல்யாணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்திவிட்டு இப்போது இப்படியிருக்கலாமா? ஒரு வார்த்தை பேசு கமலா," சங்கரனின் இந்த பேச்சு கமலாவின் காதில் விழுந்தது. ஆனால் அவள் உள்ளம் பொறாமை தீயில் வெந்துகொண்டிருந்தது. ஆகா! இந்த புருஷர்களுக்குத்தான் என்ன வஞ்சக நெஞ்சம்! உண்மையான அன்பு இருந்தால் என்னதான் தெரியாத்தனமாக நான் சொன்னாலும் இன்னொரு தாரம் மணந்து கொள்ளத் துணிவாரா? அதுவும் நான் உயிருடன் இருக்கையில்! அவளுடைய புது அழகு இவரை இப்படி மயங்கவைத்திருக்கிறது. கமலாவுக்கு பேச நா எழவில்லை. மௌனமாக திரும்பி படுத்துக் கொண்டாள். அப்புறம் அவர்கள் எப்போது போனார்களோ கமலாவுக்குத் தெரியவே தெரியாது.

அதற்குப் பிறகு சங்கரன் எப்போதாவது அவளை வந்து பார்ப்பான். கடனெழவே யென்று அரை மணி நேரம் பேசிவிட்டு போவான். கொஞ்சம் கொஞ்சமாக தனக்கும் சங்கரனுக்கும் இடையே உள்ள அகழி அகண்டு கொண்டே வருவதை பார்த்துக் கொண்டே யிருந்தாள் கமலா. அவள் மனம் வெதும்பியது. அவர்களுக்கிடையே இருந்த லக்ஷ்மியைப்பற்றி நினைக்கக்கூட மனம் கூசியது அவளுக்கு.

நாடகத்தில் காட்சி மாறுவது போல் காட்சி மாறியது. ஏனோ புதுமையிலும் புதுமையாக லக்ஷ்மியும் அன்று கமலாவை பார்க்க சானடோரியத்திற்கு வந்திருந்தாள். லக்ஷ்மியை ஏற இறங்க பார்த்தாள் கமலா. அவள் மனது பற்றி எரிந்தது. வெடித்துக்கொண்டு வந்தன வார்த்தைகள். சங்கரன் அருகில் இருப்பதை மறந்து பேசினாள் கமலா.

"என்னடியம்மா? குழந்தை பிறக்கப்போகிற குதூகலத்தைக் காட்ட ஒருத்தருமில்லையேஎன்று என்னைப் பார்க்க வருகிறாப் போல வந்தயா?"

லக்ஷ்மி உதடு துடிக்க நின்றாள். பதில் பேசவில்லை. ஆனால் சங்கரன்தான் சொன்னான்.

"ஏன் கமலா இப்படி படபடவென்று வார்த்தைகளை கொட்டுகிறாய்? உன்னைப் பார்க்கவேண்டுமென்று லக்ஷ்மி எவ்வளவு ஆசையுடன் வந்தாள் தெரியுமா?"

"ஊஹூம்... வருவாள். வரமாட்டாளா? வந்து, நான் ஒரே அடியாக ஒழிந்து போக இன்னும் எவ்வளவு நாளாகும் என்று பார்க்க வந்திருப்பாள். அப்போதுதானே சந்தோஷமாக சம்சாரம் பண்ணலாம்?"

கமலா பொருமையை கக்கினாள். லக்ஷ்மி நிதானமாக பதிலளித்தாள். "ஏன் அக்கா வீணாக கோபித்துக் கொள்ளுகிறீர்கள்? நீங்கள் வந்து பெரியவராக வீட்டிலிருப்பது போக..."

"அடி மாய்மாலக்காரி! பேச்சைப் பார்! இருந்து, இருந்து உன்னைவிட எத்தனை வயது பெரியவள் நான்? நாலு வயதா ஒரு வயதா? நான் இனிமேல் என்னத்திற்கு அந்த பாழும் வீட்டிற்கு வருகிறேன்? உன்னைப் போல் விதியற்று போய்விட்டேனா என்ன நான்? நீயே அந்த குட்டிச் சுவராய்ப் போன வீட்டில் குடித்தனம் பண்ணு. நீ உருப்படுவாயா? நீ கெட்ட கேட்டிற்கு குழந்தை வேறா? உனக்கு எங்கிருந்தடி தைரியம் வந்தது என்னை வந்து பார்க்க? மூதேவி!"

லக்ஷ்மி கையால் முகத்தை மூடிக்கொண்டு விம்மி, விம்மி அழுதாள். சங்கரன் அனல் கக்கும் கண்களால் கமலாவைப் பார்த்தான். கமலாவின் இதயம் பட்பட்டென்று அடித்துக்கொண்டது.

"கமலா! ஏ கமலா!"

கமலா கண்ணை விழித்துப் பார்த்தாள். சங்கரன் பரக்க, பரக்க தலைவிரி கோலமாக அவள் முன் நின்றான். அவன் கண்கள் ரத்த சிவப்பாக யிருந்தன. முகத்தில் குரோதம் கொதித்தது.

"அடி பாவி! அந்த உடம்பில் அவளிடம் குரூரமாக பேசினாயே! அவள் போய்விட்டாள். இப்போது நிம்மதிதானா? உன் பாழும் மனது சாந்தியடைந்ததா? பொருமைக்கார சண்டாளி!"

"என்ன? லக்ஷ்மி போய்விட்டாளா? ஐயோ! ஏன்?"

"ஏனா? நீ திட்டிய திட்டலில் அழுதழுது அவளுக்கு ஜுரம் வந்துவிட்டது. மறுநாளே, மாசம் ஆவதற்குள் குழந்தை பிறந்து குழந்தையும் போய்விட்டது. லக்ஷ்மியும் இன்று காலை போய் விட்டாள். அடி தரித்திரமே! உன் மனது குளிர்ந்ததா? வியாதி பிணமே!"

"இல்லை! இல்லை! பொருமையால் ஏதோ உளறினேன். லக்ஷ்மி! லக்ஷ்மி!"

"கமலா அம்மா! கமலா அம்மா!" என்று யாரோ தோளை பிடித்து உலுக்குவதைக் கண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள் கமலா. கண்ணைத் துடைத்துக்கொண்டாள். மாலை நேரத்து மஞ்சள் வெயில் மறைந்து இருள் திரை இறங்கி வந்திருந்தது. ஈஸிசேரில் அதிக நேரம் படுத்திருந்ததால் அவள் முதுகு வலித்தது.

"என்ன அம்மா இது? மணி ஏழு ஆவுது. 'பெட்'லே இல்லையேன்னு வந்து பார்த்தா இங்கே வந்து படுத்துத் தூங்கியிருக்கீங்களே. அதான்னு பாத்தா லக்ஷ்மி, லக்ஷ்மின்னு ஏதோ உளறினீங்களே என்னம்மா?" என்று நர்ஸ் லீலா கேட்டாள். இன்னும் தூக்கக் கலக்கத்திலிருந்து விடுபடாதவளாய் கமலா,

"லக்ஷ்மி பிழைத்து விட்டாளா? குழந்தை பிழைத்துவிட்டதா?" என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டே சென்றாள். நர்ஸ் சிரித்துக்கொண்டே,

"ஏம்மா, குழந்தை, குழந்தைன்னு உருகி போறேங்க. அடுத்த மாசம் 'டிஸ்சார்ஜ்' ஆகப் போறீங்க. தன்னைப்போல அடுத்த வருஷம் கிளிபோல ஒரு குழந்தை பிறக்கும், உங்க நல்ல குணத்துக்கு" என்றாள். தூக்க கலக்கம் தெளிந்தவளாய் கமலா எழுந்து நடந்துகொண்டே,

"என்ன பயங்கரமான கனவு!" என்று மனதிற்குள் முணமுணத்துக்கொண்டாள்.

ஊர்வலம்

✶

இதயவாசி

பாண்டு சப்தமும், மேள சப்தமும் காதைத் துளைத்தன. ஜன்னலின் வழியாகப் பாய்ந்து வந்த விளக்குகளின் ஒளி கண்களைக் கூசச் செய்தது. ஏதோ ஒரு புத்தகத்தை புரட்டி பொழுதை தள்ளிக்கொண்டிருந்த நான் எழுந்து வாசற்புறம் வந்தேன். எனக்கு முன்னாலேயே அங்கு ஆஜராகி யிருந்தாள் சாந்தா. பக்கத்து வீட்டு வாசலில் நின்றிருந்த அலங்காரமான கார் எனக்கு விஷயத்தை கொஞ்சம் விளக்கிக் கூறியது.

'அவர்கள் வீட்டில் என்ன விசேஷம்?' என்றேன் சாந்தாவைப் பார்த்து.

'பார்த்தால் தெரியலையா? அவர்கள் வீட்டுப் பிள்ளைக்கு கல்யாணம். பெண் வீட்டுக்கு மாப்பிள்ளையை அழைத்துப் போகப்போகிறார்கள்' விவரம் பூராவும் சொல்லி முடித்தாள் அவள்.

சிறிது நேரத்தில் மாப்பிள்ளை கழுத்தில் ரோஜா மாலை புரள காரில் ஏறி உட்கார்ந்தான். தொடர்ந்து மாப்பிள்ளை தோழனும் வந்து அமர்ந்தான். காருக்கு முன்னால் அணி அணியாகக் கையில் ஒவ்வொரு தட்டுடன், வித விதமான புடவைகளும், நகைகளும் மின்ன வந்து நின்றனர் பெண்கள். அவர்களில் நடுநாயகமாக விளங்கிய ஒருவள் சாந்தாவை நிமிர்ந்து பார்த்து புன்னகை செய்து தலையசைத்தாள். சாந்தாவும் பதில் சொல்வது போல் புன்னகைத்தாள். ஊர்வலம் புறப்பட்டது. விளக்குகள் சிந்தும் வெள்ளொளியில் அசைந்து அசைந்து நடந்தனர் பெண்கள்.

'காருக்கு முன்னால் அவர்கள் போவது அழகாயிருக்கு இல்லையா? நம் ஜாதி கல்யாணமாயிருந்தால் ஊர்வம்பை அளந்துகொண்டு காருக்கு பின்னால்தான் எல்லோரும் வருவார்கள்' என்றாள் சாந்தா ஊர்வலம் போகும் அழகை ரசித்துக்கொண்டு.

'ஒவ்வொரு ஜாதிக்கு ஒவ்வொரு விதமான பழக்க வழக்கங்கள் கட்டுப்பாடுகள்' என்றேன். வாத்திய ஒலி மெள்ள மெள்ள தேய்ந்து உருமாறியது. ஊர்வலமும் எங்கள் பார்வையிலிருந்து நழுவி தெரு முனை திரும்பியது.

மறுபடி உள்ளே வந்து புத்தகத்தை எடுத்துக்கொண்டு சேரில் சாய்ந்தேன். ஆனால் இப்பொழுது மனம் படிப்பில் செல்லவில்லை. இதயத்தில் சிந்தனை சலசலத்தது. சிந்தனையிலே பிறந்த பிறந்த நினைவு நெஞ்சை நிறைத்தது. உணர்ச்சியின் கணகணப்பில் மிதந்த என் உள்ளத்தில் வாழ்வை மலரச் செய்த அந்த சம்பவம் நிழலாடியது. கண்களை மூடிக்கொண்டு சிந்தனைக் கடலினுள் மூழ்கினேன். மடியிலே புத்தகம் பிரித்தபடி கிடந்தது. இளங்காற்று மெள்ள என் உடலை வருடி முத்தமிட்டது.

* * *

சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்த என்னை எடுத்து வளர்த்தவள் அத்தை. நான் அத்தை வீட்டுக்கு வரும்பொழுது சாந்தா ஒரு வயது குழந்தை. எனக்கு ஐந்து வயது. தந்தப் பொம்மை போல தவழ்ந்து விளையாடும் அவள் உருவம் என் பிஞ்சு மனதிலேயே பதிக்கப்பட்டுவிட்டது. நானும் அவளும் சேர்ந்து வளர்ந்தோம். விளையாடினோம். ஒன்றாகப் படித்தோம். நாட்கள் இறக்கை கட்டிக்கொண்டு பறந்தன. படிப்படியாக எங்களைப் போல எங்கள் அன்பும் வளர்ந்துகொண்டிருந்தது. நினைவு தெரிந்த நாளிலிருந்து சாந்தா எனக்காகத்தான் வளருகிறாள் என்ற எண்ணம் என் நெஞ்சிலே உறுதியாகப் படர்ந்திருந்தது.

என் அத்திம்பேரும், அத்தையும் என்னை தன் பிள்ளையைப்போல வளர்த்தனர். சாந்தாவுக்கும் எனக்கும் அந்த வீட்டில் எந்தவிதமான வித்தியாசமும் கிடையாது. அத்திம்பேர் கொஞ்சம் முன்கோபக்காரர். கோபம் வரும் நேரத்தில் அவர் எதிரே எவரும் நின்று பேச முடியாது. காலம் வருடங்களை விழுங்கி ஏப்பமிட்டுக்கொண்டு என்னையும் சாந்தாவையும் பருவத்தின் படியில் கொண்டு நிறுத்தியது. சாந்தாவின் அழகு புது மெருகுடன் பளபளத்தது. கண்ணாடி போல பளபளக்கும் கண்களில் கவர்ச்சி குவிந்திருந்தது. அவளுடைய எழிலை சுவைப்பதிலே என்னையே கூட சில சமயங்களில் மறந்துவிடுவேன். அவளுடன் கழித்த நேரம் தேனமுதை போல தித்தித்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. சாப்பாடு முடிந்ததும் வழக்கம் போல நானும் சாந்தாவும் கேரம் விளையாட உட்கார்ந்தோம். ஆட்டம் சுவாரசியமாக இருந்தது. நான் சாந்தாவிடம் கொஞ்சம் கொஞ்சமாக தோற்றுக்கொண்டிருந்தேன். அதுவும் எனக்கு இன்பமாகத்தான் இருந்தது. அத்தை நாங்கள் விளையாடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

'மணி இன்று உனக்கு வேறு வேலை இருக்கிறதா?' என்று கேட்டுக்கொண்டே அங்கே வந்தார் அத்திம்பேர்.

'இல்லை ஏன்?' என்றேன்.

'மயிலாப்பூரில் இருக்கும் ஒருவருடைய அட்ரஸ் தருகிறேன். நான் சொல்லும் விஷயத்தை அவரிடம் போய் சொல்லி விட்டு வருகிறாயா?'

'ஆகட்டும்' என்ற நான், பாதி ஆட்டத்திலிருந்து எழுந்தேன். அவர் சொன்ன அந்த விஷயத்தைக் கேட்டபொழுது எனக்கு தலை சுற்றியது. அந்த அறிமுகமில்லாதவருடைய பிள்ளையின் ஜாதகத்துடன் சாந்தாவின் ஜாதகம் பொருந்தி இருப்பதால் அன்று மாலையே அவர்களைப் பெண் பார்க்க வரும்படி அழை

த்துவிட்டு வரச் சொன்னார் அத்திம்பேர். நான் வாயடைத்து ஊமையாகிவிட்டேன். மனம் புகைந்து அனலைக் கக்கியது. வேதனையுடன் சாந்தாவைப் பார்த்தேன். அவள் விழி கோணத்தில் கண்ணீர் திரைகட்டி நின்றது. சட்டென்று தலை குனிந்து கொண்ட அவள் அங்கிருந்து எழுந்து போய்விட்டாள்.

'போயிட்டு சீக்கிரமாக வந்துவிடு!' என்று கூறிய அத்திம்பேர் அட்ரஸைக் கொடுத்துவிட்டு போய்விட்டார். பிரமையால் கல்லாக சமைந்தநான் அவரிடம் ஒன்றும் பேசவில்லை.

'ஏண்டா மணி மரமாக நின்னுவிட்டே! சீக்கிரமாக போய் சொல்லிவிட்டு வந்தால் தானே மற்ற ஏற்பாடுகளை கவனிக்க முடியும்' என்ற அத்தையின் குரல் என்னை சுயநினைவடையச் செய்தது.

'அ..த்..தை.!' என்றேன் தடுமாற்றத்துடன்.

'என்னடா?' என்றாள் அத்தை வாத்ஸல்யத்துடன். என் மனதைத் திறந்து அவளிடம் காண்பிக்க விரும்பினேன். ஆனால் கூச்சமோ, வெட்கமோ ஏதோ ஒன்று என்னை தடை செய்துவிட்டது. நாக்கு புரள மறுத்துவிட்டது. குப்பென்று வியர்த்து வியர்வை துளிகள் நெற்றியில் அரும்புகட்டி விட்டன. என் முகத்தைப் பார்த்த அத்தை திடுக்கிட்டாள்.

'மணி உன் முகம் ஏன் இப்படியிருக்கு?' பரபரப்புடன் கேட்டாள் அவள்.

'ஒண்ணுமில்லே அத்தை. புழுக்கம் அதிகமாயிருக்கு. என்ன வெய்யில்!' பொருத்தமில்லாது ஏதோ பேசினேன். என்னையுமறியாமலே ஏதோ ஒரு சக்தி என் உள்ளத்தை அத்தையிடம் மறைத்து விட்டது.

'பஸ்ஸிலே போயிட்டுவா' என்று சொல்லி விட்டு அத்தை தன் வேலைகளை கவனிக்க போய்விட்டாள். குழம்பிய மனதை சிறிது தெளிவாக்கிக் கொண்டேன். பெண் பார்த்து விட்டால் கல்யாணம் முடிந்துவிடுமா என்ன? சாந்தா சம்மதித்தால் தானே நடக்கப்போகிறது! பார்த்துக் கொள்ளலாம் என்ற துணிவு பிறந்தது. நேராக அவர்கள் வீட்டுக்குப் போய் விஷயத்தை சொல்லிவிட்டு மன அமைதியைநாடி கடற்கரைக்குப் போனேன். சில்லென்ற காற்றும் குளிர்ந்த நிலவும் புகைந்துகொண்டிருந்த மனதை கொஞ்சம் சாந்தப்படுத்தின. அவர்கள் பெண்பார்க்க வரும்போது வீட்டிலிருக்க நான் விரும்பவில்லை. இரவு ஒன்பது மணிக்கு மேல் வீட்டுக்குப் போய் கதவை இடித்தேன். லேசாகத் தட்டுவதற்கு முன்பே கதவு திறந்து கொண்டது. மங்கிய விளக்கொளியில் அழகுப் பதுமையாக நின்று கொண்டிருந்தாள் சாந்தா. மாலையில் செய்து கொண்டிருந்த அலங்காரம் இன்னும் கலைக்கப்படவில்லை. தலையில் சூட்டியிருந்த மல்லிகைச் சரம் நழுவி கழுத்தில் மாலையாக விழுந்திருந்தது.

'ஏன் இவ்வளவு நேரம்?' என்று கேட்ட அவள் குரல் கிணற்றினுள்ளிருந்து பேசுவதுபோல இருந்தது.

'அவர்கள் உன்னைப் பார்க்க வந்து இருந்தார்களா?' என்று கேட்டேன். 'உம்' கொட்டினாள் அவள். அதில் அழுகைகலந்திருந்தது. அப்பொழுதுதான் அவள் அருகில் நெருங்கி முகத்தைப் பார்த்தேன். அழுது அழுது முகம் சிவந்திருந்தது. கண்களில் கோர்த்து நின்ற கண்ணீர் முத்து முத்தாக கன்னத்தில் உருண்டன.

'ஏன் அழறே?' என்று கேட்டேன். அவள் பதில் சொல்லவில்லை. விம்மிக் கொண்டே தன் அறைக்குப் போய்விட்டாள். அத்தையும் அத்திம்பேரும் நன்றாக தூங்கிக்கொண்டிருந்தனர். சந்தடி செய்யாது ஒரு டம்ளர் தண்ணீர் குடித்துவிட்டு படுக்கையில் போய் படுத்தேன். சாந்தாவின் விம்மல் என் உள்ளத்தில் எதிரொலித்தது. இரவு பூராவும் தூக்கமில்லாது வேதனையுடன் படுக்கையில் புரண்டேன். நிலவு ஜன்னல் வழியாகப் புகுந்து என்னை சித்திரவதை செய்தது.

• • •

நான் எதிர்பார்த்ததற்கு எதிராக நடந்தது சாந்தாவின் கல்யாணம். சாந்தாவின் விருப்பத்தை கேட்காமலே விவாக ஏற்பாட்டில் முனைந்து விட்டார் அத்திம்பேர். பிள்ளைவீட்டாரின் சொத்தில் மனம் மயங்கிவிட்டார் அவர். அவர்களின் இஷ்டப்படி ஒரே வாரத்தில் விவாகம் நடக்க ஏற்பாடாகி விட்டது. மூச்சுவிடக்கூட நேரமில்லாது அத்தையும் அத்திம்பேரும்வேலை செய்து கொண்டிருந்தனர்.

சாந்தாவை காண்பதே அரிதாகிவிட்டது. தன் அறையிலேயே புழுங்கி செத்துக் கொண்டிருந்தாள் அவள். அத்திம்பேரிடம் பேச தைரியமில்லாத நான் இயந்திரம்போல இயங்கிக் கொண்டிருந்தேன். சாந்தா இன்னொருவனுக்கு சொந்தமாகிவிடப்போகிறாள் என்ற நினைவு என் நெஞ்சை பிய்த்துப் புண்ணாக்கியது. எதிர்காலம் வெறுப்பின் நிலைக்களமாகத் தோற்றமளித்தது.

கல்யாணத்திற்கு முதல் நாள் மாலை. வீட்டில் உறவினர்களும், நண்பர்களும் நிறைந்து விட்டனர். மாப்பிள்ளை அழைப்புக்கான ஏற்பாடுகள் துரிதமாக நடந்துகொண்டிருந்தன. நான் எரிந்துகொண்டிருக்கும் இதயத்துடன் பைத்தியம்போல அலைந்துகொண்டிருந்தேன். எல்லோரும் மாப்பிள்ளை அழைப்புக்கு கிளம்பிவிட்டனர். நான் மட்டும் என் அறையிலே படுக்கையை விரித்து படுத்தேன். குமுறிக் கொண்டிருந்த துக்கம் கரையை உடைத்துக்கொண்டு பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்தது. கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் தலையணையை ஈரமாக்கியது.

அறைக்கு வெளியே காலடியோசைக் கேட்டது. என் அவல நிலையை மறைத்துக்கொள்ள குப்புறத் திரும்பி படுத்துக்கொண்டேன்.

“மணி..!” சாந்தாவின் சோகம் குமிழியிடும் குரல் என் காதில் புகுந்து உள்ளத்தை சிலிர்க்க வைத்தது. படபடப்புடன் எழுந்து உட்கார்ந்துகொண்டேன். சிவந்து தடித்த கண்களும் வாடிய முகமும் என் நெஞ்சை கசக்கிப் பிழிந்தன.

“சாந்தி...!” என் ஏக்கம் பூராவையும் மூன்று எழுத்துக்களில் வடித்துக் கொட்டினேன்.

“அப்பாவிடம் கேட்க தைரியமில்லாது என்னை இன்னொருவனுக்கு பலியிட்டு விடப்போகிறார்களா?” என்று விம்மினாள் சாந்தா.

என் இதயம் துடித்தது. “என்னை என்ன பண்ண சொல்லுகிறாய்? பித்தனைப்போல பிதற்றினேன்.

“நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். என் தலைவிதியை உங்களால் மாற்றி அமைக்க முடியுமா? இதுதான் நான் உங்களிடம் கடைசியாகப் பேசுவது. இனி என் கண்களில் படாது எங்காவது போய்விடுங்கள். உங்களை அடிக்கடி பார்த்தால் நான் கடமையிலிருந்து தவறிவிடுவேன். இதயத்தைக் கல்லாக்கிக்கொள்ள உங்களைப் பார்க்காமல் இருப்பதுதான் வழி!” விக்கலுக்கும் விம்ம

லுக்கும் இடையே கூறினுள் சாந்தா. முகத்தில் உறுதியின் சாயை படர்ந்தது.

என் தவறை சாந்தா எடுத்துக் காட்டியபொழுது நான் என் கோழைத்தனத்தை உணர்ந்தேன். வெட்கமும் அவமானமும் என்னை பொசுக்கியது.

"ஆகட்டும் சாந்தா. நாளை மட்டுமில்லை. இனி உன் கண்களிலே படமாட்டேன். அன்பின் சந்நிதானத்திலே பிரம்மசரிய விரதம் எடுத்துக்கொண்டுஇதோ புறப்பட்டு விடுகிறேன். என் உயிர் பறவையைக் கூட்டில் அடைத்து விட்டு வெற்று உடலுடன் கிளம்பி விடுகிறேன். என்னை மறந்து மன்னித்து விடு" ஏதோ வெறி பிடித்தவன்போல பேசிவிட்டு மாடிப் படிகளில் இறங்கி ஓடினேன். எதிரே வந்தவர்கள்மேல் மோதிக்கொண்டு நடந்தேன். எங்கே போகிறேன் என்பது எனக்கே தெரியாது. நடந்தேன் நடந்துகொண்டேயிருந்தேன்.

"மணி" என்ற அத்திம்பேரின் உரத்த குரல் என்னை ஒரு கணம் சுயநினைவடைந்து நிற்கச் செய்தது. "ஏன்?" என்னும் பாவனையில் அவரை நிமிர்ந்து பார்த்தேன். அவர் முகத்தில் கோபம் கொந்தளித்து அலைமோதிக் கொண்டிருந்தது.

"என் பின்னேடே வா!" என்ற அவர் விறுவிறு வென்று முன்னால் நடந்தார்.

"எதற்கு?" என்றேன் தயக்கத்துடன்.

திரும்பிப் பார்த்த அவர் பார்வையில் அனல் தெறித்தது.

"சொல்லித்தான் ஆகணுமோ! பேசாமல் வா; தானுகத் தெரியும்" என்று அத்திம்பேர் வேகமாக நடந்தார்.

என் மனம் சிந்தனை செய்யும் சக்தியை இழந்திருந்தது.என்னை அத்திம்பேர் கோயிலுக்கு அழைத்துச் சென்றுர். அந்த கோயிலிலிருந்து மாப்பிள்ளை அழைப்பதாக இருந்தது. கல்யாண மண்டபத்தில் கட்டியிருந்த மாவிலைத் தோரணங்கள் காற்றில் அசைந்தாடிக்கொண்டிருந்தன. ஜனக் கூட்டம் நெருங்கிக்கொண்டிருந்தது. ஜானு வாஸத்திற்காக அலங்காரம் பண்ணி நிறுத்தியிருந்த கார் என் கண்ணில் பட்டபோது நெஞ்சில் சுரீரென்ற வேதனை உண்டாகியது. அங்கு கூடியிருந்த அனைவரும் என்னை உற்றுப் பார்த்தார்கள். அப்பொழுது தான் எல்லோருடைய முகத்திலும் ஒருவித கலவரம் பரவியிருப்பதை உணர்ந்தேன். என்ன நடந்துவிட்டது? என்று அறியும் ஆவலுடன் நாலுபுறமும் பார்த்தேன்.

பிள்ளை வீட்டார் ஒரு ஓரமாக ஒதுங்கி நின்றிருந்தனர். அவர்களுக்கு அருகே மாப்பிள்ளை கட்டையைப்போல கிடந்தான்.

கோழிக்குஞ்சுகள் ஒன்ருேடொன்று சண்டை போட்டுக்கொண்டு ஒன்றையொன்று கொத்திக்கொல்வதைத் தடுக்க ஒருவகை பிளாஸ்டிக் கண் மறைப்புகளை பிரிட்டனில் ஒரு கம்பெனி தயாரிக்கிறது. மூக்கின் எலும்பில் மாட்டப்படும் அந்த மறைப்பு, எதிர்பார்வையை மறைத்து பக்க பார்வையை அளிக்கிறது. பிரிட்டனில் கோழிப்பண்ணை ஸ்தாபனங்கள் இத்தகைய கண்மறைப்புகளை அதிகமாக உபயோகிக்கின்றனவாம்.

வாயிலிருந்து பெருகி நின்ற நுரை அவனுடைய முகத்தை கோரமாக்கி காட்டியது. மூடியிருந்த அரைக் கண்ணின் வழியே வெள்ளை விழி தெரிந்தது. எனக்கு விஷயம் எதுவும் புரியவில்லை. பரபரப்புடன் அத்திம்பேர் பக்கம் பார்த்தேன். அவரை என் பக்கத்தில் காணவில்லை. கொஞ்ச தூரத்தில் சாஸ்திரிகளிடம் ஏதோ தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டிருந்தார். அவர்கள் அருகில் நெருங்கி பேசுவதை கவனித்தேன்.

"முன்னலேயே இதை நான் நினைத்தேன் சாமிநாதா! ஆனல் உங்களுக்குள் ஆயிரமிருக்கலாம். இதில் நாம் ஏன் தலையிட்வேண்டும் என்று இருந்துவிட்டேன்" என்று சாஸ்திரிகள் கூறியது என் காதுகளில் தெளிவாக விழுந்தது.

"உங்களுக்கு தெரிந்தது எனக்கு தெரியவில்லை. என்ன செய்வது. பிள்ளைபோல வளர்த்த மணி என் கண்களுக்கு மாப்பிள்ளையாகப் படவில்லை. தெய்வம் முடிபோட்டிருந்தால் அதை நம்மால் மாற்ற முடியுமா என்ன? பணம் விரயமாகாமல் அதே முகூர்த்தத்தில் சாந்தாவிற்கும், மணிக்கும் கல்யாணம் பண்ணிவிடவேண்டியதுதான்!" என்றுர் அத்திம்பேர்.

எனக்கு வானத்திலே பறப்பது போல இருந்தது. இன்ப உணர்ச்சி பரவி உடலெங்கும் கதகதப்பை கொடுத்தது.

"மணி இந்தா இதைப் போட்டுக்கோ!" என்று சாஸ்திரிகள் மாப்பிள்ளைக்காக தைத்து வைத்திருந்த டிரஸ்ஸை என்னிடம் கொடுத்தார். பிரமிப்புடன் அதை கையில் வாங்கிக்கொண்ட நான் அத்திம்பேர் முகத்தை ஏறிட்டு பார்த்தேன். அவர் முகத்தில் கோபம் குறைந்து சாந்தம் நிலவியிருந்தது.

"ஏண்டா சாந்தாவைக் கல்யாணம் பண்ணிக்க பிடிக்கலைன்னு சொல்லிவிடு ஒரு தடவை அவசரப்பட்டு செய்த காரியத்துக்கு பலன் அனுபவிச்சாச்சு" என்றுர் அத்திம்பேர்.

"பிடிக்கலைன்னு யார் சொன்னு கரும்பு தின்ன கூலிவேண்டுமா?" என்றேன்.

"இதை முன்னலேயே சொல்லியிருக்கக் கூடாதா? இப்பொழுது கரும்பு தின்ன கூலிவேண்டுமா என்று கேட்கறியே!"

"நான் சொல்லணுமா உங்களுக்குத் தெரியாதா!" என்றுமுணுமுணுத்தேன்.

"சரி, சரி சீக்கிரமாக புறப்படு. நேரமாயிடுத்து." என்றுர் அத்திம்பேர்.

டிரஸ் போட்டுக்கொண்டே விஷயத்தை விசாரித்து தெரிந்து கொண்டேன். அந்தப் பையனுக்கு அடிக்கடி காக்காய் வலிப்பு வருமாம். அதை மறைத்து வைத்து மணம் முடிக்க விரும்பினுர்கள் பெற்ருேர்கள். அவர்கள் தீர்மானத்தை தகர்த்தது விதி! மாப்பிள்ளை அழைப்பிற்கு புறப்பட்டுக்கொண்டிருந்த அவனுக்கு வழக்கம்போல வலிப்பு வந்துவிட்டது. அதைப் பார்த்த அத்திம்பேருக்கு கோபம் வந்தது. பெரிதாக கத்தினுர். பிறகு பலருடைய அபிப்பிராயத்தின் பேரில் என்னை மாப்பிள்ளையாக்கிவிட்டார். விஷயம் முழுவதும் அறிந்த நான் அந்த வலிப்புக்கு வந்தனம் செலுத்தினேன்.

மறுபடி மேளம் முழங்கியது. காஸ் விளக்குகள் பளீரென்ற ஒளியைச் சிந்திக்கொண்டு புறப்பட்டன. இன்பத்திலே இதயம் மிதக்க உலகை மறந்து காரில் உட்கார்ந்திருந்தேன். கார் தெருவில் மெதுவாக ஊர்ந்தது. மறுநாள் என் சாந்தாவின் கைபிடித்து மூன்று முடிச்சுகள் போட்டேன். அப்புறம்...வாழ்க்கை இதுவரை இன்ப பூங்காவாகத்தான் இருக்கிறது.

"சாப்பிடாமல் தூங்கிவிட்டேளா?" என்ற சாந்தாவின் குரல் என்னை சிந்தனையின் ஆழத்திலிருந்து கரைக்கு கொண்டு வந்தது.

"தூங்கவுமில்லைஒண்ணுமில்லை" என்றேன். மடியில் கிடந்த புத்தகம் காற்றில் படபடத்தது. அதை எடுத்து மேஜையின் மேல் வைத்துவிட்டு சாப்பிட எழுந்தேன். "ஊர்வலத்தைப் பார்த்ததும் உங்கள் நினைவு எங்கோ போய்விட்டது இல்லையா?" என்ருள் சாந்தா சிரித்துக்கொண்டே. "தெரிந்திருந்தும் ஏன் கேட்கிறே!" என்று சொல்லிக் கொண்டே அவள் முகத்தைப் பார்த்தேன். அதில் பூத்திருந்த புன்முறுவலில் நாணம் கோடிட்டது.

கும்பகோணம்மிருக வைத்திய ஆஸ்பத்திரியில் சமீபத்தில் ஒரு எருமை இரு தலைகளுடன் கூடிய இக்கன்றை ஈன்றது: கன்று இறந்து விட்டது.

நாலாவது கடிதம்

ஏ.வி.பத்மஜா

கடிகாரத்தில் அப்பொழுதுதான் மணி பத்து அடித்து ஓய்ந்தது. தன் காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு அன்று வந்த தினசரியை எடுத்து புரட்ட ஆரம்பித்தாள் பிரபல நாவலாசிரியை பிரபுல்லமுகி.

சார், போஸ்ட்!...

என்ற தபாற்காரனின் குரலைக் கேட்ட பிரபுல்லமுகி, புரட்டிக்கொண்டிருந்த பேப்பரை அப்படியே மேஜை மேல் எறிந்துவிட்டு வேகமாக வாயிலுக்கு விரைந்தாள். அவசர அவசரமாக கடிதத்தை உடைத்துபடிக்கவாரம்பித்தாள். தன் மகளையும், கடிதத்தையும் மாறிமாறி பார்த்தவண்ணம் உட்கார்ந்து கொண்டிருந்தாள் பிரபுல்லமுகியின் தாய் பார்வதம்மாள்.

எங்கேயிருந்து கடிதம்?... என்று ஆவலுடன் வினவினுள் பார்வதம்மாள்.

நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டே, 'கலாவினோதினி' பத்திரிகை ஆசிரியரிடமிருந்து வந்திருக்கிறது அம்மா, இதோ, கேள் அம்மா அவர் எழுதியிருப்பதை படிக்க வாரம்பித்தாள் பிரபுல்லமுகி.

பிரபுல்லமுகி அவர்களுக்கு,

உங்கள் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு சிறு கதை எங்கள் பூஜா மலருக்கு எழுதித்தரவேண்டும். கூடிய சீக்கிரம் கதையை அனுப்பவும்.

இப்படிக்கு
ஆசிரியர்,
கலாவினோதினி.

கடிதத்தைக்கேட்ட பார்வதம்மாள் 'முகி, உன் வாழ்க்கையையே தான் கதையாக எழுதேன். அப்பொழுதாவது விடிகிறதா, பார்க்கலாம். அவளுடைய பேச்சு துக்கமும், ஏக்கமும் நிறைந்த ஒரு ஆழ்ந்த பெருமூச்சுடன் வெளிப்பட்டது.

• • •

பிரபுல்லமுகி தன் வாழ்க்கையையே கதையாக சித்தரிக்கவாரம்பித்தாள். அவளுடைய கடந்த கால வாழ்க்கைச் சித்திரம் புது மெருகுடன், நாவலாசிரியையின் நல்ல அழகான பண்புள்ள நடையுடன் வாசகர்களின் மனதை கவரும் வகையில் 'கலாவினோதினி' பூஜாமலரை அலங்கரித்துக்கொண்டிருந்தது. பிரபுல்லமுகியின் கதை இதுதான்:—

திருச்சி சின்னக்கடை வீதியில் 'புஷ்பவனம் ஸ்டோர்ஸ்' என்பது பிரசித்திபெற்ற வாசனை



பொர்சக்கு வந்தவர்:—"வேலை கிடைக்காததுனுலே பணக்கஷ்டம் தாங்க முடியல்லே. சில சமயம் நினைச்சா திருடக் கூடத் தோணுது."

பிரமுகர்:—"சரி, எனக்குத் தெரிந்த பாங்கி மானேஜர் ஒத்தர்கிட்டே சொல்லி உனக்கு 'காஷியர்' வேலை பண்ணிவைக்கிறேன். கவலைப்படாதே"

சாமான் விற்குமிடம். எவ்வளவோ ஊர்களில், இன்னும் பலவித பெயர்களில் வாசனை சாமான் கடைகளை வைத்து தன் வியாபாரத்தையும், பெயரையும், பணத்தையும் பெருக்கிக்கொண்டிருந்தார் 'புஷ்பவனம் ஸ்டோர்ஸின்' சொந்தக்காரரான பஞ்சநதம் ஐயர், பஞ்சநதம் ஐயரை தெரியாதவர்கள் திருச்சி வட்டாரத்திலேயே கிடையாது எனச் சொல்லலாம். மலைக்கோட்டை தெற்குத் தெருவில் அவர் சொந்தத்தில் கட்டிக்கொண்டு வசித்து வந்த அவருடைய பங்களா, அவருடைய செல்வ நிலைமையை அறிவுறுத்துவதுபோல் விளங்கியது. அவருடைய அன்றைய செல்வநிலை அவரை அந்த வட்டாரத்திலே இருக்கும் பெரிய மனிதர்களுள் ஒருவராக உயர்த்தி விட்டது. எந்த நன்கொடையானாலும் சரி, எந்த தர்ம காரியமானாலும் சரி, எந்த விழாவாகயிருந்தாலும் அவருடைய பெயர். இல்லாமல் அந்த காரியம் நடைபெறுதோ என்று பிறரை ஆச்சரியப்படுத்தும் வகையில் அவருடைய பெயர் பிரபலமாக விளங்கிக்கொண்டிருந்தது. அவருக்கும், அவருடைய மனைவி பார்வதம்மாளுக்கும் ஒரே பெண்ணாகப் பிறந்தாள் மீனாக்ஷி, தங்கள் செல்வப் பெண்ணான மீனாக்ஷியை அருமையாக வளர்த்து வந்தனர் பஞ்சநதம் அய்யர் தம்பதிகள், இயற்கையிலேயே அழகும், அறிவும் ஒன்று சேர்ந்திருந்த மீனாக்ஷி தன் புத்திசாலித்தனத்தால் பெற்றோரை, மகிழ்வுறுத்திக் கொண்டிருந்தாள். வாசனை மணம் வீசுவதுபோல், மீனாக்ஷியிடம் கல்வி மணம் வீசியது. இண்டர்மீடியெட்டில் மாகாணத்திலேயே முதலாவதாக தேறிய மீனாக்ஷியைக்கண்டு மகிழ்ந்த அவள் தந்தை அவளுக்கு எப்படியாவது அந்த வருஷம் திருமணத்தை நடத்திவிட எண்ணி பிரபல வரன்களாக அலசி அலசி பார்க்க ஆரம்பித்தார். கல்யாண மார்க்கெட்டில் மீனாக்ஷிக்கு ஏகக் கிராக்கி இருந்தது. பணமும், அழகும், அறிவும் ஒருங்கே இருக்கும்பொழுது கிராக்கிக்குக் கேட்பானேன்!

கடைசியில், ஒருவாறாக தஞ்சாவூர் சோலையூர் கிராமத்து மிராசுதார் நாகநாத ஐயரின் மகன் விசுவநாதனை தேர்ந்தெடுத்தார் பஞ்சநதம் ஐயர். நாகநாத ஐயருக்கு நிறைய நிலபுலன்கள் இருந்தன. அவருடைய ஒரே மகனான விசுவநாதன் அப்பொழுது சென்னையில் பி. ஏ. ஹானர்ஸ் வாசித்துக் கொண்டிருந்தான். மீனாக்ஷி விசுவநாதன் விவாகம் மிகவும் பிரபலமாக நடந்தது. அந்த வட்டாரத்திலேயே அந்த மாதிரி விவாகம் இதுவரை நடந்ததில்லை என்று பேசிக்கொள்ளும் வகையில் சிறப்பாக நடந்தது. விசுவநாதன் படிப்பு முடிந்ததும் மீனாக்ஷியை அழைத்துக் கொள்வதாகக் கூறிச் சென்றனர் பஞ்சநதம் அய்யர் தம்பதிகள்.

கல்யாணம் நடந்து ஒரு மாதம் தான் ஆகியிருந்தது, எல்லாக் காரியங்களுமே மனிதன் எண்ணப்படியே நடந்து விடுமா என்ன! எல்லாக் காரியங்களுக்குமே இடையூறான இந்த பாழும் 'விதி, என்ற சொல் பஞ்சநதம் அய்யர் வாழ்க்கையிலும் அப்பொழுதுதான் குறுக்கிட்டது. நன்றாக இருந்த பஞ்சநதம் அய்யர் திடீரென ஒருநாள் மாரடைப்பால் மரணமடைந்தார். இப்பரந்த உலகில் பார்வதம்மாளும், மீனாக்ஷியும் தனித்து விடப்பட்டனர். அவருடைய மரணத்திற்கு பின்னர்தான் அவருடைய செல்வ நிலையின் உண்மை தெரிந்தது. எங்கு பார்த்தாலும் கடன்!...அவருடைய கடைகள், வீடுகள், சொத்துகள் யாவும் ஜப்திக்கு வந்துவிட்டன. எல்லாவற்றையும் இழந்து, நிர்க்கதியாக விடப்பட்ட பார்வதமும், மீனாக்ஷியும் பார்வதம்மாளின் பிறந்த ஊரான மதுரைக்குச் சென்றனர். ஏழ்மை ஸ்திதியில் இருந்த அவர்களை கவனிக்க ஒருவரும் முன்வரவில்லை. யாவரும் அவர்களை முன்பின் பார்த்திராதவர்கள்போல் நடந்துகொண்டனர். தனிமையில் தவித்த பார்வதம்மாள் மீனாக்ஷியை எப்படியாவது அவளுடைய புக்ககத்துக்கு அனுப்பிவிட்டால் நல்லது என்று எண்ணினுள், சோலையூருக்கு ஆள்மேல் ஆள் அனுப்பி எப்பொழுது கொண்டுவந்து விடுவது என்று கேட்டனுப்பினுள்.

அப்பொழுதுதான் அவர்கள் வாழ்க்கையையே சிதறவடித்த அந்த முதல் கடிதம் வந்தது.

தன் மகன் படிப்பு முடிந்ததும் ஐ. ஏ. எஸ். படிக்கப் போவதாகவும், பெரிய பதவியில் அமரப்போகும் தன் மகனுக்கு திவாலானவனுடைய பெண் மனைவியாக இருக்க தகுதியற்றவளென்றும் எழுதியிருந்தார் மீனாக்ஷியின் மாமனார்.

கடிதத்தைப் பார்த்த மீனாக்ஷி, மாமனார்தான் இப்படி எழுதிவிட்டார், படித்தவராக இருக்கும் கணவராவது யோசிக்கமாட்டாரா, யோசிக்கும் திறமையுடைய கணவராவது தன்னை அழைத்து கொள்வார் என்று தம்பி விசுவநாதனின் காலேஜ் விலாசத்திற்கு தன் உண்மை நிலையை விவரித்து ஒரு கடிதம் எழுதினாள் அதற்குப் பதிலாக பேரிடியான அந்த இரண்டாவது கடிதம் அவள் கணவனிடமிருந்து வந்தது.

தன் தகப்பனாரின் கட்டாயத்துக்காகவே தான் அவளை மணம் செய்து கொண்டதாகவும், அவளுக்கு தீராத ரோகம் ஒன்று இருப்பதாக அவனுடைய தந்தை எழுதியிருப்பதாகவும், ஆகையால் அவளுடன் வாழ்க்கை நடத்தி, தன்னையும், தன் சந்ததியையும் கெடுத்துக்கொள்ளத் தான் விரும்பவில்லை என்றும் எழுதியிருந்தான்.

கடிதத்தை பார்த்த மீனாக்ஷி ஒரு விநாடி திடுக்கிட்டாள். கணவனாலும் கைவிடப்பட்ட மீனாக்ஷி அழுது துக்கிப்பதால் ஆகும் காரியம் ஒன்றுமில்லை என்பதை அறிந்துகொண்டாள். 'ஏதோ அவர் அறியாமையால் எழுதியிருக்கிறார். எப்படியும் தனக்கு ஒருநாள் நல்ல காலம் பிறக்கும்' என்ற நம்பிக்கை அவளுடைய மனதின் ஒரு மூலையில் உதித்தது. கடைசியில் அவளுடைய கல்வி அவளுடைய வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தது. பல பத்திரிகைகளுக்கு 'பிரபுல்லமுகி' என்ற பெயரில் கதைகள் எழுதி பெயரும், பணமும் சம்பாதிக்க வாரம்பித்தாள் மீண்டும் தீவிரமான முயற்சியால்வாழ்க்கை ஏணியின் உயரே ஏறிக்கொண்டிருந்தாள் பிரபுல்லமுகி. இப்பொழுது பிரபல நாவலாசிரியைகளில் ஒருவளாக முன்னேறிக்கொண்டிருந்தாள் பிரபுல்லமுகி. அவள் வாழ்க்கையின் உச்சியை அடைய, அவளது கருகிய மொட்டை மலரச் செய்யும் அமிர்தமாக எப்பொழுதாவது அந்த மூன்றுவது கடிதம் வருமா என்று ஏங்கி எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறாள்.

பிரபுல்லமுகியின் வாழ்க்கையை அறிந்திருந்த 'கலாவினோதினி' ஆசிரியர் பூஜா மலரில் அக்கதையின் கீழ், கீழ்க்கண்ட குறிப்பையும் எழுதியிருந்தார்.

'பிரபுல்லமுகி அவர்களின் வாழ்க்கையை மலரச் செய்யும் அமிர்தமாளியாக நாங்கள் அவளுக்கு கதை எழுதச் சொல்லி எழுதிய கடிதமே அமையவேண்டும் என்று ஆண்டவனை வேண்டுகிறோம்'

இப்படிக்கு,

ஆசிரியர்,

கலாவினோதினி.

கதை பிரசுரமாகி ஒருவாரம் ஆகியிருந்தது. தன் வீட்டு வராந்தாவில் உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்த பிரபுல்லமுகி, ஆள் அரவம் கேட்டு வாயிலை நிமிர்ந்து நோக்கினாள். வாயிலில் ஒரு பியூன் நின்று கொண்டிருந்தான்.

'இதுதானே ஆசிரியை பிரபுல்லமுகியின் வீடு!

ஆமாம், என்று சொல்லிய பிரபுல்லமுகி அவன் கொடுத்த கடிதத்தை வாங்கிக்கொண்டாள், யாரிடமிருந்து கடிதம் என்று புரியாத பிரபுல்லமுகி அவசர அவசரமாக உறையை பிரித்தாள். அது மதுரை ஜில்லா கலெக்டரிடமிருந்து வந்ததுஎன்று உணர்ந்த அவள் அதை வேகமாக படிக்க வாரம்பித்தாள்.

மீனாக்ஷிக்கு,

கலைவினோதினியில் உன் சுவை மிக்க கதையைப் படித்தேன். அதன் ஆசிரியரிடமிருந்து விலாசத்தை அறிந்தே உனக்கு இக்கடிதத்தை எழுதுகிறேன். நான் உனக்கு எவ்வளவு பெரிய துரோகம் இழைத்துவிட்டேன் என்பதை இப்பொழுது தான் உன் கதை மூலமாக உணர்ந்தேன். படித்திருந்தும் முட்டாளாகஇருந்த இந்தக் கயவனை மன்னிப்பாயா! இதைவிட இன்னும் பெரிய துரோகம் இழைக்க விருந்தேனே! அதை நினைக்கும்பொழுது என் நெஞ்சு என் மனத்தையே அரிக்கின்றது. நான் கலியாணமாகாதவன் என்று கூறி மற்றொரு பெண்ணின் வாழ்க்கையையும் குட்டிச்சுவராக்க இருந்தேன். அந்த படுபாதகச் செயலிலிருந்தும் நீ உன் கதை மூலம் காப்பாற்றிவிட்டாய். இன்று மாலை நேரில் உன்னிடமும்,மாமா மாமியிடமும் மன்னிப்புக் கோர வருகிறேன். மன்னிப்பாயா! உனக்குத் துரோகம் இழைத்த பதிதன், விஸ்வநாதன்.

என். வி. நாத்

ஐ. ஏ. எஸ்.

கடிதத்தைப் படித்து முடித்த பிரபுல்லமுகி தன் தாயின் முகத்தை நிமிர்ந்து நோக்கினாள். சோகமே உருவாக இருந்த தன் பெண்ணின் முகத்தில் மகிழ்ச்சி ரேகை உதித்ததைக்கண்டு பார்வதம்மாள் உள்ளம் பூரித்தாள். எதிரே மாட்டியிருந்த சரஸ்வதி படத்தின் மாலையிலிருந்த ரோஜா இதழ்கள் பிரபுல்லமுகி மீது விழுந்தன.

நிமிஷக்கதை

ஆரியர் சூழ்ச்சி

★

சீமான்

முதல் போத்திலேயே மூலதனம் இரட்டிப்பு! காலணு பிளேடில் அரையணு ஆவரம்; சுயவகையைச் சேர்ந்தல்ல மற்றொருவர் மூலம்தான்! அகவிலை இருக்கிற ஈதியில் இதை நம்ப முடியவில்லையல்லவா? அப்படியானுல் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு எதிரிலுள்ள ரிக்ஷா ஸ்டாண்ட் மரத்தடிக்கு வாருங்கள். தெருவிலெறிந்த பிளேடை, சிமிட்டித் தரையில் தீட்டிக்கொண்டு, தலைவழிப்பு நடத்தும் நாவிதரின் கைவண்ணத்தைக் கண்ணாரக்காணலாம்.

இதைப்போன்ற முடிதிருத்தநிருநரின் கைவரிசைக்களாகித்தான், மண்டையிலிருந்து ரத்தம் பிரவாகமெடுத்தோட, எதிரிலுள்ள ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு ஓடோடியும் சென்றுன் காட்டேரி முனியன். பெரிய, ரத்தநாளம் வெட்டுப்பட்டதால் அர்ஜன்ட் ஆபரேஷன் வார்டுக்கு உடனேயே எடுத்துச் சென்றனர் அவனை. சுற்றுமுற்றும் தகதகவென மின்னும் கத்திகள் கிடுக்கிகள், வாயில் துணியைக் கட்டிக்கொண்டு நர்ஸ்களும் டாக்டர்களும் குசுகுசவெனப் பேசிக்கொள்ளுதல் இவையெல்லாம் சாதாரணமாக எவரையும் கொஞ்சம் திகிலடையச் செய்யும். ஆனுல் நம் முனியனே 32 பல்லும் வெளியில் தெரியச் சிரித்துக்கொண்டிருந்தான்.

"என்ன, டாக்டர் ஐயா, ரத்தத்தை விடாதே புடிச்சுக்கோங்கோ; எங்கே யாவது ஒரு அரைபடி தேறுமில்லையா" என்றும் கேட்டான்.

'வெள்ளைக் குதிரை' சவாரி செய்கிருனு என்று பரிசோதித்துப் பார்த்ததில் குடிபோதைக் குறிகளும் தென்படவில்லை.

ஆளை அசரவைத்து ஆபரேஷனும் செய்தாகிவிட்டது, கொஞ்சம் மயக்கத்துக்குப் பின்பு. கண்விழித்தான் முனியன்.

எதிரே நின்ற டாக்டரின் முகத்தில் ஆனந்த எக்களிப்பு தன் ஆபரேஷன் வெற்றி பெற்றுவிட்டதென்று!

"என்னப்பா, வலி ஏதாவது தெரிகிறதா" எனப் பரிவாகக் கேட்டார் அவர்.

அவனே, 'எங்கே பணம், என்னை வையுங்களய்யா?' என்றுன், அதை காதில் போட்டுக்கொள்ளாமலே. சித்த பிரமையோ, என டைரக்டர் சிறிது சம்சயித்தார்.

"என்னப்பா உனக்காக ஸ்பெஷல் சாங்ஷன் வாங்கி பென்சிலின் இன்ஜெக்ஷன் பண்ணியிருக்கோம். நீ, என்னன்னு, என்னையே பணம் கேட்கிருயே" என்று கேட்டார் டாக்டர்.

"சும்மாகிடய்யா எல்லாம் தெரியும், கொஞ்சம் ரத்தம் கொடுத்தா, அஞ்சு ரூபாய் கொடுப்பதாக வாசலில் போர்ட் போட்டிருக்கீங்கோ. இப்போ என்னன்னு என் ரத்தத்தை ஏராளமா பிடிச்சுண்டு ஏய்ச்சிடப் பார்க்கிறீங்களா? அந்த ஆரிய சூழ்ச்சியெல்லாம் நம்பகிட்ட பலிக்காது; வை ஐயா பணத்தை" என்று கர்ஜித்தான் காட்டேரி.

"அரே அல்லா" என்று, வாயில் கட்டியிருந்த துணியை அகற்றிவிட்டுக் கொண்டு ஆத்திரத்தைச் சமனப்படுத்திக் கொள்வதற்காக, தாடியை உருவிக் கொண்டார் டாக்டர்!

கூலிக்காரியின் மகன்

'கதைப்பித்தன்'

"சேது! உன் அம்மா சதா உன் நினைவாகவே இருக்கிறாள். உன்னைப் பார்த்து' மூன்று நான்கு வருஷங்களாய்விட்டதாகையால் உன்னைப் பார்ப்பதற்காக இங்கு வரத் துடித்துக்கொண்டிருக்கிறாள்" என்றான் கோபால்.

"கோபால்! என்ன சொன்னாய்? என்னைப்பார்க்க என் தாயார் இங்கு வருகிறாளா? ஏன், நான் கொஞ்சம் அந்தஸ்துடன் நாணயமாக, கண்ணியமாக வாழ்வது அவளுக்குப் பிடிக்கவில்லையா? அவள் செலவுக்கென்று தான் மாதா மாதம் பணம் வேறு அனுப்பிவருகிறேனே. பேசாமல் ஊரிலிருப்பதை விட்டுவிட்டு..."

"சேது! "பெற்ற மனம் பித்து, பிள்ளைமனம் கல்லு" என்பார்களே. அது உன்னிடம் பரிபூரணமாக இருக்கிறதப்பா! ஒரு தாயார் தன்மகனைப் பார்க்கக் கூடாதாம்! அப்படி என்னதான் கெடுதல் செய்துவிட்டாள் அவள்? ஆனாலும் உன் நெஞ்சு கல்லைவிட கடினமானதுதான்"

"கோபால்! நன்றாக என் நிலைமையையறிந்த நீயே இந்த மாதிரி பேசினால், நான் என்ன செய்வது? என் தாயாரை இங்கு கூட்டிவந்தால், கமலாவிடம் நான் சொன்ன வார்த்தை பொய்யாகிவிடுமே? பிறகு! ஐயோ! கமலா என்னை மறக்க நேரிடுமே. அவளுக்குத்தான் இப்போது என்மேல் எவ்வளவு பிரேமை. அன்பு! அடாடா! ஒரு பணக்காரரின் மகள், அழகே உருவெடுத்த மடவன்னம், என்மேல் காதல் கொண்டிருக்கிறாள்! இந்த சமயத்தில், சிவபூஜையில் கரடி புகுந்தாற்போல் என் தாயார் இங்கு வருவதாம். முடியாது, முடியவே முடியாது!"

"சேது! ஆத்திரப்படாதே! உன் தாயாரின் உடல்நிலை இப்போது மிகவும் குன்றிக்கிடக்கிறது. முன்போல அவளால் உழைக்க முடியவில்லை. வயது வேறு ஆகிவிட்டது. அவள் இருக்கும் நிலைமை மிகவும் மோசமாயிருக்கிறது. அவளுடைய பாசத்தைத்தான் என்னவென்று சொல்ல? கமலாவின் காதலுக்காக, உன்னைப் பெற்றெடுத்த தாயாரின் பாசத்தை பலியிடப் போகிறாயா?"

"கோபால்! நான் பிடிவாதக்காரன். இந்த முடிவு இன்று நேற்றையது அல்ல. வெகு நாட்களுக்கு முன்பே தீர்மானிக்கப்பட்டது. என் தாயார், கேவலம் தண்ணீர் விற்று வயிறு வளர்த்தவள் என்று கமலாவுக்குத் தெரியவிடவே மாட்டேன். ஆமாம். இது என் உறுதியான முடிவுதான்"

"சரி. நான் வருகிறேன். பிறகு சந்திக்கிறேன்" என்று விடைபெற்றுச் சென்றான் கோபால்.

இந்த சம்பாஷணை முழுவதையும் ஒளிந்து ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த, கமலாவும், சேதுவைச் சந்திக்காமல் நேரே தன் வீட்டை நோக்கிச் சென்றுவிட்டாள்.

* * *

தினசரி இரண்டு தடவையாவது தன்னைக் காண வந்து போகும் கமலா அன்று வராமலே இருந்தது சேதுவை ஆச்சரியத்தில் அமுக்கியது. "என்ன காரணம்" என்ற கேள்வி அவன் மனதைத் துளைத்துக்கொண்டேயிருந்தது.

அவனுக்கு ரூமில் இருப்புக் கொள்ளவில்லை. நேரே கமலாவின் வீட்டை நோக்கி நடந்தான்.

அவன் எதிரே குறுக்கிட்ட கமலா, அவனை ஏறிட்டுக்கூட பார்க்காமல் சென்றது அவனை என்னவோ செய்தது.

நேராக வீட்டினுள்ளே சென்றான்.

"வா, சேது!" என்று வரவேற்றார் கமலாவின் தகப்பனார்.

"கமலா எங்கே காணவில்லை?" என்று கேட்டான் சேது.

"இப்போதுதான் எங்கேயோ அவசரமாகப் போகிறாள். நீகூட எதிரில் பார்த்திருப்பாயே"

"இல்லை.ம்...நான் அப்புறம் வருகிறேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான் சேது.

தன் ரூமை அடைந்த அவன் மன வெளியில் சிந்தனைத்தூறல் விழுந்தது.

* * *

பி. ஏ. பட்டம் பெற்ற சேது தன் ஊரான கிருஷ்ணபுரத்தை விட்டு திருச்சியை வந்தடைந்தான் வேலை தேடுவதற்காக. அவன் அதிர்ஷ்டம், உடனேயே அவனுக்கு ஒரு பெரிய கம்பெனியில் செக்ரடரி உத்யோகம் கிடைத்துவிட்டது. நல்ல சம்பளம். நகரின் நடுவே ஒரு ரூமைப் பார்த்துக்கொண்டு குடியேறிவிட்டான். தான் வேலையில் சேர்ந்ததும் தாயாருக்கு சந்தோஷத்துடன் கடிதம் எழுதினான். நல்ல முறையில் 'டிப்டாப்பாக' டிரஸ் செய்துகொண்டு அவன் ஆபீஸ் செல்லும் முறையே அழகாக இருக்கும்.

ஹோட்டல் சாப்பாடு உண்டு, அவன் ரூம் உண்டு என்ற நிலையில் இருந்த அவன் வாழ்வில் குறுக்கிட்டாள் கமலா.

அன்றொரு நாள் வழக்கமாக ஆபீஸுக்குச் செல்ல ரூமைப் பூட்டிக்கொண்டுதிரும்பிய அவன் விழிகளும், எதிர் வீட்டு ஜன்னலின் வழியாகத் தெரிந்த அவள்—ஆம் கமலாவின்—விழிகளும் சந்தித்தன. இதுதான் படிப்படியாக வளர்ந்து காதலாக பரிணமித்தது. கமலாவுக்கு தகப்பனார் தானிருக்கிறார். ஊரில் நல்ல செல்வாக்கு உண்டு பெரிய பணக்காரர், கமலாவுக்காக எது வேண்டுமானாலும் செய்யத் தயாராயிருந்தார் அவர். ஆகவே, கமலாவுக்கு சேதுவின்பால் ஏற்பட்ட அன்பை, காதலை, அவர் பரிபூர்ணமாக ஆதரித்தார்.

ஒரு நாள் மாலை ஆபீஸிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த சேதுவை கமலாவின் தகப்பனார் அழைத்தார். சேதுவிற்கு திகில் பிடித்துவிட்டது. "தான் கமலாவை அடிக்கடி பார்த்துவருவதை இவர் கவனித்திருப்பாரோ?" என்று பயந்து

கொண்டே அவரை நெருங்கினான்.

"உள்ளே வரவேண்டும்" என்று அவர் பரிவுடன் அழைக்கவே, ஆச்சரியமடைந்தவனாய், மரியாதையுடன் உள்ளே வந்து கூடத்தில் அமர்ந்தான்.

உங்களுடன் எனக்கு கொஞ்ச நாளாகவே பழக ஆசை உண்டு. ஆனால் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. நீங்கள் எங்கே வேலை பார்க்கிறீர்கள். தெரிந்துகொள்ளலாமோ?" என்று கேட்டார் கமலாவின் தகப்பனார்.

"தாராளமாக" என்று முகமலர்ச்சியுடன் தன்னைப்பற்றிய விவரங்களை சாங்கோபாங்கமாக எடுத்துரைத்தான். ஆனால் ஒரே ஒரு பெரிய பொய்யை மாத்திரம் அவன் சொல்லும்படி ஏற்பட்டுவிட்டது.

"மிக்க சந்தோஷம். அது சரி! நீங்கள் ஏன் தனியாக இருக்கிறீர்கள்? உங்கள் மனைவி.. தாயார், தகப்பனார்" என்று நோட்டம் பார்த்தார் கமலாவின் அப்பா.

"ம்..எனக்கு இன்னும் கலியாணமாகவில்லை" என்று அசடு வழிய அவன் கூறிவிட்டு "என் பெற்றோர்கள் இறந்து வெகு காலமாய்விட்டது. நான் சிறு குழந்தையாயிருக்கும்போதே அவர்களை இழந்துவிட்டேன். என் சொந்த முயற்சியினால்தான் முன்னுக்கு வந்தேன்." என்று கூறி முடித்தான். இதைச் சொல்லும்போது அவனையறியாமல் அவன் உள்ளம் பதைபதைத்தது. கண்களிலும் நீர் திரையிட்டது.

"ம்...என்ன செய்யலாம்? எல்லாம் விதிப்படித்தான் நடக்கும்" என்று சொல்லிய கமலாவின் தகப்பனார் "கமலா! கமலா!" என்று விளித்தார். கமலா வந்தவுடன் இருவரையும் "அறிமுகம்" செய்துவைத்தார். இருவர் முகத்திலும் தவழ்ந்து கொண்டிருந்த மந்தகாசம் அவரைப் பரவசப் படுத்தியது.

"சேது! உங்களுக்கு விருப்பமிருந்தால், என் கமலாவை..." என்று அவர் பாதி கூறிக்கொண்டிருக்கும்போது "சம்மதம்! சம்மதம்!" என்று கத்தியேவிட்டான் சேது. பிற்பாடுதான் "சேசே! இப்படியா நடந்துகொள்வது அவர்கள் முன்னிலையில்" என்று தன்னையே கடிந்து கொண்டான்.

பிறகு இருவரும் அடிக்கடி சந்தித்துக்கொண்டனர். பல மணி நேரம் இன்பமாக பொழுதுபோக்குவார்கள். ஊரார் ஏதாவது சொல்லு முன்பே கலியாணத்தை முடித்துவிடவேண்டும் என நினைத்தார் கமலாவின் தகப்பனார். முகூர்த்தம் சரியாக இல்லாததால் நாலைந்து மாதங்களுக்குப்பின் கலியாணம் நடத்தவிருந்தார் அவர்.

இதற்கிடையேதான் சேதுவைப் பார்க்க வந்து சேர்ந்தான் அவனுடைய நண்பன் கோபால், அவன் சென்னையில் வேலை பார்த்துவருகிறான். லீவில் ஊருக்

குப் போயிருந்த அவனிடம் சேதுவின் தாயார்தான் சேதுவைப்பார்க்க ஆவலாயிருப்பதாகவும், கோபால் மதருஸ் செல்லும் வழியில் சேதுவை சந்தித்து விட்டுச் செல்லவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள். சேதுவிடம் விஷயத்தைக் கூறிவிட்டு அடுத்த ரயிலிலேயே சென்னை சென்றுன் கோபால்.

• • •

கோபாலுக்கும் சேதுவுக்கும் நடந்த சம்பாஷணையைத்தான் கமலா கேட்க நேர்ந்தது. "சொந்தத் தாயார் உயிருடன் இருக்கும்போதே இறந்துவிட்டாள் என்று கூறுகிருரே! என்ன மனிதர் இவர்? பாசமே அற்றவரா! ஒரு வேளை அவருடைய தாயாரின் ஏழ்மை நிலையை நானறிய நேரிட்டால் அவரை வெறுத்துவிடுவேனோ என்ற பயமா? எதற்கும் அவருக்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டும்" என திட்டமிட்டாள் கமலா.

• • •

மறு நாளும் சேது கமலா வீட்டிற்கு வந்தான். அவளுடைய தகப்பனர் வெளியே சென்றிருந்தார். கமலாவை நெருங்கிய சேது "கமலா! என் மேல் கோபமா? நான் என்ன செய்துவிட்டேன் உனக்கு! கமலா! என்னோடு பேசவே மாட்டாயா?" என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தான். கமலாவோ மௌனமாயிருந்தாள்.

சேது மீண்டும் "கமலா! என்னை சித்திரவதை செய்யாதே! நீ இல்லாமல் என்னுலிருக்க முடியாது. நான் என்ன குற்றம் செய்திருந்தாலும் மன்னித்துவிடு".

"மிஸ்டர் சேது! நீங்கள் செய்த குற்றம் மன்னிக்கமுடியாதது. உணர்ச்சியுள்ள, பாசமுள்ள ஒரு மனிதர் செய்யும் காரியமல்ல அது"

"என்ன, கமலா! என்னவெல்லாமோ புதிர் போடுகிருயே! நான் அறிய ஒரு குற்றமும் செய்யவில்லையே?"

"நீங்கள் அறிந்துதான் குற்றம் செய்திருக்கிறீர்கள். ஆகவே என்னை மறந்துவிடுங்கள்"

"கமலா! உன்னை மறப்பதா? திடீரென்று யாரோ உன் மனதை களங்கப்படுத்தி யிருக்கிறுர்கள். இது யாருடைய சூழ்ச்சியோ தெரியவில்லையே!"

"உங்கள் மனதைக் கேளுங்கள் தெரியும். மனச் சாட்சியை கவசமிட்டு நீங்கள் செய்த குற்றம் நன்ருகத் தெரியவேண்டுமானுல் உங்கள் மனதையே கேளுங்கள்"

"கமலா! எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்படி நான் என்னதான் செய்திருப்பேன்? புரியும்படி சொல்லேன்".

"நீங்கள் செய்த பெரிய குற்றம் இதுதான். உயிருடன் இருக்கும் ஒரு ஆத்மாவை கொலை செய்துவிட்டீர்கள்!"

"என்ன! கொலையா! கமலா! நீ சுய அறிவுடன் பேசுகிருயா! இல்லை..."

"என் அறிவு மங்கவில்லை. உமது மூளைதான் கலங்கியிருக்கிறது. தன்னைப் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய தாயை உயிருடனிருக்கும்போதே 'இறந்துவிட்டாள்' என்று கூறினீரே! ஞாபகமிருக்கிறதா?"

"கமலா! உண்மையாகச் சொல்கிறேன். நீ சொல்லும் சேது வேறு யாராகவாவதிருக்கும் என் தாயார் காலமாகி..."

"போதும்! நீர் உமது நண்பர் ஒருவருடன் அன்று பேசிக்கொண்டிருந்தீரே. அதை ஞாபகப் படுத்திக்கொள்ளும். அன்று அவர் உங்கள் தாயார் உங்களைப் பார்க்கப் பிரியப்படுவதாகக் கூறியதற்கு என்ன பதில் சொன்னீர்கள்? என்னிடம் மறைக்கமுடியாது."

"கமலா! இனியும் ஏமாற்ற நான் விரும்பவில்லை. நீ கூறியது உண்மைதான்!"

"பின் ஏன் தாயார் இறந்து போனதாகச் சொன்னீர்களாம்?"

"கமலா! என் தாயார் ஊரில் ஜலம் எடுத்துக்கொடுத்து பிழைத்துவந்தாள். அவள் உழைப்பின் ஊதியத்தினுலேதான் என் படிப்பும் வளர்ந்தது. அவளுக்கு என் மேல்பாசம் அதிகம்தான். ஆனுல் என் தாயினுடைய ஏழ்மை நிலைமையை வெளியாக்கினுல் ஒரு வேளை உன் தகப்பனுரும் நீயும் என்னை புறக்கணித்து விடுவீர்களோ என்ற பயத்தால்தான் மறைத்துவந்தேன். என் தாயார் ஊரில்தானிருக்கிருள். அவளுக்கு மாதா மாதம் நானும் பணம் அனுப்பிவருகிறேன். இதுதான் உண்மையான வரலாறு. கமலா! என்னை மன்னித்து ஏற்றுக்கொள்வாயா?" என்று கூறினுன் சேது.

"முடியாது" என்ருள் கமலா.

"என்ன! அப்போது நான் வேலைக்கு தலைமுழுக்குப்போட்டுவிட்டு சந்யாசியாகிவிடுகிறேன்" என்று கூறியபடியே கிளம்பிய சேதுவை நிறுத்தி "உடனே உங்கள் தாயாரை இங்கே வரவழையுங்கள். எங்களுடனே அவர் தங்கியிருக்கலாம். கலியாணமானபின் நீங்களும் எங்களுடன்..." என்று கூறிக்கொண்டிருக்கும்போதே உள்ளே நுழைந்தார் கமலாவின் தகப்பனுர்.

"என்னம்மா கமலா! என்ன நடந்தது. ஒரே கோபமாயிருக்கிருயே?"

"இல்லையப்பா. நாளைக்கு இவருடைய அம்மா நம் வீட்டுக்கு வருகிருர்கள். அதுபற்றித்தான்..."

"என்ன? அம்மாவா? சேது தான் பெற்ருேர்களே இல்லை என்ருனே! என்னப்பா சேது! இதெல்லாம் என்ன!"

"என்னை மன்னித்துவிடுங்கள். கௌரவத்தை எண்ணி பாசத்தைவிடுத்து பொய் கூறிவிட்டேன். என் தாயார் ஊரில் உயிருடன் தானிருக்கிருள்" என்ருன் சேது.

"நல்ல குழந்தைகள்! ம்...எழுந்திரு. உடனே புறப்பட்டு வரும்படி உன் தாயாருக்கு கடிதம் எழுது. அவர்கள் வந்தவுடன் கலந்தாலோசித்து கலியாணத்துக்கு முகூர்த்தம் பார்க்கலாம்" என்ருர் கமலாவின் தகப்பனுர்.

சேதுவின் மனம் இப்போதுதான் சந்தோஷத்தால் நிரம்பியிருந்தது. மெள்ளத் தலையைத் திருப்பி கமலாவிருந்த பக்கம் நோக்கினுன். அவள் குறுநகை பூத்தவண்ணம் நின்றுகொண்டிருந்தாள். இவனும் பதிலுக்கு புன்முறுவல் பூத்தான்.

ஓர் ஊரில் ஒரு துறவி இருந்தார். அவரிடம் பல ஆச்சர்யமான காரியங்களை செய்யும் அபூர்வ சக்தி இருந்தது.

அன்று அந்த ஊரில் சந்தை கூடும் நாள். ரஸ்தா வழியே போய்க்கொண்டிருந்த துறவி எதிரே ஒரு வண்டிக்காரனைக்கண்டார். வண்டி நிறைய பருப்பு மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வண்டிக்காரன் மாடுகளை சாட்டையால் கையில் பலம் கொண்டமட்டும் 'சுளீர்', 'சுளீர்'. என்று ஓங்கி அடித்துக்கொண்டே வந்தான். அதைக் கண்ட துறவி அவனைப் பார்த்து "ஏனய்யா இப்படி மாடுகளைப் போட்டு அடிக்கிருய்? உனக்கென்ன பைத்தியம் பிடித்திருக்கிறதா? அவைகளும் பிராணிகள் தானே?" என்ருர். தொடர்ந்து "அந்த மூட்டைகளில் என்ன வைத்திருக்கிருய்?" என்று கேட்டார்.

அந்த வண்டிக்காரன் மிகவும் முன் கோபக்காரன். பேராசைக்காரனும் கூட! எங்கே அவன் போவதற்குள் சந்தை கூடிவிடப் போகிறதோ என்று பயந்தபடி மாடுகளை விரட்டிக்கொண்டே வந்தான். எதிரே துறவியைக் கண்டதும் அவன் கோபம்

இன்னும் அதிகமாயிற்று. "மூட்டை நிறைய கல்லும் மண்ணும் வைத்திருக்கிறேன்! ஏன்? உங்களுக்கு கொஞ்சம் தாட்டுமா?" என்று ஏளனமாகக் கேட்டான்.

ஆனால் இதைக் கேட்ட துறவி சாந்தத்தை இழக்கவில்லை. அமைதியாக "ஓ! அப்படியா! கல்லும் மண்ணும் உனக்கே இருக்கட்டும்!" என்று சொல்லிவிட்டு தன் வழியே போய்விட்டார்.

சந்தைக்குச் சென்ற வண்டிக்காரன் ஒரு வியாபாரியிடம் மூட்டைகளை அப்படியே மொத்தமாக நல்ல லாப விலைக்குப் பேசி பணம் வாங்கிக்கொண்டான். பருப்பு எப்படியிருக்கிறது என்று பார்ப்பதற்காக ஒரு மூட்டையைப் பிரித்த வியாபாரிக்கு தேள் கொட்டியது போலிருந்தது. மற்ற மூட்டைகளையும் பிரித்துப்பார்த்த வியாபாரி எல்லாவற்றிலும் கல்லும் மண்ணுமே இருப்பதைக்கண்டான். உடனே அவன் வண்டிக்காரனைப் பிடித்துக்கொண்டு "மூட்டைகளில் பருப்புக்குப் பதிலாக கல்லையும் மண்ணையும் வைத்துவிட்டு என்னை ஏமாற்றிவிடலாம் என்று பார்த்தாயா? எனக்கு சேர வேண்டிய பருப்பை உடனே கொடுக்காவிட்டால் உன்னை ஜெயிலில் பிடித்து வைத்துவிடுவேன்!" என்றான்.

வண்டிக்காரன் ஒன்றும் தோன்றாமல் அவன் போன வழியே திரும்பி வந்து கடைசியில் துறவியை சந்தித்தான். உடனே அவர் காலில் விழுந்து "நான் அறியாமையால் தங்களிடம் கண்டபடி பேசிவிட்டேன். கோபம் என் புத்தியை மறைத்துவிட்டது. நான் ஏழை! தாங்கள் தான் என்னை மன்னித்து என்னைக் காப்பாற்ற வேண்டும்!" என்று வேண்டிக் கொண்டான். அவனுடைய கண்ணீர் அவருடைய பாதங்களை நனைத்தது.

துறவி அவனை இரு கைகளாலும் அன்புடன் தூக்கி நிறுத்தி "கவலைப்படாதே! நீ திரும்பிப்போய் பார்க்கும்பொழுது எல்லா மூட்டைகளிலும் பருப்பு நிரம்பியிருக்கும்! இனி எக்காரணத்தைக்கொண்டும் யாரிடமும் பொய் பேசாதே!" என்று ஆசீர்வதித்து அனுப்பினார்.

திரும்பி வந்து தன் மூட்டைகளை மறுபடியும் பிரித்துப்பார்த்த வண்டிக்காரனுக்கு முதலில் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. ஆனால் அந்த மகிழ்ச்சி வெகு நேரம் நீடித்திருக்கவில்லை. ஏனென்றால் அப்போது அவனுக்கு திடீரென்று ஒரு பேராசையான எண்ணம் உதித்தது. "எனக்கும் அந்த துறவியைப்போல 'நான் நினைத்தபடியெல்லாம் நடக்கும்' என்று இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அதி சீக்கிரத்தில் எப்படி பணக்காரனாகிவிடலாம்!" இப்படி அவனுடைய எண்ணங்கள் ஓடின. உடனே அவன் மறுபடியும் துறவியிடம் ஓடோடியும் வந்து அவர் கால்களில் விழுந்து நமஸ்கரித்தான். அவர் கால்களை பிடித்துக் கொண்டே, "நான் தங்களைப் போலவே துறவியாகவிரும்புகிறேன். தாங்கள் அதற்கு அருள்புரியவேண்டும்!" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.



சென்ற வாரம் வெளியான சித்திரத்திற்கு விடை.

அவனுடைய உட்கருத்தை தெரிந்துகொண்ட துறவி அவனுக்கு தகுந்த பாடம் கற்பிக்க எண்ணினார். "சரி! என்னுடன் வா!" என்று அவனை தன்னுடன் அழைத்துக்கொண்டார். இருவரும் சிறிதுதூரம் சென்றனர். வழியில் ஒரு வீட்டில் ஓடு மாற்றும்போது பழைய ஓடுகளையெல்லாம் தெரு ஓரமாகப் போட்டிருந்தார்கள். அந்த இடத்தை அடைந்ததும் துறவி வண்டிக்காரனைப் பார்த்து, "இந்த ஓடுகள் இன்னும் சில விநாடிக்கெல்லாம் தங்கமாக மாறப் போகின்றன!" என்று சொல்லிவிட்டு மேலே சென்றார். ஆனால் வண்டிக்காரனோ துறவிக்குத் தெரியாமல் அங்கேயே சில விநாடிகள் தங்கி, ஓடுகள் தங்கமானதும் சிலவற்றை மேல் துண்டில் மூட்டையாகக் கட்டிக்கொண்டு மெதுவாக பூனையைப்போல துறவியை வந்தடைந்தான்.

உடனே அவர் இவன் பக்கம் திரும்பி "நீ உனக்குப் பின்னால் பழைய ஓடுகளை மூட்டையாகக் கட்டி வைத்துக்கொண்டிருக்கிறாய்" என்றார். அவசரமாக மூட்டையைப் பிரித்த வண்டிக்காரன் உள்ளே அவன் வைத்த தங்கக் கட்டிகளுக்குப் பதிலாக பழைய ஓட்டாஞ்சல்லிகள் இருப்பதைக் கண்டான். துறவி அவனைப் பார்த்து "நீ என்னிடம் துறவியாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டாய்! ஆனால் பழைய ஓட்டாஞ்சல்லிகளைக்கூட திருடுகிறாயே!" என்றார்.

இதைக்கேட்ட வண்டிக்காரன் அவமானத்தால் தலையை குனிந்துகொண்டான். அவனுடைய பேராசையை நினைக்க நினைக்க அவனுக்கே வெட்கமாயிருந்தது. அது முதல் அவன் பழைய முன் கோபியாகவும் பேராசைக்காரனாகவும் இல்லாமல் சாந்தமுள்ளவனாகவும் தாராள மனப்பான்மை உடையவனாகவும் மாறி இனிது வாழ்ந்து வந்தான்.

சாரணர் உலகம்: சித்தார்த்தன்

பூட்டு நழுவுதல்

இதுவரையில் நம் அவயவத்தில் இருக்கும் எலும்புகள் ஒடிந்தால் என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி படித்திருப்பீர்கள். சில சமயம் எலும்பு ஒடியாமலிருக்கும். ஆனால் இணைப்புகளில் அதிக வலியிருக்கும். மேலும் எந்த இணைப்பு உபாதைக்கு உள்ளாகியிருக்கிறதோ அது உபயோகிக்க முடியாமலிருக்கும் இணைப்புகளிலிருக்கும் பூட்டுகள் நழுவுவதால் இது ஏற்படுகிறது. தோள்பட்டை, முழங்கை கட்டை விரல், விரல்கள் முகவாய்க்கட்டை தொடை, முழங்கால் முதலியவிடங்களில் பூட்டு நழுவலாம்.

சாதாரணமாக எல்லா எலும்பு முறிதலுக்கும் சந்தர்ப்பம் இருக்கிறதுபோல் இதற்கும் இருக்கிறது. நாம் வெகு பலமாக கொட்டாவி விடும்பொழுது முகவாய்க்கட்டை பூட்டு நழுவலாம். இவ்வாறு ஏற்படுவது மிகவும் துர்லபம். நாம் சோம்பல் முறிக்கும்பொழுது தோள் பட்டை எலும்பு நழுவலாம். நாம் அசாதாரணமாய் கையை நீட்டும்பொழுது முழங்கை பூட்டு நழுவலாம். நாம் விரல்களை சொடுக்கும்பொழுது விரல்களின் பூட்டு நழுவலாம்.

இதை கண்டுபிடிக்க என்ன அடையாளங்கள் இருக்கின்றன? பூட்டுகளில் வலி அதிகமாயிருக்கும் மேலும் நழுவிய பக்கத்தின் அவயவத்தை உபயோகிக்க முடியாது. இதுவும் தவிர பூட்டு ஸ்திரமாகவிருக்கும். உபாதைக்குட்பட்டவராலும் சரி, முதற் சிகிச்சை செய்பவராலும் சரி, அவயவத்தை பூட்டிருக்குமிடத்தில் நகர்த்தமுடியாது. அவயவத்தை பார்த்தவுடனே ஒரு கோளாறும், ஒழுங்கற்ற தன்மையும் தெரியும். அதுவும் இணைப்பிற்கருகில் கட்டாயம் தெரியும். மேலும் மிக முக்கிய

முதற் சிகிச்சை

★

அடையாளமிருக்கிறது. அது தான் வீக்கம். ஆனால் இந்த வீக்கம் தான் எலும்பு ஒடிந்திருக்கிறதா அல்லது பூட்டு நழுவியிருக்கிறதா என்று நிச்சயிக்க முடியாமல் செய்கிறது.



படம்.1.

ஆதலால் எலும்பு ஒடிதலுக்கும் நழுவுதலுக்கும் உள்ள சில வித்தியாசங்களை அறிவது மிகவும் நலம். நழுவுதல் எப்பொழுதும் இணைப்புகளிலேயே உண்டாகும். எலும்பு ஒடிய இடம் தேவையில்லை. எங்கு வேண்டுமானாலும் ஒடியலாம். மேலும் பூட்டு நழுவினால் பூட்டுகளை அசைக்கமுடியாது. ஆனால் எலும்பு ஒடிந்தால் அசாதாரண அசைவு இருக்கும். பூட்டு நழுவினால் பள்ளம் அதிகமாகத் தெரியாது. எலும்பு ஒடிந்தால்தெரியலாம். நழுவியபூட்டின் எலும்பை தொட்டுப்பார்த்தால் (முடிந்தால்) உருண்டையாகவும், வழவழப்பாகவும் இருப்பது தெரியும். எலும்பு ஒடிந்தால் கூராகவும், முக்கோணமாகவும் இருக்கும்.

இதற்கென்ன முதல் சிகிச்சை செய்வது. முகவாய்க்கட்டையை தவிர மற்ற இடங்களில் நழுவினால் வீட்டினுள் அல்லது அருகாமையில் நழுவியிருக்கிறதா அல்லது வெளியிலா என்று கவனிக்கவேண்டும். வீட்டினுள் நழுவினால் ஒருவித சிகிச்சையும், வெளியில் நழுவினால் வேறு சிகிச்சையும் இருக்கிறது. முதலில் வெளியில் நழுவியிருப்பதாக வைத்துக்கொள்வோம். என்ன செய்வது. நாம் இங்கு ஒன்றும் செய்யமுடியாது. இதை டாக்டர்தான் கவனிக்கவேண்டும். ஆதலால் தூக்கிச் செல்லும்பொழுது வலி அதிகரிக்காமலிருக்க வேண்டியவைகளை செய்யவேண்டும். அடிபட்ட பாகத்தை நன்கு ஸ்திரப்படுத்த வேண்டும். எவ்வாறு ஸ்திரப்படுத்தினால் வலி அதிகரிக்காமலிருக்குமோ அவ்வாறு செய்யவேண்டும். மிருதுவான வஸ்துக்களை வைப்பது நலம்.

வீட்டிற்குள் நழுவினால், அடிபட்டவனை படுக்கவைக்கவேண்டும். படுத்திருக்கும்பொழுது வலி அதிகரிக்காமலிருக்க வேண்டும். வலி அதிகமாயிருந்தால் நழுவிய இணைப்பை நன்றாகத் தெரியும்படியாகவைத்து ஐஸ் ஒத்தடம் கொடுப்பது நலம். நழுவி அதிக நாழியாகியிருந்தால் வெந்நீர் ஒத்தடம் கொடுக்க வேண்டும்.



படம்.2.

முகவாய்க்கட்டை பூட்டு நழுவினால், பொய்ப்பல் வைத்திருந்தால் அவைகளை எடுத்துவிட வேண்டும். பிறகு முகவாய்க்கட்டையைநன்குதாங்கவேண்டும் மற்றவைகளை டாக்டர் கவனிப்பார்.

ஹிந்தி உலகம் - हिन्दी जगत -

-பண்டிட்ஜி-

स्वर्गीय मिश्र जी

✱

पंडित रघुवरदयालु मिश्र के निधन से दक्षिण भारत में हिन्दी प्रचरा आंदोलन को बहुत बड़ा नुकसान हुआ है। पंडित जी का स्वर्गवास गत ता. २७-२-५४ की रात के १०-३० बजे स्टैन्ली अस्पताल, मद्रास में हो गया। पिछले एक-दो महीने से ही श्री. मिश्र जी अस्वस्थ थे और अस्पताल में चिकित्सा पा रहे थे। उनका स्वास्थ्य जो धीरे-धीरे सुधर रहा था, एकाएक बिगड़ गया और उनका देहान्त हो गया। मिश्र जी अपनी धर्मपत्नी, एक पुत्र और दो पुत्रियों को छोड़ गये हैं।

तमिलनाडु के हिन्दी प्रेमियों में शायद ही कोई ऐसा होगा जिसने पंडित रघुवरदयालु मिश्र का नाम नहीं सुना हो। अहिन्दी प्रान्तों में राष्ट्रभाषा हिन्दी के प्रचार के लिए महात्मा गांधी ने जब आंदोलन शुरू किया, तब उत्तर भारत के कुछ देशभक्त हिन्दी विद्वान दक्षिण भारत में आकर हिन्दी का प्रचार करने लगे। वैसे ही लोगों में पंडित मिश्र जी भी थे, जो १९२० में उत्तर प्रदेश से यहाँ आकर हिन्दी प्रचार आंदोलन में लगे। अपने सरल स्वभाव और सौजन्यपूर्ण व्यवहार से वे यहाँ के नेताओं और कार्यकर्त्ताओं के बीच बहुत ही लोकप्रिय हो गये।

उन दिनों, जब कि ब्रिटिश शासन के प्रभाव के कारण दक्षिण के स्कूलों में हिन्दी पढ़ाना बहुत ही मुश्किल होता था, पंडित मिश्र ने अपने अथक परिश्रम, अपार धीरज और आदर्श व्यवहार से लोगों को अपनी तरफ़ आकृष्ट कर अद्भुत सफलता के साथ हिन्दी का प्रचार किया। तंजावूर के कल्याणसुंदरम हाई स्कूल के वर्गों में हिन्दी सिखाकर उन्होंने जो महत्त्वपूर्ण सेवा की, उसके कारण हिन्दी प्रचार क्षेत्र में उनका नाम बहुत मशहूर हो गया।

तंजावूर छोड़कर मिश्र जी जब मदुरा गये, वहाँ श्री वैद्यनाथ अय्यर जैसे धीर नेताओं और धुरंधर देशभक्तों के संपर्क में रहकर सेवा करने का सौभाग्य उनको मिला। अपनी कार्यशक्ति और कर्तव्यनिरति के कारण मिश्र जी वहाँ के सोराष्ट्र भाइयों के बीच भी बहुत लोकप्रिय हो गये।

फिर १९३६ में, जब हिन्दी प्रचार सभा का एक प्रान्तीय कार्यालय तिरुचि में खोला गया, तब पंडित मिश्र जी ही उसके मंत्री नियुक्त हुए।

तमिलनाडु हिन्दी प्रचार सभा के मंत्री की हैसियत से मिश्र जी ने बहुत महत्वपूर्ण सेवा की। तमिलनाडु के सैकड़ों केन्द्रों में भ्रमण कर उन्होंने सब जगह हिन्दी प्रचार आंदोलन का संदेश सुनाया और उसके लिए धन-संचय भी खूब किया। तमिलनाडु हिन्दी प्रचार सभा की तरफ़ से उन्होंने जो 'हिन्दी पत्रिका' प्रकाशित की, वह अपने ढंग की एक अनोखी चीज़ थी। कितने ही लोगों ने उस पत्रिका के ज़रिये उन दिनों हिन्दी सीखी।

१९४० से लेकर अपने अंत तक मिश्र जी मद्रास में रहते थे। देहान्त के समय वे हिन्दी प्रचार सभा के संयुक्त मंत्री तथा साहित्य-मंत्री के पद पर थे। सभा के सरल, सुंदर प्रकाशनों का सारा श्रेय श्री मिश्र जी को है।

मिश्र जी का स्वभाव जितना सरल था, उतनी ही सरल थी उनकी भाषा भी। सरल, सुंदर, शुद्ध, मुहावरेदार शैली में हिन्दी लिखना मिश्र जी की एक विशेषता थी।

उत्तर के होते हुए भी मिश्र जी अजनबी की तरह दक्षिण में नहीं रहते थे। दक्षिण में रहकर, यहाँ की भाषा खूब सीखकर, हमारी संस्कृति से अच्छी तरह परिचित होकर वे भी करीब-करीब दक्षिण भारतीय हो गये थे। उनको तमिल बोलते हुए सुनकर किसीको यह विश्वास नहीं होता था कि वे असल में उत्तर भारतीय थे। उनका रहन-सहन, पोशाक-पहनावा भी करीब-करीब दक्षिण भारतीय का ही रहता था। इस दृष्टि से यह शायद ठीक ही हुआ कि वे यहीं दक्षिण में मिट्टी हो गये।

राष्ट्रभाषा के इस अनुपम सेवक की आत्मा को ईश्वर चिर शान्त प्रदान करे।



புதிதாக மணமானவர்:—"எடிட்டர் ஸார். எப்படியாவது இந்தத் திருமண போட்டோவை உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டும்."

ஆசிரியர்:—"பொதுவில் எங்கள் பத்திரிகையில் திருமண போட்டோ பிரசுரிப்பது வழக்கமில்லை. இருந்தபோதிலும் இடத்தை நிரப்ப இந்த வாரம் ஹாஸ்யச் சித்திரங்கள் இல்லாததால் உங்கள் போட்டோவைப் பிரசுரிக்கிறேன்."

स्वर्गीय காலஞ்சென்ற

निधन (ஆ. பா.) சாவு மரணம்

नुकसान (ஆ. பா.) நஷ்டம்

अस्वस्थ உடல்நலம் குன்றிய

एकाएक திடீரென்று

देहान्त (ஆ. பா.) மரணம்

शायद ஒருவேளை, ஒருக்கால்

शायद ही "அநேகமாக இல்லை" என்பதே இச்சொற்றொடரின் கருத்தாகும்.

अहिन्दी प्रान्त (ஆ. பா.) ஹிந்தியின்றி வேறு பாஷைகள் பேசப்படும் மாகாணம்

लोकप्रिय பொதுஜன அபிமானத்துக்குப் பாத்திரமான

प्रभाव (ஆ. பா.) செல்வாக்கு

अथक परिश्रम (ஆ. பா.) சலியாத உழைப்பு

अपार धीरज (ஆ. பா.) வரையற்ற பொறுமை

आकृष्ट करना ஆகர்ஷித்தல், இழுத்தல், வசப்படுத்துதல்

धुरंधर மிக முக்கியமான, தலைசிறந்த

संपर्क (ஆ. பா.) தொடர்பு

कार्यशक्ति (பெ. பா.) வேலைத்திறமை

कर्तव्यनिरति (பெ. பா.) கடமையில் ஈடுபாடு

नियुक्त होना நியமிக்கப்படுதல்

सैकड़ों நூற்றுக்கணக்கான

संदेश (ஆ. பா.) செய்தி

संचय (ஆ. பா.) திரட்டு

ढंग (ஆ. பா.) வகை, விதம்

अनोखा அருமையான, அற்புதமான

सयुक्त मंत्री (ஆ. பா.) கூட்டுக் காரியதரிசி

श्रेय (ஆ. பா.) பெருமை

मुहावरा (ஆ. பா.) மரபுச் சொற்றொடர்

मुहावरेदार மரபு வழுவாத

शैली (பெ. பா.) மொழிநடை

अजनबी (ஆ. பா.) அன்னியன்

रहन-सहन (ஆ. பா.) பழக்க வழக்கங்கள்

पोशाक (பெ. பா.) உடுப்பு

पहनावा (ஆ. பா.) உடை

मिट्टी होना இறத்தல், மண்ணோடு மண்ணாகுதல்

अनुपम ஈடற்ற, இணையற்ற

प्रदान करना அளித்தல்

जय हिन्द! जय हिन्दी!



தையல் கலை

ஏ. சுகுமார் ...

தையற்கலையும், விஞ்ஞானமும்

★

ஒரு கட்டிடம் அல்லது ஒரு 'அணைக் கட்டு தயாரிக்க விஞ்ஞான ரீதியாகவும் தொழில் நுணுக்கத்துடனும் எவ்வாறு அஸ்திவாரம் கட்டப்படுகின்றதோ அதுபோலவே உடை வெட்டுவதற்கு விஞ்ஞான ரீதியாகவும், தொழில் நுணுக்கத்துடனும், உடலிலிருந்து எடுக்கப்படும் அளவுகளைக் கொண்டு அஸ்திவாரமாக உடை வெட்டுவதற்கு கணக்குகள், பாகப்பிரிவினைகள் பிரிக்கப்படுகிறது. தையல் தொழிலே தன் வாழ்க்கை வசதிக்காகவே மேற்கொண்டுள்ளவர்களில் அநேகர் 'விஞ்ஞானம்' என்ற வார்த்தையை கேட்கும்போது அது ஏதோ ஒரு மூடு மந்திரம் என்றும், கிடைத்தற்கு அரிய கற்பகக்கனி என்றும் கருதுகின்றனர். மேலும் அது ஏதோ தங்களுக்கு புலப்படாத ஒரு ரகசிய சக்தி என்றும் சாதாரணமாக எல்லோருக்கும் கிடைக்காதது, கடவுள் அநுக்கிரகத்தால் ஏற்படக்கூடியது என்றும் இந்த சக்தி எவனுக்காவது கிடைக்குமேயாகில், அவன்தான் விரும்பியபடி குற்றமற்ற பலனை அடையமுடியும் என்றும் சர்வ வல்லமையுள்ள அமானுஷ்ய வேலைகளை செய்யக்கூடிய இந்த சக்தியை அவன்ரகசியமாக கண்டுபிடித்து வைத்திருக்கிறான் என்றும் பொதுப்படையாக தையல் தொழிலில் மட்டுமின்றி இதர தொழில்களிலும் கருதுகிறார்கள். இதே மாதிரியான எண்ணம் மனிதனுக்கு கல்வி அறிவு இல்லாத காலத்தில் உண்டாக்கப்பட்ட நாடோடிக் கதைகளும், கட்டுக்கதைகளும் நிலவி வந்த காலத்திலும் ஏன் இந்தக் காலத்திலுங்கூட இருப்பதைப் பார்க்கலாம். முன் காலங்களிலிருந்தே தங்களை அறியாமல் ஏற்பட்டுவிட்ட இந்த பொதுவான எண்ணம் அல்லது அறியாமை, மூட நம்பிக்கை, பகுத்தறிவற்ற தன்மை முதலியன நிகழ்காலத்தின் விளைவுகளாகும். இந்திர ஜாலம், மகேந்திரஜாலம், அக்ஷயபாத்திரம், கற்பகவிருட்சம் என்றெல்லாம் ஏற்பட்டதற்கு பிறகுதான் இந்த மாதிரியான மௌடீக எண்ணம் இவர்களின் மனதிலே ஏற்பட்டிருக்கிறது. மேற்கூறிய மூட நம்பிக்கை மற்ற தொழில்களைவிட தையல் தொழிலில்தான் அதிகமாக வேரூன்றி இருக்கிறது. இன்றைக்கும்கூட 'விஞ்ஞான' முறையில உடை தயாரித்தலை அடைய வரப்பிரசாதத்தையும், கடவுள் அனுக்கிரகத்தையும் நாடி இருப்பவர்கள் அநேகர் இருக்கின்றனர். நாடோடிக் கதைகளில் வருவதைப்போல் குற்றமற்ற தையல் தொழில் ஒரு தேவதையின் அநுக்கிரகத்தால் கிடைக்காது என அநேகர் ஏங்கி நிற்கின்றனர். இந்த மனப்பான்மை நம் நாட்டில் மட்டுமின்றி 'விஞ்ஞானம்' வளர்ந்திருக்கும் மேல் நாடுகளில்கூட காணப்படுகிறது.

உதாரணமாக லண்டனில் லீட்ஸ் டெக்னிகல் காலேஜ் தையற்கலை போராசிரியரும், 'தீ ஸைன்ஸ் ஆப் பேட்டன் கன்ஸ்ட்ரக்ஷன்' என்ற புத்தகத்தின் ஆசிரியருமான பி. டபிள்யூ. போள் என்பவர் சில வருஷங்களுக்குமுன் 'ஜாமட்ரீ ஆப்கட்டிங்' என்பதைக் குறித்து ஒரு தொழிற் சங்கத்தில் சொற்பொழிவு ஆற்றுகையில் 'விஞ்ஞான'த்தை அறியாமையினால் சரிவர புரிந்துகொள்ளாதவர்கள் அதை விளக்கும்போது அறியாமையினால் உண்டாகும் மூட நம்பிக்கையின் காரணமாக, ஒருமுறை புல் முளைத்து தீர்ந்த பிறகு மறுமுறை புல் முளைத்தா ஏற்படும் தோற்றத்தை எக்காரணத்தினால் அது ஏற்படுகிறது என்பதை விவரிக்கும்போது அதை கடவுளின் செயல் என்று கூறுகிறார்கள். அம்மாதிரியாகவே தான் இந்த 'விஞ்ஞான'த்தையும் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட இயற்கை என கூறுகின்றனர். முன் நாட்களில் வேதாந்திகள் வாழ்ந்த காலத்தில் மாந்திரீகம், சூனியம் இவைகளை நடைமுறையில் உபயோகித்து வந்தவர்கள் 'விஞ்ஞான'த்தை கடவுள் செயலென திருத்திக் கூறிவந்தனர். பாம்பரையாக வந்த இந்த மூட எண்ணம் தையல் தொழிலிலுங்கூட இருந்து வந்தது. இன்றைக்குகூட பலர் வேதாந்திகள் வாழ்ந்த காலத்தில் எம்மாதிரி உடையணிந்து வந்தனரோ, அம்மாதிரியான, இக்காலத்திற்கு ஒவ்வாத உடையை தைக்க விரும்புகின்றனர். 'ஸின்டிரல்லா' போன்ற தேவதைகளின் கதைகளில் வரும் உடையை மனதிலே எண்ணிக்கொண்டு அம்மாதிரியான உடை வெட்டுதல் முறையை இன்றைய உடைகளுக்கும் உபயோகப்படுத்தலின் மூலம் தவறற்ற, சரியான உடைகளை தயாரிக்க முடியும் என எண்ணுகின்றனர் என சொற்பொழிவு ஆற்றுகையில் கூறினர். கூட்டம் முடிந்த பிறகு நன்றி கூறுகையில் நகராண்மை கழகத்தின் உறுப்பினர் ஒருவர் மிஸ்டர் 'போள்' செய்த சொற்பொழிவை நான் மிகவும் பாராட்டுகிறேன். ஆயின் அவர் இஞ்சுடேப் போன்றவற்றைப் பற்றி கூறியிருந்தாரே ஆயின் அது எனக்கு இன்னும் மட்டற்ற மகிழ்ச்சியை அளித்திருக்கும். நான் இந்த இஞ்சுடேப்பை உலகத்திற்கு கண்டுபிடித்து கொடுத்தவருக்கு தலை வணங்குகின்றேன். காரணம் இஞ்சுடேப்பின் தோன்றுதல்தான் தையல் தொழிலுக்கு 'விஞ்ஞான'த்தின் முதல் படியாக விளங்குகின்றது என கூறினாராம். 'பிட்மேன்' அவர்களால் தொகுக்கப்பட்ட ஆங்கில, சுருக்கெழுத்து அகராதியில் (பிட்மேன் ஷார்ட்ஹாண்ட் டிக்ஷனரி) 'விஞ்ஞானம் என்ற சொல்லுக்கு ரகசியமான பிறர் அறியாத சக்தி என்று பொருள் கூறப்படவில்லை. ஆனால் 'விஞ்ஞானம்' என்பது எந்த ஒரு பொருளைக் குறித்து ஆராய்ச்சி செய்வதன் மூலம் கண்டுபிடிக்கப்படும் வரிசைக்கிரமமான ஒரு நிரந்தர அறிவு என்ற பொருள்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'விஞ்ஞானம்' என்ற ஒரு சிறிய சொல் ஒரு நீளமான முடிவற்ற விளக்க உரையை தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருக்கிறது. இச்சொல் 'லாட்டின்' மொழில் 'ஸயின்டியா' (அதாவது அறிவு) என்ற சொல்லிலிருந்து வந்துள்ளது. 'விஞ்ஞானம்' என்பது அறியப்படவேண்டியதைக் குறிக்கிறது. 'கலை' என்பது செய்யப்படவேண்டியது என்பதைக் குறிக்கிறது.

ஆரம்பிக்கப்பட்டது: 1924

பிரபல ஜோதிஷர்

★



... ஜாதகங்களால் ... பெற்றவர் ... வருஷ பலன் ... எழுத ... ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

★

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

தபோநிதி

தியாகராயநகர், மதராஸ்-17

தபால் பெட்டி 1417

"என்ன ஐயா, ஸ்பெஷல் காப்பி கேட்டா ஒரே அடியா சக்கரையை அள்ளிக்கொட்டி பானகமா அடிச்சுக்கிட்டு வந்துட்டையே!"

"இன்னிக்கு ஸ்பெஷல் காப்பி சாதாரண ஸ்பெஷல் இல்லீங்க......பின்னாடி போர்டைப் பாருங்க!"

'அறிவு' என்பது இதற்குமுன் வெளிவராத உண்மையை அல்லது உண்மைகளை அறிவது என்பதைக் குறிக்கிறது.

உதாரணமாக:—இஞ்சுடேப்பின் 12 அங்குலம், அதாவது 1 அடி நீளம் 12 பிரிவுகளாக இருக்கின்றன. இந்த ஒரு அடி நீளம் 36 பாகங்களாக பிரிக்கப்பட்ட அரசாங்க அளவு நீளமாகும். அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த நீள அளவு ஒரு குறிப்பிட்ட சம நிலையில் உண்டாக்கப்பட்ட உலோகத்தகட்டின் நீளமாகும். இந்த உலோகத்தகடுகள் அரசாங்க காரியாலயங்களில் அளவுகள் அறிந்து கொள்ள வைக்கப்பட்டிருக்கின்றன.

12 பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ள 12 சென்டிமீட்டர் நீட்டலளவையே நூறு பிரிவுகளாகவும் வகுத்திருக்கிறார்கள்.

"மீட்டர்" என்றால் என்ன ?

மீட்டர் என்பது சீதோஷ்ண நிலையை '0 டிகிரி' ஸென்டிகிரேடில் இருக்கும்போது, 16 எண்கள் பொறிக்கப்பட்டதும் நிரந்தர அளவுள்ளதுமான ரேடியோ பிளாட்டின தகட்டில் 2 நுண்ணிய கோடுகளால் குறிக்கப்பட்ட தூரத்தின் அளவை குறிப்பதுதான் மீட்டர். இந்த தகடு மேல்நாடு வர்த்தக சங்கத்தில் வைத்து பாதுகாக்கப்படுகிறது. இதெல்லாம் உண்மை. இதே மாதிரியான பல உண்மைகளை அறிந்து கொள்ளுவதற்கு பெயர்தான் அறிவு என கூறுகிறோம்.

"கலை" என்றால் என்ன ?

12 அங்குல பிரிவுகளைக்கொண்ட ஒரு அளவு கோலை எடுத்துக்கொள்வோம். இதே அளவுகளை ஒரு காகிதத் துண்டிலோ, அல்லது கட்டையிலோ, ஒரு தகட்டிலோ, அல்லது வேறொரு பொருளின்மீதோ அப்படியேகுறித்துக் கொள்வோம். அப்படி குறிக்கப்பட்ட பொருளை ஒரு ஜன்னல் சட்டத்தில் கொண்டுபோய் வைத்து அதற்கு எவ்வளவு நீள அளவு உள்ள கண்ணாடி தேவை என்பதை கண்டுபிடிக்கிறோம். இதை கலை என்று கூறுகிறோம். அதாவது கணித கலை.

"விஞ்ஞானம்" என்றால் என்ன?

அளவு என்பது ஒரு நாட்டின் அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிரந்தர ஸ்கேல் அளவாகும். ஸ்கேல் அல்லது ஒரு அடி 12 அங்குலங்களாகவும் இதே மாதிரியான மூன்று அடி நீளமுள்ள ஒன்றை ஒரு கஜம் அதாவது 36 அங்குலங்களாகவும், ஒரு டெய்லர் மெஷர் டேப் 5 அடி நீளமுள்ள 60 அங்குலங்களாகவும், 120 அரை அங்குலங்களாகவும், 240 கால் அங்குலங்களாகவும், இன்னும் இதற்கும் சிறிய பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதே மாதிரியாக நிர்ணயக்கப்பட்ட அளவுபடி ஒரு நூல் இழையையோ, அல்லது நாடாவையோ, உலோகத் தகட்டையோ, எடுத்துக் கொண்டு ஒரு காகிதத்தில், அல்லது ஒரு துணியில் ஒரு நீண்ட கோடு வரைந்து அதற்கு அடுத்தாற்போல் இன்னொரு கோட்டையும் வரைந்து முதல் கோட்டிற்கு சம நிலை அளவாக 2-வதுகோட்டை அளவு விகிதப்படி சம அளவாகப் பிரிக்கும்போது சில உண்மைகள் கிடைக்கின்றன. எப்படியென்றால் 12 அங்குலம் 1 அடி என்ற ஒரு நிரந்தர அளவைக்கொண்டுதான் சட்ட பூர்வமாக 18 அங்குலம் 1½ அடி என்ற உண்மையைக் கிடைக்கப் பெறுகிறோம். இதே மாதிரியாகவும் இன்னும்பலவகைகளுக்கு சட்ட பூர்வமான உண்மையை காட்டப்படுவதைதான் 'விஞ்ஞானம்' என கூறுகிறோம். ஏனெனில் இந்த அளவுமுறை ஒன்றோ ஒன்று தொக்கி நிற்பதாகவும் ஒரு ஆதாரத்தின்மேல் வருவதாகவும் இருக்கிறது.

ஒரு கோட்டின் வெட்டுதலை நிர்மாணிப்பதற்கு அஸ்திவாரமான நான்கு அளவுகள் தேவைப்படுகிறது. இவற்றைக் கவனிப்போம். 1. பின் கழுத்து முனையிலிருந்து மார்புக் கோட்டுக்கு உள்ள நீள அளவு. (பாக் டெப்த் ஆப் ஸைமெஷர்) 2 முன் கழுத்து முனையிலிருந்து மார்புக்கோடுக்கு உள்ள நீள அளவு (பிரண்ட் ஷோல்டர் மெஷர்) 3. முன், குறுக்கு மார்பளவு (எக்ரூஸ் செஸ்ட்மெஷர்) 4. தோள் சாய்வின் தன்மையை நிர்ணயிக்கும் அளவு. (ஓவர் ஷோல்டர் மெஷர்). ஒரு உடை வெட்டுவதற்கு மேற்கூறிய நான்கு அளவுகளை நிர்ணயிக்க, வரையப்படும் கோடுகளிலிருந்து ஒரு சம நிலையை (பேலன்ஸ்) சட்ட பூர்வமாக கண்டுபிடிக்கப்படுவது தான் தையல் தொழிலின் 'விஞ்ஞான' முறை என கருதப்படுகிறது.

(தொடரும்)

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயநகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக்கண்டு ஏமாறுநீர்

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

19, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 85254

கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

வள்ளல் வி. வி.

—o—

(ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார், அட்வகேட்.)

தனக்கென வாழாது பிறர்க்குரியராக உயர்வாழ்வு நிகழ்த்திய வள்ளல் வி. வி. பூத உடலை நீத்தார்; நித்யானந்தம் எய்தினார். செய்தி கேட்டு அனைவரும் ஆறாத்துயரில் ஆழ்ந்தனர். 83 வருஷங்கள் சீரிய வாழ்க்கை நடத்திய ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவரது உற்றார் உறவினரால் 'முத்தண்ணா' வென்றே அழைக்கப்பட்டு வந்தார். உண்மையில் அவரை அண்டினவர்களுக்கெல்லாம் முத்தண்ணா ஸ்தானத்தில் இருந்து அன்பும் ஆதரவும் காட்டிய ஒரு உத்தம சீலர்; கருணை நிதி. தாம் ஈட்டிய செல்வம் பிறர்க்குதவவே என்று திட நம்பிக்கையுடன் ஓயாது சலியாது உதவி வந்த உத்தம வள்ளல் ஸ்ரீ வி. வி. யென்றால் மிகையாகாது. எவ்வளவோ பொருள் தேடினார். இரு கைகளாலும் தேடியதை யெல்லாம் வாரி அள்ளிக்கொடுத்தார். அதிலே தனித்து ஒரு மகிழ்ச்சி அடைவார். பெருமை கொள்வார். கடைசி நிமிஷம் வரை இதுவே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.

தாம் பெற்ற சரீரம் பரமாத்மா அளித்த சாதனம். அந்த பரமாத்மாவின் ப்ரீத்யர்த்தம் அவன் தொண்டினிலேயே பயன்படுத்த வேண்டுமென்று உறுதி கொண்டவர் ஸ்ரீ வி. வி. செய்கையிலும் அதைக் காட்டினார். 83 ஆண்டுகளிலும் ஆத்ம ஆரோக்யங் கருதி தேக ஆரோக்கியத்தை அதிசயிக்கத்தக்க வழியில் பரிபாலித்து வந்தார். ஆகாரத்தில் நியமம். நித்யப்படி ஆன்னிக அனுஷ்டானங்களைக் குறைவறச் செய்து முடிப்பார். மன உறுதியும் கட்டுப்பாடும் பிறர் பிரமிக்கச் செய்யும். திரிகரண சுத்தி மிக்க சத்வகுண சம்பன்னர். இன்பக்கனி என்று கூறவேண்

டும். எதிரி என்று ஒருவர் இல்லாதவர். பரம நாஸ்திகரையும் அன்பு கனிந்து ஆதரவுடன் அணைத்து அச்சுதன் நினைவில் ஆழ்ந்திடச் செய்யும் திறமை. எப்படிப்பட்ட முரடனாயினும் அவரது புன்முறுவலில் மசிந்து விடுவான். அன்பர்களைக் கண்டால் கரந்தொட்டுத் தடவிக் கொடுத்து இன்மொழிகள் கூறுவார். பிறர் துயர் கண்டு சகியாது வலியச் சென்று உதவி இடர் தீர்த்த சந்தர்ப்பங்கள் எவ்வளவோ. உண்மை வைஷ்ணவன்.

லௌகிக வைதிகம் கலந்தவர். ஸம்சாரத்தில் ஸந்நியாசியாக விருந்தவர். வக்கீல் தொழிலிலே புகுந்தார். உயர் பதவியும் புகழும் பெற்றார். கிடைத்த ஹைகோர்ட்டு ஜட்ஜு வேலையையும் ஒரு பெரிதாகக் கருதாமல் விலகும் துணிவும் கொண்டார். மனோதத்துவ நிபுணர். சகல கலைகளிலும் தேர்ச்சிபெற்றிருந்தார். கலைகளின் நுட்பங்களையும் பெருமைகளையும் உலகோர் அறிய எடுத்துக் காட்டும் கலாசார்யன். நாடகம், நாட்டியம், சங்கீதம், சமூகம். மதம், விஞ்ஞானம், சித்ரம், சில்பம் எதிலும் பரம ரஸிகர். வேதாந்தத்தில் தீக்ஷண்யமான ஆழ்ந்த ஞானம். ஞானத்தின் ஆழத்திற்கேற்ப அதில் ஆழ்ந்த நம்பிக்கை, பக்தி. இவர் புகுந்து சிறப்பிக்காத கலையேயில்லை. ஆங்கிலம், தமிழ், ஸம்ஸ்கிருதம் எல்லா பாஷைகளிலும் முதிர்ந்த தேர்ச்சி. கதைகளும் கட்டுரைகளும் நாடகங்களும் சுவை மிகுந்த வழியிலே இயற்றியிருக்கிறார்.

கவிகளைக் கண்டால் கவி ரஸத்திலே திளைத்து நிற்பார். வித்வான்களைக் கண்டால் அலுக்காது வேதாந்த விசாரம் செய்வார். வாழ்க்கையில் எச்சந்தர்ப்பத்திலும் சோர்வு என்பதை உணராதவர். குதூஹலம்தான். நன்னம்பிக்கை தளர்ந்த நாளே கிடையாது. அப்படியே கடைசி வரை அவர் வாழ்க்கை நடத்த பகவானும் அருள் புரிந்தார். அன்னமிடுவதில் அலாதிப் பிரியம். எப்பொழுதும் அவருடன்

ஒரு கூட்டம். தன்னைப்போல் அவர்களுக்கும் சம உபசாரம் நடக்கச் செய்வார். உயர்ந்தோன் எளியவன் என்ற பாரபட்சம் காணாதவர். நயம்படப் பேசும் நியாய வாதி.

கம்பீரமான மேனிக்கேற்ப இடம் காலம், சமயம் அறிந்து ஏற்றவாறு துல்ய ஆடைகள் அணிவதில் ஒரு மோஹம். பரம ரஸிகன் என்பதை அவர் ஆடைகள் நடையுடை பாவனைகள்அவர் அணியும் பாதரட்சைகள் முதற்கொண்டு எல்லாம் ஒருங்கே நோக்கில்லாவிடினும் இயற்கையாகவே ஒரு அலங்கார புருஷராக விருப்பார்.

ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தில் மட்டில்லா பற்றுடையவர். அதன் பிரசாரத்திற்காகவே தாம் வாழ்வு பெற்றதாக நினைத்து பல துறைகளிலும் அதைப் பரப்ப நீடித்த ஸேவை புரிந்து வந்தார். தேசிக தர்சன ரத்ன தீபம் என்ற சமூகப் பெரியோர்களால் பிருதிட்டுக் கொண்டாடப்பட்டவர். எவ்வளவோ உத்ஸவங்கள், வித்வத் ஸபைகள் கூட்டி தாம் மகிழ்வதுடன் பிறர் மகிழச் செய்து வந்தார். மத சமூக விஷயங்களில் சர்க்கார் தலையிட்டு சட்டங்கள் செய்த காலத்தில் எல்லாம் அஞ்சா நெஞ்சத்துடன் எதிர்த்துப் போராடி சமூகத்தினருக்கு ஒரு புது ஊக்கமும் உணர்வும் ஊட்டிவந்தார். நியாய வாதத்திலே தலைசிறந்து விளங்கியதுடன், தொல்வழியைத் தோன்றக்காட்டினார். தெளியாத மறை நிலங்கள் பலவற்றையும் தெளிவில்லாதாரும் தெளிந்திடத் தெளிய வைத்தார். நிறைந்த வாழ்க்கை. சென்ற மாதம் திடீரென முடிவுற்றது. முடிந்த முறையும் வியக்கத்தக்கது. உள்ளத்திலோ, உடலிலோ நலிவில்லை. என்றும்போல் அன்றும் அலுவல்களை முறைப்படி கவனித்தார். எப்பொழுதும் நித்திரைக்குப் போவதுபோல் அன்றும் நித்திரைக்குச் சென்றார். ஆனால் அது நீண்ட நித்திரையாயிற்று. பரமன் அடி சேர்ந்தார். 'என்றைக்குமேழேழு பிறவிக்கும் உன்றன்னோடுற்றோமேயாவோம் உனக்கே நாமாட் செய்வோம்' என்றபடி பரமாத்மாவின் நித்ய கைங்கர்யத்தில் ஈடுபட்டுவிட்டார் முத்தண்ணா.



உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் கையாளப்படும் நவீன சாதனங்களில் மாதர்களும் பயிற்சி பெறுகின்றனர். பெர்கூஸன் டிராக்டரை ஓட்ட ஒரு ஸ்திரீ கற்றுக்கொள்ளும் காட்சி

பெரம்பூரில் பிரம்மாண்ட தொழிற்சாலை

ஆசியாவிலேயே மிகப் பெரிய ரயில் பெட்டி உற்பத்தி சாலை பெரம்பூரில் துரிதமாக பூர்த்தியடைந்து வருகிறது. உலகிலேயே இதைவிடப் பெரிய உற்பத்தி சாலை ஒன்றுதான் இருப்பதாகத் தெரிகிறது. ஆறு மணி நேர வேலைக்கு ஒரு பெட்டி வீதம் பிரதி வருஷமும் 350 ரயில் பெட்டிகள்உற்பத்திசெய்யக்கூடிய இந்த தொழிற்சாலையில் நாலாயிரம் தொழிலாளர்களுக்கு மேல் வேலை பெறுவர். பிராட்கேஜ் ரயில் பெட்டிகளைப் பொறுத்த வரையில் சுயதேவைப் பூர்த்தி நிலையடைய இத்தொழிற்சாலை உதவும் என்ற விவரத்தை தொழிற்சாலையின் பிரதம நிர்வாக அதிகாரியான ஸ்ரீ கே. சடகோபன் தெரிவித்தார். 35 ஏகரா விஸ்தீரணத்தில் அமைந்து வரும் தொழிற்சாலைஇடத்தையும் 32 ஏகரா பரப்பில் அமைந்திருக்கும் ஊழியர் காலனியையும் செய்தி நிருபர்களுக்கு சுற்றிக் காண்பித்தஸ்ரீசடகோபன் அங்கு உற்பத்தியாகும் ரயில் பெட்டி புது அமைப்பு கொண்டதாகவும் பிரயாணிகளின் பந்தோபஸ்தையும் சௌகர்யத்தையும் அதிகரிப்பதாகவும் விபத்து காலங்களில் ரயில் பெட்டிகள் ஒன்றின் மீது ஒன்று கவிழ்ந்து ஊடுருவுவதைத் தவிர்க்கக்கூடிய வகையிலும் இருப்பதாக தெரிவித்தார். இத்தொழிற்சாலை சார்பில் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளி ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்திய சர்க்கார் ரயில்வே உதவி மந்திரி ஸ்ரீ ஒ. வி. அழகேசன் பள்ளியை ஆரம்பித்து வைத்தார். இவ்வைபவத்தை ராஜாஜி நடத்திவைப்பதாக இருந்தது. ஆனால் உடல் நிலை சரியாக இராததால் அவர் வரமுடியவில்லை. விழாவுக்கு அனுப்பியுள்ள ஆசிச் செய்தியில் 'ரயில்வே தொழிற்சாலை சரித்திரத்தில் பெரம்பூர் ஒரு லட்சிய ஸ்தலம் இப்புதிய தொழிற்சாலையையும் பள்ளியையும் இந்திய சர்க்கார் இங்கேயே அமைத்திருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்' என்று கூறியுள்ளார். பிரதம மந்திரி நேருவிடமிருந்தும் இந்திய சர்க்கார் மந்திரிகள் ராஜ்ய கவர்னர்களிடமிருந்தும் ஆசிச் செய்திகள் வந்திருந்தன. 1955 இறுதியில் இத்தொழிற்சாலையில் உற்பத்தி துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழிற்சாலை சரியாக வேலைசெய்யதொடங்கியபின் உற்பத்தியாகும் ரயில் பெட்டிகள் உலக மார்க்கெட்டிலேயே மிகவும் மலிவானவையாக இருக்கும் என்று கருதப்படுகிறது. இத்தொழிற்சாலை ஊழியருக்கென 32 ஏகர் நிலத்தில் நல்ல வசதிகளுடன் கூடிய நானூறு விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. பதினேரு மைலுக்கப்பாலுள்ள என்னூரிலிருந்து தண்ணீர் சப்ளைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பயிற்சிப் பள்ளியை ஆரம்பித்து வைத்து ஸ்ரீ ஒ. வி. அழகேசன் பேசுகிறார்.

கலா மண்டபம்

பம்பாய்க் கடிதம்

பம்பாய் சினிமா உலகில் மகத்துவமான ஒரு பெரிய சம்பவம் சென்ற வாரம் நடந்தது. இவ்வூரில் முதன் முதலாக 'பிலிம்பேர்' சினிமா பத்திரிகையாளர்கள் சினிமாத் தொழிலில் தேர்ச்சி பெற்று பெயரும் புகழும் சம்பாதித்திருக்கும் நால்வருக்கு பரிசுகள் வழங்கினர். இப்பரிசு அமெரிக்காவில் கொடுக்கப்படும் 'ஆஸ்கார்' பரிசைப் போன்றது.

மேற்சொன்ன பத்திரிகையாளர்கள் தங்கள் பத்திரிகை வாசகர்களை சென்ற வருஷத்தில் கைதேர்ந்த ஒருபட முதலாளியையும், ஒரு டைரக்டரையும், ஒரு நடிகனையும், ஒரு நடிகையையும், சங்கீத டைரக்டரையும் தேர்ந்தெடுக்கச் சொன்னார்கள். அவர்கள் 'தோபீகா ஜமீன்' என்னும் படத்தைத் தயாரித்த ஸ்ரீ பீமல்ராயை ஒரு சிறந்த பட முதலாளியாகவும், டைரக்டராகவும் தேர்ந்தெடுத்தார்கள். அம்மாதிரியே, ஸ்ரீ திலீப்குமாரை ஒரு சிறந்த நடிகராகவும், ஸ்ரீமதி மீனா குமாரியை இணையற்ற நடிகையாகவும், ஸ்ரீ நௌஷாத் என்பவரை ஒரு உயர்ந்த சங்கீத டைரக்டராகவும் 'பிலிம்பேர்' வாசகர்கள் தேர்ந்தெடுத்தார்கள். இவர்களுக்குத் தகுந்த பரிசு கொடுக்க வேண்டுமென்று 'பிலிம்பார்' பத்திரிகையாளர்கள் அமெரிக்காவின் ஆஸ்காரைப்போல், வெண்கலத்தில் சுமார் 12 அங்குல உயரத்திற்கு பெண் சிலையைச் செய்து பரிசாகக் கொடுத்தார்கள். இப்பரிசுக்கு 'டைம்ஸ் ஆப் இண்டியா'வின் காலம் சென்ற சினிமா நிருபர் ஸ்ரீமதி கிளேர்மெண்டோன்ஸா 'கிளேர்'வின் ஞாபகார்த்தமாக [illegible]று பெயர் கொடுத்தார்கள். மேற்[illegible]ன்ன பரிசு வழங்கும் சம்பவம் [illegible]ட்ரோ சினிமாக் கொட்டகையில் [illegible]ன்ற வாரம் வெகு விமரிசையாக [illegible]ந்தேறியது. இந்தியாவுக்கு வந்திருக்கும் அமெரிக்க ராஜப் பிரதிநிதி ஸ்ரீ ஜார்ஜ் ஆலன் என்பவர் தலைமை வகித்தார். இவ்வூரிலுள்ள எல்லா சினிமா நக்ஷத்திரங்களும், பட முதலாளிகளும், டைரக்டர்களும், பாடகர்களும் வந்திருந்தார்கள். இம்மாதிரியான கூட்டம் இங்கு இதுவரையில் நடந்ததேயில்லை. இச்சம்பவத்தின் பொருட்டு பல நிகழ்ச்சிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

முதலில் ஸ்ரீமதி நளினி ஜயவந்த் 'வந்தே மாதரம்' பாடினார். பிறகு ஸ்ரீமதி சத்யவதியின் நடனமும், ஸ்ரீ தலத் மஹ்மூத், ஸ்ரீ மகமத்ரபீ, ஸ்ரீமதி கீதாராய் இவர்களின் பாட்டும், ஸ்ரீமதிகள் வைஜயந்திமாலா, சூர்யகுமாரி, காமினிகௌஷல், ஸ்ரீ வினோத் சோப்ரா இவர்களின் நடனக்கச்சேரிகளும் நடைபெற்றன.

ஸ்ரீ ஜார்ஜ் ஆலன், இந்திய சினிமாத் தொழில் மேலும் மேலும் கூடிய சீக்கிரத்தில் விருத்தி அடையும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார். இச்சம்பவத்தின் மறுநாள் 'பிலிம்பேர்' பத்திரிகையாளர்கள் பரிசு பெற்றவர்களுக்கு வெல்லிங்டன் ஸ்போர்ட்ஸ் கிளப் என்னுமிடத்தில் ஒரு பெரிய விருந்தை அளித்தனர். அவ்விருந்திற்கு ஹாலிவுட்டின் பெயர் பெற்ற நடிகர் ஸ்ரீ கிரிகொரி பெக் வந்திருந்தார். எல்லோரிடமும் அவர் கைகுலுக்கிக் குலுக்கி அவருக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது.

• • •

மாதுங்காவில் தென் இந்திய வெல்பேர் சொஸைடியின் உயர்தரப்பள்ளி மாணவிகள் சென்ற வாரம் வில்லுப் பாட்டை வெகு விமரிசையாக நடத்தினார்கள்.

—த. மா. ராமச்சந்திரன்.

பூட் பாலிஷ்

ராஜ்கபூர் தயாரிப்பான 'பூட் பாலிஷ்' இப்பொழுது சென்னை ஸ்டார் டாக்கீஸில் ஓடுகிறது. நகரத்தின் ஒதுக்குப்புறங்களில் திண்டாடிப் பிச்சையெடுத்துப் பிழைக்கும் அநாதை மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் படம் இது.



ரோஹிணி 'பணம் படுத்தும் பாட்'டில் ஸௌகார் ஜானகி

இந்தப் படத்தில் காதல் இல்லை. 'பிளாட்' என்று சொல்லப்படும் கதைத் தொகுப்பு இல்லை. ஆனால் வாழ்க்கையின் துன்பத் துளிகள் நிரம்ப இருக்கின்றன. போலா என்ற சிறுவனும் பேலு என்ற சிறுமியும் படும் துன்பங்களில் நாமும் பங்கெடுத்துக்கொள்கிறோம்.

இந்தப் படம் ஒரு தனி ரகம். அதிலும் சிறப்பான தனி ரகம். டீஸீகா என்ற இதாலிய டைரக்டர் தயாரித்த 'ஷூ ஷைன்' என்ற படத்தைப்போல் இந்த 'பூட்பாலி' ஷூம் உயர்ந்த படமென்பதில் சந்தேகமில்லை.

இதில் நடிக்கும் ரதன் குமாரும், பேபி நாஸூம் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறார்கள். படத்தின் முற்பகுதியிலிருக்கும் வேகம் பிற்பகுதியில் குறைந்தாலும் மொத்தத்தில் படம் மனத்தைத் தொடும்படியாகவே அமைந்திருக்கிறது.

கற்கால மனிதர்களுக்கும் சங்கீத ஞானம் இருந்தது

கற்கால மனிதர்களுக்கும் சங்கீத ஞானம் இருந்திருக்கிறது. அவர்கள் கற்களைக் கொண்டு பலவித நாதங்களை எழுப்பியும், சங்கீத கருவிகளை உற்பத்தி செய்து கையாண்டிருக்கிறார்கள் என்பதை பிரஞ்சு நிபுணர்களில் ஒருவரான ஜாபாக்ரல் கண்டோமினஸ் கண்டுபிடித்திருக்கிறார்.

வியட்னமில் டெலிங்கார்க் என்ற இடத்தில் சில பெரிய சாம்பல் நிறக் கற்களைக் கண்டுபிடித்தார். இம்மாதிரி 11 கற்கள் அகப்பட்டன. இவை 26 அங்குலம் வரை அளவுடன் கூடியதாக விளங்கின.

ஒரு கல்லைத் தட்டிப் பார்த்ததில் இனிமையான நாதம் எழுந்தது. ஒவ்வொன்றையும் இம்மாதிரி தட்டிப் பார்த்ததில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வித நாதம் எழுந்தது.

இக்கற்கள் பாரிஸ் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டன. இவை சங்கீதக் கருவிகள் தான் சந்தேகமில்லை என்று அவர்கள் கூறினர்.

இது 5000 வருஷங்களுக்கு முன் கற்கால மனிதர்களால் உபயோகிக்கப்பட்டிருக்கவேண்டும் என்று ஊகிக்கப்படுகிறது. இந்தக் கற்களிலிருந்து எழும்பும் நாதங்களிலிருந்து அவர்கள் சங்கீத ஞானத்தில் முதிர்ந்தவர்களாக இருக்கவேண்டும் எனக் கருதப்படுகிறது. இந்த சங்கீத கருவிகள் தற்போது பாரிஸ் மியூசியத்தில் இருக்கின்றன.

இந்தியாவில் டெக்னிகலர் படத் தயாரிப்பு சாத்யமே

அமெரிக்க நிபுணர் பிரேனே கருத்து

"இந்தியாவில் டெக்னி கலர் சினிமா படங்கள் தயாரிப்பது சாத்யமே என்று வெஸ்டரெக்ஸ் கார்ப்பொரேஷன் எஞ்சினீயரான அமெரிக்க நிபுணர் ஜான் பிரேனே நேபன் நிருபருக்களித்த விசேஷ பேட்டியில் கூறினர்.

ஜப்பான் டெக்னி கலர் சினிமாபடங்களை தயாரிக்கும்போது இந்தியா ஏன் தயாரிக்க முடியாது என்று அவர் கேட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:—

ஆரம்பத்தில் சில டெக்னி கலர் படங்கள் குறிப்பிட்ட தரத்திற்கு ஏற்பு இராதுதான் இதனால் இந்திய படாதிபதிகள் தளர்வடைந்து விடவேண்டியதில்லை. முடிவில் நிச்சயமாகவே வெற்றி ஏற்படும்.

ஒலி சம்பந்தமாக எந்த இந்திய படாதிபதிக்கு வேண்டுமானாலும் நான் ஆலோசனை கூறத் தயாராக இருக்கிறேன்.

இந்தியா அமெரிக்கா தங்கள் டெக்னிஷியர்களை பரிவர்த்தனைசெய்து கொள்வதை நான் விரும்புகிறேன்.

சீதோஷ்ண நாடுகளில் உபயோகிக்கப்படும் கருவிகளை வேறு முறையில் இருக்கவேண்டும். ஆகவே இவைகளை கையாள ஸ்பெஷல் டெக்னிக்குகள் தேவை.

இந்தியர்கள் டெக்னிகல் விவரங்களை சட்டென புரிந்துகொள்ளுகிறார்கள். இந்தியாவில் டெக்னிகல் திறமையுள்ளவர்களை எல்லாம் இத்தொழிலில் ஈடுபடுத்தி ஒன்று திரட்டவேண்டும்.

ஸ்ரீ பிரேனே இரண்டு மாத உலக சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டிருக்கிறார். இவர் நேற்று கொழும்பிலிருந்து இங்கு வந்து சேர்ந்தார். மார்ச் 31-ந்தேதி இவர் பம்பாய் செல்கிறார். யுனைடெட்ஸ்டேட்ஸ் திரும்பு முன் இவர் பாகிஸ்தான் விஜயம் செய்வார்.
—நேபன்.

பம்பாயில் 'டப்பிங்' ஸ்டுடியோ

சினிமாப் படங்களை எல்லா இந்திய பாஷை படங்களிலும் 'டப்' செய்வதற்கான ஸ்டுடியோ ஒன்றை பம்பாயில் ஏற்படுத்த பிரபல பிரிட்டிஷ் டப்பிங் நிபுணர் மேஜர் டிலேன் லீ உத்தேசித்திருக்கிறார்.

இவர் சென்ற 25 வருஷமாக இத்துறையில் சேவை செய்து புது முறையொன்றையும் கண்டுபிடித்திருக்கிறார்.

இதுவரை இவர் 376 படங்களை 17வித பாஷைகளில் டப் செய்துள்ளார். இவருக்கு லண்டனிலும் பாரிஸிலும் 'டப்பிங்' ஸ்டுடியோக்கள் உள்ளன. இந்த லாந்தில் ஹிந்தி, தமிழ், வங்காளம், உருது இவைகள் பேசவும் குரல் கொடுக்கவும் இவர் ஆட்களை வைத்திருக்கிறார்.

லண்டன் பிலிம் ஸ்டுடியோ தொழிலாளிகள்

ஒரு வாரத்தில் 4000 பேர்கள் டிஸ்மிஸ் !

சென்றவெள்ளிக்கிழமையன்று இங்கு சுமார் 4,000 பிலிம் ஸ்டுடியோ தொழிலாளிகள் டிஸ்மிஸ் நோட்டீஸ்களும் சம்பள பாக்கெட்களும் பெற்றனர். ஆனால் இவர்கள் மீண்டும் அடுத்த வாரம் நியமிக்கப்படுவார்களாம்.

லேபரடரி டெக்னீஷியன்கள், ஊதியம் அதிகம் வேண்டுமெனவும் கிளர்ச்சிக்கு போதிய ஆதரவு அளித்ததுடன் தங்கள் தொழில் புரிவதில் உற்சாகம் காட்டாமல் மெல்லச் செய்யும் முறையை கையாண்டதாலும் இதனால் 1,000 பவுன் பெறுமான பிரிட்டிஷ் பிலிம்கள் 'ஷூட்டிங்' செய்யப்படாமல் தடைபட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

லேபரடரி தொழிலாளிகளின் யூனியன், இம்மெல்ல தொழில் புரிந்து கிளர்ச்சி செய்யும் கொள்கையை கையாளவேண்டுமென்று யோசனை கூறியிருக்கின்றது. ஞாயிறன்று இவர்களின் பொதுக்கூட்டமொன்று நடைபெறும்.

இந்தக் கிளர்ச்சியினால் பிரிட்டனில் சினிமா பிலிம் புரோஸஸிங் வேலை மிகவும் தடைப்படுமாம்.



சென்ற 6-3-54 சனிக்கிழமையன்று கோபாலபுரம் சங்கீத சபையில் ஆலத்தூர் சகோதரர்களின் கச்சேரி வெகு சிறப்பாக நடைபெற்றது.



இந்தியா விஜயம் செய்திருக்கும் இந்தோனேசிய பத்திரிகைக்கார தூதுகோஷ்டி பக்ரா-நங்கல் அணைக்கட்டு மாதிரி பிம்பத்தைப் பார்க்கின்றனர். தூதுகோஷ்டித் தலைவர் ஸ்ரீமதி ஹீராவதி தியா இடதிலிருந்து நாலாவதாக நிற்கிறார்



அனாதாசிரமங்களுக்கு உதவிபுரியுமாறு, சென்னை அநாதைக் குழந்தைகள் ரக்ஷணை சபைக் கூட்டத்தில் தலைமை வகித்த டாக்டர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியார் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். சபை ரக்ஷணையிலுள்ள அநாதைக் குழந்தைகளின் நடனக் காட்சியை படத்தில் காணலாம்

சுதேசமித்திரன்

சந்தா விகிதங்கள்

★

தினப்பதிப்பு

	(இந்தியா, இலங்கை, தபால் மூலமாக) ரூ. அ.	சென்னை ரூ. அ.	வெளி நாடு ரூ. அ.
1 வருடம் ...	26 0	24 0	32 0
6 மாதம் ...	13 8	12 8	16 0
3 மாதம்	7 0	6 8	8 0
1 மாதம் ...	2 8	2 4	—

தனிப்பிரதி

ஞாயிறு மலர் ... விலை 2 அணு

இதர நாட்களில் ... விலை 1 அணு

வாரப்பதிப்பு

	ரூ. அ.	ரூ. அ.
1 வருடம் ...	13 0	16 0
6 மாதம் ...	7 0	8 0
3 மாதம் ...	3 12	—

தனிப்பிரதி அணு 4

சர்க்குலேஷன் மானேஜர்,

சுதேசமித்திரன் ஆபீஸ், மவுண்ட் ரோட், மதராஸ். 2.



முஸ்லிம் லீகில் எல்லா வகுப்பினரையும் அனுமதிக்கலாம் என்பதாக ஸர் பிரோஸ்கான் நூன் கூறினர்.

சுதேசமித்திரன் வாரப்பதிப்பு

வாழிய செந்தமிழ் — வாழ்க நற்றமிழர்

Vol XXV] விஜயஞ பங்குனிமீ 29உ ★ 1954ஞ ஏப்ரல்மீ 11உ [No 10

ஆத்திரப்படத் தேவையில்லை

பாஷாவாரிப் பிரதேசப் பிரிவினையை நோக்கமாகக்கொண்டு இன்னும் நாட்டில் சில பகுதிகளில் கிளர்ச்சி நடந்துவருகிறது. இதில் ஆத்திர மிகுதியால் நிதானமிழந்து தகாத முறையில் பேசி மாச்சரியத்தை வளர்ப்போர் பலர். இந்த சொற்போரில் காங்கிரஸ் வாதிகளிலேயே ஒரு சாரார் தீவிரமாக ஈடுபட்டிருப்பது இன்னும் ஆச்சரியமானது. இன்று காங்கிரஸைக் காலை வாறுவதில் சிரத்தையுள்ள கோஷ்டிகள் பல. இவை காங்கிரஸ்காரரிடையே உள்ள பிளவைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தம் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முற்படுவது இயற்கை. இந்நிலை நீடிப்பதால் விளையக்கூடிய விபரீதத்தைக் கண்டுதான் காங்கிரஸ் காரியக் கமிட்டி இதுபற்றி குறிப்பாக காங்கிரஸ்காரர்களை எச்சரிக்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.

அக்கமிட்டி சுட்டிக்காட்டியிருப்பதுபோல், ராஜ்ய எல்லைகளை சீரான முறையில் திருத்தியமைக்கும் பிரச்னை உணர்ச்சி வேகத்திலோ, ஆர்ப்பாட்டமான கிளர்ச்சிகளாலோ தீர்த்து வைக்கக் கூடியதல்ல. இவைகளுக்கு இடந்தருவது பெரிய அனர்த்தத்திலேயே போய் முடியும். உண்மையில் பாஷை மாறுபாட்டை மட்டும் கொண்டு இந்தியாவைக் கூறு போடுவதென்ற பேச்சு அபத்தம். பாஷையோடு, பொருளாதாரம், நிர்வாகம் முதலிய பல அம்சங்களையும் நிதானமாக ஆராய்ந்தே தற்போதைய ராஜ்ய எல்லைகளைத் திருத்தியமைப்பது பொருத்தம் என்பதை அறிவாளிகள் அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். இந்த உணர்வுடன் மேற்குறித்த எல்லா அம்சங்களையும் விரிவாக ஆராய்ந்தறிந்து ராஜ்யங்களின் புனர்த் தொகுப்புக்கு யோசனை சொல்லும் பொருட்டே ஒரு கமிஷனை நியமித்திருக்கின்றனர். இவ்விஷயத்தில் யாரும் ஆத்திரமான ஆர்ப்பாட்டங்களில், அல்லது உக்கிரமான கிளர்ச்சிகளில் ஈடுபடத்தேவையில்லை. உண்மையில் இப்பிரச்னையில் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புகளும் நல்லுணர்ச்சியுடன் நெருங்கி ஒத்துழைப்பதன் மூலமே இது இனிது தீரக்கூடும். மக்களின் க்ஷேமம் ஒன்றையே பிரதானமாகக்கொண்டு பரிகாரம் தேடவிரும்புவோர் தங்களிடை சண்டையிட்டுக்கொள்ளத் தேவையில்லை. இவர்களிடை அபிப்பிராய பேதமிருக்கலாம். மேற்குறித்த கமிஷன் இயங்க ஆரம்பித்துவிட்ட பின் அவர்கள் தத்தம் கருத்துக்கு ஆதரவான உண்மைகளை அமைதியாகத் திரட்டி அதன் முன் சமர்ப்பிப்பதில் முனைவதே பொருத்தம். இந்த நேரான வழியை விட்டு, இப்பிரச்னையைக் காரணமாகக் கொண்டு எவரும் அண்டை ராஜ்யத்தினருடன், அல்லது வேறு மொழியினருடன் பூசலை வளர்ப்பது எந்தநிலையிலுமே அனுசிதம். அதிலும் தற்போது அவ்வாறு செய்வது ஒரு முதல்தரமான அறிவீனம். நமக்கு ஏற்கெனவேயுள்ள பல பிரச்னைகளுடன் இப்போது புதிதாகவும் சில சங்கடங்கள் தோன்றியிருக்கின்றன. நம் மக்களின் ஒற்றுமையான முயற்சியின் மூலமே நாம் இவற்றை வெற்றிகரமாகச் சமாளிக்க முடியும் என்பது பட்டவர்த்தனம். எனவே பிரச்னை எதுவானாலும் இந்த ஐக்கியத்துக்கு ஊறு ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டிய அவசியத்தை தேச க்ஷேமத்தில் அக்கரைகொண்ட அனைவரும் உணர வேண்டும்.

ஆனால் சென்னை—ஆந்திர எல்லையைப் பற்றிய வரை, அதை ஒழுங்குபடுத்தும் வேலையை ஒத்திவைக்கக் காரணமில்லை. ஆந்திரம் தனியாகப் பிரிந்துவிட்ட நிலையில், அதற்கும் சென்னைக்கும் இடையே தமிழர் பெரும்பாலாக வசிக்கும் ஸ்தலங்கள் பலவும் உடனடியாகத் தமிழகத்துடன் சேர்க்கப்பட்டிருப்பதே நியாயம். இதைச் செய்யத் தவறியதால் வீணாக மனக்கசப்பு வளர்ந்து வருகிறது. குறிப்பாக சித்தூர் ஜில்லாவிலுள்ள ஆறு தாலூகாக்களை காலதாமதமின்றி ஆந்திரத்திலிருந்து பிரித்து சென்னை ராஜ்யத்துடன் இணைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி நாம் ஏற்கெனவே விரிவாக எழுதி யிருக்கிறோம். இது பற்றி அடுத்த மாத மத்தியில் அதிகாரிகள் மகாநாடு ஒன்று நடக்கவிருக்கிறது. அதிலேயே இப்பிரச்னை நிலையாகத் தீரும் வகையில் சென்னை அதிகாரிகள் தேவையான அத்தாட்சிகள் அனைத்தையும் திரட்டி தங்கள் கட்சியை வலியுறுத்துவரென்று எதிர்பார்க்கிறோம்.

காற்றுவாக்கிலே..

காட்டின் ராஜா, மே. த. சிங்கம் அவர்களுக்கு ஒரு நாள் பெரிய சந்தேகம் தோன்றியது. தன்னை அரசனென்று உண்மையாகவே பிரஜைகளெல்லாம் ஒப்புக்கொள்கின்றனரா என்பதுதான் அந்த சந்தேகம். அது உள்ளூர வேலை செய்யச் செய்ய, யாரைப்பார்த்தாலும், அவர்கள் எது செய்தாலும்குத்தலாகவோகுற்றமாகவோ தென்பட்டது.தன் அதிகாரத்தை நிலை நாட்டவேண்டுமென்ற ஆத்திரம் ஒருபக்கம்; 'இருண்டதெல்லாம் பேய்' என எண்ணி, 'மருண்டவன்' பட்டம் பெறலாகாதே என்ற அச்சம் மறு பக்கம்.

டிராமா ராஜபார்ட் மாதிரி தர்பாரில் மந்திரியைக் கூப்பிட்டு 'பிரஜைகள் நடத்தை எப்படி இருக்கிறது' என்று கேட்டால் நிஜம் வெளிவராது என்று அவ நம்பிக்கை. துப்பு துலக்குவதற்காக மாறுவேஷம் அணிவதென்பது முடியாதகாரியம். சரி, வந்தது வரட்டும், ஒவ்வொருவரையும் நேரடியாகவே கேட்டு சந்தேகத்தைப் போக்கிக்கொள்வோம் என்று கிளம்பிவிட்டார் சிங்க ராஜா.

முதன் முதலில் அவர் கண்ணில் தென்பட்டது ஒரு புள்ளிமான். ஓடோடியும் அதன் அருகே சென்றார். 'இந்தக் காட்டின் அரசன் யார்' என்ற கேள்வியை வீசினார். அரசன் பாய்ந்து வருகையிலேயே பதறிப்போன புள்ளிமான் "சந்தேகமென்ன தாங்கள் தான் பிரபோ" என்று சொல்லிக்கொண்டே ஓட்டம் பிடித்தது.

அடுத்து வந்தது ஒரு நரி. அதனிடமும் மன்னாதி மன்னன் கேள்வி போடவே, "என்ன கேள்வி இது" என்று பதிலளித்தது, நமிட்டுச் சிரிப்புடன். 'பின்னே வேறு யார்' என்று சிங்க ராஜா அதட்டவே, 'தாங்கள் ஒருவரே ராஜாதி ராஜனாக இருக்க அருகதை உடையவர்' எனக் குழைந்து பசப்பிவிட்டு, கால்கள் நடுவே வாலை அடக்கமாகச் சொருகிக்கொண்டு நழுவியது.

எதிரே மரக்கிளையில் ஊஞ்சலாடிய குரங்கை அடுத்தபடியாக வினவினார் ராஜா. எதையோ நினைத்து இளித்துக்கொண்டிருந்த வானரத்துக்கு அர்த்தம் அவ்வளவு சீக்கிரம் புரியவில்லை. தலையைச் சொரிந்து, உடலைப் பிராண்டிப் பொருளைப் புரிந்துகொண்ட பின், பற்கள் அனைத்தும் காட்டி, "எல்லாம் தாங்களே என்று விடை. தந்தது, மேல் கிளையை நோக்கிப் பாய்ந்துகொண்டே.

வன அதிபருக்கு உத்ஸாகம் கட்டுக்கு அடங்கவில்லை. ஆனந்தம் பொங்க இருமுறை கர்ஜித்து அடவியை நிலைகுலுங்க அடித்தது. சந்தோஷ மிகுதியால் கம்பீர நடையுடன் பவனி சென்றது தன் வழியே. இவை எதையும் லட்சியம் செய்யாததுபோல எதிரே வந்தது மத்த கஜம். அதை அழைத்து நிறுத்தியது சிங்க ராஜா. வழங்கம்போல, "காட்டுக்கு அரசன் யார்" என்று உரக்கக் கூவிக் கேட்டது. யானை உடனே சட்டென்று பற்றியது சிம்மத்தைத் தன் துதிக்கையால்; தலைக்கு மேலாக மூன்று சுற்றுச் சுற்றி தூக்கி எறிந்தது. க்ஷண நேரத்தில் 'தட்டாமாலை' சுற்றித் தரையில் மோதுண்ட சிங்கத்துக்கு நிலைமையை உணர சற்றே தாமதமாகியது. ஆயினும்உடனே சமாளித்துக்கொண்டு யானையை நோக்கி "இந்தச் சுலபமான கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை; கோபம் மட்டும் பிரமாதமாக வருகிறது" என்று பொய் ரோஷத்தோடு சாடியது.

இந்தக் கதை, சென்னை மந்திரி சபை அமைப்புப் படலத்துக்கு எவ்வளவு தூரம் பொருந்துமென்பதை உங்கள் முடிவுக்கே விட்டுவிடுகிறேன். எனக்கு என்னவோ, அசெம்பிளி மெம்பர்களைக் கூட்டி தேர்தல் நடத்தியது, காமராஜர் டில்லிக்குப் பறந்தது இதெல்லாம் அனாவசியம் என்று தோன்றுகிறது. இந்த எம். எல். ஏ.க்களை பொறுக்கியதும், இனிமேல் பொறுக்கப் போகிறவரும் காமராஜர்தான். அவரே தலைவர் பதவிக்கு நின்றால் வேறு எவர்தான் போட்டியிட்டு ஜெயிக்க முடியும்? ஆனால் அவருக்கு வெற்றி கிடைத்ததேதவிர, ராஜாஜிகோஷ்டியின் பலமும் உறுதிப்பட்டு விட்டதல்லவா? ராஜாஜிக்கிருந்த ஆதரவு இதுவரை திட்டமாகத் தெளிவாகத் தெரியவில்லை. காமராஜர் சொல்படியே அநேகமாக எல்லோரும் கேட்பர் என்று பேசப்பட்டுவந்தது. இப்பொழுதோமூன்றில் ஒரு பகுதியினர் அவரைத் தட்டிக் கேட்கத் துணிந்து நிற்கின்றனர். இவர்களை முற்றிலும் விரோதித்துக்கொள்ள முடியாது.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையைக் கைவிட காமராஜருக்கு இஷ்டமில்லை. ஒரே சமயத்தில் அவர் சட்டசபைக் கட்சித் தலைவராகவுமிருப்பது காங்கிரஸ் மேலிடத்துக்கு இஷ்டமில்லை. டில்லி போவதற்கு முன்பே தெரிந்த விஷயம்தானே இது. புதிதாக என்ன தீர்மானிக்கப்பட்டு விட்டது?

பழையபடி ராஜாஜி ஸ்தானத்தில் யாரைப் போடுவது என்ற குழப்பம். ஸி. சுப்பிரமணியம் ஆதரவாளரைப் பூராவும் சேர்த்துக்கொள்ள முடியாது; முற்றிலும் ஒதுக்க இயலாது. ஆரம்பத்திலேயே இந்தச் சிக்கலை இங்கேயே அவிழ்த்திருக்கலாம் அல்லவா! ஒருவேளை, 'நாட்டுப்பெண் என்ன சொல்வது; நான் சொல்கிறேன்' என்ற கதைமாதிரி முடியுமோ என்னவோ!

—கரூர்.



நடோல் என்ற கிராமத்தில் பட்டப் பகலில் ஐந்து லட்சம் வரை கொள்ளையடித்த கொள்ளைக்காரர்கள், அங்கிருந்த ஒரு போலீஸ் படையையும் மீறி அவர்கள் உடுப்புகளைக் கவர்ந்து சென்றனர்!

—ஜோத்பூர் செய்தி.

'உடுப்புகளைப் பறிகொடுத்த பிரஸ்தாப போலீஸ் மகா வீரர்களின் உடனடித் தேவையைப் பூர்த்தி செய்ய அருமையான கைத்தறிச் 'சேலைகளை' உபயோகித்துக்கொண்டாலென்ன?' என்று கேட்கிறார் இங்கொரு 'புருஷோத்தமர்'!

• • •

வியாபாரிகளுக்கென ஒரு தனிக் கட்சியமைத்து, அடுத்த சட்டசபைத் தேர்தலில் போட்டியிட வேண்டுமென செவ்வாய்ப்பேட்டை நகை வியாபாரிகள் சங்கம் ஒரு யோசனை கூறியுள்ளது.

—சேலம் செய்தி.

அப்படியே இவர்கள் மனோபீஷ்டம் நிறைவேறுமானாலும், ஐக்கிய முன்னணி யமைக்கும் வேட்டைக்காரர்கள் இவர்களிடம் 'பேரம்' பேசிச் சமாளிப்பது என்பது மாத்திரம் முடியாமற் போனால் ஆச்சரியப்படுவதற்கில்லை!

• • •

'கடவுளை நம்புவோம்' என்ற புது ஸ்லோகத்துடன் அமெரிக்க தபால் பில்லை இம்மாதம் வெளியிடப்பட்டிருக்கிறது.

—வாஷிங்டன் செய்தி.

'அணுவுக்குள் அணு'வாய்ப் பரிணமிக்கும் ஹைட்ரஜன் 'பெத்த பெருமா'ளின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கவிருக்குமோ, இந்த புது 'ஸ்லோகம்'?!

• • •

கண்ணில் பூப்படுமானால், இன்ஜக்ஷன் மூலம் அதைக் குறைந்த செலவில் குணப்படுத்தி விடலாம் என்று பிரிட்டிஷ் மெடிகல் ஜர்னல் கூறுகிறது.

—லண்டன் செய்தி.

'பூப்படுமானால் ஒருக்கால் முடியுமோ, என்னமோ? ஆனால் மாதரசிகளின் கண்ணில் தப்பித்தவறிப் புடவை ஏதாவது பட்டுவிட்டால் இந்த ஜம்பம் எல்லாம் கட்டாயம் சாயாது!' என்கிறார் ஒரு குட்டுப்பட்ட கிருஹஸ்தாஸ்ரமி!

• • •



★

செப்பரிய சீர்மைசால் ஜெயசித்தி ரைவருக !
இப்புவியிற் பன்நலனும் இயைந்திடவே நீவருக !
தப்புடையார் செயல்மாற்றத் தகைமையுடன் நீவருக !
எப்பொழுதும் தமிழ்நாட்டார் ஏற்றமுற வேயருள்க !

அருள்கென்று நினைநாடி ஆர்வமுடன் வேண்டுகிறோம்
மருள்இன்றி மாண்புடனே மழைவளமும் நிலவளமும்
இருளற்ற மதியொளியும் ஏற்றமதும் செய்திடவே
பொருள்மிக்கப் புத்தாண்டே புதுமையுடன் நீவருக !

வருகநீ வருகநீ வளஞ்செய்ய வருகநீ
தருகநீ தகவெலாம் தளராமல் ஓங்கவே !
பெருகுமா வாய்மையும் பெருமைசால் தூய்மையும்
திருவுடன் திகழவே தீரமாய் வருகவே !

நீவருதல் பெற்றியாம் நிலையான வெற்றியாம்
நாவருடு தீயசொல் நலியவே நீவருக !
பாவருடு சித்திரைப் புத்தாண்டே நீஎன்றும்
தீவருட லின்றியே திண்மையாய் ஓங்கவே !

நகரில் சர்க்கார் விடும் பஸ்கள் வெகு நேரத்திற்கு ஒருமுறை வருவதையும், அதனால் குறித்த காலத்தில் குறித்த இடத்தை அடைய முடியாமை பற்றியும் மற்றும் பல பிரயாணிகளின் அல்லல்களைப் பற்றியும் விவாதிக்க பஸ் பிரயாணிகள் மகாநாடொன்றைக் கூட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

—சென்னை செய்தி.

மேற்படி மகாநாட்டை நடத்தும் தலைவர், நிர்வாகிகள் முதலியோர் மாநாட்டுத் தினத்தன்று மட்டும் டாக்ஸியிலோ, காரிலோ குறித்த நேரத்திற்கு வந்து தாங்கள் பஸ்ஸில் வராத விஷயத்தைச் சொன்னாலே கூடியிருக்கும் மக்கள் புரிந்துகொள்வது நிச்சயம்!

—தாளம்.

மூன்றும் மணம்

பத்மாவனிதேசிகன்

அந்த அழகான பங்களாவில் 'பெண் தெய்வம்' நடமாடாத குறையைப் பெரிதும் விளக்கிக் காட்டிக்கொண்டிருந்தது அதைச் சூழ்ந்திருந்த பூந்தோட்டம். செறிந்துகிடந்த மலர்கள், தன்னைப் போன்ற மெல்லியாளின் அளக பார ஆசன சுகத்திற்காக ஏங்குவதுபோல வாடி கீழே உதிர்ந்து உலர்ந்துகொண்டிருந்தன. புறத்தழகால் பிறர் கண்களுக்கு விருந்தளித்துக்கொண்டிருந்த அவ்வழகிய பங்களா, உள்ளத்தில் உற்சாகம் குன்றிக்கிடந்தது. வளையல் ஒலியும், கிண்கிணிச் சிரிப்பும், மழலை மொழியும் ஒலிப்பெருக்கி அதனால் ஜீவகளையைப் பரப்பவில்லை. வெறிச்சோடிக்கிடந்த அந்த பங்களாவின் வாசலில் பளபளப்பானதொரு கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய வக்கீல் ராமரத்தினம், ஒருகணம் நின்று சூனிய திருஷ்டியுடன் தமது வாசஸ்தலத்தை நோக்கினார். பிறகு நீண்ட பெருமூச்சுடன் கேட்டைத் தள்ளிக்கொண்டு உள்ளே பிரவேசித்தார். நல்ல உயரத்தையும், அதற்கேற்ற பருமனையும் கொண்டிருந்த அவர் தேகம் திடகாத்திரமாக விளங்கியது. சுருக்கம் விழாத முகமும், உரம் பெற்ற உடலும், அவர் வயதை மறைத்தாலும், வழுக்கைமட்டும் அவர் தலையை வியாபித்துக்கொண்டு அவர் வயதை அம்பலப்படுத்தியது.

பரிசாரகப் பையன் வைத்துவிட்டுச் சென்ற காப்பி, பலகாரங்களை வேண்டாவெறுப்பாக வயிற்றுக்குள் தள்ளிவிட்டு வராந்தாவுக்கு வந்த ராமரத்தினம் குறுக்கும் நெடுக்கும் உலாவத் தொடங்கினார். வாழ்வில் வெற்றி காண முடியாத துயரம் அவர் கண்களில் தேங்கியிருந்தது. எடுப்பான நாசியின் துவாரங்கள் சற்றைக்கொருதரம் விரிந்து நீண்ட பெருமூச்சுக்களை வெளிப்படுத்திக்கொண்டிருந்தன.

ஐச்வரியம் அனைத்தும் ராமரத்தினத்தைத் தழுவி நின்றும் 'இல்' பாக்யம் மாத்திரம் ஏனோ அவருக்கு நிலைக்கவில்லை. இருமுறை விவாகம்செய்துகொண்டும் அவர் வாழ்க்கை 'மொட்டை' மரமாகவே இருந்தது. முதல் மனைவியுடன் சில மாதங்களும், இரண்டாம் மனைவியுடன் கொஞ்ச காலமுமே அவர் வாழ்ந்தார்.

ஏழு வருஷ கால தனிமை அவரை மிகவும் வாட்டி எடுத்தது. இந்த தனிமை விரைவில் தன்னைப் பைத்தியமாக்கி விடுமோ என்று அவர் திகில் கொண்டார்.

சில தினங்களாகவே ராமரத்தினத்தின் உள்ளத்தை ஒருவித சபலம் ஆட்கொண்டிருந்தது. இருதடவை புரிந்து கொண்ட மணத்தில் பெறமுடியாத ஆத்ம திருப்தியை மூன்றாவது மணத்தின் மூலமாவது அடைய முயல வேண்டும் என்ற தீவிரமான ஆசையை அவரால் தவிர்க்க முடியவில்லை. இந்த வயதில் விவாகம் செய்துகொண்டால் ஊர் சிரிக்குமே என்று முதலில் சற்று தயக்கம் கொண்டாலும், அந்தப் பொல்லாத ஆசை 'இதையெல்லாம் சட்டை செய்யாதே! தைரியத்துடன் உன் வழியில் செல்' என்று கட்டளை இட்டது.

உள்ளம் உறுதியடைந்துவிட்டால் வெற்றி தொலைவில் அல்லவே! அவர் வாயசைத்தால் போதும். இதற்கென்றே காத்துக்கொண்டிருக்கும் பல கல்யாண தரகர்கள் போட்டியிட்டுக்கொண்டு அவர் மனோரதத்தை நிறைவேற்ற ஓடிவரமாட்டார்களா?

காம்பவுண்ட் கதவு ஓசைப்படவும், ராமரத்தினம் உலாவுவதை நிறுத்திவிட்டு அந்தப் பக்கம் நோக்கினார். பிரசன்ன வதனத்துடன் வந்து கொண்டிருந்த கணபதி சாஸ்திரிகளைக் கண்டதும் அவர் முகம் மலர்ந்தது. வராந்தாவில் போட்டிருந்த ஒரு பெஞ்சின்மேல் இருவரும் அமர்ந்துகொண்டனர். கணபதி சாஸ்திரிகள் தொண்டையைக் கனைத்துக்கொண்டு ஆரம்பித்தார்.

'பேஷான வரன். இந்த வரனை எப்படியாவது முடித்து விட வேண்டும் என்பது என் ஆசை'

"...."

'பெண் மகாலக்ஷ்மி மாதிரி இருக்கிறாள். பெயர்கூட மகாலக்ஷ்மிதான். இன்னிக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தாலும் சலிப்பு ஏற்படாது. அவ்வளவு ரூபலாவண்யம்.'

'உம்!'

'பதினெட்டு வயசுதானிருக்கும். அழகில் எப்படி மகாலக்ஷ்மியோ அப்படிதான் சங்கீதத்திலும் சரஸ்வதியின் அவதாரமெனலாம்.

'உம்!'

'ஆனால், ஏழைக் குடும்பம். தாய் தகப்பன் கிடையாது. தாய் மாமனிடத்தில்தான் பெண் வளர்கிறாள். பெண்ணை வந்து பாருங்கள். மனசுக்குப் பிடித்துவிட்டால் பாதி கல்யாணம் நடந்த மாதிரி'.

இதுவரை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த வக்கீல் ராமரத்தினம் 'என் வயதைச் சொன்னீர்களோ?' என்று சந்தேகத்துடன் கேட்டார்.

கணபதி சாஸ்திரிகள் புன்னகையுடன் 'அது சொல்லாமலிருப்பேனோ? முப்பத்தி எட்டு வயதுன்னு சொல்லி வைத்திருக்கிறேன்'.

'என்ன! முப்பத்தெட்டு வயதா?'

'பின்னே! உங்களைப் பார்த்தால் நாற்பத்தெட்டு வயதுன்னு சொல்லமுடியுமோ? முப்பது வயதுன்னு சொன்னால் கூட நம்புவார்களே!'

பதினெட்டுப் பிராயத்து இளம் பெண்ணுக்கு ஐம்பது வயதை நெருங்கிக்கொண்டிருக்கும் மனிதன் ஈடாகுமா என்று சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்த அவர் உள்ளம், சாஸ்திரிகளின் புகழுரைகளால் சிறிது தெளிவுற்றது. எதிரில் தெரிந்த நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தை பார்த்துக்கொண்டார். 'அப்படியொன்றும் கிழத்தன்மை வந்துவிடவில்லை; இளமையும் முற்றும் போய்விடவில்லை' என்று திருப்திப்பட்டுக் கொண்டார்.

இடுப்பில் ஜரிகை வேஷ்டி; மேலே விசிறி மடிப்பு அங்கவஸ்திரம்; வெள்ளை சொக்காய், காதில் வைர கடுக்கன், விரல்களில் வைர மோதிரங்கள், நெற்றியில் ஜவ்வாது பொட்டு, இத்தகைய அலங்காரத்துடன் பெண் பார்க்கச் சென்றார் வக்கீல் ராமரத்தினம்.

பெண்ணின் மாமா சுந்தரமூர்த்தி அய்யர் அவரை மிக மரியாதையுடன் வரவேற்றார்.

கூடத்தில் விரிக்கப்பட்டிருந்த பட்டுப்பாயின்மேல் கம்பீரமாக அமர்ந்தார் வக்கீல். அவரருகே கணபதி சாஸ்திரிகள் அமர்ந்துகொண்டார். கொஞ்சம் தள்ளி சுந்தரமூர்த்தி உட்கார்ந்தார்.

'இவாளை யெல்லாம் நமஸ்கரித்துவிட்டுப்போ அம்மா!' என்று சுந்தரமூர்த்தி பெண்ணைக் கூப்பிட்டார்.

மகாலக்ஷ்மி தலைகுனிந்த வண்ணம் அழகாக நடந்துவந்தாள். கைதேர்ந்த சிற்பியால் ஆக்கப்பட்ட பதுமையொன்று உயிர் பெற்று நடந்து வருவதுபோல் இருந்தது. வரிசையாக மூவரையும் நமஸ்கரித்துவிட்டு எழுந்து நின்ற மகாலக்ஷ்மியை கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார் ராமரத்தினம். வெட்கத்தால் முகம் வியர்க்க தலையை மெல்ல நிமிர்த்தி அவரை ஒரு கணம் நோக்கிவிட்டு இமைகளைத் தாழ்த்திக்கொண்ட மகாலக்ஷ்மி, மாமாவின் கட்டளைக்குப் பணிந்து, வீணையை வைத்துக்கொண்டு பாடலானாள்.

வீணையுடன் இழைய மறுத்து, தனியாக கரகரத்து ஒலித்தது அவள் குரல். கண் இரப்பைகள் நனையத் தொடங்கின. உதடுகள் இலேசாகத் துடித்தன. மார்பு விம்மித் தணிந்தது.

மூவரும் இதை கவனித்தார்கள். ஒரு பாட்டுக்குமேல் மகாலக்ஷ்மியால் பாட முடியவில்லை. வீணையை வைத்துவிட்டு எழுந்த அவள், கண்களைத் துடைத்துக்கொண்டு உள்ளே சென்றுவிட்டாள், ராமரத்தினத்தின் முகம் ஒரு தினுசாக மாறியது. இதை கவனித்த சுந்தரமூர்த்தி 'குழந்தை வெகு நேரம் அடுப்பின் கீழ் இருந்ததனால் ரொம்ப களைத்துப் போயிருக்கிறாள். அதுவும் தவிர இரண்டு நாளாய் தொண்டைக்கட்டு, ஜலதோஷம்' என்று கூறி நிலைமையை சமாளித்தார்.

ராமரத்தினமும் மனம் தெளிந்து, திருப்தியுடன் விவாகத்திற்கு நாளைக் குறித்துவிட்டு தமதில்லம் திரும்பினார். இருபத்தைந்து வயது இளைஞனைப்போல் எதிர்காலத்தைப்பற்றி இன்பக் கனவுகள் காண ஆரம்பித்தது அவர் உள்ளம். மகிழ்ச்சிக் கடலில் அவர் மனம் நீந்திக் கொண்டிருந்தாலும் காரணமின்றி ஒருவித பயம் அவரை பீடித்துக் கொண்டிருந்தது. விவாகம் ஒருவித இடையூறுமில்லாமல் நிறைவேற வேண்டுமேஎன்று ஈச்வரனை தியானித்தவண்ணம் இருந்தார். பச்சைக்கிளி மாதிரி இருக்கும் அந்தப் பெண்ணைப் பறக்கவிட அவருக்கு மனமில்லை.

2

அன்று வெள்ளிக் கிழமை. விவாகத்திற்கு வேண்டிய புத்தாடைகளை வாங்க மகாலக்ஷ்மியையும் கூட அழைத்துச் செல்ல, விரும்பினார் ராமரத்தினம்.

'மகாலக்ஷ்மியே கடைக்குவந்து அவளுக்கு இஷ்டமான புடவைகளை வாங்கிக் கொள்ளட்டுமே' என்று அவர் சொன்னபோது சுந்தரமூர்த்தி மறுத்து ஒன்றும் கூறவில்லை. ராமரத்தினம், தமது பெரிய பியூக் காரில், மகாலக்ஷ்மியையும் அவள் மாமாவையும் கடைக்கு அழைத்துச் சென்றார். மகாலக்ஷ்மியை அடிக்கடி கடைக்கண்ணால்நோக்கிக்கொண்டிருந்த ராமரத்தினத்துக்கு, அவள் உற்சாகமின்றி உட்கார்ந்திருப்பது போல் தோன்றியது. ஆனால், அவ்வளவாக அதை அவர் பொருட்படுத்தவில்லை. பளபளப்பான பட்டுப் புடவைகளும், பொன், வைர ஆபரணங்களும் அவள் மனதை மலரச் செய்துவிடும் என்று திடமாக நம்பினார்.

கண்களைப் பறிக்கும் அழகிய ஜரிகைப் புடவைகளை மகாலக்ஷ்மியின் முன் விரித்துப் போட்டான் கடைக்காரன். அவற்றையெல்லாம் அலக்ஷ்யமாக ஒரு முறை நோக்கிய அவள், நேரத்தை விரயம் செய்யாமல் இரண்டு மூன்று புடவைகளைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு புறப்படத் தயாரானாள். புடவைக் கடையில் நுழைந்துவிட்டு இவ்வளவு சீக்கிரம் வெளியேறும் பெண்களும் இருக்கிறார்களா என்று வியப்படைந்தான் புடவைக் கடைக்காரன்.

ராமரத்தினம், அவர்களை அழைத்துக்கொண்டு நகை கடைக்கு விஜயம் செய்தார். தானே ஒரு வைர நெக்லஸை பொறுக்கி எடுத்து 'இதை எடுத்துக்கொள் மகாலக்ஷ்மி, ரொம்ப நன்றாயிருக்கிறது' என்றார். மகாலக்ஷ்மி மௌனமாக ஏற்றுக்கொண்டாள். இன்னும் சில நகைகளை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார்கள். காரை செலுத்திக்கொண்டேமகாலக்ஷ்மியை ஜாடையாக நோக்கினார் ராமரத்தினம். இதை மகாலக்ஷ்மி கவனித்தாள். அவர் மனத்தை ஒருவாறு புரிந்துகொண்ட அவள், தான் மகிழ்ச்சியுடன் இருப்பதாகக் காட்டிக்கொண்டாள். முகத்தைப் பார்த்தே அகத்தின் நிலையை ஆராய்ந்து அறியும் ஆற்றல் படைத்த வக்கீலுக்கு, மகாலக்ஷ்மி உள்ளூர அநுபவித்துக்கொண்டிருக்கும் வேதனை புலப்படாமல் போகுமா? பொன்னாலும், வைரத்தாலும் பெண்ணின் மனத்தை விலைக்கு வாங்கிவிடமுடியாது என்ற உண்மையை அப்பொழுதுதான் அநுபவத்தில் உணர்ந்தார் ராமரத்தினம். அவர் உள்ளத்தில் இருந்த உற்சாகமெல்லாம் எங்கோ ஓடி ஒளிந்தது.

அவரது திடீர் மாறுதலை கவனித்த சுந்தரமூர்த்தி, காரியம் கெட்டுவிடப் போகிறதே என்று திகில் கொண்டார். வீட்டு வாசலில் கார் நின்றதும் 'கொஞ்சம் காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாமே' என்றார்.

ராமரத்தினத்தின் சோர்ந்த உள்ளத்திற்கு அந்த சமயம் சூடான காப்பி தேவையாக இருந்ததால் மௌனமாக காரை விட்டு இறங்கினார். மகாலக்ஷ்மி, காப்பி தயாரிக்க உள்ளே விரைந்து சென்றாள்.

ராமரத்தினம் இருப்புக்கொள்ளாமல் கூடத்தில் குறுக்கும் நெடுக்கும் உலாவத் தொடங்கினார். இந்த விவாகத்தால் தன் வாழ்வு மணம் பெறுமா என்ற சந்தேகம் அவர் உள்ளத்தைக் குடைந்தது. ஒரு இளம் பெண்ணின் உள்ளம், தனக்கு இணையான ஒருவனைத் தேடுமேயன்றி, வயது சென்ற மனிதனிடம் லயிக்குமா? ஆனால், மகாலக்ஷ்மி இந்த ஜன்மத்தில் இளைஞனை மணக்க முடியாது. அதற்கு சக்தி இருந்தால் வயதான புருஷருக்கு அவளைக் கொடுக்க இசைவாரா சுந்தரமூர்த்தி. தான் இல்லாவிட்டாலும் வேறொரு கிழவன்தான் வந்து அவளை மணக்கப் போகிறான். அதற்கு தானே மணந்து கொண்டால் என்ன? முதலில் மகாலக்ஷ்மிக்கு வருத்தமாகத்தான் இருக்கும். ஆனால் எத்தனை நாள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கமுடியும்? நாள் ஆக ஆக மனம் தேறிவிடும்.

இப்படியெல்லாம் அவர் சிந்தனை ஓடிக்கொண்டிருந்தது. வாடியிருக்கும் அவர் முகத்தையே கவலையுடன் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தார் சுந்தரமூர்த்தி. அகஸ்மாத்தாக ராமரத்தினத்தின் திருஷ்டி கூடத்தின் மறுகோடியில் மாட்டியிருந்த ஒரு புகைப்படத்தின்மீது விழுந்தது. அந்தப் படத்தில் இருந்த பெண்மணியின் முகம் எங்கோ பார்த்தமுகமாக இருக்கவும் அருகில் சென்று பார்த்தார். அடுத்த கணம் மின்சாரத்தினால் தாக்குண்டவர்போல துள்ளினார். அந்தப் படத்தையே அவர் வெறித்துப் பார்த்துக்கொண்டிருப்பதைக்கண்ட சுந்தரமூர்த்தி எழுந்து அருகில் வந்து 'இதுதான் என் சகோதரி; மகாலக்ஷ்மியின் தாயார். போய் ஏழெட்டு வருஷமாகிறது' என்றார். ராமரத்தினம் நெற்றிப் பொட்டைப் பிடித்துக் கொண்டு, ஈஸிசேரில் சாய்ந்தார்.

இருபது வருஷங்களுக்குமுன், மாங்குடி என்ற கிராமத்தில் ஒரு மச்சுவீட்டின் அறையில், கடுகடுத்தமுகத்துடன்உலாவிக்கொண்டிருந்த ஒரு யுவனும், ஆத்திரத்துடன் வார்த்தைகளை சாமாரியாகப் பொழிந்தவண்ணம் கண்ணீரும் கம்பலையுமாக நின்று



கொண்டிருந்த ஒரு யுவதியும் அவர் மனக்கண்முன் தோன்றினர், அதைத் தொடர்ந்து சிந்தனை விரிந்தது.

3

ராமரத்தினம் என்ற இளைஞன் அப்பொழுது சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலையில் பி. ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். விடுமுறை நாட்களைக் கழிக்க எப்பொழுதும் போல மாங்குடி கிராமத்திற்கு வந்திருந்த அவன், தன் தாயுடன் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது ஒரு இளம் பெண் கூடத்துக் கதவருகிலே வந்து நின்று கொண்டு 'காப்பிப் பலகாரம் தயாராகி விட்டதம்மா' என்று மெல்லிய குரலில் கூறினாள். அப்பெண்மணி கதவின் மறைவில் நின்றுகொண்டிருந்ததனால் ராமரத்தினத்தின் திருஷ்டிக்குத் தென்படவில்லை. தெளிந்த நீரோடையின் மெல்லிய சலசலப்பைப்போல அந்தப் பெண்ணின் குரல் மாத்திரம் இனிமையாக அவன் காதில் ஒலித்தது.

'இங்கேயே கொண்டு வந்துவிடு ராஜலக்ஷ்மி' என்றாள் ராமரத்தினத்தின் தாயார். ராஜலக்ஷ்மி காப்பி பலகாரத்துடன் வெளிப்பட்டாள். மாநிறந்தான். வாளிப்பான உடல்; களைசொட்டும் முகம்; நீண்டு அடர்ந்த கூந்தல்; அழகுக்கு மெருகு தீட்டும் யௌவனத்தின் தளதளப்பு.

ஒரே கணத்தில் ராமரத்தினத்தின் உள்ளத்தைப் பேதலிக்கச் செய்துவிட்டு உள்ளே மறைந்து விட்டாள் அவ்வழகி. 'இந்தப் பெண் யார்? புதுசாயிருக்கே!' என்று தாயாரைக் கேட்டான் ராமரத்தினம்.

'நம்ம பார்வதியின் பெண்தான். ஒரு வாரமாக பார்வதிக்கு உடம்பு சரியில்லை. இந்தப் பெண்தான் நம்மகத்தில் சமையல் செய்கிறாள். சிறு பெண்ணானாலும் காரியமெல்லாம் பதவிசாக செய்யறது. சமையலும் அமிர்தமா பண்றது. கெட்டிக்காரப் பெண்' என்று அப்பெண்ணைப் புகழ ஆரம்பித்து விட்டாள் அவன் தாயார்.

டவுனில் இருந்து பழக்கப்பட்ட ராமரத்தினத்துக்கு கிராமத்தில் காலம் தள்ளுவது அன்று வரை அவனுக்கு கஷ்டமாயிருந்தது. லீவு எப்பொழுது கழியும் என்று தவியாய்த் தவித்துக் கொண்டிருப்பான். இப்படி ஒரு மோகினி இந்தக் கிராமத்தில் ஒளிந்திருக்கிறாள் என்பது அதுவரை அவனுக்குத் தெரியாது. அம்மோகினியின் தரிசனம் பெற்ற பிறகு வெறும் பட்டிக் காடாகத் தோன்றிய மாங்குடி கிராமம் ஸ்வர்க்கமாக மாறியது. நாட்களெல்லாம் நிமிஷங்களாகப் பறப்பது போலத் தோன்றின. லீவு முடிய இரண்டு மூன்று தினங்களே இருந்தன. ஒருநாள் மாலை ஆற்றங்கரையில் உலாவிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தான் ராமரத்தினம். இந்தக் கிராமத்தையும், கிராம மோகினியையும் விட்டுப் பிரியவேண்டுமே என்ற வேதனையில் அவன் உள்ளம் எதிலும் உற்சாகம் கொள்ளாமல் இருந்தது. அவன் தன் அறையை அடைந்தபோது, விளக்குமார் பிடித்தக் கையுடன் ஏதோ ஒரு படத்தை மெய் மறந்து நோக்கிக்கொண்டிருந்தாள் ராஜலக்ஷ்மி, அது யார் படம் என்றறிய வெகு நேரம் பிடிக்கவில்லை ராமரத்தினத்துக்கு. அவன் மனம் ஆனந்தப் பரவசமடைந்தது. ஓசைப்படாது அவள் அருகே சென்று மிக துணிவுடன் அவள் கரத்தைப் பற்றினான். திடுக்கிட்டுத் திரும்பினாள்அவள். ஆனாள், பதறவில்லை; அவன் பிடியிலிருந்து திமிறவில்லை; ஓட முயற்சி செய்யவுமில்லை. ஆடாமல், அசையாமல், வெட்கத்தால் முகம் சிவக்க தலைகுனிந்தவாறு நின்றாள்.

'ராஜலக்ஷ்மீ!' என்று அவன் குழைவுடன் அழைத்தான். விழிகளை உயர்த்தி ஒருகணம் அவன் கண்களை சந்தித்த அவள் மீண்டும் பார்வையைத் தரையில் பதித்தாள். ஒரு நிமிஷ நேரம் அந்த மோன நிலையில் இருவரும் மெய் மறந்து நின்றனர்.

இதற்குள் கீழே ராமரத்தினத்தின் தாயாரின் குரல் ராஜலக்ஷ்மியை அழைக்கவும், அவள் அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு சிட்டாகப் பறந்தாள்.

ராமரத்தினம் கல்லூரிக்குப் புறப்படும் தினம் வந்தது. அவன் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு சமையலறைப் பக்கம் விழிகளை ஓட்டினான். சமையல் அறையின் ஜன்னலுக்கு அப்பால் ராஜலக்ஷ்மியின் முகம் தெரிந்தது. கண்கள் நீரைப் பொழிந்து கொண்டிருந்தன.

அதற்குப் பிறகு விடுமுறையில் ராமரத்தினம் மாங்குடி கிராமத்திற்கு வரும்போதெல்லாம் ராஜலக்ஷ்மியை ரகசியமாக சந்திக்கத் தவறுவதில்லை. பி. ஏ. முடிந்ததும் அவளை மணப்பதாக அவன் வாக்களித்திருந்தான். அந்த தைரியத்தில்தான் அவள் தன்னை அவனிடம் ஒப்படைத்து விட்டாள்.

பி. ஏ. பரீட்சை எழுதிவிட்டு கிராமத்துக்கு வந்த ராமரத்தினம், ராஜலக்ஷ்மியை மணப்பதற்கு தன் பெற்றோரின் சம்மதத்தைக் கோரி நிற்கவில்லை. எவ்வளவு மன்றாடினாலும் அவர்கள் சம்மதம் கிடைக்காதென்பது அவனுக்கு நிச்சயமாகத் தெரியும்.

முன் ஏற்பாட்டின்படி ராஜலக்ஷ்மியும், அவள் தாயும் உறவினர் ஒருவரின் விவாகத்திற்குப் போவதாகச் சொல்லிவிட்டு அழகர்மலைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அடுத்த நாள் ராமரத்தினம் நண்பர்களுடன் சில இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருவதாகப் பெற்ரேர்களிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினான். ராமரத்தினத்தின் நண்பர்கள் விவாகத்திற்கு ஏற்பாடெல்லாம் தயாராக செய்து வைத்திருந்தனர். நல்ல முகூர்த்தத்தில் முருகன் சந்நிதியில் ராஜலக்ஷ்மியின் கழுத்தில் திருமங்கலியம் அணிவித்த ராமரத்தினம் மாலையும் கழுத்துமாக மணக்கோலத்துடன் ஊர் திரும்பி தம்பதி சகிதமாய் பெற்ரேர்களின் முன் அவர்கள் ஆசீர்வாதத்தை வேண்டி வணங்கி நின்றபோது ஒருகணம் பிரமித்துப் போயினர் அவன் பெற்ரேர்கள். அடுத்த கணம் தாயார் தாடகையாக மாறினாள்; தகப்பனார் நாராயணனின் நாலாவது அவதாரம் எடுத்தார். ஒரே பிள்ளை; அதிலும் பட்டதாரி என்ருல் ஆயிரக்கணக்கில் வரதக்ஷிணையை வாய்கூசாமல் கேட்கலாம். பெரிய இடமாகப் பார்த்து பெண் கொள்ள வேண்டும் என்று அவர்கள் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருக்கையில் ஒரே கணத்தில் அது தவிடுபொடியாகிவிட்டால் அவர்களுடைய கோபம் எல்லைக்கு உட்படுமா? அதுவும் ஒரு சமையற்காரிப் பெண்ணை நாட்டுப் பெண்ணாக ஏற்க மனம் ஒப்புமா? ராமரத்தினம் எவ்வளவு மன்ருடியும் நாட்டுப் பெண்ணை ஏற்றுக்கொள்ள அவன் பெற்ரேர் மறுத்தனர்.

வேறு வழியின்றி மனைவியை அவள் தாயில்லத்தில் விட்டு வைத்தான் ராமரத்தினம்.

"வருந்தாதே ராஜலக்ஷ்மி! ஒரு வேலையைத் தேடிக்கொண்டு உன்னை அழைத்துப் போகிறேன்" என்று மனைவிக்கு ஆறுதல் கூறினான்.

ஆறு மாதம் சென்றது.

ராமரத்தினத்தின் மாமா தன் அருமை மகளுடன் இரண்டு மாத ரஜாவில் தன் தங்கை வீட்டிற்கு வந்தார். அவருக்கு வடக்கே உத்தியோகம். உத்தியோக விஷயமாக பட்டணக் கரைக்கு வரும் போதெல்லாம் தன் தங்கை இல்லத்தில் தங்குவது வழக்கம். அதனால் தன் மாமாவை மட்டும் ராமரத்தினத்துக்குத் தெரியுமேயன்றி அவர் குடும்பத்தில் யாரையும் அவனுக்குத் தெரியாது. அவருடைய மூத்த புதல்வி பவானியை அவன் பார்ப்பது இது தான் முதல் தடவை.

பவானி பார்ப்பவரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அழகி; இன்டரில் படித்துக் கொண்டிருந்தாள். கலகலப்பான சுபாவம். படித்த பெண் ஆதலால் ராமரத்தினத்தைக் கண்டு நாணி ஓடி மறையவில்லை. ஆனல் பெண்மைக்குரிய குணங்களையும் துறந்துவிடவில்லை. அவளிடம் கம்பீரமும் இருந்தது; விநயமும் இருந்தது.

அவளுடைய அறிவுத் திறன்; அழகு, பண்பு, பேச்சிலே வன்மை எல்லாம் ராமரத்தினத்தை திகைக்கச் செய்தன. பவானிக்கும், ராஜலக்ஷ்மிக்கும் எடை போட்டுப் பார்க்க ஆரம்பித்தது அவன் மனத் திராசு. ராஜலக்ஷ்மி கிராமீயப் பெண். அவளுக்குப் படிப்பு வாசனை ஏது? இவ்வளவு அழகாக பேசவோ நடந்து கொள்ளவோ அவளுக்குத் தெரியுமா? அழகு மாத்திரம் இருந்து என்ன பிரயோஜனம்?

வெறும் இனிப்புப் பண்டங்களை மட்டும் மனிதனல் எவ்வளவு புசிக்க முடியும்? அதனல் அவன் பசியாற முடியுமா? கூட உப்பு, காரம், புளிப்பு எல்லாந்தானே தேவையாயிருக்கு. இப்படியெல்லாம் ஓட ஆரம்பித்தது அவன் சிந்தனை. அவன் எண்ணமெல்லாம் பவானியையே சுற்றிச் சுற்றி வந்தது. அவளுடைய தளுக்கான பேச்சும் கிண் கிணிச் சிரிப்பும் அவன் மனத்தை வலைப் போட்டு இழுத்தன.

பவானியுடன் பேசிக்கொண்டிருந்தால் பசியும் பறந்துவிடுமே என்று நினைக்கலானான். ராஜலக்ஷ்மி அவனுக்குப் பாரமாகத் தோன்றினாள். அவசரப்பட்டுக் கொண்டு தவிர்க்க முடியாததொரு பந்தத்தில் மாட்டிக் கொண்டோமே யென்று வருந்தத் தொடங்கினான். கிராம மோகினியை விரட்டி விட்டு இந்த நகரத்து மோகினி அவன் உள்ளத்தை ஆக்ரமித்துக்கொண்டாள்.

ராமரத்தினம் பவானியிடம் மையல் கொண்டு விட்டதை உணர்ந்த அவன் தாயார் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள தவறவில்லை. பவானியை அவனுக்குக் கல்யாணம் செய்து வைக்க முற்பட்டாள். இதை மிகவும் விரும்பிய ராமரத்தினத்தின் உள்ளம் கட்டுக்கடங்காத மகிழ்ச்சியில் தத்தளித்தது. விவாக ஏற்பாடு துரிதமாக நடந்து கொண்டிருக்கும்போது ஒருநாள் ராஜலக்ஷ்மி கோபாவேசத்துடன் ராமரத்தினத்தின் வீட்டிற்கு வந்தாள். அப்பொழுது அவள்



மூன்று மாத கர்ப்பிணி. கண்களில் நீர் வடிய, தலைவிரி கோலத்துடன் கணவன் முன் வந்து நின்று "இது நீதியா? ஏழைப் பெண் என்ற காரணத்தினல்தானே என்னை இப்படியெல்லாம் அலங்கோலப்படுத்துகிறீர்கள்?" என்று கதறினாள். ராமரத்தினம் கோபம் கொண்டவனாய் "ராஜலக்ஷ்மி! நிறுத்து உன் அட்டகாசத்தை. வீணில் தகராறு செய்துகொண்டிருக்காதே. ஏதோ நடந்தது நடந்துவிட்டது. உன்னைக் கைப்பிடித்த தோஷத்துக்காக ஜீவனம்சம் கொடுத்துவிடுகிறேன். எங்காவது போய் பிழைத்துக்கொள்" என்ருன்.

ராஜலக்ஷ்மி அனல் கக்கும் விழிகளால் அவனை நோக்கி "என்ன சொன்னீர்கள்? ஜீவனம்சம் கொடுத்துத் தள்ளிவிடப் பார்க்கிறீர்களா? பணம் படைத்த கர்வத்தில் நீங்கள் என்ன அக்கிரமம் செய்தாலும் உங்களை உலகம் ஒன்றும் கேட்கப்போவதில்லை. ஆனல் தன் சந்நிதானத்தில் ஒரு பேதைப் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டிவிட்டு நயவஞ்சகமாக நழுவப் பார்க்கும் பாதகனை அந்த முருகன் ஒருநாளும் கேட்காமல் விடமாட்டார். உங்கள் ஜீவனம்சத்தைக் கொண்டுவயிறு வளர்க்க நான் அவ்வளவு மானம் கெட்டுப் போய்விடவில்லை. ஒரு பெண்ணின் வாழ்விற்கு உலை வைத்துவிட்டு மற்ருெரு பெண்ணுடன் சுகமாக வாழ முடியும் என்று எண்ணதீர்கள்!" என்று ஏதோ சாபமிடுவது போல கூறிவிட்டு வந்த வேகத்திலே திரும்பிச் சென்ருள். அதற்குப் பிறகு ராஜலக்ஷ்மி அந்த ஊரிலேயே காணப்படவில்லை.

பவானியை மணந்த பிறகு ராமரத்தினம் வக்கீலுக்கு படிக்கலானன்.

கால புத்தகத்தில் ஏழு ஏடுகள் கிழிக்கப்பட்டன. ராமரத்தினத்தின் பெற்ரேர்கள் ஒருவர் பின் ஒருவராய் மடிந்தனர்.

ராமரத்தினத்தின் மறுமண வாழ்க்கை ஆரம்பமான இரண்டு வருஷங்களுக்குள் ராஜலக்ஷ்மியின் சாபம் பலிக்க ஆரம்பித்து விட்டது. க்ஷயரோகத்தின் அறிகுறிகள் பவானியின் உடலில் தோன்றலாயின. நான்கு வருஷ காலம் அவள் உடலை அரித்துத் தின்றுவிட்டு கடைசியில் அவள் உயிரையும் பலிகொண்டு ராமரத்தினத்தை மீளாத் துயரத்தில் ஆழ்த்தியது அந்நோய்.

ராஜலக்ஷ்மியின் சாபந்தானே என்று அவன் நினைத்தான். பவானியின் மறைவுக்குப் பிறகு ராஜலக்ஷ்மியின் நினைவு அவனுக்கு அடிக்கடி வரலாயிற்று. அவளுக்குத் தான் இழைத்த துரோகத்தை நினைத்து நினைத்து மனம் குமுறினான். அவளைக் கண்டுபிடிக்க எவ்வளவு முயன்றும் பலன் இல்லாது போகவே தனிமையின் கொடுமையைத் தாள முடியாது மூன்ரும் மணத்தைப்பற்றி சிந்திக்கத் தொடங்கினான்.

4

மகாலக்ஷ்மி காப்பியுடன் பிரசன்னமானாள்.

ஸார்! ரொம்ப களைத்திருக்கிறீர்கள். இதைக் கொஞ்சம் சாப்பிடுங்கள்" என்று ராமரத்தினத்தின் முன் நறுமணம் கமழும் காப்பியை நீட்டினர் சுந்தரமூர்த்தி. சூடான காப்பி வயிற்றுக்குள் சென்றதும் சிறிது தென்பு உண்டாயிற்று. முகத்தில் முத்து முத்தாக அரும்பிய வியர்வையை அங்க வஸ்திரத்தால் துடைத்துக்கொண்டு "மகாலக்ஷ்மியின் தாய்தான் இறந்துவிட்டாள். தந்தை என்னவானர் என்று தாங்கள் சொல்லவில்லையே!" என்று கேட்டார் ராமரத்தினம்.

"தந்தை உயிருடன்தான் இருக்கிருர். ஆனல் இருப்பிடம் தெரியாது. என் தங்கையின் வாழ்வை குலைத்த அந்தக் கிராதகனின் பெயரை உச்சரிக்க விரும்பாது அவனைப்பற்றித் தங்களிடம்தெரிவிக்கவில்லை" என்ருர் சுந்தரமூர்த்தி.

"அவரை சந்திக்க நேர்ந்தால் அடையாளம் கண்டுகொள்வீர்களா?" என்ருர் ராமரத்தினம்.

"இருபது வருஷங்களுக்கு முன் நான் அவரைப் பார்த்ததுதான். இப்பொழுது எவ்வளவோ உருமாறிப்போயிருக்கலாம். பார்த்தால் அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஏன், அவனை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார் சுந்தரமூர்த்தி.

ராமரத்தினம் தலைகுனிந்து கொண்டு "நான்தான் அந்தப் பாபி. செய்த பாபம் போதாதென்று மேலும் மாபெரும் பாவமொன்றை செய்ய இருந்தேன். நல்லவேளை, கடவுள் காப்பாற்றினர்" என்று கண்ணீர் உகுத்தார்.

ஸ்தம்பித்து நின்ருர் சுந்தரமூர்த்தி.

ஆரூடம்! ஜாதக பலன்!!

ஜனன கால விவரம் அல்லது முழுப் பெயர் சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் தேவை. 1 முதல் 5 எதிர்காலக் கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2.

ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூபா 6. முக்ய யோகாம்சங்களும் சுருக்கமான பலனுடன் ஒரு ஜாதக குறிப்புக்கு ரூ. 6. ஒரு தசைக்கு புக்திவாரி பலன் எழுத ரூ. 10. கிரஹசார தோஷம் நீங்கி, சகல நன்மைகளும் உண்டாவதற்கு "விஜய ரக்ஷணி கவசம்" 1-க்கு ரூ. 7-0-0. பிரத்யேக ரக்ஷை ரூ. 100. வி. பி. செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist.
Triplicane : Madras-5



தேர்தல் வருகுது

★

"நான் உள்ளே வரலாமா?"

அறைக்கு வெளியே இருந்து ஒரு மெல்லிய குரல் ஒருக்களித்து வைத்திருந்த கதவிடுக்கு வழியே உள்ளே வந்தது.

"தாராளமாய் வாருங்கள்" என்று வாய் நிறையக்கூறிவிட்டு, சாரநாதன் நிமிர்ந்தமர்ந்தான். குரலைக் கேட்டுவிட்டு யாரோ மங்கை ஒருத்தி வந்திருக்கிறாள் போல் இருக்கிறது என்றுதான் அவனால் ஊகிக்க முடிந்ததே ஒழிய, அக்குரலின் சொந்தக்காரி அவ்வளவு அழகாய் இருப்பாள் என்று அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. வந்தவள் அவன் எதிரே வந்து நின்று, புன்னகை பூத்தவாறு "உங்களிடம் ஒரு காரியமாக வந்திருக்கிறேன்" என்றாள்.

தான் இருப்பது எங்கேயென்று சாரநாதனுக்குச் சரியாய்ப் புரியவில்லை. அவளது எழில் வீசும் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கலாம் போலத் தோன்றியது. அவள் கும்பிட்டதற்குப் பதிற் கும்பிடு வழங்கிவிட்டு, அவன்

"சொல்லுங்கள், என்ன சமாசாரம்" என்று ஆசையும் ஆர்வமும் பொங்க விசாரித்தான்.

"வேறென்ன? எல்லாம் இந்தத் தேர்தல் விஷயம்தான்!" என்றாள் அந்தப் பெண். சாரநாதன் அப் பேசும் பொற் சித்திரத்தையே பேசாதவாறு பார்த்துக் கொண்டிருந்தான். "நான் ஒரு அபேட்சகியாக நிற்கிறேன்". சாரநாதனுக்குத் தன்னை மீறி குப்பென்று சிரிப்பு வந்துவிட்டது.

"நீங்கள் எதற்குச் சிரிக்கிறீர்கள்"?

"வெறுமனே தான்".

"இல்லை. நீங்கள் சிரித்தது எதற்காக என்பது எனக்குத் தெரியும். சொல்லட்டுமா"?

"சரி, சொல்லுங்கள்".

"நான் அபேட்சகி என்றேனே; அதற்காகத்தான்! இல்லையா?"

"ஆமாம்"

"நானே ரொம்ப நேரம் யோசனைப் பண்ணிப் பண்ணிப் பார்த்தேன். எனக்கு அபேட்சகர் என்பதற்குச் சரியான பெண்பால் சொல் கிடைக்கவில்லை. என் சிநேகிதி ஒருத்தி, என்ன பலமாய் இருக்கிறது யோசனை என்று கேட்டுக்கொண்டே வந்தாள். அவளிடம் கூடச் சொன்னேன். 'அடி அசடே, அபேட்சகர் என்பதற்குச் சரியான பெண்பால் சொல் கிடைக்கவில்லை என்பதனாலேயே, நீ தேர்தலுக்கு நிற்க மாட்டேபோல் இருக்கிறதே. யோசனை பண்ணாமல், அபேட்சகி என்று சொல்லிவை, என்று அவள் சொன்னாள். நானும் இதுவரை எல்லாரிடமும் அப்படித்தான் சொல்லி வந்திருக்கிறேன்".

"அதனால் பரவாயில்லை".

"அதென்னவோ, நம் தமிழில் எழுத்தாளன்—அபேட்சகன் போன்ற வார்த்தைகளுக்கெல்லாம், சரியான பெண்பால் சொற்களைக் கண்டுபிடிக்கவேயில்லை. ஏனோ தெரியவில்லை."

"இப்பொழுதுதானே கொஞ்ச காலமாகப் பெண்கள் இந்த மாதிரியெல்லாம் முற்போக்காய் கிளம்பியிருக்கிறார்கள்!"

"அதுவும் சரியான காரணம் தான்".

அந்த அழகு மங்கை தன் வார்த்தையை ஆமோதித்தது சாரநாதனுக்கு மிகவும் பெருமையாய் இருந்தது. அந்தப் பூரிப்பில், அப்போது அவனுக்கு என்ன பேசுவது என்றே புரியவில்லை.

"சரி, நாழியாகிறது. நான் போகிறேன். ஆமாம், மறந்து விடாதீர்கள். ஞாபகமாய் எனக்கு வோட்டுப் போடவேண்டும்", என்று கூறிவிட்டு, அவள் எழுந்திருந்தாள், நாற்காலியிலிருந்து.

"உங்கள் பெயர், வகுப்பு—வேறு ஒரு விவரமும் சொல்லாமல் கிளம்புகிறீர்களே".

அவள் 'ஓ, மறந்தேவிட்டேன்' என்று வெட்கம் தொனிக்கும் குரலில் கூறியபோது, அவளது முகம் சிவந்து, துடித்ததை சாரநாதன் பார்த்து ரசித்தான்.

"என் பெயர் சரோஜினி. இண்டர் இரண்டாவது வருஷம் படிக்கிறேன்".

"இரண்டாவது வருஷமா?"

சரோஜினி சிரித்துக் கொண்டே, "இரண்டாவது வருஷம்; இரண்டாவது தடவையில்லை" என்றாள்.

"அது தெரியாதா? நானும் இது இரண்டாவது வருஷமா என்றுதான் கேட்டேன்".

"ஏன்"?

"இரண்டாவது வருஷமாய் இருந்தால், காலேஜில் உங்களை எப்படியும் எங்கேயாவது பார்த்திருக்கலாமே. ஆனால், உங்களையோ இப்போதுதானே முதல் தடவையாகப் பார்க்கிறேன். அதனால்தான் கேட்டேன்".

"நான் காலேஜ் விட்டதும், நேராய்க் கிளம்பிவிடுவேன். அவ்வளவாக, வேறெங்கேயும் இருக்க மாட்டேன்".

"தேவலையே".

ரொம்ப பெரிய மனுஷன்போல, அவளைப் பாராட்டியதை நினைத்ததும், அவனுக்கே வெட்கமாய் இருந்தது.

"என்னவோ இப்போதுதான் தைரியமாய், மாணவர் சங்கக் காரியதரிசிப் பதவிக்கு நிற்கிறேன். என் சிநேகிதிகளெல்லாரும் பண்ணிய தொந்தரவைப் பொறுக்க முடியாமலேயே, எப்படியும் இந்த வருஷம் நாமும் தேர்தலுக்கு நின்று விடுவது என்று நிச்சயித்துவிட்டேன்".

"போகும் இடம் எல்லாம், இதைத் தயவு செய்து சொல்லிக் கொள்ளாதீர்கள். என் சிநேகிதிகள் வற்புறுத்தியதன் பேரில், தேர்தலுக்கு நிற்கிறேன். அதனால் எனக்கு வோட்டுப் போடுங்கள் என்று கேட்காதீர்கள்".

சரோஜினிக்கு தலையை தூக்கவொண்ணாமல், வெட்கமும் அவமானமும் வந்து கவிந்து கொண்டன. தான் எப்படி அவ்வளவு சாமர்த்தியமாகப் பேசினோம் என்பதே சாரநாதனுக்குப் புரியவில்லை.

"சரி, உங்களுக்கே போடுகிறேன்".

"ரொம்ப வந்தனம்" எனக் கூறியவாறு, அவள் சம்பிரதாய முறையில் கையெடுத்து வந்தனம் செலுத்தியது அவனுக்கு பரத நாட்டியமாகத்தான் இருந்தது.

"அநேகமாய் எனக்கு வெற்றி கிடைத்தாலும் கிடைக்கலாம் என்று எல்லாரும் சொல்கிறார்கள்".

"ஓஹோ, ரொம்ப சந்தோஷம்".

"பெண்கள் எல்லாரும் நிச்சயம் எனக்குத்தான் வாக்களித்தபடி வோட்டுப் போடுவார்கள். மாணவர்களிலும் பல பேர் எனக்கே போடுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். உங்களைப் போன்றமுற்போக்கு வாதிகளெல்லாம் என்று வைத்துக்கொள்ளுங்களேன்".

"ஏது? திடீரென்று என்னைப் பெரிய முற்போக்கு வாதியாக்கி விட்டீர்கள்?"

"நீங்கள் எனக்கு வோட்டுப் போட ஒப்புக்கொண்டிருப்பது ஒன்றே போதுமே, நீங்கள் முற்போக்கு வாதி என்பதற்கு? சில பேர், குறுகிய மனப்பான்மையுடன், இந்தப் பெண்ணுக்குப் போடுவதா என்று நினைக்கிறார்களே. நாமெல்லோரும் நம் ஆசாமிக்குத்தான் வோட்டுப் போட வேண்டும். ஒரு மாணவன் நிற்கும்போது, எவளுக்கோ எதுக்கு வோட்டுப்போடவேண்டும் என்று நினைக்கிறார்களே சில மாணவர்கள். அவர்களை என்னென்பது?"

"அப்படியும் இருக்கிறார்களா பிரகஸ்பதிகள்?"

"நன்றாய்! சிலபேரிடம் போய்க் கேட்டேன். உங்களுக்குப் போட முடியாது. எங்கள் ஆசாமியே—ஒரு மாணவரே நிற்கிறார். அவருக்குத்தான் போடப்போகிறோம் என்று சொல்லிவிட்டார்கள். பெண் என்ற காரணத்தினால், எனக்குப்போட மாட்டார்களாம் வோட்டு! இது குறுகிய எண்ணம் தானே?"

"நிச்சயம்! அதேபோல், உங்களுக்கே வோட்டுப் போடுவார்கள் என்று குறிப்பிட்டீர்களே—உங்கள் சிநேகிதிகள்—அவர்களது எண்ணமும் குறுகியதுதான். பெண் என்கிற காரணத்தினால், உங்களுக்கே வோட்டுப் போட வேண்டுமா?"

"ஏதேது, என்னைச் சரியாய் மடக்கி விட்டீர்களே".

சாரநாதனின் நெஞ்சும் பெருமையில் பருத்தது.

"மறந்துவிடாதீர்கள். நான் இன்னும் ரொம்பப் பேரைப் போய்ப் பார்க்கவேண்டும். தேர்தல் ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் மூன்று மணிக்கு".

"அதெல்லாம் எனக்குத் தெரியும்".

"உங்களுடைய பரம சிநேகிதர் யாராவது நின்றால் கூட, சளைத்து விடவேண்டாம். தயவு செய்து, உங்கள் வோட்டு எனக்குக் கிடைக்கும்படிப் பார்த்துக் கொள்ளுங்கள்".

"அதெல்லாம் சரி. பயப்படாதீர்கள்."

"நம் பிரின்ஸ்பால்தான் தேர்தல் அதிகாரி. ரகசிய வோட்டு முறைதான்; கைதூக்குகிற முறையில்லை. அதனால், நீங்கள் யாருடைய பொல்லாப்புக்கும் பயப்படாமல், எனக்கு வோட்டுப் போடலாம், தைரியமாய். நீங்கள் எனக்குப் போட்டுவிட்டு, யாரா

வது கேட்டால், 'உனக்குத்தான் போட்டேன்' என்று வேண்டுமானாலும் அந்நண்பரிடம் சொல்லித் தப்பித்துக் கொள்ளுங்கள்".

"ஆனால், நான் என் நண்பன் யாருக்காவது போட்டு விட்டு தேர்தல் முடிந்தபின், நீங்கள்

என்னிடம் வந்து கேட்கும் போது, உங்களுக்குத்தான் போட்டேன் என்று பொய் சொல்லலாமா?"

சாரநாதனது கேள்வி கேட்டு, சரோஜினி மௌனமாகிவிட்டாள். அவள் மேலே பேச முடியாதபடியான கேள்வி ஒன்றைப் போட்டுவிட்டதில், அவனுக்கே பரமதிருப்தி.

"ஆமாம், இவ்வளவு உற்சாகத்தோடு தேர்தலுக்கு நிற்கிறீர்களே. காரியதரிசி ஆனதும் என்னென்ன செய்யப்போகிறீர்கள் என்பதை நீங்கள் இன்னும் சொல்லவில்லையே?" என்று அவளது மௌனத்தைத் தகர்க்க எண்ணி, அவன் அவளிடம் விசாரித்தான்.

சரோஜினி சிரித்தவண்ணம், "அதுதான் எனக்கே தெரியவில்லை, போங்கள்" என்றாள்.

"ஐயையோ, அப்படிச் சொல்லாதீர்கள். வேண்டும் என்றே தான் உங்களிடம் நான் இந்தக் கேள்வியை கேட்டேன். யாராவது கேட்டால், அது மாதிரி சொல்லி வைக்காதீர்கள். வானத்தைப் பிளப்பேன், கடலைக் குடிப்பேன் என்று நீளமாய் ஆரம்பியுங்கள்" என்று அவன் யோசனை கூறினான்.

"சரி, அப்படியே" என்று விடை பெற்றுக்கொண்டு, சரோஜினி கிளம்பிவிட்டாள்.

அவள் சென்ற பின்புதான் சாரநாதன் பழையபடி இவ்வுலகிற்குத் திரும்பிவந்தான். அவள் போகும்போது கதவைச் சாத்தி விட்டுச் செல்லும்போது, கடைசியாக ஒருமுறை கதவிடுக்கு வழியே பார்த்துவிட்டு மறைந்தது அவன் உள்ளத்தே பசுமையாய் இருந்தது. பொதுவாக, அவள் எதிரே, தான் மிகவும் கவர்ச்சிகரமாய் நடந்துகொண்டு விட்டதாக அவனுக்கே ஓர் எண்ணம் ஏற்பட்டுவிட்டது. அவள் மிகவும் அன்பொழுக அவனோடு பேசியது அவனது இவ்வெண்ணத்திற்குத் தூபம் போட்டது.

"ஏண்டா, பழி, உட்கார்ந்து கொண்டிருக்கே? வாடா, இரண்டு பேருமாய்ப் போய், இன்னும் பார்த்துச் சொல்லாதவர்களிடம் எல்லாம், போய்ச் சொல்லிவிட்டு வந்துவிடுவோம்" என்று அழைத்தவாறு யாரோ நண்பன் உள்ளே நுழைந்தபோதுதான், சாரநாதனின் சிந்தனை அறுந்தது.

2

தேர்தல் நடக்குது!

காலேஜ் கூடமே இரண்டாகிக் கொண்டிருந்தது. ஒரே கூச்சலும் கொம்மாளமுமாய் இருந்தது.

கல்லூரி மாணவர் மன்றம் அன்று முதல் சுதந்திர தின விழாவின் போது எங்கும் இருந்தாற்போல், ஒரே கூட்டமும் குதூகலமுமாய் நிறைந்திருந்தது. காரியதரிசித் தேர்தல் வெகு வேகமாய் நடந்து கொண்டிருந்தது. ஒருபுறம் பெண்களின் கூட்டமும், எதிர்ப்புறம் பையன்களின் கூட்டமுமாக இருந்தது.

கல்லூரித் தலைவர் குட்டிப் போட்ட பூனையென—அவர் அப்போது இருந்த தினுசுக்கு, வேறு சரியான உவமை ஏதும் இல்லாததால், இதைத்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது — குறுக்கும் நெடுக்குமாகப் போய்க்கொண்டிருந்தார். வோட்டுப் பெட்டியில் வாக்குச் சீட்டுகள் நிரம்பிக் கொண்டிருந்தன.

பதவிக்குப் போட்டியிட்டவர் இருவர். இருவரும் இரு பாலர். அதனால்தான் அப்போது அவ்வளவு உற்சாகம். கிட்டத்தட்ட இரண்டு அபேட்சகர்களுக்கும் சமமாகவே சென்று கொண்டிருந்தன. அவ்வளவு பேருக்கு நடுவே தான் சரோஜினியும் சாரநாதனும் வெவ்வேறு இடங்களில் நின்று கொண்டிருந்தனர். சாரநாதன் வாக்களித்தபடி சரோஜினிக்கு வோட்டு போட்டுவிட்டு வந்தான்.

என்ன இருந்தாலும், அவளுக்கு வோட்டுப் போட அவனுக்கு அவ்வளவாக மனம் இல்லை. ஏனென்றால், அவளை எதிர்த்து நின்றது வேறு யாருமல்ல; அவனே தான். அவள் வந்து தன்னிடம் பேசிவிட்டுச் சென்று, ஒரு நாழிகைக்கு அப்புறம் சுய நினைவுக்கு வந்தபோதுதான், அவன் தன் பிழையை உணர்ந்தான். மோசம் போய்விட்டேனே என்று எண்ணிக்கொண்டான். அவள்—அந்த அழகி பேசிய பேச்சில் மயங்கி என் வோட்டையும் அவளுக்கு வாக்களித்துவிட்டேனே. அவளுடைய சிரிப்பு ஏமாற்றிவிட்டதே.

இப்படி ஒருபுறம் எண்ணினாலும், அவனுக்கு சரோஜினியின் அழகு மேனியை எண்ணிப் பார்க்கப் பார்க்க நல்லவேளையாகத்தான் அவளுக்கு வோட்டுப் போடுவதாகச் சொன்னோமே என்று தோன்றியது. மறுத்துக் கூறியிருந்தால்—அது—அவளை எவ்வளவு புண்படுத்தியிருக்கும்? இப்போதோ அவள் அவனை பெரிய முற்போக்கு வாதியென்று கூறிப் பாராட்டியதும் அன்றியில் அன்பு கனிந்து வரும் பார்வையினால் நன்றி வேறு செலுத்தி விட்டுச் சென்றிருக்கிறாள்.

என்னதான் இருந்தாலும் அவளுக்கு வோட்டுப் போடும்போது அவனுக்குச் சற்று கஷ்டமாகத்தான் இருந்தது. ஏனென்றால் இரண்டு பேருக்கும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் வாக்குகள் சரிசமமாய்ச் சென்றுகொண்டிருந்தன. அவன் தோற்றுப்போய்விட்டால் அவனைப் பொறுத்தமட்டில் கவலையில்லை. ஒரு பெண் காரியதரிசியாக வந்திருக்கிறாளேயென மகிழும் தன்மை அவனுக்குண்டு.

ஆனால் மற்ற பையன்கள் அப்படி நினைக்க மாட்டார்களே. என்னடா, தோற்றுப்போய்விட்டே ஒரு பெண்ணிடம் என்று பரிகசிப்பார்களே. அதை எண்ணிப் பார்க்கத்தான் அவனுக்கு வருத்தம் தோன்றியது.

இன்னொரு புறம் சந்தோஷம் என்னவென்றால், ஏற்கெனவேயே தன்னை முற்போக்கு வாதியெனப் பாராட்டியிருக்கும் அவள் இப்போது—அதாவது தான் எதிர் அபேட்சகனாய் இருந்தும், அவளுக்கு வோட்டு அளித்ததை அறியும்போது அவள் தன்னைப்பற்றி எவ்வளவு பெருமையாய் எண்ணுவாள்?

இவ்வாறு சாரநாதனது உள்ளம் தடுமாறிக்கொண்டிருக்கும் போது தேர்தல் மிகவும் மும்முரமாகச் சென்றுகொண்டிருந்தது. இடையிடையே சாரநாதனுடைய சகாக்கள் அவனுக்கு வந்து, வந்து ஏதாவது சொல்லிக் கொண்டிருந்தனர். கடைசியில் ஒருவாறு எண்ணுவது தொடங்கியது. பிரின்ஸ்பால் உட்கார்ந்து எண்ணிக்கொண்டிருந்தார். அவருக்கு இரண்டு அபேட்சகர்கள் சார்பிலும் இரண்டிரண்டு பேர் தத்தம் கட்சிச் சீட்டுகளாகப் பிரித்துப் பிரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

சாரநாதனுக்கு மனம் பக்பக்கென்று அடித்துக்கொண்டது. 'டேய், அவளுக்கு நூற்றி நாலு. உனக்கு நூறுதான்' என்று ஒரு நண்பன் வந்துகூறினான். அதைக் கேட்டதும் சாரநாதனுக்கு மூர்ச்சை போட்டு விடும்போல் இருந்தது. அதற்குள் இன்னொருத்தன் வந்து 'அவளுக்கு நூற்று முப்பது தான்; உனக்கு நூற்றைம்பது வந்துவிட்டது' என்று கூறினான். சாரநாதனுக்கு சென்ற மூச்சு மீண்டும் வந்தது. அவனுக்குத் தன்னையறியாமலேயே 'ஐயோ, பாவம், அந்தப் பெண். நாமாவது தோற்றுப்போனால் ஜாஸ்தி வருத்தப்படமாட்டோம். அவள் ரொம்ப மனசைக் கஷ்டப்படுத்திக்கொள்வாள். பாவம்' என்று தோன்றியது.

'டேய், அவள் முந்திவிட்டாளடா' என்று சொல்லிக்கொண்டு அடுத்தவன் வந்தபோதுதான் அவனுக்குச் சற்று மன நிம்மதி ஏற்பட்டது. வந்தது வரட்டும் என்று அவனுக்குத் தோன்றிப் போய்விட்டது. தோற்றுப்போனாலும் பரவாயில்லை. ஏனென்றால் அப்படியும் அவனுக்கு அவளோடு நெருங்கிப் பழகச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924

பிரபல ஜோதிஷர்

★

மஹாராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ.2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

★

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

தபோநிதி

தியாகராயநகர், மதராஸ்-17

தபால் பெட்டி 1417.

இது எப்படி என்றால், அவள் வென்று விட்டால் காரியதரிசி யாகிவிடுவாள். அடுத்து வந்தவன் என்ற முறையில் அவன் உதவிக் காரியதரிசியாக ஆகிவிடுவான். ஆக, எப்படியும் அவளுடன் பழகவும் பேசவும் சந்தர்ப்பம் இனிமேல் அடிக்கடி கிடைக்கும் என்று நினைத்தபோது, அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியாய்த்தான் இருந்தது.

"டேய். கடைசிக் கௌண்டிங்

முடியப்போகிறது. இதோ முடிவு தெரிந்துவிடும்" என்று ஒருவன் சாரநாதனைப் பிடித்து இழுத்துக்கொண்டு சென்றான். கல்லூரித் தலைவர் எண்ணி முடித்துவிட்டார். அவர் எண்ணி முடித்ததுதான் தாமதம், உடனே எல்லோரும் தலைக்குத்தலை 'ஸைலன்ஸ்' எனக் கூவியதில் ஒரு நிமிஷம் வீண் ஆயிற்று.

"சரோஜினி தேவி இருநூற்றைந்து. சாரநாதன் இருநூற்று நான்கு. ஆகவே ஜயித்தவர் சரோஜினி தேவி" எனக் கூறி நிறுத்தியதும், பெண்கள் பக்கத்திலிருந்து பலத்த கரகோஷம் எழுந்தது. சாரநாதன் ஒருவன்தான் பையன்கள் கட்சியில் கை தட்டினான். அவனுக்கு அப்போது தன் மனதில் என்ன உணர்ச்சி—சந்தோஷமா, வருத்தமா?—எது உந்திக்கொண்டெழுந்து நின்றது என்பது புரியவில்லை

அவன் எதிர்பார்த்தபடி சரோஜினி அவனுடைய அறைக்கு வந்தாள்.

"ரொம்ப ரொம்ப வந்தனம் உங்களுக்கு" என்று நாக்குழறக் கூறிக்கொண்டே அவள் உள்ளே நுழைந்தாள்.

"என் இருதயபூர்வமான வாழ்த்துக்கள்" என்றான் சாரநாதன்.

"நீங்கள் வோட்டுப் போடாதிருந்தால், நான் தோற்றுப் போய் இருப்பேன். நீங்கள் போட்ட அந்த ஒரு வோட்டினால் தான் நான் ஜயித்தேன். நீங்கள் தன் வோட்டை உங்களுக்கே போட்டுக்கொண்டிருந்தால், என் கதி என்ன ஆகியிருந்திருக்கும், பாருங்கள்!"

"ஏன், அப்படிப் பார்த்தால் இப்போது என் கதி என்ன ஆகிவிட்டது? நான் ஜயித்திருந்தால் மாணவர் சங்கத்தின் நோட்டீஸ்களில் முதலில் என் பெயரும், கீழே உங்கள் பெயரும் இருந்திருக்கும். இப்போது அதற்குப் பதிலாக உங்கள் பெயர் முதலிலும் என் பெயர் அடுத்தும் இருக்கப்போகிறது, சரோஜினி சாரநாதன் என்று. அவ்வளவுதானே?"

'சரோஜினி சாரநாதன்' என்று அவன் கூறியதும் அவள் என்ன நினைத்துக்கொண்டாளோ, 'சட்' டென்று ஒரு நிமிஷம் தலைகுனிந்துகொண்டாள். அவனும் அதை கவனித்தான்.

"நான் எப்படியோ காரியதரிசியாக-வேண்டுமானால்காரியதரிசினியாக என்று வைத்துக் கொள்ளுங்கள்—வந்து விட்டேனே ஒழிய எனக்கு இதுமாதிரி விஷயங்களில் அதிகப் பழக்கம் கிடையாது. நீங்கள்தான் எனக்கு உதவி செய்யவேண்டும்".

"அதற்குத்தான் இருக்கிறேனே நான், உதவிக் காரியதரிசி என்றே பெயர் வைத்துக் கொண்டு."

"ஆமாம், உங்கள் உதவியினால் தான் நான் ஏதும் செய்யமுடியும். வேண்டுமானால் இரண்டொரு ஸ்திரீ பிரமுகர்களைப் பேச நான் அழைத்துக்கொண்டு வரலாம். நீங்கள்தான் மேயர், ஹைகோர்ட் ஜட்ஜ், மந்திரிகள் எல்லாரையும் பிடித்துக்கொண்டு வரவேண்டும். நான் ஒரேயடியாக ஸ்திரீகளாகப் பார்த்துப் பேசக் கூட்டிக்கொண்டு வந்தால், உங்கள் நண்பர்களெல்லாம் அப்புறம் என்னைக் குறைகூற ஆரம்பித்து விடுவார்கள்."

"அதுதான் இல்லை. ஸ்திரீ பிரமுகர்களை அழைத்து வாருங்கள். என் சிநேகிதர்கள் அவ்வளவு பேரும் வந்துவிடுவார்கள்."

"அதையெல்லாம்பற்றி இப்போது அவசரம் இல்லை; பின்னால் பார்த்துக்கொள்வோம். நீங்கள் முதலில் இப்போது என் நன்றியை ஏற்றுக்கொள்ளுங்கள்."

"எதற்கு?"

"அதுதான் எனக்கு நீங்கள் வோட்டுப் போட்டதற்குத்தான்."

"நீங்கள் முதலில் என் வாழ்த்தை ஏற்றுக்கொள்ளுங்கள்."

"ஏன், ஒரே வோட்டு அதிகம் பெற்று ஜயம் பெற்றேனே, அதற்காகவா?"

"அதற்காக இல்லை. நீங்கள் ஒரு ஸ்திரீயாக இருந்துகொண்டு தைரியமாக என்னை எதிர்த்து நின்று ஜயித்தீர்களே, அதற்கு! அதுமட்டும் அல்ல. ஒரு மாணவி மாணவன் ஒருவனைத் தோற்கடித்து விட்டாள் என்பதோடல்ல; இண்டர் வகுப்பில் படிப்பவர் ஒரு பி. ஏ.க்காரரை வென்றுவிட்டார் என்பதற்கும் சேர்த்துத் தான் என் வாழ்த்து!

சாரநாதனின் புகழ்ச் சொற்களைக் கேட்டுத் திணறிப்போய் விட்டாள் சரோஜினி. 'வந்தனம்' எனக் கூறிவிட்டு, அவள் விடைபெற்றுக்கொண்டாள்:

(தொடரும்)

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயாகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக்கண்டு ஏமாறுதீர்

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,
19, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 85254.
கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

98071 லாட்டரி டிக்கட்

வி. நடராஜன்

மார்க்கசகாய முதலியார் சென்னையில் பங்களா வாங்கிக்கொண்டு குடியாக அமர்ந்து ஆறு மாதங்களாயின. அவர் மகள் சுபத்ரா பெண்கள் கலாசாலையில் பி. ஏ. வகுப்பில் படித்திருந்தாள். தந்தை சென்னையில் குடித்தனம் தொடங்கியவுடன், அவளும் ஹாஸ்டல் வாழ்க்கையை விட்டு தந்தையுடன் வசிக்கத் தொடங்கினாள். மனைவி இறந்த பிறகு தன் ஒரே மகளை உயர்தரப் படிப்பிற்கு அனுப்பியது முதலியாரது பெரிய சீர்திருத்தமாகும். வீட்டில் அவளுக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் செய்து கொடுப்பதில் முனைந்தார். முக்கியமாக மேஜை நாற்காலி ஷெல்ப் பீரோ என்று பலவித மரச்சாமான்களை ஏலம் எடுத்து வாங்கி வருவதில் அவர் கொஞ்சமேனும் சளைப்பதில்லை. ஒருநாள் ஒரு அழகிய அலமாரியை இவ்விதம் ஏலத்தில் வாங்கினார். கூலியாட்களைப் பேசி அதைத் தூக்கும்படி சொல்லிக்கொண்டிருக்கும்போது ஒரு வாலிபன் அவசரமாக ஓடிவந்து கடைக்காரனிடம் அந்த அலமாரியைப்பற்றி விசாரித்தான். அதை விற்றுவிட்டது என்று அறிந்தவுடன் முதலியாரிடம் பரபரப்பாக வந்து "ஐயா! இந்த அலமாரியை நீர் வாங்கிவிட்டீரா?" என்று வினவினான். அவர் அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, வாய்திறவாமல் 'ஆம்' என்பதற்கு அடையாளமாகத் தலை அசைத்துவிட்டுக் கூலியாட்களைத் துரிதப்படுத்தினார். "மிகவும் பழையதான இந்த அலமாரியைவிடப் புதியது ஒன்று வாங்குவது நல்லது" என்றான் வாலிபன். அவனுடன் மேலும் பேச்சுவளர்க்க இஷ்டமில்லாதவராய் முதலியார் கூலியாட்களைப் பின் தொடர்ந்தார். ஆனால் வாலிபன் விடுவதாயில்லை. அவருடன் நடந்துகொண்டே, "ஐயா! உமக்கு மூன்றுமடங்கு அதிக விலை கொடுக்கிறேன். இந்த அலமாரியை எனக்கு விற்றுவிடும். வேறு புதியது வாங்கிக்கொள்ளும்".

முதலியாருக்குக் கோபம் வந்துவிட்டது. "முடியாது, தம்பி! எனக்கு இதுவே வேண்டும்" என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டு வேகமாக நடந்தார். இனியும் தொந்தரவு செய்தால் போலீஸ்காரனிடம் புகார் செய்வதாகப் பயமுறுத்தினார். வாலிபனும் திரும்பிவிட்டான். வீடு சேர்ந்தவுடன் முதலியார் தன் மகளுக்கு அந்த அலமாரியைப் பற்றிய கதையைச் சொன்னார். "அலமாரி மிகவும் நன்றாயிருக்கிறது. இதை மூன்றுமடங்கு அதிக விலை கொடுத்துவாங்க அவன் ஏன் துடித்தான்!" என்று சுபத்ரா ஆச்சரியப்பட்டாள். தன் புத்தகங்களையும் நோட்டுப் புத்தகங்களையும் அலமாரித் தட்டுகளில் அடுக்கிவைத்தாள். ஒரு டிராயர் அறையில் முதலியாரது கடிதங்களையும் பேப்பர்களையும் வைத்தாள். பிறகு அலமாரியை நன்கு சோதித்தாள். அப்படி ஒன்றும் அதிசயப்படத்தக்க விஷயங்கள் இல்லை எனினும் இதில் ஏதோ அதிர்ஷ்டம் இருக்கவேண்டும், இல்லாவிடில் அந்த வாலிபன் இதையே வாங்க ஆசைப்படுவானேன் என்று யோசித்தாள். ஒன்றும் விளங்கவில்லை.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அந்த அலமாரி மாயமாய்த் திருட்டுப் போய்விட்டது. அன்று மாலை முதலியாரும் சுபத்ராவும் கடற்கரைக்கு உலாவச் சென்றிருந்த சமயம் ஒரு ஆள் இன்னொரு அலமாரியுடன் வந்து வீட்டிலிருந்த அலமாரியை எடுத்துக்கொண்டு தான் கொண்டுவந்த அலமாரியை வைத்துவிட்டுச் சென்றான். கடையிலிருந்து புதிய அலமாரியை முதலியார் வாங்கி அனுப்பியதாகவும், அதை வைத்துவிட்டு பழைய அலமாரியை எடுத்துவரச் சொன்னதாகவும் வீட்டு வேலைக்காரியிடம் அந்த ஆள் சொல்லவே, அவளும் சரிதான் என்று பழைய அலமாரியைக் கொடுத்துவிட்டாள்!

வெளியிலிருந்து திரும்பி வந்த முதலியார் இச்செய்தி கேட்டவுடன் மிகவும் கோபமும் ஆச்சரியமும் அடைந்தார். சுபத்ராவோ அவசரமாகத் தன் புத்தகங்கள் எல்லாம் என்னவாயின எனத் தேடினாள். ஆனால் அவைகள் எல்லாம் புதிய அலமாரியில் வைக்கப்பட்டிருந்தன. டிராயரைத் திறந்து பார்த்தாள். கடிதங்களும் பேப்பர்களும் இருந்தன.

"அப்பா! அந்த அலமாரியை நீங்கள் வாங்கின போதே இன்னொருவன் வேண்டுமென்றான் அல்லவா? அவனேதான் இப்போது வந்திருக்கிறான்". அன்றைய தினம் தன்னுடன் பேசிக்கொண்டு தொடர்ந்துவந்த வாலிபனைப் பற்றிய ஞாபகம் முதலியாருக்கும் வந்தது.

"ஆம்! அவன்தான் இந்த வேலையைச் செய்திருக்கவேண்டும். நான் போலீஸில் ரிப்போர்ட்டு செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு முதலியார் வெளியே சென்றார். போலீஸ் ஸ்டேஷனில் அலமாரியைப் பற்றிய கதையையும் அந்த வாலிபனது அடையாளத்தையும் தெரிவித்தார். போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் ஒரு ரிபோர்ட்டு எழுதிக்கொடுத்தார். "கூடிய சீக்கிரம் அந்த ஆளைப்பற்றிய தகவல் கிடைக்கும், உமக்குச் சொல்லி அனுப்புகிறேன்" என்று இன்ஸ்பெக்டர் உறுதி கூறவும் முதலியார் வீட்டுக்குத் திரும்பினார்.

அலமாரி திருட்டுப் போய் இரண்டு மாதங்கள் ஆயின. ஒரு நாள் காலை 'சுதேசமித்திரன்' பேப்பர் வாசித்துக்கொண்டிருந்த முதலியார் மிகவும் பரபரப்புடன் சுபத்ராவைக் கூப்பிட்டார். அவளும் ஓடிவந்தாள்.

"சுபத்ரா! இதோ பார்! டெர்பி குதிரைப் பந்தய லாட்டரி ரிஸல்டுகள் வெளியாகிவிட்டன. நான் பத்து ரூபாய்க்கு ஒரு டிக்கெட் வாங்கியிருந்தேனே! அதன் நம்பர் என்ன?"

"ஓஹோ! உங்களுக்குப் பிரைஸ் வந்திருக்கா?" என்று கேட்டுக்கொண்டே அவளும் அவசரமாக டயரியை எடுத்துவந்தாள். அதில் தேடிப் பார்த்தாள்.

"இதோ குறித்து வைத்திருக்கிறேன். 98071 நம்பர்".

"பலே! அந்த நம்பருக்குத்தான் பிரைஸ்".

சுபத்ராவும் பேப்பரைப் பார்த்தாள். "ஆம்! அப்பா! உங்கள் டிக்கெட்டுக்குத்தான் முதல் பிரைஸ்! பலே!" என்று சந்தோஷமாகக் கூச்சல் போட்டாள்.

"சரி! இன்று மாலை அந்த ஏஜெண்டு ஆபீசுக்குப் போக வேண்டும். பிரைஸ்பணம் லட்ச ரூபாய். ஏதோ உன் அதிர்ஷ்டம் தான் சுபத்ரா! நீதானே வாங்கச் சொல்லி கட்டாயப்படுத்தினாய்"

"டிக்கெட் நம்பரை மாத்திரம் நான் குறித்து வைத்தேன். டிக்கட் உங்களிடம் தானே இருக்கிறது".

"ஆம்! அந்த டிக்கட் சீட்டை ஒரு கவரில் போட்டு ஜாக்கிரதையாக வைத்தேன். எங்கே வைத்தேன்?"

"அந்த அலமாரி டிராயர் அறையில்தான் உங்கள் கடிதங்கள் பேப்பர்கள் எல்லாம் வைத்தேன்" என்று சொல்லிவிட்டுச் சுபத்ரா ஓடினாள். "எந்த அலமாரியில்?" என்று கேட்டுக்கொண்டே முதலியாரும் எழுந்துவந்தார்.

புதிய அலமாரியில் சுபத்ரா தேடினாள். டிராயர் அறையில் இருந்த எல்லாப் பேப்பர்களையும் எடுத்துப் போட்டாள். முதலியாரும் அவைகளைப் பிரித்துப் பார்த்தார். லாட்டரி சீட்டு இருந்த கவர் மாத்திரம் காணப்படவில்லை.

"அப்பா! அந்தப் பழைய அலமாரி டிராயரில் உங்கள் பேப்பர்கள் எல்லாம் வைத்திருந்தேன். அதைக் கொண்டுபோன அந்த ஆள் அந்த பேப்பர்களையெல்லாம் இந்தப் புதிய அலமாரியில் வைத்து இருக்கிறான். ஆனால்..."

இந்த லாட்டரி சீட்டு மாத்திரம் அந்தப் பழைய அலமாரியுடன் எடுத்துப் போய்விட்டான்".

முதலியார் அழுதுவிட்டார். கைக்கெட்டியது வாய்க்கு அகப்படவில்லையே என்று கதறினார்.

"அந்தப்பயல் இந்த லாட்டரிச் சீட்டையே கண் வைத்துத் திருடிக்கொண்டு போயிருக்கிறான்".



"அது எப்படி? அவன் அலமாரியைத்தான் தேடி வந்திருக்கிறான். லாட்டரிச் சீட்டு இதில் வைத்திருப்பது அவனுக்குத் தெரியாதே".

தந்தையும் மகளும் பலவிதமாக யோசனை செய்தார்கள். டிக்கெட் கொடுக்காமல் நம்பர் மாத்திரம் சொன்னால் பிரைஸ் பணம் கொடுப்பார்களா? அதெப்படிக் கொடுப்பார்கள்? யார் வேண்டுமானாலும் நம்பர் சொல்லமுடியாதா? ஒருவிதமாக ஏதோ சாப்பிட்டுவிட்டு, இருவரும் உடனே ஏஜெண்டு ஆபீஸுக்குச் சென்றார்கள். ஏஜெண்டுக்கு அப்போதுதான் தந்தி வந்திருந்தது.

"98071 நம்பர் டெர்பி லாட்டரிச் சீட்டு என்னிடம் இருக்கிறது—அருமைநாயகம்" என்று கண்டிருந்த அந்தத் தந்தியை முதலியாரிடம் காட்டினார் அந்த ஏஜெண்டு.

"சார்! அவன் திருடன். என்னிடமிருந்த டிக்கெட்டை அவன் தந்திரமாக எடுத்துப் போய்விட்டான். அவனுக்குப் பணம் கொடுக்கக்கூடாது" என்று முதலியார் படபடப்பாகப் பேசினார். ஏஜெண்டு சிரித்தார். முதலியாருக்குக் கோபம் பெருகியது.

"ஏன்! வீணாகக் கோபம் கொள்கிறீர்? அவன் உம்மிடமிருந்து லாட்டரிச் சீட்டைத் திருடினான் என்று ரூபிக்கவேண்டும்". முதலியார் ஸ்தம்பித்து அசந்து உட்கார்ந்துவிட்டார். அவருக்கும் இந்த சிக்கலான வியவகாரம் இப்போது சற்று விளங்கியது. ஏஜெண்டிடம் என்னென்னவோ பேசினார். அலமாரி திருட்டுப்போன விவரமெல்லாம் அறிவித்தார். ஆயினும் என்ன பிரயோசனம்!

"ஐயா! இதில் என்னால் ஒன்றும் செய்யமுடியாது. உமக்கு வேணுமானால் நான் ஒரு உதவி செய்யலாம். டிக்கெட் திருட்டுப் போனதாகப் புகார் வந்திருக்கிறது என்று தாமதம் செய்யலாம். நீர் எப்படியாவது அதைக் கொண்டு வாரும். அல்லது அந்தப் பேர்வழி உம்மிடமிருந்து திருடினான் என்று ருசுப்படுத்தும்" என்று ஏஜெண்டு சொல்லி அவர்கள் இருவரையும் அனுப்பினார்.

என்ன சங்கடமான நிலைமை! அந்தச் சீட்டை அலமாரியில் வைத்தது, அலமாரி திருட்டுப் போனது, அந்தச் சீட்டுக்கே முதல் பிரைஸ் விழுந்தது—இவையெல்லாம் எதிர்பார்த்தவைகளா? போனால் போகிறது நமது சீட்டுக்குப் பிரைஸ் விழவில்லை என்று எண்ணிச் சும்மா இருந்துவிட்டால் என்ன? அப்படியும் மனது கேட்கிறதா? அடடா! என்ன துரதிர்ஷ்டம்! அந்தச் சீட்டுக்குப் பிரைஸ் விழாமலிருந்தால் அலமாரி திருட்டுப் போனதைப்பற்றி முதலியார் அவ்வளவு வருத்தப்பட்டிருக்கமாட்டார். ஆயினும் அலமாரியில் லாட்டரி சீட்டு இருக்குமென்று தெரியாமலே அந்த ஆள் அலமாரியைத் திருடியிருக்கவேண்டும். அந்த அலமாரியில் ஏதோ விசேஷம் இருக்கும். பிறகு தற்செயலாக அந்தச் சீட்டை அலமாரியில் கண்டிருக்கவேண்டும். தன் நண்பர் வக்கீல் ஒருவரையும் முதலியார் கலந்து ஆலோசித்தார். லாட்டரி சீட்டு முதலியார் பெயருக்கு விற்பனைசெய்யப்பட்டிருப்பதால், சீட்டு திருட்டுப் போய்விட்டதாகவும், அந்தச் சீட்டைக் கொண்டு வருபவனுக்குப் பணம் கொடுக்கக் கூடாதென்றும் முதலியார் ஆட்சேபித்து ஒரு ரிபோர்ட்டு எழுதி அனுப்பினார். அந்த சீட்டு கொண்டு வருபவன் அது எவ்விதம் தன்னிடம் கிடைத்தது என்று திருப்திகரமாக விளக்கம் செய்யவேண்டுமென்றும் வக்கீல் நண்பர் குறிப்பிட்டது முதலியாருக்கு ஒருவிதத்தில் ஆறுதலாக இருந்தது. ஆனால் இந்தத் தகராறு ஏற்பட்டதன் பலனாக பிரைஸ் பணம் ஒருவருக்குமே கிடைக்காமல் போய்விடுமோ என்ற சந்தேகமும் ஏற்பட்டது.

இவ்விதம் ஒருவாரம் சென்றது, ஒருநாள் காலை முதலியார் வீட்டில் ஒரே பரபரப்பு காணப்பட்டது. அவர் மகள் சுபத்ரா எங்கோ திடீர் என்று போய்விட்டாள். முதலியாருக்கு ஒரு விஷயமும் விளங்கவில்லை. பேரிடி விழுந்தவர்போல ஏக்கமுற்று உட்கார்ந்திருந்தார். மேஜையின் மீது ஒரு கடிதம் இருந்தது.

"லாட்டரிப் பணம் விஷயமாக மேல் நடவடிக்கை ஏற்பாடு செய்ய இன்று மாலை 7 மணிக்கு கலசமால் சமீபம் வந்தால் பேசலாம். நீர் கேவலமாக நடந்துகொள்ளாமலிருக்கும் பொருட்டு உமது மகள் ஜாமீனாக இருக்கிறாள்". வேறு வழியின்றி முதலியாரும் அவ்விதமே ஒப்புக்கொண்டார்.

* * *

இரண்டு மாதங்களுக்குப் பிறகு முதலியாரை நாம் மறுபடியும் அவர் பங்களாவில் பார்க்கிறோம். அவர் மகள் சுபத்ராவும் அவள் கணவர் அர்ஜுன முதலியாரும் குறுக்கெழுத்துப் போட்டியில் முதல் பிரைஸ்பற்றி சர்ச்சை செய்து கொண்டிருக்கிறார்கள்.

"என்ன! மாப்பிள்ளை! இந்தப் போட்டி பிரைஸ் மோகம் இன்னும் விட்டபாடில்லையா?"

"அது எப்படிவிடும்? முதல் போட்டியில் வெற்றி பலன் எனக்கு சுபத்ரா கிடைத்தாள்" என்று நகைத்தான்.

"அது எல்லாம் சரி! அந்த அலமாரியில் என்ன அதிசயம்? அருமைநாயகம் அதை தேடித் திருடுவானேன்?"

மிஸ்டர் அர்ஜுன முதலியார் சிரித்தார்.

"அதுதானே ஆச்சரியமானது. அருமைநாயகம் எனக்கு புதுச்சேரியில் சிநேகமானவர். அவர் பழைய சாமான்களைச் சேகரிப்பதில் ஆர்வம் உள்ளவர். இந்த அலமாரி பச்சையப்ப முதலியார் உபயோகித்ததாம். அதைத் தேடி அலையும்போது நீங்கள் அதை வாங்கிவிட்டீர்கள். சுபத்ராவும் நானும் கலாசாலையில் பழகி வருவதை நீங்கள் தடுத்துவிட்டீர்கள். உங்களிடமிருந்து அலமாரியை எடுத்து வந்தவுடன் அருமைநாயகம் இந்த லாட்டரிச் சீட்டைக் கண்டான். உடனே நாங்கள் இருவரும் ஒரு ஏற்பாடு செய்தோம். சுபத்ராவும் சம்மதித்தாள். இந்த லாட்டரிச் சீட்டுக்கு நல்ல அதிர்ஷ்டம். அருமைநாயகத்திற்கு அலமாரியும் அரை லட்சம் ரூபாயும் கிடைத்தன. சுபத்ராவுக்கு அரை லட்ச ரூபாய் ஸ்ரீதனம் கிடைத்து. எனக்கு சுபத்ரா கிடைத்தாள்"

"எனக்கு என்ன கிடைத்தது?" என்று முதலியார் சிரித்தார்.

"அன்புள்ள மகளும் மாப்பிள்ளையும் அழிவில்லாத சந்தோஷமும்" என்று சுபத்ரா கூறினாள்.

கருப்புக் கம்பளி

'விக்கிரமன்'

வருடக் கணக்குகள் முடிப்பதற்காக அன்று ஆபீஸிலேயே தங்கவேண்டி நேர்ந்துவிட்டது. இரவு இரண்டு மணி சுமாருக்கு ஒரு வழியாக வேலையை முடித்துக்கொண்டு வராண்டாவில் வந்து நின்றேன். புகை ஏறிய ஹரிகேன் விளக்கு ஒரு மூலையில் எரிந்து கொண்டிருந்தது. விளக்கு அருகே ஒரு தடி. சர்வ கந்தலான கறுப்புக் கம்பளி ஒன்று. இவை திம்மையாவின் சொந்த சொத்து.

டீ வாங்குவதற்காகப் போயிருந்த திம்மையா கதவைத் திறந்து கொண்டுவந்தான். அறுபது வயதாயிருக்கும். அந்த நடையில் தள்ளாமை சிறிது கூடக் காணோம். ராணுவ நடையும், முறுக்கிய மீசையும் சிவப்புத் தலைப்பாகையும் வருடக் கணக்காக மாறாமலேயே இருப்பதைப் பார்த்திருக்கிறேன். அத்துடன் அந்தக் கறுப்புக் கம்பளி வெயில் காலத்திலும் மழைக்காலத்திலும் அவனைவிட்டுப் பிரிவதில்லை.

கிழிந்துபோய், ஆயிரங்கண்களுடன் தோன்றும் அந்தக் கம்பளியை திம்மையா பாதுகாத்து வரும் இரகசியத்தை ஒரு நாள் கேட்டுவிடவேண்டும் என்று எண்ணினேன்.

இரவின் தனிமையையும், தூக்கம் வருவதையும் தவிர்க்க திம்மையாவைக் கிண்டுவதைத் தவிர வேறு வழியில்லை.

"திம்மையா இது என்ன இந்தக் கம்பளியை விடமாட்டாய் போலிருக்கே. அழுக்குப் பிடித்ததை இந்தத் தடவைப் போயிக்குக் கொளுத்திவிடப் போகிறேன்" என்றேன்.

'சூடு பிடித்துவிட்டது.'

'திம்மையா மெல்ல சிரித்தான். "எல்லாவற்றையும் பழசானால் தள்ளிவிட வேண்டியதுதான். நானும் எத்தனையோ தடவை முயன்றேன். முடியவில்லை. கம்பளியை எறிந்துவிட வேண்டும் என்று எண்ணும்போதெல்லாம் அவள் நினைவு வந்துவிடும்..." என்றான்.

திம்மையாவின் கொச்சைத் தமிழைப் புரிந்துகொள்ள நான் ரொம்பவும் கஷ்டப்பட்டேன். அப்படியே எழுதுவதானாலும் கஷ்டமே. அவன் சொன்னதை என் பாஷையில் சொல்லிவிடுகிறேன்.

2

திம்மையாவுக்கு எட்டு வயதாயிருக்கும்போது அவன் தாயார் இறந்துவிட்டாள். பிறகு அவன் தந்தை வேறு கலியாணம் செய்து கொள்ளவில்லை. இஷ்டப்பிரகாரம் அவர் தேசாந்திரம் சுற்றப் போய்விடுவார். ஏதோ தூர பந்துவின் வீட்டில் திம்மையா வளர்ந்து வந்தான். தந்தை சரிவரக் கவனிக்காததால், சொத்து கொஞ்சங் கொஞ்சமாகச் சூறையாடப்பட்டது. நல்ல வேளையாக முழுவதும் போவதற்குள் திடுதிப்பென்று ஒரு நாள் திம்மையாவின் தகப்பனார் வந்து சேர்ந்தார். திம்மையாவை அழைத்துச் சென்று தன் தங்கை வீட்டில் விட்டு, அவனைக் காப்பாற்றி வயது வந்த பிறகு இருக்கும் ஆஸ்தியை ஒப்படைக்குமாறு கூறிச் சென்றார். அப்பொழுது போனவர் போனவரே. திரும்பவே இல்லை. யார் யாரோ என்னென்னவோ பேசினார்கள்.

அத்தை வீட்டில் திம்மையாவுக்கு எல்லாச் சௌகரியங்களும் இருந்தன. அத்தைப் பெண் கனகம்மாவும் திம்மையாவுக்காக வளருவதாகப் பிரஸ்தாபம் வேறு இருந்தது. செல்லமும், செல்வமும் சேர்ந்த களிப்பில் திம்மையா சுதந்திரப் பறவைபோல் திரியலானான். பள்ளிக்கூடம் சரிவரப் போவது கிடையாது. தூர்ச் சிநேகிதங்களும் ஏற்பட்டன.

வருடம் இதையெல்லாம் கவனிக்கின்றனவா? வேகமாக ஓடியது திம்மையா 'மேஜ'ரானவுடன் அத்தையின் கணவர் பணத்தை அவன் கையில் கொடுத்துவிட்டார். விவரம் பிடிபடா அப்பருவத்தில் திம்மையாவிடம் கிடைத்த ஆஸ்தி விரைவில் கரைந்து போய்விட்டது.

திம்மையாவை வீட்டில் சேர்க்கக்கூடாது என அத்தையின்கணவர் உத்தரவு போட்டுவிட்டார். அத்தை எவ்வளவோ கெஞ்சினாள்., நாளைக்கு நம் மருமகனாக வரவேண்டியவனை இப்படி நாம் நடத்தக்கூடாது என்று சொல்லியும் பார்த்தாள். 'அது கனவிலும் நடவாது' என்று கிடைத்த பதில் திம்மையாவின் அத்தையையும், மகள் கனகம்மாவையும் திடுக்கிட வைத்தது. காதல் காதல் என்று இந்தக் காலத்தில் சொல்கிறார்களே அப்படியொன்றும் பிரித்து—விண்டு—கூறிவிட முடியும் தன்மையொன்றும் கனகம்மா அடைந்துவிடவில்லை. தனக்கு வரப்போகும் கணவன் என்ற உருவம் அவள் இதயத்தில்பதிந்திருந்ததால்திம்மையாவுக்கு நேரும் ஒவ்வொரு இடையூறும் தனக்கு நேருவது போன்றுணர்ந்தாள் தன் தகப்பனாரிடம் திம்மையாவை விரட்ட வேண்டாம் என்று கூறி விம்மினாள்.

கனகம்மாவின் தந்தையின் எண்ணம் வேறுவிதமாக இருந்தது. திம்மையாவை மெள்ளத் தட்டிக் கழித்துவிட்டால் நல்ல சொத்துள்ள இடமாகப் பார்த்துக் கொடுத்துவிடலாம் என எண்ணினார்.

திம்மையா அத்தை வீட்டில் நேர்ந்த அவமரியாதையைப் பொருட்படுத்தவில்லை. கைவசமிருந்த பணம் செலவாகிய பிறகுதான் இந்த உலக விவரமே அவனுக்குத் தெரிய வந்தது. அந்தச் சமயம் யுத்தத்துக்கு ஆள் சேகரித்துக் கொண்டிருந்தார்கள். வாட்டசாட்டமான வடி

வுள்ள திம்மையா படையில் சேருவது கஷ்டமாயில்லை.

3

ஐந்தாறு வருடங்கள் எப்படியோ ஓடின. கொப்புலபாடி கிராமத்தைவிட்டு கனகம்மாவும் அவள் தந்தையும் வேறு ஊர் சென்றுவிட்டனர். அவள் தாய் இறந்துவிட்டாள். பருவத்தின் பிரதிபலிப்பு நிறைந்த கனகம்மாவை வாலிப திருஷ்டியினின்று காப்பாற்றுவதே அவள் தந்தைக்குப் பெரிய காரியமாகிவிட்டது. மேலும் அவர் எதிர்பார்த்தபடி ஏதும் நடக்கவில்லை. சின்ன கொண்டையா எனும் ஒருவனின் சகவாசம் அவருக்கு ஏற்பட்டது. ரூபாயை இரட்டிப் பாக்கித் தருவதாக அவன் சிநேகம் தொடங்கினான். இடையே மனக்கசப்பு வளர்ந்தது. அவன் நினைத்தபோதெல்லாம் பணம் பறிக்க ஆரம்பித்தான். அத்துடன் கனகம்மாவையும் கலியாணஞ் செய்து கொடுக்குமாறு தொந்தரவு செய்யலானான்.

அவன் தொல்லை சகிக்காமல் தான் கொப்புலபாடி கிராமத்தைவிட்டுக் கிளம்பியது. கையிலிருந்த பணமும் தீர்ந்துவிடவே கனகம்மாவின் கலியாணத்தைப் பற்றி அவரால் நினைக்கவே முடியவில்லை. புது ஊரில் சிறு மளிகைக் கடைவைத்து ஜீவனம் செய்யலானார். கனகம்மா மட்டும் திம்மையாவை மறக்க வில்லை. அவளுடைய இதயத்தில் திம்மையா அழியாது பதிந்துவிட்டான். என்றாவது வந்துவிடுவான் என்பது அவளுடைய திட நம்பிக்கை புதிய ஊரிலும் அமைதியாகக் காலங்கழிக்க முடியவில்லை கனகம்மாவின் தந்தையால். கலியாணமாகாத கனகத்தைப்பற்றி வதந்திகளை அவ்வூரிலே சிலர் பரவவிட்டனர். கனகம் எங்கும் வெளியே செல்வது கிடையாது.

சின்ன கொண்டையா மட்டும் எப்படியோ கனகத்தைக் கண்டு கொண்டான். மீண்டும் கனகத்தின் தகப்பனாரைப் பயமுறுத்தலானான்.

"என்னைப் போலீஸார் தேடுகிறார்கள். கள்ள நோட்டு போடுகிறேன் என்று கண்டு கொண்டார்கள். கனகம்மாவை எனக்குக் கொடுத்து நீயும் என்னுடன் வந்துவிடு மைசூர் மலைக் காட்டுக்கப்பால் கிராமத்தில் போய் வாழலாம். நீ சம்மதிக்காவிடில் நீயும் தான் கள்ள நோட்டுத் தயாரிப்பதில் கூட்டாளி என்று போலீஸிடம் தெரிவித்து விடுவேன்" என்று பயமுறுத்தினான். கனகத்துக்கு ஏகத்திகில். என்ன நேருமோ தன் கதி என்ன ஆகுமோ என்று அஞ்சினாள்.

கொஞ்சம் பணம் கொடுத்து இரண்டு மூன்று தடவைகள் அவனைச் சமாளித்தார் கனகத்தின் தந்தை. ஆனால் கொண்டையா அவரில்லாதபோது வீட்டிற்கு வந்து கனகத்திடம் உறவாட முயலுவதுமட்டும் அவருக்குப் பிடிக்கவில்லை. மிகக் கண்டிப்பாக ஒருநாள் அவனிடம் கூறிவிட்டார் பிறகு கொண்டையாவைக் காணோம்.

சில தினங்கள் கழித்து, சரக்கு பிடித்துவர அடுத்த சந்தைக்குக் கனகத்தின் தந்தை போக நேர்ந்தது. சர்வஜாக்கிரதையாக வீட்டிலிருக்குமாறு பலமுறை பத்திரம் பத்திரம் என்று கூறிவிட்டுச் சென்றார்.

மறுநாள் பொழுது சாய்ந்து இரண்டு மணி நேரம் ஆகியிருக்கும். அமாவாசையின் முன்நாள். கனகம் தாழ்வாரத்தில் கைச்சிம்மினியைஏற்றிவைத்துப் பல்லாங்குழியில் சோழியை மாற்றி மாற்றிப் போட்டுக்கொண்டிருந்தாள். கொல்லைக்கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டது. திடுக்கிட்டு எழுந்த கனகத்தை கொண்டையா தாவிப்பிடித்துக் கொண்டான்.

சப்தம் போட்டால் அப்படியே இயமலோகம் போக வேண்டியது தான் என்றும், அவனது இஷ்டத்திற்கு உட்பட்டு அப்பொழுதே கிளம்புவதானல் சும்மாவிடுவதாகவும் கொண்டையா கர்ஜித்தான்.

கனகம்மாவின் தொண்டையினின்று பேச்சேவரவில்லை. உடல் வெலவெலத்தது. ஏதோ வார்த்தை வந்தது அதுவும் ஏனோ 'திம்மையா' எனும் சிதைந்த வார்த்தை.

எத்தனை எத்தனையோ தெய்வங்களை ஒருகணம் வேண்டிக் கொண்டாள்.

சட்டென்று வாயிற்கதவு திறந்தது, முகத்திலிருந்து கால்வரை கறுப்பு உடையால் போர்த்தப்பட்டு ஓர் உருவம் தள்ளாடித் தள்ளாடி உள்ளே வருவதைக்கண்ட கனகம்மா வீறிட்டுக் கூவினாள்.

கொண்டையாவுக்கும் குலை நடுக்கம். அவன் பிடி நழுவியது. கனகம்மா ஓடிப்போய் கூடத்து மூலையில் நின்று கொண்டாள். கொண்டையா குளறும் வார்த்தையில் ஏதோ கூவிக்கொண்டே பரபரப்புடன் வந்த வழியே விரைந்தான்.

கறுப்பு உடை போர்த்த உருவம் மெள்ள வந்தது. தள்ளாடியது தொப்பென்று தரையில் வீழ்ந்தது, நிச்சயம் பேய்-பிசாசு இல்லை. கனகம் பயந்தெளிந்து மெள்ள நெருங்கி விளக்கெடுத்து அவ்வுருவத்தை நோக்கினாள்.

தி .. ம் .. மை .. யா.

அவள் கண்களையே அவளால் நம்பமுடியவில்லை. ஐந்தாண்டுகளுக்கு முன்பு பார்த்த அதே திம்மையா ... எப்படி வந்தார்? .. உடம்பெல்லாம் அனலாய்க் காய்கிறதே என்ற எண்ணத்துடன் செய்வதறியாது திகைத்தாள். மெள்ள ஒரு கிழிந்த பாயில் படுக்கவைத்து வெந்நீர் காய்ச்சிக் கொடுத்துப் பணிவிடைகள் செய்தாள்.

காலையில் கனகம்மாவின் தந்தையும் வந்துவிட்டார். கனகத்தைத் திம்மையா காப்பாற்றினான் என்பதை அவர் முதலில் நம்பவில்லை. இரவு தப்பி ஓடும் போது கைப்பிடிச் சுவரில்லாத கிணற்றில் கொண்டையா வீழ்ந்திருந்து காலையில் கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் உண்மை அறிந்தார். பலநாள் தேடப்பட்ட கொண்டையா போலீஸாரால் கைது செய்யப்பட்டான்.

4

திம்மையா இவ்வளவு தான் கூறினான்.

"என்ன திம்மையா பெரிய புதிர்மாதிரி அரைகுறையாக நிறுத்திவிட்டாயே" என்றேன்.

தொடர்ந்து அஸெம்பிளி கேள்வி நேரம் போன்று சில கேள்விகள் கேட்டேன். அந்த விடையே கதையின் முடிவு.

ஐந்தாண்டுகள் வரை மெஸபடோமியா, ஈராக் முதலிய இடங்களில் யுத்தத்தில் தொண்டாற்றிய திம்மையாவுக்குக் கடைசியில் விஷசுரம் பீடிக்கவே ராணுவத்திலிருந்து 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்டான்.

நேராகக் கொப்புலபாடி கிராமம் வந்தவனுக்கு கனகம்மாவையோ, தன் அத்தையையோ காணாதது பெரும் அதிர்ச்சியைத் தந்தது. இத்தனை நாளும் அவன் கனகம்மாவை மறக்கவில்லை, கண்டபடி செலவு செய்யாமல் சம்பளத்தைச் சேர்த்து வைத்திருந்தான். மிலிடரி சொத்தாக அந்தக் கறுப்புக் கம்பளி தான். அவனுக்குப் பெரிதும் துணையாக இருந்தது. போர்வையாகவும், கீழ் விரிப்பாகவும் கையிலுள்ள பணத்தைச் சேமித்துவைக்கும் பையாகவும் அது பயன்பட்டது.

கனகம்மாவை விசாரித்த வண்ணம் பல ஊர் சுற்றிய அவனுக்குக் கடைசியில் அந்த ஊர்தான் உண்மையைத் தெரிவித்தது. ஆனால், கனகம்மா இருக்கும் தெருவை அடையும் முன்னமே அவனுக்குக் குளிர் ஜுரம் கண்டுவிட்டது. நடக்கமுடியாமல் நடந்து கனகத்தின் வீட்டுத் திண்ணையில் வந்து வீழ்ந்துவிட்டான். கம்பளியை எடுத்துத் தலை முதல், கால்வரையில் போர்த்துச் சுருண்டு படுத்துவிட்டான்.

கொண்டையா கனகம்மாவைப் பலாத்காரம் செய்யும் போது சிறிது ஜுரம் விட்டிருந்தது. உள்ளே பலத்த விவாதம் நடப்பதையும் ஏதோ ஆபத்து என்பதையும் மட்டும் அறிந்து மெள்ள திண்ணையினின்று இறங்கி கம்பளியைப் போர்த்துக்கொண்டு திடுமென நுழைந்த திம்மையாவின் தோற்றத்தையும், நடையையும் கண்டு கொண்டையா பேயோ, பிசாசோ என ஓடவும், கனகம் பயப்படவும் அப்புறம் எல்லாம் சுபமே!

அப்பொழுதுகூட கனகத்தை உடனே கலியாணஞ் செய்து வைக்க அவள் தந்தை சம்மதித்து விடவில்லை. பணம் இருக்கிறது என்றவுடன்தான் சம்மதித்தார்.

கனகமோ தன்னை ஆபத்திலிருந்து காப்பாற்றிய அந்தக் கறுப்புக் கம்பளியைச் சுத்தமாகச் சலவை செய்து பெட்டியில் வைத்தாள். அதைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்கு இந்தச் சம்பவம் நினைவில் வரும்.

கனகம் நீண்டநாள் காப்பாற்றிய இந்தக் கம்பளி அவளுக்குப் பிறகு திம்மையாவிடம் வந்தது. எலிகளுக்கும் பூச்சிகளுக்கும் உணவான அந்தக் கம்பளி கனகத்தின் நினைவைக் கொடுக்கும்போது அதைச் சுலபத்தில் எறிந்துவிட திம்மையாவுக்கு மனசு வருமா சொல்லுங்களேன்!

இரட்டைக்கால் பின்னல், அஜந்தா கொண்டை, ஒற்றைக்கால் பின்னல் பாய் ஜடை மடி ஜடை சம்சார ஜடை ராஜகுமாரி கொண்டை, வளையக்கொண்டை, பர்மா கொண்டை

கூந்தலழகு

பிலோ இருதயநாத்

இன்று கூந்தல் அலங்காரத்திற்காகச் சிலர் நூற்றுக்கணக்கான பணத்தைச் செலவு செய்கிறார்கள். அஜந்தா, எல்லோரா குகைகளில் உள்ள ஓவியங்களிலும், பண்டை சிற்பங்களிலும் ஓவியர்கள் கூந்தல் அலங்காரங்களைப் பலவகையில் சித்தரித்திருக்கிறார்கள். கூந்தலை அழகுபடுத்திக்கொள்ள மங்கையர்கள் என்ன செய்தார்கள் என்பது மிகவும் ரஸமான விஷயம். இன்றிருப்பது போன்ற சீப்புகள் அக்காலத்திலே கிடையாது. கொண்டை அலங்காரத்துக்கு பண்டை மக்கள் எதை உபயோகப்படுத்தினார்கள்? அக்காலத்தில் ஆண்களும் பெண்களும் நீண்ட கூந்தலை வைத்திருந்தார்கள். அவர்கள் முதன் முதலில் சிக்கெடுத்து தலையைக் கோதுவதற்குத் தங்கள் கை விரல்களையும், பிறகு காட்டுக் குச்சிகளையும் உபயோகித்தார்கள். பிறகு கவைத்து இருந்த் கிளைகளைக் கொண்டு தலையைச் சீவிக் கொண்டை போட்டு அக்கவைத்த கொம்பையே தலையில் சொருகிக் கொண்டு அதில் காட்டுப் பூக்களை வைத்து அலங்கரித்துக்கொண்டார்கள்.

பிறகு பருந்தின் கால்களை வெட்டி அதை உலர்த்தி அதன் மூலம் தங்கள் கூந்தலைச் சீவி அலங்கரித்துக்கொண்டார்கள்.

பிற்காலத்தில் இறந்து போன மிருகங்களின் விலா எலும்புகளை சுத்தம் செய்து சீப்பாக உபயோகித்தும் அதற்குப் பின் "கற்காலம்" என்று சொல்லப்படும் காலத்திலே கல்லினால் செய்யப்பட்ட ஈர்க்குளிகளை உபயோகித்தும் அலங்காரம் செய்துகொண்டனர்.

இதற்கடுத்தபடியாக மூங்கிற் சீவுளிகளைச்செய்து இன்றிருக்கும் கொண்டை ஊசிகளைப்போல் குத்தி அலங்கரித்துக் கொண்டார்கள். பிறகு நாகரீகம் வளர வளர நாரினால் தங்கள் கூந்தலைச் சேர்த்து, "துடைப்பம்"போல் கட்ட கற்றுக் கொண்டார்கள்.

சமீபத்தில் தென் ருஷ்யாவில் "ஜனமென்கா" என்னும் கிராமத்தில் பூமியைத் தோண்டியபோது அங்கு கி. பி. முதல் நூற்றாண்டில் இருந்த "ஸிதியன்" அரசனுடைய கல்லறை அகப்பட்டது. தங்கத்தால் செய்யப்பட்ட அழகு வேலைப்பாடுகள் அடங்கிய சீப்பை அவ்வரசனுடைய நீண்ட கூந்தல் பின்னலில் சொருகி வைக்கப்பட்டிருந்ததாம்.

இவ்வாறு நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்த இந்த கூந்தல் அலங்காரம் தற்காலத்தில் எப்படி எப்படி கண்ணைக் கவரும் முறையில் அமைந்திருக்கின்றன என்பதை இப்படங்கள் விளக்கிக் காட்டுகின்றன.

பின்னல் கொண்டை, உலர்த்தும் ஜடை, இரட்டைப் பின்னல் கொண்டை, இரட்டை வடைக்கொண்டை, மணிபர்ஸ் பின்னல் குஜராத்திகொண்டை, வட்டக்கொண்டை, பஞ்சாபிக்கொண்டை சங்குரிங்குகொண்டை



உங்கள் கால பலன்

பி.வி.ராவ்

[கீழ்க்கண்ட பலன்களை சந்திர ராசி, சூரிய ராசி, லக்ன ராசி மூன்றிலிருந்தும் பார்த்து மொத்தத்தில் பலன்களை மதிப்பிடலாம்.]

மேஷ ராசி

அசுவினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய

இம்மாதம் அனுகூலமாக ஆரம்பிக்கிறது. ஆரம்பத்திலேயே சரியான முயற்சி எடுத்துக்கொண்டால் பண நிலைமையிலும் வெளி உறவிலும் ஏற்படக்கூடிய நெருக்கடிகளைச் சமாளிக்க பல சந்தர்ப்பங்கள் கிடைக்கும். உங்கள் அந்தரங்க சுத்தியை பிறத்தியார் தவருக நினைக்கும்படி விடக்கூடாது. பெரிய இடத்துப் பழக்கம் ஏற்படும் அவசியமான சமயத்தில் உங்களுக்கு உதவி புரியக்கூடியவர்களுடன் தொடர்பு ஏற்படும். கலியாணப் பேச்சுவார்த்தையில் வெற்றி கிட்டும். 27-ம் தேதி வரையில் கடிதப்போக்குவரத்து, இலக்கிய வேலை, தம்பி அல்லது தங்கையுடன் உறவு முதலியவற்றுக்கு நன்ருக இல்லை; கவலை இருக்கும். மனைவி அல்லது புருஷனுக்கு உடம்பு சரியாக இராது. 23-ம் தேதியிலிருந்து சுக்ரன் ஸ்வக்ஷேத்ரனுவதால் குடும்பத்திலும் பண விவகாரங்களிலும் சந்தோஷமான நிலைமை நிலவும் விசேஷமான விஷயங்களைத் தெரிந்துகொள்வீர்கள். ஆத்மீகத்துறையிலிருப்பவர்களுடன் அதிக தொடர்பும் பழைய உறவினர்களை வெகுநாளைக் கப்பால் சந்திப்பதும் இம்மாதத்தில் நேரிடக்கூடும். மனஸ்தாபங்களுக்கு இடம் தரக்கூடாது. இம்மாதத்தில் நீங்கள் பிறத்தியாருக்கு தியாகம் செய்வீர்கள். உங்கள் வார்த்தைகள் பலிக்கக்கூடியனவாக இருக்கும். வெளியாருடன் பழகுவதில் உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்க்கவும். அசட்டுத்தனங்களே முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கின்றன. அவற்றை விட்டால் நிறைய வாய்ப்புகள் இம்மாதத்தில் கிடைக்கும். 18-ம் தேதி பௌர்ணமி முயற்சிகள் வெற்றி பெற உதவி புரியும்.

பணம்:ஆரம்பத்திலேயும்23-ம்தேதிக்குபிறகும் சௌகர்யமாக இருக்கும். 23-ம் தேதி அமாவாஸை வருவது பண நிலைமையை அபிவிருத்தி செய்ய எந்தவிதமான முயற்சி செய்தாலும் அதற்கு உதவி புரியும். முதல் 12 நாட்களில் செலவு கடுமையாக இருக்கும். இரண்டாம் பாதியில் வருமானம் அதிகரிக்கும்.

வீட்டுசூழ்நிலை: முந்திய மாதத்தைவிட இது கொஞ்சம் நன்ருகஇருக்கிறது.நெருங்கிய உறவினருடன்மனஸ்தாபத்தையும்,அனுவசிய செலவையும் தவிர்க்கவும்.இரண்டாம் பாதியில் நிலம் அல்லது வீட்டின் மீது பணம் போடுவதற்கு நன்ருக இருக்கிறது. ஆனுல் 4-ம் வீட்டுக்கு பாபர்களான சனி செவ்வாயின் பார்வையிருப்பதால் மோசம் போகாமல் இருக்க ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். தாயார் இருந்தால் உடம்பு சரியாக இராது. இப்போதைய வீட்டைப்பற்றி திருப்தி இராது.

ஆபீஸ்:உயர்வும்,வேலை மாற்றமும் கிடைக்கும். வேலையை மேலதிகாரி பாராட்டுவார். குறிப்பாக இந்த மாதத்தில் மேலதிகாரியிடத்தில் விசுவாசமாக இருக்கவும்.

வியாபாரிகள்: இது அதிருஷ்டகாரமான மாதம். ஹேஷ்யம் லாபகாரமாக இருக்கும். இரண்டாம் பாதி பண விஷயத்தில் லாபகரமாக இருக்கும். புதிய கூட்டாளிகளுடன் சேரலாம்.

20 22—25 27 28மே4 6 9 11 14அதிருஷ்ட நாட்கள். 16 18 19 26 மே 2 8 நன்ருக இல்லை.

விருஷப ராசி

கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய

இம்மாதத்தில் பலன்கள் நல்லதும் கெட்டதும் கலந்தே இருக்கும். 6 8 12-ல் உள்ள கிரகங்களால் உங்கள் முயற்சிகளுக்கு தடைகள் ஏற்படும். ஏப்ரல் 23-ந் தேதி முதல் ராசியதிபதி சுக்ரன் ஸ்வக்ஷேத்ரனுவதால் சிரமங்களைக் குறைத்து தொழில் துறையில் முன்னேற்றத்துக்கான சூழ்நிலையையுண்டாக்கும். இதனிடையில் ரகசிய விரோதிகள் —இவர்கள் நெருங்கிய உறவினர்களாகவும் இருப்பர்—உங்கள் மீது தாஷணையைக் கிளப்பி விடுவார்கள். இரண்டாம் வாரத்திலிருந்து எதிரிகள் சக்தியை இழப்பார்கள். நீங்கள் முதலாளியாக இருந்தால் 23-ம் தேதி வரையில் தொழிலாளர் தகராறுகள் இருக்கும். சகோதரன் அல்லது சகோதரிக்கு ரக்ஷணையளிக்க வேண்டிவரும். இம்மாதத்தில் பிரயாணம் எதுவும் மகிழ்ச்சிகரமாக இராது. குழந்தைகளில் ஒன்ருல் மனநிம்மதி குலையும். நெருங்கிய உறவினருடன் பண விவகாரங்களில் தகராறுகளைத் தவிர்க்கவும். தூரத்திலுள்ள உறவினர் ஒருவரிடமிருந்து கொஞ்சம் கெட்ட செய்தி வரக்கூடும்.

பணம்:செலவு எதிர்பார்த்ததற்கதிகமாகஇருக்கும்.ஆனுல் வருமானம் அதிகம் கிடைக்கும். எல்லாம் விரைவில் செல வழிந்துவிடும். கடைசி சில நாட்களில் பண சௌகர்யங்கள் ஏற்படும்.

வீட்டு சூழ்நிலை: முதல் வாரம் மகிழ்ச்சிகரமாக இல்லை. மனைவி உடம்பு அடிக்கடி பாதிக்கப்படும் அல்லது மண வாழ்க்கையில் சௌஜன்யம் அடிக்கடி பாதிக்கப்படும் அல்லது மண வாழ்க்கை குலையும். சிலருக்குக் கோர்ட் வழக்குகள் கிளம்பக்கூடும்.

> 1954-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 14-ந்தேதி முதல் மே மாதம் 15-ந்தேதி வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்துகொள்ள உதவியாக நக்ஷத்திரங்களும் பாதங்களும் கூடவே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

கடைசி வாரத்தில் திடீர் தனலாபம் ஏற்படலாம். முக்கிய தஸ்தாவேஜுகளில் கையெழுத்து போடுவதைத் தவிர்க்கவும்.

ஆபீஸ்: எதிர்பார்த்தபடி அநுகூலம் இராது. மேலதிகாரி அதிருப்தியைப் பெறத் தயாராக இருக்கவேண்டும். இரண்டாம்பாதி கொஞ்சம் நன்ருக இருக்கிறது. முதலாளியாக இருப்பவர்கள் சிப்பந்திகளிடத்தில் குறை கண்டுபிடிப்பார்கள்.

வியாபாரிகள்: ஹேஷ்யத்திற்கு முதல் பாதி அநுகூலமாக இல்லை.வாடிக்கைக்காரர்களுடன்பணத்தகராறுகளும்மனவேற்றுமைகளும் ஏற்படலாம். இன்னும் 4 மாதத்துக்கு கூட்டு வியாபாரம் சரியாக நடக்காது.

16 17 22 23 27 28 மே 2 4 6 8 10 12 15 அதிருஷ்ட நாட்கள் 15 18—20 24 26 மே 1 5 9 சந்தேகமான நாட்கள்.

மிதுன ராசி

மிருகசீரிஷம் 3 - ம் பாதம் முதல் திருவாதிரை புனர்வஸு 3 - ம் பாதம் முடிய

11-ல் சூரியன் இருப்பதாலும் ஏப்ரல் கடைசி வாரத்தில் புதனும் குருவும் சாதகமான ராசிகளில் பிரவேசிப்பதாலும் இந்த மாதம் போன மாதத்தை விட கொஞ்சம் நன்ருக இருக்கும். செவ்வாய்க்கு சனி பார்வை இருப்பது மகிழ்ச்சிகரமான நிலைமையைத் தராது. நண்பர்கள் உறவினர்களுடன் மனவேற்றுமை இருக்கும் அவர்கள் உங்களை கேலி செய்வார்கள். சிலர் மீது வியாஜ்ஜியம் தொடரக்கூடும். புதன் அங்காரகன் நிலைமை காரணமாக உங்கள் பேர் கெடும். துராக்கிரமிப்புக்கு இது தகுதியான காலமல்ல. நண்பர்கள் நெருங்கிய உறவினரின் சமயமான உதவியினுல் சிரமங்களைக் குறைக்க முடியும். வயதானவர்களோ அல்லது பொறுப்பானவர்களோ உங்களை ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்கவேண்டாம். எந்த திட்டமும் ஏமாற்றமோ கவலைகளோ இன்றி நிறைவேருது. ராசியில் குரு இருப்பது கலியாணப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவதற்கு நல்ல சூசகம். ஆனுல் 7-ல் செவ்வாயினுல் ஆரம்பத்தில் தடைகள் ஏற்படலாம். இந்த குரு சாரமும் ஏப்ரல் கடைசியிலிருந்து சூரியன் சுக்ரன் புதன் நிலைமையினுலும் புதிய திட்டங்களுக்கு ஊக்கம் கிடைக்கும்.

பணம்: நிதிக் குறைவால் சில திட்டங்கள் நிறுத்திவைக்க வேண்டியிருக்கும். சில அபாயகரமான முயற்சிகளில் குடும்பத்தின் எதிர்ப்பு இருக்கும். தன ஸ்தானத்தை இரு பாபர்கள் பார்ப்பது பண விவகாரங்களுக்கு நல்லதில்லை. நீண்ட கால நிதித் திட்டங்களைத்தான் கடைப்பிடிக்க வேண்டும். கடிதப்போக்குவரத்தால் பணம் கிடைக்கும்.

வீட்டு சூழ்நிலை: 7-ல் செவ்வாய் ராகு மனைவி ஆரோக்கியத்துக்கு நல்லதில்லை. உங்கள் தேகாரோக்கியத்தையும் ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ள வேண்டும். நெருக்கடியான சச்சரவுகளைத் தவிர்க்கவும். இல்லாவிட்டால், மானபங்கம் ஏற்படும். சின்ன விஷயங்களில் அதிக ஆடம்பரமாகவோ அல்லது தாராளமாகவோ இருக்கவேண்டாம். புதிதாக மணமான தம்பதிகளுக்குள் சின்ன விஷயங்களில் சண்டை இராமல் போகாது. பேச்சிலும் செயலிலும் நீங்கள் என்றுமில்லாத துணிச்சலுடன் இருப்பீர்கள்.

ஆபீஸ்:இரண்டாம்பாதியில்மேலதிகாரியின்ஆதரவுமாத்திரம் கிட்டும். வேறு பதவி எதுவும் கிடைக்காது. அதிகாரியுடன் அர்த்தமில்லாத சச்சரவு ஏற்படும். அதனுல் பாதகம் ஏற்படும். சகாக்களுடன் கூட சண்டையிராமல் இருப்பது நல்லது.

வியாபாரிகள்: முதல் வாரத்தில் நஷ்டம் ஏற்படும். இரண்டாம் வாரத்திலிருந்து அபிவிருத்தியுண்டு. கூட்டு வியாபாரத்தில் தகராறுகளும் பண நிர்ப்பந்தமும் இருக்கும்.

17 22—25 27 28 மே 2 4—7 11—14 அதிருஷ்ட நாட்கள். 18 19 26 மே 1 8 நன்ருக இல்லை.

1954ஞ ஏப்ரல் 14-ந்தேதியுள்ள கிரகநிலை

புதன்	சுக்ரன் சூரியன்	குரு	கேது யுரானஸ்
	ராசி 20உ மிதுன குரு 23உ ரிஷப சுக்ரன் 27உ மேஷ புதன்		
			சந்திரன்
ராகு செவ்வாய்		வ. சனி நெப்ட்யூன்	

கடக ராசி

புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம் ஆயில்யம் முடிய

இம்மாதத்தில் கிரகங்கள் அதிக அநுகூலமாக இருக்கின்றன. ஏகாதச பிரகஸ்பதியினுலும் ஏப்ரல் 3-வது வாரத்திலிருந்து சுக்ரன் 11-ல் இருப்பதாலும் உங்கள் இஷ்டங்கள் நிறைவேறும். ராசியை சனி செவ்வாய் பார்ப்பதால் ஏமாற்றமும் இடைஞ்சல்களும் உண்டாகும். இதனுல் தைரியத்தை இழக்கக்கூடாது. ஏப்ரல் 18-ம் தேதி பௌர்ணமி வருவதால் புதிய கௌரவங்களும், அதிக சாதகமான நிலைமையும் கிடைக்கலாம். இம்மாதத்தில் வெளிப் பழக்கங்கள் அதிக முக்யம் பெறும். அந்த இரு பாப கிரகங்களின் பார்வை காரணமாக மோட்டாரை நீங்கள் அதிக முரட்டுத்தனமாக ஓட்டாமல் ஜாக்கிரதையாக இருத்தல் நல்லது. அளவுகடந்த நம்பிக்கையைத் தவிர்க்கவும். 2-ம் தேதி அமாவாஸை வருவது புதிய வருமான இனத்தையும் அதிலிருந்து ஐந்து நாட்களில் புதிய பணம் கிடைப்பதையும் காட்டுகிறது. மே 4-ம்தேதி வாக்கில் விசேஷ பண லாபம் கிட்டலாம். ஆனுல் அதில் நண்பர்கள் யாராவது சம்பந்தப்பட்டிருந்தால் ஏமாற்றம் ஏற்படக்கூடும்.

பணம்:இம்மாதத்தில்அதிகபணசௌகர்யங்கள்இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணம் கிடைக்கும். நண்பர்களுடன் பண பேரங்களைத் தவிர்க்கவும்.

வீட்டு சூழ்நிலை: முதல் பாதி மகிழ்ச்சிகரமாக இராது. சிலருக்கு கலியாணங்கள் நடக்கலாம். ஏப்ரல் 20-ம் தேதியிலிருந்து செலவு அதிகமாக இருக்கும் வீடு அல்லது நிலத்தில் பணம் போட இது நல்ல மாதம் சிலருக்கு ஸெக்யூரிட்டிகளில் பணம் போடுவது லாபகரமாக முடியும்.

ஆபீஸ்: இம்மாதத்தில் பதவி உயர்வோ அல்லது மாற்றலோ ஏற்படலாம் எதிர்பாராத வருமானம் கிடைக்கும். மேலதிகாரி ஆதரவு கிடைக்கும்.

வியாபாரிகள்: இது அதிருஷ்டகாரமான மாதம் ஹேஷ்யத்தில் லாபம் உண்டு இரண்டாம் பாதி இன்னும் அதிருஷ்டகாரமாக இருக்கும்.

17-18 20-25 27 28 மே 1 2 4 5 8 11 12 14 அதிருஷ்ட நாட்கள். 15 19 26 மே 6 7 8 சந்தேகம்.

ஸிம்ம ராசி

மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய

இம்மாதத்தில் கிரகங்கள் நன்ருக இருக்கின்றன. ஏப்ரல் 3-வது வாரத்தில் குரு சுக்ரர்கள் பரிவர்த்தனை சுப

சூசகம். 9-ல் சூரியன், வருங்கால திட்டங்களையும், பிரயாணத்தையும், சட்ட விஷயங்களையும், சுபாவமான தத்வ குணங்களையும் வலியுறுத்துகிறது. நம்பிக்கையினால் தெம்பு இருக்கும். 5-ல் செவ்வாய் சனி பார்வையுடன் இருப்பதால் நீங்கள் பிடிவாதமாக இருப்பீர்கள் முக்கிய உறவுகளைப் பாதிக்கும் அளவு பிடிவாதமாக இராமலிருப்பது நலம். குழந்தைகளில் ஒன்று விசேஷ கவனத்தைக் கவரும். தாயார் உயிருடன் இருந்தால் அவர் தேக நிலைமை சரியாக இராது. சின்ன விஷயங்களிலும் பரபரப்படைவது தான் உங்களுடைய முக்கிய குறைபாடாக இருக்கிறது. பிறத்தியாரை எளிதில் நம்பிவிடுவீர்கள் உண்மையில் இது மிகவும் உணர்ச்சிகரமான மாதம். நீண்ட நாட்களாக பிரிந்திருந்த • பெரியவர்களையோ அல்லது உறவினர்களையோ சந்திப்பீர்கள் கலியாணப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடியும்.

பணம்: பிறத்தியாருடன் வேற்றுமையைத் தவிர்க்கவும் முதல் வாரத்தில் திடீர் நிர்ப்பந்தம் ஏற்படும். ஏப்ரல் 16-ம் தேதி அதிருஷ்டகரமாக இருக்கும். ஆனால் சண்டைகளைத் தவிர்க்கவும் ஏப்ரல் 23-ம் தேதியிலிருந்து வருமான இனத்தில் அநுகூலமான மாறுதல் ஏற்படும். தொலை தூரத்திலிருந்து பாக்கிகளை வசூல் செய்ய இது நல்ல மாதம் கடிதப் போக்குவரத்தினால் லாபம் உண்டாகும்.

வீட்டு சூழ்நிலை: இது மகிழ்ச்சிகரமான மாதம் சிலருக்கு நல்ல வீட்டு சுகம் இருக்கும் இம்மாதத்தில் மனைவி ஆரோக்யம் அபிவிருத்தியடையும். அதிக உஷ்ணத்தினால் உங்கள் ஆரோக்யம் பாதிக்கப்படும்.

ஆபீஸ்: ப்ரொமோஷனும் அந்தஸ்து உயர்வும் கிடைக்கும். வேலையை மேலதிகாரி பாராட்டுவார். ஏப்ரல் 19, 26-ம் தேதிகளில் சகாக்களுடன் சண்டைகளைத் தவிர்க்கவும்.

வியாபாரிகள்: இம்மாதம் நன்ருக இருக்கிறது. வியாபாரத்தில் முக்கிய மாறுதல் ஏற்படும். வெளிநாட்டு வியாபாரம் நல்ல லாபம் தரும். இரண்டாம் பாதியிலிருந்து பண சௌகர்யம் இருக்கும்.

16 17 22-25 27 மே 2-5 7-10 12 15 அதிருஷ்ட நாட்கள். மே 1 6 சந்தேகம்.

கன்யா ராசி

உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம்
சித்திரை 2-ம் பாதம் முடிய

முதல் 10 நாட்களில் கிரக நிலைமை சரியாக இல்லை. இதன் விளைவாக எதிர்பாராத இனங்களுக்கு அதிக செலவும், வீட்டில் உற்சாகமில்லாத வாழ்க்கையும், குடும்பத்தினருடன் வேற்றுமையும் கண் பார்வை சம்பந்தமான தவறுகளும் ஏற்படலாம்.

இந்த ஜாபிதாவில் பிரயாணமும் ஏற்படலாம். 7-ல் புதனை செவ்வாய் பார்ப்பதால் கலியாணப் பிரச்னையைத் தீர்ப்பது சிரமம். ஏப்ரல் கடைசியிலிருந்து குருவும் சுக்ரனும் உங்களுக்கு அநுகூலமாக இருக்கும். வாழ்க்கையில் தென்பு இருக்கும். உருப்படியான காரியங்களில் புத்தி செல்லும் எதிரிகளின் இடைஞ்சல்கள் மறையும் புனித காரியம் ஒன்று நடக்கும். ஏப்ரல் 20-லிருந்து 10-ல் குரு இருப்பதால் தொழில் துறையில் அதிக பொறுப்புகள் ஏற்படும். தசாபுக்தி சரியாக இல்லாத சிலருக்கு வேலையில் அதிருப்தியோ அல்லது மேலதிகாரியுடன் மன வேற்றுமையோ அல்லது ரஜாவில் போகவேண்டிய அவசியமோ ஏற்படலாம் மே 2-ம் தேதி அமாவாஸை வருவது, கூட்டு வியாபார விவகாரங்களையும் பணம் கொடுக்கல் வாங்கல்களையும் வலியுறுத்தும், நண்பர் ஒருவரின் துரதிர்ஷ்டத்தைப்பற்றி நீங்கள் அதிகம் கவலைப்படுவீர்கள்.

பணம்: முதல் பாதியில் நிர்ப்பந்தம் இருக்கும் இரண்டாம் பாதியில் அதிக சௌகரியங்கள் இருக்கும். பாக்கிகள் வசூலாகும் முதலீட்டுக்கு இது நல்ல மாதம்.

வீட்டு சூழ்நிலை: 4-ல் செவ்வாய் குடும்பத்தில் சந்தோஷத்தைக் கொடுக்காது. குடும்பத்தாருடன் மன வேற்றுமை உண்டாகும். அதிக உஷ்ணத்தினால் உங்கள் ஆரோக்யமும் மனைவி ஆரோக்யமும் பாதிக்கப்படும்.

ஆபீஸ்: பெரும்பாலோருக்கு இது நல்ல மாதமல்ல. மாற்றலும் புது மேலதிகாரியும் கிடைக்கலாம். மேலதிகாரிகளுடன் மனஸ்தாபங்களைத் தவிர்க்கவும்.

வியாபாரிகள்: மாறுதல்கள் செய்யவேண்டியிருக்கும். கூட்டு வியாபாரம் சரியாக நடக்காது. புது நிபந்தனைகளில் புனரமைக்கப்படலாம். இரண்டாம் பாதியில் லாபகரமாக இருக்கும்.

17 20-25 மே 3 4 9 12 13 அதிருஷ்ட நாட்கள் 15 18 19 26 மே 1 2 8. பாதகமான நாட்கள்.

துலா ராசி

சித்திரை, 3-ம் பாதம் முதல் சுவாதி
விசாகம் 3-ம் பாதம் முடிய

ஒன்பதில் குரு இருந்தாலும் மற்ற கிரகங்கள் எல்லாம் அநுகூலமாக இல்லை. ஏப்ரல் கடைசி வாரத்தில் கொஞ்சம் அபிவிருத்தி ஏற்படும். லாபாதிபதி 7-ல் உச்சனாக இருப்பதால் தொழில் விவகாரங்களிலும் பொது விஷயங்களிலும் புகழ் கிடைக்கும். பெரிய இடத்துப் பழக்கங்களும் நண்பர்கள் மூலம் லாபமும் ஏற்படலாம் கலியாணம் ஒன்று ஆரம்ப தடங்கலுக்குப் பிறகு வெற்றி பெறும். முதல் 10 நாட்களில் பெரியவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படலாம் அதன் விளைவாக வீட்டிலும் நண்பர்களிடையேயும் உங்களுக்கு நல்ல பேர் இருக்காது. பிறர் மீது நிர்ப்பந்திப்பதை நிறுத்தினாலொழிய சமாதானமும் சுபிட்சமும் கிடைக்காது. லக்னாதிபதி ஏப்ரல் 23-லிருந்து ஸ்வக்ஷேத்ரனாகவும், ஒன்பதிலுள்ள குரு லக்னத்திலுள்ள சனியைப் பார்ப்பதாலும் தர்ம நியாயத்துடன் நடந்து கொள்வதாக உங்களுக்கு கர்வம் இருக்கக்கூடும். நண்பர்கள் அதிகமாக உங்களுக்கு உதவி புரிவார்கள். பிறத்தியாருடன் நட்பைப் பலப்படுத்திக் கொள்ள இது நல்ல சமயம். உங்கள் மூன்று நல்ல நண்பர்களில் ஒருவர் ஏமாற்றத்தை அளிப்பார். உங்கள் மூன்று அபீஷ்டங்களில் ஒன்று இம்மாதத்தில் நிறைவேறும். சிலருக்கு திடீர் பிரயாணம் நேரிடலாம்.

பணம்: நிலைமை அபிவிருத்தியடையும் பாக்கிகள் எளிதில் வசூலாகும் சிலர் மீது வழக்கு தொடருவதாக பயமுறுத்த வேண்டிவரும். இம்மாதத்தில் செலவு கடுமையாக இருக்கும். இரண்டாம் பாதியிலிருந்து புதிய வருமான இனம் தேடப்படும். தூர இடத்திலிருந்து பணம் கிடைக்கும்.

வீட்டு சூழ்நிலை: மனைவி தேகாரோக்யம் சரியாக இராது அல்லது மண வாழ்க்கை ஸௌஜன்யமாக இராது. அதனால் குடும்பத்தில் சந்தோஷம் இராது. குழந்தைகளில் ஒன்றுக்கு உடம்பு பாதிக்கப்படும் இரண்டாம் பாதியில் சொத்துகள் மீது பணம் போடலாம்.

ஆபீஸ்: 10 ஐ பாபர்கள் பார்ப்பதால், ப்ரொமோஷ் எதிர்பார்ப்பவர்கள் ஏமாற்றத்தை அடைவார்கள் எதிர்பாராதவிதமான மாற்றல் ஏற்படலாம். இம்மாதத்தில் அதிகப்படி வருமானம் கிடைக்கும். உத்தியோக கவலைகள் அதிகரிக்கும்.

வியாபாரிகள்: ஷேர்களுக்கு இது கொஞ்சம் அதிருஷ்டகரமான மாதம் கூட்டு வியாபாரம் இரண்டாம் பாதியில் லாபகரமாக இருக்கும் புதிய கூட்டாளி சேருவார் வெளிநாட்டு வியாபாரம் உற்சாகமளிக்கும்.

17 18 23 24 25 28 மே 1 2 3 5 6 11 15 அதிருஷ்ட நாட்கள். 19 20 26 மே 8 9 நன்ருக இல்லை.

விருச்சிக ராசி

விசாகம் 4-ம் பாதம் முதல், அனுஷம்,
கேட்டை முடிய

இம்மாதத்தில் சுப கிரகங்கள் பாப கிரகங்கள் இரண்டினுடைய பலன்களும் கலந்திருக்கும். ராசிக்கு இரு புறங்களிலும் பாபகிரகங்கள் இருப்பது உங்கள் முயற்சிக்கு ஏதாவது தடங்கலை உண்டாக்காமலிராது ரகசிய விரோதிகள் இருப்பார்கள். நெருங்கிய உறவினர் சம்பந்தமாக கவலை இருக்கும் அவர்களுடன் மனஸ்தாபங்கள் ஏற்படும் குழந்தைகளில் ஒன்றைப்பற்றி அதிருப்தி ஏற்படும் நண்பர் ஒருவரைப்பற்றியும்கவலைஏற்படும்.கலியாணபேச்சுவார்த்தைஏதாவது இருந்தால் இம்மாதத்தில் வெற்றிகரமாகமுடியும். சகோதரன் அல்லது நண்பனுடன் மனஸ்தாபத்தைத் தவிர்க்கவும். எதிர்ப்புகள் இருந்தபோதிலும், தீராதிருந்த பல விஷயங்கள் இம்மாதத்தில் முடிவடையும். மே 2-ம் தேதி அமாவாஸை வருவதையடுத்து பண விவகாரங்களிலும் வீட்டிலும் உங்கள் முயற்சிக்கு அதிக வெற்றி கிடைக்கும். இம்மாத முதல் வாரம் வெளிப்பழக்கத்தில் மிகச் சுறு சுறுப்பாக இருக்கும். தொழிலில் புதிய சந்தர்ப்பங்கள் கிடைக்கும் வீட்டில் சந்தோஷம் இருக்கும்.

பணம்: முதல் வாரம் நன்ருக இருக்கிறது. அதற்குப் பிறகு செலவு அதிகமாக இருக்கும். வரவுக்கதிகமாக செலவு இருப்பதால் சில சமயங்களில் பெரும் நிர்ப்பந்தம் இருக்கும்.

ஆபீஸ்: ஓரளவு லாபம் ஏற்படலாம். 7½ வருஷ சனியின் முதல் கட்டத்தில் இருப்பதால் முன்னேற்றத்துக்கு தடை இருந்துகொண்டே இருக்கும். தசாபுக்திகள் பலமாக இருந்தால் இது கொஞ்சம் தணிந்திருக்கும்.

வீட்டு சூழ்நிலை: முதல் வாரம் மனைவி ஆரோக்யத்துக்கு நன்ருக இல்லை. 2-வது வாரம் முதல் சந்தோஷம் இருக்கும். தங்கம் துணிமணிகள், நகைகள் முதலியன வாங்குவீர்கள்.

வியாபாரிகள்: இது நம்பிக்கையான மாதம். 2-வது வாரத்திலிருந்து வியாபாரம் நன்ருக நடக்கும். புதிய வாடிக்கைக் காரர்கள் கிடைப்பார்கள். புது வியாபார முறைகளை ஆராய்வீர்கள். கூட்டு வியாபாரம் திருப்திகரமாக நடக்கும்.

16 17 22—25 மே 1 2—5 7 9 15 அதிருஷ்ட நாட்கள். 18 19 26 மே 7 8 9 நன்ருக இல்லை.

தனுர் ராசி

மூலம், பூராடம், உத்திராடம் முதல்
பாதம் முடிய

லக்னாதிபதி குரு ஏப்ரல் 20 வரையில் 8-ல் இருக்கிருர். ஆகையால் எல்லா விஷயங்களிலும் உங்கள் கவலை ஜாஸ்தியாகும். செவ்வாய், ராகு சனி பார்வையுடன் இருப்பதும் உங்கள் மன நிம்மதியைக் குலைக்கக்கூடியன. குழந்தைகளில் ஒன்றைப்பற்றி மிகுந்த கவலை ஏற்படும். விரோதபாவமுள்ள உறவினர்கள் உங்களைக் கவிழ்க்க சமயம் பார்த்துக்கொண்டிருக்கிருர்கள். இம்மாத 2-வது பாதியிலிருந்து குரு 7-லும் சுக்ரன் ஸ்வக்ஷேத்ரத்திலும் பிரவேசிப்பதால் உங்கள் முயற்சிக்கு அதிக தைர்யம் பிறக்கும். இதுவரையில் இருக்கும் இடம் தெரியாமல் இருந்த உங்கள் விரோதிகள் இனி பகிரங்கமாக உங்களுக்கு எதிராக வேலை செய்வார்கள். ஆனால் 7-ல் வலுத்துள்ள உங்கள் லக்னாதிபதி குரு அவர்கள் முயற்சியைக் குலைப்பது நிச்சயம். நண்பர்களில் ஒருவர் விரோதியாக மாறுவார். புதிய நண்பர்களும் ஏற்படுவார்கள். வீட்டிலும் ஆபீஸிலும் கூட வேலை செய்கிறவருடன் மனஸ்தாபத்தைத் தவிர்க்கவும். இம்மாதத்தில் சிப்பந்திகளை முரட்டுத்தனமாக நடத்தக்கூடாது. பின்னால் வருந்தவேண்டி இருக்கும். ஏப்ரல் 24-லிருந்து உங்களுக்குப் பிடித்தமான விஷயம் ஒன்றைக் கவனித்து வேலை செய்யலாம். ராசியில் செவ்வாயிருப்பது உஷ்ணத்தை கொடுக்கும். இதனால் ஜீரணம் சரியா இராது. செவ்வாய் காரணமாக உங்கள் மனதில் அதிருப்தி ஏற்படும்.

பணம்: இம்மாதத்தில் அதிக செலவுதான் முக்கியமாகத் தெரிகிறது. பண சௌகர்யங்கள் இருக்கும் என்ருலும் சில சமயங்களில் கைமாற்றுக் கடன் வாங்கவேண்டி வரும்.

வீட்டு சூழ்நிலை: முதல் வாரம் நன்ருக இல்லை. கடைசி வாரம் நன்ருக இருக்கும். 7, 8-ஐ பாப கிரகங்கள் பார்ப்பதால் உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். ஏப்ரல் 23-லிருந்து சுக்ரன் ரோக ராசியில் இருப்பது ஒரு காரணம். வயிற்றுக் கோளாறு இருக்கும். முதலீட்டு விஷயம் எதுவும் சரியாக இராது.

ஆபீஸ்: அநுகூலம் எதுவும் இராது. எல்லாம் சரியா இருந்தாலே அதிருஷ்டம்தான். ஏனெனில் விரோதிகளும் உங்களிடம் நல்லபிப்பிராயம் இல்லாத மேலதிகாரிகளாக இருக்கிருர்கள்.

வியாபாரிகள்: முதல் வாரம் அதிருஷ்டகரமாக இருக்கும். மொத்த வியாபாரம் நன்ருக இருக்கும். கூட்டு வியாபாரம் நன்ருக நடக்கும். இம்மாதத்தில் முரட்டுத்தனமான ஷேர்யத்தில் இறங்கக்கூடாது.

17 18 20—25 28 மே 2 3 4 5 15 அதிருஷ்ட நாட்கள். 15 19 26 மே 1 6 8 சந்தேகம்.

மகர ராசி

உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம்,
அவிட்டம் 2-ம் பாதம் முடிய

கொஞ்சம் மாறுதல் இருந்தபோதிலும் கிரகங்கள் நிலைமை போன மாதத்தைப்போலவே இம்மாதமும்இருக்கின்றன. 4-ல் சூரியன் குடும்ப விவகாரங்கள், வீட்டுப் பிரச்னைகள், உறவினர்கள் முதலியனவற்றை வலியுறுத்துகின்றன. இவ்விஷயங்களில் ஸ்திர நிலைமையையுண்டாக்க முயற்சி செய்வீர்கள். நண்பர்களை நம்பாதீர்கள். அவர்கள் கோரிக்கைகள் அதிகமாகவும், வாக்குறுதிகள் ஏமாற்றத்தையளிக்கக் கூடியவையாகவும் இருக்கும். செவ்வாயும் ராகுவும் விரோதமாக இருப்பதே இதற்குக் காரணம். முதல் பாதிக்குப் பிறகு தான் நிலைமை சீர்படும். நண்பர்கள் உறவினர்களுடன் நடந்துகொள்வதில் துடுக்காக இருப்பீர்கள். அதற்காக பின்னர் வருந்துவீர்கள். ரொம்ப தந்திரசாலியாக இருந்தாலொழிய எதிரிகளின் சூழ்ச்சிகளில் சிக்க நேரிடும். எதிரிகள் உங்கள் உறவினர்களாகவும் இருக்கிருர்கள். ஏப்ரல் 23-லிருந்து சுக்ரன் ஸ்வக்ஷேத்ரமாகிய 5-க்கு செல்வதையடுத்து வருங்காலத்தைப் பற்றிய சில உருப்படியான யோசனைகளைச் செய்வீர்கள். 18-ந்தேதி பௌர்ணமிக்குப் பிறகு இந்த யோசனைகளை கிரியாம்சையில் காட்ட முற்படுவீர்கள். ஏப்ரல் 20-க்குப் பிறகு குரு 6-ல் இருப்பதால் வருங்காலத்தைப் பற்றிய முடிவுகளை செய்யுமுன் அனுபவஸ்தர்கள் பெரியவர்களின் யோசனைகளை கேட்டுச் செய்வது நலம். சனி செவ்வாய் 7-ஐப் பார்ப்பதால் கலியாணப் பேச்சு எதுவும் வெற்றி பெருது. மண வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கும். இம்மாதத்தில் மனைவிக்கு எதிர்பாராத பணம் கிடைக்கும். பெரிய உறவினர்களுடன் ஸௌஜன்ய உறவு இராது. இம்மாதத்தில் இலக்கிய உணர்ச்சி இருப்போருக்கு உற்சாகம் கிடைக்கும்.

பணம்: இம்மாதத்தில் கடும் செலவுதான் இருக்கும். பண நிலைமையில் திடீர் மாறுதல் இருக்கும். ஏப்ரல் கடைசி வாரத்திலிருந்து நிலைமை சீர்படும்.

—47-ம் பக்கம் பார்க்க.

கடவுளின் கருணை

ஸரோஜா ஸ்ரீநிவாஸன்

"ஏ குட்டி...செல்லி..வெள்ளி முளேச்சு எம்மாம் நேரமாவுது. வெயிலு சுளீர்னு அடிக்க ஆரம் பிச்சுடுத்து. இன்னுமா கஞ்சி காய்ச்சலே. சுருக்க கொண்டா. இப்பவே கௌம்பினுத்தானே பொழுது சாயறதுக்குள்ளாற எங்கேயாவது சுத்தி அலேஞ்சு அரை வயித்துக்காவது கொண்டார லாம்...' என்று தன் அருமை மனைவியை அதட்டியபடியே தனக்கு படியளக்கும் வாகனமாகிய ரிக்ஷாவை துடைத்துக்கொண்டிருந்தான் கண்ணுசாமி.

'ஏன் அதுக்குள்ளாற இப்படி கத்தறே...பாழுஞ் • சுள்ளியிலே அடுப்பு எரியமாட்டேங்குது. கொஞ்ச நேரம் அப்படியே 'ரிஸ்கா' விலேதான் குந்திக்க...ரவை பொளுதிலே இதோ கொண்டாந்துடறேன்..' என்று பதில் அளித்துவிட்டு குனிந்து அடுப்பை ஊதி எரியவிட முயன்றுள் செல்லி.

ஏதோ முணுமுணுத்தபடியே ரிக்ஷாவில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான் கண்ணுசாமி.

ரிக்ஷாக்கார கண்ணுசாமிக்கு முப்பது வயதிருக்கும். வாட்ட சாட்டமான உடலமைப்பு. முகத்திலே அரும்பு மீசை. ரிக்ஷா இழுத்து இழுத்து காய்த்து நன்கு உரமேறிப்போன கைகால்கள். வெயில், மழை எல்லாவற்றிலிருந்தும் அவனைக் கருணையுடன் காக்கும் தலையிலிருந்த கிழிந்த தொப்பி. முண்டா பனியன், இடுப்பில் காக்கி சராய்– இந்த உருவம்தான் கண்ணுசாமி.

கண்ணுசாமியை பிரமன் எந்த வேளையில் படைத்தானே தெரியாது. பிறக்கும்போதே அவன் தன் சக்தியினால் வாழ்நாள் முழுவதும் தன்னைப் போன்றஉயிருள்ள மனுஷனைஇழுத்துத்தான் வயிறு வளர்க்கணும் என்று அவன் தலையிலே கருணை மிக்க கடவுள் எழுதிவிட்டார். அப்படி இருக்கும்போது அவனுல் வேறு தொழில் செய்து எப்படி ஜீவனைவளர்க்கமுடியும்? கண்ணுசாமி நான்கு வருடங்களாய் ரிக்ஷாக்காரனுகத்தான் உயிருடன் உலாவி வருகிருன். அந்தப் பிழைப்பிலும்தான் எத்தனை போட்டி, சண்டை, சச்சரவு.....? எல்லா கஷ்டங்களையும் தாண்டி அவன் நெற்றி வியர்வை நிலத்தில் வடிய, ரத்தம் சுண்ட உழைத்து சம்பாதிக்கும் பணத்தில் தான் அவன், அவன் காதல் மனைவி செல்லி, அவன் அருமை குழந்தை வேலு ஆக மூன்று ஜீவன்கள் வயிறு வளர்க்கவேண்டும்.

ஏழையானுல் என்ன...? கண்ணுசாமியின் உள்ளத்தில் காதல் செத்துவிடவில்லை. செல்லியைக் காதலித்ததினுல்தான் அவள் அப்பனுக்குக்கூடத் தெரியாமல் இரவோடு இரவாய் செல்லியை இழுத்துக்கொண்டு பட்டணக் கரைக்கு ஓடி வந்துவிட்டான்— இரண்டு வருஷங்களுக்கு முன்.... அவன் நம்பி வந்த பட்டணக் கரையும் அவனைக் கைவிட்டுவிடவில்லை. எவனே ஒரு பெரிய மனிதனிடம் பல்லைக் காட்டி கெஞ்சிக் கூத்தாடி வாடகைக்கு ஒரு ரிக்ஷாவை பேசிக்கொண்டான், கண்ணுசாமி. ரிக்ஷா அவனுக்கு சொந்தம். சவாரி கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் தினமும் அரை ரூபாய் முதலாளியான புண்ணியவானிடம் சமர்ப்பித்து விடவேண்டும். கண்ணுசாமிக்கு இரண்டு வருஷம் இன்பமாகவே ஓடிற்று வாழ்க்கை. கண்ணுசாமி–செல்லியின் காதல் வாழ்வின் சின்னமாக வேலு பிறந்தான். அருமையாகப் பிறந்த பிள்ளைக்கு சாக்லேட்டும், உயர்ந்த ரக பிஸ்கோத்து வகைகளும் ஐந்தும் பத்தும் கொடுத்து விதவிதமான விளையாட்டு சாமான்களும் கண்ணுசாமியால் வாங்கிக் கொடுக்க முடியாவிட்டாலும் தினமும் தவருமல் காலணு அரையணுவுக்கு, பொரி கடலையாவது வாங்கிக்கொடுக்க கடவுள் அவனுக்குப் படியளந்து கொண்டிருந்தார்.

மவுண்டு ரோடு திருப்பத்தில் உள்ள கூவம் நதி பாலத்தை அடுத்த வாராவதியைத் தாண்டி சற்று ஒதுக்குப் புறமாக உள்ள பெரிய ஆலமரத்தடிதான்கண்ணுசாமியின் சொர்க்க பூமி. மரத்தடியில் கிடக்கும் நாலைந்து சட்டி பானைகளும் தூளியில் தாங்கிக்கொண்டிருக்கும்அருமை குழந்தை வேலுவும், ஆசைக் காதலி செல்லியும்தான் அவன் இன்ப சாம்ராஜ்யமாக விளங்கினர். அவசரமாக ரயிலுக்கும், ஆபீஸுக்கும் போகிறவர்களிடத்தில் சட்டென்று நிறைய சவாரி பிடித்துக்கொள்ள அந்த வட்டாரந்தான் சௌகரியமாயிருக்கும் என்று எண்ணி கண்ணுசாமி தன் வாசஸ்தலத்தை குடிக்கூலி இல்லாமல் அந்த இடத்தில் அமைத்துக்கொண்டான். ரிக்ஷா ஸ்டாண்டும் பக்கத்திலேயே இருந்தது. தினமும்அவன் குடும்பத்து வயிற்றை கழுவ சவாரியும் கிடைத்து வந்தது... கண்ணுசாமிக்கு வேறு என்ன கவலே..? நிம்மதியாக சலனமின்றி ஓடிக் கொண்டிருந்தது வாழ்க்கை.

• • •

'இந்தா! தத்தி தத்தி நடந்து வர்ர பச்சைப் புள்ளையைத் தூக்காமே கூட அப்படி என்ன ரோசனையிலே மூழ்கிக் கிட்டிருக்கே?' என்று செல்லமாக அதட்டியபடியே கையில் கஞ்சி கலயத்துடன் கண்ணுசாமியின் அருகில் வந்து நின்றுள் செல்லி.

கண்ணுசாமி திடுக்கிட்டு விழிப் படைந்தான். வாயிலிருந்து எச்சில் வழிய, குழைவுடன் தளர்ந்த குறுநடை போட்டுக்கொண்டு ரிக்ஷாவை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தான் கண்ணுசாமியின் உயிருக்குயிரான குழந்தைவேலு.

"என் ராசா!... உன்னை நான் பார்க்கவில்லேடா கண்ணு!"... கண்ணுசாமி வேலுவை வாரி எடுத்து அணைத்துக்கொண்டான்

'இந்தா!...புள்ளையை ராவைக்கு வந்து கொஞ்சிக்கலாம்.. முன்னுடிகஞ்சியைக்குடிச்சிட்டுபொழப்பை பாரு...'என்றுகண்ணுசாமியிடம் கஞ்சிக் குவளையை கொடுத்துவிட்டு வேலுவை அவனிடமிருந்து வாங்கிக்கொண்டாள் செல்லி.

கண்ணுசாமி கஞ்சியைக் குடித்து விட்டு ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு புறப்பட ஆயத்தமானுன்.

தன் அப்பா போவதைக் கண்ட வேலு கையையும் காலையும்ஆட்டி தன் பாஷையில் புரியாதபடி ஏதோ உளறிக் கொட்டினுன். குழந்தையைத் தட்டிக்கொடுத்து முத்தமிட்டு விட்டு கிளம்பினுன் கண்ணுசாமி.

"இந்தா! இன்னிக்கு வர்ரப்போ குழந்தைக்கு நல்லதா எதிணுச்சியும் முட்டாய், பர்ப்பி தித்திப்பா வாங்கிக்கிட்டு வா.. நெதம் போல பொரியும் கடலையும் வேண்டாம் அதுக்கு அது அலுத்துக்கிடக்குது'என்று சொல்லி கணவனை வழி அனுப்பி வைத்தாள் செல்லி.

* * *

பகல் ஒருமணி வரையில் அன்று கண்ணுசாமிக்கு ஒரு சவர்ரியும் கிடைக்கவில்லை. மனமுடைந்து போய் சென்ட்ரல் ஸ்டேஷன் அருகில் இருந்த ஸ்டாண்டில் வண்டியை நிறுத்தி உட்கார்ந்து கொண்டான். பசி வயிற்றை கிள்ளிற்று...ஒரு டீ வாங்கி சாப்பிட்டால் தேவலை போல் இருந்தது கண்ணுசாமிக்கு..ஜேபியைத் தடவினுன் இரண்டு ஓட்டைக் காலணுக்கள் தட்டுப்பட்டன. இப்பொழுது அரையணுவுக்கு டீ வாங்கி குடித்து விடலாம்....ஆனுல்சாயங்காலம் வரையில் ஒரு சவாரியும் கிடைக்காவிடில் ஒன்றும் வாங்காமல் வெறுங்கையுடன் வீட்டுக்குத் திரும்ப வேண்டுமே..' கண்ணுசாமியின் சிந்தனைஇவ்வாருக ஓடிற்று. எப்படியும் ஒரு சவாரியாவது கிடைக்காமலா போய்விடும் என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டு அரையணுவுக்கு ஒரு டீ வாங்கிக் குடித்தான். பாதி டீ கூட குடித்திருக்க மாட்டான். 'ஏய். யாரப்பா அங்கே! ரிக்ஷா ஆளு இல்லை. என்ற குரல் கேட்டு அவசர அவசரமாய் டீயை ஒரே மடக்கில் குடித்துவிட்டு கண்ணுசாமி வண்டியை நோக்கி ஓடினுன்.

யாரோ இளந்தம்பதிகள் நின்று கொண்டிருந்தனர்.

"பிரபாத்துக்கு வரியா...என்ன கேட்கிறே...?"

கண்ணுசாமிக்கு நிதியை கண்டெடுத்த மாதிரி இருந்தது.

"ஏறுங்க சாமி! ஒரு ரூபாய் குடுத்துடுங்க... இரண்டு ஆளு



இல்லையா..." என்று கூழைகும்பிடு போட்டான் கண்ணுசாமி.

ஒரே மூச்சில் அவர்களை தியேட்டர் வாசலில் சரியான டயத்துக்கு கொண்டு நிறுத்தி விட்டான். அன்று அவனுக்கு நல்ல வேட்டைதான். ஒரே சவாரியில் ஒரு ரூபாய் பழுத்தது. அதை அடுத்தடுத்து இரண்டு சில்லறை சவாரிகளும் கிடைத்தன. கண்ணுசாமிக்கு ஒரே குஷி . பை நிறைய தித்திப்பு மிட்டாய்களுடன் பொழுது சாயும் போதே மரத்தடிக்குத் திரும்பிவிட்டான்.

பச்சையும் சிவப்புமாக விதவிதமான நிறத்தில் இருந்த மிட்டாய்களைக் கண்ட வேலு கும்மாளமிட்டான். ஒவ்வொன்ருக ஆசையுடன் சுவைத்து தின்னஆரம்பித்தான்.

"ஏதுஇன்னிக்கு சவாரிசாஸ்தி போலிருக்கு. புள்ளைக்கு தீனி நிறைய வாங்கி வந்திருக்கியே" என்று செல்லமாக கேட்டபடியே கண்ணுசாமியின் ஜேபியைத் தடவினுள் செல்லி.

'ஆமாம். அது எல்லாத்தையும் இன்னிக்கே தின்னு தீத்துடப் போவுது. வவுத்துக்கு ஆவாது. நாளைக்கு கொஞ்சம் எடுத்து வைச்சிடு'என்ருன் கண்ணுசாமி. அதற்குள்ளாக பாதி மிட்டாயை காலி செய்து விட்டான் வேலு. மீதியை பொட்டலமாகக் கட்டி பானையிலே மூடி வைத்தாள் செல்லி.

* * *

மறுநாள் காலையில் கண்ணுசாமி எழுந்திருக்கும் போது குழந்தை வேலு சுரத்தில்லாமல் தரையிலேயே சுருண்டு கிடந்தான்.

'ஏய் செல்லி! குழந்தைக்கு உடம்புக்கு என்ன..? சுருண்டு கிடக்குதே' என்று பதறிய படியே கேட்டான் கண்ணுசாமி.

'எல்லாம் நீங்க வாங்கியாந்த மிட்டாயைத் தின்னதிலே வந்த வினைதான். எவன் ஈஎறும்பு மொய்க்க தட்டிலே வச்சிக்கிட்டு வித்தானே கறுக்கல்லேயிருந்து இத்தோடே ஏழெட்டு தடவை பேதியாயிடுச்சு... குழந்தை துவண்டு போயிட்டான். காச்சல் வேறே அடிக்குது' என்று கவலை நிறைந்த குரலில் சொல்லியபடி வேலுவைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டாள் செல்லி.

'என்ன செல்லி எம்மேலேயே குத்தத்தை சாட்டுறே..நீதானே வாங்கியார சொன்னே.. அது அதன் வவுத்துக்கு ஆவலைபோலிருக்கு நீ அதை தரும ஆஸ்பத்திரிக்கு தூக்கிக்கிட்டுபோய் காமிச்சு மருந்து வாங்கியா. நான் எதினுச்சியும் சவாரி கிடைக்குதான்னு பார்த்துட்டு வர்றேன். எனக்கு கஞ்சி வேணும் நீ சுருக்க ஆஸ்பத்திரிக்கு போ..' வண்டியை இழுத்துக் கொண்டு கிளம்பினுன் கண்ணுசாமி.

அன்று அவனுக்கு மனதே சரியாயில்லை. நினைவெல்லாம் குழந்தையிடமே லயித்து நின்றது. கவலையினுல் அவன் உள்ளம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. சென்ட்ரல் கடிகாரம் பகல் பனிரண்டு மணி அடித்தது. கண்ணுசாமிக்கு அதுவரை சோதனை போல் ஒரு சவாரியும் கிடைக்கவில்லை. ஒடிந்த மனதுடன் ஏதாவது சவாரி கிடைக்காதா என்ற ஏக்கத்தை விழிகளில் மிதக்கவிட்டபடி கண்களை நாலுபுறமும் சுழல விட்டான். குழந்தையின் நினைவு ஒருபுறம் அவன் நெஞ்சை வாட்டியது.

ஏதோ சிந்தனையுடன் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு

‘இந்தா!...புள்ளையை ராவைக்கு வந்து கொஞ்சிக்கலாம்.. முன்னுடிகஞ்சியைக்குடிச்சிட்டுபொழப்பை பாரு...’என்றுகண்ணுசாமியிடம் கஞ்சிக் குவளையை கொடுத்துவிட்டு வேலுவை அவனிடமிருந்து வாங்கிக்கொண்டாள் செல்லி.

கண்ணுசாமி கஞ்சியைக் குடித்து விட்டு ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு புறப்பட ஆயத்தமானுன்.

தன் அப்பா போவதைக் கண்ட வேலு கையையும் காலையும்ஆட்டி தன் பாஷையில் புரியாதபடி ஏதோ உளறிக் கொட்டினுன். குழந்தையைத் தட்டிக்கொடுத்து முத்தமிட்டு விட்டு கிளம்பினுன் கண்ணுசாமி.

“இந்தா! இன்னிக்கு வர்ரப்போ குழந்தைகிக்கு நல்லதா எதினுச்சியும் முட்டாய், பர்ப்பி தித்திப்பா வாங்கிக்கிட்டு வா.. நெதம் போல பொரியும் கடலையும் வேண்டாம் அதுக்கு அது அலுத்துக்கிடக்குது’என்று சொல்லி கணவனை வழி அனுப்பி வைத்தாள் செல்லி.

* * *

பகல் ஒருமணி வரையில் அன்று கண்ணுசாமிக்கு ஒரு சவர்ரியும் கிடைக்கவில்லை. மன முடைந்து போய் சென்ட்ரல் ஸ்டேஷன் அருகில் இருந்த ஸ்டாண்டில் வண்டியை நிறுத்தி உட்கார்ந்து கொண்டான். பசி வயிற்றை கிள்ளிற்று...ஒரு டீ வாங்கி சாப்பிட்டால் தேவலை போல் இருந்தது கண்ணுசாமிக்கு..ஜேபியைத் தடவினுன் இரண்டு ஓட்டைக் காலணுக்கள் தட்டுப்பட்டன. இப்பொழுது அரையணுவுக்கு டீ வாங்கி குடித்து விடலாம்....ஆனுல்சாயங்காலம் வரையில் ஒரு சவாரியும் கிடைக்காவிடில் ஒன்றும் வாங்காமல் வெறுங்கையுடன் வீட்டுக்குத் திரும்ப வேண்டுமே..’ கண்ணுசாமியின் சிந்தனைஇவ்வாருக ஓடிற்று. எப்படியும் ஒரு சவாரியாவது கிடைக்காமலா போய்விடும் என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டு அரையணுவுக்கு ஒரு டீ வாங்கிக் குடித்தான். பாதி டீ கூட குடித்திருக்க மாட்டான். ‘ஏய். யாரப்பா அங்கே! ரிக்ஷா ஆளு இல்லே. என்ற குரல் கேட்டு அவசர அவசரமாய் டீயை ஒரே மடக்கில் குடித்துவிட்டு கண்ணுசாமி வண்டியை நோக்கி ஓடினுன்.

யாரோ இளந்தம்பதிகள் நின்று கொண்டிருந்தனர்.

“பிரபாத்துக்கு வரியா...என்ன கேட்கிறே...?”

கண்ணுசாமிக்கு நிதியை கண்டெடுத்த மாதிரி இருந்தது.

“ஏறுங்க சாமி! ஒரு ரூபாய் குடுத்துடுங்க... இரண்டு ஆளு



இல்லையா...” என்று கூழை கும்பிடு போட்டான் கண்ணுசாமி.

ஒரே மூச்சில் அவர்களை தியேட்டர் வாசலில் சரியான டயத்துக்கு கொண்டு நிறுத்தி விட்டான். அன்று அவனுக்கு நல்ல வேட்டைதான். ஒரே சவாரியில் ஒரு ரூபாய் பழுத்தது. அதை அடுத்தடுத்து இரண்டு சில்லறை சவாரிகளும் கிடைத்தன. கண்ணுசாமிக்கு ஒரே குஷி . பை நிறைய தித்திப்பு மிட்டாய்களுடன் பொழுது சாயும் போதே மரத்தடிக்குத் திரும்பிவிட்டான்.

பச்சையும் சிவப்புமாக வித விதமான நிறத்தில் இருந்த மிட்டாய்களைக் கண்ட வேலு கும்மாளமிட்டான். ஒவ்வொன்ருக ஆசையுடன் சுவைத்து தின்னஆரம்பித்தான்.

“ஏதுஇன்னிக்கு சவாரிசாஸ்தி போலிருக்கு. புள்ளேக்கு தீனி நிறைய வாங்கி வந்திருக்கியே” என்று செல்லமாக கேட்டபடியே கண்ணுசாமியின் ஜேபியைத் தடவினுள் செல்லி.

‘ஆமாம். அது எல்லாத்தையும் இன்னிக்கே தின்னு தீத்துடப் போவுது. வவுத்துக்கு ஆவாது. நாளைக்கு கொஞ்சம் எடுத்து வைச்சிடு’என்ருன் கண்ணுசாமி. அதற்குள்ளாக பாதி மிட்டாயை காலி செய்து விட்டான் வேலு. மீதியை பொட்டலமாகக் கட்டி பானையிலே மூடி வைத்தாள் செல்லி.

* * *

மறுநாள் காலையில் கண்ணுசாமி எழுந்திருக்கும் போது குழந்தை வேலு சுரத்தில்லாமல் தரையிலேயே சுருண்டு கிடந்தான்.

‘ஏய் செல்லி! குழந்தைக்கு உடம்புக்கு என்ன..? சுருண்டு கிடக்குதே’ என்று பதறிய படியே கேட்டான் கண்ணுசாமி.

‘எல்லாம் நீங்க வாங்கியாந்த மிட்டாயைத் தின்னதிலே வந்த வினைதான். எவன் ஈஎறும்பு மொய்க்க தட்டிலே வச்சிக்கிட்டு வித்தானே கறுக்கல்லேயிருந்து இத்தோடே ஏழெட்டு தடவை பேதியாயிடுச்சு... குழந்தை துவண்டு போயிட்டான். காச்சல் வேறே அடிக்குது’ என்று கவலை நிறைந்த குரலில் சொல்லியபடி வேலுவைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டாள் செல்லி.

‘என்ன செல்லி எம்மேலேயே குத்தத்தை சாட்டுறே..நீதானே வாங்கியார சொன்னே.. அது அதன் வவுத்துக்கு ஆவலேபோலிருக்கு நீ அதை தருமஆஸ்பத்திரிக்கு தூக்கிக்கிட்டுபோய் காமிச்சு மருந்து வாங்கியா. நான் எதினுச்சியும் சவாரி கிடைக்குதான்னு பார்த்துட்டு வர்றேன். எனக்கு கஞ்சி வேணும் நீ சுருக்க ஆஸ்பத்திரிக்கு போ..’ வண்டியை இழுத்துக் கொண்டு கிளம்பினுன் கண்ணுசாமி.

அன்று அவனுக்கு மனதே சரியாயில்லை. நினைவெல்லாம் குழந்தையிடமே லயித்து நின்றது. கவலையினுல் அவன் உள்ளம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. சென்ட்ரல் கடிகாரம் பகல் பனிரண்டு மணி அடித்தது. கண்ணுசாமிக்கு அதுவரை சோதனை போல் ஒரு சவாரியும் கிடைக்கவில்லை. ஒடிந்த மனதுடன் ஏதாவது சவாரி கிடைக்காதா என்ற ஏக்கத்தை விழிகளில் மிதக்க விட்டபடி க்ண்களை நாலுபுறமும் சுழல விட்டான். குழந்தையின் நினைவு ஒருபுறம் அவன் நெஞ்சை வாட்டியது.

ஏதோ சிந்தனையுடன் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு

மெதுவாக நடந்தான் கண்ணுசாமி. திடீரென எங்கிருந்தோ கருகருவென மேகங்கள் வந்து சூழ்ந்து கொண்டன. சடசட வென்று பெருந்தூற்றல் விழ ஆரம்பித்தது. இச்சமயத்திலாவது ஏதாவது சவாரி கிடைக்காதா என்ற நம்பிக்கையுடன் சுற்று முற்றும் பார்த்தான் கண்ணுசாமி.

மழையில் ஒன்றும் பேரம் குதிரவில்லை. அதிக காசு பெற கொடுத்து வைக்கவில்லை. கடைசியில் வந்தது போதும் என்ற மனதுடன் சின்ன சவாரி ஒன்று பிடித்தான். கூலி வாங்கினவுடன் காற்ருகப் பறந்தான் வீட்டுக்கு. செல்லி ஏக்கத்துடன் உட்கார்ந்திருந்தாள். அவள் மடியில் வேலு படுத்திருந்தான். செல்லி அவ்வளவு துயரத்துடன் இருந்ததை அவன் இதுவரையில் பார்த்ததேயில்லை. வேலுக்கு உடம்பு ஆபத்தாக இருக்கிறதென்பதை மௌனத்திலேயே அவன் தெரிந்துகொண்டான். இருந்தாலும் தைரியத்தை விடவில்லை. எமனுடன் போராடியாவது குழந்தையை மீட்கவேண்டும் என்ற உறுதியுடன் வேலுவைப்பற்றி கேள்வி மேல் கேள்வியாகத் தொடுத்தான் கண்ணுசாமி.

"ஆஸ்பத்திரியிலே கொடுத்த மருந்திலே கொஞ்சம் தேவலே மச்சான்... காய்ச்சல்தான் விடாமே அடிக்குது. இரண்டு ரூவா கொடுத்தால் சாயங்காலமா ஊசி போடறேன்னுரு டாக்டர் ஐயா" செல்லியின் குரலில் கவலையும் ஏக்கமும் கலந்து ஒலித்தது.

கண்ணை முழிக்காமல் சுருண்டு கிடந்தான் வேலு. ஆதுரத்துடன் ஒரு முறை அவனைத் தடவிக் கொடுத்தான் கண்ணுசாமி.

"செல்லி.. இந்தா பத்தணு சில்லரை.. வச்சிக்க.. நான் இன்னெரு ரவுண்டு அடிச்சிட்டு எப்படியும் இன்னெரு ரூபாயும் சம்பாரிச்சுக்கிட்டு வாரேன். இன்னிக்கு ஊசி போட்டுடலாம். கவலைப்படாதே.. சுருக்க வந்திடறேன்.." என்று செல்லியைத் தேற்றி விட்டு கண்ணுசாமி ரிக்ஷாவை இழுத்துக்கொண்டு வேகமாகக் கிளம்பினுன்.

கருணை நிறைந்த கடவுள் இந்த சமயத்தில்தான் ஏழை கண்ணுசாமியை கண் திறந்து பார்த்தார்.

"ஏ! ரிக்ஷா!.. ஜெனரல் ஆஸ்பத்திக்கு வரியா.. ரொம்ப அவசரம்.. குழந்தைக்கு உடம்பு சரியில்லை.." கம்பளியால் குழந்தையை போர்த்தி தோளில் சாற்றியபடி கவலை நிறைந்த முகத்துடன் கூப்பிட்டார் ஒரு மனிதர்.

"ஏறுங்க சாமி.." வாயுவேக மனேவேகமாய் பறந்தான் கண்ணுசாமி. ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லும் அந்தக் குழந்தையையும், வேலுவையும் ஒப்பிட்டுப் பார்த்தது க்ஷண காலம் கண்ணுசாமியின் நெஞ்சு. இரண்டு குழந்தைகளின் வேதனையும் ஒரேமாதிரிதான்.. இரு பெற்றோர்களின் உள்ளத் துடிப்பும், பெற்ற பாசமும் கவலையும் கூட ஒன்றேதான். அதில் எள்ளத்தனை வித்தியாசம்கூட இல்லை. 'கடவுளே! இந்த குழந்தையை ஒரு ஆபத்தும் இல்லாமல் பிழைக்க வச்சிடு' என்று மானஸீகமாக வேண்டிக்கொண்டான் கண்ணுசாமி.

மேல் மூச்சு கீழ் மூச்சு இறைக்க ஆஸ்பத்திரி வாசலில் வண்டியை இறக்கினுன் கண்ணுசாமி.

இரண்டு ரூபாயை கண்ணுசாமியிடம் நீட்டினுர் அந்த மனிதர்.

"சாமி கூலி வாணுமுங்க" புள்ளே பொழைச்சா போதுங்க" என்று சொன்னுன் கண்ணுசாமி. பலவந்தமாக ரூபாய் நோட்டை அவனிடம் கொடுத்துவிட்டு ஒரே தாவலில் குழந்தையுடன் உள்ளே சென்று விட்டார் அந்த மனிதர்.

மறு கணம் கண்ணுசாமியின் நினைவு வேலுவிடம் தாவிற்று. அவனுக்குத் தேவையான—வேலுவின் வைத்தியத்திற்குப் போதுமான – பணம் அவனுக்குக் கிடைத்துவிட்டது. தலைதெறிக்க ஒரே வேகத்தில் தன் இருப்பிடத்தை நோக்கி வண்டியை விட்டான் கண்ணுசாமி.

சாயங்காலம் ஐந்து மணி. மவுண்ட் ரோடு 'ஜே ஜே'என ஜன சமுத்திரத்தில் மிதந்துகொண்டிருந்தது. ஆயிரக்கணக்கான மோட்டார்களும், லாரிகளும் விழி பிதுங்க திணறியபடி ஓடிக்கொண்டிருந்தன. கண்மூடித்தனமாக எல்லாவற்றையும் தாண்டிக் கொண்டு வேலுவின் நினைவில் ரிக்ஷாவுடன் ஓடிக்கொண்டிருந்தான் கண்ணுசாமி. எல்லா மோட்டார்களையும் கடந்து, ரவுண்டாணு சுற்றி, மேடு ஏறி இறங்கி, பாலத்தையும் தாண்டிவிட்டான். ரிக்ஷாவையும் கண்ணுசாமியையும் சற்று தூரத்திலேயே கண்டு விட்ட செல்லி 'மச்சான்!'என்று கூவியபடியே மரத்தடியிலிருந்து ஓடி வந்தாள்.

"செல்லி! பணம் கிடைச்சுடுச்சு.கவலைப்படாதே" ஆவலுடன் கூவியபடியே தன்னை மறந்து ரோடின் குறுக்கே பாய்ந்தான் கண்ணுசாமி. விதி க்ஷணத்திலே கண்ணுசாமியிடம் விளையாட இருந்தது. யமன்போல் எதிரில் வந்த மோட்டார் ஒன்று ரிக்ஷா மீது மோதி அதைக் கீழே தள்ளிவிட்டது. கண்ணுசாமிக்கு உயிர் தப்பியது கடவுள் புண்ணியமாகி விட்டது.

ரிக்ஷா போனதைப்பற்றி கவலைப்படவில்லை. "வேலுக்குஎன்ன ஆயிற்றோ" என்ற சங்கடம்தான் அவனை வாட்டியது. ரோட்டைத் தாண்டி ஓடினுன்.

"ஐயோ மச்சான் நீயாவது பொழேச்சு வந்தியே" என்ற செல்லியின் அலறல்தான் அவனை வரவேற்றது!



சந்தானத்திற்கு தன் பிள்ளைகளிருவரும் பெண்கள் கல்லூரியில் படித்து வந்ததில் அவ்வளவாகத் திருப்தியில்லை. அவரது பையனை படிக்க வைத்தபோது துணை வேண்டுமென்பதற்காக மூத்த பெண் கனகம் படித்த பெண்கள் பள்ளிக்கூடத்திலேயே அவனையும் படிக்கவைத்திருந்தார். அவன் மூன்ருவது வகுப்புக்கு வந்தபோது அடுத்த பையன் ரங்கனையும் படிக்க வைக்கவேண்டிய பருவம் வந்துவிட்டது. இன்னும் இரண்டொரு வருஷம் அவனையும் அந்தப் பள்ளிக்கூடத்திலேயே படிக்க வைத்துவிட்டு கொஞ்சம் பெரியவனுன பின் பெரிய பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பலாமென்கிற எண்ணத்துடன் ரங்கனையும் பெண்கள் பள்ளிக்கூடத்திலேயே சேர்த்திருந்தார். ஆனுல் அது தவறு என்பதைப் போகப் போகத்தான் உணர முடிந்தது.

பெண்கள் பள்ளிக்கூடத்தினுல்தானே என்னவோ ராகவன்–ரங்கன் இருவருமே படிப்பில் செலுத்தும் அக்கரையை விடதையல், பின்னல், பாட்டு, நாட்டியம் இவைகளில் மிகுந்த ஆர்வம் செலுத்தி வந்தனர். ஏற்கனவே இரு பெண்களுக்கு தையல் வேலைக்கான துணியும் நூலும் வாங்கிச் சளைத்துப்போயிருந்த அவருக்கு இது வேறு பெருந் தொல்லையாக இருந்தது. அதோடுகூட தன் பிள்ளைகள் இருவரும் ஆண் பிள்ளையாக வளராமல் பெண் பிள்ளையாக வளர்ந்தது அவர் மனதை வெகுவாக உறுத்திக்கொண்டிருந்தது. யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்.

யோசித்து முடித்திருந்தபடி அந்த வருஷ விடுமுறை முடிந்து பள்ளிக்கூடம்தொடங்கியதும் தன் பிள்ளைகளிருவரையும் ஹைஸ்கூலில் சேர்த்து விட்டார்.

சேர்ப்பதென்னவோ சுலபமாக சேர்த்துவிட்டார். அதன் பின்புதான் அதிலிருந்து கிளம்பிய பிரச்னைகளையும் சமாளிக்க முடியாமல் திண்டாடினுர். ஒன்றுக்கு மூன்று பங்காகக் கூடியிருந்த சம்பளத் தொகையை கட்டும் சிரமத்தையும், கட்டுப் புஸ்தகமும், கத்தை நோட்டு வாங்குவதற்கான பணத்தையும் எப்படியோ சேர்த்து கொடுத்து விட்டார். ஆனுல் குழந்தைகள் சாப்பாட்டுப் பிரச்னையைத் தீர்த்து வைக்கும் கவலைதான் அவரைப் பெரிதும் வாட்டின.

குழந்தைகள் படித்த பள்ளிக்கூடத்திற்கும் வீட்டிற்குமிடையே அரை மைல் தூரமிருந்தது. காலையில் வகுப்

புத் தொடங்க அரை மணி முன்பாகவே புறப்பட்டுப் போய்விடுவார்கள். குழந்தைகள் ஆடி அசைந்து தெருவில் வேடிக்கைப் பார்த்து வகுப்புக்குப் போய் சேருவதற்கும் கிளாஸ் தொடங்கும் மணி அடிக்கவும் சரியாக இருக்கும். மாலையில் 4-30க்கு வகுப்பு முடிந்தால் ஐந்து அடிக்கும் வரை ஆடி அசைந்து வந்து சேர்ந்துவிடுவார்கள். இடையே அகப்பட்ட மத்தியான நேரம்தான் அவர்களுக்குப் பெருந் தொந்தரவைத் தருவதாயிருந்தது.

1¼-க்கு வகுப்பு முடிந்ததும் பள்ளியை விட்டுப் புறப்பட்டால் அவர்கள் தெரு வேடிக்கைப் பார்த்து ஆடி அசைந்து வீடு வந்து சேர மணி 1¾-க்கு மேலாகிவிடும். வீட்டிற்கு வந்ததும் வெயிலோடு வந்த களைப்புத் தீர்ந்து உட்கார்ந்து எழுந்திருந்து வேடிக்கை பார்த்து சாப்பாட்டுத் தட்டில் அமரு முன் மணி இரண்டடித்து விடும்.

பின்னும் கால் மணிக்குள் சாப்பிடுவதா? சாப்பிட்ட சிரமம் தீரு முன் வகுப்புக்கு ஓடுவதா?

ஒருநாளாவது 2¼-மணிக்கு வகுப்பு தொடங்குவதற்குள் போய்ச் சேர முடிவதில்லை. குறித்த நேரத்திற்கு வரவில்லையென்பதற்காக உபாத்தியாயரிடம் அடிபட்டு வேதனைப் படுவதோடு அந்த நேரத்தில் சொல்லிக் கொடுக்கும் பாடங்களையும் படிக்க முடியாதபடி தொந்தரவாக இருந்தது.

தினமும் இப்படி நேரம் கழித்து வருவதானால் இனி வகுப்புக்கே வரவேண்டாமென்று உபாத்தியாயர் சொல்லிவிட்டதாக வந்து முறையிட்டான் ராகவன். இதற்கு என்ன வழி செய்வதென சதாசிவம் யோசித்த போது ராகவனே அதற்கும் ஒரு வழி சொன்னான்.

மத்தியானச் சாப்பாட்டிற்கு வரமுடியாதாகையால் சாப்பாட்டை பள்ளிக்கூடத்திற்கே கொடுத்தனுப்பும்படி கூறினான். அங்கு வந்திருந்த பல பையன்கள் இந்த ஏற்பாடு செய்திருப்பதைப் பார்த்து வந்துதான் ராகவன் கூறினான். அதைப்பற்றி சதாசிவம் விசாரித்தபோது அங்கிருந்து தினமும் சாப்பாடு கொண்டு போக வேண்டுமானால் குறைந்தது மாதம் இரண்டு ரூபாய் ஆகுமென்று

தெரிந்தது. பொருளாதார நிலையில் அதுகூட சமாளிக்க முடியாதென்று பட்டதால் அந்த யோசனையையும் கைவிட வேண்டியதாயிற்று.

சரி குழந்தைகள் காலையில் போகும்போது சாதம் சமைத்து கையில் கட்டிக் கொடுத்து விடுவதென முடிவுக்கு வந்தார்கள். அந்த ஏற்பாட்டின்படி மறுதினம் அதிகாலையிலேயே எழுந்து இரண்டு மூன்று அடுப்பாக மூட்டி சமையல் காபி எல்லாம் முடி

த்து சாதமும் கட்டிக்கொடுத்து விட்டாள் ஒருவகையாக. திடீரென்று ஒரு சந்தேகம் தோன்றியது மீனுவுக்கு. கொண்டுபோன பாத்திரத்தை குழந்தைகள் ஜாக்கிரதையாகக் கொண்டு வருவார்களா? விளையாட்டுப் போக்கில் எங்கேயாவது தொலைத்து விடுவார்களோ என்று கவலையாக இருந்தது. பள்ளிக்கூடம் முடிந்து வரும் போது பாத்திரத்தை நினைவாக எடுத்து வாருங்கள் என்று ஒரு தடவைக்கு பத்து தடவையாகக் கூறி அனுப்பினாள்.

மத்தியானச் சாப்பாட்டின் போது குழந்தைகளின் மத்தியில் சாப்பிட்டு பழக்கமாகி விட்ட சதாசிவத்திற்கு அன்று இரண்டு பையனும் இல்லாமல் தனித்துச் சாப்பிட நேர்ந்தது என்னவோ போலிருந்தது. எப்படியோ சாப்பாட்டை முடித்துக் கொண்டு வெற்றிலை போட அமர்ந்தார்.

பிரியமாகச் சாப்பிடும் குழந்தைகள் வெறும்மோரும் சாதமுமாக சாப்பிட்டுக் கொண்டிருக்க நாம் மட்டும் காய் கறி அப்பளத்தோடு வகையாய் சாப்பிடுவதா என்று நினைத்த தாய் அவைகள் எல்லாவற்றையும் மாலையில் வந்து சாப்பிடும் தன் குழந்தைகளுக்காக ஒதுக்கி வைத்து விட்டு சாதத்தில் கொஞ்சம் மோர் மட்டும் கொட்டிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தாள்.

நான் முந்தி நீ முந்தி என்று இரைக்க இரைக்க ஓடி வந்த குழந்தைகளின் சத்தத்தைக் கேட்டு திடுக்கிட்டு பாதி சாப்பாட்டில் எழுந்து வெளியே ஓடிவந்தாள் மீனு.

கொண்டு போன சாப்பாட்டைத் தொலைத்து விட்டு குழந்தைகள் இரண்டும் பட்டினியோடு ஓடி வருகிறார்களோ என்னவோ ஏதோ என்று பெற்ற மனம் பதறத் தொடங்கியது.

'ஏண்டா ராகவா... சாப்பாடு எங்கே... சாப்பாடு கொண்டுபோன பாத்திரமெங்கே... தலைதெறிக்க ஏன் இப்படி ஓடி வருகிறீர்கள். என்று கேட்டபடியே வாசலுக்கு எழுந்து வந்துவிட்டார் தந்தை.

'வகுப்பு முடிந்ததும் சாப்பாட்டை முடித்துவிட்டோம்

அப்பா. கடிகாரத்தைப் பார்த்தேன் வகுப்புத் தொடங்க இன்னும் அரை மணி இருந்தது. அம்மா கூறியதுபோல் பாத்திரம் எங்கேயாவது கெட்டுவிடப் போகிறதே வீட்டில் கொண்டு கொடுத்து விட்டு வந்து விடலாமென்று தம்பி சொன்னானப்பா. அது தான் ஓடிவந்தோம்' என்று கூறிய பிள்ளைகளின் புத்தி விசாலத்தைக் கண்டு தலையிலடித்துக்கொண்டு உள்ளே திரும்பினார் சதாசிவம்.

சாரணர் உலகம்

முதற் சிகிச்சை

★

நமது அவயவத்தில் காது இருக்கிறதல்லவா? அது 'கார்டிலெஜ்' எனக்கூறப்படும் ஒருவித சதையினுல் செய்யப் பட்டது. இதே 'கார்டிலெஜ்' நம் முழங்காலிலும் இருக்கிறது. ஒவ்வொரு சமயம் இந்த 'கார்டிலெஜ்' இடம் மாறலாம் அல்லது அறுக்கப்படலாம்.

இது எந்த சமயத்தில், என்ன காரணத்தினுல் இடம் மாறலாம் அல்லது அறுக்கப்படலாம்? நம் நாட்டில் எத்தனை விளையாட்டுகள் இருக்கின்றன? முக்கியமாக கிரிக்கட், ஹாக்கி, புட்பால், டென்னிஸ் முதலியவற்றைக் கூறலாம். இந்த விளையாட்டுகளை விளையாடுபவர்கள்தான் இம்மாதிரியான விபத்திற்குள்ளாகலாம்? ஏன்? இவ்விளையாட்டுகளை ஆடும்பொழுது அதிகமாக ஓடவேண்டியிருக்கிறதல்லவா? இவ்வாறு வேகமாக ஓடும்பொழுது நமது முழங்கால் அதிக சிரமத்திற்குள்ளாகிறது. சில சமயம் முழங்காலிலிருக்கும் 'கார்டிலெஜ்' இந்த ஓட்டத்தின்போது உண்டாகும் சிரமத்தினுலும் அதிர்ச்சியினுலும் இடம் மாற்றப்படலாம் அல்லது அறுபடலாம்.

இதைத் தவிர வேறு ஏதாவது சந்தர்ப்பம் இருக்கிறதா? இருக்கிறது. நாம் மாடிப்படி ஏறும் பொழுது நமக்கே தெரியாமல் ஒவ்வொரு சமயம் கால் வழுக்கிவிடும். இந்த சமயத்திலும் அதிர்ச்சியினுல் இது இடம் மாற்றப்படலாம் அல்லது அறுபடலாம்.

இதை எப்படி கண்டுபிடிப்பது? ஏதாவது அடையாளங்கள் உண்டா? அதற்கென்ன சந்தேகம். முழங்காலில் வலி மிகவும் அதிகமாகயிருக்கும். மேலும் முழங்காலை நம்மால் உபயோகிக்க முடியாது. அசைத்தால் வலி இன்னும் அதிகரிக்கும். முழங்காலை அடிக்குட்பட்டவனுலும் சரி, முதற் சிகிச்சை செய்பவனுலும் சரி அசைக்கமுடியாது. இதற்கும் வீக்கம் அதிகமிருக்கும்.

இதற்கும் பூட்டு நழுவுதலுக்கும் உள்ள நமது வித்தியாசத்தை நன்கு கவனிக்கவும். இதில் அங்கத்தின் ஒழுங்கற்றத்தன்மை தெரியாது. ஆனுல் பூட்டு நழுவினுல் இது நன்கு தெரியும்.

இதற்கென்ன முதற் சிகிச்சை செய்வது? என்ன செய்தால் உபாதை குறையும்? இங்கும் நாம் மிகவும் கவனத்தில் வைத்திருக்க வேண்டிய விஷயமொன்றிருக்கிறது. அதுதான் நாம் அடிபட்ட பாகத்தை ஒன்றும் செய்யக் கூடாது.

மேலும் விபத்து வீட்டிலும் அல்லது வீட்டிற்கருகாமையிலாவது ஒருவித சிகிச்சை இருக்கிறது. வீட்டிற்கு வெளியில் விபத்தானுல் வேறுவித சிகிச்சை இருக்கிறது. ஆதலால் இதை முதலில் நிர்ணயிக்கவேண்டும்.

முதலில் வீட்டினுள் அல்லது அருகாமையில் ஏற்பட்டதாக வைத்துக்கொள்வோம். விபத்திற்குள்ளானவனை உடனேபடுக்க வைக்கவேண்டும். இவ்வாறு படுக்க வைக்கும்பொழுது அவன் எவ்வாறு படுத்தால் வலி அதிகரிக்காதோ அவ்வாறு வைக்கவேண்டும்.

வலி மிகவும் அதிகமாயிருந்தால் ஒத்தடம் கொடுக்கவேண்டும். அடிபட்டு அதிக நேரமாகாதிருந்தால் ஐஸ் ஒத்தடம் கொடுக்கவேண்டும். ஐஸ் அகப்படாவிட்டால் ஒரு துணியை தண்ணீரில் நனைத்து அதன்மேல் கட்டிவிடவேண்டும். அடிபட்டு அதிக நேரமாயிருந்தால் வெந்நீர் ஒத்தடம்தான் கொடுக்கவேண்டும். ஒரு கம்பளியை எடுத்து அதை வெந்நீரில் நனைத்து ஒத்தடம் கொடுக்கலாம். அல்லது ஒரு புட்டியில் வெந்நீரை ஊற்றி அதை அடிபட்ட பாகத்தின் மேல் வைக்கலாம்.

விபத்து வீட்டிற்கு வெளியில் ஏற்பட்டால் வேறுவித சிகிச்சை இருக்கிறதல்லவா? இங்கும் நாம் அதிகமாக ஒன்றும் செய்யக் கூடாது. அடிபட்ட பாகத்தை வலி அதிகரிக்கவிடாமல் மிருதுவான வஸ்துக்களை தாங்கக் கொடுத்து தூக்கிவரவேண்டும். தூக்கிவரும் பொழுது மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். வலியை அதிகரிக்க விடக்கூடாது.

இங்கு முழங்கால் விபத்திற்குள்ளாயிருப்பதனுல் அடிபட்டவனை ஸ்ட்ரெச்சரில் தூக்கி வருவது மிகவும் நலம்.





ஹிந்தி உலகம் — हिन्दी जगत

-பண்டிதஜி-

काशी नागरी प्रचारिणी सभा की हीरक जयंती के सिलसिले में जो राष्ट्र-भाषा-सम्मेलन संपन्न हुआ, उसके अध्यक्ष-पद से भाषण करते हुए बिहार के राज्यपाल श्री रंगनाथ दिवाकर ने इस बात की 'ज़रूरत पर ज़ोर दिया कि हिन्दी में एकरूपता लाने के लिए हिन्दी संवाद-समिति का संघटन किया जाय। यह कार्य यदि प्रेस ट्रस्ट आफ़ इंडिया की वर्तमान संवाद-समिति स्वयं कर ले, तो उत्तम बात होगी। हिन्दी की एकरूपता एक महत्त्वपूर्ण प्रश्न है, इसपर राज्य-सरकारों को ध्यान देना चाहिए। आपने कहा—

"आज नागरी प्रचारिणी सभा को ६० वर्ष पूरे हुए और उसका काम आज तक जो हुआ, वह राष्ट्र के लिए अत्यंत उपयुक्त प्रतीत हुआ है। दशाब्दियों से, दूरदृष्टि से ऐसे प्रयत्न करनेवाली राष्ट्रीय संस्थाओं में यह सभा एक खास स्थान रखती है। राजकीय जागृति तथा स्वातंत्र्य-आंदोलन के पहले ही सांस्कृतिक जागृति और स्वभाषा-प्रगति के संबंध में आंदोलन होना, यह एक इतिहाससिद्ध बात है। आयरलैंड तथा इटली में ऐसा ही हुआ।

व्यवहार में हिन्दी

*

इसी प्रकार इस देश में नवजीवन की एक धारा राजकीय आंदोलन से भी पहले प्रचलित हो गयी थी। इससे राष्ट्रीय दृष्टि का उदय हुआ।

"यदि हम एक राष्ट्र हैं, तो हमें एक राष्ट्रीय भाषा आवश्यक है। ऐसी प्रबल आकांक्षा उन दिनों के नेताओं में उदित हुई। उसके फलस्वरूप नागरी प्रचारिणी सभा तथा अन्य संस्थाओं का निर्माण हुआ और राष्ट्र-भाषा के पुनरुज्जीवन और प्रचार की दृष्टि से काम होने लगा।

"गांधी युग के आरंभ से, याने सन् १९२० से, और राष्ट्रीय सभा ने हिन्दी को राष्ट्रभाषा के रूप में जब से अपना लिया तब से, हिन्दी-आंदोलन में एक नये चैतन्य का प्रवेश हुआ। छोटे-मोटे मतभेद आदि पहले से ही थे, लेकिन आम तौर पर यह बात मानी गयी और सर्वसम्मत हुई कि हमारे राष्ट्र को आसेतु-हिमाचल एक राष्ट्रभाषा की आवश्यकता है और उसका पालन, पोषण, समर्थन और संवर्द्धन, यह सब करने की ज़िम्मेदारी हर एक राष्ट्र-प्रेमी के कंधे पर है।

"सन् १९५० में जब हमारे भारत का संविधान अमल में आया, तब इस राष्ट्रभाषा के इतिहास में हमने तीसरी मंज़िल हासिल की। आज हमारे संविधान में राजभाषा के संबंध में जो विधान लिखित है और जो दूसरी भाषाएँ सूचित की गयी हैं, वे ही बातें हमारे लिए मार्गदर्शक हो सकती हैं।

"देवनागरी लिपि में लिखित हिन्दी भाषा और उसका स्थान हमारे राष्ट्रीय जीवन में अभी एक दृढ़ और कायम बुनियाद पर स्थापित किया गया है। इस विषय के संबंध में कुछ छोटे-मोटे मतभेद व्यक्त करना या संविधान-सभा की सम्मति से निर्धारित विधान में कुछ परिवर्तन करने का प्रयत्न करना, यह मेरी दृष्टि से राष्ट्र-भाषा को हानि पहुँचाना है। यदि हम उसमें परिवर्तन करने का आज प्रयत्न करें, तो फिर से हमें वही झगड़े लड़ने पड़ेंगे जो कि झगड़कर हम अभी इस बात पर संविधान-सभा के द्वारा स्थिर हुए हैं।

"इस बात की बीते हुए भी चार वर्ष हो गये। सब राज्यों में और केन्द्रीय सरकार में भी कुछ-न-कुछ प्रगति राष्ट्रभाषा के इस कार्य में हुई है। अधिक प्रगति होनी चाहिए, इसमें कोई संदेह नहीं; लेकिन उस दिशा में मनोयोगपूर्वक अधिकारीवर्ग तथा मंत्रीगण काम कर रहे हैं, इसमें तनिक भी संशय नहीं है। जनता की ओर से भी जहाँ-तहाँ और हर राज्य में प्रचार का काम चला है। संविधान बनने के पहले जो एक अनिश्चितता और अस्पष्टता थी, वह अब हट गयी है। राष्ट्र-भाषा को अधिकाधिक अपनाना है और इस क्षेत्र में किसीको अब कोई भी शक नहीं है। जब मैदान इतना साफ़ हो गया है, तो ऐसे समय पर राष्ट्रप्रेमियों और राष्ट्रभाषा-प्रेमियों का एकमात्र कर्तव्य यही है कि हम व्यवहार में जल्दी-से-जल्दी और अच्छे तरीके से इस राष्ट्रभाषा को लाएँ।

हीरा (ஆ. பா.) வைரம்

हीरक जयंती (பெ. பா.) வைரவிழா

सिलसिला (ஆ. பா.) தொடர்பு, சம்பந்தம்

राज्यपाल (ஆ. பா.) கவர்னர்

एकरूपता (பெ. பா.) ஒருமுகப்பாடு

संवाद (ஆ. பா.) சம்பாஷணை, செய்தி

संघटन (ஆ. பா.) அமைப்பு, நிர்மாணம்

प्रतीत होना தோன்றுதல், தெரிதல்

दशाब्दी (பெ. பா.) பத்து வருஷ காலம்

जागृति (பெ. பா.) விழிப்பு

प्रगति (பெ. பா.) முன்னேற்றம்

इतिहाससिद्ध சரித்திரபூர்வமான, சரித்திரம் அங்கீகரித்த

धारा (பெ. பா.) ஓட்டம், போக்கு

प्रचलित होना வழக்கிலிருத்தல், நடைமுறையில் இருத்தல்

आकांक्षा (பெ. பா.) ஆசை, ஆர்வம்

उदित होना உதயமாகுதல், தோன்றுதல்

पुनरुज्जीवन (ஆ. பா.) மறுமலர்ச்சி

चैतन्य (ஆ. பா.) உணர்வு

आम तौर पर பொதுப்படையாக

आसेतु हिमाचल சேதுமுதல் இமயம் வரை

मंज़िल (பெ. பா.) பிரயாண கட்டம்

बुनियाद (பெ. பா.) அடிப்படை

बीतना கழிதல், கடத்தல்

मनोयोग (ஆ. பா.) ஈடுபாடு

संशय—शक (ஆ. பா.) சந்தேகம்

जहाँ-तहाँ எங்கும்

ता अनिश्चि (பெ. பா.) நிச்சயமற்ற தன்மை

एकमात्र ஒரே

कर्तव्य (ஆ பா.) கடமை

व्यवहार (ஆ. பா.) நடைமுறை

तरीका (ஆ. பா.) முறை, விதம்

जय हिन्द! जय हिन्दी!

இந்திய விமானப் படையின் ஆண்டுவிழாவையொட்டி 28-ந் தேதி டில்லிக்கு 14 மைல் தூரத்தில் உள்ள டில்பட் கிராமத்தில் விமானங்களின் அணிவகுப்பு நடந்தது. இதில் கலந்துகொண்ட பிரதமர் பண்டித நேரு மேலே உள்ள ஹெலிகாப்டர் விமானத்தில் டில்லி திரும்பினார்

குடும்ப வைத்தியம்: குச்சா மாமா

“கோடை கழியுமட்டும்”

★

கோடை காலம் கழியும்வரையில் அனுஷ்டிக்கத்தக்கவை சிலவற்றைச் சென்ற கட்டுரையில் கண்டோம். இனி தவிர்க்கவேண்டியவை சிலவற்றை இப்போது தெரிவித்தாலன்றி கோடையைப் பற்றிய எச்சரிக்கை பூர்த்தியாகாது.

பாதரக்ஷை இல்லாமல் நடத்தலால் பல துன்பங்கள் வரக்கூடும். நாட்டுப்புறங்களில் இவ்வகைத் துன்பத்திற்கு அவ்வளவாக இடமில்லை. பட்டண வாஸத்தில் தான் அதிகமாக இவ்வித ஆபத்து இருப்பதால் இதைப்பற்றி முக்கியமாக நகரவாசிகளுக்கு எச்சரிக்கை விடுக்கவேண்டியிருக்கிறது.

தார் பூசிய ரோடுகளில் வெய்யிலில் உருகிய தாரின்மேல் நடப்பதால் கால்கள் கொப்பளித்துப்போகும். இது யாருக்குத்தான் தெரியாது! கொப்பளிக்கத் தக்கவளவு சூடில்லாவிடினும், பாதங்கள் உஷ்ணமாவதாலும் தாரின் ஆவியைக் கொள்வதாலும் கண்களில் பலவகை வியாதிகள் வருவது மிக சாதாரணம். எளிய சிகிச்சைகளால் சில தினங்களில் இவை குணமாகியும் விடும். ஆனால் அவ்வளவு எளிதில் குணமாகாதவையும் பார்வையை நிரந்தரமாகவே பாதிக்கக்கூடியவையுமான வேறு சில கொடுமை மிக்க கண் நோய்கள் வரவுங்கூடுமானதால் தார் ரோடுகளில் கோடையில் செருப்பு போன்ற பாதரக்ஷை இல்லாமல் நடப்பது நன்றன்று. முக்கியமாக வெய்யிலில் நடந்துவந்ததும் தண்ணீரால் கால்களைக் கழுவிக்கொள்ள வேணுமென்ற அவா தடுக்கமுடியாதது. ஆனால் அவ்வளவு உஷ்ணம் ஏறியுள்ளவளவில் திடீரெனத் தண்ணீரில் கால்களைக் கழுவி அவ்வுஷ்ணத்தைத் தணித்துக்கொள்வதால் ‘நகுலாந்தம்’ என்பது போன்ற நேத்திர ரோகங்கள் உண்டாகுமெனச் சாஸ்திரம் சொல்லுகிறது. ஒரு பொருளைப் பார்க்கும்பொழுது வானவில்லில் காண்பதுபோல் பல நிறங்களும் ஒருங்கே பெற்ற தாய்க்காணலே நகுலாந்தம் எனப்படுவது. இரவிலோ மாலைக்கண் என்னும் நோயும் வரலாம். ஆகவே வெய்யிலில் செருப்பில்லாமல் நடக்கவேண்டாம். கால் சூடாகியுள்ளபோது..தானே சூடு தணிந்த பிறகல்லாது திடீரென தண்ணீரில் கால்களைக் கழுவி தணிப்பிக்கவும் வேண்டாம்.

வெளியில் செல்லும்போது ஒரு ‘நுகத்தடி’ தூரத்திற்கு மேல் திருஷ்டி செல்லாதபடி கட்டுப்பாடுடன் திருஷ்டியைச் செலுத்துவதும் மிக மிக அவசியம். அன்றேல், தலைசுற்றல்கண்ணிருட்டல், தலைவலி, மயக்கம், மூர்ச்சை முதலியவையுண்டாகும். பட்டண வாஸங்களில் அது முடியுமா என்று சிலர் கேட்கலாம். நடபாதைகளின் மேலேயே நடந்து செல்வது கூடுமானவரையில் வெய்யில் அதிகமாவதற்கு முன்னதாகவும், வெய்யில் நன்றாய்த் தாழ்ந்த பிறகுமே வெளியில் செல்வது என்ற நியமங்களையாவது ஏற்கலாமே! மற்றும் நிழலிலேயே செல்வது அல்லது குடை பிடித்துச் செல்வது என்பதும் மிகவும் அவசியம். தார் பூசாத ரோடுகளிலோ சிறிய கூரான கற்கள் காலைக் குத்திடலாம். இதையும் யாவருமறிவர். கற்றுண்டுகளிலுள்ள சில உலோகப் பொருள்கள் வெய்யிலில் ஓரளவு உருகியிருக்கும். அப்போது இக்கற்கள் காலில் தைப்பதால், அங்கு விஷமேறி குதிகொள்ளன் போன்றவை உண்டாகலாம். குதிகொள்ளன் வருவதும் மிகக் கடுமையானநோய்எனச்சொல்லிவிட முடியாது. சிலருக்கு இவ்வகையில் கற்கள் காலில் குத்திய காரணமாக, காலில் ‘ஆணி’ விழத் தொடங்கிவிடும். இதனால் நெடுநாள் துன்புற நேரிடும். இவ்வகைத் துன்பம் ஏற்படுவதற்குற்ற நிலை முக்கியமாகவும் கோடையில்தான் அதிகம். ஆனதால் மேற்சொன்ன எச்சரிக்கைகள் மிகவும் முக்கியமானவை.

காலையில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால், அன்றைய தினம் வெய்யிலில் போக நேரிடுமாயின் வியர்வை அதிகமாதல், தலைவலி, முதலிய சிறிய உபத்திரவங்களும் ஜடுதியில் ஜலதோஷம், மார்சளி, இருமல், ஜுரம் முதலிய வலிய உபத்திரவங்களும் உண்டாக ஏதுவாகும். இவ்விதம் வரும் ஜுரம் சில சமயம் மிகவும் கடுமையானதாகவும் — ஸந்நிபாத ஜுரமாகவும் ஏற்பட்டுவிடக்கூடும். ஆகவே எண்ணெய் தேய்த்துக் குளித்த தினம் வெய்யிலில் போகவே கூடாது. இது இயலாத காரியம். ஆகவே, மாலையில், சரீரத்தில் வியர்வை அடங்கிய பிறகு எண்ணெய்க் குளி செய்வதும், இரவு ஓய்வு பெற்றிருத்தலும் இடுக்கண்களைத் தவிர்க்கவல்ல சிறந்த முறையாகும். அல்லது விடுமுறை நாட்களில் எண்ணெய்க்குளி பெறலாமல்லவா? வெய்யிலில் சென்று வீட்டிற்கோ காரியாலயத்திற்கோ சேரும்பொழுதும், அதிகமாக வியர்த்தும் உஷ்ணித்தும் உள்ளபோதும் திடீரெனதண்மை பெறும் வகையில் எலக்டிரிக் வசிரியின் கீழிருத்தலும், ஐஸ் முதலியவை கூடிய பானங்களை யருந்துதலும் கூடாது. படிப்படியாகவே தணிப்பை ஏற்கவேண்டும். முதலில் வியர்வையைத் துடைத்துக்கொண்டு, முக்கியமாக தலை மார்பு முதுகுகளைத் துடைத்துக்கொண்டு — சிறிதளவு உஷ்ணம் குறைந்த பிறகே, மேற்சொன்னபடி எலக்டிரிக் விசிரியின் தாழத்திலோ, ஏர்கண்டிஷன்டு அறைகளிலோ செல்லல் வேண்டும். அவ்விடமிருந்து வெளியில் வரும்போதும் சற்று நேரம் வெளிவராந்தாவிலிருந்து சிறிதளவு உஷ்ணக்காற்று ஏற்ற

பிறகு வெளியே வருவதுதான் முறை.

வியர்வை அதிகமாவதால் சரீரத்தில் ஜலாம்சம் குறையும். மூத்திரம் வெகு சிறிதளவுதான் போகும். அதனால் ஓரளவு கழிவுப் பொருள்கள் சரீரத்திலேயே தங்கி நின்றிட நேரிடும். இது சரீரத்திற்குக் கெடுதியை உண்டாக்கும். மற்றும், இதன்பேரில் வெய்யிலும் கொள்வதால் ஸந்நியாசம் என்றது போன்ற ரோகமுண்டாகும். மூர்ச்சையுற்றுக் கீழே விழும் மனிதன் — திரும்பவும் நினைவே வராமலிருந்து சில மணி நேரத்திலோ — அல்லது உடனேயோ இறந்தும் போய்விடக்கூடும். ‘ஸன்ஸ்ட்ரோக்’ என்னும் நோய் இவ்வகையைச் சேர்ந்தது. தாராளமாக ஜலாம்சம் சரீரத்திலிருக்குமாறு கவனித்துக்கொள்வதும் தாராளமாக மூத்திரம் போகும் வகையைத் தேடிக்கொள்வதும் இந்நோயைத் தடுக்கும் வகையில் செய்யத் தக்கவையாகும். ஏற்கெனவே தெரிவித்தபடி தனியா, ஜீரகம் இவை கூட்டிக் காய்ச்சிய நீரை குளிரவைத்துக் குடிப்பதால் மேற்சொன்ன இரு வகைப் பயன்களும் கிடைக்கும்.

இரவில் படுக்கப் போகும் முன்போ, காலையில் குளிக்கப் போகும் முன்போ உள்ளங்கால்களில் ஆமணக்கெண்ணெயைத் தடவித் தேய்த்துச் சற்று ஊறிடச் செய்வது உஷ்ணந் தலைக்குங் கண்ணுக்குமேறாமல் தடுப்பதோடு, மேற்சொன்ன ‘ஸன்ஸ்ட்ரோக்’ போன்றவை உண்டாகாமல் தடுக்கவும் உற்றவழியாகும்.

பட்டிக்காடுகளில் வாழும் பண்புமிக்க, ஆனால் எழுதப் படிக்கத் தெரியாத பாமரர்களிடையில் ஒரு பழக்கமுண்டு. நாகரீகத்தின் கொடுமையை மட்டும் அறிந்து சீலித்துவரும் நகரவாசிகளுக்கு இப்பழக்கம் விரோதமானதாகத் தோன்றும். பகல் முழுவதும் வெய்யலில் திரியும் இப்பட்டிக் காட்டாரில் யாருக்காவது, என்றைக்காவது இந்த ‘ஸன்ஸ்ட்ரோக்’ வந்ததெனக் கேட்டவருண்டா? வெய்யிலென்றும், மழையென்றும் பாராது பிறந்த நாள் முதல் வெளியிலேயே வாழ்ந்துவரும் ‘குருவிக்காரர்’ என்னும் கூட்டத்தாரில் யாருக்காவது பிரஸவ காலத்தில் ஏதாவது கஷ்டமேற்பட்டதாகவோ ஒரு டாக்டரோ, நர்ஸோ— மருத்துவச்சியோ போய் ஸஹாயத்துக்காகவோ—ஏதாவது ஒரு வியாதியால் இவர்களுள் யாராவது ஒருவர் ஒரு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றான் என்றோ— இறந்தான் என்றோ அறிவோமா? நாகரீகத்தின் பெயரால் நமது சில பழக்க வழக்கங்களை நாம் விட்டுவிடுகிறோம். அதனால் சரீரத்தின் சகிப்புத்தன்மை குறைகிறது. சில புதிய பழக்கங்களை புகுத்திக்கொள்கிறோம். அதனால் சில ரோகங்களுக்கு எளிதில் இலக்காகும் நிலையை வருத்திக் கொள்கிறோம். மேற்சொன்ன நாட்டு (ப்புறத்து) மக்கள் இவ்வெய்யிற் காலத்தில், வாரத்திற்கொருமுறை தவறாமலும், சில சமயங்களில் சிலர் வாரத்திற்கிருமுறையும் தலைக்குக் களி

மண் குழம்பிட்டுத் தேய்த்துக் குளிப்பர். ஏழை பங்காளனை காந்தியடிகளும் இவ்வாறு தலைக்குக் களிமண் பூச்சேற்றிருப்பதுண்டு எனக் கேட்டிருக்கிறேம். சிலர் இதை நேரில் கண்டும் இருக்கலாம். இப்பழக்கமுள்ளவருக்கு 'ஸன்ஸ்ட்ரோக்' போன்றவை வராது என்பது மட்டுமல்ல. ரத்தத்தின் அமுக்கம் (ப்ளட்ப்ரஷர்) அதிகமாகி அதனல் ஏற்படும் பலவித நோய்களும், ஏற்படக்கூடிய பலவித உபத்திரவமான விளைவுகளும் தடுக்கப்படுவது திண்ணம். இவ்வகை மிருத்திகா ஸ்நானம் நமக்கு வசதிப்படாதென்ருலும், வெள்ளை மிளகைப் பாலில் அரைத்தோ, வெந்தயத்தை அரைத்தோ, வடித்த கஞ்சியையாவது தலைக்குத் தேய்த்துக்கொண்டு ஸ்நானம்செய்துவருவது முக்கியமாகவும் கோடையில் விரும்பத்தக்கதாகும். கும்பலும் கூட்டமும் அதிகமுள்ளவிடங்களிலும், பஸ்ஸிலும் ஸினிமாக் கொட்டகையிலும் நெருக்குண்டும் அடைபட்டும் இருப்பதாலும் பலவகை தொத்து நோய்கள், முக்கியமாக குழந்தைகளுக்கு உண்டாவது இக்கோடையில் சர்வசாதாரணம். எலக்ட்ரிக் விசிறி இருக்கிறதென்றும், இராப்பொழுதுதானதால் வெய்யிலில்லையே என்றும் சொல்லலாம். திரளான ஜனங்கள் அடைபட்டிருக்கும்இடத்தில் சில மணி நேரம் இருப்பதே, இக்கோடையில் முக்கியமாக சிறுவருக்குப் பெருந்துன்பத்தை விளைவிக்கும். ஆகவே இதைத் தவிர்த்தலும் மிகமிக அவசியம். ஆயினும் 'இரண்டு மணி ஆட்டத்திற்காக 12 மணி முதல் கைக்குழந்தையை இடுப்பில் சுமந்தபடி க்யூ வரிசையில் நின்று மிகக்கடுமையான வெய்யிலைப் பொருட்படுத்தாது டிக்கெட்டு வாங்கி, ஸினிமாவையும் பார்த்துவிட்டு, காரியாலயம் சென்றுள்ள புருஷன் வீடு திரும்பும் முன் தாமும் வீடுவந்து சேர்ந்து உலகமேயறியாத ஸாதுக்கள்போல் நடிக்கும் கிரகலக்ஷ்மிகளைப்பற்றி என்ன சொல்கிறீர் மாமா?' என்று கேட்பீர்களானல், நான் சொல்லக்கூடியது ஒன்று; அந்த (பர) தேவதைகளுக்குத் தூரத்திலிருந்தே நான் அருப்பிக்கும் இந்த அஞ்சலிகள்; மற்றென்று, அத்தேவதைகளின் வாழ்க்கைத் துணைவர்களான அப்பாவிகள் இவ்விஷயத்தை யறிந்து வெறுப்புற்றுக் கூசாமல் ஸந்நியாசங் கொள்ளாமலிருத்தற்கு எனது வியப்பு.

எப்படியாயினும் மேற்கண்ட விஷயம் எனது கற்பனையல்ல. எனது கண்களால் கண்டதுதான் இவ்விதம் அவர்கள் செய்யக் கூடாதென்பது சுதந்தரத்தைக் குறைப்பதாகும். அந்த (வீண்) வேலை எனக்கு வேண்டாம். ஆயினும் கோடையை உத்தேசித்து அப்பழக்கத்திலுள்ள ஆபத்துக்களை எச்சரிக்கை என்றவகையில் எடுத்துரைத்தேன்.

தேள் கொட்டி அவஸ்தை உண்டாவதும் கோடையில் சாதாரண அனுபவம், தேளின் விஷத்திற்குப் பலவித பரிகாரங்கள் மித்திரனில் வெளியாகியுள்ளன உப்புச் சட்டி, சாணக்குவியல் முதலிய இடங்களிலும் குப்பை கூளங்கள் குமியும் இடங்களிலுந்தான் தேள் இருப்பது அதிகம். வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்வது அவசியம். பார்க்காமல் தேளிருக்கக்கூடிய இடங்களில் புழங்காமலும், இருட்டாகவுள்ள மூலைகளில் கைவிடாமலும் இருப்பதுதான் நமது ஜாக்கிரதைக்கு உட்பட்ட விஷயங்களாகும்.



முற்றிலும் இந்திய முயற்சியினல், பிரசித்தி பெற்ற வாட்டர்மன்ஸ் உயர்தர முறைப்படி தயாரிக்கப்படுகிறது.

முனை வரை நிரப்பும் புட்டி
நிரப்புவது சுலபம்
கையாளுவது சௌகரியம்.


'லக்' வகை மூடி!
அழுத்தமாக மூடும் - சுலபமாக திறக்கலாம்.
இங்க் கசியாது.
விசேஷமான காற்றை-அரிப்பைத் தடுத்து,
மையின் தரத்தை பாதுகாக்கும்.

இந்தியாவிற்கு ஏகபோக சலுகையாளர்கள் :
ரைட்எயிட்ஸ் (ஓரியண்ட்) லிமிடெட், மதராஸ்-1
பூரண விற்பனை ஏஜண்டுகள் :
டி. டி. கிருஷ்ணமாச்சாரி & கம்பெனி.
மதராஸ் பம்பாய் கல்கத்தா டில்லி

தையற்கலையும் விஞ்ஞானமும்

★

ஏ. சுகுமார், டி. எம். டி. சி. ஏ. லண்டன்

உடை வெட்டும் முறைகளின் சரித்திரம்

(சென்றவார தொடர்ச்சி)

உலகம் பூராவிலும் உடை தயாரிப்பது ஒரு வியாபார தொழிலாக ஆகிவிட்டது. மேற்கூறிய நான்கு ஆதாரங்களின்மேல் அளவு எடுக்கும் முறை கீழ்க்கண்ட 2 பிரிவுகளின் மூலம் செய்யப்படுகிறது. 1, கழித்தல் முறை 2. நேரடியாக அளவு எடுக்கும்முறை முன் கூறியது இந்த நான்கு அளவுகளின் சமநிலை கண்டுபிடிப்பது ஒரு அளவிலிருந்து கூட்டுதல், கழித்தல் போன்றவைகளிலிருந்து நிர்ணயிக்கப்படுகிறது. பின் கூறியது நான்குபிரிவுகளுக்கும் நிர்ணயிக்கும் சமநிலை அளவு நேரடியாக மனித உடலின்மேல் அந்தந்த இடங்களில் எடுக்கப்பட்டு நிர்ணயிக்கப்படுகிறது. இம்மாதிரி உலகத்தில் நடைமுறையில் வெட்டுதலை மூன்று முக்கியமான பிரிவுகளாக பிரிக்கப்பட்ட ஆதாரத்தின்மீது செய்யப்பட்டு வருகிறது. 1. மார்பு சுற்றளவிலிருந்து கணக்கிடுதல். (பிரபோர்ஷனேட் ஸிஸ்டம்) 2 தோள்சுற்றளவிலிருந்து கணக்கிடுதல் (மிடில் ஷோல்டர் மெஷர் சிஸ்டம்) 3 நேரடியாக எடுக்கப்பட்டு கணக்கிடுதல் (டைரக்ட் மெஷர் சிஸ்டம்) இவைகளைக் கண்டுபிடித்தவர்கள் நூறு ஆண்டுகளுக்குமுன் இவை ஒவ்வொன்றின் அடிப்படையான ஆதார முறைகளைக் கண்டுபிடித்து இவற்றை அக்காலத்திலிருந்து நடைமுறையில் கொண்டுவந்து இன்றுகூட. தையல் தொழிலை வாழ்க்கைக்காக பயன்படுத்துபவர்கள் உபயோகித்து வருகின்றனர்.

வெட்டுதல் முறையின் ஆரம்ப விதிகள் நம் நாட்டில் ஆதிகாலங்களிலிருந்ததாக கூறுவதற்கு போதிய ஆதாரமில்லை. ஆனல் மேல் நாடுகளில் வெட்டுதல் முறையின் ஆரம்ப விதிகள் எழுத்தறிவில்லாத காலத்திலேயே மறைந்துவிட்டது என கூறுகிறர்கள். இதற்குக் காரணம் முந்நாட்களில் எழுதியவர்கள் தொழில் நுணுக்க சம்பந்தமான விஷயங்களைப்பற்றி அதிக கவனம் செலுத்தாததேயாகும். உலகத்தில் ஒழுங்கான வெட்டுதல் முறையைப் பற்றியதாவது ஒருபுத்தகம்பிரசுரமாகியிருக்கிறதா என்பதை முயற்சிசெய்து

நீடித்து உழைப்பதும், தீபற்றாததுமான
காங்கிரீட்
உபயோகித்து உங்கள் பண்ணைகளை
நவீன முறையில் அமையுங்கள்



ஏ. சி. சி. நீலகிரி பிராண்டு சிமெண்டு
என்று குறிப்பிடுங்கள்.
பிரிடிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷன் நெ. 12 (1947), இந்தியன் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷன் (1951) இவைகளுக்கு ஒரளவு மிஞ்சியே நிற்கும் ஏ. ஸி. ஸி. நீலகிரி பிராண்டு சிமெண்டு இப்பொழுது தென் இந்தியாவில் கிடைக்கிறது.

காங்கிரீட் கட்டட சம்பந்தமான எல்லா பிரச்னைகளுக்கும் தி காங்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா 9, மௌண்ட் ரோடு, மதருஸ் அல்லது ஷூகர் கம்பெனி பில்டிங், பெங்களூர் என்ற விலாசத்திற்கு எழுதி தொழில்நுட்ப ஆலோசனைகளை இலவசமாகப் பெறுங்கள்.

உங்கள் தேவைகளுக்கு உடனே எழுதுங்கள். அருகாமையிலுள்ள ஸி. எம். ஐ. ஸ்டாகிஸ்டு அல்லது வியாபாரியிடமோ அல்லது நேரகவோ.

தி
சிமெண்ட் மார்க்கெட்டிங்
கம்பெனி ஆப் இந்தியா லிட்.

9, மௌண்ட் ரோடு, மதருஸ். ● 4/12, ரேஸ் கோர்ஸ் ரோடு, கோயமுத்தூர் ● ஷூகர் கம்பெனி பில்டிங், பெங்களூர்.

SISTA'S-CMI-156-TAMIL

பார்த்தோமானால் மேல் நாட்டில் இங்கிலாந்தில் 1818-ம் ஆண்டில் 'ஹேண்' என்பவரால் அந்நாட்களில் இருந்து வந்த நாகரீகத்துக்கு ஏற்றவாறு வெட்டுதல் முறையை தனக்கு தெரிந்த வரையில் எழுதி அச்சிட்டு புத்தக ரூபமாக வெளியிட்டுள்ளார். இவர் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட முறை 'பிரஸ்ட் மெஷர் சிஸ்டம்' என வழங்கின. அதற்கு அடுத்தாண்டு 1820-ம் ஆண்டில் மேற்கூறிய ஆசிரியர் 'டைரக்ட் மெஷர் சிஸ்டம்' கண்டுபிடித்தார். அதன் பிறகு அதே ஆண்டில் ஜெர்மனியைச் சேர்ந்த 'மைக்கில்' என்பவர் லண்டனில் 'ஓல்ட் தேட்' முறையைக் கண்டுபிடித்தார். இந்த முறைப்படி கோட்டுகள் மட்டும் வெட்டுவதற்கு அதாவது மார்னிங் கோட், டிரஸ் கோட், பிராக்கோட் முதலியவைகளுக்கு உபயோகமாகவும் அந்த காலங்களில் அதாவது 1820-லிருந்து 1870 வரை, அரை நூற்றாண்டு காலம் மிகவும் பிரசித்தமாக இருந்தது. மைக்கில் என்பவர் ஜெர்மன் தேசத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும் இவர் 30 வருட காலம் லண்டனில் உள்ள 'மினிஸ்டர்ஸ் கட்டிங் அக்கடமி' என்ற தையல் கலாசாலையில் பேராசிரியராக பணியாற்றி வந்தவர். இந்த முறையிலிருந்து சில மாறுதலுடன் மைக்கிலின் பிரதம மாணவரான ஹட்கண்ஷன் என்பவரால் 'கிளை மெக்ஸ்' என்ற முறை கண்டுபிடிக்கப்பட்டு அவர் அதை புத்தக ரூபமாக வெளியிட்டார். ஹட்கண்ஷன் என்பவர் மேற்படி கலாசாலையில் பேராசிரியராக இருந்த காலத்தில்தான் அந்த ஸ்தாபனம் ஐரோப்பா பூராவும் போற்றும் ஸ்தாபனமாக விளங்கியது. 1840-ல் நியூயார்க்கைச் சேர்ந்த டி. ஆலிவர்' என்பவரால் லண்டனில் 'மிடில் ஷோல்டர் மெஷர் சிஸ்டம்' என்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் ஷோல்டர் மெஷர் சிஸ்டத்தின் அடிப்படை தத்துவத்தை லண்டனைச் சேர்ந்த ஆட்டோ மெடிஷன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது என சொல்லப்படுகிறது. இவரிடந்தான் மேற்கூறிய டி. ஆலிவர் என்பவர் உதவியாளராக வேலை கற்றுவந்தார். 'பர்மிங்காமை'ச் சேர்ந்த ஜே. சி. ஆப்கின்ஸ் என்பவர் 'ஷோல்டர் மெஷர் சிஸ்டத்தின் அடிப்படையை மேலும் விளக்கமாக கூறியுள்ளார். லண்டனைச் சேர்ந்த ஜே. பி. தார்ண்டன் என்பவர் இந்த முறைக்கு அதிகார பூர்வமான ஆசிரியராக திகழ்ந்தார். இவர்தான் இந்த முறைக்கு அடிப்படையான மிடில் ஷோல்டர் அளவுடன் மேலும் 2 அளவுகளான 'அப்பர் ஷோல்டர்', 'லோயர் ஷோல்டர்' முதலியவைகளைக் கண்டுபிடித்தவர். ஆப்கின்ஸ் என்பவர் அப்பர் ஷோல்டர் என்பதை ஒப்புக்கொள்ளவில்லை. இவர் தார்ண்டனின் நெருங்கிய நண்பர். ஆயினும் தார்ண்டன் என்பவர் ஷோல்டர் மெஷரின் அடிப்படையில் ஏற்படும் கோளாறுகளை விளக்கி கூறியதுடன் அப்பர் ஷோல்டர் மெஷரைப்பற்றி விவரமாக கூறியுள்ளார். இந்த முறைகள் அந்த கால நாகரீக உடைகளுக்கு பொருந்தியிருக்கின்றனவே தவிர, இன்று அது நடைமுறை உபயோகத்திற்கு பயன்படுவதில்லை. காரணம் இன்றைய நாகரீக வளர்ச்சியின், மாதிரி (ஸ்டைல்) மாறுதல்தான். ஆதி காலத்தில் அடிப்படையாக அளவு எடுக்கும் முறையை ஆதாரமாகக் கொண்டு வெட்டும்போது மேற்கூறிய 4 அளவுகளும் மார்பு சுற்றளவிலிருந்து எடுத்து, அதில் கணக்கிடப்படும் அளவாகக் கொண்டு வெட்டப்பட்டு வந்தன எனத்தெரிகிறது. இம்மாதிரியான முறை 1834-க்கு முன்பே ஜெர்மன் தேசத்தில் நடைமுறையிலிருந்திருக்க வேண்டும். ஏனெனில் டாக்டர் வேம்பன் என்பவர், ஹாம்பர்க்கிலிருந்து பிரசுரித்த ஒரு தையல் கலைப் புத்தகத்தில் இதை ஆதாரமாகக்கொண்டு எழுதியுள்ளார். டாக்டர் 'வேம்பன்' என்பவர் ஜெர்மன் தேச கணித பேராசிரியர். அவர் தன்னுடைய நூலில் தன்னை ஒரு தையல் தொழிலாளி உடை வெட்டுவதற்கு விஞ்ஞானத்தின் ஆதாரப்படி ஒரு வழியைக் கண்டுபிடிக்கும்படி கூறினார் [illegible] கூறியுள்ளார். மேலும் இவ்வழி[illegible]ண்டுபிடிப்பதற்கு தையல் கலை சம்பந்தமான சில புத்தகங்களையும் கொடுத்து உதவினாராம் அத்தொழிலாளி. டாக்டர் ஹென்றிவேம்பன் மனித உடலுக்கு உடை அமைப்பது என்பதில் ஒரு அதிகார பூர்வமான ஆசிரியராக திகழ்ந்தவர். இவர் மார்பு சுற்றளவு, உயரம் இவைகளை வைத்துக் கொண்டே மனிதனுடைய உடல் பாகங்கள் எம்மாதிரி அமைந்திருக்கும் என்பதை தெள்ளத்தெளிவாக விவரித்துள்ளார். வேம்பன் காட்டிய வழியிலே பலர் தங்களது செயல்திறன் மூலம் உடை அமைத்தலை அக்காலத்தில் செய்துவந்தனர்.

'ஓல்ட்தேட்முறை'யை மைக்கில்என்பவர் புத்தக ரூபமாக 1820-ம் ஆண்டில் வெளியிட்டபோதிலும்,இந்தமுறை மிக பழமையான வெட்டுதல் முறையாகும். அந்தக் காலத்தில் இந்த முறைக்கு 'பைபிங்கர்ஸிஸ்டம்' என வழங்கிவந்தனர் 'பைபிங்கர் ஸிஸ்டம்' (ஐந்து விரல் முறை) என்பது, இடது கைவிரல்கள் விரிக்கப்பட்டு, அந்த கை மணிக்கட்டை வேண்டிய பொருளின் இடது கை ஓரத்தில் வைத்து, ஒரு வட்ட வடிவத்தை அக்கை பரப்பின்மீது வரைய வேண்டும்; இதை விரல்களின் பூட்டின் உதவியினால் வரையலாம். இது முண்டாவை ('ஸையை') தோற்றுவிக்க ஒரு திறவுகோலைப்போல் உதவியளிக்கிறது. முண்டாவின் தோள் சாய்வு முனையை; கைவைத்த இடத்தில் இருந்து கணக்கெடுத்துக்கொள்ளலாம். இந்த முறைதான் இன்றைய வெட்டுதல் முறைகளுக்கு தாய் முறையாக விளங்குகிறது. இந்த முறையைக் கையாண்ட காலம் 16-வது நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது. இதை அடிப்படையாகக் கொண்டுதான் 'மைக்கில்' என்பவர் 'ஓல்ட்தேட்' முறையை கண்டுபிடித்தார்.

கடந்த 50 ஆண்டுகளாக தையல் கலையில் வெட்டும் முறைகள் பெரும் மாறுதல்கள் அடைந்திருக்கிறது மட்டுமல்ல, மிகவும் முன்னேறியிருக்கிறது. டாக்டர் வேம்பனுக்கு பிறகு அவர் வழியை பின்பற்றிய தையல் கலை நிபுணர்கள் பலதரப்பட்ட வெட்டும் முறைகளைக் கண்டுபிடித்தனர். அவைகளில் மிகவும் முக்கியமாக இன்றைய உலகத்தில் புகழுக்குரிய முறை 'கட்டர்ஸ் ப்ராக்டிகல் கெயிட்ஸிஸ்டம்' என்பதாகும். (இதை தொழில் முறையில் சி. பி. ஜி. ஸிஸ்டம் என்பது வழக்கம்) இந்த முறை 25 ஆண்டுகளுக்குமுன் உள்ள உடைகளின் பேஷனுக்கு பொருந்தியதாக இருந்தபடியால் இதை முதலில் கண்டுபிடித்து நடைமுறையில் அறிமுகப்படுத்தியவரும், இதை புத்தகரூபமாக வெளியிட்ட ஆசிரியரும், டபிள்யூ. டி. எப். வின்ஸன்ட் என்பவராவார். இவர் பல வருஷங்கள் 'டெயிலர் அண்ட் கட்டர் அக்கடமி' என்ற தையல்கலை கல்லூரியின் பேராசிரியர் (பிரின்ஸிபால்) ஆகவும் தொண்டாற்றியவர். அவர் காலத்திலிருந்துதான் 'டெயிலர் அண்ட் கட்டர்' உலகம் போற்றும் ஸ்தாபனமாக வழங்கலாயிற்று.

உடைகள் தயாரிப்பதற்கு முன் காலத்திலிருந்தே மேலே நாடுகளில் ஒரு ஒழுங்குமுறை வகுக்கப்பட்டு உடைகளை, விஞ்ஞான ரீதியாக வெட்டியும், தைத்தும், பல ஆராய்ச்சிகள் செய்ததன் காரணமாக இன்று மேல் நாடுகளில் தையல் தொழில் மிகவும் முன்னேற்றமடைந்திருக்கிறது என்பதை நாம் மறுக்கமுடியாது. மேலும் அவர்கள் சில ஆண்டுகளாக சுலபமாகவும் குறுகிய காலத்தில் உடைகளை வெட்ட புதுமுறை ஒன்றை கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த முறைக்கு 'ப்ரொபோர்ஷனேட் ஸிஸ்டம்' என்று பெயர்.

ப்ரொபோர்ஷனேட் ஸிஸ்டம் என்பது பல்லாயிரக்கணக்கான, சராசரியான மனிதர்களின் உயரத்தையும்,சுற்றளவையும் அடிப்படையாகக்கொண்டு நிர்ணயிக்கப்பட்டது. இம்முறை சிறியவர்கள், பெண்கள் முதலியவர்களின் உடை வெட்டுவதற்கும் பொருத்தமான வகையில் வகுக்கப்பட்டிருக்கிறது.

உங்கள் காலபலன்

[29-ம்பக்கத்தொடர்ச்சி]

வீட்டு சூழ்நிலை: சந்தோஷம் இராது. உச்ச சனியுடன் 10-க்குடைய சுக்ரன் ஸ்வக்ஷேத்ரத்தில் இருப்பது உங்களுக்கு வெற்று கௌரவத்தைக் கொடுக்கும். இதனால் உங்கள் அந்தரங்கசுத்தி குலையும். இதன்விளைவாக மக்களிடத்தில் உங்கள் அ[illegible] பிரயோஜனமற்றதாகும்.

ஆபீஸ்: திடீர் மாற்றலோ அல்லது உயர்வுடன் கூடிய வேலை மாறுதலோ ஏற்படும். பொறுப்பு அதிகரிக்கும். கீழே சிப்பந்திகளும் இருப்பார்கள்.

வியாபாரிகள்: மிகச் சிரமங்கள் இருந்தபோதிலும் சுபிட்சம் ஏற்படும். ஹேஷ்யங்களில் லாபம் இருக்கும். ஆனால் கூட்டாளி ஒருவர் விரோதமாக வேலை செய்வார்.

17 18 20—25 27—28 மே 1 2 3 4 6 11 12 14 அதிருஷ்ட நாட்கள். 15 19 26 27 மே 7 8 நன்றாக இல்லை.

கும்ப ராசி

அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய

கிரக பலன்கள் இம்மாதத்தில் கொஞ்சம் அதிக அநுகூலமாக இருக்கும். பணம் தேகாரோக்கியம் சம்பந்தமான கவலைகள்தான் இருக்கும். கிரகங்கள் சரியாக இருப்பதால் உருப்படியான முன்னேற்றத்துக்கு உதவி புரிகின்றன. 5-ஐயும் 5-க்குடையவன் நீசமடைந்திருக்கும் 2-ஐயும் செவ்வாய் பார்ப்பது மே 11-ம் தேதி வரையில் மனச் சோர்வையும் குழந்தைகளில் ஒன்றைப் பற்றிய மனக்கவலையையும் கொடுக்கும். நண்பர் அல்லது உறவினர் ஒருவருடன் பண விவகாரத்தில் சண்டையும் உண்டாகலாம். ஆபீஸ் பண சம்பந்தமான விஷயங்களில் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. 7-க்குடையவன் உச்சம் பெற்றிருப்பதால் கலியாண யோசனை நிறைவேறும். இம்மாதத்தில் நீண்ட பிரயாணம் ஒன்று ஏற்படலாம். இம்மாதத்தில் 4, 5 வீடுகளில் குரு இருப்பது பல சிரமங்களை சமாளிக்க உதவும். பாரமார்த்திகம் சம்பந்தமான விஷயங்களோ அல்லது ஸ்தாபனங்கள் பற்றிய விஷயங்களோ நிறைவேறும். சூரியனால் நெருங்கிய உறவினர் அல்லது மனைவி சம்பந்தமாகவும் பிரயாணம் இலக்கிய சேவை பத்திரிகைத் தொழில், கடிதப்போக்குவரத்துகள், காதல், தீராதிருந்த விஷயங்கள் சாதகமாக முடிவது முதலிய விஷயங்களில் கவலை ஏற்படும். பொது ஜனங்களுக்கு அநுகூலமான முக்கிய வேலைகளுக்கு உங்கள் கிரகங்கள் அநுகூலமாக இருக்கின்றன.

பணம்: முதல் தேதியில் அதிக பண முடை இருக்கும். செலவு அதிகமாய்க்கொண்டே வருகிறது. பாக்கிகளை எல்லாம் வசூல் செய்ய முடியாது. பண விவகாரங்களில் எந்த தஸ்தாவேஜுகளிலும் கையொப்பமிடுவதைத் தவிர்க்கவும். இம்மாதத்தில் அதிக பண சௌகர்யங்கள் ஏற்படும்.

வீட்டு சூழ்நிலை: வீட்டில் சந்தோஷம் இருக்கும். நிலம், வீட்டில் பணம் போட இது நல்ல மாதம். வாகன சுகம் அதிகரிக்கும். புது கார் வாங்குவதற்கு இம்மாதம் அதிருஷ்டகரமாக இருக்கும். முக்கிய மாறுதல்கள் ஏற்படும். அலுவல் ஒன்றும் நடக்கும். தாயார் உயிருடன் இருந்தால் அவர் உங்களிடத்தில் நல்ல அபிப்பிராயம் கொண்டிருப்பார். அவரது ஆசி வருங்காலத்துக்கு மெத்த அநுகூலமாக இருக்கும் தேகாரோக்கியம் பாதிக்கப்படும்.

ஆபீஸ்: பதவி உயர்வோ அல்லது அந்தஸ்து உயர்வோ ஏற்படும். உங்கள் தன்னலமற்ற வேலையை மேலதிகாரி பாராட்டுவார். ஆபீஸை சரியாக நிர்வகிக்க முடியும்.

வியாபாரிகள்: இம்மாதத்தில் அதிருஷ்டகரமாக இருக்கும். பலருக்கு எதிர்பாராத லாபம் கிட்டும். புது வியாபாரம் லாபம் தரும்.

17 18 22—25 27 28 மே 1 2 4 5 9 12 15 அதிருஷ்ட நாட்கள். 16 18 19 26 மே 8 சந்தேகம்.

மீன ராசி

பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய

ராசியதிபதி குரு 4-ல் பிரவேசிப்பதைத் தவிர இம்மாதத்தில் பெரிய கிரக மாறுதல் எதுவும் இல்லை. மற்ற கிரகங்கள் எல்லாம் வீட்டு நிலைமையையும் ஜாதக அபிவிருத்தியையும் குழந்தைகள் விரும்பிய லட்சியங்கள் பற்றிய கவலைகளையும் குறிக்கின்றன. ஏப்ரல் 23-லிருந்து ஸ்வக்ஷேத்ர சுக்ரன் பிரயாணத்தையும். எழுத்து, படிப்பு, கடிதப்போக்குவரத்து பொது தஸ்தாவேஜுகளைப் பரிசீலித்தல் முதலிய விஷயத்தையும் கொடுக்கும். இம்மாதத்தில் இலக்கிய ரஸனையும் பத்திரிகைத் தொழிலும் முக்கியம் பெறும். தூரத்திலுள்ள நெருங்கிய உறவினரிடமிருந்து நல்ல செய்தி கிடைக்கும். சகோதரன் அல்லது சகோதரியின் க்ஷேமத்தில் ஆழ்ந்த சிரத்தை செலுத்துவீர்கள். நீண்ட நாட்களுக்கு முன்பு பிரிந்த அந்த சகோதரர் அல்லது சகோதரி இம்மாதத்தில் எதிர்பாராவிதமாக உங்களைச் சந்திப்பார். பெரியவர்களுடன் உங்கள் உறவு குறிப்பாக பண விவகாரங்கள் சம்பந்தமான உறவு குலையும். எதைச் செய்தாலும் பேசாமல் பார்த்துக்கொண்டிருப்பதைத் தவிர வேறு வழி கிடையாது. கடைசி வாரத்தில் பண முடையும் கைமாற்றுக் கடனுக்கு அவசியமும் ஏற்படும். உறவினருடன் சௌஜன்ய உறவு இராது.

பணம்: கடைசி வாரம் வரையில் கொஞ்சம் அபிவிருத்தி ஏற்படும். பணப் பிரச்னைகள் எல்லாமே உங்கள் முக்கிய கவனத்தைக் கவரும். இம்மாதத்தில் முதலீட்டுப் பிரச்னையும் கிளம்பும்.

வீட்டு சூழ்நிலை: முதல் வாரத்தில் சந்தோஷம் இராது. அதற்குப் பிறகு கொஞ்சம் நன்றாக இருக்கும். வாகன சுகம் அதிகரிக்கும். உடல் நிலை பாதிக்கப்படும். மனைவி தேகாரோக்கியம் பழையபடியே நீடிக்கும். கலியாணப் பேச்சுவார்த்தை ஏதாவது இருந்தால் இம்மாத இரண்டாம் பாதியில் பூர்த்தியடையும்.

ஆபீஸ்: உத்தியோக உயர்வு கிடைக்காது. செவ்வாய் 10-ல் இருப்பதால் சிலர் ரஜாவில் போக நேரிடும். இந்த செவ்வாயை சனி பார்ப்பது விரும்பாத மாறுதலைக் கொடுக்கும்.

வியாபாரிகள்: பழைய நஷ்டத்தை சரிடு' செய்வார்கள். புதிய கூட்டாளிகளைச் சேர்த்துக்கொள்ளலாம்.

17 18 22—25 27—28 மே 1 2 4 5 6 11 15 அதிருஷ்ட நாட்கள், 15 16 19 28 மே 2 5 8 15 சந்தேகம்.

☆

ஸ்ரீ பி. வி. ராவ்,

நெ. 5. வாஸுதேவபுரம், ஜஸ்ஹவுஸ் ரோடு,

திருவல்லிக்கேணி, சென்னை—5.

Regd. No. 2514

ஸ்ரீ K. S. ராமமூர்த்தி சர்மா
கணித்தது.

★

தனிப் பிரதி விலை அணு 4.

தபால் மூலமாக ... அணு 5.

மொத்த வியாபாரிகளுக்கு பஞ்சாங்க காபபகள் கீழ்க்கண்ட விற்பனை விகிதங்களில் சப்ளை செய்யப்படும். 100 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டர் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அனுப்பும் ஆர்டர்களும் நூற்றுக்கணக்கில்தான் இருக்கவேண்டும்.

சப்ளை விகித விலை விவரம்:

100	காப்பிகளுக்கு	...	ரூ. 24.
200	,,	100-க்கு	ரூ. 23.
300	,,	,,	ரூ. 22.
500	,,	,,	ரூ. 21.
1000	அல்லது மேற்பட்ட காப்பிகளுக்கு	,,	ரூ. 20.

ஆர்டர்களை முன் பணத்துடன் சுதேசமித்திரன் ஏஜண்டுக்கோ அல்லது நேரில் ஆபீஸுக்கோ அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம். வி. பி. பி. கிடையாது.

Printed and Published by N. RAJAGOPALAN at the "Swadesamitran" Press, "Victory House", Mount Road, Madras, Editor: C. R. SRINIVASAN, B. A.

"இங்கே பிச்சை கேட்கக்கூடாதுன்னு எவ்வளவுதரம் உனக்குச் சொல்றது...வாய்யா ஸ்டேஷனுக்கு...!"
"ஐயா! நான் கேட்கவேயில்லீங்க! இவரேதான் கொடுத்தாருங்க...!"

SWADESAMITRAN WEEKLY

18, எப்ரல்'54 4 As.

சுதேசமித்திரன்

சந்தா விகிதங்கள்

★

தினப்பதிப்பு

(இந்தியா, இலங்கை, தபால் மூலமாக)	ரூ. அ.	சென்னை ரூ. அ.	வெளி நாடு ரூ. அ.
1 வருடம் ...	26 0	24 0	32 0
6 மாதம் ...	13 8	12 8	16 0
3 மாதம்	7 0	6 8	8 0
1 மாதம் ...	2 8	2 4	—

தனிப்பிரதி

ஞாயிறு மலர் ... விலை 2 அணு
இதர நாட்களில் ... விலை 1 அணு

வாரப்பதிப்பு

	ரூ. அ.	ரூ. அ.
1 வருடம் ...	13 0	16 0
6 மாதம் ...	7 0	8 0
3 மாதம் ...	3 12	—

தனிப்பிரதி அணு 4

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன் ஆபீஸ், மவுண்ட் ரோட், மதராஸ். 2.

பொருளடக்கம்

Vol XXV] ஜயஞூ சித்திரைமீ 6உ (18-4-54) [No 11

அபாயகரமான அலட்சியம்		3
காற்றுவாக்கிலே......	சிரேயஸ்	4
குதர்க்கம்	தரளம்	5
ஜாதக பலன்	ராஜலக்ஷ்மி சுப்ரமணியன்	6
குடும்பம்—தொடர்கதை	ர. வேங்கட ரத்தினம்	11
உறியடி மச்சான்	பூவை	19
கூந்தல் அழகு	பிலோ ஹிருதயநாத்	24
பரீக்ஷை	எஸ் டி ஸ்ரீநிவாஸன்	26
க்ஷண சுகம்	கு ப சேது அம்மாள்	30
காட்டில் புதையல்	சம்பந்தம்	35
அனுமந்தன் குன்று	சந்தனு	38
சாரணர் உலகம்	சித்தார்த்தன்	40
ஹிந்தி உலகம்	பண்டிதஜி	41
சதுரங்க ஆட்டம்	எஸ் கே. சுப்பிரமணியம்	43
தையற் கலை	சுகுமார்	45
கலாமண்டபம்		47

'மித்திரன்' வாரப் பதிப்பில் கதைகளில் வெளியாகும் பெயர்கள் சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை [illegible] குறிப்பிடுவன அல்ல.

8 MAY 1954



விலகும் ராஜாஜி மந்திரி சபையுடன் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா எடுத்துக்கொண்ட கோஷ்டிப் படம்



சுதேசமித்திரன்
வாழிய செந்தமிழ் — வாரப்பதிப்பு — வாழ்க நற்றமிழர்

Vol XXV] ஜய௵ சித்திரை௴ 6௳ ★ 1954௵ ஏப்ரல்௴ 18௳ [No 11

அபாயகரமான அலட்சியம்

பாகிஸ்தானில் பொதுஜன வாக்குக்குச் சிறிதேனும் மதிப்புண்டா? உண்டானால், அங்குள்ள அரசியல் நிர்ணய சபையை உடனே கலைத்து மறு தேர்தல் நடத்திய பின்னரே அரசியல் நிர்ணய வேலையைத் தொடர்ந்து நடத்த வேண்டும். இதைத் தான் அச்சபையில் அப்துல் கபார் கான் சுட்டிக் காட்டினார். ஆனால், மக்களின் விழிப்பை உணராது இன்னும் பழைய யுகமே நீடித்துக் கொண்டிருப்பதாகக் கனவு காணும் முஸ்லிம் லீகர்கள் செவியில் இது சிறிதும் ஏறவில்லை. இப்போது ஜனங்களுக்கு லீகிடம் எந்த அளவுக்கு நம்பிக்கையுண்டு என்பதைக் கிழக்கு வங்காளப் பொதுத் தேர்தல் வெட்ட வெளிச்சமாக்கிவிட்டது. அங்கு வாழும் மக்கள் பாகிஸ்தானில் மொத்த ஜனத்தொகையில் 56 சத விகிதம். அவர்கள் இந்த தேர்தல் மூலம் லீகை அடியோடு சிதைத்தெறிந்து விட்டார்கள். அதோடு அரசியல் நிர்ணய சபையில் கிழக்கு வங்கத்தின் சார்பில் அங்கம் வகிக்கும் லீகர்களின் பிரதிநிதித்துவத் தன்மையும் மறைந்தொழிந்துவிட்டதென்பதை யாரும் மறுக்க முடியாத உண்மை. அவர்கள் சேர்ந்தியற்றும் ஒரு அரசியல் திட்டத்தை பெருவாரியான மக்கள் ஒப்புக்கொள்ளப்போவதில்லை எனத் தெரிந்த பின், அத்தகைய ஒரு திட்டத்தைத் தொடர்ந்து அமைப்பது ஜனநாயக முறைக்கு ஒத்ததா அல்லது சாதாரண பகுத்தறிவுக்குத்தான் ஏற்றதா?

கிழக்கு வங்காளத்தில்மட்டுந்தான் லீக் குலைந்துவிட்டதென்பதில்லை. இன்று மேற்கு பாகிஸ்தானில் தேர்தல் நடந்தாலும் லீகுக்கு அதே கதிதான் ஏற்படுமென்பதை கான் கபார் கான் இடித்துக் காட்டியிருக்கிறார். உண்மையில் லீகைச் சேர்ந்த பிரமுகர்களுக்குள்ளேயே சச்சரவுகள் வலுத்து வந்திருப்பது அனைவரும் அறிந்த விஷயம். அரசியல் நிர்ணய சபை ஆரம்பமாகி ஏழு வருஷங்களான பின்னரும் அதன் நோக்கம் நிறைவேறவில்லையென்றால், லீகுக்குள்ளேயே பல கோஷ்டிகள் முளைத்து ஒன்றையொன்று காலைவாறுவதில்முனைந்துவந்திருப்பதேஅதற்குமுக்கிய காரணம். லீக் ஆட்சியின் கீழ் மக்கள் எந்த அளவுக்கு மனம் புழுங்கியிருக்கின்றனர் என்பதற்கு கிழக்கு வங்கத் தேர்தல் ஒரு தெள்ளிய அறிகுறி. ஆனால் அதைச் சிறிதும் லட்சியம் செய்வதில்லை எனத் தீர்மானித்ததன் மூலம் லீகர்கள் முறைப்படி அவர்களுக்குரிய கதிக்கு விரைந்துகொண்டிருக்கின்றனர் என்று சொல்ல வேண்டும். கிழக்கு வங்கத் தேர்தல் மத்திய சர்க்காரையோ, அரசியல் நிர்ணய சபையையோ பாதிக்காதென்று பாக். பிரதமர் நிதானமாக அறிக்கைவிடுகிறார். யாருக்காக அவ்விரண்டும் இயங்குகின்றனவோ,அவர்களுக்குத் தங்கள் இஷ்டம்போல் அவற்றை மாற்றியமைக்க உரிமையில்லை என்றால் அது மிகவும் விசித்திரமான ஒரு ஜனநாயகமே.

இந்த விசித்திரத்துக்கு சிம்பு வைத்துக் கட்ட பாகிஸ்தானிலுள்ள அமெரிக்க ஸ்தானீகர் வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பியிருப்பதுஇன்னும் பெரியதொருஆச்சரியம்.பாகிஸ்தானை அமெரிக்க தளமாக்கிக்கொள்ளும் ஏற்பாடு குலைந்துவிடுமோ என்ற பீதியில், ஒரு அயல்நாட்டின் உள் விவகாரத்தில் தாம் குறுக்கிடுவது சரியா என்று யோசிக்கக்கூட அவருக்குத் தோன்றவில்லை. அல்லது முஸ்லிம் லீக் இதற்குள்ளேயே பாக். அரசியல் விவகாரங்களை அமெரிக்காவிடம் ஒப்படைத்துவிட்டது என்பதற்கு இது ஒரு அறிகுறியாகவுமிருக்கலாம். அது எவ்வாறாயினும் கிழக்கு வங்கத் தேர்தல் முடிவை மகமதலி சர்க்கார் அவமதிப்பது அபாயகரமானது. இதுவரைபோல் இந்தியாவின் பெயரில் பூச்சாண்டி காட்டி பாக். மக்களை ஏமாற்றுவது இனி நடவாது. இந்தியாவுடன் நெருங்கிய உறவு கொள்வதென்ற அடிப்படையிலேயே கிழக்கு வங்க ஐக்கிய முன்னணி அபாரமான வெற்றி பெற்றிருக்கிறதென்பதை ஜனாப் சுஹ்ரவர்தி எடுத்துக் காட்டியிருக்கிறார். அவ்வெற்றியை அலட்சியம் செய்து ஜனநாயகத்தை அவமதிப்பது பாகிஸ்தானின் ஐக்கியத்துக்கே உலைவைத்துவிடக்கூடும்.

காற்றுவாக்கிலே..

ஆனந்த மயமாக ஆரம்பித்திருக்கிறது புது வருஷம்! புதிய தலைமையில் புது மந்திரி சபை; எங்கும், அதன் பயனுக ஒரே புத்துணர்ச்சி, புளகாங்கிதம்!

எம்.எல்.ஏக்களுக்கு ஏகப்பட்ட சந்தோஷம்; முதன் மந்திரியைக் கண்டு 'பேசுவது' முன்போலக் கஷ்டமாயிராது. காங்கிரஸ் தொண்டர்களுக்கோ கனகுதூகலம், பிறவித் தலைவரல்லாமல் தங்களில் ஒருவரே முதன்மந்திரியாகிவிட்டாரேயென்று.தி.க, தி.மு.க கோஷ்டிகளுக்கும் ஆனந்தம், ஆரியரல்லாமல் ஒரு தூய திராவிடர் ஆட்சி பீடமேறிவிட்டதில். பிராமணர்களுக்கும் கூட பரம சந்தோஷம்தான்,பிறப்பிலே தங்களவரான ஒருவர் முதன் மந்திரியாக இருந்த காரணத்தால் 'வேண்டாத பெண்டாட்டி-கைபட்டால் குற்றம்,கால் பட்டால் குற்றம்' என்று அவர் நிலைமை இருந்ததோடு, அவர் காரணமாகத் தாங்களும் பேச்சுக் கேட்கவேண்டியது நின்றுவிட்டதால். எல்லாரையும்விட பத்திரிகைக்காரர்களுக்குத்தான் ரொம்ப திருப்தி: எந்த சமயத்தில் எதைச் சொல்வாரோ 'கிழவனுர்' என்று பயந்து சாக வேண்டிய சங்கடம் தீர்ந்துவிட்டது.

இப்படிப்பட்ட சமயத்தில் எதையாவது சொல்லி எவர் குதூகலத்தையும் குலைக்கக்கூடாது என்பதுதான் என் ஆசையும். இருந்தபோதிலும் இத்தனைக்கும் மையமானவர் மனமகிழ்ச்சி கொள்ளவில்லை என்பதைக்குறிப்பிடாமலிருக்க முடியாது..... ஆமாம், காமராஜரைத்தான் சொல்கிறேன். அவரைப் பொறுத்த வரையில் புது வருஷம் பொல்லாத முறையில்தான் பிறந்திருக்கிறது. அதற்கு அவரே எவ்வளவு தூரம் காரணஸ்தர் என்பதைக் கிளறிக் கிண்டுவது கவைக்குதவாத வேலைதான் இப்போது. எப்படியோ, எதனுலோ, எதற்காகவோ சட்ட சபைக் கட்சித் தலைவராகி, முதன் மந்திரியாகிவிட்டார். பொறுக்கு மணிகளான சகாக்களையும் தேர்ந்தெடுத்துவிட்டார், கெட்டிக்காரத்தனமாகவே.

ஆனுல் கெட்டிக்காரத்தனம் மட்டும் போதாது, கைராசியும் முகராசியும் வேண்டும் முதன் மந்திரி பதவிக்கு என்பது காமராஜருக்குத் தெரியும். இதுவரை அதை வகித்த ஒருவரைக்கூட விடாமல், ஆனனப்பட்ட ராஜாஜிக்கே கூட, கெட்ட பெயரைத் தான் வாங்கித் தந்திருக்கிறது. அந்தப் பதவியின் ஜாதக விசேஷமே இப்படித்தான் என்பதும் அவருக்கு நன்றுகத் தெரியும். இதனுல் தான் அதை ஏற்றுக்கொள்ள அவர் தயங்கினுரேயொழிய, உள்ளூர பதவிமோகம் வேலை செய்து வெளிப்பார்வைக்கு வெறுப்பைக் காட்டவில்லை அவர். இது ஒரு புறமிருக்க, இதுகாறுமிருந்து வந்த சூத்ரதாரிப் பாத்திரம், மந்திரிக்கெல்லாம் தந்திரியாயிருந்த கேந்திர ஸ்தானம் மாறி இப்போது திரைக்கு முன்னுல் வரும்படியான துர்ப்பாக்கியமும்நேர்ந்திருக்கிறது அவருக்கு. அவர் ஆட்டிவைத்த சூத்ரக் கயிறு கை நழுவி கால்கட்டும் போட்டுவிட்டது இப்போது... வாஸ்தவம், இஷ்டப்பட்டிருந்தால் அவர் அதை அறுத்தெறிந்திருக்கலாம் என்பது உண்மையே. ஆனுல் அப்படிச் செய்திருந்தால் கட்சிக்குத் தம் கடமையைச் செய்தவராகமாட்டார் அவர். அதனுல் தான் தம் தலையைக் கொடுக்கும்படி,பெயரைக் கெடுத்துக்கொள்ளவும் தயாராகும்படி, பதவி கிடைக்குமென்று எதிர்பார்த்து ஏமாந்த பலர் நட்பை இழப்பதையும் பொருட்படுத்தமுடியாதபடி ஆகிவிட்டது அவருக்கு. அது மட்டுமல்ல, ஆயுள் பரியந்தம் வகிக்கக்கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பதவியையும் கை விடும்படியாகியிருக்கிறது. இன்னும் பலவற்றையும் தியாகம் செய்கிறுர் முதன் மந்திரி பதவியை ஏற்பதன் மூலம் என்பதும் பலருக்குத் தெரியும். இதையெல்லாம் இஷ்டப்பட்டே செய்கிறுர் என்று மறைக்க முடியாது, அவருக்கு மனவருத்தமில்லை என்று மறுக்கவும் முடியாது.

இதெல்லாம் அவர் சொந்த விஷயம், எப்படியோ போகிறுர்; நம் சேதி என்ன, இனி சர்க்கார் கதியென்ன? என்று கேட்கிறீர்களோ, அதைத்தான் சொல்லவந்தேன்... பயப்படவே தேவையில்லை, மந்திரி சபை தான் மாறியிருக்கிறதேயொழிய ஆளும் கட்சி மாறிவிடவில்லை. எனவே கொள்கை மாறுதலுக்கு இடமே கிடையாது. மேலும், காமராஜர் பரிபூரண ஜனநாயகவாதி என்பது பகிரங்க ரகஸியம். முந்தின சர்க்கார் மாற்றுக்கட்சிக்காரருடையதானுலும்கூட அது எடுத்த நடவடிக்கைகளால் மக்களுக்கு நன்மையைவிடக் கெடுதலே அதிகம் என்பது அனுபவ பூர்வமாகத் தெரியவந்தாலன்றி மாற்றுமலிருப்பதே ஜனநாயக மரபு என்பது அவருக்கு நன்கு தெரிந்தேயிருக்க வேண்டும். ஆகவே தம் கட்சியையே சேர்ந்த ராஜாஜி சர்க்காரின் நடவடிக்கைகளை அவர் ரத்து செய்யப் புகமாட்டாரென்றே எதிர்பார்க்கலாம்.

அப்படியானுல், பிரமாதமான எந்த மாறுதலையும் செய்யப்போவதில்லையானுல், எதற்காக மந்திரி சபை மாற வேண்டும் என்று தானே கேட்கிறீர்கள்?... பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, பழைய கள்ளானுலும்புதிய மொந்தையில் வந்தால் அதற்குத் தனி மவுசு தான். இரண்டாவதாக, இரண்டு வருஷத்துக்கு ஒரு முறையாவது மந்திரிகள்மாருவிடில்எல்லாருக்கும் இல்லாவிட்டாலும் அதிக பட்சம் சாத்யமானவர்களுக்காவது சான்ஸ் கிடைப்பது எப்படி? ன்றுவதாக இந்த மாதிரி மாற்றமிருந்தால் தானே 'நல்லபடி நடந்தால் அடுத்த மந்திரி சபையிலும் இடம்

—அடுத்த பக்கம்.



ஹைட்ரஜன் குண்டின் கொடுமைகளுக்குப் பரிகாரம் காண மூவல்லரசுத் தலைவர்கள் கூடிப் பேசவேண்டுமென்று பிரிட்டிஷ் காமன்ஸ் சபை ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

—லண்டன் செய்தி.

'அப்படியே ஒரு மகாநாடு கூடினுலும் இந்த பெத்த 'பீரங்கி'கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் 'கொடுமை' ஏற்படாமலிருக்க வேண்டுமே!' என்று உளம் நடுங்குகின்றுர் ஸ்ரீமான் பொதுஜனம்!

* * *

'ஒரு ரயிலுக்கு கடும் விபத்து; உடனே விரையவும்' என்று வந்த தந்தியைக் கண்டு உதவிப் படையுடன் சென்னை ரயில்வே அதிகாரிகள் ஜரூராக விரையும் சமயத்தில் பிரஸ்தாப தந்தி அதிகாரிகளின் உஷாரைப் பரிசோதிக்கவே அனுப்பப்பட்டதாக மறு தந்தி வந்தது! இது மாதிரி ஒத்திகை அடிக்கடி நிகழுமாம்!

—சென்னைச் செய்தி.

இதுமாதிரி விபத்து நாடகம் அடிக்கடி நடக்குமானுல், அடுத்தபடி நடக்கப்போவது 'புலி வருது' 'விபத்தாக' ஆகிவிடக் கூடாதே என்றுதான் கவலையாக இருக்கிறது!

* * *

பார்லிமெண்ட் மெம்பர்களுக்குத் தேனீ வளர்க்கும் விதத்தைக் கற்றுத்தர அகில இந்தியத் தேனீ வளர்ப்புச் சங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

—புது டில்லி செய்தி.

'பார்லிமெண்ட் மெம்பர்கள் 'சுறுசுறுப்'பாக இருக்கக் 'கற்றுக்கொள்ள' வேண்டும்என்பதை மறைமுகமாக எடுத்துக் காட்டவிருக்குமோ, பிரஸ்தாப ஏற்பாடு?' என்று சம்சயப்படுகிறுர் திருவாளர் வோட்டர் மஹாஜன்!

* * *

'யானைகளை இனி கண்டபடி சுடக் கூடாது'

—செய்தித் தலைப்பு.

'காணுதபடி' சுட்டாலுந்தான் என்ன? பிடித்துக் 'காம்பு' போட்டுவிடுகிறுர்களே என்று யானை வேட்டைக்காரர்கள் முணு முணுப்பதாகவும் கேள்வி!

* * *

'ஹைட்ரஜன் குண்டைத் தடை செய்யக்கோருவது விவேகமல்ல.'

—காமன்ஸில் ஸ்ரீ சர்ச்சில்.

கனம் சர்ச்சிலின் விவேகத்தை உலகம் சந்தேகிக்காமலிருக்க வேண்டுமே!

* * *

பிரபல சினிமா நடிகை போதை உண்டாக்கும் பொருள்கள் வைத்திருந்ததாக கைது செய்யப்பட்டார்.

—நாகபுரி செய்தி.

'நடிகை மணிகளின் 'போதை'யில் சிக்கித் தத்தளிக்கும் 'விசிறி'களை மாத்திரம் கைது செய்யாமல் விடுவது என்ன நியாயமாம்!' என்று (அப)வாதம் செய்கிறுர் இங்கொரு 'ரசிக'த் தெரியாத 'சீமான்'! —'தாளம்'.

[முன் பக்கத் தொடர்ச்சி]

கிடைக்கும், என்று எல்லாரும் ஒழுங்காக வேலை செய்வார்கள்?

இன்னும் இந்த மாதிரி எத்தனையோ அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனுல் இதெல்லாம் எம்.எல்.ஏ.க்களுக்குத்தான் முக்கியமேயன்றி நமக்கல்ல.நம்மைப் பொறுத்தவரையில் ராமன் ஆண்டாலும் சரி, ராவணன் ஆண்டாலும் சரி, அடிக்கடிகொள்கையை மாற்றி தொல்லை கொடுக்கக் கூடாது; இருக்கிற தொந்தரவு போதாதென்று புதிய சட்டங்களையோ, புதிய வரிகளையோ சுமத்தலாகாது. இதுவே பொதுஜனங்களாகிய நாம் வேண்டுவது. பச்சையாகவே சொல்கிறேன்: நரி வலம் போனுலும் இடம் போனுலும் நமக்கு அக்கரையில்லை, மேலே விழுந்து பிடுங்காமல் விட்டால் போதும் என்பதே நம் பிரார்த்தனை. —சிரேயஸ்.

ஜாதக பலன்

ராஜலக்ஷ்மி சுப்ரமணியன்

கோவிந்தன் ஒரு நாள் தன் தந்தையின் பெட்டியைத் திறந்து ஏதோ பழங் காகிதங்களைக் கிளறிக் கொண்டிருந்தான் பொழுதுபோக்காக. அதில்மஞ்சள் தடவிய காகிதச் சுருள் கிடைக்கவே, அதை ஆவலுடன் பிரித்துப் பார்த்தான். வந்த சிரிப்பை அடக்க முடியாமல் உரக்க சிரித்துவிட்டான். உள்ளே வேலையாயிருந்த அவன் தாயார் ஜயம்மாள் அந்த சத்தம் கேட்டு ஹாலுக்கு வந்து "என்ன கோவிந்தா! எதற்காக அப்படிச் சிரித்தாய்! யாரேனும் வந்தார்களா என்ன?" என்றாள்.

'ஒன்றுமில்லை அம்மா; அப்பா என் ஜாதகத்தை அந்த பிரபல ஜோஸ்யர் குப்பண்ணாவிடம் காண்பித்து என் வருங்கால வாழ்க்கையைப்பற்றி எழுதி வைத்திருந்தாரே! அது இந்தப் பெட்டியில் இப்பொழுது கிடைத்தது. பார்த்ததும் சிரிப்பு வந்தது. அவ்வளவுதான்' என்றான் கோவிந்தன்.

'உ--ம் அ-வ-ர் தன் பிள்ளை எப்படியோ மேன்மையாய் இருக்கப்போகிறான். தன்குடும்பத்திற்கே ஒரு தனிமதிப்பும் உயர்வும் அவனால் ஏற்படப்போகிறது என்றெல்லாம் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தார். உன் அப்பாவுக்கென்ன? அவர் புண்யாத்மா. கஷ்டங்கள் ஒன்றையுமே பாராமல் கண்ணை மூடிவிட்டார். உனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிவிட்டால் நானும் மனநிம்மதியுடன் கண்ணை மூடலாம். அதற்காகவேதான் இந்த உயிர் இன்னும் இந்தக் கூண்டில் அடைபட்டு காத்துக்கிடக்கிறது' என்று சொல்லி அங்கிருந்து நகர்ந்தாள்.

அம்மாவின் உருவம் மறையும் வரை அவளையேபார்த்துக்கொண்டிருந்தான் கோவிந்தன். பிறகு ஹாலில் மாட்டப்பட்டிருந்த அப்பாவின் போட்டோமேல் பார்வை சென்றது. அவனையுமறியாமல் அவன் கண்கள் கண்ணீர் சொரிந்தன. அப்பா போட்டோவின் இரு பக்கங்களிலும் தான் இதுவரை பார்த்துவந்த ஒவ்வொரு உத்தியோக உடுப்பிலும் எடுத்துக் கொண்ட போட்டோக்கள் இருந்தன. அவன் மனத் திரையில் அவனையுமறியாமல் பழைய ஞாபகங்கள் ஒன்றன்பின்ஒன்றாய் வந்து அலைமோதின.

குப்பண்ணா ஜோஸ்யர் அந்தப் பக்கங்களில் ஒரு பிரபல ஜோஸ்யர். நன்கு படித்தவர். உதாரசீலர்; விசால அனுபவஸ்தர்; அவர் ஜாதகம் பார்த்துச் சொன்னால், சரியாகவே இருக்கும். அதனால் அவரிடம் எல்லோருக்கும் அபார நம்பிக்கையும் மரியாதையுங்கூட. கோவிந்தன் ஐந்து வயது சிறுவனாயிருக்கும்போதே அவன்தகப்பனார் சின்னப்பகவுண்டர் தன் பையனின் ஜாதகத்தை அவரிடம் காண்பித்து, வருஷவாரி பலன்களை சுருக்கமாய் எழுதிவைத்திருந்தார். ஜோஸ்யரின் ஒவ்வொரு சொல்லும் அவன் வாழ்க்கையில் எவ்வாறு பலித்தது என்று சிந்திக்கலானான்.

ஜாதகன் சர்க்கார் பரீட்சை கொடுப்பான் என்று எழுதியிருந்தார் ஜோஸ்யர். சின்னப்ப கவுண்டர் அப்பொழுதே தன் பிள்ளை பி. ஏ. எம். ஏ. பாஸ் செய்துவிட்டதாக மனப்ரமைகொண்டார். மேற்கொண்டு பிள்ளையை எந்தப் போட்டிப் பரீட்சைக்கு அனுப்புவது என்றுகூட திட்டம் போட்டுவிட்டார். ஆனால் கோவிந்தனோ தன் 18-ம் வயதில் தட்டி முட்டி எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்தான். பிள்ளை சர்க்கார் பரீட்சையின் முதல் படியை தாண்டியதுமே தனக்கு தேவலோகப் பதவி கிடைத்து விட்டதாக எண்ணிய அவன் தகப்பனார் மேல் உலகத்துக்கே சென்றும்விட்டார். ஜோஸ்யர் சொன்ன சர்க்கார் பரீட்சையும் கொடுத்தாயிற்று; பாசுமாகிவிட்டது. ஜோஸியரின் முதல் வாக்கும் பலித்தது.

ஜாதகனுக்கு படிப்பு முடிந்ததும் வ-சூ-லி-லே வேலை கிடைக்கும்; நாலுபேர் இவனுக்குக் கீழ் கைகட்டி நிற்பதை விட்டு, இந்த ஜாதகன் ஒருவர் கீழ் இருப்பான்? என்று ஜோஸ்யர் எழுதியிருந்தார். ஆகவே எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்திருந்த கோவிந்தன் தனக்கு சர்க்கார் உத்தியோகம் காத்துக் கிடக்கும் என்று சொப்பனம் கண்டுகொண்டிருந்தான். உலகம் தெரியாத சிறு பையன்தானே—பாவம். இவன் தந்தை ஒரு ஹெட் கான்ஸ்டபிள் வேலையிலிருந்தவர். அவர் இறந்தவுடன் அந்தக் குடுபத்தின் மேல் இரக்கப்பட்டு, அவர் பையனுக்கு போலீஸ் இலாகாவிலேயே அதே ஹெட் கான்ஸ்டபிள் வேலை தர முன்வந்தார்கள் போலீஸ் அதிகாரிகள். பையனும் ஒப்புக்கொண்டான். இவன் வேலையைத் தேடிப்போகவில்லை. வேலைதான் இவனைத் தேடிக்கொண்டு வந்தது. இவன் கீழ் பலகான்ஸ்டபிள்கள். ஜோஸ்யம் பொய்யாகுமா என்ன! அதிலும் குப்பண்ணா ஜோஸ்யம்!

ஜோஸ்யத்தில் சொல்லியிருந்தது அவனுக்கு அனாமத்தாய் ஒரு பெரிய ரொக்கப் ப-ரி-சு கிடைக்க யோகம் உண்டென்று. தன் உபாய சம்பளத்தில் போட்டிகள், பந்தயங்கள், லாட்டரிகள் இம்மாதிரியான பலவழிகளில்பணம் நஷ்டமாயிற்றே ஒழிய, பரிசு ஒன்றும் கிடைத்தபாடில்லை. ஏதோஒரு கம்பெனியில் ஒரு சமயம் ஒரு ரூபாய் கட்டி ஒரு லாட்டரி சீட்டு வாங்கியிருந்தான். ஆனால் அதைப்பற்றியே பிறகு யோசனையில்லாமல் மறந்தே போயிருந்தான். ஒருநாள் திடீரென்று அந்த கம்பெனியிலிருந்து முதற் பரிசு ரூபாய் 10,000—(பத்தாயிரம்) அவனுக்கு விழுந்திருப்பதாக தந்தி கிடைத்தது. கோவிந்தனுக்குச் சந்தோஷம் தலைகால் புரியவில்லை. அந்த உத்ஸாக வெறியில் முன்பின் யோசிக்காமல் அவசரப்பட்டு ஒரு கால் கடுதாசு கொடுத்து விட்டான் தன் சர்க்கார் வேலைக்கு—அதான் ராஜிநாமா. வேகமாய் வீட்டிற்கு வந்து தன் தாயாரிடம் இந்த முதல் பரிசு சந்தோஷ சமாசாரத்தையும், தான் வேலையை ராஜிநாமா கொடுத்து விட்டதையும் சொன்னான். அதற்கு அவள் 'அதெல்லாம் சரிதான். முதலில் லாட்டரி சீட்டை எடுத்து ஜாக்ரதையாய் வைத்துக் கொள். இந்த வாரமே போய் பணத்தையும் வாங்கி வந்துவிடு. கையில் பணத்தை பார்த்த பிறகுதான் யோசித்து ஏதாவது செய்யவேண்டும்' என்றாள் சந்தோஷத்துடன்அவன் தாயார். அப்பொழுதுதான் கோவிந்தனுக்கு சீட்டைப் பற்றிய ஞாபகமே வந்தது. தேடினான், தேடினான், வீடு முழுதும் தேடினான்; இன்னும் எங்கெல்லாமோ வெளியிலும் அலைந்து தேடினான். ஓரிடத்திலும் அகப்படவில்லை அந்த அதிர்ஷ்ட லாட்டரி சீட்டு. இந்த அடையாளச் சீட்டு இல்லாமல் இவனுக்கு எப்படித்தான் பரிசுப் பணம் கொடுப்பார்கள் கம்பெனியார்? அப்படியே திகைத்துப்போய் உட்கார்ந்து விட்டான் வீட்டில். ஒரு ஏழை குடும்பத்திற்கு ரூபாய் பத்தாயிரம் அனாமத்தாய் கிடைத்தால் அது ஒரு பெரிய உயர்வு தானே. பாவம்; கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை. ஜோஸ்யர் சொன்ன பரிசு யோகம் என்னமோ வாஸ்தவம்தான். ஆனால் அந்த யோகம் வருகிறதுபோல் பாவனை காட்டி போய்விட்டது. புதிய வெள்ளம் பழைய வெள்ளத்தையும் அடித்துக்கொண்டு போய் விட்டது என்பதுபோல பரிசும் போயிற்று, கூட கையிலிருந்த சர்க்கார் வேலையும் போயிற்று. —பாவம். இப்பொழுது கோவிந்தன் பிழைப்பே ஒரு லாட்டரி ஆகிவிட்டது, பாவம்.

இந்த ஜாதகனுக்கு ரா-ஜ-யோ-க-ம் இருக்கிறது என்று எழுதியிருந்தார் ஜோஸ்யர். போனது போகட்டும். இனி நடக்கவேண்டியதைக் கவனிக்கலாம் என்று மனதை திடப்படுத்திக் கொண்டு வேலைக்கு மும்முரமாய் அலைந்தான். இந்தக் காலத்தில் எங்கே வேலை கிடைக்கிறது நினைத்தவுடனே? அதிலும் போலீஸ் இலாகாவில் ஹெட் கான்ஸ்டபிள் வேலை பார்த்து அதை ராஜிநாமா செய்த பேர் வழிக்கு போன இடங்களிலெல்லாம் அவன் பூர்வோத்திரத்தைப் பற்றி ஆயிரம் கேள்விகள். அவைகளுக்கு சரியான பதில் சொல்வதே பெரும்பாடாயிருந்தது. கடைசியில் அதிர்ஷ்டவசமாக அரண்மனையில் ஒரு காவலாளி வேலை கிடைத்தது. கேட்பானேன் அரண்மனை வேலையென்றால்! ராஜபோகம்தான். வேலை மிகவும் இலகு. மேலும் விசேஷ காலங்களில் அரண்மனை சிப்பந்திகளுக்கு அரசர் சன்மானமும் தனியாய் உண்டு. இதை அரசர் சிப்பந்திகளுக்கு தானே நேரில் வழங்குவார். அரசரை நேரில் கண்டு அவர் கைகளிலிருந்து சன்மானம் பெறுவது ஒரு பாக்யம்தானே? ஜோஸ்யர் சொன்ன ராஜயோக வாக்கும் பொய்யாகவில்லை. இப்படி ஓடின சில வருஷங்கள். இதன் நடுவில் நம் பாரத நாடும் சுதந்திரமடைந்தது. சுதேச மன்னர்களின் ஆட்சியையும் பலமாக ஆட்டியது. குடிகளிடமிருந்து வசூலித்த வரிப்பணத்தை யெல்லாம் தன் சொந்தத்திற்கே உபயோகித்து வந்த வழக்கத்தை கண்டிக்க முன்வந்தது மத்திய சர்க்கார். அரண்மனைச் செலவு ஒன்றுக்குப் பாதியாக்கப்பட்டது. அதனால் சிப்பந்திகளும் குறைக்கப்பட்டனர். இந்தக் கொள்கை நம் கோவிந்தன் வயிற்றிலும் அடித்துவிட்டது. திரும்பவும்

வேலையில்லாத் திண்டாட்டம் தான் அவனுக்கு. தாயும் மகனும் ஆகிய அந்த மிகச் சிறிய குடும்பத்தையே சமாளிக்க சிரமப்பட்டான். ஆனால் ஒரு அற்ப சந்தோஷம் அவனுக்கு. என்னவெனில் நல்லவேளையாய் தனக்கு அந்தச் சமயம் மனைவி குழந்தைகள் இம்மாதிரியான பந்தங்கள் இல்லையென்பதே.

இந்த ஜாதகனுக்கு வா-ஹ-ன-ப் பிராப்தி உண்டு என்று ஜோஸ்யத்தில் சொல்லியிருந்தது. அரண்மனை காவலாளி வேலை போகவே இன்னொரு இடத்தில் 'கார் டிரைவர்' வேலை கிடைத்தது. எப்பொழுதோ கொஞ்சம் 'டிரைவிங்' கற்றுக்கொண்டது இப்போது அவனுக்கு உபயோகப்பட்டது. கிடைத்துத்தானே ஆக வேண்டும்! ஜோஸ்யம் பொய்யாகுமா! காலை 8-மணி முதல் இரவு 9 மணிவரை கார் சீட்தான் கதி. ஒரு குழந்தையை 'கான்வென்டில்' கொண்டுபோய் விடுவது; உடனே இன்னொன்றைப் பள்ளிக்கூடத்தில்; இன்னும் இருவரைக் காலேஜில்; இவைகள் முடிந்து பங்களா திரும்பும்போது எஜமானர் தயாராக இருப்பார் ஆபீஸ் செல்ல. பிறகு சாப்பாட்டு நேரம் சற்று விடுதி. மணி ஒன்று அடிக்க வேண்டியதுதான். எல்லாப் பிள்ளைகளுக்கும் டிபன் கொண்டு போய் கொடுத்துவிட்டு வரவேண்டியது. பிறகு எஜமானி அம்மாள் வெளியில் செல்வது—கடை சாமான்கள் வாங்குவதோ, சிநேகிதர்கள் வீடுகள் செல்வதோ இம்மாதிரி சில சுற்றுகள். மாலை 4-மணி அடித்ததும் குழந்தைகளிலிருந்து எஜமானர் வரையிலும் ஒவ்வொருவராக வீட்டுக்கு அழைத்துக் கொண்டுவந்துவிடுவது. பிறகு சாயங்காலம் பீச்சோ, சினிமாவோ, டிராமாவோ, சங்கங்களோ, இன்னும் எவ்வளவோ விழாக்கள் பார்ப்பதற்கு, பணம் படைத்தவர்களுக்கு. வீடு திரும்பும்போது குறைந்தது மணி 9 ஆவது ஆகிவிடும். தன் வீடு போய் சேருவதற்குள் மணி 10 கண்டிப்பாய் அடிக்கும். இதற்குள் பாதி பிராணன் போய் விடும். உடம்பிலுள்ள அசதி அக்கடாவென்று படுத்துக்கொள்ளத் தான் தோன்றும். தினசரி இதே பாடம்தான். அப்படியும் இப்படியுமாயும் மூன்று வருஷ காலம் கழிந்தது. தேக நிலைமை கெட்டுவிட்டது. இந்த வாஹனப்பிராப்தி போதுமென்றே ஆகிவிட்டது. உடனே இந்த வேலைக்கு ஒரு முழுக்கு போட்டுவிட்டு, பழையபடியும் வேறு வழி சோற்றுக்கு எது, என்று யோஜிக்கலானான்.

வீட்டுக்காரர்:—"என்ன டாக்டர்! இவ்வளவு 'லேட்'. 'ஸீரியஸ் கேஸ்'னு உடனே வரச்சொல்லியிருந்தேனே. நோயாளி இப்போ காலமாயிட்டாரே!"

டாக்டர்:—"நான் என்ன செய்வது: பாக்கப் பாக்கத்தான் வந்தேன். யமன் என்னை முந்திக்கொண்டுவிட்டான்போலிருக்கு."

தூரதேச பிரயாண முண்டு என்று ஜாதகத்தில் கண்டிருந்தார் குப்பண்ணா ஜோஸ்யர். 'உள்ளூரில்தான் தனக்கு தகுந்த வேலை கிடைக்கவில்லையே தூர தேசமாவது சென்று உத்தியோகம் செய்து பிழைக்கலாம்'என்று எண்ணினான். அந்த சமயம் ஒரு நண்பன் அவன் கொள்கையை ஆதரித்து 'வடக்கே டெல்ஹியைப் பார்க்கப்போ தம்பி நீ. நல்ல துட்டு பண்ணலாம் அங்கெல்லாம். ஏன் வீணாய் இங்கேயிருந்து கஷ்டப்படுகிறாய்? இங்கே நம்பளவங்க வேலை வாங்கிக் கொள்வாங்களே ஒழிய, தகுந்த கூலி மாத்திரம் கொடுக்க மாட்டாங்க. உனக்கு சிறு வயது தான். நல்ல வேளையாய் ஒருவிதமான கால்கட்டு, பிக்கல், பிடுங்கல் யாதொன்றுமில்லை. வயதான தாயார்ஒரு கட்டைதானே.அங்கே போய் நல்ல வேலை ஒன்றைப் பார்த்து ஒப்புக்கொண்டு, அம்மாளை அங்கே கூட்டிக்கொள்ளலாம்' என்று தூபம் போட்டுவிட்டான். உடனே டெல்ஹி கிளம்ப கோவிந்தன் தீர்மானித்துவிட்டான். தான் கஷ்டப்பட்டு சேமித்து வைத்திருந்த ரூபாய் 200-க்கு தலைவலி எடுத்துவிட்டது. ஒரு நூறு ரூபாயை அம்மாவிடம் கொடுத்து சமாசாரத்தையும் சொல்லிவிட்டு, மீதி ரூபாய் நூறையும் கையிலெடுத்துக் கொண்டு பிரயாணமானான். மூன்றாம் வகுப்பு டிக்கெட்டு ஒன்று எடுத்துக்கொண்டு, ஜனதா எக்ஸ்பிரஸில் சென்னையில் ரயிலேறினான். அன்று இரவு ரயிலில் சற்று கண் அயர்ந்தான். அவனுடைய பொல்லாத வேளை, டிக்கெட்டும், கையிலிருந்த பணமும் களவு போய்விட்டது. மறுநாள் காலையில்தான் இந்த திருட்டு போனதையே அவன் அறிந்தான். என்னதான் மேற்கொண்டு செய்வது என்று புரியாமல் தவித்தான். ஆனாலும் ரயிலைவிட்டு கீழேயிறங்க மனமில்லாதவனாய், மேலே போய்க்கொண்டேயிருந்தான். டெல்ஹி நகரையடைய இன்னும் சுமார் இரண்டு மணி நேர பிரயாணம்தானிருந்தது. எக்ஸ்ப்ரஸ் 'மதுரா' என்னும் ஸ்டேஷனில் நின்றது. யமதூதன் மாதிரி எதிரே ஒரு டிக்கெட்டு பரிசோதகன் வந்து டிக்கெட் கேட்டான். கோவிந்தன் தன் டிக்கெட்டு ரயிலில் முதல் நாள் ராத்திரி தூங்கும்போது தொலைந்து விட்டது என்று தமிழில் சொல்லி எவ்வளவோ கெஞ்ச, டிக்கெட்டு பரிசோதகன் ஹிந்தியில் ஏதேதோ அதிகாரமாய் கேட்க, அந்த சம்பாஷணையே வெகு தமாஷாயிருந்தது. கடைசியாக, கோவிந்தனை ரயிலைவிட்டு கீழே இறக்கி, போலீஸில் ரிபோர்ட்டும் கொடுத்துவிட்டு போய்விட்டான் அந்த டிக்கெட்டு பரிசோதகன்.ரயில்வே மாஜிஸ்ட்ரேட் கோவிந்தனுக்கு ரூபாய் 50 அபராதம் அல்லது ஒருமாத கடுங்காவல் சிக்ஷை விதித்தார். அபராதம் செலுத்த கையில் பணமேது? ஜெயிலில் தள்ளப்பட்டான். சிக்ஷை கடுங்காவலல்லவா? அதனால் கடுமையான வேலை. இவனோ தென்-இந்திய தமிழன். இப்போதோ வட இந்தியாவில் சிறைவாசம்-அதிலும் கடுங்காவல். முதலில் பாஷா பிரச்னை. கேட்பவர்களுக்கு பதில் சொல்ல தெரியவில்லை. கொஞ்சமாவது பேசி பொழுதை கழிக்கவும் வழியில்லை. இரண்டாவது ஆகார பிரச்னை. அந்தப் பக்கத்து ஆகாரம் அவனுக்கு பிடிக்கவேயில்லை; ஒத்துக்கொள்ளவுமில்லை. இன்னும் எத்தனையோ கஷ்டங்களும் உபத்ரவங்களும். ஒவ்வொரு நாளையும் உள்ளபடியே ஒவ்வொரு யுகமாகத் தான் கழித்தான் ஜெயிலில். தண்டனை காலமும் தீர்ந்தது. வெளியில் வந்தான். தூர தேச பிரயாணம், உத்யோகம், எல்லாம் போதும் என்றே ஆய்விட்டது. தன் இஷ்ட தெய்வங்களை எல்லாம் வேண்டிக்கொண்டு, சென்னைக்கு டிக்கெட்டு இல்லாமல் ரயிலில் திரும்பவும் ஏறினான். செத்தேன், பிழைத்தேன் என்று பிச்சைக்காரனைப்போல சென்னை வந்திறங்கினான். நேராக தன் வீடு அடைந்தான். பிள்ளையை முதலில் பார்த்து சந்தோஷமடைந்த ஐயம்மாள், 'ஏண்டாப்பா, வேலை கிடைத்துவிட்டதா இவ்வளவு சீக்கிரத்தில்? என்னை சீக்கிரமே அழைத்துப்போக வந்துவிடுவாய் என்று தெரிந்தே சாமான்களையெல்லாம் முன்னமேயே தயாராக கட்டியே வைத்திருக்கிறேன். அது போகட்டும். ஒரு முக்காலணா கார்டுதான் போடக்கூடாதோ முன்னால்?' என்று கேட்டாள் அவன் தாயார். 'போதும் அம்மா, தூரதேச உத்யோகம். நமக்கு நம் ஊர்தான் சரி. கிடைப்பதை வைத்துக் கொண்டு சந்தோஷமாய் காலம் தள்ளுவதுதான் ஒழுங்கு. நம் போன்றவர்களுக்குதூரதேச உத்யோகம் சரிப்படாது. போய் வந்த கதையை எல்லாம் சாவகாசமாய் சொல்லுகிறேன். எனக்கு மிகவும் பசி களைப்பாயிருக்கிறது. சீக்கிரம் கொஞ்சம் சாதம் போடம்மா' என்றான் பிள்ளை.

ஜாதகனுக்கு 30-ஆம் வயதில் ஒரு நல்ல யோகம் கிட்டுகிறது. கையில் பணம் நூறு நூறாக புரண்டு கொண்டே இருக்கும், என்று ஜோஸ்யம் இருந்தது. ஊருக்கு வந்த பத்து நாளைக்கெல்லாம், ஒரு தெரிந்த பெரிய மளிகை கடை முதலாளி-கௌண்டர், தனக்கு நம்பிக்கையான ஒரு குமாஸ்தா கடைக் கணக்கு எழுத தேவையென்றும், கோவிந்தனை வந்தால் வைத்துக்கொள்வதாயும், வ-லு-வி-லே சொல்லியனுப்பினார். அவனும் சரியென்று உடனே போய் ஒப்புக்கொண்டான். இப்பொழுது கோவிந்தன் கௌண்டரின் கணக்குப்பிள்ளை. யார் பணமாயிருந்தால் என்ன? கடையில் வரவு செலவு பணமெல்லாம் இவன் கையினாலேயேதான். நூற்றுக்கணக்காகத்தான் இவன் கையில் தினமும் பணம் புரண்டு கொண்டேயிருந்தது. கடையில் ஒழுங்காக தன் வேலையை கவனித்து வந்தான். எப்பொழுதும், எந்த நேரத்திலும் தன் கணக்கில் ஒரு செல்லிகாசுகூட பிசகன்னியில் சரியாக இருக்கும். முதலாளிக்கு இவனிடத்தில் அபார நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.அவன் நடந்துகொண்ட ஒழுங்கும் மரியாதையும் முதலாளி வீட்டிலுள்ளவர்களையும்கூட கவர்ந்துவிட்டது. தன் வரும்படியைக் கொண்டு கௌரவமாய் தாயும் மகனும் காலத்தை கழித்துவந்தார்கள். இந்த வேலையாவது தனக்கு நிரந்தரமாயிருக்குமா என்றுதான் அந்த ஜாதகச் சுருளை புரட்டிப் புரட்டிப் பார்த்தான், அன்று காலையில். அதைப்பற்றி ஒரு விவரமும் காணவில்லை. அவனுக்கு எங்கே சந்தேகமோ, அங்கேயேதான் ஜோஸ்யருக்கும் சந்தேகம் போலும், என்று நினைத்துக்கொண்டான்.

இந்த ஜாதகனுக்கு 32-33 வயதில் குருபலம் ஏற்பட்டு, கலியாண பிராப்தி உண்டு. நல்ல இடத்திலிருந்து கைக்கு அடக்கமான ஒரு பெண்ணை கட்டிக் கொள்வான், என்று எழுதியிருந்தது. இதைப் பார்த்தவுடன், காகிதச்சுருளை முதலில் பிரித்தபோது சிரித்தானே, அப்படியே திரும்பவும் உரக்க சிரித்தான். அதே சமயம் அவன் தாயார், தன் வேலைகளை முடித்துக்கொண்டு ஹாலில் வந்து சற்று சிரமப்பரிகாரமாக உட்கார்ந்தாள். இந்த சிரிப்பைப் பார்த்து, அவனுக்கு பயித்தியம் தான் பிடித்துவிட்டது என்று முணுமுணுத்துக்கொண்டு 'கோவிந்தா, இன்னமுமா அந்த பழங்காகிதங்களை கிளறிக் கொண்டிருக்கிறாய்? இன்றைக்கு லீவா என்ன உனக்கு? வேலைக்கு போக வேண்டாமா? மணி 8 அடிக்கப் போகிறதே! இன்னம் குளித்தபாடுகூட இல்லை! நன்றாக இருக்கு, போ. அவைகளை



யெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, எழுந்திரு' என்ருள் அலுத்துக் கொண்டே. 'ஏனம்மா இப்படி அலுத்துக்கொள்கிருய்? இப்பொழுது நான் ஒன்று படித்தேன். அதைச் சொன்னுல் ஒரே ஆனந்தத்தில் மூழ்கி அப்படியே பரவசமாய் உட்கார்ந்து விடுவாய் நீ. சற்றுமுன் ஏதேதோ சொன்ணுயே! உன் மன நிம்மதிக்கு ஒரு அருமருந்துகூடச் சொன்ணுயல்லவா? நம் குப்பண்ணு ஜோஸ்யரும் அதைத்தான் எழுதியிருக்கிருர்,—'இந்த ஜாதகனுக்கு 32–33 வயதுக்கு குருபலம் ஏற்பட்டு கலியாண பிராப்தி உண்டு. நல்ல இடத்திலிருந்து ஒரு பெண்ணை கட்டிக்கொள்வான்' என்று உன் பிள்ளையைத் தேடிக்கொண்டு—தா—னே—வருவாள் ஒரு மஹாலக்ஷிமி என்ருன் சிரித்துக் கொண்டே கோவிந்தன்.

'உனக்கு எல்லாம் கேலிதான். இந்த குழந்தை புத்தி இன்னும் போகவில்லையே இவ்வளவு வயதாயும். கொடுக்கிற தெய்வம் கூரையை பிய்த்துக்கொண்டு கொடுக்கும் என்று நீ கேட்டதில்லையா? அப்படியாப்பட்ட ஒரு அதிர்ஷ்டம் உனக்கு வருவதாக இருந்தால், அதை யார்தான் தடுக்கமுடியும். நான் சொன்னுல் நீ சிரிப்பாய். இன்று விடியற் காலையிலே ஒரு நல்ல சொப்பனம் கண்டேன். சர்வாலங்கார பூஷிதையாய் ஒரு பெண்ணும் நீயும், கலியாணக் கோலத்துடன் என்னை நமஸ்காரம் செய்வதுபோல். விடியற்காலம் காணும் சொப்பனம் கண்டிப்பாய் நடந்தே தீரும் என்பார்கள்;—அதிலும் சீக்கிரத்தில். என்னமோ அப்பா; குடியும் குடித்தனமுமாய் உன்னை வைத்துவிட்டு, ஒரு பேரக் குழந்தையையும் பார்த்து மகிழ்ந்து, கண்ணை மூடினுல் எனக்கு மன நிம்மதி உண்டு. தெய்வம் என்னதான் நினைத்திருக்கிறதோ' என்று உள்ளம் பூரித்து சொன்ஞள். வேலைக்கு போக நேரமாகவே; உடனே எழுந்து ஸ்நாநம், சாப்பாடு முடித்துக்கொண்டு, கடைக்குப் போய்விட்டான் கோவிந்தன். ஒருவாரம் கழித்து ஒரு நாள் இரவு, கோவிந்தன் தன்

சினிமா ரஸிகர்:—"இப்போ உங்க 'ஸ்டுடியோ'விலே என்ன எடுக்கிருங்க?"

சினிமா சிப்பந்தி:—"இருக்கிற ஆள்களை ஒவ்வொத்தரா எடுத்துக்கிட்டு வராங்க!"

வேலைகளை முடித்துவிட்டு வீட்டுக்கு புறப்படும் நேரம், முதலாளி அவனைக் கூப்பிட்டு, தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று, 'கோவிந்தா, உன் பெற்ருேரை நாங்கள் நன்கு அறிவோம். உன் தாயாருக்கு எங்களைப் பற்றியும் அநேகமாய் தெரிந்திருக்கலாம். எங்கள் பெண் யோகம் கல்யாணத்திற்கு நிற்கிருள், என்பது உனக்கு தெரியும். முன்பின் தெரியாத கண்ட இடத்தில் அவளை கல்யாணம் செய்து கொடுக்க எங்களுக்கு இஷ்டமில்லை. தெரிந்தவர்களாயும், உள்ளூரிலுமிருக்கும் உனக்கு கொடுப்பதில், எங்களுக்கு பரமதிருப்தி. உனக்கு சம்மதமானுல் உன் தாயாரையும் ஒரு வார்த்தை கேட்டு, சொல். பிறகு நம் ஜாதி முறைப்படி எல்லாம் நடத்திக்கொள்ளலாம்' என்ருர். இதைக் கேட்டதும் கோவிந்தனுக்கு வெகு ஆச்சரியமாய் போய்விட்டது. அதை வெளிப்படையாய் காட்டிக் கொள்ளாமலே 'உங்களுக்கு சந்தோஷத்தை கொடுக்கும் இந்த சுப காரியத்தில் நான் தடையாயிருக்கமாட்டேன். என் தாயாருக்கும் இதில் யாதொரு ஆட்சேபணையுமிராது என்று நானே தைரியமாய் சொல்வேன்' என்று சொல்லி வீட்டிற்கு கிளம்பினுன். வீட்டை அடைந்ததும் 'அம்மா, நீ கண்ட சொப்பனம்

பலிதமாகிறது. ஒரு மஹாலக்ஷிமி வ—ரு—வி—லே— வரப்போகிருள். உனக்கு இனிமேல் சந்தோஷம் தானே' என்ருன் சிரித்துக் கொண்டே. அவன் தாயாருக்கு அளவு கடந்த ஆனந்தம் இதைக் கேட்டதில். சந்தோஷமாய் இரு வரும் கலியாணத்தைப் பற்றி பேசிக்கொண்டிருக்கையில், முதலாளியும் அவர் மனைவியும், தட்டுகளில் புஷ்பம், பழம், சந்தனம், வெற்றிலை பாக்கு, மஞ்சள், குங்குமம், தேங்காய், பலகாரங்கள் எல்லாம் எடுத்துக்கொண்டு ஐயம்மாளைப் பார்க்க வந்தார்கள். தங்கள் பெண் யோகத்தை அவள் மகன் கோவிந்தனுக்கு, கலியாணம் செய்வதாக நிச்சயம் செய்துகொண்டு வீடு திரும்பினுர்கள். ஒரு சுப முகூர்த்தத்தில் யோகம்—கோவிந்தன் கலியாணம் வெகு சிறப்பாய் நடந்தது. கலியாண பரிசாக ஒரு 'மளிகை ஸ்டோர்' கோவிந்தனுக்கே சொந்தமாக ஏற்படுத்திக் கொடுத்தார் அவன் மாமன். அவனே இப்போது அதற்கு முதலாளி;சர்வாதிகாரி. அவனுக்கு கீழ் நான்கு சிப்பந்திகள் கைகட்டி வேலை செய்கிருர்கள். கோவிந்தனின் தாயார் ஐயம்மாளோ, தன் பிள்ளை நாட்டுப் பெண்ணேடு சந்தோஷமாய் காலம் கழித்தாள்.

குப்பண்ணு ஜோஸ்யர் கோவிந்தனின் வாழ்க்கையைப்பற்றி, அவனுடைய ஐந்தாம் வயதிலேயே எழுதியிருந்தது முற்றிலும் சரியே. அவரவர்களின் நிலைமையை ஒட்டியேதான் அவரவர்களின் வாழ்க்கையில் பலனை எதிர்பார்க்கவேண்டும். யோக ஜாதகம் என்பதன் உண்மையும் இதுவே. அவரவர்களின் அந்தஸ்துக்கு மீறி பிரமாதமாய் எதிர்பார்த்து, அது நடக்கவில்லையே என்று ஏங்குவது, முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவது போல்தான். சற்று நிதானமாய் யோசிக்கும் வேளையில், ஜோதிஷ சாஸ்திரத்தையும், அதை நன்கு கற்று ஸ்வாநுபவத்திற்கு கொண்டுவந்திருக்கும் ஜோஸ்யர்களின் வாக்கையும் நம்புவது, நமக்கு முற்றிலும் நன்மையே யாகும்.



3

உள்ளம் துடிக்குது

★

பரீட்சை எழுதியாகிவிட்டது; மூட்டை கட்டிக்கொண்டு ஊருக்குப் புறப்பட வேண்டியதுதான். எப்படியும் அதற்குள் ஒரு முறை சரோஜினியைக்கண்டு பேசவேண்டும். அவளிடம் சொல்லிக்கொண்டுதான் ஊருக்கு ரயிலேறவேண்டும். ஒரு சமயம் அவளே ரயில் ஏற்றிவிட வந்தாலும் வரலாம். இந்தத் தடவை அவளிடம் உள்ளத்து எழுச்சியை ஒளிவுமறைவு ஏதுமின்றி. தெளிவாய்ச் சொல்லிவிட வேண்டும். அவள் என்ன பதில் சொல்கிருளோ?

வேறென்ன சொல்லப் போகிருள்! நிச்சயம் சம்மதம் என்றுதான் கூறுவாள். இருந்தாலும், இந்த விஷயத்தில் எப்படிப் பேச்சைத் தொடங்குவது? எவ்வளவோ தடவைகள் அவளுடன் நெருங்கிப் பேசிப் பழகியாகிவிட்டது. ஒருத்தரை ஒருத்தர் பரிகாசம் பண்ணிக்கொள்ளுகிற அளவுக்குக்கூட வந்தாகிவிட்டது. இருந்தாலும், இதுவரை ஒரு சிநேகிதன்—உதவிக் காரியதரிசி என்ற முறையில்தானே பழக்கமும் பேச்சும்? அந்தரங்கமாகவும் சேர்ந்தும் கூடிக்கூடிப் பேசியதும் யோசித்ததும் என்ன இருந்தாலும், சங்க விஷயமாகத்தானே?

திடீரென்று எப்படி அவளிடம் இன்று புதுமுறையில் பேச்செடுப்பது?

தன்மீது நம்பிக்கை வைத்து, கூச்சம் இல்லாமல் நெருங்கிப் பழகுகிருள் என்ற காரணத்தினுல், முன்பின் சொல்லாமல் திடீரென, அவள் எதிரே பல்லைக் காட்டுவதா? 'எனக்கு உன்னை விவாகம் செய்துகொள்ளவேண்டும் என்ருசை' என்று எடுத்த எடுப்பில் சொல்லிவிடுவதா? அப்படிச் சொன்னுல், ஒருகால் அவள் தன்னைப்பற்றி என்ன எண்ணிக் கொள்ளுவாளோ?

இப்படியே யோசித்து யோசித்துத்தானே, இந்த விஷயம் இப்படி ஒரேயடியாக வருஷக் கடைசிக்குத் தள்ளிப்போய்விட்டது? மரியாதையாய், இப்படித் தயங்கியிராமல், ஆரம்பத்திலிருந்தே கொஞ்சம் கொஞ்சமாய்த் தன் மனசை அவளுக்குச் சாடையாகவும் மறைவாகவும் அவிழ்த்துக் காண்பித்திருந்தால், இப்போது இந்த இக்கட்டான நிலைமை வந்திராதே. ஒவ்வொரு நாளும் சரோஜினி வரும்போது, மனம் படாதபாடுபடும். அவள் ஆசை என்ன என்பதைக் கேட்டுவிடலாமா என்ற கேள்வி பிறக்கும். அப்போதெல்லாம் 'வேண்டாம். பின்னுல் பார்த்துக்கொள்வோம்' என்று தயக்கத்தில் தள்ளிப் போட்டுப் போட்டுத்தானே, இப்போது ஆண்டு முடிந்து, விடை பெற்றுக்கொள்ளும் கட்டம்கூட வந்துவிட்டது?

இனிமேல் தள்ளிப்போடப் போவதுகூட இல்லை. அவளிடம் மனதைத் திறந்துகாட்டிக் கேட்டுவிட வேண்டியதுதான்!

“என்னது யோசனை பலமாய் இருக்கிறாப்போல் தோன்றுகிறதே?” என்று விசாரித்தவண்ணம், சரோஜினி நுழைந்தாள்.

“பரீட்சையெல்லாம் நன்றாய் எழுதியிருக்கிறீர்களல்லவா?” என்று அவள் விசாரித்தாள்.

“நன்றாய்த்தான் எழுதியிருக்கிறேன்”? நீ எப்படி எழுதியிருக்கிறே? என்று அவன் பதிற்கேள்வி இட்டான். அவன் அவளை ‘நீங்கள்’ என்பது ஆரம்பத்தில் கொஞ்ச நாட்கள்வரைதான் நீடித்திருந்தது.

“நான் என்ன இண்டர்மீடியட்தானே? பிரமாத ஐ. ஏ. எஸ்ஸா தட்டுக்கிட்டுப் போகிறது!” என்றாள் சரோஜினி அலட்சியமாக.

“ஆமாம், புத்திசாலிப் பெண்களுக்குக் கவலை என்ன?”

“ஏன், புத்திசாலி மாணவர்களுக்கு மட்டும் என்ன கவலை?”

“பரவாயில்லை, இரண்டுபேரும் ஒருவரையொருவர் புத்திசாலியாக்கிக்கொண்டுவிட்டோம்” என்று அந்தப் பேச்சுக்கு சாரநாதன் முற்றுப்புள்ளி இட்டான்.

“பரீட்சைகள் முடியும்வரை உங்களை வந்து தொந்தரவு பண்ணப்படாதென்றிருந்தேன். அதனால்தான் இதுவரை உங்களைப் பார்க்க வரவில்லை”.

“தேவலையே காரணம்!”

“பின்னே வேறு என்ன காரணம்?”

உனக்கும் பரீட்சை. நீ படித்துக்கொண்டிருந்தே. அதைச் சொல்லிக்கொள்ளாமல், என் பரீட்சை மேல் பழிபோடுகிறயே”

“அப்படிப் பார்த்தால், நான் இன்றுகூட வந்திருக்கவேண்டாமே. எனக்கோ இன்னும் பரீட்சை பாக்கியிருக்கிறது. நாளைய மறுதினம்தான் முடிகிறது. இன்று உங்களுக்கு முடிந்திருக்குமே என்றுதான் பார்க்க வந்தேன். இல்லாவிட்டால், நான் இப்போதும் போய்ப் படித்துக்கொண்டிருக்கலாமே?”

“நீ தான் கெட்டிக்காரி ஆயிற்றே. உனக்கு இண்டர்மீடியட் பரீட்சை ஒரு பொருளே இல்லை என்றுதான் சொல்லிவிட்டாயே”

“ஆமாம், உங்களுக்கு எதற்கும் பரிகாசம் தான்” சரோஜினி பேச்சை வேறுபுறம் பாய்ச்சினாள்.

“அன்றே உங்களிடம் சொல்ல வேண்டும் என்று இருந்தேன். நம் சங்கக் கடைசிக் கூட்டம் ரொம்பப் பிரமாதம் என்று என் சிநேகிதிகள்—ஒருத்தி பாக்கியில்லாமல் எல்லோரும் சொல்லிவிட்டார்கள்”.

“ஏன்? அவ்வளவு பிரமாதமாய் உன் சிநேகிதிகள் என்னத்தைக் கண்டுவிட்டார்களாம்”.

“எல்லாம் நீங்கள் எங்கிருந்தோ தேடிப் பிடித்துக்கொண்டு வந்தீர்களே, அந்தப் பிரசங்கியின் பேச்சைக் கேட்டுவிட்டுத்தான்!”

“ஏன்? அவர் பேச்சில் அப்படி என்ன குற்றத்தைக் கண்டுபிடித்து விட்டீர்களாம்”?

நீங்களும் அப்போது எல்லோருடனும் சேர்ந்துகொண்டு சிரித்ததில் ஒன்றும் குறைச்சல் இல்லை. அவர் பேச்சைக் கேட்கும்போது, விழுந்து விழுந்து சிரித்ததிலேயே வயிறு புண்



ஓட்டுபவர்:—“என்னடாது, நான்பாட்டுக்கு ஓட்டிண்டு வரேன் நீ ஏதோ முணுமுணுத்துண்டே வறயே?”

மற்றவர்:—இல்லேடா! சுவாமிமேலே ஒரு ‘ஸ்தோத்ரம்’ சொல்லிண்டு வரேன்.

ணாகிவிட்டது. எங்கே அந்தப் பிரசங்கியைப் பிடித்தீர்கள்?”

“ஏன்?”

“இல்லை; என் சிநேகிதிகள் எல்லாரும் கேட்டார்கள். ‘எனக்குத் தெரியாது; உதவிக் காரியதரிசிதான் அழைத்து வந்தார் அவரை’ என்றேன். எல்லோரும் உங்களைப் பாராட்டினார்கள்”.

“அதுபற்றிதான், நான் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறேனே. நீ எந்தப் பெண்மணியை யாவது பேசக் கூப்பிட்டுக்கொண்டுவந்தால், என் சகாக்களெல்லாம், உன்னைப் புகழுவார்கள். அதே மாதிரி, நான் எந்த ஆண்களையாவது கூட்டிக்கொண்டுவந்தால், உன் சிநேகிதிகள் என்னைப் பாராட்டுவார்கள்”

“சேச்சே, அந்த முறையில் ஒன்றும் என் தோழிகள் உங்களைப் பாராட்டவில்லை. வந்தவர் உண்மையாகவே வயிறு குலுங்கும்படி பேசுவதைக் கேட்டுவிட்டுத்தான்!”

“பின்னே என் நண்பர்கள் மட்டுமென்ன? காது ஜிமிக்கிகள் குலுங்க, நீ அழைத்து வரும் பெண்மணிகள் பேசுவதைக் கேட்டு விட்டுத்தான் பாராட்டுகிறார்கள்!”

“காரியதரிசியாய் இருந்ததற்கு, நீங்கள் இம்மாதிரியெல்லாம் நன்றாய்ப் பேசக் கற்றுக்கொண்டிருக்கிறீர்கள்!”

சாரநாதனுக்குத் தன் பேச்சை எப்போது தொடங்குவது என்று உள்ளூர உள்ளம் துடித்துக்கொண்டிருந்தது. திடீரென அவள் ‘சரி, நேரமாகிவிட்டது. போய்வருகிறேன்’ என்று சொல்லிக்கொண்டு கிளம்பிவிட்டால், ‘இல்லை, ஒரு விஷயம்’ என்று பிடித்து நிறுத்த முடியுமா? எனவே, அவள் அவசரம் ஏதுமின்றி, ஆற அமர்ந்திருக்கையிலேயே, பேச்சை ஆரம்பிக்க வேண்டியதுதானே?

“சரோஜினி!”

“என்ன? இங்கேயேதான் இருக்கிறேன்” என்று அவள் அவன் திடீரென அழைத்ததைப் பரிகசித்தாள்.

“நான் இப்போது பேசப் போவது புது விஷயம். இத்தனை நாளும் அதுபற்றி நான் பேசியதே இல்லை. ஆனால், அதை உன்னிடம் சொல்லிவிடவேண்டும் என்று மட்டும் ஆரம்பத்திலேயே தீர்மானம் பண்ணி வைத்திருந்தேன். நீ கேட்டுவிட்டு, ‘இது என்னடா இது? இவர் இன்றைக்கு இப்படிப் பேசுகிறாரே’ என்று திடுக்கிட்டுப் போய்விடாதே.”

“நீங்கள் சொல்லப்போகிற விஷயத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போவேனோ, என்னவோ—தெரியாது. ஆனால், இப்போது நீங்கள் போடுகிற பீடிகையைப் பார்த்தால்தான், திடுக்கிட்டுப் போவேனோ என்று தோன்றுகிறது”.

“இப்போதோ நான் ஊருக்குக் கிளம்புகிற சமயம் வந்துவிட்டது. அதனால், இனிமேலும் அதை மனதில் வைத்திருப்பதில் பயனில்லை”.

சரோஜினி ஆவலோடு அவன் முகத்தைக் கவனித்தாள்.

“நீ சங்கக் கூட்டங்களில் என் பேச்சைக்கேட்டு, அடிக்கடி என்னைப் பெரிய முற்போக்குவாதி என்று சொல்லிப் பாராட்டியிருக்கிறே. நான் பேச்சோடு நில்லாமல், செயலிலும் முற்போக்கு வாதியாக இருக்க ஆசைப்படுபவன்”.

“அது தெரியாதா எனக்கு? தெரிந்துதானே, உங்களை நான் ஆரம்பத்திலேயே, வோட்டுக் கேட்க வந்த தினத்தன்றே முற்போக்குவாதி என்றேன்? இல்லாவிட்டால், சில பேரை முற்போக்கு எழுத்தாளர் என்கிறார்களே, அதுபோல் உங்களை நான் முற்போக்குப் பேச்சாளர் என்றுதானே கூறியிருப்பேன்?”

“நீ கெட்டிக்காரிதான்! என்னை முதல் சந்திப்பிலேயே கண்டுகொண்டுவிட்டாய். நான் எச்சரித்த கட்டம் இப்போதுதான் வருகிறது...”

“உஷாராய் இருக்கிறேன்” என்று கூறிவிட்டுக் கள்ளங்கபடின்றி, அந்தப் பெண் சிரித்தாள்.

“நானும் சீர்திருத்தவாதியாகத் திகழவேண்டும் என்பது என் வெகு நாளைய ஆசை. மனதிற்கு உகந்த மங்கையைத் தேடிப் பிடித்து, அவள் சம்மதம்பெற்று, அவளைக் கலியாணம் செய்துகொண்டு, லட்சிய வாழ்வு வாழ வேண்டும் என்று நான் எனக்குள்ளேயே ரொம்ப நாளாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன்”.

"இப்போது அதை என்னிடம்
சொல்லிவிட்டீர்களே!"

"சொல்லத்தான் இவ்வளவு
பீடிகையும். உன்னை முதல்தரம்
கண்டபோதே, என் மனம் உன்
னைத் தன்னகம் இழுத்து வைத்
துக்கொண்டுவிட்டது. அதற்கு,
உன் சம்மதத்தைக் கேட்கவில்லை.
ஆனால், இப்போது அதை உன
க்கு வெளியிடும்போது, அதற்கு
உன் சம்மதத்தைக் கோருகி
றேன்".

இந்த இடத்தில் வந்து, சார
நாதன் ஒரு பெரிய முற்றுப்
புள்ளி இட்டுவிட்டு, மீண்டும்
தொடர்ந்தான்.

"எனக்கு உன்னை மணந்து
கொண்டு, புது வாழ்வு நடத்த
வேண்டும் என்பது ஆசை. அதற்
குத்தான் உன் சம்மதம் வேண்
டும்".

சரோஜினியின் உதடுகள்
மௌனம் சாதித்தாலும், அவை
களின் நடுவே ஊடுருவிக்
கொண்டு புன்னகை என்னவோ
ஓசைப்படாமல் படர்ந்து வந்து,
முகம் முழுவதும் பரவியது.

"உங்கள் பெற்றோர் இணங்க
வேண்டுமேஎன சரோஜினி கேட்
டது சாரநாதனுக்கு இன்பத்
தேனாகத்தான் தொனித்தது.

"அது கடினம்தான்; அதை
யோசித்துப் பார்த்துவிட்
டேன்".

"பின்னே?"

"அதனால் தான், இதைச் சீர்
திருத்த விவாகம் என்று குறிப்
பிட்டேன். பெற்றோரை விரோ
தித்துக்கொண்டுதான், இதற்குத்
துணியவேண்டும்".

"அப்படியானால், என்னிடம்
சம்மதமா என்று கேட்டு, என்ன
பயன்?"

"ஏன்?"

"அவர்களல்லவா சம்மதிக்க
வேண்டும்?"

"அவர்கள்தான் முக்கால் வாசி
சம்மதிக்கப் போவதில்லையே.
அதனால், சம்மதிக்கக்கூடிய உன்
னிடம் தானே 'சம்மதம் கோர
வேண்டும்?"

"சரி. அப்படியானால், என் சம்
மதத்தைத் தெரிவிக்கும் முன்,
உங்களிடம் நான் ஒன்று கேட்கி
றேன். பதில் சொல்லுங்கள்".

சாரநாதன் நிமிர்ந்து உட்கார்
ந்தான். சரோஜினியின் மேற்
கண்ட சொற்கள் அவனை நிமிர்ந்
தெழச் செய்தன.

"என்ன?" என்றான் ஆவலோடு.

"அவர்கள் சம்மதம் இல்லாமல்,
என்னைக் கலியாணம் செய்து
கொள்ள, உங்களுக்குச் சம்மதம்
தானா?"

"அப்பாடா, இவ்வளவுதானா?
நீ என்ன கேட்கப் போகிறயோ
என்று பயந்துவிட்டேன்".

"தன் பெற்றோர்களை விரோ
தித்துக்கொள்ள உங்களுக்குத்
துணிச்சல் உண்டா? அவர்களைப்
பகைத்துக்கொள்ள உங்களுக்குச்
சம்மதம்தானா என்பது தெரியா
மல், நான் எப்படிச் சம்மதிப்
பது?"

"நியாயமான கேள்வி".

"அது தெரியும் எனக்கு. பதி
லைச் சொல்லுங்கள்"

"அதுகூடச் சந்தேகமா என்
மேல்?"

"இல்லை; எதற்கும் கேட்
டேன்!"

சாரநாதன் அவளை வியப்
புடன் நோக்கினான்.

"நான் தெளிவாய்ச் சொல்லி
விடுகிறேன். இதில், நான் சம்ம
திப்பதில் ஒன்றும் பிரமாத
மில்லை. நான் உற்றார், உறவினர்
எல்லாரையும் இழந்தவள். ஏழை
களோடு ஏழைகளாக, கன்யா
நிலயத்தில் இருந்துகொண்டு
காலேஜில் உதவிச் சம்பளம்
பெற்று படித்து வருபவள். நான்
ஓர் ஏழை, அநாதைப் பெண். உங்
களுக்குச் சம்மதிப்பதில், நான்
எதையும் இழக்கவில்லை. இழப்
பது நீங்கள். எனக்கோ லாபம்
உங்களுக்கோ நஷ்டம். எனக்குப்
புது உறவினர் கிட்டிவிடுவர்.
உங்களுக்கு இருந்தவர்கள்
சென்றுவிடுவார்கள்"

"ஏன் எனக்கு ஒருத்தி புது உற
வில் கிடைப்பாளே" சரோஜினி
அன்பு விழிகளினால் ஆசை கக்க
அவனைப் பார்த்தாள்.

"நான் உங்கள் ஜாதிப் பெண்
இல்லையே என்று உடனே நீ இப்
போது என்னைக் கேட்கப் போகி
றாய் இல்லையா? அதற்கும் பதில்
சொல்லிவிடுகிறேன். எனக்கு
ஜாதி, ஜனம் முறைப்பெண்என்ப
திலெல்லாம் நம்பிக்கை கிடை
யாது......"

"இடையில், ஒரு சின்னக்
கேள்வி! முறைப் பெண் என்ற
தும் ஞாபகம் வருகிறது. நீங்கள்
உங்கள் மாமா பெண் யாரையா
வதோ அல்லது வேறு யாரையோ
அந்தரத்தில் விடவில்லை என்று
கேட்டுக்கொண்டு விடுகிறேன்."

"சரோஜ் நீ என்னை இப்படிக்
கேட்கிறயே என்று எனக்கு ஆச்
சரியமாய் இல்லை; ஆனால் இவ்வ
ளவு சந்தேகங்கள் இருந்தும்,
என்னை எப்படி நீ முற்போக்கா
ளன் என்று சொன்னேயென்று
தான் புரியவில்லை"

"ஆமாம், எனக்கே புரியவில்லை"
என்று அவள் அவனுடன் சேர்ந்து
சிரித்தாள்.

இந்தச் சிரிப்பெல்லாம் அப்
போது காரியவாதியாய் இருந்த
சாரநாதனுக்குப் பிடிக்கவில்லை.

"சரோஜ், ஒரு விஷயம் மட்டும்
சொல்லிவிடுகிறேன். நீ என்ன
ஜாதி, என்ன பிரிவாக இருந்தா
லும் சரி, உன்மேல் எனக்கு விழு
ந்த கண் கலங்கப் போவதில்லை.
எப்படியும் உன்னை நான் விரும்பி
மணந்துகொள்ளுவேன், நீசம்ம
தித்தால். ஆனால், ஒன்று நீ என்
ஜாதியாய் இராவிட்டால் அவ்வள
வுக்கவ்வளவு சந்தோஷப்படுவேன்
அத்தனைக்கத்தனை இவ்விவாகத்
தில் சீர்திருத்த அம்சம்
பொருந்தி இருக்கும்"

"அதென்னவோ, நான் ஹரிஜன
வகுப்பு என்பதை ஒளிவுமறை
வில்லாமல் சொல்லிவிடுகிறேன்.
அப்புறம் உங்கள் மனத் துணி
வைப் பொறுத்தது."

சாரநாதனுக்கு அவள் சொன்
னதைக் கேட்க உண்மையி
லேயே மிகவும் மகிழ்ச்சியாய்
இருந்தது. ஒரு ஏழை ஹரிஜனப்
பெண்ணுக்கு வாழ்வளிக்கப்
போகிறோம் என்ற எண்ணம்
அவனுக்கு மகிழ்வை ஊட்டியது.

"எந்த எண்ணத்தில் இணங்கி
னாலும், இணங்காவிட்டாலும்,
கன்யா நிலயத்துக்கு நன்
கொடை ஒன்றும் சேர்த்துக்
கொடுக்காவிட்டாலும், எவ்வ
ளவு சீக்கிரம் அவ்விடுதியை
விட்டு வெளியே வந்து அவர்களு
க்கு நம்மாலான உதவியை செய்
யலாம்என்றஆசையிலேயே நான்
உங்கள்ஆசைக்கு இசையத்தயார்
எத்தனைவருஷங்கள்தான் ஒவ்
வொருத்தியும் ஏழை ஏழை

வீட்டு உணவும் விஷமாகலாம்!



"என் குழந்தைகளின்
நோய்க்கு காரணம் நானே
என்று டாக்டர் சொன்ன
போது நான் துணுக்குற்றேன்.

சென்ற ஆறு மாதத்திற்குள்
என் குழந்தைகள் இருமுறை
வயிற்று நோயால் அவதிப் பட்
டார்கள். போனமாதம்என் கண
வர் வேறு சீக்காய்ப் படுத்தார்.
என்ன கஷ்டம்! வீட்டுச்செலவை
சமாளிப்பதே சிரமமாயிருக்கும்
பொழுது டாக்டருக்கு வேறு கொடுக்க வேண்டு
மென்றால் என்ன செய்வது?

ஒருவர் மாற்றி ஒருவர் சீக்காய் படுத்தது என்
மனோ நிம்மதியைக் குலைத்தது. நானே டாக்ட
ரிடம் சென்றேன்.

டாக்டர்: நீங்கள் சமைப்பதில் கோளாறு ஒன்று
மில்லையே?

நான்: ஏன், எப்பொழுதும் போல்தான்
சமைக்கிறேன்.

டாக்டர்: ஆமாம், நீங்கள் தாவரக் கொழுப்பை
எப்படி வாங்குகிறீர்கள்?

நான்: சில்லறையாகத்தான் வாங்குகிறேன்.

டாக்டர்: அப்படிச் சொல்லுங்கள். சில்லறை
யாக விற்கப்படும் கொழுப்பு கலப்புப் பொருள்
கள், அழுக்கான கைகள், ஈக்கள் இவைகளால்
அசுத்தப் படுத்தப்பட்டு பலவகைக் கிருமிகள்
வசிப்பதாயிருக்கலாம். அதுவே உங்கள்
வீட்டில் வியாதிக்குக் காரணமாயிருக்கும்.

சில்லறையாக கொழுப்பு வாங்கினால் பணம்
மிச்சப்படும் என்று நினைத்தேன். ஆனால் அத
னால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப் பார்க்கும்
பொழுது அது ஒரு லாபமே இல்லை.

இப்பொழுது நான் காற்றுப்புகாத சீல் செய்த
டின்னில் கிடைக்கும்டால்டா வனஸ்பதியையே
வாங்குகிறேன். டால்டா வனஸ்பதி உணவிற்கு
சிறந்த ருசியை அளிக்கிறது என்பதற்கு
வேறென்ன அத்தாட்சி வேண்டும். என்வீட்
டில் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்
கொண்டு திரும்பத்திரும்ப கேட்டு சாப்பிடும்
தமாஷே போதாதா?"

டால்டா வனஸ்பதி வாங்கினால் புத்தம் புதிய,
சுத்தமான ஒரு சிறந்த ரக தாவரக் கொழுப்பு
உங்களுக்கு கிடைக்கிறது. எப்பொழுதும்
டால்டா வனஸ்பதி கிடைக்கும் பொழுது,
கொழுப்புகளை சில்லறையாக வாங்கி ஏன்
அவதிப்பட வேண்டும். இப்பொழுது டால்டா
வனஸ்பதியில் விடமின் 'ஏ', 'டி' சேர்ந்திருக்
கிறது. எல்லோரும் வாங்கக் கூடிய விலையில்
10, 5, 2, 1 பவுண்டு டின்களில் கிடைக்கிறது.
உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்தை அபி
விருத்தி செய்வதெப்படி?

இலவச ஆலோசனை
களுக்கு இன்றே
எழுதுங்கள்:
தி டால்டா அட்வைஸரி
ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353.
பம்பாய் 1



மா அடையாளமுள்ள
டின்னைப் பார்த்து
வாங்குங்கள்

ஆரோக்கியமாயிருக்க
டால்டா வனஸ்பதியில் சமையுங்கள்
சிறந்த சமையல் — குறைந்த செலவு

HVM. 212-X52 TM

என்று சொல்லிக்கொண்டு நிலையத்துச் செலவில் வளர்ந்துவர ஆசைப்படுவது? நான் ஒருத்தி வெளியே இருந்தால், இன்னொரு பெண்ணுக்கு அவர்கள் இடம் அளிக்கலாமல்லவா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"அவ்வளவு தூரத்திற்குப் போய்விடாதேஅதற்குள். கொஞ்சம் கொஞ்சமாய்த்தானே முன் செல்ல வேண்டும். நீபாட்டில் அவசரப்பட்டுக்கொண்டு உங்கள் நிலையத்தைவிட்டு வெளி வருவதாக எழுதிக்கொடுத்து விடாதே."

"நல்ல வேடிக்கை உங்கள் பேச்சு! அப்படி நான் எழுதிக் கொடுத்துவிட்டால்தான், உடனே அவர்கள் என்னை விட்டுவிடுவார்களா? யாரை நம்பி இவள் வெளியே போகிறேன்என்கிறாள். அவன் இவளைக் காப்பாற்றுவானா? அல்லது கொஞ்ச நாட் கழித்து, சிலபேர் போல் இவளும் பழையபடி அநாதையாகி விடுதிக்கே வந்துவிடுவாளா என்றெல்லாம் யோசிக்காமல், என்னை வெளியே விட்டுவிடுவார்களா?"

சாரநாதன் பதில் பேச முடியவில்லை.

"நான் ஊருக்குக் கிளம்புகிறேன். எப்படியும் வேலைக்கு இந்தப் பக்கம்தானே வர வேண்டும்? அப்போது உன்னைப் பார்க்கிறேன்."

"சரி நானும் வருகிறேன்" எனக்கூறிவிட்டு சரோஜினி கிளம்பினாள்.

4

வேலை கிடைத்தது

★

"வெறுமனே உட்கார்ந்திருக்கிறயே. எதாவது கம்பெனிக்கு வேலைக்குமனுபோட்டு வையேன்" என்று தகப்பனார் அன்று திடீரென ஆரம்பித்தது சாரநாதனுக்கு ஒரு விதத்தில் பிடித்திருந்தது. ஏனென்றால், உத்தியோகம் என்றால் பட்டணத்துப் பக்கம் போக வேண்டியிருக்கும். அங்கே சரோஜினி இருக்கிறாள்!

"ரிசல்ட் வந்தப்புறம் போடலாமே என்று இருந்தேன்" என்றான் அவன்.

"பரீட்சை நன்றாய் எழுதவில்லையா? பாஸ் ஆகிறதுகூடச் சந்தேகமா?" என்று ரங்காச்சாரியார் அவனைச் சட்டென்று மடக்கினார்.

"அதில்லை. என்ன இருந்தாலும் ரிசல்ட் வந்தப்புறம்தானே அதிகாரபூர்வமாய் நான் ஒரு பி. ஏ. யென்று சொல்லிக் கொள்ளலாம்"

"அதுக்குச் சொல்கிறயா?" என்று அவர் கேட்டு நிறுத்தினார்.

"எதுக்கும், வேண்டுமானால் இப்போதே போட்டு வைக்கிறேன்"

"ஆமாம், அதுதான் தேவலை. முன்னாலேயே போட்டுவைத்தால் பின்னால் ரிசல்ட் வந்தப்புறம் பார்த்துக்கொள்கிறோம்."

சாரநாதனுக்கு அவரது யோசனை சரியெனத் தோன்றியது. ஆனால், எந்த ஆபீசுக்கு மனுப் போடுவது? எங்கேயோ பெரிய உத்தியோகம் தனக்காக காலியாய் வைத்திருக்கிறாய் போல், அலட்சியமாக 'மனுப் போட்டுவையேன்'என்றுசொல்லி விட்டாரே என்று அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

"என்ன சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று அடுப்பங்கரையிலிருந்து சட்டுவமும்கையுமாக அவன் தாயார் செல்லம்மாள் ஸ்தலத்தில் பிரசன்னமானாள்.

"வாடியம்மா வா" என்றார் ரங்காச்சாரியார் அவளுக்கு வரவேற்பு கூறிக்கொண்டு.

"உங்கள் உபசாரம்தான் என்றைக்கும் இருக்கிறதே. என்னவோ வேலைக்கு மனுப் போடுவது என்று பேசிக்கொண்டிருந்தீர்களே என்று வந்தேன்."

"அதுதான் வாவென்று உபசாரம் சொல்லிவிட்டேனே!"

"அதுக்கு இல்லை. கண்ட இடங்களுக்கும் வீணாய்க் காசை செலவழித்துக்கொண்டு மனுப்போட வேண்டாமே என்று சொல்ல வந்தேன்."

"தானாய் எல்லாக் கம்பெனிக்காரர்களுக்கும் வேலைக்கு வா என்று உன் பிள்ளையாண்டானுக்கு மனுப் போடுவார்கள் என்று நினைத்தாயா?"

"அன்றைக்கு வந்தானே, அவன் அவ்வளவு தூரம் சொல்லிவிட்டுப்போய் இருக்கிறான் நிச்சயம் தன்னிடத்திலேயே நிறையச் சம்பளம்போட்டு வேலையில் வைத்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறபோது, ஏன் வேறு இடங்களுக்கு மனுப்போட வேண்டும்?"

செல்லம்மாளின் இந்தச் சொற்களின் அர்த்தம் சாரநாதனுக்கு புரியவேயில்லை. யார் வந்துவிட்டுப் போனான், அவன் என்ன உத்தியோகம் பார்க்கிறான், அவன் எதற்கு என்னை வேலையில் எடுத்துக்கொள்கிறான், அப்படிப் பெரிய சம்பளம் போட்டுத்தர அவன் எவன்,அவனுக்கும் அப்பாவுக்கும் என்ன சம்பந்தம், என்னைப்பற்றி இவர் ஏன் அவனிடம் பிரஸ்தாபித்தார்– ஒரே குழப்பம்!

"இந்தாடி! நான் உன் பிள்ளையினிடம் என்ன சொல்லிக்கொண்டிருந்தேன் உனக்குத் தெரியுமோ? ஏன் வீணாய் இதில் தலையிடுகிறே? விளம்பரங்களெல்லாம் பார்த்து ஒரு முப்பது நாற்பது கம்பெனிகளுக்கு வேலை கேட்டு, உன் பிள்ளையை மனுப் போடச் சொல்லிவிட்டேனா? ஏன் இத்தனை அவசரம்? கொஞ்சம் கொஞ்சமாய்த்தானே எல்லாம் சொல்ல வேண்டும். அவன் யார், எதுக்கு வந்துவிட்டுப் போனான், எப்போது வந்தான் எல்லாம் ஒவ்வொன்றாய்த்தானே சொல்ல வேண்டும்? திடீரென்று எடுத்த எடுப்பிலே, 'டேய், அவனுடைய கம்பெனிக்கு மனுப்போடு' என்று நான் சொல்லியிருக்க வேண்டும் என்கிறாயா?"

"என்னமோ, நான் பேசினது தப்பு. நீங்கள் எல்லாக் கம்பெனிகளுக்குமே ஒரு சமயம் மனுப் போடச் சொல்கிறீர்களாக்கும் என்று எண்ணிக்கொண்டு வந்தேன். நான்போகிறேன். எனக்கு அடுப்பும் வெண்கலப் பானையும் காத்துக்கொண்டிருக்கிறது"

"நல்லபடியாய்ப் போய்ச் சேர்!"

"ஆமாம், என்னை மதித்து வரவேற்பது அடுப்பும் பானையும் தானே?" என்று சொல்லிக் கொண்டு, செல்லம்மாள் உள்ளே சென்றுவிட்டாள்.

சாரநாதன் எவ்வளவோதரம் கவனித்திருக்கிறான். அவனுடைய அம்மா இப்படிவந்து ஏதாவது சொல்லிவிட்டு, அவரிடம் அசட்டுப் பட்டத்தை வாங்கிக் கட்டிக்கொண்டு உள்ளே போய் விடுவாள். அவள் சொல்வதென்னவோ சரியான விஷயமாய்த்தான் இருக்கும். ஆனால், அவர் அவளை ஏதாவதுசொல்லி, மட்டந்தட்டிக் கிட்டத்தட்ட பைத்தியம் பண்ணி, உள்ளே அனுப்பி விடுவார். சாரநாதனுக்கு அம்மாவைப் பார்க்க பரிதாபமாய் இருக்கும்.

"ஏனம்மா நீ வந்து ஏதாவது குறுக்கே சொல்கிறே?அவர்தான் உன்னை மட்டந்தட்டி அனுப்பி விடுகிறாரே" என்று எப்போதாவது அவன் அவளைக் கேட்டால், அவள், "நன்றாய் இருக்குடா உன் பேச்சு! யார் யாரை மட்டந்தட்டிவிட்டார்கள்? என்னவோ பிரமாதமாய்க் கண்டுபிடித்துச் சொல்ல வந்துவிட்டாயே அவர் கிட்டே பேசாமல் ரோட்டிலே போகிறவன் கிட்டயா வந்து சொல்லுவேன்?"

"அவர்தான் உன்னை சட்டென்று ஒரேயடியாய் இறக்கி விடுகிறாரே!"

"பின்னே அடுத்த வீட்டுக் காரியிடமாபோய் இப்படிப் பேசுவார்?"

சாரநாதன் அம்மாவை எண்ணி வியந்துகொண்டே ஓய்ந்து விடுவான்.

இப்போது பரீட்சை முடிந்து ஊருக்கு வந்ததும், முதல்தடவையாய் அம்மா குட்டுப்படுவது இப்பொழுதுதான்! அதற்கு ஒரு முற்றுப் புள்ளி இடும் முறையில், அவன் அப்பாவைக்கேட்டான்:

"யாரப்பா அது வந்துவிட்டுப் போனது? யாரவன்?"

"நானும் அவளும் அவன், இவன் என்று சொன்னோமே என்பதற்காக நீயும் அவன்என்காதே உன்னைவிட இருபது, இருபத்தைந்து வயது பெரியவன் அவன்"

ஒரே நிமிஷத்தில் நானும் ஒரு குட்டு வாங்கிவிட்டேன் என்று நினைத்துக்கொண்டே சாரநாதன், 'சரி யார் அவர்?' என்றான்.

"அவனா? அவன்தான் மல்லிகார்ஜுனன். தெரியுமா?"

"தெரியாது; கேள்விப்பட்டிருக்கிறேன். பட்டணத்தில் இருந்துவிட்டு அவர் பெயரைக்கூடக் கேள்விப்படாதிருக்க முடியுமா?"

சாரநாதனுக்கு ஆச்சரியமாயிருந்தது. மல்லிகார்ஜுனனோ பட்டணத்திலேயே பெரிய கம்பெனி என்று பிரசித்தியான ஒரு கம்பெனியின் மானேஜர். அப்பாவோ இங்கே குளக்கரை கிராமத்துப் பள்ளியில் ஆசிரியர். அதுகூட 'ரிடைய'ராகும் சமயம். இவருக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்?

"கேள்விப்பட்டிருக்கிறேன் என்றாயே. யார் அவன்?" எப்போதுமே அவரிடம் இதுமாதிரிக் கேட்கும் சுபாவமுண்டு. தெரியும் என்றால் விடமாட்டார் ஆளை. என்ன தெரியும் அவனைப்பற்றி? தெரிந்ததைப் பத்து வாக்கியங்களில் சுருங்கக் கூறு என்று கேள்வியிட வேண்டியதுதான் பாக்கி. இதுபோன்ற சமயங்களில் சாரநாதன்'அப்பா வாத்தியார் வேலையைக் காட்டி ஆரம்பித்து விட்டாரோ' என்று சொல்லிக்கொள்ளுவான்.

"அவர்தான் ஜோதி லிமிடெட்டின் மானேஜர்" என்றான்.

"அவனேதான் நான் சொல்கிற பேர்வழியும்" என அவர் பதிலுக்கு நூறு சத விகித மார்க்கு அளித்தார்.

"அவன் நான் இந்த உத்தியோகத்துக்கு வந்த புதிதில் என்னிடம் படித்த இரண்டாவது, மூன்றாவது 'ஸெட்'டைச் சேர்ந்தவன். என்னிடம் அவனுக்கு ஏகப்பட்ட அன்பு. இதுதான் அவனுடைய ஊர். இந்தப் பக்கம் வருவதற்கே அவனுக்கு அவகாசம் கிடையாது. வந்தால், இங்கே தலை காட்டி விட்டு, என்னைக் கண்டு ஒரு வார்த்தையாவது பேசாமல் போனதில்லை."

"வாத்தியார்களுக்கு வாழ்க்கையில் கிடைக்கும் ஒரே இன்பம்" என்று சாரநாதன் மனதிற்குள் சொல்லிக்கொண்டான்.

"அவ்வளவு பெரிய மனுஷராய் இருந்தும், சாதாரண ஆள்போல வந்து பார்க்க வேண்டும் என்றால் அவர் ரொம்ப நல்லவராய்த்தான் இருக்கவேண்டும்" என்று அவன் சொன்னான். அதையும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. எப்போதுமே அவர் இலேசில் எதையும் ஒப்புக்கொண்டு விடுபவரல்ல. இப்போது சாரநாதனும் தப்பிக்கொள்ளவில்லை.

"நீ சொன்னது தப்பு"

சாரநாதனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"பெரிய உத்தியோகத்தில் இருப்பவர்கள்தான் வந்து பார்ப்பார்கள். கை நிறையச் சம்பளம் கிடைக்கிறது. அதனால் பெருமையாய் வந்து விசாரிக்கிறார்கள். போன மாதம் கூட எவனோ ஒருவன் வந்து என்னை விசாரித்தான். அவனை எனக்கு அடையாளமே புரியவில்லை. எங்கே வந்தே என்று கேட்டேன். அவன் டெப்டிக் கலெக்டராய் இருக்கிறானாம். அப்போது இந்த ஊரில் முகாம் போட்டிருந்தானாம். அவனைப்போல், பெரிய அந்தஸ்தில் இருப்பவர்கள் வந்து பார்ப்பதில் அதிசயமில்லை. சின்னச் சம்பளத்தில் எந்த மூலையிலோ கஷ்டப்படுகிறவர்கள் வந்து நான் உங்களிடத்தில் படித்தவன் என்று சொல்லி அறிமுகப்படுத்திக்கொண்டால், தேவலை. அது தான் இல்லை.

"சமீபத்தில் எங்கேயோ ஒருவனைக் கண்டேன். என்னிடம் படித்தவன்போலத் தோன்றியது. கூப்பிட்டு விசாரித்தேன். என்னிடம் ஏழாவது படித்ததும் எங்கேயோ வேலையில் சேர்ந்தானாம். மாதம் இருபது ரூபாயில் கஷ்டப்படுகிறானாம். 'இதைச் சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டா, என்னைக் கண்டதும் ஒளிகிறே? நானும் உன்னைப் போல நாற்பது, ஐம்பது ரூபாய்

தானே சம்பாதிக்கிறேன்? நானும் நீயும்தான் ஒரு இனம். நானும் என்கீழே படித்து முன்னுக்கு வந்த கலெக்டருமல்ல,' என்று புத்தி சொன்னே."

சாரநாதனுக்கு அவரது இச்சொற்கள் மிகவும் பிடித்திருந்தன. ஏழையோடு உறவு கொண்டாடிக்கொண்டு இழைய முன் எழும் அவரது நல்லெண்ணத்தில் ஒலித்த முற்போக்கு அவனைக் கவர்ந்தது. ஆனால் ஏழை மாணவன் இப்போது தனக்கு உத்தியோகம் பார்த்துக்கொடுக்கப் போவதில்லையே. அதற்கு ஒரு மல்லிகார்ஜுனன்தானே வேண்டியிருக்கிறது?

"என்ன யோசிக்கிறே? அவனிடம் ஏற்கெனவே இங்கே வந்தபோது சொல்லியிருக்கிறேன். அவனும் ஆகட்டுமென்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறான். எதற்கும் உத்தியோக முறையிலே ஒரு மனுப் போடச் சொல்லிவிடுங்கள் என்றான். அதனால் இப்போதே ஒரு காகிதத்தை எடுத்து எழுது."

"ஆகட்டும்."

சரோஜினியிடம் விடை பெற்றுக்கொண்டு வந்து, இன்னும் ஒரு வாரம் கூட ஆகவில்லை. அதற்குள் அவளை மீண்டும் சந்திக்கச் சந்தர்ப்பம் அவ்வளவு சீக்கிரம் வரும் என்று சாரநாதன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. வரும்போது சரோஜினியிடம் பரீட்சை முடிவு வெளியான பின்புதானே சென்னைக்கு வருவதாக வாக்குக்கூட அளித்திருந்தான்? ஒரு சமயம் முன்பின் சொல்லாமல் அவள் எதிரே போய் திடுதிப்பென்று நின்றால் அவள் பயந்து கூடப் போய்விடலாம்.

அவன் மனுப் போட்டு இரண்டு மூன்று நாட்களுக்குள் ஜோதி லிமிடெட்டிலிருந்து ரங்காச்சாரியார் பெயருக்கு மல்லிகார்ஜுனனிடமிருந்து பதில் வந்துவிட்டது. 'பரீட்சை முடிவு, அதுபாட்டில் வரட்டும். உங்கள் பையன் பாட்டில் வந்துவிடட்டும் உடனே இப்போதைக்கு இங்கே சென்னை ஆபீசில் பெரிய உத்தியோகம் ஒன்றும் காலியில்லை. அதனால் ஐந்நூறு ரூபாய் மாதச் சம்பளத்தில் 'அட்வைஸர் டு தி மானேஜிங் டைரக்டர்' என்ற ஒரு பதவியைப் புதிதாக ஆரம்பித்து அதில் சாரநாதனை அமர்த்தலாம் என்று நிச்சயித்து விட்டேன். நீங்கள் அவனை உடனே கிளப்பி அனுப்பிவிடவும். இங்கே அவன் இருப்பது எங்கே என்பது பற்றிக் கவலைப்பட வேண்டாம். எங்கள் க்வார்டர்ஸ் இருக்கவே இருக்கிறது...'

படிக்கப் படிக்க அக்கடிதம் சாரநாதனுக்கு இன்ப ஊற்றாகத்தான் இருந்தது. அவன் 'பெட்டி சட்டி' யெல்லாம் கட்டிக்கொண்டு புறப்பட்டான். கிளம்புவதற்கு முன் செல்லம்மாள் ஒரு மணி நேரம் உபதேசம் செய்தாள்.

"சாரநாதா நான் உனக்குச் சொல்லவேண்டும் என்பதில்லை. உத்தியோகம் பெரியதாய்த்தான் கிடைத்திருக்கிறது. ஆனால் உங்கப்பாவை மறந்து விடாதே. மாதா மாதம் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு அனுப்பி விடு. அதுமட்டும் மறந்து போய் விடாதே."

"இதுகூட மறந்து விடுவேனும்மா?"

"எதுக்குச் சொல்ல வருகிறேன் என்றால், உங்கப்பாவோ ரிடையராகி விடுவார் இந்தப் பதினோரும் தேதியே. கடைசியில் இத்தனை நாள் உழைத்ததற்கு அவரோடு வீட்டிற்கு வரப்போவது ரோஜாப்பூ மாலையும், 'க்ரூப் போட்டோ'வும்தான். வேறு ஒன்றுமில்லை. ப்ராவிடெண்ட் பண்ட் பணம் என்று கொஞ்சம் சேர்ந்து கொண்டிருந்ததையும், அவ்வப்போது உனக்கு ஹாஸ்டல் காலேஜ் செலவுக்கு என்று எடுத்தெடுத்து, வறண்டுவிட்டது. அவ்வளவு செய்ததும் வீண்போகவில்லை. இப்போது நிறையச் சம்பளம்தான் கிடைத்திருக்கிறது. அப்பாவை மறந்துவிடாதே."

"இது என்னம்மா திரும்பித் திரும்பிச் சொல்கிறே?"

"என்னவோப்பா, எனக்குச் சொல்லவேண்டுமென்று தோன்றியது. நீ நிறைய அனுப்பவேண்டாம். அங்கே உத்தியோகம் பெரிது ஆனதினால் அதுக்குத் தகுந்த அந்தஸ்துடன் இருக்கவே நிறையச் செலவு பண்ண வேண்டியிருக்கும். ஒப்புக்கொள்கிறேன். இருந்தாலும் இத்தனை நாள் சம்பளமாய் வந்துகொண்டிருந்த அறுபது ரூபாயை நீயாவது உங்கப்பாவுக்கு அனுப்பி விடு. பள்ளிக்கூடம் சர்க்காருடையதில்லை. அதனால் பென்ஷன் கிடையாது இத்தனை நாள் செய்த வேலைக்கு. நீயாவது இத்தனை நாள் அவர் வளர்த்ததற்கு அரைச் சம்பளமாவது அனுப்பி விடு. அவருடைய அரைச் சம்பளம் முப்பது ரூபாயைச் சொன்னேண்டாப்பா. உன் அரைச் சம்பளம் இருநூற்றைம்பதைக் கேட்கவில்லை."

சாரநாதனுக்கு ஒரு நிமிஷம் அழுகையே வந்துவிடும்போலத் தோன்றியது.

"நான் பட்டுப் புடவை வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டும். அதுக்குப் பணம் அனுப்பு என்று கேட்கவில்லை. ஆனால் உங்கப்பா நாலு பேரிடம் கௌரவமாய் இருக்க எவ்வளவு வேண்டுமோ, அவ்வளவு அனுப்பினால் போதும். 'என்னடா அம்மா இப்படிச் சொல்கிறாளே' யென்று நினைக்காதே. முந்தா நேற்று சாயந்திரம் இருட்டுகிற சமயம், யாரோ இரண்டு பையன்கள் பேசிக்கொண்டே போனார்கள். 'ஏண்டா, அந்த வாத்தியார் எப்போதும் ஒரே கோட்டையே தோய்த்துத் தோய்த்துப் போட்டுக்கொண்டு வருகிறார்?' என்றான் ஒருத்தன். நான் கவனமாய்க் கேட்டேன். உங்கப்பாவைப் பற்றித்தான் பேசிக்கொண்டு போனார்கள்..."

செல்லம்மாள் முடிக்கவில்லை.

"ஏண்டி, உன் பிள்ளையைப் பட்டணத்துக்கு அனுப்பப்போகிறயா? அல்லது கசுமுசு வென்று ரகசியம் பேசிக்கொண்டே இருக்கப்போகிறயா?"— வாசலிலிருந்து ரங்காச்சாரியார் இரைந்தார்.

"ஆச்சு; இதோ ஆச்சு" என்று செல்லம்மாள், பாவம், அசடு தட்டத் தன் பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

இதெல்லாம் ஓய்ந்து, அறுபதாவது நிமிஷம் சாரநாதன் ஒரு மூன்றாம் வகுப்புப் பெட்டியில் சென்னையை நோக்கிப் பிரயாணம் செய்துகொண்டிருந்தான். (தொடரும்)

உறியடி மச்சான்

'பூவை'

ஜில்லா போர்டு டாக்டர் பக்கிரிசாமி நோயாளிப் பெண்ணை ஆறஅமர பரிசோதித்த பின்னர் சொன்னார்:

"அடைக்கலம், உங்கள் கொழுந்தியின் உடலில் எந்த விதமான கோளாறுமில்லை. நீங்கள் பயப்படாதீர்கள். ஏதோ மன அதிர்ச்சி ஏற்பட்டு, அது உடலையும் பாதிக்கவே இப்படி மயக்கமும், நெஞ்சடைப்பும் வந்திருக்கிறது. எதற்கும் நீங்கள் ருக்மணியைக் கண்ணும் கவனமுமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாரக் கடைசிக்குள் நிச்சயம் சுகப் பிரசவமாகிவிடும். குழந்தை பிறந்ததும் ஜீனி வங்கிக்கொள்ள நானே வருகிறேன். தேவையானால் சொல்லியனுப்புங்கள்!"

"ஆகட்டுமுங்க எசமான், ஏதோ இந்தமட்டுக்கும் ஐயாவுக்கு எங்க மேலே நல்ல மனசு பதிஞ்சிருக்கிறது. எங்க நல்ல காலந்தான். கொளுந்தியாப் பொண்ணு தாயும் சேயுமாகப் பெற்றுப் பிழைச்சிட்டா அதுவே எங்களுக்கு லட்சாந்திரம். அந்தப் பொண்ணுக்கு நல்ல வழி பிறக்க சின்னக் கருப்பர்தான் கண்திறக்கோணும்..." என சொல்லியவாறேஅடைக்கலம் டாக்டரை வணங்கி வண்டியிலேற்றி வழியனுப்பிவைத்தான்.

"உங்களைத்தானே. தங்கச்சி விசயமாகக் காசு பணத்தைப் பற்றி ரோசனை பண்ணாதீங்க. என்னமோ அது தாய் வேறே புள்ளே வேறயா ஆயிப்போட்டாத் தேவலாம். உம்..." என்றாள் தெய்வானை தன் புருஷனிடம், பெருமூச்சொன்றை அனல் பின்னணியில் கக்கிக்கொண்டே.

"தெய்வானை, ருக்மணியின்னு எனக்கும் அக்கறை உண்டுங்கிறதை இந்த உசிரு உள்ளளவும் மறக்கவே மாட்டேனுக்கும் இந்த அடைக்கலம். உன் தங்கச்சி புள்ளையும், கையுமா மறுபிறப்பெடுத்திட்டா அப்பாலே நமக்கு பெரிய கண்டம் கழிஞ்சாப்பிலே. என் மனசு என்னவோ சொல்லுது: நம்ப ருக்மணி அது மச்சானோடே திரும்பவும் ஒண்ணு சேர்ந்து கூடிப் பெருவாழ்வு வாழத்தான் போவுது! பார்த்துக்கிட்டே இரு. நீயே ஓடிவந்து ஜோஸியம் சொன்ன என் வாய்க்கு சர்க்கரை போடத்தான் போகிறாய்...." என்று வார்த்தைகளைத் தொடர்ந்து சிரிப்பையும் அத்துடன் இழைக்கோலமாக்கினான் அடைக்கலம் தன் மனைவியை ஓரக் கண்ணால் பார்த்துக் கண்ணடித்துக் கொண்டே.

ருக்மணி புரண்டு படுத்தாள். நிறை மாசம். 'முடியாமல்' வந்தது. அவள் சற்றுமுன் தன்னைப் பற்றிக் கேட்ட வார்த்தைகளை மீண்டும் மீண்டும் நினைவில் பதிவாக்கிக்கொண்டாள்.பின்னர் எண்ணினாள். எண்ணத் தொலையாத நினைவுகள் சரமாரியாக வளர்ந்தன. எங்கோ சூன்ய வெளியை நோக்கிக் கிடந்த அவள் கண்கள் கண்ணீரில் பொங்கி வழிந்தன.

இமை கொட்டும் நேரத்திற்குள் எத்தனை நிகழ்ச்சிகள் நடந்தேறிவிட்டன. டாக்டரின் பரிசோதனை, குழந்தையின் ஜனனம்பற்றிய டாக்டரின் நல்ல வாக்கைக் கேட்டு தன் தமக்கை பூங்காவனமும் அத்தான் அடைக்கலமும் கொட்டிய அன்பு வெள்ளம் எல்லாவற்றையும் நினைவு கூர்ந்தாள். எண்ணிச் சில நாளில் தனக்குப் பிறக்கவிருக்கும் பிள்ளைக்கனியமுது பற்றிய இன்பக் கனவையும் நினைவோட விட்டாள். அவளுக்கு மகிழ்ச்சி ஏற்றம் புரியவில்லை. மாறாக, மனச் சுமை நெஞ்சில் ஏறி நின்றது. ஆனால் அந்த நாளில்— ஆம்; அவள் கணவன் தியாகு அவளை 'விலக்கி' வைத்துத் துரத்திவிடும் அந்த நாள்வரை— தனக்கு பிறக்கப்போகும் இன்ப கனவைப் பற்றி எத்தனை எத்தனை இன்பக் கனவுகள், ஆசைக் கனவுகள் கண்டிருக்கிறாள் ருக்மணி பேதை அணு அணுவாகக் கருவில் உருப் பெற்று வந்த அந்தக் கனவுப் பதுமைதானே அன்றெல்லாம் அவளது உயிர்ப்பாக, உடமையாக இருந்தது.ஆனால்...!

ஆமாம். தியாகு ருக்மணியை 'விலக்கி'த்தான் வைத்துவிட்டான். கொண்டவன் கொண்டவளை உதறித் துரத்தித்தான் அடித்துவிட்டான்.

"சீ மூதேவிக் கழுதை உன் கண்ணு வாய்ச்சிருக்கிற பவிசுக்கும் வாய்ப்புக்கும் நான் இனியும் உன்னைக் கட்டிக்கினு மாரடிப்பேன்னு கனு கண்டு ஆசையாய் குந்திக்கிட்டிருக்கே. தூ...! உன் கண்ணு முன்னாடியே பாரு, ஐயா ஷோக்கா இன்னொரு கண்ணாலம் கட்டிக்கிடப்போறேன். சிலட்டூர் பொண்ணு பூவாயி—என் அக்கா மகள்தான் எனக்காகத் தவசு பண்ணிக்கிடக்குதே. நீ இப்பவேஎன்வீட்டைவிட்டுகாலியாகிடவேணும். இல்லாட்டி நானே உன்னைத் தலைபிடிச்சு வெளியேத்திப்புடுவேன்."

முன்பின் தெரியாத மனையில் உரிமையுடன் நாலு பேர் முன்னிலையில் அடியெடுத்து வைத்துக் கரம் பற்றிய அவள் ஆசை மச்சான்தான் அன்று தினம் கொண்டவளின் தனி உரிமையைச் செல்லாததாக்கிப் பேசித் துரத்தியனுப்பிவிட்டான். இன்னும்அந்த வார்த்தை அம்புகள் நேருக்கு நேர் நின்று அவளது தளர்ந்த நெஞ்சைத் துளைத்தெடுக்கின்றனவே!

தன் கண்ணைப்பற்றி இளக்காரம் பேசிய கொண்டவனின் குத்தல் மொழிகளை மொழி பெயர்த்தாள் ருக்மணி.

"கருப்பண்ணசாமி, இதுதானுங்காட்டியும் உன் வேடிக்கையும் விளையாட்டும்? இதுதானு உன் சோதனை? என் கண்ணைக் கெடுத்து என் வாழ்க்கையையும் வீணடிச்சுப்பிட்டியே.. என்ன.. சாமி, என்னைச் சமிச்சுக்க நீ

என்று செய்வே.என்னிதி அப்படி விதியா? ஒரு நாளும் இல்லே. எல்லாம் என் மச்சான் செஞ்ச தீவினையும் படுத்தடியுந்தானே? உறியடி மச்சான்–உறியடி மச்சான்னு வளைய வளைய வந்து ஒரு காலாலே நின்னு மச்சானைக் கட்டிக்கிட்டதுக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணுந்தான்... .!" என்ற நினைவுக் கயிறு அத்துடன் அறுந்தது.

'உறியடி மச்சான்!'– அவள் நெடுமூச்சுவிட்டாள்.

ருக்மணி என்றால் பக்கத்து வட்டையில் எட்டுக் கண்விட்டெறியும் என்பதென்னவோ மெய்தான்! அவள் அழகும் அந்தமும் அப்படி ருக்மணி என்றால் ரதி வடிவு என்று சொல்வதுண்டு வடிவும் வனப்பும் அவளுக்குக் கப்பம் செலுத்தின. அவள் தனிக்காட்டு ராணி. அவள் பெயர் அக்கம் பக்கத்துத் தனிக்காட்டு ராஜாக்களெல்லோரது இன்ப நினைவாக இருந்ததென்றால் அதற்குஆதாரம்அவளுடைய அந்தப் பேசும் விழிகள்தாம்!

அப்படிப்பட்ட அழகுக் கன்னி ருக்மணி. அவ்வூரில் எங்கோ 'ஏப்பை சோப்பை'யான ஒரு புள்ளியாக அமைந்த தியாகுவை வலை வீசித் தன் ஆசை மச்சானாக வரித்துக்கொண்டாளென்றால் அது அவ்விளைஞனது கொள்ளை அழகுதான் என்பதைச் சொல்லவா வேண்டும்?

அப்பொழுது பூவை மாநகரில் சின்னக் கருப்பர் சுவாமி திருவிழா. அதில் 'உறியடி' விளையாட்டு அக்கக்காகப் பிரிந்து கிடந்த அண்டை அயல் ஊர்களிலெல்லாம் ஏகப் பிரசித்தம். இரண்டு பக்கமும் நடப்பட்ட கம்பங்களைக்கொண்டுபாலமிட்டிருக்கும் கப்பாணிக் கயிற்றின்மையத்திலே கிளியின் உருவில் அழகிய மண் உறி ஒன்று தொங்கும். அதில் பத்திரப்படுத்தப்பட்டிருக்கும் இருபத்தைந்து ரூபாய்க்குள்தான் எல்லோரது நாட்டமும் நோட்டம்விழுந்திருக்கும். கயிற்றில் அந்தரமாகத் தொங்கி ஊசலாடும் உறியை கம்பத்தின் இருமருங்கிலும் உள்ளவர்கள் கயிறு கொண்டு கணத்துக்குக் கணம் மேலும் கீழுமாக இழுத்துக் கொண்டேயிருப்பார்கள். அப்படிபட்ட நிதானம் பிடிபடாத நிலையில் தான் நிதானம் கண்டு உறி மீது கண்பறித்துக் குறிவைத்து சிலம்புக் கழியைச் சுழற்றி வீச வேண்டும். உறியை கம்பினால் வீசி உடைத்துவிட்டால் வெற்றி என்று பொருள்.

அப்படித்தான்அன்றைக்கும்உறியடிப்பந்தயம் நடந்தது. ஏகப்பட்டவர்கள் போட்டி. எல்லோரிலும் முதல்வனாக வீரம் கிளி கொஞ்ச வெற்றியைத் தன் கை காவலுக்கு இட்டு வந்திருப்பவன் பாங்கில்அப்படி கம்பீரமாக கம்பும் கழியுமாகநின்றான் தியாகு. அதேசமயம் ஆண் கும்பலுக்குச் சவால் போல அந்தப் பெண் ருக்மணியும் தோன்றிப் போட்டியில் கலந்து கொண்டாள்.போட்டி துவங்கியது. மிஞ்சியது கடைசியில் தியாகுவும் ருக்மணியும் தான்! அவன் சளைக்காமல் கழியை உறி மீது குறி நாட்டி வீசினான்; அவளும் சளைத்து விடுவாளா?

அடுத்த விநாடி ஆங்காரத்துடன் தியாகு கம்பை வீசப் போன சமயம் 'உறியடி மச்சான்' நான் கெலிச்சுப்புட்டேன். நீங்க வீணா மேனியை அலட்டிக்காதீங்க.. என்று கிண்டலாகச் சிரித்தாள் அந்தக் குறும்புக்காரி ருக்மணி. அவனுக்கு வெட்கம். சாண்பிள்ளையானாலும் ஆண் பிள்ளைதான். கடைசியில் ஒரு பெண் வெற்றி பெற்று விட்டாள்.

அன்று பிறந்தது அவர்களது முதல் சந்திப்பு. அதுவேஅவர்கள் இருவரையும் காதலர்கள் நிலையினின்றும் கணவன் மனைவி நிலைக்கு கொணர்ந்தது.

"அன்னிக்கு என் கண் அழகுக் கோசரம் வலியக்க வந்து கண்ணாலத்துக்குஇசைஞ்சு கட்டிக்கிட்ட மச்சான்தானு, இன்னிக்குத் தூரத்தியடிச்சு என்னைப் பொட்டச்சின்னு ஏசிப் பேசி என்னை அலக்கழிச்சுப்பிடுச்சு.." என்று விம்மித் துவண்டாள் ருக்மணி.

அன்று அவர்களிடையே இணைப்புச் சங்கிலியாக இருந்தது அவளது பேசும் விழிகள் தாம். அவளும் தன் அழகுக் கண்களைப்பற்றித் தனியே எவ்வளவு தூரம் பெருமைப்பட்டிருக்கிறாள். ஆனால் அதே கண்தான் இன்று அவளது ஆருத்துயரத்துக்கும் ஒடுங்காத மனச்சள்ளைக்கும் காரண பூதமாகிவிட்டது. அவளுக்கு தன் இடது கண் நினைவு வந்தது. ஒருநாள் வாக்கில் கண் வலியால்மெத்தத் துடித்துக் கொண்டிருந்தாள் ருக்மணி. வெண்ணெயில் குழப்பிப்போடுமாறு வைத்தியர் ஏதோ 'பொடி' கொடுத்தார். தியாகுவிடம் கைத் தவறுதலாக வேறு ஏதோதூளைக் கலந்து மனைவியின் இடது கண்ணில் தன் கைப்படப் போட்டு விட்டான். பிறகுதான் அவனுக்குத் தன் தவறுதல் புலனாயிற்று. 'ஐயோ மச்சான்! எறியுதே கண்ணு.." என்று துடித்தாள் அவள். கடைசிவரை எப்பாடுப் பட்டும் பலன் இல்லை. அவளுடைய இடது கண்பார்வையை இழந்தது இழந்ததுதான்.

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயநகரம் மருந்து எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக்கண்டு ஏமாறுதீர்

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

19, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 85254

கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

"அன்னிக்குமச்சான்புரியாத்தனத்துக்குஎன் ஒரு கண்ணைப் பலி கொடுத்தேன். இன்னிக்கு என் வாழ்வையே அதே என் மச்சானுக்கே பலி கொடுத்துப் புட்டேன். ஆனா இந்நேரம் பெத்த அப்பன் ஆயியைப் போல என் அக்காவும் அத்தானும் என்னை காப்பாத்தாட்டி என்னிக்கோ என் உசிரு காற்றிலே பறந்திருக்குமே.." என்று நெக்குருகிய ருக்மணியின் பேசும் கண்ணும் பேசாத கண்ணும் சேர்ந்து கண்ணீரைப் பூமிதேவிக்கு தானம் கொடுத்தது.!

அவர்கள் வீடு அன்றைக்கு திமிலோகப்பட்டது. எங்கும் புதைகுழி அமைதி பரிபாலித்திருந்தது. வெயிலில் வீசியெறியப்பட்ட ரோஜாப் பூவாகப்படுக்கையில் தன்நினைவு பறிபோய் கிடந்தாள்.ருக்மணி செத்த சவம் போல. இமைவட்ட இடுவில் வழியேமட்டும் கண்ணீர் சிறுகச் சிறுக வழிந்தோடியது.

அடைக்கலமும் பூங்காவனமும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

செத்த சவம்போலத்தான் கிடந்தாள் ருக்மணி. ஆம்; அவள்சாகத்தான் துணிந்திருந்தாள். அவளுடன் கூட தன் பத்துமாசக் குஞ்சையும் சேர்த்து உடனழைத்துப் போகவும் தாய் மனசைப் பேய் மனசாக்கியும் கொண்டுவிட்டிருந்தாள்.

காரணம் இதுதான். தியாகு அடுத்த வாரம் அவள் மச்சான் இரண்டாம் கல்யாணமாக சிலட்டூர்ப் பெண் பூவாயியைத் திருமணம் செய்துகொள்ளுவதாகப் 'பேசி முடித்து' வெத்திலைப் பாக்கு மாற்றிப் பரிசமும் போட்டுவிட்டானும். தன் சொத்தை இன்னொருத்தி வழிப்பறியடிக்கப் போகிறாளே என்ற மாளாத் துயரில் வெந்து சாம்பராகிக் கொண்டிருந்தாள் ருக்மணி. அப்பொழுதுதான் அவள் தாய் உள்ளத்தையே மாற்றும் பேரிடியும் அவள் காதில் 'கடலே கதி'என்று ஓடிவந்து விழுந்தது. தீவினை இராத்தங்காது என்பார்களே ! ஒற்றைக்கண் குருடான ஒருத்திக்குப் பிறந்த குழந்தையும் தாயைப்போலவே ஒற்றைக் கண் குருடாகப் பிறந்த சேதி அவளைப் பாடாய் படுத்தியது. ஒரு கண் பொட்டையான எனக்கும் அது கணக்கிலே ஒரு கண் பொட்டையாய்த்தான் குழந்தையும் பிறக்குமோ? மனசிலே நினைக்கக்கூட ஓடலியே – ' என்று ருக்மணி நாள்முச்சூடும் புலம்பினாள்; புழுவாகத் துடித்தாள். அவள் பெற்ற மனம் பிறக்கும் சிசுவைப்பற்றி என்னவெல்லாமோ இன்பக் கற்பனை செய்ததுபோக, கடைசியில் அவள் எத்தகைய இசைகேடான சங்கடத்திற்கு தன்னையும் குழந்தையையும் ஆளாக்கிக்கொண்டுவிட்டாள்! இரண்டாம்பேருக்கு தெரியாதவாறு அவள் விஷப் பச்சிலையை அரைத்துத் தின்று விட்டாள், தனக்கும் பிறக்கும் குழந்தைக்கும் நிரந்தரமான முற்றுப்புள்ளியிட!

டாக்டருக்கு ஆள் போனார்கள். ஊரில் இல்லை; நாட்டு வைத்தியர் ஆசாரி ருக்மணியின் கையைப் பரிசோதித்தார்.

"அடைக்கலம், உங்கள் கொழுந்தி ஏதோ விஷப் பச்சிலையை மண்டித் தின்னிருக்கும் போலிரு

144 106

க்குதே. அப்படித்தான் இங்கே நாடி பேசுது. பாவம், நிறைமாசக்காரி இப்படிச் செய்யுமா? நாளைக்கு சாமி கிருபையிலே பெற்றுப் பிழைச்சு வீட்டிலே விளக்கேற்றிஞ. ஒருநாள் இல்லாட்டி ஒரு நாள் அது மச்சான் புத்தி திருந்தி—சாமி அவன் புத்தியைத் திருப்பி நல்லது பண்ணமாட்டாதா? — — — நாடி ஒண்ணும் சரிவர மட்டுப்படலியே. எதுக்கும் புதுக்கோட்டைக்கு டாக்டர் அம்மாவுக்கு ஆள் அனுப்புவதுதான் சிலாக்கியம் — — —" வைத்தியர் சொல்லி நிறுத்தினர். அதற்குள் வாசலில் 'பாம் பூம்' என்று டாக்ஸி ஒன்று வந்து நின்றது.

அப்பொழுது யாரோ ஒரு பெண்ணும் புதுக்கோட்டை டாக்டர் கமலத்தம்மாளும் பரக்கப் பரக்க ஓடிவந்தார்கள். டாக்டர் அம்மாள் ருக்மணியைப் பரிசோதித்தாள். மறுகணம் இரண்டு முறை 'ஊசி' செலுத்தப்பட்டது நோயாளிக்கு. டாக்டர் அம்மா மறுபடியும் நாடி பிடித்துப் பார்த்தாள். முகம் மலர்ந்தது.

"பூவாயி, நீ என்னை வழியில் கண்டதே நல்ல சகுனம்தான். இன்னும் ஐந்து நிமிஷம் கழித்து நாம் இங்கே வந்திருந்தால்கூட இந்தப் பெண்ணையோ பிள்ளையையோ உயிருடன் கண்டிருக்க முடியாது. உண்ட விஷம் வேலை செய்வதற்குள் என்மருந்துவேலை செய்துவிட்டது. இனி துளியும் பயம் வேண்டாம். அரைமணி சாவகாசத்துக்குள் குழந்தை பிறந்துவிடும். உனக்குத்தான் இந்தப் பெண் நிரம்பவும் கடமைப்பட்டவள் — — —" என்றாள் டாக்டர் கமலம்.

"டாக்டர் அம்மா, ருக்மணி என் உடன் பிறப்புப்போல. அது எப்படியும் தாயும் பிள்ளையுமா மறுபிறப்பு எடுத்துட்டா அதுவே எனக்கு மனசுக்குத் திருப்தியாகிப்போகும். அது வாழ்விலே அநியாயமாய் குறுக்கிட இருந்த தீராத பாவத்துக்கு இது ஒண்டிதான் எனக்கு பரிகாரம்போலே!



வந்தவர்:—"சென்ற இதழில் ஆரம்பமாகிய 'காமாக்ஷியின் காதல்' என்ற என்னுடைய தொடர் கதையில் 'வீரராகவன்' எழுதியது என்பதற்குப் பதிலாக 'விஜயராகவன்' எழுதியது என்று பிரசுரமாகிவிட்டது."

ஆசிரியர்:—"இந்த வார இதழ் இந்தாருங்கள். இதில் சரியாகப் போட்டு விட்டோம்."

வந்தவர்:—"என் பெயர் சரியாயிருக்கு இதில். ஆனால் கதையின் பெயர் 'மீனாக்ஷியின் காதல்' என்று மாறி விட்டதே!"

அம்மா, ருக்மணி பிரசவத்துக்கு ஆகும் பூராச் செலவும் என் பொறுப்பு — —" என்றாள் பூவாயி, ஏதோ ஒரு உணர்ச்சிச் சுழிப்புடன்.

"இந்தப் பொண்ணு பூவாயியைத்தானே ருக்மணி புருஷன் மறுதாரம் கண்ணாலம் கட்டிக்கிறதாகச் சேதி அடிபட்டுச்சு ஊர் காத்திலே. நெருப்பில்லாமலா புகை கிளம்பும். ஆனால் இந்தப் பொண்ணு இப்படி தெய்வம் கணக்கிலே வலிய வந்து எப்படியோ டாக்டர் அம்மாவையும் கையும் மெய்யுமாக் கூட்டியாந்து கவனிச்சு என் தங்கச்சி உசிரையும் அது குஞ்சையும் காப்பாத்திப்பிடுச்சு. அல்லாம் சாமி துணைதான்— — — —!" என்றாள் பூங்காவனம் புருஷனிடம்.

அப்பொழுதுதான் ருக்மணி தாங்கி விழுந்தவள்சாயலில் கண்களைத் திறந்தாள். பார்வை பரப்பும் அவள் ஒற்றைக் கண் நாற்புறமும் ஓடியது. அவள் பார்வையில் அந்தப் பெண் பூவாயி சுழல்வட்டமிட்டாள்.

"ருக்மணி, என்ன அப்படி தீயை மிதிச்சாப்பிலே மலைச்சிட்டே. நீ ஆச்சரியப்படுறதுக்குக் காரணம் புரியுது. உன் வாழ்க்கைக்கு உலை வைச்சு, உன் புருசனையும் கண்ணாலம் கட்டிக்கிடப்போற பொண்ணு இப்படி பொத்தாம் பொதுவிலே இங்கே குதிச்சிருக்குதேன்னு உனக்குக் கட்டாயம் அதிசயமாத்தான் தோணும். தியாகு மச்சானுக்கு நீ முதல் பெண்டாட்டி என்கிற உண்மை மதியத்துக்குத்தான் எனக்குச் சாமி ஆணையாத் தெரியும். நீ வடிச்சுக் கொட்டுற கண்ணீரிலேயா நான் என் வாழ்க்கைக்குத் தளம்பரப்ப மனசு ஒப்புவேன்? நானும் இதயமுள்ள ஒரு பொண்ணுதான், ருக்மணி! நான் செய்யவிருந்த பாவத்துக்குப் பரிகாரம் தேடிக்கிட்டேன். இந்தா ஐநூறு ரூபாய் இந்தக் கோணிப்பையிலே இருக்குது. உன் புருசன் என்பேரிலே கொண்ட மையலிலே மயங்கி பாதகாணிக்கை வச்ச பணம் இது. எடுத்து வச்சுக்க. ருக்மணி, இனி நீ என் கூடப்பிறந்த போலத்தான். நானே உன் புருசன் காலிலே விழுந்து எப்பாடுபட்டாச்சும் அதை உங்கிட்டே சேர்த்துப்பிடுறேன். அக்கா — — —" என்று கூறிய பூவாயி செருமினள், சிறு குழந்தைபோல.

"தங்கச்சி" என்று பாசமிழைத்துக் கூப்பிட்டாள் ருக்மணி, பூவாயியை!

அதே மின்வெட்டும் தருணம் மற்றொரு அதிசயமும் நிகழ்ந்தது. கூடிவரும் காலம் அது!

வாசலில் வந்து நின்ற ஜட்காவிலிருந்து தியாகுவை—ருக்மணியின் கணவனைக் கைப்பிடிப்பாகச் சிலர் கூட்டிவந்தார்கள். தியாகுவின் இடது கண்ணைச் சுற்றிப் பெரியதான கட்டொன்று போட்டிருந்தது. மனைவி படுத்துக் கிடந்த இடத்தருகே உட்கார்ந்தான் தியாகு. அவன் கண்ணீர் விட்டுக்கொண்டு, ருக்மணி இந்தப் பாவியை மன்னிக்கமாட்டியா? பூமிதேவியாட்டம் இருந்த உன்னை அநியாயமா விலக்கி இன்னொருத்தியை நம்பி உன் நகை நட்டு எல்லாத்தை வித்த பணம் ஐநூறு ரூபாயையும் அவளுக்கு 'அழுது' தொலைச்சு, கடைசியா அந்தப் பொண்ணும் என் கண்ணிலே மண்ணைத் தூவிப்பிட்டு மாயமாய் மறைஞ்சு போயிட்டாள். அந்தத் தண்டனை போதாதுன்னு கருப்பர்சாமி என் இடது கண்ணையும் பழுதாக்கிருச்சு. திருநாளிலே வேடிக்கை பார்த்திருந்தப்ப, காந்த விளக்கு வெடிச்சு கண்ணாடிச் சில்லு ஒண்ணு என் கண்ணைப் புண்ணாக்கிப்பிடுச்சு. இந்தமட்டுக்கும் என் கண்ணு தப்பிச்சதேபெரிசு. அந்த நாளிலே நான் உன் கண்ணுக்கு மருந்து மாத்தி மருந்தைப் போட்டு அதைப் பழுதாக்கின என் தீவினையைக்கூட மறந்துபிட்டு நானே உன்னை 'பொட்டைச்சி'ன்னு நெஞ்சிலே ஈரம் இல்லாம அவதூறு பேசின பாவத்துக்கு இன்னிக்கு என் ஒரு கண்ணும் பொட்டையாகிடுச்சு. ருக்மணி நீ என்னை மன்னிச்சிப்பிடு. நீதானே என் ஆசைக் கண்ணாட்டி. என் கட்டாணிமுத்து நீதானே — — — உனக்குப் பிறக்கப் போகிற தங்கப் பாப்பாவையும் நானும் காணக் கொடுத்துவைக்கச் செய்— — — —" விக்கலும் விம்மலும் கண்ணீரும் பெருமூச்சும் தியாகுவின் சார்பில் மன்னிப்புக் கோரின.

"மச்சான், பூவாயியை வீணு நிந்திக்காதீங்க. அது இல்லாமப் போனு இம்மாம்பொழுது நான் செத்த இடம் புல் மண்டியிருக்கும். உங்க பணம் அத்தனையும் அச்சுக்குலையாம அப்படியே இதோ இருக்குது. பூவாயி தந்துச்சு. பூவாயிதான் நம்ப குடும்பத்திலே விளக்கு ஏத்தி வைச்ச கண்கண்டதெய்வம்! மகராசி — —"

அப்பொழுதுதான் தியாகுவின் கண்ணோட்டத்தில் பூவாயி தோன்றினள். "பூவாயி, நீ இப்படிப்பட்ட உத்தமின்னு இப்பத்தான் கண்டேன்— —" என்றான் அவன்.

"உஷ், சத்தம் போடாதீங்க, மச்சான். அக்காவுக்கு வலி காணுது. தங்கப் பாப்பா பிறக்கப்போகுது. வாங்க வெளியே—" என்று சிரித்தாள் பூவாயி.

அன்றைக்கு மாலைப் பொழுதில் அவர்களது வீட்டில் ஆண் குழந்தையின் 'முதல் குரல்' கேட்டது. ருக்மணி, தன் குழந்தையின் பேசும் விழிகளைக் கண்டு அப்படியே ஆனந்த வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தாள். அவளுக்கு உலகமே ஆனந்த மயமாக, இன்ப உருவாகத் தோன்றியது; அவள் பிரார்த்தனை விடுத்துக் கொண்டாள்:

"கருப்பண்ணசாமி, உன் கருணைக்கு ஒப்பே இல்லை. என் பிறந்த மகனுக்கு கண்ணு ரெண்டையும் இம்பிட்டு அழகாக் கொடுத்தியே அதுவே நான் செஞ்ச பாக்கியம். என் வேண்டுதலுக்கும் நெஞ்சிரங்கி அருள் புரிஞ்சிட்டே. பெற்றவள் வயிற்றிலே பால்வார்த்த ஒனக்கு மேலைக்கு என் கையாலே பால் பொங்கல் வைக்கிறேன். குழந்தையும் கையுமாய் நானும் மச்சானும் உன் சந்நிதியை மிதிக்க ஓடோடி வருகிறோம். சாமி, என் மச்சானை எங்கிட்டே சேர்த்துப்பிட்டாய்; அதேபோலே மச்சானின் காயம் பட்ட கண்ணுக்கு எந்தக் குந்தகமும் வராமல் காப்பாத்து!— — — பூவாயி என்னை வாழவச்ச தெய்வம். அதை என் சின்னத் தம்பிக்குக் கண்ணாலம் கட்டிவைக்க நீதான் கருணை செய்யவேணும், கருப்பண்ணசாமி — — — —!"



வேலூர் மாதர் சங்கத்தின் விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழா படங்கள்: (வலது) டென்னிஸ், பாட்மின்டன் ரிட்டின் காக், டெக் டெனிஸ், பிங்பாங் முதலியவைகளில் வெற்றிபெற்றவர்கள். (மேல்) டென்னிஸ் ஸிங்கிள்ஸ் போட்டியில் வெற்றிபெற்ற ஸ்ரீமதி பங்கஜம் வெங்கடாச்சாரிக்கு சங்கத் தலைவி ஸ்ரீமதி இருன்ஞா வெங்கடேசன் (ஜில்லா கலெக்டரின் மனைவி) வெள்ளிக்கோப்பையை பரிசளிக்கிறார்.





கூந்தலழகு

பிலோ இருதயநாத்





மேல் வரிசை:-சாய்வு மணிபர்ஸ் கொண்டை, இரட்டைச் சுற்றுக் கொண்டை, மலபார் கொண்டை (தமிழ் நாட்டில் கோடாலி முடிச்சு) இரட்டைப்பணியாரக் கொண்டை, ஜோசிய கொண்டை, வளையல் கொண்டை, கூலிக்கொண்டை,

கீழ் வரிசை:—கல்லூரிக் கொண்டை, கிராப் கொண்டை, நாரதர் கொண்டை, நர்ஸ் கொண்டை, வங்காளி கொண்டை, பந்துகொண்டை, கொஞ்சிகோட்கொண்டை

இந்த கொஞ்சிகோட் கொண்டைபற்றிய விவரங்களையும் மற்ற படங்களையும் அடுத்த வாரம் எதிர்பாருங்கள்.



"கடைசியிலே அந்த விஷயத்தை எப்படி முடிவு செய்ஞ்சே, அண்ணே?.."—புகையிலைக் காம்பைத் திருகி வாயில் போட்டுக்கொண்டே கேட்டான் கங்கன்.

"...ரெண்டு பேரையும் விரோதம் பண்ணிக்கக்கூடாது.அதுக்கு எனக்கு ஒரே ரோசனைதான் தோணுது.நம்ப'மேற்கத்தியானை' இந்த வருஷம் மாரியாத்தாளுக்குக் கூழ் ஊத்தர அன்னிக்கு கொம்பிலே மஞ்சாத்துணி கட்டி கோயில் முன்னே விட்டுடறது. இவங்கரெண்டு பேரிலே எவனுக்கு அது அடங்குதோ, அவன் வள்ளியைக் கட்டிக்கிடுறான். மறுநாளே 'பரிசம் போட்டுத் தாம்பூலம் மாத்திப்பிடறது...கண்ணாலத்தையும் ஆனியிலேயே வச்சுக்கிடலாம்..."—கலவரம் தோய்ந்த குரலில், ஆனால் அதே சமயத்தில் உறுதி தொனிக்கக் கூறினான் சாமண்டி.

"என்ன அண்ணே, ஒரு பெரிய பயங்கரமான சோதனையல்ல வச்சுப்புட்டே...இரண்டு பேரிலே ஒருத்தன் பட்டணத்தான், இன்னொருத்தன் 'சுப்பல்போல' இருக்கிறவன். உங்க 'மேற்கத்தியான்' இவங்க ரெண்டு பேரையும் ஒரே மூச்சிலே கொந்தி அப்பாலே கிடாசிவிடுமே!...யாராவது ஒருத்தர் விட்டுக்கொடுத்துவிட்டா காரியம் சுளுவா முடிஞ்சு போய்விடும்..."—பீதியுடன் சொன்னான் கங்கன்.

"நம்ம பேரிலே பொல்லாப்பு இல்லாமே போய்விடறத்துக்கு இதுதான் வழி...ஹும்! நேரம் ஆவுது. 'நரிமேட்டிலே' நாத்து விட்டிருக்கேன். அங்கே போய் பார்த்துவிட்டுவரணும்..." என்று சொல்லிக்கொண்டே எழுந்தான் சாமண்டி.

அந்த வீட்டின் திண்ணையின் ஓரமாக வைக்கப்பட்டிருந்த மண்வெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டான் அவன். பிறகு இருவரும் தெருவில் இறங்கி நடக்கலாயினர்.

கதவுக்குப் பின்புறத்தில் நின்று கங்கன், சாமண்டி இவர்களுடைய சம்பாஷணையைக்

பரிசு

எஸ்.டி.ஸ்ரீநிவாஸன்

★

கேட்டுக்கொண்டே இருந்த வள்ளியின் தலையில்யாரோ சம்மட்டி கொண்டடிப்பதுபோல் இருந்தது.

"என்ன, 'மேற்கத்தியானை' 'அவரு' அடக்கணுமா?...என்ன ஆபத்தான காரியம்?"—அவள் உதடுகள் முணுமுணுத்தன. அவள் மனம் அதற்குமேல் சிந்தனை செய்ய மறுத்தது.

மனம் பெருத்த குழப்பத்தில் ஆழ்ந்திருக்க கைகள் தம் போக்கில் அலகுக்கூடையை எடுத்து அவள் இடுப்பில் வைத்தன; கால்கள் மந்தை வெளியை நோக்கி நடக்கலாயின.

2

சென்ற வருஷம் வரை மயிலம்பட்டியார் அனைவரும் வள்ளி முருகனுக்குத்தான் என்று தீர்மானித்திருந்தனர். ஆனால் இந்த ஒரு வருஷ காலத்திற்குள் எவ்வளவுதான் மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன என்பதை வள்ளியாலேயே சிந்தித்துப் பார்க்க முடியவில்லை.

வள்ளிக்கு எட்டுவயதாக இருக்கும்போதே அவளுடைய தாய் தந்தையர் இருவரும் மயிலம்பட்டியைக் கொள்ளைக்கொண்ட வைசூரி நோய்க்குப் பலியாயினர். வள்ளியும் அவள் அண்ணன் சாமண்டியும் அந்தக் கொடிய நோய்க்குத் தப்பியது தெய்வச் செயல்.

அந்தச்சிறு வயதிலேயே குடும்பப் பொறுப்பை ஏற்றாள் வள்ளி. சாமண்டி வயல்களில் கூலி வேலை செய்து தனக்கும் வள்ளிக்கும் வேண்டியதைச் சம்பாதித்தான்.

அந்தச் சமயத்தில்தான் திடுமென இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பித்தது. அந்த ஊரிலிருந்து வேறு சில இளங்காளைகளுடன் சாமண்டி சேனையில் போய் சேர்ந்துவிட்டான். வள்ளியைத் தாங்கள் ஒன்று விட்ட அத்தை ஒருத்தியின் பாதுகாப்பில் விட்டுவிட்டு அவன் 'பர்மா' முனைக்குக் கிளம்பினான்..

முருகன் அந்த ஊர் நாட்டாண்மைக்காரனின் மகன். வயது ஏற ஏற இளமையின் எழிலுடன்—பருவத்தின் பூரிப்போடு-பூத்துக் குலுங்கிய வள்ளியின்பால் சென்றதுமுருகனின்மனம்.வள்ளியும் முருகனை விரும்பினாள்.வயல் வெளி, மாந்தோப்பு, ஆற்றங்கரை எல்லா இடங்களிலும் அவர்கள் சந்தித்து, மனம்விட்டு ஒருவருடன் மற்றவர் பேசி மகிழ்ந்த நாட்கள் கணக்கே இல்லை.

ஆறு வருஷங்கள் கழித்துக் கையில் இரண்டாயிரம் ரூபாய் ரொக்கத்துடன் ஊர் திரும்பினான் சிப்பாய் சாமண்டி. ஊரை அடைந்ததும் சொந்தமாக இரண்டு மூன்று ஏக்கரா நிலம் வாங்கினான்; தன் பழைய வீட்டையும் புதுப்பித்துக்கொண்டான்.

மூன்று ஏக்கரா நிலத்திற்குச் சொந்தக்காரனாகிவிட்ட அவனைப் பெண் படைத்தவர்கள் சும்மாவிடுவார்களா? அவன் ஊர் திரும்பிய ஆறு மாதத்திற்குள் பாஞ்சாலி அவனுக்கு மனைவியானாள்.

வள்ளி—முருகன் நட்பை அறிந்த சாமண்டி முதலில் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்; ஆனால் ஒன்றிரண்டு வருடங்கள் கழித்து அவன் மனத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது.

பாஞ்சாலியின் சித்தப்பா மகன் அழகேசன். அவன் சென்னையில் ஒரு மிலிடரி ஓட்டல் வைத்திருந்தான். நல்ல காசு சம்பாதித்திருந்தான் மயிலம்பட்டியில் நிறைய நிலம் வாங்கவேண்டும் என்று அந்த ஊருக்கு அவன் ஒரு சமயம் வந்திருந்தான். மயிலம்பட்டிக்கே ராணிபோல் விளங்கிய வள்ளியைக்கண்ட அவன் மனம் பேதலித்தது. வள்ளியைத் தனக்குக் கட்டிக் கொடுத்து விடும்படி பாஞ்சாலியிடம் அவன் சொன்னான். அவன் வாங்கவிருந்த நிலங்களையெல்லாம் தாங்களே பயிரிட்டு நிறைய லாபம் காணலாம் என்று எண்ணிய பாஞ்சாலி—அழகேசனைக் கட்டாயம் திருப்தி செய்யவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில்-தன் கணவனிடம் அழகேசனின் யோசனையைக் கூறினாள். முதலில் தன் தங்கையின் எண்ணத்துக்கு விரோதமாக நடக்க அவனுக்கு அவ்வளவு துணிவு ஏற்படவில்லை. ஆனால் கடைசியில் பாஞ்சாலியின் யோசனை அவன் மனத்தை மாற்றியது; சுயநலம்வென்றது.

ஆயினும் புதிய சங்கடமொன்று எழுந்தது. முருகன் ஊர் நாட்டாண்மைக்காரன் மகன். அழகேசன் ஊரில் புதிதாக நிலம் வாங்கப்போகிறவன். நாட்டாண்மைக்காரனை விரோதித்துக்கொள்வதும் கூடாது. ஆகவே முருகனின் மனம் ஒரு நல்ல யோசனை செய்தது. அவளிடம் 'மேற்கத்தியான்' என்ற துஷ்டக்காளை ஒன்றுஇருந்தது. வாட்டசாட்டமான அழகேசனால் அதை அடக்கமுடியும், முருகனால் அதை அடக்கமுடியாது என்று சாமண்டிக்குத் தெரியும். ஆகவே அந்தப் போட்டியை ஏற்பாடு செய்துவிட்டான். போட்டியில் அழகேசன் கட்டாயம் ஜெயிப்பான் என்ற நம்பிக்கை அவனுக்கு.

முதலில் பாஞ்சாலி இந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக்கொண்டு விட்டாளே தவிர, பிறகு அவள் உள்ளம் கிடந்து தவித்தது. தாங்கள் எதிர்பார்ப்பதற்கு மாறாக இந்த பயங்கரப் போட்டியில் அழகேசன் உயிருக்கே ஹானி நேர்ந்துவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சியது அவள் மனம்கூட.

எப்படியாகிலும் தன்னைத்தான் விரும்பாத அழகேசனுக்கு மணம் செய்வித்துவிட—தங்கள் சுயநலனையே முக்கியமாகக்கொண்டு-தன் அண்ணனும், அண்ணியும் செய்யும் ஏற்பாடுகள் வள்ளியின் உள்ளத்தை உடைத்தன.

3

வள்ளி மந்தை வெளியை நோக்கி நடந்துகொண்டே இருந்தாள். அவள் மனம் பெரும் துயரத்தால் தத்தளித்துக் கொண்டிருந்தது. 'மேற்கத்தியான்' தன் அண்ணன் ஒருவனுக்குத் தவிர அந்த ஊரில் வேறு யாருக்குமே அடங்காது என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். போட்டியில் அழகேசனுக்குக் காயம் ஏற்படுவதைப்பற்றியோ அல்லது அவன் உயிருக்கே ஆபத்து உண்டாவதைப் பற்றியோ அவள் துளிக்கூடக் கவலைப்படவில்லை. ஆனால் முருகனுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால்?...தனக்காக அவன் ஆபத்தைத் தேடிக்கொள்வதா?

யோசித்து யோசித்து அவள் அந்த முடிவுக்குத்தான் வந்தாள். பகல் பனிரெண்டு மணிக்கு அவள் நேராக முருகன் வீட்டுக்கு ஓடினாள்.தாம்புக்கயிறு திரித்துக் கொண்டு சாவதானமாக உட்கார்ந்திருந்தான் முருகன். ஐந்து நிமிஷத்தில் அவனிடத்தில் சுருக்கமாக விஷயத்தைச் சொல்லி, தன்னை மறந்துவிடும்படியும், தனக்காக ஆபத்தை மேற்கொள்ளவேண்டாம் என்

றும் அழுதுகொண்டே கூறினாள்.

ஆனால் அவன் சிரித்துக் கொண்டே, 'வள்ளி! நான் வாழ்ந்தால் உன்னோடு வாழ்வேன். இல்லாமற்போனால் சந்தோஷமாகச் சாகிறேன். போட்டி என்று உங்க அண்ணன் வச்ச பிறகு பின் வாங்குகிறது மடத்தனம். மாரியாத்தா இருக்கிறா. அவள் எனக்கு ஜெயத்தைக் கொடுப்பா. நீ கொஞ்சம்கூட கவலைப்படாதே.." என்று சமாதானம் சொன்னான். அவன் எவ்வளவு சொல்லியும், அவனுக்கு ஏதோ பெரிய ஆபத்து இருக்கிறது என்று அஞ்சிக் கலங்கியது வள்ளியின் உள்ளம்.

4

அன்று மாரியம்மனுக்குக் கூழ் வார்க்கும் திருவிழா. கூட இந்தப் போட்டியிலும் கலந்திருந்ததால் வேடிக்கைப் பார்க்கச் சுற்றுப் பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் ஜனங்கள் வந்து மாரியம்மன் கோயிலின் முன்னால் கூடி விட்டனர்.

'மேற்கத்தியான்' நன்றாகக் குளிப்பாட்டப்பட்டிருந்தது; அதன் கொம்புகள் ஒன்றில் ஒரு சிறு மஞ்சள்துணியில் வள்ளியின் கழுத்தில் கட்டுவதற்குத் தேவையான தாலி முடியப்பட்டிருந்தது. அந்த இருவரில் எவன் அந்தக் காளையைப் பிடித்து நிறுத்தி, அதன் கொம்பில் உள்ள மஞ்சள் துணியை அவிழ்க்கிறானோ அவனுக்குத்தான் வள்ளி என்று தெரிவிக்கப்பட்டது.

கூழ் வார்க்கும் திருவிழா முடிந்தது. ஜனங்கள் அத்தனைபேரும் ஆவலுடன் எதிர்பார்த்த கட்டம் வந்தது. முதலில் அழகேசன் எழுந்தான். அன்று அவன் ஆடம்பரமாக உடை உடுத்திருந்தான். உள்ளே அணிந்திருந்த 'முண்டாபனியன்' தெரியும்படியாக மெல்லிய மஞ்சள் நிற சில்க் சட்டை; அறையில் மல் வேஷ்டி; மேலே சிவப்பு நிறப்பட்டு.

அவன் எழுந்ததும் ஒருமுறை கனைத்துவிட்டு மேலே போட்டிருந்த சிவப்புப் பட்டை தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டு வேஷ்டியை மடித்துக் கட்டிக் கொண்டான். 'மேற்கத்தியான்' அருகில் சென்று இரு கைகளையும் நீட்டினான். அது ஒருதரம் தலையை ஆட்டியது. அடுத்த கணம் அவன் அதன்முன் தாவினான். ஆனால் அது தன் தலையைச் சாய்த்துக்கொண்டு தன் கொம்புகளால் அவனைக் குத்தப் பாயவே அவன் ஒருபுறமாக ஒதுங்கி, தன் தலைப்பாகையை அவிழ்த்து மேலே போட்டுக் கொண்டான். அவனுக்குப் பெருமூச்சு வாங்கியது.

"பட்டணத்திலே இவளுக்கு மேலே எத்தனையோ ரதி தேவிங்களெல்லாம் இருக்காங்க. அவங்களையெல்லாம் விட்டுட்டு இவளைக் கல்யாணம் கட்டிக்கிறதுக்காக, இந்த மாட்டுக்கிட்டே நம்ம உசிரைப் பணயம் வைக்கிறதா? எந்த முட்டாள் செய்வான் இந்தக் காரியத்தை?..வாங்கடா போகலாம்.." என்று சொல்லிக் கொண்டே தன்னுடன் வந்திருந்த சிநேகிதர்களை அழைத்துக் கொண்டு கூட்டத்தைவிட்டு வெளியேறினான் அழகேசன்.

ஒரு விஷயத்தில் வள்ளிக்கு மகிழ்ச்சிதான். ஆனால் முருகன் மாத்திரம் அதை அடக்கிடுவானா?

அவள் மனத்தில் இந்தக் கேள்வி எழுந்த அதே சமயத்தில் முருகன் கூட்டத்தை விலக்கிக் கொண்டு மேற்கத்தியான் முன் வந்து நின்றான். அவனைக்கண்ட மேற்கத்தியான், வெகு கோபத்தோடு, தலையைச் சாய்த்துக் கொண்டு, தன் இரு கொம்புகளையும் அவன் வயிற்றில் குத்தும் நோக்கத்துடன், அவனை நோக்கி ஒரு பாய்ச்சல் பாய்ந்தது.

"ஐயோ!..." என்றாள் வள்ளி. அடுத்தகணம் அவள் அந்த இடத்திலேயே 'தொப்'பென்று மயங்கி கீழே விழுந்துவிட்டாள்.

முகத்தில் 'சில்'லென்று தண்ணீர் பட்டுக் கண்விழித்தாள் வள்ளி. அவளைச்சுற்றி அவளுடைய அண்ணன், அண்ணி, முருகன் இன்னும் பலர் நின்றுகொண்டிருந்தனர். தூரத்தில் ஒரு மரத்தில் கட்டப்பட்டிருந்தது 'மேற்கத்தியான்' முருகனின் கையில் அந்த மஞ்சள் துணி இருந்தது.

'எழுந்திரு வள்ளி' என்றான் அவள் அண்ணன்.

"இந்தா! மஞ்சா துணியும், தாலியும்"–வெற்றிப் புன்னகை தவழ அந்த மஞ்சள் முடிச்சை முருகன் சாமண்டியிடம் நீட்டினான்.

"எப்போ அண்ணே முகூர்த்தம்?.." என்று கேட்டான் பலராமன்.

"முருகன் எப்போ 'பரிசம்' போட்டு முகூர்த்தம் வைக்கிறானோ அன்னிக்குக் கண்ணாலத்தை நடத்திவிடறதுதான்..." என்றான் சாமண்டி.

முருகன் ஜெயித்துவிட்டான் என்பது வள்ளிக்குப் புரிந்துவிட்டது. அவள் கை அவளையும் அறியாமல் மாரியம்மனை நோக்கிக் கூம்பின.

முருகன் அந்தக் காளையை அடக்கியதைப் பற்றியேதான் எங்கும் பேச்சு!

• • •

"நீங்க அந்த மேற்கத்தியானை எப்படித்தான் அடக்கினீங்களோ எனக்கு ரொம்ப ஆச்சரியமாகத்தான் இருக்கு...அது உங்களைப் பார்த்து பாயப் போனபோது நான் பயந்துபோய் மயக்கம் போட்டு விழுந்துவிட்டேன்..." புகையிலைக்காம்பை முறுக்கி முருகனிடம் கொடுத்துக் கொண்டே சொன்னாள் வள்ளி.

முருகன் சிரித்தான்.

"உங்க 'மேற்கத்தியான்' பொல்லாதுன்னு எனக்கு நல்லாத் தெரியும்...நான் நம்ப ஊர் 'வில்லி' கிட்டே போய் ஒரு ரூபாய் வெள்ளிப்பணம் கொடுத்தேன். அவன் மயக்கம் போடற ஒரு பச்சிலையை என் கிட்டே கொடுத்தான். அதை நான் கையிலேயே வச்சிக்கிட்டு இருந்தேன். 'மேற்கத்தியான்' என்கிட்டே வந்த போது நான் அதன் மூக்காங்கயிறைப் பிடிக்கிறாப்போல அந்த இலையை அதன் மூக்கண்டை காட்டினேன். 'மேற்கத்தியான்' அப்படியே மயங்கி நின்னு போச்சு...உடனே. அதன் கொம்பிலே இருந்த முடிச்சை அவிழ்த்துக்கிட்டேன்..." என்று சொல்லிச் சிரித்தான் அவன்.

"ஓ! பெரிய ஆளு நீங்க..." என்று ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தாள் அவள்.



...லகத்துக்குப் பெரும் நாசம் விளைக்கக்கூடிய ஹைட்ரஜன் குண்டு மார்ஷல் தீவில் அன்று வெடிக்கப்பட்டது. ...ண்டு வெடித்ததும் புகை எழும்பும் காட்சி. இந்த குண்டு வெடித்த தீவு மறைந்துவிட்டதெனவும் வெடித்த ...ன் பஸிபிக் சமுத்திரத்தின் அடித்தரை வெடித்து கீழே 175 அடி பிளந்துவிட்டது என்றும் கூறப்படுகிறது



குண்டு வெடித்த பத்து நிமிஷங்களுக்கெல்லாம் இந்த புகை 40,000 அடி (சுமார் 10 மைல்) உயரத்துக்குக் கிளம்பி ஆகாயத்தை 25 மைல் தூரம் ஊடுருவிச்சென்றது. இந்தப் புகைக் கூண்டின் குறுக்களவு 100மைல்

க்ஷண சுகம்

கு. ப. சேது அம்மாள்

கீழ் வானம் பொன்னிறம் பூத்து நிலம் தெளியும்பொழுது. அருகாமையிலிருந்த பாசறைகளிலிருந்து தாரை, தப்பட்டை முரசுகளின் முழக்கங்களும் எழுந்தன.

அயர்ந்த தூக்கத்திலிருந்த அர்ஜுனன் அந்தப் போர்ப் பறைகளின் முழக்கத்தைக் கேட்டதும் உதறிக்கொண்டு விழித்தெழுந்தான். கலைந்திருந்த ஆடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு வீராவேசத்துடன் கிளம்பும் அர்ஜுனனை வலம் வந்து வணங்கி நின்றாள் சுபத்திரை.

அவளுடைய வாடிய முகத்தைக் கண்டதும் அர்ஜுனன் வாஞ்சை ததும்பிய குரலில் "சுபத்திரே, பயப்படாதே!" என்றான்.

"பயமென்ன வந்தது..." என்று சொன்ன சுபத்திரையின் குரலில் கலக்கமிருந்தது!

அர்ஜுனன் லேசாகச் சிரித்து "உன் குரலிலிருந்து உன் கலக்கம் நன்றாகத் தெரிகிறதே! ஏன் திகில் படுகிறாய்! இன்றைய யுத்தத்தில் கர்ணன் உன் பர்த்தாவை வெற்றி கொண்டு விடுவானோ என்றா!..."

பேசுவதைச் சட்டென்று நிறுத்திக்கொண்டு ரோஷத்தால் கண்களில் நீர் ததும்ப முகம் சிவந்து தன்னையே உற்றுப் பார்த்துக்கொண்டு நிற்கும் சுபத்திரையை கண்டதும், அந்த யுத்த அவசரத்திலுங்கூட சற்று விளையாடத்தான் தோன்றிற்று அவனுக்கு.

மலர்ச்சி கொண்ட முகத்தில் இன்ப நகை காட்டி நின்றான் பார்த்தன். நிமிர்ந்து முகத்தைப் பார்த்து உரத்த குரலில் பேச அப்போதுதான் துணிந்து முன் வந்தாள் சுபத்திரை! "என்ன, கேட்டீர்கள்?" என்றாள்.

அவளுடைய எடுப்பைக் கண்ட அர்ஜுனன் கலகலவென்று சிரித்துவிட்டு "பின் ஏனிந்தக் கலக்கம் உனக்கு வழக்கத்திற்கு மாறாக? தைரியமாக இரு" உன் பார்த்தன் வெற்றி கோஷத்துடன் ஜயலக்ஷ்மி சமேதனாக உன்னிடம் வருவான்–சந்தோஷமாக எனக்கு விடை கொடு ப்ரியே!"

"அதற்குச் சித்தமாக இருக்கிறேன். அப்புறமாக ஒரு பிரார்த்தனை" என்று சுபத்திரை நிதானமாகத் தெரிவித்தாள்.

"என்ன அது?"

"இன்று தாங்கள்...யுத்தாங்கத்திற்குச் செல்லு முன்பு தங்கள் தாயாரைக் கண்டு வணங்கி அவர்களுடைய ஆசீர்வாதம் பெற்றுச் செல்லவேண்டும் என்பதே எனது பிரார்த்தனை" என்றாள்.

"யுத்த ஆரம்ப தினத்திலிருந்து நாங்கள் ஐவரும் குந்தி தேவியாரை வணங்கி விடையும், ஆசீர்வாதமும் பெற்றுக்கொண்டு தான் போர் முனைக்குப் போவது என்பது நீ அறிந்ததுதானே?... தேவி, சங்கை கொள்ளாதே. உன் மனது எனக்குத் தெரியாமலில்லை. ஸ்ரீதரனுடைய பஞ்ச ப்ராணன்களான பாண்டவர்களை ஜயிக்க–ஒரு கர்ணனல்ல; ஆயிரம் கர்ணன்கள் வந்தாலும் இயலாது! ராஜ தர்மமும், அறமுறையும் அறிந்த நீயா இப்படிக் கலங்குவது?–பார்த்தனுடைய மனைவி விருஷ்ணி குலத்துதித்த பெண்மணி–அச்சமுறுவது என்றால்..."

"ஜயசீல, பரிகசிக்கவும், விளையாடவும் இதுவா சமயம்? அதோ பாருங்கள் கௌரவ சேனையின் ஆரவாரத்தையும், யுத்தாங்கத்தின் ஊழியையும்!" என்று சாளரத்தின் வாயிலாகத் தெரியும் போர்க்களத்தைச் சுட்டிக் காட்டி சொன்னாள் சுபத்திரை.

"ஆம், நினைவடைந்து விட்டேன். சென்று வருகிறேன்" என்று புறப்பட்ட பாண்டவ வீரனுக்குத் திருஷ்டி கழித்து ரக்ஷா திலகமிட்டு, வழியனுப்பிவிட்டு வந்தாள் சுபத்திரை.

அன்று ஏதோ அவள் மனதில் பளு தென்பட்டது. அந்த வேதனை –ஒரு விசித்திர அனுபவமாகத் தோன்றிற்று அவளுக்கு. அலைபாயும் உள்ளத்துடன் அங்குமிங்குமாக அலைந்துகொண்டிருந்தாள் சுபத்திரை.

2

மாலையில்–அந்தப் பொழுது சாய்ந்த பொன்னொளியில்–தாயும் மகனும் உரையாடிய நிகழ்ச்சியை நினைத்து, நினைத்து உள்ளமும் வயிறும் பதை பதைக்க நினைவுகள் ஆயிரமாயிரமாகச் சீறி யெழுந்து சர்ப்பங்களைப் போல அவள் நெஞ்சைக் கடித்தன! அந்த உபாதையால் இரவுமுழுதும் தத்தளித்த குந்தி விடியற்காலையில் தன்னை மறந்து துயிலில் ஆழ்ந்துவிட்டாள்.

தாயினிடம் வந்து வணங்கி ஆசீர்வாதம் பெற நினைத்து அங்கு வந்த அர்ஜுனன் அயர்ந்து தூங்கும் தாயை எழுப்ப மனமற்றவனாகச் சற்று தயங்கி நின்றான். அவளை வணங்கி ஆசி பெறாது செல்லவும் அவனுக்கு மனம் வரவில்லை. அன்றைக்கு என்னவோ அவள் அப்படித் தூங்கவேண்டும்? இப்படியும் அப்படியுமாகச் சற்று உலாவினான். நேரம் ஆக ஆக யுத்த பூமியின் பேரொலிகள் காதுகளைச் செவிடுபடச் செய்வனபோல அவ்வளவு அமளிதுமளிப்பட்டது. தாயின் மஞ்சத்தை அணுகி மெதுவாகத் தொட்டு எழுப்பினான்.

திடுக்கிட்டுக் கண்விழித்தாள் குந்தி.

கவசமும், வில்லும், அம்பறாத்தூணியுமாக எதிரே கைகுவித்து நிற்கும் விஜயனைக் கண்டதும் ஒருதரம் உலுக்கிவிழுந்தாள்.

அவளுடைய பீதியைக்கண்ட அர்ஜுனன் ஒன்றும் விளங்காமல் ஒரு விநாடி திகைத்து நின்றுவிட்டு "தாயே, நமஸ்கரிக்கிறேன்". என்று வினயத்துடன் வணங்கினான்.

"சிரஞ்சீவிகளாக இருங்கள் அப்பா!" என்று லேசாக நடுங்கும் குரலில் ஆசீர்வதித்தாள் குந்தி.

அர்ஜுனன் பிரமித்தான். 'சிரஞ்சீவிகளாக!' என்று தனக்குள் ஒருதரம் சொல்லிக்கொண்டான். 'என்ன இது, இங்கிருப்பதும், வணங்கியதும் நான் ஒருவன்தானே? என் தாய்க்கு ஏனிந்தக் கலக்கம்—நினைவு தடுமாற்றம்? அங்கு ஏனோ சுபத்திரை—என்றுமில்லாதபடி அவ்வாறு கலங்கி நின்றாள். இங்கேயோவெனில் நாத்தடுமாற ஆசீர்வதிக்கிறாள் அன்னை! இது என்ன உத்பாதம்?'

இவ்வாறு எண்ணி அசந்து நின்ற அர்ஜுனன் மீண்டும் தாயை வணங்கி "அம்மா, யுத்த அரங்கத்திற்குச் செல்கிறேன். என்னை ஆசீர்வதித்து அனுப்புங்கள் தாயே" என்று அவள் பாதங்களைத் தொட்டு வணங்கினான்.

தனையனுடைய தோள்களைப் பற்றி எழுப்பி, "அர்ஜுனா ஜயசீலனாகத் திரும்பி வா, ஆம், இன்றுதான்—உனக்கும் — கர்ணனுக்கும் ..."

திடுக்கென்று நாவைக் கடித்துக்கொண்டாள் குந்தி. எதைப் பற்றி நினைக்கவே கூடாது—கேட்கவே கூடாது என்று இருந்தாளோ அதே செய்தி அவளையறியாமல் அவள் வாய் கேட்டுவிட்டது? தனது அஜாக்கிரதையை எண்ணிப் பதறினாள். இந்த நினைவில் ஏற்பட்ட அதிர்ச்சியில் அந்த இளங்காலையில் குப்பென்று வியர்த்துவிட்டது அவளுக்கு.

அன்னையின் தடுமாற்றநிலையை உன்னிப்பாகக் கவனிக்கும் அர்ஜுனன் குந்தியின் கதிகலக்கத்தைப் பார்த்து வியப்புடன் அவளை கண்கொட்டாமல் பார்த்தபடி "ஆம் அம்மா, தனக்கு நிகரில்லை என்ற அகங்காரம் கொண்ட அந்தக் கர்ணனை இன்று மடித்தாகவேண்டும். தாயே, தங்களுடைய மனம் நிறைந்த ஆசிதான் எனது ரக்ஷாகவசமாகும்".

சட்டென்று இடைமறித்தாள் குந்தி. "போய்வா, அர்ஜுனா. சத்ருக்களை வென்று வெற்றி விஜயனாக திரும்பி வா. ஜயலக்ஷ்மி, வீரலக்ஷ்மி உன்னைப் பிரியாதிருப்பாளாக" என்றாள்.

பீதியும், தடுமாற்றமும் நிறைந்த குந்தியின் வாழ்த்துக்களைப் பெற்ற அர்ஜுனன் மேற்கொண்டு அங்கு நின்று பேசவோ, சிந்திக்கவோ அவகாசமற்ற நிலையில் மனவேதனையுடன் தாயிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு போர்

முனைக்கு விரைந்துகொண்டிருந்தான்.

அவன் சிந்தனை அலைபாயத் தொடங்கியது. கர்ணனை நான் ஜெயிப்பதில் யாவருக்குமுள்ள உற்சாகத்தில் நம் தாய்க்கு ஏனில்லை? அதைப்பற்றி ஏனிவ்வளவு அசிரத்தை—அல்ல—அசிரத்தை அல்ல—யோசித்துப் பார்த்தால் அவளுடைய முகம்—'ஐயோ, அவனைக் கொல்லவா போகிறாய்?' என்பது போலல்லவா ஏங்கியது? ஆ! அவன் நம் ஜன்ம சத்ரு, யுத்த பூமியில் எதிரி அவனுக்கும் இவளுக்கும் என்ன சம்பந்தம் இருக்கக்கூடும்! ஒருவேளை—அவனுடைய அசகாயசூரத்தனத்தைக் கண்டு வியந்து அவன் மீது அபிமானம் கொண்டுவிட்டாளோ—எனக்கு ஈடாக மதித்து?

'சை! இந்தக் குழப்பம் எனக்கு அபாயத்தை விளைவிக்கக்கூடியது. எனது விரோதியை இன்று வதம் செய்தாக வேண்டும். அதன் பிறகுதான் மற்ற சிந்தனை—' என்று ஒருப்பட்ட மனதுடன் தோள்கள் துடிதுடிக்க காண்டீபத்தைச் சுழற்றிக் கொண்டே போர் முனையை நாடி நடந்தான் பற்குணன்.

போர்முகத்தில் அர்ஜுனனைக் கண்டதும் அவன் வரவுக்காகக் காத்திருந்த பெரும் படை சமுத்திரம்போல பொங்கி யெழுந்து முறைப்படி முன்னும் பின்னுமாக பிரிந்து சென்றன.

அவனுக்கு முன்பாக அங்கு ரதத்தைக் கொண்டு வந்து நிறுத்திக்கொண்டு காத்திருந்தான் யதுவீரன்!

3

செக்கச் செவேலென்று மேல் வானத்தைத் தீப்பிழம்பாக்கிக் கொண்டு அதில் மறைந்துகொண்டிருந்தான் சூரியன்.

ஒவ்வொரு விஞடியும் துர்ச் செய்தியை எதிர்பார்த்துத் தத்தளித்துக்கொண்டு காத்திருந்தாள் குந்தி.

தாதி ஒருத்தி ஓடி வந்து முக மலர்ச்சியுடன் "அம்மா, விஜயன் வெற்றி கொண்டார். அகங்காரனை கர்ணனை வீழ்த்தி வெற்றி கொண்டார். தமது புத்திரர் இச் செய்தியைத் தங்களிடம்..."



"ஏண்டா பயலே எங்கள் வீட்டுக்கு இன்னிக்கு உங்கப்பா ஒரு பலாப்பழம் அனுப்பறதாச் சொல்லியிருந்தாரே... மறந்துட்டாரோ?"

'மறக்கல்லே; மாமா! அது அழுகியிருக்குமாக்கும்னு நினைச்சுண்டு சொல்லியிருக்கார்.........அப்புறம் எடுத்துப் பார்த்தால், அது நன்னாவே இருந்துட்டுது!......அதான் அனுப்பல்லே!''

அண்டம் கிடுகிடுக்க 'ஆ' வென்று அலறிக்கொண்டு இருந்த விடத்திலிருந்து எழுந்து ஓடும் குந்தியைப் பின்தொடர்ந்து தாதிகளும் கூடவே ஓடினார்கள்.

தலைகால்தெரியாமல் மேலாடை நழுவ தன்னை மறந்தவளாக கைகளை உயரத் தூக்கிக்கொண்டு 'ஓ'வென்ற கதறலுடன் கர்ணனை பார்க்க ஓடும் குந்தியைக் கண்டு விட்டு தர்மன் தாயைப்பற்றி நிறுத்தி "என்னம்மா?" என்று கேட்டார்.

"கர்ணா, என் செல்வமே, நிகரில்லாதவனே" என்று வீறிட்டுக் கொண்டு தன்னைப் பிடித்துக் கொண்டிருந்த தர்மபுத்திரனை ஒரு உதறு உதறி விடுவித்துக் கொண்டு பாய்ந்தோடினாள்.

அவளுடைய சோகாவேசத்தையும், குமுறலையும் கண்டு ஒன்றுமே விளங்காதவர்களாக சிலைகளைப்போல நின்றார்கள் பாண்டவர்கள்.

குந்தியின் அந்த இடிக் குரல் பிரலாபத்தால் திசைகள் அதிர்ந்தன. பாணம் தைத்துள்ள மார்புடன் தன் தாயைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கும் கர்ணனுடைய செவியில் குந்தியின் அழுகுரல் அம்ருத தாரைபோலப் பாய்ந்தது!

"ஆ, வந்துவிட்டாள் என்னைப் பெற்ற தாய் வந்துவிட்டாள். அம்மா வந்துவிட்டாள். எனது ஜன்மக் கவலை தீர்ந்து விட்டது. இனி பரம சாந்தியாக. பரம திருப்தியாக வீரசுவர்க்கம் புகுவேன்" என்று பெருமிதம் கொண்டது கர்ணனின் பேருள்ளம்.

அம்பு தைத்த வேதனையைத் துளிக்கூட பாராட்டாமல் உவகை பூத்தமுகத்துடன் பூரித்த புஜங்களிரண்டும் செயலற்று யுத்தகளத்தில் சாய்ந்திருக்கும் கம்பீரனை கர்ணனை தூரத்திலேயே கண்டு கொண்டாள் குந்தி.

மேடு பள்ளம் தெரியாமல் இடறி விழுந்துகொண்டு ஓடி வரும் தனது தாயைக் கண்டு கர்ணனுடைய கண்களில் கரகர வென்று நீர் பெருகிற்று. சோர்ந்து பேச சக்தியற்றுவிட்டதால் மெதுவாக வரும்படி கையமர்த்திக் காட்டினான் கர்ணன்.

பாய்ந்து வந்து மகனுடைய அந்தக் கையைப் பற்றிக்கொண்டு 'ஐயோ'வென்று கன்றைப் பிரிந்த பசுபோலக் கதறியபடி அவன் மீது விழுந்தாள் குந்தி.

தன் கலியனைத்தும் தீர்ந்து விட்டதாக உணர்ந்தான் கர்ணன்.

உடல் பதறப் பதறக் கதறி மூர்ச்சையுற்றுத் தன் மீது கிடக்கும் தாயை இறுக அணைத்துக் கொண்டு "அம்மா, அம்மா" என்று திரும்பத் திரும்ப அழைத்தான். அந்த அன்னையின் அரவணைப்பில் சூழ்நிலையை மறந்தே போனான் கர்ணன். அவனுடைய இடைவிடா அழைப்பு அம்ருத தாரைபோலக் காதில் விடாமல் ஒலித்ததில் நினைவு பெற்று கண் விழித்தாள் குந்தி.

சுற்றுமுற்றும் பார்த்தாள். தனது சுய உருவைப் பிராமண ரூபத்தில் மாற்றிக்கொண்டு யாசகத்திற்காக அருகில் நிற்கும் கண்ணன். தன் குமாரர்கள், ஆசாரியார்கள், அந்தப்புற ஸ்திரீகள், சிற்றரசர்கள்,— ஒரே கும்பல்.

ஆரவாரத்தோடு கொந்தளிக்கும் அந்த ரணாரங்கம், அனைவரும் பேச்சற்ற பெருமோனத்தில் நின்றது. நிசப்தம் அங்கு ஒரு பீதியை விளைவித்தது.

வெட்டுண்டு கிடக்கும் பிணக் குவியலின் மீது அதையே சயனமாகக் கொண்டு படுத்திருக்கும் தன் மூத்த குமாரனைப் பார்த்துப் பார்த்து பரவசமெய்தி, துக்கமெய்தி,சோகம் தலைகொண்டு போக வாயில் வந்ததை யெல்லாம் புலம்

"என்ன ஸார், இந்த வருஷம் உங்க பஞ்சாங்கத்திலே அச்சுப்பிழை ஏகமா இருக்கு?"

"நான் என்ன பண்ணறது ஸார்? அச்சாபீஸ்காரன் வேலையை ராகு காலத்திலே ஆரம்பிச்சுத் தொலைச்சுருக்கான்!"

பிக்கொண்டு அவன் சரீரத்தைத் தடவிக்கொடுத்து, ரத்தம் கசியும் அவன் சரீரத்தைத் தன் புடவைத் தலைப்பால் துடைப்பதைக் கண்டு எல்லோரும் திகைத்தார்கள்.

அதொன்றையும் கவனிக்காமல் தன் கருத்தே கருத்தாக குந்தி தன் எழில் மகனுடைய வீர வடிவைத் துடைத்துத் தாய்மைப்படுத்தி தன் மடியில் வளர்த்திக் கொண்டு கொஞ்ச நேரம் வரையில் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு "புத்திரா, என் கண்மணி, என் மகனே, நீ யார் என்பதை இன்று உலகம் அறியட்டும்" என்று கண்ணீர் ஆருயப் பெருக மேல் வானத்தை நோக்கி "சூரிய நாராயண பகவானே இவ்வுலகில் மகா பாபியான நான். என்னை இன்று உலகத்தின் முன்பு—உமது புத்திரனின் மாதாவாகக் காண்பித்துவிட்டேன். தேவா புழுதியில் படுத்திருக்கும் உம் ஒளி மைந்தனை இதோ பாரும்" என்று உரக்க அழுதாள்.

அவளுடைய பொருமல் சற்று தணிந்ததும் தர்மன் மெல்லத் தமது குரலை எழுப்பினார்.

"தாயே, சற்று இப்படித் திரும்பி என்னைப் பாருங்கள்".

"ஏனப்பா?"

"இந்தக் கர்ணன் யார்?"

"என் மூத்த குமாரன். உன் தமையன்".

"உண்மையாகவா?"

"திக்பாலகர்கள் சாட்சியாக உண்மை".

"திக்பாலகர்கள்! திக்! உமக்கு சாட்சியாக இருந்த அவர்கள் எனக்கு உண்மையைத் தெரிவித்தார்களா? இப்பொழுது என் தமையனை எங்கள் கையால் கொன்றுவிட்டோமே இதற்கு யார் பிணை? சகோதரனைக் கொன்ற பாபத்திற்கு யார் பொறுப்பு?..."

"ஏன் பேசாமலிருக்கிறீர்களம்மா?"

"தர்ம, வாயாற வசைகள் பொழி வருத்தமே யில்லை.

நறநறவென்று பற்களைக் கடிக்கும் மூத்தோனைக் கண்டு—சினமென்பதை அவரிடம் பார்த்தே அறியாத மற்ற நால்வர்களும் தர்மனுடைய கோபாவேசத்தைக் கண்டு அசைவற்று நின்று போனார்கள்!

காலசர்ப்பத்தைப்போல சினத்தால் சீறி யெழுந்து "உம். இவ்வளவு நாட்களாக எப்படி இதை மனதில் வைத்தீர்களோ தெரியவில்லையோ தெரியவில்லையே" என்று ரௌத்ராகாரத்துடன் தரையை உதைத்து, தமது சினத்தை தீமொழிகளாக்கி தரையைப் பார்த்து "பூமிதேவி எல்லையற்றவளே அறி! இனிமேல் உன் இனத்தார் மனதில் ரகசியம் என்பதே தங்காமல் போகட்டும்" என்று வாயாறச் சொல்லித் தன் ஆற்றுமையைச் சற்றுத் தணித்துக்கொண்டு பிறகு அரை ப்ரக்ஞையோடிருக்கும் கர்ணனுடைய பாதங்களில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து "சரி, அர்ஜுன, நம் வினையைச் சற்றுவது விலக்கிக்கொள்ளஒரே ஒரு பரிகாரமிருக்கிறது. சட்டென்று நீ போய் என்கிரீடத்தையும் செங்கோலையும் எடுத்து வா. பீமா, நீ ஓடிச் சென்று கங்கா ஜலம் கொண்டு வா. இரட்டையர்களே ஓடுங்கள் சீக்கிரம். நம் சிம்மாசனத்தையும் சத்ரசாமரங்களையும் கொண்டு வாருங்கள். பாஞ்சாலி நீ போய் பொன்னுருவி தேவியாரை அழைத்து வா சீக்கிரம்" என்று பரபரத்தார்.

நினைத்த மாத்திரத்தில்அங்கே அனைத்தும் சித்தமாகிவிட்டன. அப்படியே அம்பு தைத்த மார்புடனேயே அவனைச் சக்ரவர்த்தியாக்க முற்பட்டார் தர்மன்.

பீமனால் கொண்டுவரப்பட்ட கங்கை நீரைத் தெளித்து, ராஜ உடைகளும், கிரீடமும் அணிவித்து, செங்கோலைக் கையில் கொடுத்தார் கிருஷ்ணன். அதற்குள்ளாகக் கர்ணனுடைய தர்ம பத்தினியான பொன்னுருவி தேவியாரை அலங்கரித்து கர்ணனுக்கருகில் அமர்த்தினார்கள். தர்மனும், பீமஸேனனும் கவரி போட, அர்ஜுனன் குடை பிடிக்க, நகுல சகாதேவர்கள் சாமரை வீச முகூர்த்த காலம் கர்ணன் சக்ரவர்த்தியாகப் பூமண்டலத்தை ஆண்ட திருப்தியை அடைந்தார்கள்.

குந்தியின் மனம் குளிர்ந்தது. கர்ணன் நினைவுற்றவனாகச் சற்று முற்றும் பார்த்து "சிறந்த அந்தணரே எங்கிருக்கிறீர்? வாரும்! நீர் கேட்ட கவச குண்டலங்களைப் பெற்றுக்கொள்ளும்"என்று சொல்லி அவற்றை யெடுக்க ஆயத்தமானான் கர்ணன்.

அவனுடைய அப்பொழுதை முகப் பிரகாசம் பாலசூரியனையும் மிஞ்சியதாக இருந்தது.



ஒரு காலத்தில் அது செழிப்பாய் இருந்த கிராமந்தான். இப்பொழுது அப்படிக்கில்லை. வெகுநாட்களாகமழையில்லாமல் பயிர்பச்சைகளெல்லாம் தீய்ந்து போய்விட்டன. அதனால் கிராமத்தில் ஒவ்வொருவராய் இடம் பெயர ஆரம்பித்தனர்.

கண்ணன் ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவன். அதோடு அவன் அப்பா கண்ணில்லாதபோதி. இந்நிலையில் அவன் எங்கு செல்வான்!

சோமுவும் ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவன்தான். இருந்தாலும் அவனுக்கு தினம் அரை வயிறு கஞ்சியேனும் கிடைத்துக்கொண்டிருந்தது அவன் அப்பா அங்குமிங்கும் சென்று கைபாடுபட்டு ஏதோ சம்பாதித்து வந்தான்.

கண்ணன் நல்லவன் ஏழைகளிடத்தில் இரக்கங்கொண்டவன். சோமு அப்படிக்கில்லை. பொல்லாத தந்திரசாலி. அடுத்தவன் கஷ்டத்தில் தன் நலத்தை நாடுபவன்.

ஒருநாள் கண்ணன் வெளிநாடு சென்று சம்பாதித்து வர புறப்பட்டான். சோமுவும் தந்திரமாக கிடைத்ததை சுருட்டிக்கொண்டு வருவோம் என்று கண்ணனுடன் புறப்பட்டுவிட்டான்.

இருவரும் ஆற்றைக்கடந்து மலையேறினர். கையில் கொண்டுவந்த கஞ்சி வழியிலேயே தீர்ந்துவிட்டது. அங்கிருந்த பழங்களைப் பறித்து தின்றனர். மலையடிவாரத்தில் சலசலவென்று அருவி ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அதில் வயிறு நிறைய தண்ணீர் குடித்துவிட்டு அன்று இரவு அங்கேயே படுத்துறங்கினர்.

அதிகாலை பொல பொல வென்று விடிந்துகொண்டிருந்தபொழுதே கண்ணனும் சோமுவும் நடக்க ஆரம்பித்துவிட்டனர். அது ஒரு அடர்ந்து இருண்ட காடு. துஷ்ட மிருகங்கள் இருக்குமோ என்று இருவரும் அஞ்சிக்கொண்டே நடந்தனர்.

வெகு தூரம் சென்ற பிறகு அங்கு ஒரு குடிசை குறுக்கிட்டது. ஆவலாய் எட்டிப் பார்த்தான் கண்ணன். அங்கு ஒரு தள்ளாத கிழவன் உடம்பு சுரத்துடன் முக்கி முனகிக்கொண்டு படுத்துக் கிடந்தான். அவனைப் பார்க்கவே பரிதாபமாயிருந்தது.

'சரி, சரி வா, வா இங்கு நேரம் போக்கினால் நமக்கு காட்டைக்கடக்க நேரமாகிவிடும்' என்று அவசரப்பட்டான் சோமு. 'இந்நிலையில் இவனை விட்டுப்போவது பாபமல்லவா சோமு? சிலநாள் இங்கு தங்கி இவனுக்கு உதவி செய்தாலென்ன!' என்றான் கண்ணன். 'நீ வேண்டுமானால் தங்கி உதவி செய். என்னால் இந்த குடிசைக்குள்ளேயே இருக்கமுடியாது. சுரம் தொத்து நோயாயிருந்தாலும் இருக்கும். நான் வெளியிலேயே இருக்கிறேன்' என்று சென்றுவிட்டான் சோமு.

கண்ணன், கிழவன் பக்கலிலேயே இருந்துகொண்டு அவனுக்கு வேண்டிய சிசுருஷைகளெல்லாம் செய்தான்.

சோமுவும் எங்கேயோ சென்றுவிடவில்லை. அங்கு தான் சுற்றிக்கொண்டிருந்தான். பழங்களைப் பறித்து தின்றுகொண்டும், பட்சிகளைக் கல்லாலடித்துக் கொண்டும் இருந்தான், இரவில் குடிசைக்கு வெளியே வந்து படுத்துக்கொள்வான்.

எத்தனையோ உதவி செய்தும் கிழவனுக்கு உடம்பு சரியாகவேயில்லை. கண்ணனுக்கு ரொம்பவும் வருத்தமாயிருந்தது. 'தாகமாயிருக்கிறது' என்று கிழவன் கை

ஜாடை செய்தான். கண்ணன் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். அதைச் சாப்பிடுவதற்குள் மூச்சு திணற ஆரம்பித்துவிட்டது அவனுக்கு. அப்பொழுது கண்ணனை அருகில் அழைத்து வைத்துக் கொண்டு மிகவும் மெல்லிய குரலில் பேசினன் கிழவன். 'இக்குடிசையின் மேலண்டை புறத்தில் சற்று தூரத்துக்கப்பால் ஒரு பெரிய ஆலமரம் இருக்கிறது அதனடியில் ஒரு பாராங்கல் கிடக்கும். அதைப் புரட்டிவிட்டு, நோண்டிப் பார். ஒரு செப்புத் தவலை, நிறைய பொற்காசுகளிருக்கும். இதுமாதிரி என்கடைசி காலத்தில் உதவி செய்பவருக்கென்றே சேமித்து புதைத்து வைத்தேன். அதை நீ எடுத்துக்கொள்' என்று சொல்லிக் கொண்டே தலையை சாய்த்து விட்டான்.

வெளியில் படுத்துக் கிடந்த சோமுவின் காதுகளிலும் இவையனைத்தும் விழுந்தன. 'உண்மையாயிருக்குமா கண்ணு! இப்பொழுதே புறப்படேன்' என்று உடனே உள்ளே வந்துவிட்டான் அவன்.

கண்ணனும் அதி ஆசையுடன் புறப்பட்டான்.

இருவரும் சென்று ஆலமரத்தடியிலிருந்த பாராங்கல்லை மிகச் சிரமப்பட்டு நோண்டிப்பார்த்தார்கள். கிழவன் சொன்னதுபோலவே செப்புத் தவலையொன்றிருந்தது. அதில் ஆயிரம் பொன்களிருந்தன.

'நாம் இருவரும் சமமாக பங்கு பிரித்துக் கொள்வோமா? என்றான் கண்ணன். 'வேண்டாம் ஊருக்குச் சென்றால், இத்தனை பொன்னைப் பார்த்துவிட்டு நம்மேல் சந்தேகங்கொள்வார்கள். அதனால் இப்பொழுது ஆளுக்கு நூறு பொன் எடுத்துக்

"நேத்தைக்கு கதை கேட்டேனுங்க... எப்படி அனுமார் அசோகவனத்தை மாத்திரம் விட்டுட்டு பாக்கி எல்லா இடத்துக்கும் தீயை வச்சாருன்னு பாகவதர் சொன்னாருங்க......அதை நெனைச்சா இப்பவும் மெய்ம்மறந்துடுதுங்க!"

"அதுதான் நன்னாத் தெரியறதே! குப்பையை மாத்திரம் விட்டுப்புட்டு பாக்கி இடமெல்லாம் பெருக்கிண்டு போறியே!"

கொண்டு மிகுதியை இது மாதிரியே புதைத்துவிட்டுப் போய்விடுவோம். பிறகு மற்றொரு தடவை இங்கு வந்து கொஞ்சம் எடுத்து செல்வோம்.' என்றான், சோமு.

கண்ணன் அதற்கே சம்மதித்தான். இருவரும் ஆளுக்கு நூறு பொன்னுடன் கிராமத்திற்கு திரும்பினார்கள்.

அவரவர்கள் அப்பா அம்மாவிற்கும் அளவிலா சந்தோஷம். கண்ணன், விழுந்துகிடந்த தன் குடிசையைக் கட்டி, பெற்றோருக்கு உடுத்திக் கொள்ள துணிமணி எடுத்துக்கொடுத்து ஒழுங்காய் செலவு செய்தான்.

சோமு பக்கத்து நகரத்துக்குச் சென்று தன் செல்வத்தை 'தாம்தூம்' என்று செலவு

செய்தான்.. சீக்கிரத்தில் செலவழிந்துவிட்டது.

மறுநாளே கண்ணனைக்கூட்டிக்கொண்டு அதே இடத்திற்குப் புறப்பட்டான். ஆளுக்கு நூறு பொன்னுடன் திரும்பினார்கள்.

அந்த தடவை சோமுவின் செல்வம் முன்னைதவிட அதி சீக்கிரத்தில் செலவழிந்துவிட்டது. உடனே எப்படியும் இந்த தடவை 'அங்கு மிகுதியிருக்கும் அறுநூறு பொன்களையும் நாமே எடுத்துக்கொள்ளவேண்டும்' என்று திட்டம் போட்டுக்கொண்டான். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்ய ஆரம்பித்துவிட்டான்.

கிராமத்தில் மாடு மேய்க்கும் பையன் ஒருவன் இருந்தான். முழுமூடன். சொன்னபடி கேட்பான். அவனைத் தேடிச் சென்று இரகசியம் பேசினன் சோமு. 'தான் சொன்னபடி நடந்துகொண்டால் கைநிறைய பொன் கொடுப்பதாகக்கூடச் சொன்னன். பையன் சம்மதிக்கவே, அவனை அழைத்துச் சென்று அந்த ஆலமரத்திலிருந்த பொந்தில் ஒளிய வைத்துவிட்டு வந்தான்.

அன்றைய தினமே பெருத்த இரைச்சல் போட்டு கிராமத்தையே கூட்டினன் சோமு. 'நான் முன்பு சென்றிருந்த பொழுது காட்டில் ஒரு புதையல் கண்டெடுத்தேன். கண்ணனும் கூட வந்தானே யென்று நூறு பொன் கொடுத்தேன். இப்பொழுது நான் போகும் ஒவ்வொரு தடவை

யும் என்னுடன் வருவேன் என்று பயமுறுத்துகிறன். அந்தந்த சமயம் நூறு பொன் கேட்கிறன். இன்னும் அங்கே அறுநூறு பொன் இருக்கிறது. நீங்கள் வேண்டுமானல் என்னுடன் வந்து பாருங்கள்' என்றன்.

ஏதோ கும்பலாயிருக்கிறதே என்று எட்டிப்பார்க்க வந்த கண்ணன் அந்த வார்த்தைகளைக்கேட்டு திடுக்கிட்டுப் போனன். அதே கும்பலில் கண்ணனும் நடந்த உண்மையனைத்தும் சொன்னன். அவன் பேசின தோரணையிலிருந்த அவன் வார்த்தைகள் உண்மையென்றே தெரிந்தன. இருந்தும் சோமு விட்டபாடில்லை. அந்தப் புதையல் தன்னுடையதென்றே சாதித்தான். 'அந்த சமயத்தில் அங்கே எங்கள் பக்கத்தில் யாருமில்லாவிட்டாலும் வன தேவதைக்குக்கூடவா தெரியாமலிருக்கும்? அதையே வந்து கேட்டு பாருங்கள்' என்று அப்பொழுதே அனைவரையும் கூட்டிக்



கொண்டு காட்டிற்குப் புறப்பட்டான்.

ஆலமரத்தடியிலிருந்த பாராங்கல்லைத் தள்ளி செப்புத் தவலையை வெளியிலெடுத்தான். அவன் சொன்னது போலவே அதில் அறுநூறு பொன் இருந்ததைக்கண்டு அனைவரும் ஆச்சரியமடைந்தார்கள்.

தவலையை தலையிலெடுத்து வைத்துக்கொண்டு மரத்திற்கருகில் அந்தப் பையனை ஒளியவைத்த பொந்திற்கருகில் சென்றான் சோமு. 'ஏ! வன தேவதையே! இந்தப் புதையல் என்னுடையதா அல்லது கண்ணனுடையதா! நீயே சொல்!' என்று உருக்கமாய்ச் சொன்னான்.

'இந்தப் புதையல் சோமுவினுடையதே!' என்று பளிச்சென்று சொல்லிற்று அசரீரி அதைக்கேட்டு கண்ணன் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான்.

வன்தேவதையே பொய் சொன்னால் அவன்தான் என்ன செய்வான்!

சோமுவுக்கு சொல்ல வொண்ணா சந்தோஷம் புதையலைக் கெட்டியாய் அணைத்துக்கொண்டான்.

அதே சமயத்தில் 'ஐயையோ! பாம்பு!' என்று அலறிக் கொண்டே பொந்திலிருந்து குதித்தான் பையன். அவனை அந்த இடத்தில் கண்டு அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். 'ஐயோ பொந்திலிருந்த பாம்பு என்மேல் ஊறியதே!' என்று உடல் நடுங்கினான்.

'நீ எப்படிடா இங்கு வந்தாய்?' என்று அவனை விசாரித்தார்கள். ஒன்றுவிடாமல் உண்மையைச் சொல்லிவிட்டான் அவன். 'ஆகா! அப்படியா!' என்று புதையலைப் பிடுங்கி கண்ணனிடம் கொடுத்தார்கள்.

சோமு தலையை தொங்கப் போட்டுக்கொண்டு, யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் எங்கேயோ ஓடிவிட்டான்.

பிறகு திரும்பவேயில்லை.

மாஜிக் கிட்டுவின் சுழல்விமானம்



மேலே 1 என்ற படத்தில் காட்டியுள்ளபடி ஒரு அழுத்தமான காகிதத்தை எடுத்துக் கொள். அதில் காட்டியிருக்கும் புள்ளிக் கோடுகள் வழியே கத்திரிக்கோலால் கத்திரித்துக் கொள்.

பிறகு 2 என்ற படத்தில் காட்டியுள்ளபடி காகிதத்தின் கீழ் பாகத்தை இரண்டாக மடித்துக் கொள்ளவும்.

அடுத்தபடி 3 என்ற படத்தில் காட்டியுள்ளபடி காகிதத்தின் மேல் பாகத்தை முன்னும் பின்னுமாக V போல் வளைத்து விடவும்.

பிறகு இதை உயரமான இடத்திலிருந்து கீழே விட்டால் 'விர்' என்று சுழன்று வருவதைக் காண்பீர்கள்.

சாரணர் உலகம்

சுளுக்கு

நம்மில் எத்தனையோ பேர் சுளுக்கினால் கஷ்டப்படுகிறார்கள். வலியைக் கொடுக்கும் பொழுது அதற்குப் பரிகாரம் தேடத் தோன்றுகிறதே ஒழிய சுளுக்கு என்றால் என்ன என்று சிந்திக்கத் தோன்றுவதில்லை நீங்கள் யாராவது சுளுக்கினால் கஷ்டப்படும்பொழுது அது எதனால் ஏற்படுகிறது, அது என்ன என்று யோசித்திருக்கிறீர்களா? இல்லை. அது ஏன்? சுளுக்கை நாம் ஒரு சாதாரண சம்பவமாக கருதிவிடுகிறோம்.

சுளுக்கு என்றால் என்ன? நம் இணைப்புகளிலிருக்கும் தசைநார்கள் திடீரென இழுக்கப்படலாம். இவ்வாறு இழுக்கப்படுகையில் அதுமுறுக்கிக்கொள்ளலாம். அல்லது அறுக்கப்படலாம். இதற்குத்தான் சுளுக்கு எனப் பெயர்.

சுளுக்கு எந்த சந்தர்ப்பத்தில் ஏற்படுகிறது. நாம் மாடிப் படிகளில் ஏறும்பொழுது கால் சறுக்குவதால் நமதுகணுக்கால் பாதிக்கப்படுகிறது. இவ்வாறு பாதிக்கப்படுகையில் நமது கணுக்கால் சுளுக்கிற்கு இலக்காகலாம். மேலும் விளையாடும்பொழுது கணுக்காலில் படும்அடியின் பலத்தினாலும் சுளுக்கு உண்டாகலாம்.

நமது அவயவத்திலிருக்கும் வேறு எந்த பாகமும் சுளுக்கிற்கு உள்ளாகாதா? ஒவ்வொரு சமயம் நமது கை விரல்களும் சுளுக்கினால் பாதிக்கப்படலாம். எப்பொழுது? 'வாலிபால்' விளையாட்டைப்பற்றி அனைவருக்கும் தெரிந்திருக்கும். இந்த விளையாட்டின் பொழுது சில சமயம் கைவிரல்கள் பிசகி சுளுக்கிற்கு இலக்காகலாம்.

முதற் சிகிச்சை

★

இதன் அடையாளங்கள் என்ன இணைப்பில் வலி அதிகமிருக்கும். ஏன்? இணைப்புகளில்தான் சுளுக்கு உண்டாகும். ஆதலால்தான் இணைப்புகளில் வலி அதிகமிருக்கும்.

இணைப்பிலிருக்கும் நமது அவயவத்தை வலி அதிகரிக்காமல் உபயோகப்படுத்த முடியாது. மேலும் வீக்கமுண்டாகும். சில சமயம் நிறமும் அடிபட்ட இடத்தில் மாறலாம்.

இதற்கு என்ன செய்வது? அடிபட்ட பாகத்தை, அடிக்குள்ளானவனுடைய சௌகர்யப்படி வைக்க வேண்டும். அடிபட்ட பாகம அசையாமலிருக்க அதைத்தூக்கி ஏதாவதொரு மிருதுவானதும் தாங்கக்கூடியதுமான வஸ்துவின்மேல் வைப்பது நலம்.

குடியிருக்க வந்தவர்:—"இந்த வீட்டிலே பிசாசு இருக்குன்னு சில பேர் பேசிக்கிறாங்களே!"

வீட்டுக்காரர்:—"இதுவரையில் அந்த மாதிரியெல்லாம் கிடையாது. நீங்கள் வந்த பிற்பாடு எப்படியோ; எனக்குத் தெரியாது."

எந்த இடம் அடிக்குள்ளாகியிருக்கிறதோ அதன்மேல் பலமாக பாண்டேஜ் போடவேண்டும். இதன் பிறகு இந்த பாண்டேஜின் மேல் குளிர்ந்த தண்ணீர் விடவேண்டும். வலி குறையும் வரை குளிர்ந்த தண்ணீரை விட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். இதனால் வலி குறையாவிட்டால் பாண்டேஜை அவிழ்த்துவிட்டு மறுபடியும் வேறு பாண்டேஜ் போடவேண்டும்.

சில சமயம் என்ன செய்தாலும் வலி குறையாது. அந்த சமயங்களில் எலும்பு முறிந்ததாகக் கருதி அதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். மேலும் எலும்பு முறிந்திருக்கும் என்று சந்தேகம் வந்தாலும் உடனே எலும்பு முறிதலுக்குரிய சிகிச்சையைத்தான் செய்ய வேண்டும்.

கணுக்கால் சுளுக்கிற் குள்ளாகியிருந்தால் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயமொன்றிருக்கிறது. அதுதான் பூட்ஸ். விளையாட்டு மைதானத்தில் இந்த சுளுக்கு ஏற்பட்டால், முதலில் பூட்ஸைக் கழற்றி மேற்சொன்னவாறு செய்யவேண்டும். ஆனால் வீக்கம் அதிகரிக்கும் முன் மீண்டும் பூட்ஸைப்போட்டு அடிபட்டவனை மெதுவாக வீட்டிற்கு அழைத்து வர வேண்டும். வீட்டிற்கு அழைத்து வந்தபிறகு பூட்ஸை கழற்றியோ அல்லது அறுத்தோ மேற்கூறிய முதற் சிகிச்சையை செய்ய வேண்டும்.

ஹிந்தி உலகம் — हिन्दी जगत

-பண்டிட்ஜி-

साहित्य का निमार्ण

★

काशी नागरी प्रचारिणी सभा की हीरक जयंती के राष्ट्रभाषा-सम्मेलन के अध्यक्ष-पद से भाषण देते हुए बिहार के राज्यपाल श्री रंगनाथ दिवाकर ने राष्ट्रभाषा में उत्तम साहित्य का निर्माण करने पर भी ज़ोर दिया। उन्होंने कहा :—

"परदेशीय भाषा के द्वेष या बहिष्कार से हमारी भाषा बढ़नेवाली नहीं है हमारे देश की जो राष्ट्रभाषा है, उसके प्रेम से, उसके पोषण से और उसकी प्रगति में लगातार लगे रहने से ही वह बढ़ सकती है। देवनागरी में लिखी हुई हिन्दी को हमने अपनी सामान्य भाषा मान लिया है इस निश्चय को अमल में लाने के लिए परदेशीय भाषाओं से द्वेष करने की या उनका बहिष्कार करने की कुछ आवश्यकता नहीं है ।

"दूसरी महत्त्वपूर्ण बात यह है कि जो चौदह भाषाएँ संविधान की आठवीं अनुसूची में बतायी गयी हैं और दूसरी अनेक भाषाएँ जो ग्रन्थस्थ न होने पर भी हमारे यहाँ लोग बोलते हैं, उनके बारे में हमारी एक निश्चित सहानुभूतिपूर्ण नीति हो। ऐसी भाषाओं के संबध में हमारी नीति क्या होनी चाहिए? स्पष्ट है कि ये सब भाषाएँ अपने-अपने क्षेत्रोंमें तथा राज्यों में अच्छी तरह से काम करती हैं और अपना प्रभाव विकसित करती हैं। इन भाषाओं के संबंध में केवल शुभकामना नहीं, बल्कि उनको विकसित करने का कुछ-न-कुछ प्रयत्न भी करना चाहिए। राष्ट्र-जीवन के प्रवाह के लिए शायद ये भाषाएँ छोटी-मोटी नदियों के समान हैं। लेकिन जहाँ तक अंतर-प्रान्तीय, अखिल भारतीय तथा केन्द्रीय व्यवहार का संबंध है, हमें हिन्दी भाषा आवश्यक है। उस भाषा को अपनाना इन सब भाषा-भाषियों के लिए अत्यंत आवश्यक और उपयुक्त बात है। आखिर भाषा एक साधन मात्र है। उस साधन का राष्ट्रीय दृष्टि से सबके लिए सामान्य होना आवश्यक है। इसीलिए तो हिन्दी को वह स्थान दिया गया है ।

"हमारा देश हर क्षण आगे बढ़ रहा है । अनेक विषयों पर हमारे राष्ट्र के भिन्न-भिन्न राज्यों के लोग एकत्र होकर विचार-विनिमय, चर्चा आदि एक ही मंच पर करने की आवश्यकता दिन-प्रतिदिन अधिक अनुभव करते हैं। इस मंच पर बैठनेवाले, बोलनेवाले और विचार-विनिमय करनेवाले भिन्न-भिन्न राज्यों के भिन्न-भिन्न भाषा-भाषी होते है । इसलिए ऐसे एक साधन की खोज हमने की है, जिससे हम एक दूसरे के भाव और विचार अच्छी तरह जान सकें और एक सुदृढ़ बुनियाद पर आगे बढ़ सकें ।

"भाग्यवश, हमारे भारत में आज भी दो-चार भाषाएँ ऐसी हैं, जिनकी प्रगति काफ़ी हुई है और जिनका साहित्य-भंडार बहुत उत्तम है। उनसे हमें ज़रूर लाभ उठाना होगा । उनसे हमारी और हमारे साहित्य की इज्ज़त बढ़ती जाएगी । उनके साहित्य के साथ आदान-प्रदान करने से हिन्दी को भी लाभ पहुँचेगा । इस दृष्टि से ऐसी भाषाओं का विकास स्वागतार्ह है। लेकिन उन भाषाओं से सामान्य भाषा का वह कार्य नहीं होगा, जो आज हिन्दी से ही सकता है । इसलिए केवल भाषा-विकास ही नहीं, साथ-ही-साथ भाषा की आज की व्याप्ति, सरलता, अपनाने में सुविधा, लोगों में उसकी लोकप्रियता आदि, कई बातें राष्ट्रभाषा

हिन्दी के पक्ष में हैं। अतः उसमें उत्तमोत्तम साहित्य का भी निर्माण होना आज की बड़ी आवश्यकता है।

"आज हमें बार-बार परदेशीय भाषाओं के प्रति विवश भाव से देखना पड़ता है। इसका मुख्य कारण यह है कि उन भाषाओं का साहित्य-भंडार बहुत ही संपन्न है। अधिकार से लिखा हुआ सुन्दर, सस्ता, बहुविध, मौलिक साहित्य राष्ट्र की सब से बड़ी पूँजी हो सकती है, ऐसा मैं मानता हूँ। जैसे मधु-मक्खी फूलों में भरे हुए मधु के पीछे पड़ती है, उसी तरह ज्ञान से भरे हुए ग्रंथों की तरफ़ लोगों का दिल आकर्षित होता है। साथ-ही-साथ लिखनेवालों को यह भी ध्यान में रखना होगा कि हिन्दी का गंगा के समान बड़ा पावन स्रोत बहाना चाहिए, जिसमें सब लोग आनंद से नहा सकते हैं और अपनेको धन्य मान सकते हैं। हमारे देश में नदियाँ बहुत हैं; लेकिन गंगा तो एक ही है और एक ही हो सकती है। हिन्दी भारत के हृदय की बोली होनी चाहिए। इसी दिशा में आज बहुत कुछ काम करना चाहिए। एक नये जोश से, नयी प्रेरणा से अखिल भारत के विशाल क्षेत्र को अपने सामने रखकर हमें काम करना है।

परदेशीय பிற நாட்டு
पोषण (ஆ. பா.) வளர்ப்பு
संविधान (ஆ.பா.) அரசியல் சாஸனம்
अनुसूची (பெ. பா.) அனுபந்தம்
ग्रन्थस्थ நூலில் நிலைத்த இலக்கிய வளமுள்ள
मंच (ஆ. பா.) மேடை, மச்சு
दिन-प्रतिदिन நாளுக்கு நாள்
खोज (பெ. பா.) தேட்டை ஆராய்ச்சி
बुनियाद (பெ. பா.) அடிப்படை. அஸ்திவாரம்
आदान-प्रदान (ஆ. பா.) கொடுக்கல் வாங்கல்
स्वागत (ஆ. பா.) வரவேற்பு
स्वागतार्ह வரவேற்கத் தகுந்த
व्याप्ति (பெ. பா.) பரவல்
सरलता (பெ. பா.) எளிமை
सुविधा (பெ. பா.) வசதி
विवश கதியற்ற, வேறுவழியில்லாத
साहित्य-भंडार (ஆ. பா.) இலக்கியக் களஞ்சியம்
सस्ता மலிவான
बहुविध பலவிதமான
पूँजी (பெ. பா.) முதல், செல்வம்
मधु (ஆ. பா.) தேன்
मधु-मक्खी (பெ பா.) தேனீ
ग्रंथ நூல்கள்
पावन (ஆ பா.) புனிதமான
स्रोत (ஆ. பா.) நீரோட்டம், தோற்றுவாய்
धन्य அருள்பெற்ற, வாழ்த்தப்பட்ட
बोली (பெ. பா.) பேச்சு
जोश (ஆ. பா.) உற்சாகம்
प्रेरणा (பெ. பா.) வேகம், தூண்டுதல்
अखिल எல்லா

जय हिन्द ! जय हिन्दी !



கம்பர் பெருமானின் திருவிழா அவரது அவதார ஸ்தலமாகிய தேரெழுந்தூரில் நடைபெற்றது. கவியரசர் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் காட்சி

சதுரங்க ஆட்டம்

ஸாமிஷ் திட்டம்

2

எஸ். கே. சுப்பிரமணியம்

தாமதிக்கப்பட்ட ஸாமிஷ் திட்டத்தை விளக்கம் செய்யும் சதுரங்க ஆட்டம் ஒன்று சென்ற இதழில் தரப்பட்டது. அதில் சதுரங்க நிபுணர் பால் கொரீஸ் வெள்ளைக் காய்களை வைத்துக் கொண்டு இந்தத் திட்டத்தைத் தழுவி ஆடி, தோற்றுவிட்டதைக் கண்டோம். கீழ் வரும் ஆட்டத்திலே கொரீஸ் கறுப்புக் காய்களை வைத்துக்கொண்டு ஆடி இந்தத் திட்டத்தை எதிர்க்கிறார். இப்படி எதிர்க்கும்பொழுது நிம்ஜோவிட்ச் பாதுகாப்பின் சிறப்பினையும் அதன் சிறப்பியல்புகளையும் நாம் கண்டு களிக்கும் வண்ணம் பால் கொரீஸ் வெகு விதரணையாக ஆடியிருக்கிறார். இந்த ஆட்டக் குறிப்புகளின்படி காய்களை நகர்த்தும் பொழுது நிதானமாகக் கறுப்பு நகர்த்தல்களை கவனிக்குமாறு சதுரங்க நேயர்களை வேண்டிக்கொள்கிறேன். முக்கியமாக கறுப்பு செய்திருக்கும் 33-வது நகர்த்தலையும், 45-வது நகர்த்தலையும் படிப்பதற்கு முன்பாகவே, அந்த ஆட்ட நிலைகளில் எது சிறந்த நகர்த்தல் என்பதை நேயர்கள் யூகித்து அறியவேண்டும். தங்கள் தீர்மானமும், கொரீஸ் செய்துள்ள தீர்மானமும் ஒன்றாக இருந்தால் தங்கள் யூகம் சரியானதென்ற முடிவுக்கு வரலாம். இல்லாவிடில் இன்னும் பயிற்சி பெற வேண்டியதுதான் என்னும் முடிவுக்கு வரலாம்! நிபுணர்கள் ஆடின ஆட்டங்களை இவ்விதம் மீண்டும் மீண்டும் பார்ப்பது சதுரங்கத்தில் தேர்ச்சி பெற ஒரு சிறந்த வழியாகும்.

ஆட்டம் 58 (ஜூர்ச், 1953)

வெள்ளை ஸினகோரிக்		கறுப்பு கொரீஸ்
1.	ஆ—ம4	கு—ரா. ச3
2.	ஆ—ம.ச. 4	ஆ—ரா 3
3.	கு—ம. ச. 3	ச—கு 5
4.	ஆ—ரா. 3	ஆ—ம. கு. 3

வெள்ளையின் மந்திரி பக்கத்துக் குதிரையை வெட்டிவிடுவதாகத் திட்டம் செய்து, ராஜா சகடு அதனை ஒடுக்கிவிட்டது. இப்படிச் செய்வதன் பயனாகக் கறுப்புக்கு மையத்தில் ஆட்சி அதிகரிக்கும் என்பது கொரீஸின் தீர்மானம். மந்திரி ஆளை 4க்கு உடனே நகர்த்துவது சரியல்ல என்று நிம்ஜோவிட்ச் திட்டம் கூறுகிறது. 57-ம் ஆட்டத்தில் அவெர்பாக் 5-ம் நகர்த்தலில் ம-ஆ. நகர்த்துகிறார். கொரீஸ் இந்த ஆட்டத்தில் 30-ஆம் நகர்த்தல் வரையில் ம. ஆளை 4-க்கு வைக்காமல் இருப்பது கவனிக்க வேண்டியதாம். குதிரை இரண்டிலே சகடு வந்து மையத்தை ஆட்சி கொள்வது இத்திட்டம். நிம்ஜோவிட்சின் கருத்தும் இதுவேயாம். தாக்குவதில் கறுப்பு முந்துகிறது!

5. ஆ—ம. யா 3

கொஞ்சம் தாமதிக்கப்பட்ட ஸாமிஷ் திட்டம் கொரீஸ் 8-ஆம் நகர்த்தலில் இது செய்ததை 57-ஆம் ஆட்டத்தில் கண்டோம். பழைய முறையும் புதிய முறையும் விரைவிலே இங்கு ஒன்று சேர்ந்துவிடுகின்றன!

5	...	ச×கு (ஷா)
6.	×ச	ச—கு2
7.	ஆ—ச3	கு—ச3
8.	ஆ—ரா. 4	

நாளுக்கு நாள் அதிக தெளிவான, எழிலோங்கும் சருமம்

கேடில் கலந்த ரெக்ஸோனா இந்த அற்புத வேலையைச் செய்யட்டும்.

ரெக்ஸோனாவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் மெதுவாகத் தேய்த்து, பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும், தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள். அதனால் புதுப்பொலிவுடன் விளங்குவீர்கள்.



ரெக்ஸோனா

கேடில் கலந்த சோப் இதுஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

RP. 138-30 TM

ரெக்ஸோனா ப்ரொப்ரைட்டரி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது.

சதுரங்க மகுடதாரியாய் விளங்கின பிலிடார் என்னும் பிரெஞ்சுக்காரர் முன் காலத்தில் ஒரு திட்டம் வகுத்தார் ஆள்களை மையத்தில் கும்பலாக வைக்க வேண்டுமென்ருர் அவர். நிம்ஜோவிட்ச் அப்படி வைப்பதை ஒப்பவில்லை. கற்பனை சக்தியற்றவர்கள் ஆள்களை நடுவில் கூட்டி வைத்துக்கொண்டு தங்கள் சேனை பலத்தைப்பற்றி மகிழ்ச்சி அடைவார்கள் என்று அவர் ஏசினுர். இந்த ஆட்டத்தைப் பொறுத்த வரையில் க்ளிகோரிக் அந்த ஏசலுக்கு இடம் தருகிருர்.

8. ... ஆ—ம3
9. ச—ம3 ச—ம.யா4
10. கு—ரா 2 ம—ம2

வெள்ளை மந்திரி தன் யா. 4—க்கு வர முடியாமல் கறுப்பு செய்கிறது. 10 ஆம் நகர்த்தலிலேயே வெள்ளை மந்திரி யா. 4—க்கு வந்திருந்தால் ஒரு ஆளை இழக்காமல் இருக்கும். மையத்திலும் ஆட்சி பெற்றிருக்கும். மந்திரி பக்கத்தில் கறுப்பு ராஜா கோட்டை கட்டுவதும் கஷ்டமாயிருக்கும். எனவே கறுப்பு தூரத்திலிருந்து காய் பலத்தால் தாக்குதல்தொடங்கியிருக்கும்போது,வெள்ளை தன் ஆட்களை மையத்தில் கும்பல் கூடவிட்டு நிதானமாகக் காய்களை உள்ளேயே ஆடிக்கொண்டிருக்கிறது. இதனுல் வெள்ளை காய்களுக்கு நகர்த்த நல்ல இடம் கிடைக்காமல் போகிறது.

11.0—0 ச—யா3
12. கு—கு3 ச×ச.ஆ
13. ச×ச கு×ச
14. ம—ரா 2 ம—ச3

மந்திரி பக்கத்தில் வெள்ளை ஆள் சகடு மூன்றிலேயே நிற்க வேண்டி கறுப்பு தன் குதிரை மூலமாய்த் தடை திட்டம் (ப்ளாகேட்) செய்திருக்கிறது. 57—ம் ஆட்டத்தில் உள்ளதடைதிட்டம் போன்றதே இதுவும். அங்குள்ள படத்திலும் ஆட்ட விமர்சனத்திலும் அது விளக்கமாயிருக்கிறது.

15. ச—கு5 ஆ—ரா.யா.4!

குதிரை— மூன்றிலே இருக்கும் குதிரையைஓட்டுவதற்குயானைஆளைத்தள்ள வேண்டியது என்பது வெகு காலமாக நிபுணர்கள் கையாளும் முறையாயிருக்கிறது. ராஜா பக்கத்தில் கறுப்பு தன் கோட்டை கட்டப் போவதில்லை மையத்து ஆட்களால் அந்தப் பக்கத்தில் கறுப்புக்கு பலவீனம் ஏற்படும். ஆனுல் வெள்ளையோ ராஜா பக்கக் கோட்டை கட்டத்தான் வேண்டியிருக்கிறது. எனவே, முன்பாக கறுப்பு தாக்க ஆரம்பிக்கிறது. ராஜா பக்கத்திலே!

16. ச—ரா.யா 4 0—0—0
17. ஆ—ச4 ம.யா—கு1
18. ச×கு

தன் கோட்டைக்கு எதிர் வெளியைக் கறுப்பு யானைக்குத் திறந்து விடுகிறது வெள்ளை. தன் ரா. ஆ பலஹீனமாய் இருப்பதால் இப்படிச் செய்தது போதும்! அது எப்படியாயினும் இந்த நகர்த்தல் கஷ்டம்தான் வரச் செய்யும் என்பது தெளிவாயிருக்கிறது.

18. ... ஆ×ச
19. கு×ஆ

போன ஆளுக்குப் பதிலாக வெள்ளை ஒரு கறுப்பு ஆளைப் பெறுகிறது. இன்னும் ஒரு வரிசையை எதிரிக்குத் திறந்து கொடுக்கிறது.

19 ஆ—ச4
20 கு—கு3 ஆ×ஆ
21. கு×ஆ யா—யா6

21. மந்திரியால் வெட்டியிருந்தால் ஆபத்து குறைந்திருக்கும்.

22. கு—கு3 யா—யா3
23. யா—ச3 யா(1)—யா1
24. ஆ—யா3 ஆ—ச4
25. கு—ச1 யா—கு1
26. யா—கு3 யா×யா
27.கு×யா, ஆ—யா4
28. ஆ—ம.யா4 யா—கு3
29. ரா—யா2 ரா—கு2
30. யா—யா2 ஆ—ம4
31. ம—யா5 ம—ரா1
32. யா—ரா2 கு—ம3
33. யா—ரா5

இப்பொழுது கறுப்பு என்ன ஆட வேண்டும். (33)...கு—ரா5 வைத்தால் நல்லதாகத் தோன்றுகிறதல்லவா? (34) கு×கு..யா×ஆ (ஷா) (35)ரா×ஆ, ம×ம! இதைப்பற்றி சிந்திக்க வேண்டும், மேலும் ஆடுவதற்கு முன்.

33... ... ம—ச2!

சரியான ஆட்டம். வெள்ளையின்சூழ்ச்சியில் கறுப்பு சிக்கவில்லை (33)... கு—ரா5 வைத்தால் (34) கு×ஆ...யா×ஆ (ஷா; (35) ரா×யா; ம×ம; (36) கு—ம 6 (ஷா; ஆ×கு: (37) யா×ம! அதன் பின் வெள்ளையின் ரா. ஆள் மேலேறி விடும். எனவே கெரஸ் ச.ஆளுக்கு மந்திரியை பலமாகக்கொண்டு வருகிருர். ர.ரா ஆளும் ஒடுக்கத்திலிருந்து விடுபடுகிறது.

34. ம—ச3 ம—ச2
35. ம—யா5 ம—ச2
36. ம—ச3 யா—யா8
37. யா—ரா2 ம—ம2
38. யா—யா2 ம—ச3
39. யா—யா1 ம—ச5
40. ரா—கு1 ம—கு6
41. கு—ரா2 ம—ச7
42. ஆ—கு4

தவறு பெருந் தவருய் விடுகிறது. பலமான மூன்று காய்களாலும் மையத்தில் ஆட்சி கறுப்புக்கு இருக்கிறது. இப்பொழுது உள்ள நிலைக்கு நம் சதுரங்க விதி சொல்லுகிறது. இட பலம் குறைந்த ஆட்டத்தில் வரிசையைத் திறந்தால் வந்ததே விபத்து.

42. ... ... ஆ×ஆ
43. ஆ×ஆ யா—யா5
44. யா—ம.ச1

வெள்ளை தன் எதிரி மந்திரியை நல்ல இடத்திற்குத் துரத்துகிறது.

44. ..... ம—யா2
45. ஆ—ச4

இந்த நிலையைக் கீழ் உள்ள படத்தில் காணவும் கறுப்பு ஆடினதைப் பார்க்கும் முன் எது சிறந்த நகர்த்தல்என்று தீர்மானிக்க வேண்டும்.

கறுப்பு (9 காய்கள்)



வெள்ளை (9 காய்கள்)

45. ..... யா—யா6
46 ம—கு2 ம—ம6
47. ஆ×ஆ கு—ரா5
48. ஆ×ஆ ம—ரா6(ஷா)
49. ரா—ச1 யா—ச6(ஷா)

வெள்ளை தோல்வியை ஒப்புக் கொண்டது.

(50) ரா—ரா1 ம—ம7 (கட்டு) இதை தடுக்க, வெள்ளை மந்திரியை ஒரு யானைக்குப் பதிலாக கொடுக்க வேண்டும். (50)ம×யா ம×ம (ஷா) அதன் பின் வெள்ளைக் குதிரையும் ஆள்களும் பலியாகும்.

இந்த ஆட்டம் 1953 ஜூரிச் நகரில் உலக நிபுணர் தேர்தல் போட்டியில் நிகழ்ந்தது.

திருத்தம்: சதுரங்க ஆட்டம் சென்ற இதழில் 'கருப்பு' என்று வரும் இடங்களில் 'கறுப்பு' எனத் திருத்திக் கொள்ளவும்.

செய்தி: பாட்வினிக் —ஸ்மிஸ்லாவ் ஆடி வரும் உலக மகுடப் போட்டியில் (16—3—54 முதல்) பாட்வினிக் முதல் இரண்டு ஆட்டங்களையும் ஜெயித்து விட்டதாக மாஸ்கோ ஒலிபரப்பு நிலையச் செய்தி ஒன்று எட்டியுள்ளது.

வேண்டுகோள்: 'செஸ் ப்ராப்ளம்ஸ்' என்பதில் பயிற்சியுள்ள சதுரங்க நேயர்கள் இந்தத் தொடருக்குச் சரியான தமிழ் மொழிபெயர்ப்பைப்பற்றித் தங்கள் அபிப்பிராயங்களை எழுதும்படி வேண்டுகிறேம். 'கற்பனைக் கட்டுகள்' 'சதுரங்க இணைப்புகள்' 'புனை கட்டுகள்' என்பன எனக்குத் தோன்றுகின்றன. சதுரங்க ஆட்டம் ஆசிரியர் சுதேசமித்திரன், என்பது விலாசம்.



தையல் கலை

ஏ. சுகுமார் டி.எம்.டி.எஸ். (லண்டன்)

தையற்கலையும், விஞ்ஞான முறையும்.

★

இதற்கு முன் பலவித கருத்துக்கள் நிறைந்த கட்டுரைகளை நீங்கள் படித்திருப்பீர்கள். தையற் கலை விஞ்ஞான ரீதியான கலை இல்லை என்று பொதுவாக எண்ணமிருந்தபோதிலும் முக்கியமாக அக்கலையை ஆர்வத்துடன் கவனம் செலுத்தி வேலை செய்ய முற்பட்டால் அது விஞ்ஞான ரீதியான கலை என்றே நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. உண்மையிலேயே தையற் கலை விஞ்ஞான ரீதியான கலை என்பதில் அணுவளவும் சந்தேகமில்லை. சந்தேகத்திற்குரியதும் ஒன்றுமில்லை. சாதாரணமாகத் தையற் தொழிலாளி கணிதா சார துல்லிதமாக (ஜியாமட்ரிகல்) அரையங்குல விஷயத்தில் தவறுவதுண்டு. அதுபோலவே தச்ச வேலைக்காரர் அரையங்குலக் கணக்கிலும், நூதனக் கருவிகள் தயாரிப்பவர் அரை அங்குலத்திலும் தவறுவதுண்டு. இத் தவறுதலை, எளிதில் அவர்களால் மறக்க முடியாது. ஒருவருக்கொருவர் மேற்குறித்த கணித ரீதியில் வித்தியாசப் படுவதுமுண்டு.

கலையும், விஞ்ஞானமும்

அது ஒருபுறமிருக்க, நாம் தையற்கலையைச் சற்று கவனிப்போம். உடைகளின் மாதிரிகளை (கார்மன்ட் டிசையினிங்) சித்தரிப்பதை நோக்குங்கால் அது விஞ்ஞான ரீதியான கலையாகவே இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. சற்று நிதானமாக ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும் நேரத்தில் இக்கலை. கலைஞனின் கலையைவிட உயர்ந்ததாக இருந்த போதிலும், விஞ்ஞான ரீதியாக மட்டப் பலகையையும் இன்ச்டேப்பையும் பகுத்தறிவுடன் உபயோகித்தால்தான் நாம் திருப்தி அடைய முடியும். அப்பொழுதுதான் தையற்கலை விஞ்ஞான ரீதியான கலையாகிறது. உதாரணமாக ஒரு ஓவியக் கலைஞர் சிந்தனையிலே உருவான ஒரு சிங்காரியின் சித்திரத்தைக் கண்கவர வரைகிருன் என்றும் அவ்வுருவத்தில் முக்கியமான கண்கள் சரியாகத் தீட்டப்படாவிட்டால், அதாவது கண்களில் உயிருள்ள சக்தியை வெளிப்படுத்திக் காட்டாவிட்டால், அது சரியான சித்திரமாகாது. உயிருள்ள ஓவியமாகத் தோன்ற வைக்க வேண்டுமானுல், அவரது புகழுக்குரிய திறமையை விழிகளிலே காட்ட வேண்டும். அப்பொழுதுதான் அது பெருமைக்குரியது மட்டுமல்ல, போற்றுதற்குரிய ஓவியக் கலையாகிறது இரண்டாவதாக சிற்பக் கலையை நோக்குங்கால் சிலைகள் நம்மைப் பார்த்து சிரிப்பதுபோல் அன்புடனும், ஆசையுடனும் அனுவசியமாகப் பார்ப்பதுபோல் இருக்கிறதென்ருல், நாம் வியப்படைகிறேம். கவனித்துப் பார்த்தால் ஏன்? கணக்கெடுத்துப் பார்த்தாலும்கூட, உயரம், அங்கங்களின் அளவு மற்ற அம்சங்கள் எல்லாம் சரிவர அமைந்திருப்பதையே கண்கூடாகக் காண்கிறேம். சிற்பியை புகழ்ந்து பேசுகின்றேம். சிலர் பெருமையில் மிதந்தவர்களாய், இச்சிலையை செதுக்கிய சிற்பி என்னெதிரே வந்தால், யாரென்று தெரிந்தால் என் உயிருள்ளளவும் அடிமையாக இருப்பேன் என்பார். ஆயிரமாயிரம் ரூபாய் கொடுத்தால்கூட போதாது என்று பேசிக்கொள்வார்கள் என்ருல், அவர்களை அச்சிலை அவ்வளவுக்கு கவர்ந்திருக்கிறது என்று தெரிகிறது. அந்த சிலையை செதுக்கிய சிற்பியின்திறமை அவர் பகுத்தறிவுடன் கையாண்ட உளியையும், சுத்தியையும் சார்ந்திருக்கிறது. சிற்பக் கலைக்கு உளியும் சுத்தியும் எவ்வளவு முக்கியமோ, ஓவியக் கலைக்கு பிரஷ்ஷும், பென்சிலும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது தையற்கலைக்கு மட்டப் பலகையும், இன்ச் டேப்பும். இதைத் தையற் கலைஞர்கள் பகுத்தறிவுடன் நிதானத்துடன் கையாண்டால்தான் கலைக்கு உயிர் கொடுத்தவராவர். அவர்கள் செய்யும் வேலையில் திருப்தி அடைய முடியும். அது மட்டுமல்லாமல் மற்றவர்களால் குறைகூருமல் இருக்கமுடியும். சித்திரக் கலைஞன், சிற்பக் கலைஞன் தையற் கலைஞன் இம்மூவரும் ஒரு பண்புடைய கலையை சிருஷ்டிக்கிருர்கள். காரணம், சித்திரம் தீட்டுவதற்கும், சிற்பம் செதுக்குவதற்கும், உடை வெட்டுவதற்கும் மேற்கூறிய மூவரும் மனிதனின் உடற்கூற்று முறைகளையும் உடலமைப்பின் வளைவுகளையும் சதுர மட்டம் முதலியவைகளை நன்கு விஞ்ஞான ரீதியாகவும், கலை நுணுக்கத்துடனும் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இம்மூவரும் ஒரே பண்புடைய கலையை சிருஷ்டிக்கிருர்கள் என்ருலும், இக் கலைகளை உயிர்ப்பிக்க இம்மூவரும் வெவ்வேறுவிதமான தமது பகுத்தறிவுத் திறமையை உபயோகிக்க வேண்டியிருக்கிறது என்பதே என்னுடைய கருத்தாகும்.

ஆகவேதான் தையற்கலை விஞ்ஞான ரீதியான கலையெனக் கூறுகிறேன்.

வெட்டத் தெரியாமல் தைத்துக் கொண்டிருப்பவர்கள் சிறிது காலத்திற்குள் சிறந்த உடைகளை வெட்டுபவராகி விடுகிருர்கள் என்பதை மற்ற



பொருள்கள் தயாரிப்பவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில் அவர்களை விட வேகமாகவும், சுலபமாகவும் குறைந்த செலவிலும் இவர் முன்னேறி விட்டார் என்றால், ஆச்சரியம் ஒன்றுமில்லை, அவருடைய ஆழ்ந்த சிந்தனையும் பகுத்தறிவின் திறமையுமே இதற்குக் காரணமாகும். மற்றவர்கள் எத்தனையோ விதமாக கருவிகள் உபயோகிக்க வேண்டியிருக்கிறது. இவர்கள் விஷயம் அப்படியல்ல, மட்டப்பலகையையும் இஞ்ச்டேப்பையும் பகுத்தறிவுடன் கணித ரீதியில் விஞ்ஞான முறைப்படி உபயோகிக்கத் தெரிந்துக் கொண்டால் போதுமானது. ஆகவேதான் மற்ற கலைஞர்களைவிட உலகத்தில் தையற்கலைஞர்கள் அதிகமாய் இருக்கிறார்கள். ஒரு தையற் கலைஞன் முன்னேற வேண்டுமானால் ஒவ்வொருவருடைய உடலமைப்பிற்கு ஏற்றபடி வெட்டுவதற்கும், மாதிரிகள் சித்தரிப்பதற்கும் (டிசைன்) திறமைவேண்டும். இல்லையேல் தைப்பவர் வெட்டுபவராகவும் வெட்டுபவர் தைப்பவராகவும் மாறி அவதிப்படவேண்டும். ஒவ்வொருவரும் துணி வெட்டுபவர்களுக்கு (கட்டர்) ஊதியம் அதிகமாக இருக்கிறது என்ற ஒரே காரணத்தால் ஆய்ந்தோய்ந்து பாராமல் அரைகுறையாகக் கற்றுக்கொண்டு அவதிப்படுகிறார்கள். துணிகள் வெட்டுதல் என்பதோ அல்லது மாதிரிகள் (டிசைன்) வரைதல் என்பதோ சுலபமான காரியமல்ல. அதற்கு பகுத்தறிவு மட்டும் போதாது. கலை நுணுக்கத்துடன் கணிதரீதியில் கற்றிருக்கவேண்டும் என்பது மட்டுமல்ல முக்கியமாகப் பொறுமையும் வேண்டும். பொறுமையிருந்தால்தான் இத்தொழிலில் பெருமையடைய முடியும்.

(தொடரும்)

பம்பாய் தமிழ்ச் சங்கம்

★

பம்பாய்த் தமிழர்களின் பாஷாபிமானத்தின் அறிகுறியாக எழுந்த தமிழ்ச் சங்கம் பதின்மூன்று ஆண்டுகளாக கலை இலக்கியம் முதலியதுறைகளில் இடைவிடாத சேவை செய்து வருகிறது. சங்கத்தின் ஆதரவில் தமிழ்ப் புத்தகசாலையும், இலக்கிய நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. தவிர அவ்வப்போது நாடகங்கள், நாடக விழாக்கள் நிகழ்த்துதல், வள்ளுவர், கம்பர், பாரதி, டாக்டர் ஐயர் முதலிய தமிழ்ப் புலவர்களது விழாக்களைக் கொண்டாடுதல், இலக்கிய வகுப்புக்கள், கண் காட்சிகள் நடத்துதல், தமிழறிஞர்களை வரவேற்று விரிவுரைகள் நிகழ்த்த ஏற்பாடு செய்தல், புத்தகங்கள் வெளியிடுதல் — ஆகிய பணிகளில் ஈடுபட்டு வருகிறது. இத்தகைய சங்கத்திற்கென தனி இடம் இல்லாத குறையைப் போக்கும் நோக்குடன் கட்டிட நிதி திரட்ட இவ்வருடமும் நாடக விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சென்ற இரண்டு ஆண்டுகளாக நாடக விழாவில் பங்கு கொண்ட ஸ்ரீ டி. கே. எஸ். சகோதரர்கள் இவ்வாண்டும் தங்களது நாடகங்களை நடிக்கவும் "எது வாழ்வு" என்ற புதிய நாடகத்தை அரங்கேற்றவும் இசைந்துள்ளனர். மே 1-ம் தேதியிலிருந்து 5-ம் தேதிவரையில் நடக்கவிருக்கும் நாடக விழாவிற்கு பேராதரவளித்து கட்டிட நிதிக்கு உதவிபுரியுமாறு கலையபிமானிகளை வேண்டிக்கொள்ளுகிறோம்.



" சுதேசமித்திரன் " லண்டன் பிரதிநிதியான மிஸ்டர் எச். எச். பென்னெட்டும் அன்னாரின் மனைவியும் 8-ந்தே 'மித்திரன்' காரியாலயத்துக்கு விஜயம்செய்தபோது எடுத்த படம். ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸனும் விளம்பர இலாகாமானேஜர் ஸ்ரீ என். ராமஸ்வாமியும் காணப்படுகின்றனர்.

கலா மண்டபம்

'ஐயப்பன்' நாடகம்

★

ஐயப்பனைப் பற்றி மலையாளத்தில் மகா பிரசித்தம். ஆனால் வெகு நாள் வரையில் தமிழ்நாட்டார் ஐயப்பனைப் பற்றி அறியாமலே இருந்து வந்தார்கள். இந்தக் குறையை நவாப் ராஜமாணிக்கம் நீக்கினார். திருவனந்தபுரத்தில் வருஷக் கணக்கில் இந்த நாடகத்தை ஆடினார். சில குழந்தைகளுக்கு ஐயப்பன் விபூதியைத் தடவி வியாதிகளையும் தீர்த்து வைத்தார். இவற்றால் நவாப் ராஜமாணிக்கம் கலைஞரா மந்திரவாதியா என்ற சந்தேகம் கூட பலருக்கு ஏற்பட்டது. ஏனென்றால் நாடகமாடும் மனிதன் பக்திமானாயிருக்க முடியாது என்று ஜனங்கள் நினைத்தார்கள். கலைஞன் பக்திமானாயுமிருக்கலாம், இருக்க வேண்டும். அப்படியிருந்தால் நாடகத்தில் வசூலையும் சமூகத்தில் நற்பெயரையும் உயர்ந்தவர் நட்பையும் பெறலாம் என்பதை நவாப் ராஜமாணிக்கம் நிரூபித்தார். அவர் அப்படி நிரூபிப்பதற்கு பேருதவியாக இருந்தவர் சபரிமலை ஐயப்பன். 'சாமியே சரணம் ஐயப்பா' என்று ராஜமாணிக்கம் திருவனந்தபுரம் நாடக மேடையில் கிளப்பிய கூச்சல் தமிழ்நாடு வரையில் கேட்டு தமிழ் நாட்டிலும் ஐயப்பனைப்பற்றிய பக்தி வளரலாயிற்று.

அந்த ஐயப்பன் நாடகம் இப்பொழுது காங்கிரஸ் மைதானத்தில் ஸ்டேஜ் கம்பெனியாரின் ஆதரவில் நடைபெற்று வருகிறது. இந்த நாடகத்தில் வழக்கம் போல் அற்புதமான சீன் ஜோடனைகளை நவாப் ராஜமாணிக்கம் செய்திருக்கிறார். இந்திரன் ஐராவதத்தில் வருதல், ஐயப்பன் சிங்கத்திலேறி புலிக் கூட்டம் தொடர நகர பிரவேசம் செய்தல் முதலிய காட்சிகள் அற்புதம். இத்துடன் கஷ்டமான சபரிமலை யாத்திரையில் அடியார்கள் காவடி எடுத்துச் சென்று 18 படிகளைக் கடந்து ஐயப்பன் சந்நிதியை அடையும் காட்சியும் இந்நாடகத்தில் தத்ரூபமாக அமைத்திருக்கிறது.

இந்த நாடகத்தைத் துவக்கி வைத்த ஸர். ஸி.பி. ராமஸ்வாமி அய்யர் நவாப் ராஜமாணிக்கத்தின் பக்தியைப் பெரிதும் பாராட்டினார். அந்தப் பாராட்டுதலில் நாமும் கலந்து கொள்கிறோம்.

அந்த நாள்

அந்த நாளும் வந்திடாதோ என்று காத்திருந்த மக்களுக்கு 'அந்த நாள்' தமிழ்ப் புத்தாண்டு நாளன்று வரப் போகிறது. இப்படத்தின் திரைக் கதையை நடிகர் ஜாவர் சீதாராமன் எழுதியிருக்கிறார். இதில் சிவாஜி கணேசன், பண்டரி பாய், சூர்யகலா, மேனகா, ஜாவர் சீதாராமன் முதலிய பல பிரபல நடிகர்கள் நடித்திருக்கிறார்கள். இந்தப் படத்தின் ஒ[illegible] முக்கிய அம்சம் என்னவென்றால் இ[illegible] நாட்டியங்களோ பாட்டுகளோ கிடையாது.

'பெண் படுத்தும் பாடு'

'பெண் படுத்தும் பாடு' ஆண்களுக்குப் புதிதல்லவென்றாலும் அந்த மாதிர[illegible] ஒரு பெயரில் ஒரு நாடகம் நடக்கும் போது அதற்குப் போகாமல் இருக்க முடியாது. அப்படிப் போகாதிருந்தால் வீட்டிலுள்ள பெண்கள்படுத்தும்பாட்டை சகிக்க முடியாது. ஆகவே தியாகராயநகர் ரேணுகா மாதர் சங்கத்தார் மயிலை ஆர். ஆர். சபாவில் தமிழ் வருஷப் பிறப்பன்று (13-4-54)

'ஏ வி எம்'மின் 'அந்தநாளி'ல் இந்தக்காதலுண்டு. பண்டரி பாய்க்கும் சிவாஜி கணேசனுக்கும்

நடத்தவிருக்கும் பெண்படுத்தும் பாடு நாடகத்துக்கு கண்டிப்பாய் எல்லோரும் போய்ச் சேர வேண்டியதுதான்.

தியாகராயநகர் ரேணுகா மாதர் சங்கம் மாதர் முன்னேற்றத்தை முன்னிட்டு இலவசமாக ஹிந்தி தையல் வகுப்புகளை நடத்துவதுடன் விவாகம் செய்து வைக்கும் துறையிலும் பெற்ேறார்க்கு உதவுமென்று தெரிகிறது. இத்தகைய நல்ல சங்கத்திற்குப் பணம் திரட்டவே மேற்படி நாடகம் நடத்தப்படுகிறது. இந்த நாடகத்திற்கு சென்னை பிரதம நீதிபதி ஸ்ரீ பி. வி. ராஜமன்னார் தலைமை வகிப்பார்.

அஜந்தா ஓவியங்கள்

இந்தியாவுக்கு மாத்திரமன்றிபொதுபட உலகத்துக்கே பரம்பரைப் பொக்கிஷமாக விளங்குகிற அஜந்தா ஓவியங்களைப் பத்திரமாகப் பாதுகாப்பதற்காக இந்திய சர்க்கார் புராதன கலை இலாகா இப்போது தீவிர நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

அஜந்தா ஓவிய மரபானது சுமார் 2300 வருஷங்களுக்கு முற்பட்டது. அஜந்தாவில் கடைசியாகத் தீட்டப்பட்ட ஓவியங்கள் 1300 வருஷங்களுக்கு முன் வரையப்பட்டவையாகும். காலப்போக்கில் சேதமுற்றுலும் அவை உலகிலேயே மிகவும் ஒப்பற்ற எழில் மிக்க சித்திரங்களாக இன்னும் விளங்குகின்றன.

250 அடி உயரமுள்ள செங்குத்தான பாறைகளில் குடைந்தெடுத்த குகைகளின் சுவர்களின் இச்சித்திரங்கள் உள்ளன. பாறைச் சுவர்கள் அரை மைல் தூரத்துக்குப் பிறை வடிவில் அமைந்திருக்கின்றன. குகையிலுள்ள சில மண்டபங்கள் 60 அடி சதுரமான மேல் விதானத்திலும், தூண்களிலும் கூடச் சித்திரங்கள் வரைய இடமுள்ளபடி அவை பிரம்மாண்டமானவையாக இருக்கின்றன. ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திய சைத்ரிகர்கள் புத்தரின் எத்தனையோ அவதார சரித்திரங்களைச் சித்திரங்களாகத் தீட்டியிருக்கிறார்கள். உலகின் பல்வேறு காட்சிகளையும்—பூக்கள், செடிகள், பறவைகள், மனிதர்கள் முதலிய சகல ஜீவராசிகளையும் —அங்கே காணலாம். அக்காலத்திய மக்களின் நாகரீக வாழ்வைத் தெரிந்து கொள்வதற்கு அம்மக்களின் உடை, அணிஅலங்காரங்கள் உதவுகின்றன.

—சாண்டில்யன்.

பம்பாய்க் கடிதம்

★

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்னும் பழமொழியையும் அதன் உண்மையையும் நாம் எல்லோரும் அறியாமலில்லை. அப்படியிருந்தும், நோயற்று வாழ அத்யாவசியமான தேகப் பயிற்சியை சரிவரச் செய்ய சந்தர்ப்பமும் சாதனமும் கூடி அமைவது ஒரு சிலருக்கே. இந்த அதிர்ஷ்டத்தைப் பெற்ற சிலர் 1931-ம் ஆண்டில் செளபாதிக்கு அருகில் நடந்து வந்த ஒரு தேகப் பயிற்சி சாலையில் சேர்ந்திருந்தார்கள். அவர்களில் சினிமா நடிகர்களான ஜகதீஷ் செதி, பிருதிவி ராஜ், சன்கத பிரசாத், நயாம்பலி, ஜெய்ராஜ் முதலியவர்களை குறிப்பிட வேண்டும். இன்று வரை இவர்கள் திடகாத்ரமாக விளங்குகிறார்கள்.

ஜகதீஷ் செதி ஒரு நாள் மாலை தேகப்பயிற்சி செய்துவிட்டு வந்து கொண்டிருக்கும்போது ஓரிடத்தில் கூட்டமாக ஜனங்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து தானும் அங்கு சென்றார். கூட்டத்தின் நடுவே நின்று கொண்டிருந்த ஒருவன் இந்த ரக்ஷையை நீங்கள் அணிந்து கொண்டால் எந்த கஷ்டங்களும் உங்களை அணுகாது. எதிரியை எளிதில் வென்றுவிடலாம் என்று உரக்கக் கூவிக்

ஸ்ரீ ஜகதீஷ் செதி

கொண்டிருந்தான். அவனுடைய போலிப் பிரசாரத்தை சகிக்காத ஜகதீஷ் செதி அவனருகே சென்று சரி நீ ஒரு ரக்ஷையை அணிந்து கொண்டு என்னிடம் குத்துச் சண்டைக்கு வா. பார்ப்போம், உன் ரக்ஷையின் சக்தியை என்றார். உடனே அவன் தொடை நடுக்கங் கொண்டு நன்கு அவமானப்படுத்தப்பட்டவனாக அவ்விடத்தை விட்டு நகர்ந்தான். ரக்ஷை அவனுக்கு உதவி செய்யவில்லை.

இவ்விதமாக ஜகதீஷ் செதி தமது இளம் வயதில் பல அருஞ்செயல்கள் புரிந்திருக்கிறார். அவர் 1903-ம் வருஷம் ஜனவரி 15-ந் தேதி ஒரு சிறந்த பஞ்சாபி க்ஷத்திரிய குலத்தில் மூத்த குமாரராக பிறந்தார். பஞ்சாப் யூனிவர்ஸிடியில் கல்வி பயின்று 1928ம் ஆண்டில் பி. ஏ. பட்டம் பெற்றார். அவருடைய தகப்பனார் ஒரு வக்கீலாக இருந்ததால் ஜகதீஷ் செதியையும், அவர் வக்கீல் படிப்பிற்குச் சேர்த்தார். ஜகதீஷ் செதி தம் காலேஜில் நடந்து வந்த டிராமாக்களில் பங்கெடுத்துக் கொண்டு வந்தார். ஆகையால் சினிமாவில் சேர்ந்து நடிக்க வேண்டுமென்று ஆவல் அவருக்கு இருந்ததென்பதில் ஆச்சரியமில்லை.

திடீரென்று அவர் தகப்பனார் காலமானதும் ஜகதீஷ் செதி வக்கீல் படிப்பை விட்டு விட்டு சினிமாவில் சேர்ந்தார். அவர் வக்கீல் படிப்பு ஒன்றரை வருடங்கள் தான் நிலைத்தது. முதலில் பஞ்சாப் பிலிம் கம்பெனியில் காமரா மேனாக சேர்ந்தார். இச்சம்பவம் 1929ம் ஆண்டில் நடந்தது. படத்தில் நடிக்க ஆசைகொண்டிருந்த ஜகதீஷ் காமரா மேன் வேலையை விட்டுவிட்டுபம்பாய்க்கு வந்து ட்ரபில்ஸ் நெவர் கம் அலோன் என்ற படத்தில் ஒரு எக்ஸ்டிராவாகநடிக்க ஆரம்பித்தார். பிறகு ஜகதீஷ் பிலிம் கம்பெனியில் சேர்ந்த அவர் ஒரு முன்னேற்றத்தையும் காணவில்லை. அதற்குப் பிறகு அரேபியன் நைட்ஸ் என்ற படத்தில் நடிக்கும் போது அவருக்கு கொஞ்சம் பெயர் கிடைத்தது. இவைகளெல்லாம் பேசாத படங்கள்.

இந்தியாவில் முதன் முதலாக ஆலம் ஆரா என்னும் படத்தில் ஸ்ரீ ஜகதீஷ் செதி நடித்தார். 1933-ம் வருஷம் அவர் தம் சகோதரியைப் பார்க்க கல்கத்தா சென்றார். அப்பொழுது, ஸ்ரீ பிரிதிவி ராஜ்ஜின் உதவியினால் அவர் நியு தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் ஒரு நடிகனாகச் சேர்ந்தார். எனக்கு கதாநாயகனாக நடிக்க வேண்டுமென்று எப்பொழுதும் ஆசையிருந்ததில்லை. நடிப்புக் கலையை காண்பிக்க வசதியுள்ள மற்ற பாத்திரங்களில் நடிக்கவே எனக்கு ஆவல் என்று ஸ்ரீ ஜகதீஷ் என்னிடம் அன்றொரு நாள் சொன்னார். அவர் நியு தியேட்டர்ஸில் வேலை செய்யும் போது பிரசிடெண்ட் 'முக்தி' தெருப் பாடகர் கபால்குண்டலா, தர்த்திமாதா, நர்தகி, அதிகாரி முதலிய படங்களில் நடித்து பெயரும் புகழும் பெற்றார்.

ஸ்ரீ ஜகதீஷ் செதி 1949-ம் வருஷம் பம்பாய்க்குத் திரும்பி வந்து சஜ்ஜன் மாபாப், ஸ்டேஷன் மாஸ்டர் முதலிய வெற்றிகரமான படங்களில் நடித்து இன்னும் புகழைச் சம்பாதித்தார். நான்கு வருஷங்களுக்கு முன் சொந்தமாக ஒரு கம்பெனியை ஆரம்பித்து 'ராத்கிராணி' 'ஜக்கு' என்ற படங்களை தயாரித்தார். அவர் தற்சமயம் 'பென்ஷனர்' என்ற படத்தை தயாரித்து வருகிறார். ஒரு சாதாரண நடிகராக ஆரம்பித்து இப்பொழுது ஒரு பட முதலாளியாகவும் டைரக்டராகவும் இருக்கிறார். அவருக்கு மூன்று குழந்தைகள் இருக்கிறார்கள்.

தி. மா. ராமச்சந்திரன்



அமெரிக்காவின் புது கண்டுபிடிப்பான "பறக்கும் சைகிள்" இது மணிக்கு 20 மைல் வேகத்தில் மேலே கிளம்பக்கூடியதாம். சுலபமாக மோட்டாரில் கொண்டுபோகக் கூடியதான இந்த சைக்கிள் சில என்ஜினீரிங் பரிசோதனைகளை நடத்துவதற்குத் தேவையான லேசான ஹெலிகாப்டருக்குப் பதிலாக உபயோகிக்கப்படுகிறதாம்.

(மேல்) செங்குத்தாக ஏறவும் இறங்கவும் கூடிய புதிய போர் விமானம். அமெரிக்க கடற்படையைச்சேர்ந்த இவ்விமானம் அதிக வேகமாகப் பறந்துபோர் நடத்தக்கூடியதாம். (கீழ்) டில்லி தமிழ்ச் சங்கத்தினாதரவில் 'ஸத்யமூர்த்தி தினம்' கொண்டாடப்பட்டது.



Regd. No. 2514

ஸ்ரீ K. S. ராமமூர்த்தி சர்மா

கணித்தது.

★

தனிப் பிரதி விலை அணா 4.

தபால் மூலமாக ... அணா 5.

மொத்த வியாபாரிகளுக்கு பஞ்சாங்க காப்பிகள் கீழ்க்கண்ட விற்பனை விகிதங்களில் சப்ளை செய்யப் படும். 100 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டர் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அனுப்பும் ஆர்டர்களும் நூற்றுக்கணக்கில்தான் இருக்கவேண்டும்.

சப்ளை விகித விலை விவரம்:

100 காப்பிகளுக்கு	...	ரூ. 24.
200 ,,	100-க்கு	ரூ. 23.
300 ,,	,,	ரூ. 22.
500 ,,	,,	ரூ. 21.
1000 அல்லது மேற்பட்ட காப்பிகளுக்கு	,,	ரூ. 20.

ஆர்டர்களை முன் பணத்துடன் சுதேசமித்திரன் ஏஜண்டுக்கோ அல்லது நேரில் ஆபீஸுக்கோ அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம். வி. பி. பி. கிடையாது.

Printed and Published by N. RAJAGOPALAN at the "Swadesamitran" Press, "Victory House", Mount Road, Madras, Editor: C. R. SRINIVASAN, B. A.

சுதேசமித்திரன்



மாமனார்:—" இத்தனை அழகான படங்களுக்கு மத்தியிலே திருஷ்டி பரிகாரம் மாதிரி ஏன் இந்தப் படத்தை மாட்டியிருக்கிறீர்கள். பார்க்க சகிக்கல்லையே!"

மாப்பிள்ளை:—" அட ராகவா! அது கண்ணாடி, ஸ்வாமி!"

WADESAMITRAN WEEKLY 25,ஏப்ரல்'54 4 As.



பொருளடக்கம்

Vol XXV] ஜயஞு சித்திரைமீ 13உ (25-4-54) [No 12

கூட்டுறவு வளர்ச்சி		3
காற்றுவாக்கிலே......	கரூர்	4
குதர்க்கம்	தரளம்	5
பரிவும் பிரிவும்	ஸி. ராஜப்பா	6
குடும்பம்—தொடர்கதை	ர வேங்கட ரத்தினம்	11
அன்னே	ரங்கநாயகி	:9
கூந்தல் அழகு	பிலோ ஹிருதயநாத்	23
தண்டனே	ப. ரா	24
வரகவி வேதாந்தம்	பரசுராம்	32
சோதிடம் பலித்தது	தே. வீரராகவன்	35
அனுமந்தன் குன்று	சந்தனு	38
சாரணர் உலகம்	சித்தார்த்தன்	39
ஹிந்தி உலகம்	பண்டிட்ஜி	40
குடும்பவைத்தியம்	குச்சாமாமா	42
தையற் கலே	சுகுமார்	46
கலாமண்டபம்		47

'மித்திரன்' வாரப் பதிப்பில் கதைகளில் வெளியாகும் பெயர்கள் சம்பவங்கள் எல்லாம் கற்பனேயே அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

253



திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி கருட சேர்வை



அமெரிக்க ராணுவ உதவியால் காஷ்மீர் பிரச்னை மாறிவிட்டதாக பண்டித நேரு கருதுவது மிகவும் வருந்தத்தக்க விஷயம் என்று பாக் பிரதமர் ஜனாப் மஹமதலி கூறினார்.

சுதேசமித்திரன்
வாழிய செந்தமிழ் — வாரப்பதிப்பு — வாழ்க நற்றமிழர்

Vol XXV] ஜயஹு சித்திரைமீ 13உ ✯ 1954ஹு ஏப்ரல்மீ 25உ [No 12

கூட்டுறவு வளர்ச்சி

☆

இந்நாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் மூலஸ்தானம் நமது ராஜ்யமே. இப்பகுதியைப்போல் அவ்வியக்கம் விசேஷமாக வளர்ச்சியடைந்திருப்பது எதுவுமில்லை. எனவே அவ்வியக்கத்தின் பொன் விழாவை மற்ற ராஜ்யங்களைவிட நாம் இன்னும் அதிக உற்சாகத்துடன் கொண்டாடியதில் ஆச்சரியம் எதுவுமில்லை. ஆரம்பத்தில் ஆங்காங்கு கிராமாந்திர மக்களுக்குக் கடனுதவி செய்யும் நோக்கத்துடன் சில கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டன. இப்போது அச்சங்கங்களின் எண்ணிக்கை பன்மடங்காகப் பெருகியிருப்பது மட்டுமின்றி, அவை பலவிதமான கூட்டுறவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது பெருமைக்குரிய ஒரு சாதனை என்றே சொல்லவேண்டும். சமீபகாலம்வரை ஆட்சி அதிகாரம் அந்நியரிடம் இருந்துவந்ததை நாம் நினைவுறுத்திக் கொள்ள வேண்டும். 1947-ம் ஆண்டில் நாடு விடுபட்டபின் இத்துறையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி இன்னும் துரிதமானது. அவ்வாண்டில் இருந்த கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் 11,375. ஆறு வருஷகாலத்தில் அவை 50-சத விகிதத்துக்குமேல் அதிகரித்திருக்கின்றன. ஆந்திர ராஜ்யப் பிரிவினைக்குமுன் தயாரித்த புள்ளி விவரப்படி 100-க்கு 70 கிராமங்களில் இச்சங்கங்கள் உண்டு. இச்சங்கங்கள் விவசாயிகளுக்கு வருஷமொன்றுக்கு 10- கோடி ரூபாய் வரை குறுகிய காலக்கடன் கொடுத்து உதவி வருகின்றன. மேலும் உணவுப்பொருள் கொள்முதல், பண்ட வினியோகம், வீட்டுக் கஷ்ட நிவாரணம், கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் ஸப்ளை, கைத்தறி ஜவுளி விற்பனை, பால் வினியோகம், விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் ஸப்ளை, மாஜி மரமேறிகளுக்குப் புனர்வாழ்வு முதலிய முக்கியமான துறைகளில் பல கூட்டுறவுச் சங்கங்கள் உருவான சேவை புரிந்து வருகின்றன.

பட்டணங்கள், கிராமங்கள் இரண்டின் தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்ய கூட்டுறவு இயக்கம் விசேஷமாகப் பயன்படும். இந்த உணர்வு நமது ஐந்துவருஷத் திட்டத்தில் ஒருவாறு பிரதிபலிக்கிறது. மக்கள் தங்கள் பொதுவான நல்வாழ்வுக்கு ஒருவருடனொருவர் நெருங்கி ஒத்துழைக்கவேண்டுமென்பது இதன் அடிப்படை. இவ்வாறு ஒத்துழைப்பதன் மூலம் தங்கள் இன்னல்களுக்குத் தங்கள் சொந்த முயற்சியின் மூலம் பரிகாரம் காண வேண்டுமென்ற உணர்ச்சியும், சமநோக்குடன் சேர்ந்து வேலை செய்யும் மனோபாவமும் வளர்வது இயற்கை. சென்னையில் பொன்விழாவை ஆரம்பித்து வைத்த ஸ்ரீ பி. வி. ராஜமன்னார் எடுத்துக் காட்டியதுபோல், நமது சமுதாயத்தில் ஜனநாயக தத்துவத்துக்கு கூட்டுறவு வளர்ச்சியைப்போல் ஆக்கமளிக்கக்கூடியது எதுவுமில்லை. இன்று தொழில் துறையில் காணும் பல சிக்கல்களுக்கும், கூட்டுறவு இயக்க வளர்ச்சி பரிகாரமளிக்கக்கூடும். இதற்கு உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களும், பண்டங்களை வாங்கி உபயோகிப்போரது கூட்டுறவுச் சங்கங்களும் விசேஷமாக வளர்ச்சிபெறவேண்டும். உற்பத்தியாளர் சங்கங்கள் இப்போதைக்குக் கைத்தொழில் துறையில் ஆக்கம் பெறக்கூடும். ஏற்கெனவே கைத்தறித் தொழில்வகையில் இத்தகைய சங்கங்கள் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. மற்ற கைத்தொழில்களுக்கும் இவ்வியக்கத்தை விஸ்தரிப்பதற்கான சாத்திய-சாதனங்களை அதிகாரிகள் ஆராயவேண்டும். இவை மட்டுமின்றி, நகரங்களிலும், கிராமங்களிலும் கூட்டுறவு வளர்ச்சிக்கான வழிகள் அனந்தம். குறிப்பாக கிராமங்களில் இத்தகைய ஸ்தாபனங்கள் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்யும் பரீட்சையை இன்னும் பெரிய அளவில் ஆரம்பித்து நடத்தவேண்டுமென்று விரும்புகிறோம். இத்தகைய துறைகளில் நம் நாட்டிலும், வெளியிடங்களிலும் ஏற்பட்டுள்ள, இனி ஏற்படும் அனுபவத்தை ஆராய்ந்து இவ்வியக்கத்தில் ஈடுபட்டவர்களுக்கு வழிகாட்ட ஒரு நிரந்தர ஆராய்ச்சி ஸ்தாபனம் ஏற்படவேண்டுமென்று ஸ்ரீ ராஜமன்னார் கூறியுள்ள யோசனையை நாம் ஆதரிக்கிறோம்.

காற்றுவாக்கிலே..

எழுத்தாளர் மகாநாட்டை ஆரம்பித்து வைக்கப் பண்டித நேரு ஓடோடி வந்த காரணம் என்ன? திடீரென்று தமிழ்நாட்டின்மீது அவருக்கு அபார 'காதல்' ஏற்பட்டு விட்டதா? அல்லது 20 வருஷத்துக்குள் கனக சபேசனைக் கண்டு காணிக்கை செலுத்தவேண்டுமென்ற பிரார்த்தனையா? இல்லை, சிலர் சொல்லுவதுபோல, ராஜாஜியுடன் கால் மணி நேர அளவளாவலை மறைக்கும் நாடகமா?

அதெல்லாம் ஒரு காரணமும் இல்லை கத்திரிக்காயுமில்லை. அவருக்குத் தெரியும் எழுத்தாளரின் கைவேலையைப்பற்றி நன்ருக. 'நல்லதைப் பொல்லாதெனச் சாதித்து, நாயையும் பசுங்கிளியாக்க வல்லவர்' என்று. கூரிய வாளை விட ஸர்வ வல்லமை பொருந்தியதல்லவா பேனு முனை!

இப்படி எவர் சொன்னுர்; ஏன் சொன்னுர்; எதற்காகச் சொன்னுர் என்று கேள்வி மேல் கேள்வியாக அடுக்கிக்கொண்டே போகாதீர்கள். எழுதுகோல் ஏந்தியவர், தன்னை 'ஒரு உதவாக்கரை'என்று ஒப்புக்கொள்ளுவாரா என ஏத்தாளி செய்யவும் தேவையில்லை. ஒரே ஒரு பரீட்சை போதுமே பேனுவின் சக்தியை நிரூபிக்க. 'அரசன் அன்று கொல்வான்' என்பதைப் போன்றதல்லவா வாள் வீச்சு. 'தெய்வம் நின்று கொல்லும்' என்பதை ஒத்தது பேனு முனை. இப்பொழுதாவது நம்புகிறீர்களா அது ஸர்வ வல்லமை பொருந்தியது என்று?

இல்லாவிடில், ஒரு புத்தகத்தைப் பிரசுரித்து ஹைட்ரஜன் குண்டை எதிர்க்கப் போவதாகச் சொல்வாரா ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட். அதில் என்ன விஷயம் அடங்கியிருக்கும் தெரியுமா? ஹைட்ரஜன் குண்டு தயாரிப்பு, பரீட்சையை ஆட்சேபித்து உலகெங்குமிருந்து வந்த கடிதங்கள்! பேனு மன்னர்கள் அவற்றில் தங்கள் கைவரிசை முழுவதையும் காட்டியிருப்பர் என்பதில் சந்தேகமேயில்லை. விஞ்ஞானிகள் தப்பித் தவறி அதைப் படித்தார்களோ, வந்தது அனர்த்தம்—அதாவது குண்டு உற்பத்தி வேலைக்கு!

பலாத்காரத்திலேயே ஊறி, ஊதிப்போயிருக்கும் கம்யூனிஸ்டுகளுக்குக்கூட பேனுவின் மஹாத்மியத்தில் அலாதி நம்பிக்கையுண்டு. அமெரிக்காவோ அணுகுண்டுகளையும் விமானங்களையும் விழுந்து விழுந்து குவிக்கிறது. நம் தோழர்களோ சமாதானத்துக்கு ஆதாவாக கையெழுத்துகளை வாங்கி வாங்கிக் குவிக்கின்றனர்! வேறு யாரைச் சொன்னுலும், கம்யூனிஸ்டுகளை எவரும் ஏமாளிகள் என்று சொல்லமாட்டார்களே.

அஹிம்சாவாதிகள் அபிப்பிராயம் எப்படியிருக்குமென நாம் சிந்திக்கக்கூட அவசியமில்லை. எழுதுகோல்தான் ஏற்றமானது என காந்திஜியை மேற்கோள் காட்டி காங்கிரஸார் நம்மை நெக்குருகச் செய்வர். சென்னை சட்டசபை காங்கிரஸ் அங்கத்தினர்களோவெனில், வாளைவிட கொடிய அஸ்திரம் இது என நிரூபித்துக் காட்டுவர்! ராஜாஜி தலைமைக்கு எதிராக கையெழுத்துகளைத் திரட்டி, மந்திரி சபைக்கு ஆட்டங் கொடுக்கவில்லையா? ஆதாவு பட்டியலிலும் கையொப்பம் சாத்தி, எதிர்ப்புத் தலைவரை முதுகில் குத்துண்டவர்போல் செய்யவில்லையா! கொடுவாளுக்கு இத்தகைய சக்தி இருக்கமுடியுமா, சொல்லுங்களேன் பார்ப்போம்.

அப்படியானுல் காமராஜர் மந்திரி சபை மீதும் இதே அஸ்திரம் தொடுக்கப்படாமலிருக்குமா என்ற கேள்வி இயற்கைதான். அதற்குள் அவசரப்பட்டு ஆவலுடன் துடித்தால் என்ன செய்கிறது. தமது கோஷ்டியில் எவருக்கும் காமராஜர் மந்திரிப் பட்டம் கட்டாததால் அவர்களுக்கு ஆத்திரம்தான். பழைய கள்ளையே புது மொந்தையில் நிரப்பியிருப்பதால் எரிச்சல்தான். ஏதோ முப்பது கையெழுத்து சேகரித்து விட்டார்களென அரசல் புரசலாகக் காதில் விழுவதை 'அதிகார பூர்வமாக' எப்படிச் சொல்வது?

இந்த விவகாரம் எப்படியாவது போகட்டும். அஹிம்சா பாசறையிலுள்ள அதி அற்புத அஸ்திரத்திலொன்று 'கையெழுத்து வாங்குதல்' என்பதை மட்டும் நினைவில் கொண்டால் போதுமானது. இப்படியே அவரவர்கள் மதிநுட்பத்துக்கு தகுந்தவாறு சாத்வீக ஆயுதங்களைக் கண்டுபிடித்து இந்தப் பயித்தியக்கார உலகுக்கு வழங்கி வந்தால் காந்திஜியின் ராமராஜ்யக் கனவு நினைவாகும்.

பிரபல பிரஞ்சு அறிஞர் எமிலி ஸோலா சொல்லியிருப்பதுபோல "பிரதி மனிதனும் தனக்கு உரித்தான சிறந்த வழியில் நாட்டிற்கு சேவை புரிகிருன். இதில் பேனு மன்னர்கள் வழி ஒரு விதம். போர் வீரனின் வழி இன்னெரு விதம்".

—கருர்.



இந்தியாவிற்குப் பர்மா பட்டிருந்த கடனில் பல கோடி ரூபாய்களைத் தாராள மனதுடன் தள்ளுபடி செய்து விட்டதாக நிதி மந்திரி ஸ்ரீ தேஷ்முக் பார்லிமெண்டில் கூறினர்.

—புதுடில்லி செய்தி.

இருந்தாலும், பர்மா இந்தியாவிற்குப் பெரிதும் 'கடன் பட்டிருக்கிறது' என்பதை யார்தான் தட்டிப்பேச முடியும்!

* * *

போர்ச்சுகீஸிய ராணுவத்தினர் கோவாவில் ஸான்க்வாமின் கோவிலில் இந்தியப் பூசாரியை அடித்துத் துன்புறுத்தினர்.

—பம்பாய் செய்தி.

இந்த நிகழ்ச்சிக்குத் 'தூபம்' போட்டது போர்ச்சுகீசிய சர்க்காராகவிருக்குமோ?!

* * *

"ஹைட்ரஜன் குண்டின் மூலம் நாகரீகத்திற்கே தலைவலி கண்டிருக்கிறது" என்று தொழிற்கட்சித் தலைவர் ஸ்ரீ அட்லி கூறினர்.

—லண்டன் செய்தி.

'இந்தத் தலைவலியைப் போக்க எத்தகைய 'பாம்' தயாரிக்கப்படவேண்டும்' என்று ஒரு வினு வெடியைப் போடுகின்றுர் தலைவலி 'பாம்'களுக்கே தன்னை அர்ப்பணித்துள்ள ஒரு சதா தலைவலிப் பேர்வழி!

* * *

ஜப்பானில் காகிதமே நீண்ட காலமாகத் தெய்வமெனக் கொண்டாடப் பட்டு வருகிறது!

—டோக்கியோ செய்தி.

'இங்கே மட்டும் என்னவாம்? கரன்ஸி 'காகித'ங்கள் தெய்வமும், அதற்கு மேலாகவும் பிரசித்தி பெற்றிருக்கின்றனவே!' என்று கூறுகிருர் ஸ்ரீமான் காசில்லாக் கனகரத்தினம்!

* * *

உலக பஞ்சாங்கத்தைத் திருத்தும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டிருக்கிறது.

—புதுடில்லி செய்தி.

பிரஸ்தாப முயற்சியை எதிர்த்துக் கணபாடிகள் கமிஷன் ஒன்று புதுடில்லியை நோக்கிப் படையெடுக்கப் போவதாகவும் கேள்வி!

* * *

புதிதாக ஏற்பட்டுள்ள கீழ்வங்க ஐ. மு. சர்க்காருக்கும், பாகிஸ்தான் மத்திய சர்க்காருக்கும் இடையில் உப்பு விஷயத்தில் லடாய் ஏற்பட்டிருக்கிறது.

—கராச்சி செய்தி.

எனவே, இரண்டு சர்க்கார்களும் பரஸ்பரம் 'கரித்துக் கொட்டிக்கொள்ள' இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்!

—தரணம்.

ரயில் நேரங்கள்

*

சென்ட்ரல் ஸ்டேஷன்

புறப்படும் நேரம்

கல்கத்தா மெயில்	இரவு 8–20
கிராண்ட் டிரங் எக்ஸ்பிரஸ்	காலை 9–15
பூரி பாஸஞ்சர்	இரவு 7—0
பெஜவாடா பாஸஞ்சர்	காலை 7—5
பம்பாய் மெயில்	இரவு 9—0
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை 7–30
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	காலை 9—5
ரேணிகுண்டா பாஸஞ்சர்	மாலை 5–25
” ”	——
பெங்களூர் மெயில்	இரவு 8–45
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	பகல் 12–35
பெங்களூர் பாஸஞ்சர்	காலை 6–10
பெங்களூர் பாஸஞ்சர்	இரவு 9—5
அரக்கோணம் பாஸஞ்சர்	காலை 7–50
” ”	மாலை 2—5
” ”	மாலை 6–42
” ”	இரவு 9–35
மங்களூர் எக்ஸ்பிரஸ்	இரவு 7–45
கொச்சின் எக்ஸ்பிரஸ்	மாலை 6—5
நீலகிரி எக்ஸ்பிரஸ்	இரவு 8–15
ஜோலார்பேட்டை பாஸஞ்.	காலை 11–25
விசாகை பாஸஞ்சர்	இரவு 10–45
ஜனதா எக்ஸ்பிரஸ் 3–வது வகுப்பு-மட்டும் சென்னை–பம்பாய் (பிரதி வியாழன் மட்டும்)	பகல் 1–45

சென்னை–இட்டார்ஸி வாரம் இருமுறை ஜனதா–பார்சல் எக்ஸ்பிரஸ் (மூன்ரும் வகுப்பு மட்டும்) திங்கள், வியாழன் பகல் 11–10–க்கு புறப்படும்.

வரும் நேரம்

கல்கத்தா மெயில்	காலை 7—0
கிராண்ட் டிரங் எக்ஸ்பிரஸ்	மாலை 5–25
பூரி பாஸஞ்சர்	காலை 9—0
பெஜவாடா பாஸஞ்சர்	இரவு 8–35
பம்பாய் மெயில்	காலை 6—5
பம்பாய் எக்ஸ்பிரஸ்	இரவு 7–15
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	மாலை 3–15
ரேணிகுண்டா பாஸஞ்சர்	காலை 9–46
” ”	இரவு 9—0
அரக்கோணம் பாஸஞ்சர்	காலை 7–58
” ”	மாலை 4–20
” ”	——
” ”	மாலை 7–29
பெங்களூர் மெயில்	காலை 6–25
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	பகல் 3–0
பெங்களூர் பாசஞ்சர்	இரவு 8–0
பெங்களூர் பாசஞ்சர்	காலை 5–45
மங்களூர் எக்ஸ்பிரஸ்	காலை 7–20
கொச்சின் எக்ஸ்பிரஸ்	காலை 8–25
நீலகிரி எக்ஸ்பிரஸ்	காலை 7–10
ஜோலார்பேட்டை பாஸஞ்.	பகல் 1–15
விசாகை பாஸஞ்சர்	காலை 5—0
ஜனதா எக்ஸ்பிரஸ் (3–வது வகுப்பு-மட்டும்) பம்பாய்–சென்னை. (பிரதி திங்கள் மட்டும்)	பகல் 3–20

இட்டார்ஸி–சென்னை வாரம்இருமுறை ஜனதா பார்சல் எக்ஸ்பிரஸ் (மூன்ரும் வகுப்பு மட்டும்) புதன், சனிக்கிழமைகளில் காலை 10–25–க்கு வரும்.

எழும்பூர்

புறப்படும் நேரம்

மெயின் லைன்	
செங்கோட்டை பாஸஞ்சர்	காலை 7–40
இந்தோ–சிலோன் எக்ஸ்.	இரவு 8—0
திருவனந்தபுரம் பாஸஞ்சர்	இரவு 8–35
விருதுநகர் பாஸஞ்சர்	இரவு 10—5
விழுப்புரம் பாஸஞ்சர்	மாலை 3–50
கார்டு லைன்	
தனுஷ்கோடி பாஸஞ்சர்	காலை 10–45
திருவனந்தபுரம் எக்ஸ்.	இரவு 8–20
திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்	இரவு 7–15
தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்	இரவு 9–30
பீச்	
காஞ்சிபுரம் பாஸஞ்சர்	மாலை 5–32
” ”	மாலை 6—1

வரும் நேரம்

மெயின் லைன்	
செங்கோட்டை பாஸஞ்சர்	இரவு 7–10
இந்தோ–சிலோன் எக்ஸ்.	காலை 7–25
திருவனந்தபுரம் பாஸஞ்சர்	காலை 5–20
விருதுநகர் பாஸஞ்சர்	காலை 5—0
விழுப்புரம் பாஸஞ்சர்	காலை 11–15
கார்டு லைன்	
தனுஷ்கோடி பாஸஞ்சர்	மாலை 3–10
திருவனந்தபுரம் எக்ஸ்.	காலை 6—0
திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்	காலை 7—0
தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்	காலை 5–40
பீச்	
காஞ்சிபுரம் பாஸஞ்சர்	காலை 9–22
” ”	காலை 9–52

பரிவும் பிரிவும்

ஸி. ராஜப்பா

கழுத்தில் ஒரு பாசி மணிச் சரம்; காதுகளில் சிவப்பு நிற பவளங்கள் தொங்கிக் கொண்டிருந்தன; உடம்பில் இறுக்கிப் பிடித்தபடி ஒரு நீல நிறச் சட்டை; நெற்றியில் குங்குமத்தால் தீட்டப்பட்டிருந்த நாமம். இத்யாதி அலங்காரங்களுடன் அவன் கையில் வைத்திருந்த கோலுக்கு ஏற்றபடி ஆடிக்கொண்டிருந்தது அந்தக் குரங்கு.

அவன் ஒரு குரங்காட்டி. அவன் கையிலிருந்த கயிற்றுடன் இணைக்கப்பட்டிருந்தது அந்தக்குரங்கு. தோளில் ஒரு பெரிய பையை மாட்டிக்கொண்டிருந்தான். அதில் தன் உடைமைகளைப் பத்திரப்படுத்தியிருந்தான் அவன். கையில் ஓர் தகரக்குவளை—குரங்கைப் பிடித்திருந்த கையில் ஒரு குச்சியும் இருந்தது.

எதிர்வீட்டு வாசலில் வேடிக்கை காட்டிக்கொண்டிருந்த அவன், தன் குரங்கையும் அதன் சேஷ்டைகளை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த ரஸிகர்களையும் இழுத்துக்கொண்டு என் வீட்டு வாசலுக்கு வந்தான்.

குரங்காட்டி போடும் இரைச்சலுக்கு மேல் அந்த சேஷ்டையை வேடிக்கை பார்க்க வந்திருந்த அந்தத் தெரு வாலில்லாத வானரங்களின் கூச்சல் அதிகமாயிருந்தது. செய்தித்தாள் படித்தபடி ஜன்னலருகில் நின்றுகொண்டே எதிர்வீட்டில் நடப்பவற்றைப் பார்த்துவந்த நான், அதே கும்பல் என் வீட்டு கம்பிக் கதவைத் திறந்துகொண்டு வந்துவிடவே திண்ணைப் பக்கம் வந்து நின்றேன். என்னைக் கண்டதும் குரங்காட்டி குரங்கை ஏவிவிட்டான்.

“டேய் ரங்கா! ஐயாவுக்கு சலாம் போடு! சலாம் போடுடா!” என்றான். அவன் சொல்வதை அது எப்படி புரிந்து கொண்டதோ? ஆதியில் தன் வர்க்கத்தைச் சேர்ந்தவன், நாகரீக வளர்ச்சியால் மேம்பாடடைந்து இன்று ‘ஐயா’ என்ற சொல்லுக்கு அருகதையாகிவிட்டானே.... தான் மட்டும் இன்னும் வானர ரூபமாகவே இருக்கிறோமே! என்ற ஏக்கம் அதன் பார்வையில் வெளிப்படுவது போலிருந்தது எனக்கு. குரங்காட்டி தன் திறமையை வெளிக்காட்ட விரும்பவில்லை; தன் அடிமையாக இருக்கும் வானரத்தின் திறமையை நிரூபிக்க விரும்பினான்! காரணம் அதன் உழைப்புதானே அவனுக்குப் பிழைப்பு! அதன் உழைப்புக்கு அது பெறும் கூலி, அதனை வளர்த்து அடிமையாகக் காத்து வரும் அவன் குடும்பத்தையே உயிர்வாழச் செய்கிறதென்றால்.... பெற்றபிள்ளை கூட இந்தக் காலத்தில் தன் பெற்றோரை தன்னைப் பெற்ற கடனுக்காகக்கூட சம்ரக்ஷிக்க மறந்து விடுகிறான்... ஆனால் அந்த வாயில்லாத பிராணி!.....தன் ஜீவனோபாயத்தைப்பற்றிச் சிந்திக்காமல் உழைத்துவருகிறது!

குரங்காட்டி குரங்கை லங்கா தகனம் தாண்டச் சொன்னான்; மாமியார் வீட்டுக்குத் தண்ணீர் எடுக்கச் சொன்னான்—கஜகர்ணம் போடச் சொன்னான்—தான் அடித் தொண்டையிலிருந்து பாடிய அபஸ்வரத்துக்கு அபிநயம் பிடிக்கச் சொன்னான். பகுத்தறிவில்லாத பிராணி, மனிதன் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் புரிந்துகொண்டு ஆடத்தான் செய்தது. ஆனால் அதேபோல் இரண்டு குரங்குகள் ‘கீச் கீச்’ சென்று தங்கள் பாஷையில் கத்தும்போது பகுத்தறிவுள்ள மனிதன் அவற்றின் பேச்சில் எதைப் புரிந்துகொள்ள முடிகிறது?

“டேய் ராஜா! நீயுமாடா சின்னக் குழந்தைபோல் வேடிக்கை பார்த்துண்டு நிற்கறே! போகச் சொல்லுடா அவனை! காலங்கார்த்தாலே நடுவாசலிலே கும்பல் கூடிண்டு,....அனாச்சாரம்! குரங்கையும் குட்டியையும் கொண்டு வந்து என்ன வேடிக்கை வேண்டிக்கிடக்கு!”—என் தாயார் வாசல் ரேழியில் நின்று கொண்டு முனகினாள். நான் “அம்மா! ஒருபிடி அரிசியைப் போட்டுவிடு! போய்விடுவான்!” என்றேன்.

குரங்காட்டியைக் குறித்துத்தான் நான் சொன்னேன். அதை அந்தக் குரங்கு எப்படிப் புரிந்து கொண்டதோ! தாவிக் குதித்துக் கொண்டுதகரக்குவளையுடன்ரேழியிலிருந்த என் தாயாரின் காலடியில் போய் நின்றது. குரங்காட்டியின் கையிலிருந்த கயிறு நீண்டுகொண்டே வந்தது. “சீ! சனியன்! இதைக் கூப்பிட்டுக் கொள்ளுடா! மூதேவி! மேலே பட்டுவிடும்போலிருக்கு! ஜெயம்! ஒரு பிடி அரிசியைப் போட்டு இந்தச் சனியனை விரட்டு!” என்று என் தாயார் ஏககாலத்தில் குரங்காட்டிக்கும் குரங்கை இழுத்துக்கொள்ளும்படிச் சொல்லிவிட்டு, அவனை சீக்கிரம் அனுப்பும்படி என் தங்கைக்கும் உத்தரவு பிறப்பித்தாள்.

குரங்கு தகரக் குவளையில் அரிசியை வாங்கிக்கொண்டு வெற்றிக் குறியுடன் திரும்பியது. அதை வாங்கி வரும்வரை பொறுமையாய்க் கிடந்த அந்தக் குரங்காட்டி அது தகரக் குவளையைத் தன் அருகில் கொண்டு வந்ததோ இல்லையோ குவளையை வெடுக்கென்று பறித்து அரிசியைத் தன் தோளிலிருந்த பையில் கொட்டிக் கொண்டான். மீண்டும் காலிக் குவளையை குரங்கினிடம் கொடுக்கவும் அது அவன் கொடுப்பதை லட்சியம் செய்யாமல் எங்கோ பார்த்தது.

குரங்காட்டி கோபத்துடன் அதன் தலையில் கையிலிருந்த குச்சியால் ஒரு அடி அடிக்கவும் விதியை நொந்துகொண்டு கிளம்பியது அந்த ஜீவன்.

உண்மையில் குரங்கின் வேடிக்கைகளை மட்டும் நான் அந்தச் சில நிமிஷங்களில் கண்டு ரஸிக்கவில்லை. அதன் மனோபாவம் எப்படியிருக்கும் என்பதையும் என் மனக் கண் படம் பிடித்துப் பார்த்துக் கொண்டுதானிருந்தது.

“பாவிப்பயல் அந்தக் குரங்காட்டி! தன் பிழைப்புக்கு வாயில்லாத ஒரு ஜீவனை வைத்து தன் கோலுக்கு ஏற்றபடி ஆடச்செய்து சம்பாதிக்கிறான். உண்மையில் பாடுபடும் அதை அவன் கவனித்து வளர்ப்பானோ! அதன் பசியை அவன் அறிவானோ! அவன் குடும்பம் வாழவேண்டுமென்ற நினைப்பில் அவன் அதை வளர்த்து வேடிக்கை காட்டுகிறானே தவிர, அதன் வேடிக்கையின் பரிசாக அந்தக் குரங்கு பெறும் பொருள்களை அதை அனுபவிக்க விடுவானோ! பூரணமாக அனுபவிக்க அனுமதிக்காவிடினும், ஓரளவுக்காவது அதற்கு அனுபவிக்க உரிமையுண்டு என்பதை அவன் உணர்வானோ!—” என் சிந்தனை அந்தக் குரங்கைப் பற்றி விரிந்து சென்றது. என் மனக் குரங்கு, இதேமாதிரி சிந்தனைக் கிளைகளை விட்டு இறங்காமல் கிளை விட்டுக் கிளைக்குத் தாவிக்கொண்டே யிருந்தது.

“ராஜா! வெந்நீர் ஆறிப்போகிறது. சீக்கிரம் குளித்துவிட்டு வா! எனக்கும் ஆபீசுக்கு நாழியாடுத்து! உனக்காகத்தான் சாப்பிடக் காத்துக்கொண்டிருக்கிறேன்!” என்று உள்ளேயிருந்து வந்த என் தகப்பனார் பேச ஆரம்பிக்கவே என் சிந்தனைத் தொடர் அறுபட்டது. கையில் வைத்திருந்த செய்தித் தாளை மடித்துப் போட்டுவிட்டுக் குளிக்கக் கிளம்பினேன்.

பதினோரு மணி சமயம். சைக்கிளைத் தெருத் திருப்பம் வரை மெதுவாக மிதித்தபடியே காரியாலயத்துக்குச் சென்றுகொண்டிருந்தேன். குரங்காட்டி அடுத்த தெருவில் குரங்கை ஆட்டிக் கொண்டிருந்தான். அவன் இருந்த வீட்டுக்குத் தொர்ட்டாற் போலிருந்த வெற்றிலை பாக்குக் கடைக்காரன் குரங்கின் வேடிக்கைகளைக் கண்டு அதற்குப் பரிசாகவோ, இல்லை அதன் மீது பரிதாபப்பட்டோ ஒரு வாழைப் பழத்தை எடுத்துக் கொடுத்தான். குரங்கு ஆவலுடன் அதைப் பெற்றுக்கொள்ளக் குதித்தது. ஆனால் அதை ஆட்டிவைத்துக் கொண்டு வரும் ‘மனிதக் குரங்கு’ தன் கையால் பழத்தைப் பறித்துக்கொண்டு அதைத் தன் தோளில் தொங்கும் பையினுள் வைத்துக்கொண்டு விட்டது! சைக்கிளில் சென்றபடி இக்காட்சியைக் கண்ணுற்ற என் மனம் சற்று முன் நான் குரங்காட்டியைப்பற்றிக் கொண்டிருந்த அபிப்பிராயத்தை ஊர்ஜிதப்படுத்திவிட்டது. காரியாலயத்துக்கு நேரமாகிவிடவே என்னால் மீண்டும் திரும்பிப் போய் அந்தத் தடியனுடன் தர்க்கம் செய்ய இயலவில்லை. வேறு ஏதாவது வேலையாகப் போகும்போதுகூட இந்தமாதிரி நடந்திருந்தால் நான் அவனை லேசில் விட்டிருக்க மாட்டேன். அந்தக் குரங்கு எப்படி எஜமானனுக்கு பயப்படுகிறதோ அதுபோல் அல்லவா அந்தச் சமயம் நான் என் எஜமானனுக்குப் பயப்படவேண்டியிருக்கிறது!

யாறுபகல இடைவேளையில்கூட என் மனதில் குரங்காட்டியின் செயல்கள் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. "சீ! போயும் போயும் ஒரு குரங்காட்டியைப்பற்றி நான் எதற்கு ஓய்வில்லாமல் சிந்திக்க வேண்டும்! எத்தனையோ வீடுகளில் வாங்கின அரிசியில் ஒரு பிடி நம் வீட்டைச் சேர்ந்தது! அவன் இதையெல்லாம் நினைக்கவா போகிறான்! அவனைப்பற்றி ஓயாமல் நாம் மட்டும் எதற்கு சிந்திக்க வேண்டும்!' இத்தகைய எண்ணம் மனதில் எழுந்தபோதிலும், ஆணித்தரமாக மனதில் பதிந்துவிட்ட அந்தச் சிந்தனை மனதைவிட்டகலவில்லை.

மாலையில் வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்த நான் வழக்கப்படி அந்தப் புளிய மரத்தடியைப் பார்த்துக்கொண்டே வந்தபோது அந்தப் பிச்சைக்காரக் கும்பலுக் கிடையில் புதிதாக ஒரு குரங்காட்டியின் குடும்பமும் சமையல் செய்வதில் ஆழ்ந்திருந்தது. ஊர்க் குப்பைக் காகிதங்களும், விறகுச் சுள்ளிகளும் தீக் கொழுந்துவிட்டு எரிந்தபடி அந்தக் கும்பலுக்கு 'நள பாகத்தை'த் தயாரிக்க உதவிக்கொண்டிருந்தன.

அதோ. காலையில் பார்த்த அதே குரங்காட்டி; அவனருகில் அவன் மனைவியும், இரண்டு குழந்தைகளும் சூழ்ந்துகொண்டு அவன் தேடிவந்துள்ள பொருள்களை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். அதோ—அவனது பிழைப்புக்கு வழிகாட்டும் உழைப்புக் கருவி, ஒரு மூலையில் கட்டப்பட்டுக் கிடந்தது. அதைச் சுற்றி ஐந்தாறு வாழைப் பழத் தோல்கள்தான் கிடந்தன. அதை வெகு சுவாரஸ்யமாக அது தின்னும் தோரணையிலிருந்து அதற்குக் கிடைத்துள்ளது பழத்தின் தோல்மட்டும்தான் என்பதை பறைசாற்றியது.

உடல் தேய உழைக்கும் உழைப்பாளியின் ரத்தத்தை உறிஞ்சிவிட்டு, சக்கையை வெளியே தள்ளும் வர்க்கம்தானே! அதே கொள்கையைத்தான் வாழைப்பழம் சமாச்சாரத்திலும் காட்டியுள்ளான் குரங்காட்டி!

நான் மெதுவாக சைக்கிளைத் தள்ளிக்கொண்டே நடந்தபடி இக்காட்சியைக் கவனித்தேன். ஆனால் என் சிந்தனையில் வட்டமிடும் குரங்காட்டியோ, இல்லை அந்தக் குரங்குதானாகட்டும் என்னை கவனித்ததாகத் தெரியவில்லை.

• • •

ஒரு வாரத்திற்குப் பின்,—அடுத்த வெள்ளிக்கிழமை, அதே எட்டரை மணிக்கு அந்தக் குரங்காட்டி என் வீட்டு வாசலுக்கு வந்துவிட்டான். இந்த எட்டுநாள் இடை வெளியில் அவனை நான் மாலை நேரங்களில் மட்டும்தான் அந்தப் புளியமரத்தடியில் பார்ப்பது. நான் பார்க்கும் போதெல்லாம் அந்தக் குரங்கு, தான் சம்பாதித்துள்ள ஊதியத்தை பங்கு போட்டுத்தின்னும் தன் எஜமானனின் குடும்ப நபர்களை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்குமே தவிர, தான் சம்பாதித்துள்ள பொருளில் ஒரு பகுதியையாவது அது சாப்பிட்டுக் கொண்டிருந்து நான் பார்க்கவில்லை! அதற்கும் அவன் கொடுத்திருப்பான் – இல்லை, கொடுத்தாலும் கொடுப்பான் – அன்று வாழைப் பழத் தோல் கொடுத்தாற்போல்!...

"அந்த ஆசாமி உன் புருஷன் இல்லை. திருடன்தான்னு அந்த இருட்டுலே எப்படி கண்டுபிடிச்சே?"

"நான் யாருன்னு கேட்டதுக்கு என் கண்மணி! நான்தான்னு பதில் சொன்னாரு. அதிலேருந்து கண்டு பிடிச்சேனுங்க!"

என் வீட்டுவாசலுக்கு ஒரு வாரத்திற்குப்பின் இன்று அவன் வந்தான். இந்தத்தடவை அவனை பார்க்க எனக்கு ஆத்திரம்தான் வந்தது. 'டேய்! நீ குரங்குக்கு சாப்பாடுபோடறதுண்டா' என்று கேட்டேன் நான். அவனைச் சூழ்ந்து நின்ற கும்பல் இதுவரை குரங்கைத்தான் வேடிக்கை பார்த்து வந்தது. இப்போதுகுரங்குக்காகப் பரிந்து பேசும் என்னை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தது.

'எசமான்! நான் சம்பாதிக்கறத்துலே கால்வாசி இந்த சனியன் தின்னுப் பிடுதுங்க!' என்றான் அவன் விரக்தியுடன். அவன் பதில் என்னை திகைக்கவைத்தது.

'அட பாவி! உனக்காக அது சம்பாதிக்குதா, இல்லை அதுக்காக நீ சம்பாதிக்கிறயாடா! உன்னை விட்டுப் போனாலும் அது பிழைத்துக் கொள்ளும்பா! ஆனால் அது போய்விட்டால் உன் பிழைப்பிலே மண்ணுதான்!' என்றேன் ஆக்ரோஷத்துடன். அவன் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

அதற்குள் என் தங்கை 'அண்ணா ஆஞ்சநேயருக்குப் பூஜையாயிடுத்து! உள்ளேயிருந்து ஒரு பழம் கொண்டுவந்து இந்த குரங்குக்கு கொடுக்கட்டுமா!" என்றாள்

"ஆமாம் ஜெயம்! போய் ரெண்டு கொண்டு வா!" என்றேன். அவள் கொண்டுவந்த இரண்டு பழங்களை குரங்குகூட கவனிக்கவில்லை. குரங்காட்டி ஏக்கத்தோடு பார்த்தான். "சாமி! நம்பகிட்டே கொடுத்துடுங்கோ! நான் அதுக்குக் கொடுத்துடறேன்!" என்றான் பேராசை ததும்பும் பார்வையுடன்.

அவனிடம் கொடுக்க எனக்குப் பைத்தியமா என்ன? நானே இரண்டையும் குரங்கிடம் கொடுத்தேன். பாவம்! அதற்கு என்ன பசியோ! மளமளவென்று பழத்தை உரித்துத் தின்றுவிட்டு தோலை அங்கேயே போட்டுவிட்டது! பழம் கிடைத்த மகிழ்ச்சியால் தோலை அலட்சியப்படுத்தியதா. இல்லை அதற்குத் தோல் தின்றே பழக்கமில்லையோ!...அப்படி உண்மையில் அது பழத் தோல் தின்று பழக்கமில்லாவிடில், அந்தக் குரங்காட்டியிடம் இன்னும் அது உயிருடனிருக்க முடியுமா! அவன் அதற்கு மகிழ்ச்சியுடன் கொடுப்பது பழத் தோல்தானே!

குரங்கு பழம் தின்பதை மகிழ்ச்சியுடன் யாவரும் பார்த்தோம். ஆனால் கண்களில் விஷஜ்வாலை வீச அந்தக் குரங்கைப் பார்த்தான் அதன் எஜமானனான குரங்காட்டி! அவனுக்கு ஆத்திரம் அதிகமாகிவிடவே, குரங்கை தரதரவென்று இழுத்துக் கொண்டு அவன் எதிர் வீட்டுக்கு ஓடினான். அவன் போவதைக் கண்டு நான் "டேய்! அரிசி வாங்கிண்டு போடா!" என்று கூப்பிட்டும் அவன் ஏனோ திரும்பவில்லை.

ஆனால் எதிர் வீட்டுப் பாட்டி குரங்கைக் கண்டதும் "அனுமந்தா! இந்தாடா உனக்குத்தான் வச்சிருந்தேன்!" என்று ஒரு தேங்காய் மூடியை அதனிடம் கொடுக்க வந்தாள். இதற்குள் குரங்காட்டி பாட்டி கையிலிருந்து குரங்குக் கைக்குத் தேங்காய் மூடி வருவதற்குள் அதைப் பறிமுதல் செய்துவிட்டான். அந்த வீட்டிலும் அவன் அரிசி வாங்கிக்கொள்ளவில்லை.— ஏன், அங்கு அரிசி போடுவதற்கு யாரும் முன்வரவில்லை.

நானும், என் தங்கை ஜெயமும் இவற்றை யெல்லாம் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தோம். குரங்காட்டியைச் சுற்றிக்கொண்டிருந்த கும்பலிலிருந்து ஒரு பையன் கையிலிருந்த நிலக்கடலையில் நான்கை எடுத்துக் குரங்கினிடம் நீட்டினான். குரங்காட்டி இம்முறை பொறுமையை இழந்து "ஏய்! நீ கொடுத்து அது பொளைக்கவேண்டாம்!" என்று ஏகத்தாளமாகச் சொல்லிக்கொண்டே அதைத் தானும் பெறுமல், குரங்கும் பெற்றுக்கொள்ள முடியாமல் சிறுவன் கையிலிருந்து தட்டிவிட்டான். அதற்கு மேல் குரங்காட்டி எங்கள் பார்வையிலிருந்து மறைந்துவிடவே நாங்கள் உள்ளே போய்விட்டோம்.

"அண்ணா! பார்த்தியா! பாவம், அதைப் பட்டினி போட்டு இந்தத் தடியன் பிழைக்கிறானே!" என்றாள் ஜெயம் வியப்புடன்.

"ஆமாம் ஜெயம்! நான் தினம் தான் பார்க்கிறேனே! இவன் அதன் வயிற்றில் மண்ணையடித்து தான் வாழ்ந்து வருகிறான்!' என்றேன் நான்.

'சரி! அண்ணாவும் தங்கையும் குரங்குக்கு பரிந்து கொண்டு பேசினதுபோதும்! சாப்பிட வாருங்கள்!' என்றாள் என் தாயார்.

அன்றும் வழக்கப்படி காரியாலயத்துக்கு சைகிளில் போகும் போது குரங்காட்டி என் தெருவுக்கு அடுத்த தெரு முனையில் குரங்குடன் போய்க் கொண்டிருந்தான். அவன் முகம் அன்று அவனுக்கு வழக்கப்படி வரும்படி கிடைக்காத குறையை எடுத்துக் காட்டியது. அவன் முகத்தில் தினமும் விழிக்கும் குரங்கு இன்று நரி முகத்தில் விழித்து விட்டதோ என்னமோ! தன் வயிற்றுப்பாட்டை அது ஓரளவு தீர்த்துக் கொண்டுவிட்டது.

குரங்காட்டி நடந்துகொண்டே இருந்தான். நடந்துகொண்டேயிருந்தவன்என்ன நினைத்தானோ சடக்கென்று திரும்பினான். கையி

லிருந்த குச்சியால் கூடவேவரும் குரங்கை வெறிபிடித்தவன்போல் ஐந்தாறு அடிகள் அடித்துவிட்டான்! அவன் பின்புறமாக மெதுவாக சைகிளில் வந்துகொண்டிருந்த நான் வேகமாக வண்டியை மிதித்தேன். 'தரித்திரம்... நல்லா ஒன் வயிறு புடைக்க தின்னுச்சு.... குளந்தை குட்டி பொஞ்சாதி வாயிலே இன்னிக்கு மண்ணு போடப் பார்க்கிறே!' இந்த வார்த்தையைச் சொல்லிக்கொண்டே அவன் கடைசியாக பலமாய் அடித்த அடியைத் தாங்காமல் குரங்கு 'வீர்'ரென்றுஅலறவும் நான் சைகிளிலிருந்து இறங்கவும் சரியாக இருந்தது. என் வருகையை அவன் எதிர்பார்க்கவே யில்லை. என்னைக் கண்டதும் அவன் திருதிருவென்று விழித்தான். 'சாமி...!'என்று தானகவே என்னவோ சொல்ல ஆரம்பித்தான். நான் மௌனமாக அவனை ஒரு பார்வை பார்த்தேன்.

'சாமி! இன்னிக்கு சோத்து வாயிலே மண்ணு! சனியன், இதுக்கே எல்லாரும் சாப்பிடக் கொடுத்துட்டாங்க! ' என்ருன் அவன். அவன் பதில் எனக்கு அவன் மேல் கொஞ்சமும் பரிதாப உணர்ச்சியைஉண்டாக்கவில்லை. 'ஏன்! தினம் அதைப் பட்டினி போடற நீ இன்னிக்கு ஒரு நாள் பட்டினி கிடந்தா என்னவாம்!' என்றேன். பதிலொன்றும் பேசாமல் அவன் தலை குனிந்தான்.

குரங்கு வாய் ஓயாமல் வலியின் கொடுமையால் கதறிக் கொண்டிருந்தது. ஏற்கனவே எலும்பும் தோலுமாயிருந்த அந்த ஜீவன் தற்போது அடியின் கொடுமையால் துடித்துக் கொண்டிருந்தது. எனக்கு அவனுடன் பேசவும் விருப்பமில்லை, குரங்கின் பரிதாபத்தைக் காணவும் பிடிக்கவில்லை ஆகவே ஒருநாலணு நாணயத்தை எடுத்து அவனிடம் கொடுத்து 'போ! இன்னிக்கு பொழுதை இதை வச்சுக்கொண்டு தள்ளு' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பிவிட்டேன்.

அவன் குரங்கை இழுத்துக் கொண்டு நடந்தான். தலையிலிருந்து வடியும் ரத்தத்தைச் சிந்திக்கொண்டே, ஓடுவதற்குச் சக்தியின்றி ஊர ஆரம்பித்தது அந்த வானரம்.

'பாவிப் பயல்! தன் ஆத்திரத்தை அதனிடம் காட்டித் தீர்த்துக்கொண்டான்!' என்று என் வாய் முணுமுணுத்தது. குரங்காட்டியுடன் பேசின நேரத்தைச் சரிக்கட்டவேண்டி சைக்கிளை வேகமாக அழுத்தினேன் காரியாலயத்தை நோக்கி. நல்லவேளையாக சரியான நேரத்திற்குள் போய்ச் சேர்ந்துவிட்டேன்.

தினத்தையும் விட அன்று காரியாலயத்தை விட்டு சீக்கிரமே வீட்டுக்குக் கிளம்பிவிட்டேன்.

காரியாலயத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்த நான் அன்றும் வழக்கப்படி அந்தப் புளியமரத்தடியைப் பார்த்துக்கொண்டே வந்தேன். பிச்சைக்கார கும்பல் அன்று சமையல் செய்வதில் ஏனே இறங்கவில்லை. ஒரே கூட்டமாகச் சேர்ந்து கொண்டு நிற்கவே நான் சைக்கிளை விட்டு இறங்கினேன். அங்கே கூடியிருந்த கும்பலில் குரங்காட்டியைக் காணவில்லை. அவன் குடும்பத்தினரை எனக்குச் சரியாக அடையாளமும் தெரியவில்லை. ஆகவே கூடியிருந்த கும்பலிலிருந்த ஒரு பிச்சைக்காரனை கூப்பிட்டு விசாரித்தேன்.

அவன் சொன்னுன்: "சாமி! இந்தக் குரங்காட்டிப்பய மாரியில்லீங்க... அவன் குரங்கு மேலே சைக்கிள் ஏறிடுச்சாம்! அது தலையிலே நல்லா அடிபட்டு அது செத்த நாளி முன்னலே மண்டையைப் போட்டுடுத்துங்க!" அவன் சொல்லி முடித்ததும் என் மனம் 'பக்' கென்றது. 'சைக்கிளா ஏறிற்று அதன் தலையில்!' என்று நான் முனகியபோது எதிர் திசையிலிருந்து அந்தக் குரங்காட்டி ஓட்டமும் நடையுமாய் வந்துகொண்டிருந்தான்.

என்னைக் கண்டதும் அவன் ஓர் கணம் பிரமித்துநின்ருன். பேசயத்தனித்தும்கூட வார்த்தைகள் லகுவில் வெளிவரவில்லை. தட்டுத் தடுமாறிக்கொண்டே சொல்ல வந்ததை சொல்லி முடித்துவிட்டான். "சாமி! பொளப்பிலே மண்ணு விழுந்திடுச்சுங்க:.. ரங்கன்..போ..யிட்டானுங்க ..நீங்க காலையிலே கொடுத்த நாலணுவுக்கு இப்பதான் பூ வாங்கியாந்தேனுங்க.. இதைப்போட்டு எடுத்துட்டுப் போய்ப் புதைக்கணுமுங்க!'— வெறித்தபடி அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த நான், கூடியிருந்த கும்பலினிடையே ஏற்பட்ட இடைவெளி மூலம் எட்டிப்பார்த்தேன். கால்கள் விறைத்துப்போய் கிடந்தது அந்த வானரம். அதன் உடம்பில் காலையில் காணப்பட்ட பாசி மணிச்சரமோ, நீல நிறச் சட்டையோ ஒன்றையும்காணேம்—பிறந்த மேனிக்கு இறந்து கிடந்தது.

என்னல் அங்கு அதற்குமேல் நிற்க முடியவில்லை. குரங்காட்டி மிரளமிரள விழிப்பதைக் கண்ட நான் கடைசியாக அவனிடம்ஒரு கேள்விகேட்டேன். 'ஏன் டா குரங்கு சைகிளில் அடிபட்டா இறந்தது?'—இதைக்கேட்ட அவன் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு ஹீனஸ்வரத்தில் 'சாமி! சொல்லாதிங்க சாமி! பாவி, அநியாயமா அடிச்சுப்புட்டேனுங்க.. அதனலே தான்..' அவன் சொல்வது பூராவும் என் காதில் விழுவதற்கு முன்பே நான் சைகிளை மிதிக்க ஆரம்பித்து விட்டேன்.

நான் இனமாகக் கொடுத்த நாலணு அந்தக் குரங்கின் இறுதிப் பிரயாணத்திற்கா செலவாக வேண்டும்?

குரங்கு ரங்கனுக்கு உயிர்போக வேண்டிய காரணம் அதன் எஜமானன் அடித்ததனல் அல்ல! என் அன்பு அதிகரித்து அதனிடம் இரு பழங்களைக் கொடுத்து அதன் எஜமானனின் ஆத்திரத்தைக் கிளறியதனல்தான்!

நான் அதனிடம் காட்டின பரிவு அதை வளர்ப்பவனிடமிருந்து பிரிந்து செல்லும்படி செய்துவிட்டதாக என் மனச்சாட்சி எனக்குச் சுட்டிக் காட்டிற்று.



5

கடிதம் பறக்குது

*

"சரோஜ்!"

எதிர்பாராதவண்ணம் திடீரென அப்போது பின்னலிருந்து வந்த அழைப்புக் குரலைக் கேட்டு, சரோஜினி திகைத்துப் போய் விட்டாள்.

"நீங்களா"

'நான் இல்லை; வேறு யாரோ இது' என்ருன் சாரநாதன் சிரித்துக்கொண்டே.

'கடைசிப் பரீட்சை சரியாய் எழுதியிருக்கிறயா?'

'ஆமாம், நீங்கள் எப்போது, எங்கே வந்தீர்கள்?'

'இப்போது, இங்கே வந்திருக்கிறேன்.'

சரோஜினி அவன் பதிலைக் கேட்டு, அசுவாரஸ்யத்துடன் 'சூள்' கொட்டினுள்.

'நான் இங்கே ஜோதி லிமிடெட்டில் வேலைக்கு வந்திருக்கிறேன்'.

'வேலை கிடைத்து விட்டதா?'

'வேலை தேட வரவில்லை நான். வேலையை ஏற்றுக் கொள்ள வந்திருக்கிறேன்.'

'அது பெரிய, கம்பெனி என்பார்களே.'

'ஏண்டியம்மா, என்னைப் பார்த்தால் அங்கே எனக்கு வேலை கிடைக்குமென்று உனக்குத் தோன்றவில்லையோ' 'பெரிய கம்பெனி ஆயிற்றே. அது மாதிரி இடங்களில் இலேசில் இடம் கிடைக்காதென்பார்களே என்று கேட்டேன். சிபாரிசெல்லாம் நிறையவேண்டும். நீங்கள் அந்த வழிக்கெல்லாம் போக மாட்டீர்களே.'

சாரநாதன் சூரியான இடத்தில் 'வசையாக'மாட்டிக்கொண்டு விட்டான். தனக்குச் சிபாரிசு முதலியனவெல்லாம் பிடிக்காது என்று அவள் தூக்கிவைத்துப் பேசிவிட்டாள். ஆனல், தனக்கு வேலை கிடைத்திருப்பதோ தன் தந்தையினுல். இப்போது சரோஜினிக்கு என்ன பதில் சொல்வது? 'இல்லை, சிபாரிசினுல்தான் வேலை கிட்டியது' என்றுசொல்லுவதா?

'என்ன முழிக்கிறீர்கள்? நான் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லையே.'

'ஆமாம், எனக்குச் சிபாரிசினுல்தான் அங்கே வேலை கிடைத்திருக்கிறது.'

'என்ன வேலை?'

'அட்வைஸர் டு தி மானேஜிங் டைரக்டர்'!

'சம்பளம்?'

'ஐந்நூறு.'

'யார் சிபாரிசு செய்தார்கள்?'

'எங்கப்பாவுக்கு கம்பெனி முதலாளி இருக்கிருரே, மல்லிகார்ஜுனன், அவரைத் தெரியும்.'

'பரவாயில்லை, நீங்கள் நல்ல அதிர்ஷ்டக்காரர்தான்!'

'ஆமாம்.'

'ஏன், கொஞ்ச நாளில் பெரிய

முதலாளியாகக்கூட ஆகி விடுவீர்கள்.'

சாரநாதன் தலை குனிந்தான்.

'எங்கே நீங்கள் தங்கியிருக்கிறீர்கள்?'

'எனக்கு அவர்களே ஒருபெரிய பங்களா கொடுத்திருக்கிறார்கள் இரண்டு நாளாய் அதில்தான் இருக்கிறேன்'

'வந்து, இரண்டு நாளாகியும் இப்போதுதான் உங்களால், என்னைப் பார்த்துப் பேச முடிந்தது. இல்லையா?'

'ஆமாம். இதுகூட நீ எங்கேயோ போய்க்கொண்டிருந்த போது கூப்பிட்டு, நிறுத்திச் சந்தித்ததுதான்.'

'நீங்கள் இப்போது எங்கே போய்க்கொண்டிருந்தீர்கள்?'

'மல்லிகார்ஜுனன் வீடுமட்டும் போய்விட்டு வரலாமேயென்று கிளம்பினேன். நீ?'

'நான் வெறுமனேதான்போய்க் கொண்டிருந்தேன்.'

'அங்கிங்கெனாதபடி?'

'ஆமாம்.'

'நீ என்னம்மா? நிஷ்கவலையான பிராணி.'

'ஆமாம். உங்களைத்தான் அப்படியே கவலைகள் சூழ்ந்து கொண்டு விட்டன.'

விஷயம் ஏதுமில்லாமல், இப்படி மாறி மாறி இருவரும் பேசிக்கொண்டு சென்றது சாரநாதனுக்குப் பிடிக்கவில்லை.

'நம் விஷயம் என்ன ஆயிற்று? அதைப்பற்றி ஒன்றும் கேட்கவில்லையே?' என்று அவன் தொடங்கினான்.

'என்ன ஆவது? சௌக்கியமாய் இருக்கிறது.'

'பார்த்தயா, இப்போதும் நீ விளையாட்டாகவே பேசுகிறே' என்று அவன் கடிந்துகொள்ளும் குரலில் கூறினான்.

'நான் என் பெற்றோருக்கு எழுதிவிடலாமா?'

'நீங்கள் இதுபற்றி ஏதும், இப்போது போயிருந்தபோது பிரஸ்தாபித்தீர்களா?'

'ஊஹூம், பேச்செடுக்கவேயில்லை.'

'ஏன்?'

'இதெல்லாம் நேருக்கு நேரே பேசக் கூடிய விஷயமா?'

'அதனால், இதைப்பற்றி இனி மேல்தான் அவர்கள் காதில் போடப் போகிறீர்களா?'

'ஆமாம். அதுதான் இப்போது உன்னிடம் கேட்டுக்கொண்டு செய்யவேண்டும்.'

'அவர்கள் இணங்குவார்களா?'

'இணங்கிவிட்டால் தான் வம்பே இல்லையே. அவர்கள்இதற்கெல்லாம் உடன்படுபவர்களல்ல.'

'பின்னே என்ன செய்யப்போகிறீர்கள்?'

'செய்வதென்ன? தெளிவாய், விஷயம் இன்னதென்று எழுதிப் போட்டுவிட வேண்டியதுதான். பதில் வரட்டும்.'

'ஏதாவது விபரீதமாகப் பதில் வந்தால்?'

'ரொம்ப நல்லது. அத்தனைக்கத்தனை நம்முடைய விவாகம் புரட்சி மணமாய் மணம் வீசும்.'

'அதெல்லாம் சரி.'

'ஏன் அப்படிச் சொல்லிவிட்டே?'

'இல்லை; வெறுமனேதான்'என்று சரோஜினி பூசி விட்டாற்போல் சொன்னாள். சாரநாதன் விழித்தான் திருதிருவென்று.

'ஆமாம், நீங்கள் இதுவரை உங்கள் அப்பா–அம்மாவைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே.'

'உனக்கு என்ன சொல்லவேண்டும்? அப்பா குளக்கரை கிராமத்தில் இத்தனை நாள்வரை பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராய் இருந்து ஓய்வெடுத்துக் கொண்டவர். ரங்காச்சாரியார் என்று சொன்னால், அநேகமாய் ஊரில் எல்லாருக்கும் தெரியும்.'

'அவருக்கு என்ன எழுதிப் போடப் போகிறீர்கள்?'

'இதுமாதிரி, காலேஜிலிருந்தே எனக்குத் தெரிந்தபெண் ஒருத்தி சரோஜினி என்றிருக்கிறாள். கன்யா நிலையத்தில் இருந்து கொண்டு, இண்டர்மீடியட்வகுப்பில் படித்துப் பரீட்சை எழுதியிருக்கிறாள். அவளை விவாகம் செய்துகொள்ளவேண்டும் என்பது என் ஆசையும் தீர்மானமுமாகும். உங்களுக்கு அந்தப் பெண்ணை நேரில் கண்டால், மிகவும் பிடித்துப் போய்விடுமென்று நினைக்கிறேன். நமக்கு ஏற்ற ஏழைப்பெண். உங்கள் சம்மதத்தையும், ஆசியையும் தெரிந்துகொண்டு, மற்றவைபற்றி எழுதுகிறேன் என்று எழுதிப்போட்டுவிடலாம் என்றிருக்கிறேன்.'

'சரி, செய்யுங்கள்.'

'உனக்குக் காண்பித்துவிட்டுத்தானே, கடிதாசைத் தபாலில் போடப்போகிறேன்?'

'அதுகூட வேண்டாம். விஷயத்தைத்தான் சொல்லிவிட்டீர்களே!'

'அப்படியானால்' சரி. நான் போஸ்ட் பண்ணிவிடுகிறேன்.'

* * *

'ஸார், உங்களுக்கு ஒரு கடிதாசு வந்திருக்கிறது. இந்தாருங்கள்' என்று சொல்லிக்கொண்டே பள்ளிக்கூடத்துப் பையன் ஒருவன் ரங்காச்சாரியாரிடம் ஒருகவரை நீட்டினான்.

'யார் கொடுத்தார்கள்?'

'ஹெட்மாஸ்டர்தான் உங்களிடம் இதைக் கொடுத்துவிட்டு வரச் சொன்னார்.'

ரங்காச்சாரியார் மேல் விலாசத்தைப் பார்த்தே, அது சாரநாதனிடமிருந்து வந்திருக்கிறது என்று கண்டுகொண்டார்.

'யோசனை இல்லாமல்,அட்ரெஸ் எழுதிப் போட்டுவிட்டால்' என்று அவர் முணு முணுத்ததைக் கேட்டு உள்ளேயிருந்து செல்லம்மாள் ஓடிவந்தாள்.

'யாருக்கு யோசனை இல்லை?'

'வேறு யாரையாவது சொன்னால், நீ ஏன் தானாக வந்து தன் தலையில் அட்சதை போட்டுக் கொள்கிறே.'

'பின்னே யாரைச் சொல்கிறீர்கள்?'

'எல்லாம் உன் பிள்ளையாண்டானைத்தான்.'

'ஏன்?'

'பாரேன். நானே ரிடையராகி இரண்டு மூன்று நாட்கள் ஆகப் போகிறது. இது அவனுக்குத் தெரியாதா, என்ன? இன்னும் எதுக்குப் பள்ளிக்கூடத்து அட்ரெஸ்ஸுக்கு எழுதிப் போடுகிறான்? ஒவ்வொரு நாளும்

ஸ்கூலிலிருந்து ஒரு பையனை விட்டு அவர்கள் கொடுத்தனுப்பிக் கொண்டிருப்பார்களா?'

'இதுக்குத்தானா அவனுக்கு மண்டகப்படி விழுந்தது?'

'கொஞ்சம் கடிதாசைப்படிக்கவிடேன். சளசளவென்று' என்று அவர் கூறிக்கொண்டிருக்கையில் செல்லம்மாள் ஓடிவிட்டாள் மடைப்பள்ளிக்கு.

'உன் பிள்ளை எழுதுகிறதைப் பார்த்தாயா?' என்று கேட்டுக் கொண்டே அவர் செல்லம்மாளைத் துரத்திக்கொண்டு சென்றார்.

'என்ன எழுதியிருக்கிறான்?'

'நீயே கண்ணாடியைப் போட்டுக்கொண்டு, படி.'

'ஏன்? நீங்கள்தான் சற்று சொல்லுங்களேன்.'

'அவன் எழுதியிருக்கிற விஷயம் வாயினால் சொல்லுவதற்கு யோக்கியதை இல்லாதது.'

செல்லம்மாள் என்னவோ, ஏதோ என்று திணறிப்போய் விட்டாள்.

'அவனோடே காலேஜ் நாளிலிருந்தே சரோஜினியென்று ஒருத்தி படித்து வந்தாளாம். அவளுக்கும் அவனுக்கும் சிநேகிதம் உண்டுபோல் இருக்கிறது.'

காதைப் பொத்திக்கொண்டு, செல்லம்மாள் 'சிவசிவா' என்றாள்.

'ராம ராமா என்று சொல்லு, ஒரு தடவைக்குஓராயிரம்தடவை உன் பிள்ளையாண்டானுக்குப் போகிற புத்தியைப் பார்.'

'அதுக்கு மேலே என்ன எழுதியிருக்கிறானென்று சொல்லவில்லையே.'

'அதுக்கு மேலே என்னத்தை எழுதுவது? அந்தப் பெண் நம் அந்தஸ்துக்கு ஏற்றபடி ஏழையாம். ஏன் என்றால், இவன்தானே கண்டு விட்டான் நம் ஏழ்மையை!'

ஆத்திரத்தோடு அவரது உதடுகள் துடித்தன.

'அப்புறம்?' என்று அவள்விசாரித்தாள். சாரநாதனுக்கு மூளை இப்படியா போகவேண்டும் என்று அவளுக்குத் துக்கம் குரல்

வளையை நிரப்பிக்கொண்டு, பெருக்கெடுத்து வந்தது.

'அப்புறம் என்ன? கலியாணம் தான். இது தெரியாதா?ரொம்ப ஒழுங்கான சத்புத்திரனல்லவா? நம்மிடம் சம்மதமும், ஆசீர்வாதமும் கேட்டிருக்கிறான்!'

'ஐயையோ.'

'இன்னும் இரண்டு தடவை சொல்லித் தலையில் அடித்துக் கொண்டு அழு இப்பேர்ப்பட்ட குழந்தையைப் பெற்றேனே என்று.'

செல்லம்மாளுக்கு உலகமே புரியவில்லை.

'நீங்கள் அவனுக்கு என்னஎழுதப் போகிறீர்கள்? யோசித்து விட்டீர்களா?'

'யோசனை என்ன? அவன் யோசித்துவிட்டா இந்தக் கடுதாசு எழுதியிருக்கிறான்? நான்தான் ஆரம்பத்தில் அட்ரெஸ்ஸைப் பார்த்ததுமே சொன்னேனே. அப்போது நீ உன் பிள்ளைக்குப் பரிந்துகொண்டு வந்தே. முதல் கோணல் முற்றும் கோணல்தானே? அட்ரெஸ்ஸைப் போலத்தான் இருக்கிறது கடுதாசும்.'

'கடைசியாக என்னதான் எழுதப் போகிறீர்கள்.'

'என்ன கேட்டிருக்கிறானோ, அதைத் தான்.'

அவளுக்கு அவர் பேச்சு புதிராய் இருந்தது.

'நம்முடைய ஆசீர்வாதம் கேட்டிருக்கிறான்? அதையே எழுதிவிட்டால், தீர்ந்தது. நீ எக்கேடு கெட்டுப்போனாலும், பரவாயில்லை. அந்தப் பெண்ணையும் சேர்த்துக்கொண்டு, இரண்டு பேருமாய் எந்தக் குழியில் வேண்டுமானாலும் போய் விழுந்து செத்துமடியுங்கள்...' 'ஏதாவது உளறுகிறீர்கள். நாக்கில் சனி இருந்து தொலையும். ஒன்றுக்

கொன்று பலித்து வைக்கப் போகிறது.' 'அப்படிப் பலித்தால், எவ்வளவோ சந்தோஷப்படுவேன். இதுகள் இருந்து என்ன சுகத்தைக் கண்டோம். ஊரிலே போகிறவளையெல்லாம் கையைப் பிடித்திழுக்கிறவன்தானே? அதுவாவது போகட்டும். இந்தப் பயலை நம்பி, அந்தப் பெண்ணும் வருகிறாளே. அந்த வயிற்றெரிச்சலைச் சொல்லு. அவள் தலையிலே என்ன சுழித்திருக்கிறதோ?'

'அந்தப் பெண் என்ன ஜாதியாம்?'

'அது தெரியாதா? நம் ஜாதிப் பெண்ணாய் இருந்தால்தான், தேவலையே, அது மாதிரி, ஜாதி ஒன்றாய் இருந்தால், ஆசை விழுமா? ஏனென்றால்,' உன் பிள்ளை உலகத்தையே சீர்திருத்தம் பண்ணப் பிறந்த அவதார புருஷனல்லவா? அதனால், வேறு எந்த ஜாதிப் பெண்ணாய்ப் பார்த்துத்தான் ஆசை விழும்.'

'நான் கேட்டதுக்குச் சொல்லுங்கள். அவள் என்ன ஜாதியாம்.'

'ஏண்டி, சீர்திருத்தம் சீர்திருத்தம் என்று சொல்லிக்கொண்டு அலைகிறவன், யாரைப் பண்ணிக் கொள்வான்? ஹரிஜனப் பெண் தான்!'

'அட இழவே! அந்தப்பெண்ணு இவனை நம்பிச் சம்மதிக்கிறதாம்? பாவம், அதன் தலைவிதி எப்படி இருக்கிறதோ?' 'இன்னொரு விஷயம் சொல்லவில்லையே. அந்தப் பெண்ணை நம் இரண்டு பேருக்கும் நிச்சயம் பிடிக்குமாம். அது வேறே அவளுக்கு இவன் சர்டிபிகேட் கொடுத்திருக்கிறான்.'

'அது சொல்லாதீர்கள். நிச்சயம் அவள் நல்ல பெண்ணாய் இருப்பாள். அதில் சாரநாதன் ஏமாந்துவிடமாட்டான். ஆனால், அவளைப்போல ஆயிரம் நல்ல பெண்கள் நம் ஜாதி-ஜனங்களிலேயே கிடைக்கமாட்டார்களா? ஏன் அவன் புத்தி இப்படிப் போகவேண்டும் என்றுதான் கேட்கிறேன்.'

'என்னிடம் கேட்டால்? உன் பிள்ளையாண்டானிடம் போய் இந்தக் கேள்வியைக் கேளேன். அன்றைக்குக் கிளம்புகிறபோது, என்னவோ பிரமாதமாய் ஒரு நாழி உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தாயே. இப்போது பண்ணேன்.'

ரங்காச்சாரியார் கடைசியில், தான் சொன்னபடியே சாரநாதனுக்குக் கடிதம் எழுதிப்போட்டார். 'நீ எக்கேடு கெட்டு, எருக்கு முளைத்துப் போனாலும், எனக்குக் கவலையில்லை. ஒரு பெண்ணையும் சேர்த்துக்கொண்டு கெடுகிறயே என்றுதான் வருத்தமாய் இருக்கிறது' என்று எழுதி முடித்து, செல்லம்மாளுக்கு வாசித்துக்காட்டி, அவளது சம்மதத்தையும் பெற்று, அதைத் தபாலில் சேர்த்தார்.

அக்கடிதம் இரண்டு மூன்று இடங்களில் குத்துப்பட்டுவிட்டு, விலாசதாரனிடம் போய்ச் சேர்ந்தது.

6

உள்ளம் கலங்குது

★

'உங்கப்பாவினிடமிருந்து பதில் வந்துவிட்டதா?' என்று விசாரித்துக்கொண்டே, சரோஜினி உள்ளே நுழைந்தாள்.

'வந்துவிட்டது' என்று நிறுத்தினான் சாரநாதன்.

'என்ன எழுதியிருக்கிறார்?'—உற்சாகத்தோடு.

'சம்மதம் தான்!'—ஜீவனில்லாமல்.

'சம்மதம் என்றால், ஏன் இப்படி உற்சாகமில்லாமல், சொல்கிறீர்கள்?'—பதட்டத்தோடு.

'சம்மதம் நான் உன்னைக் கலியாணம் செய்துகொண்டு வாழ்வதற்கல்ல'—சாவதானமாக.

'பின்னே?'—திகிலுடன்.

'நாம் இரண்டு பேரும் எக்கேடு கெட்டுப் போனாலும், சம்மதம் தான் என்று எழுதியிருக்கிறார்' என்றான் சாரநாதன் வெகு நிதானமாக.

'ஐயோ, பாவம், இப்படி பெற்ற தாய் தந்தை எழுதுவது என்றால் அவர்களை உங்கள் முடிவு எவ்வளவு புண்படுத்தியிருக்கும்!'

'அவர்களுக்குத்தான் நீ அனுதாபம் தெரிவிக்கிறயா?'

'ஆமாம். உங்களுக்கு எதற்கு அனுதாபம்? நீங்கள்தானே தானே தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? அதனால் உங்களைக் கண்டு, ஒருவரும் அனுதபிக்க வேண்டியதில்லையே.'

'எனக்கு எவரது அனுதாபமும் வேண்டியதும் இல்லை. எனக்காக யாரும் ஒரு பொட்டுக் கண்ணீர் கூடச் சிந்தவேண்டியதில்லை. போதுமா?'

'ஆனந்தக் கண்ணீர் கூடவா?' சாரநாதனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

'அப்புறம், என்ன பண்ணலாமென்று நீ தீர்மானம் பண்ணியிருக்கிறே?'

'நீங்கள்தான் சொல்லவேண்டும்?'

'நமக்குத் தெரிந்த பத்து பேரைக் கூப்பிட்டு, அவர்கள் மத்தியில், ஏதாவது ஒரு கோயில் சந்நிதியைத் தேடிப்பிடித்து...?'

'ஆமாம், செய்வதை தெய்வத்துக்குக் கண் எதிரேயே பண்ணிவிடுவோமே என்கிறீர்கள் இல்லையா?'

சாரநாதன் மௌனம் சாதித்தான்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று சொல்வார்களே, அந்த இரண்டு தெய்வத்தின் சாபத்தையும் பெற்றுக்கொண்டு, சப்பைக்கட்டுக்குக் கோயில் தெய்வத்தைத் தொத்திக்கொள்வோம்' எனக் கூறிவிட்டு, சரோஜினி அந்த இடத்தில் சிரித்தது அவனுக்குச் சுவைக்கவில்லை.

'திருநீர்மலையில் வைத்துக் கொள்ளுவோமா? கிட்டேயும் இருக்கிறது. தெய்வ சந்நிதியும் ஆயிற்று. இடமும் நன்றாய் இருக்கும்.'

'அத்தோடு தெய்வத்தின் பெயரும் உங்கள் தந்தை தெய்வத்தின் பெயராக இருக்கிறது. ரங்கநாதன் என்று. இல்லையா?'

'நீ ஏதாவது சொல்லிக் கொண்டே இரு, சரோஜ்.'

திடீரென விழிப்புற்று எழுந்தவள்போல, அவள் 'ஒன்று சொல்ல மறந்துவிட்டேன்' எனத் தொடங்கினாள்.

'என்ன?' என்றான் சாரநாதன்.

'கன்யா நிலையத்திலேயேதான் விவாகம் நடக்கவேண்டும். அப்படித்தான் எங்கள் விடுதி வழக்கம். அங்கே நடுத் தோட்டத்தில் ஒரு ராதாகிருஷ்ணன் சிலை இருக்கிறது. அதன் எதிரேதான் கலியாணம். நடைபெறும். எல்லோர் நடுவிலும் முறைப்படி விவாகம் அங்கே அவர்கள்

எதிரே நடக்கும். அப்போது தான், நிலையத்து அதிகாரிகள் 'நிஜமாகவே இவன் இவளைக் காப்பாற்றுவான்' என்று முடிவு செய்து, கலியாணம் ஆன பெண்ணை ஆசீர்வதித்து அனுப்புவார்கள்.'

'நல்ல வழக்கம்தான் அது!'

'நல்லதோ, பொல்லாததோ, இவ்வழக்கம்தான் வெகு நாளாய் அமுலில் இருந்துவருகிறது.'

'என்றைக்கு வைத்துக்கொள்வது?'

'உங்கள் பெற்றோருக்கு அழைப்பு அனுப்பப் போகிறீர்களல்லவா?'

'அது இல்லாமலா?'

'நல்லவேளை! நீங்கள் அவர்கள் மேல் கோபத்தில் வெறுமனே இருந்துவிடுவீர்களோ என்று பயந்தேன்.'

அதோடுகூட நிறுத்திக் கொள்ளப் போவதில்லை. கலியாணம் ஆனதும், அந்தப் பெண்ணை நான் இந்த லக்கினத்தில் இன்ன முகூர்த்தத்தில் விவாகம் செய்து கொண்டேன் என்றுகூட ஒரு கடிதம் எழுதிப் போடப்போகிறேன்.'

'அது எதுக்கு?'

'தெரியவேண்டுமல்லவா அவர்களுக்கு நான் அவர்களை விட்டுத் தனித்து நிற்கத் துணிந்துவிட்டேன் என்பது?'

'அதனால் என்ன லாபம்?'

'அவர் என்ன பதில் எழுதுகிறார் என்று பார்ப்போமே!'

'சரி. ஏதோ செய்யுங்கள்.'

* * *

கடிதத்தைப் பிரித்துக் கொண்டே ரங்காச்சாரியார் உள்ளே நுழைந்தார். செல்லம்மாள் விழுந்தடித்துக்கொண்டு ஓடிவந்தாள்.

'யாரிடமிருந்து வந்திருக்கிறது?'

'நமக்கு ஒரு பிள்ளை இருந்தானே, அவனிடமிருந்து.'

'என்ன எழுதியிருக்கிறான்?'

'வாசிக்கிறேன், கேள்.'

விவாகம் ஆன பின்பு சாரநாதன் எழுதிய கடிதமது. அன்புள்ள அப்பா, அம்மாவுக்கு,

கலியாணப் பத்திரிகை வந்திருக்கும் என்று நம்புகிறேன். என்ன, பதிலே காணுமே. இதற்காவது பதில் எழுதுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

கலியாணம் நேற்று கன்யா நிலையத்து ராதாகிருஷ்ணன் சிலை எதிரே, பெரியோர்கள் நிச்சயித்திருந்தபடி, சரிவர நிறைவேறியது. வேறு விசேஷமில்லை. நாங்கள் சௌக்கியம்.

உங்கள்,

சாரநாதன்.

கடிதத்தை வாசித்துவிட்டு, ரங்காச்சாரியார் அதை செல்லம்மாளிடம் நீட்டினார்.

'இதை எதற்கு என்னிடம் கொடுக்கிறீர்கள்?'

'இதைப் பெட்டியில் பத்திரமாய் வைத்திருக்க வேண்டும். எவ்வளவு கச்சிதமாய், ரத்தினச் சுருக்கமாய் உன் பிள்ளை எழுதக் கற்றுக்கொண்டிருக்கிறான், பார்த்தாயா? மல்லிகார்ஜுனனிடம் இரண்டே நாள் வேலை பார்த்தால்கூடப் போதும். அவ்வளவு கெட்டிக்காரன் அவன் அந்த நாளிலிருந்தே.'

'தும்பை விட்டுவிட்டு, வாலைப் பிடியுங்கள்.'

'என்னடி சொல்கிறே நீ?'

'பையன் எழுதியிருக்கிற விஷயத்தை விட்டுவிட்டு, சுருக்கமாய்க் கடிதம் எழுதியிருக்கிறான் என்று பூரித்துப் போகிறீர்களே.'

'அதுதான் இந்தக் கடிதாசை எடுத்துப் பெட்டியில்வையென்று சொல்லிவிட்டேனே.'

'எதுக்கு?'

'இந்தக் கடிதாசோடுதான், நமக்கும் அவனுக்கும் இருந்த பிணைப்பெல்லாம் அறுந்தது என்பதற்காகத்தான். இது நமக்கும் அவனுக்கும் இடையே ஒரு முக்கியமான கடிதாசில்லையா?'

'செல்லம்மாள் பதில் சொல்லாது நின்றாள்.

'அவனுடைய திமிரைப் பார்த்தயா? பெரியோர்கள் நிச்சயித்தபடி நடந்துவிட்டது என்று எழுதியிருக்கிறானே, கவனித்தயா? யாரோ அந்தப் பெரியவர்கள், தெரியவில்லை.'

'இதுக்காவது பதில் எழுத வேண்டும் என்று எழுதியிருக்கிறானே. எழுதிப்போட்டு விடுங்கள்.'

'நிச்சயம் ஒன்று எழுதிப் போட்டுவிட வேண்டாமோ? அந்த அழைப்பிற்குப் பதில் ஒன்றும் போடாமல் இருந்ததைக் கண்டே, புத்திசாலித்தனமாய்ப் புரிந்துகொண்டு வெறுமனே இருந்திருக்கலாம். இந்தக் கடிதாசு வேறு எழுதியிருக்கவே வேண்டாம் அவன். நல்லதாயிற்று. ஒருகடிதம் வக்கணையாய் எழுதிப் போட்டு விடுகிறேன்.'

செல்லம்மாளுக்கு சாரநாதன் மேல் கொஞ்சங் கொஞ்சம் எஞ்சியிருந்த அனுதாபமும் போய் விட்டது, இக்கடிதத்தைக் கண்டதும். அவர் சொன்னபோல், 'பெரியோர்கள்' என்று அவன் குறிப்பிட்டிருந்தது அவளுக்கு ரொம்ப வேதனையாக இருந்தது. வயதான தகப்பனரோ இங்கே இருக்கிறார். அவரைக் கேட்காமல் கலியாணம் செய்து கொள்கிறான். அதுவாவது போனால் போகிறதென்றாலும், திமிராகப் 'பெரியோர்கள் நிச்சயித்தபடி' என்று எழுதவேண்டாமல்லவா? அப்படி எழுத, அவனுடம்பில் என்ன அகங்காரம் இருந்திருக்க வேண்டும்? தன்னைத்தான் இலட்சியம் பண்ணவில்லையென்றாலும், அவரையே இப்படி உதாசீனப்படுத்தி எழுதியிருக்கிறானே!

'நாங்கள் இருவரும் சௌக்கிய' மாமே! ஏனென்றால், புது உறவு முளைத்திருக்கிறதல்லவா? அந்த உற்சாகத்திலே, இப்போது ஒரு நாளில் இரண்டு பேரும் ஒன்றாகி விட்டார்களாக்கும்! முன்னே பின்னே யாரென்றுகூட ஒருவர்க்கொருவர் தெரியாது. இந்த க்ஷணத்தில், 'நாங்கள் இருவரும்' என்று இரண்டு கழிசடைகளும் இழைகின்றதுகளே!

செல்லம்மாள், ரங்காச்சாரியார் இருவருக்குமே சாரநாதன் மேல் ஆத்திரம் பொங்கிக் கொண்டுவந்தது. அவனை ஒரே நொடியில் திடுதிப்பென்று எங்கிருந்தோ ஒருத்தி தங்களிடமிருந்து பிரிக்கிறாளே என்ற கோபம் முழுவதும் சரோஜினியின் மேல்தான் பாய்ந்தது. அவ்வளவு ஆத்திரத்தையும் பேனாவில் வார்த்து, ரங்காச்சாரியார் கடிதம் தயாரித்தார். அவர் கவனத்தோடு, அப்படி மூளையை செலவழித்து, அவ்வளவு தூரம் சிரமப்பட்டு வேறு எந்தக் கடிதமும் எழுதியிருக்கமாட்டார்.

* * *

'இது யாருடைய கையெழுத்து? நான் பார்த்ததாகவே தோன்றவில்லையே', எனக் கேட்டுக்கொண்டே சரோஜினி வாசலில் மோட்டார் டிரைவர் வாங்

கிக்கொண்டுவந்த கவரை சாரநாதனிடம் நீட்டினாள்.

'அப்பா போல் இருக்கிறது' என்று கூறியவண்ணம் அவன் கடிதத்தைப் பிரித்தான்.

'தேவலையே. இவ்வளவு வயதான பின்பும், கையெழுத்து மணி மணியாய் இருக்கிறதே!' என்று சரோஜினி வியந்ததை சாரநாதன் ரசிக்கவில்லை.

'என்ன எழுதியிருக்கிறார்?'

'நீ இதைப் படித்தால், ரொம்ப வருத்தப்படுவே'

'ஏன், அப்படி; என்ன எழுதியிருக்கிறார்?'

'அது, படித்தால் தெரியும்.'

'கொடுங்களேன். படித்தாவது பார்க்கிறேன்.'

சரோஜினி 'வெடுக்'கென்று கடிதத்தைப் பிடுங்கினாள்.

'நன்றாய்ப் பார். இதையெல்லாம் எப்படி மறைக்க முடியும்? முடிந்தால் தான், எதற்கு மறைக்க வேண்டும்?' என்று சொல்லிவிட்டு அவளிடம் அவன் கடிதத்தைத் தந்தான்.

என்னவோ கையெழுத்தின் உருவம் மணிமணியாய் இருக்கிறதென்று சொன்னயே. தரம், அடங்கியுள்ள கருத்து எல்லாம் எவ்வளவு மட்டமாய் இருக்கிறதென்று படித்துப் பார்.

ரங்காச்சாரியின் அக்கடிதம் சாரநாதனுக்கு அவர்மேல் கோபத்தையும் வெறுப்பையும் தான் உண்டுபண்ணியது.

'உன் அழைப்பும் வந்தது; கடிதமும் வந்தது.

அழைப்பிற்குப் பதில் எழுதாமல் இருந்தபோதே நீ என்னைப் புரிந்துகொண்டு கடிதம் வேறு எழுதாமல் இருந்திருக்கலாம். நீ பதிலே கேட்டிருப்பதால், இப்போது எழுதுகிறேன் இக்கடிதம்.

எப்போது உனக்கு உன் பெரியோர்கள் எந்தப் பெண்ணுடனோ விவாகம் செய்து வைத்துவிட்டார்களோ, அப்போதே உனக்கும் எங்களுக்கும் உள்ள-இருந்த, இணைப்பெல்லாம் அறுந்துவிட்டது. இனிமேல் நீ என்னைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். அதேபோலத்தான், நாங்களும் உன் விஷயத்தில்!

நீங்கள் 'இருவரும்' சௌக்கியமாய் இருங்கள்; இல்லாவிட்டால், எங்கேயாவது போய்விடுங்கள். உனக்கும் எங்களுக்கும் ஸ்நான பிராப்திகூடக் கிடையாது. இதை நன்றாய்த் தெரிந்துகொள்ளவும்.

உன் மூஞ்சியிலேயே நாங்கள் விழிக்க இஷ்டப்படவில்லை. அதுவும், முக்கியமாக நீ தேடிப் பிடித்திருக்கிறாயே, அந்தப் பெண் பேயைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. அது இருந்தாலும் சரி, செத்து மடிந்தாலும் சரி, உன் விஷயம் அது. எனக்கோ உன் அம்மாவிற்கோ அது பற்றிச் சிந்தையில்லை.

உன் அம்மாவாவது 'அவன் எங்கேயாவது இருந்தால் சரி. அந்தப் பிணத்தைப்பற்றி நமக்கென்ன கவலை?' என்கிறாள். நான் அதுகூடச் சொல்வதில்லை. இரண்டு பேரையும் பற்றித்தான் நமக்கென்ன கவலை, என்கிறேன். எல்லாம் சொல்லிவிட்டேன்.

இப்படிக்கு,
ரங்காச்சாரி.'

இக்கடிதம் சாரநாதனுக்கு மிகுந்த வருத்தத்தை ஊட்டியது. என்னை என்ன வேண்டுமானாலும், வையட்டும். அதற்கு இவர்களுக்கு உரிமையுண்டு. இத்தனைநாள் துரதிர்ஷ்டவசமாக இவர்கள் வளர்த்துவிட்டார்கள் என்ற காரணத்தினால், என்னை நன்றாய்த் திட்டட்டும். ஒரு பாவமும் அறியாத பெண்ணைப் பிடித்து இவர்கள் என்ன சொல்வது?

கடிதத்தைப் படித்துவிட்டு, சரோஜினி எப்போதும்போல் சிரித்துக்கொண்டு, அப்பால் நகர்ந்துவிட்டாள். அவளை நினைத்துப் பார்க்கப் பார்க்க, சாரநாதனுக்கு பரிதாபமாய்இருந்தது. அனாதைகளோடு அனாதையாக அங்கே கன்யா நிலைய ஆசிரமத்தில் இருந்திருந்தால் கூட, அவள் எவ்வளவோ ஆனந்தமாய்ச் சிட்டுக்குருவிபோல் ஓடியாடிப் பறந்து திரிந்து கொண்டிருப்பாள்.

என்னவோ நான் ஒருவன் புது உறவில் கிடைத்ததற்கு, பதிலுக்குப் பதில் அவளைத் திட்டிக்கொண்டே இருக்க இரண்டுவைரிகள் தோன்றிவிட்டார்கள்! அவளுக்குக் கிடைத்த நிகர லாபம் இவ்வளவுதான்! கல்லூரி நாட்களில் அவளுக்கும் தனக்கும் அறிமுகம் ஏற்பட்ட நாள் தொட்டு அவள் நிஷ்கபடமாகத் தன்னிடம் சிரித்துச் சிரித்துப் பழகிக்கொண்டு வருவதற்கும், முடிவில் அவளுக்குக் கிடைக்கும் பலனையும் எண்ண எண்ண, அவனுக்கு சரோஜினி ஓர் துன்பச் சித்திரமாகக் காட்சியளித்தாள்.

நிரந்தரமாக அவளைச் சபித்துக்கொண்டே இருக்க இரண்டு தூமகேதுகள் வேறு தோன்றிவிட்டன. முன்பு அனாதையாக இருந்தாள். இப்போது? அனாதையென்றபெயர் போய்விட்டது.ஒரு உறவினன் கிடைத்துவிட்டான். இரண்டு ஜன்ம விரோதிகள் அவளுக்கு ஏற்பட்டு விட்டனர். தான், அவளைக் கலியாணம் செய்து கொள்ளாமல் இருந்தால், கூட, அவள் எவ்வளவோ சந்தோஷமாக இருப்பாள். தான், ஏன் வீணில் அவளது வாழ்க்கையில் புகுந்து, அதை குட்டிச்சுவராக்கியிருக்கவேண்டும்?

இந்த எண்ணம் தோன்றிய அடுத்த நிமிஷம் அவனுக்கே சிரிப்பு வந்தது. சீர்திருத்தம், புரட்சி மணம், முற்போக்கு என்றெல்லாம் ஓயாமல் முணுமுணுத்தவனா இப்படி அதற்குள் பின் வாங்குகிறோம்? இத்தனைக்கும் கலியாணம் செய்துகொண்டு வந்து, ஒரு மாதம்கூட ஆகவில்லை. அதற்குள்ளேயே, முன் வைத்த காலைப் பின்னுக்கிழுக்கச் சபலம் தட்டிவிட்டதை நினைக்க அவனுக்கே வெட்கமாய் இருந்தது.

என்னவோ யார் யாரையோ எல்லாம் எதிர்த்துத் தனித்து நிற்கத் தனக்குத் துணிவு உண்டு. இன்னும் அப்படி-இப்படியெல்லாம் பேசியதன் போராட்ட உணர்ச்சியை நினைந்து அவனே தலைகுனிந்தான். எதிரே புன்னகை அளித்துக்கொண்டு, சரோஜினி அவனிடம் வந்து நின்று 'என்ன பலத்த யோசனை?' எனக் கேட்டாள்

அவன் 'ஒன்றுமில்லை'யெனக் கூறிவிட்டு எழுந்தான்.

(தொடரும்)

அன்னை

ரங்கநாயகி

★

'அம்மா, நான் பள்ளிக்கூடம் போயிட்டு வரேம்மா' என்றேன்.

'சமத்தா போயிட்டு வாடா கண்ணா. நன்றாக வகுப்பில் பாடத்தில் கவனம் செலுத்து. இந்த புது வருஷம் கஷ்டப்பட்டு படித்து முடித்துவிட்டால் பிறகு நல்ல காலம் ஏற்படும்' என்று பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னாள். வகுப்பில் பாடமும் ஆரம்பமாயிற்று. ஆயினும் மனம் மட்டும் அதில் லயிக்கவில்லை. வீட்டை நோக்கியே சென்று கொண்டிருந்தது. எந்த தினமும் அம்மா அந்த ஒரே வரியைச் சொல்லி அனுப்புகிறாள். நான் என்ன சின்ன குழந்தையா. வயது 17 ஆகிக்கொண்டிருக்கிறது. வீட்டில் மட்டும் அல்ல பாடத்தில்கூடத்தான் கெட்டிக்காரன். சமத்து என்றெல்லாம் பெயர் வாங்கியிருக்கிறேன். சரி பெரியவர்கள் ஒருவேளை அப்படி சொல்லுவது வழக்கமாக இருக்கலாம் என்று என் மனம்எண்ணத் தொடங்கியது. ஆனால் என் தாய் சொல்லும்போது ஏதோ ஒரு உணர்ச்சியினால் தூண்டப்பட்டு பேசுவதுபோல் அல்லவா தோன்றுகிறது. இவ்விதம் என் மனம் ஈடுபட்டிருக்கும்போது, 'கோபால்!' கொஞ்சம் இங்கே வா' என்று உபாத்தியாயர் கூப்பிட்டதுபோலிருந்தது. இதோ வந்துவிட்டேன் சார் என்று நானும் பதில் கொடுத்துக் கொண்டே எழுந்து வாத்தியாரிடம் சென்றேன்.

'என்ன கோபால்! நான் எல்லோரையும் பேசாமல் காம்போஸிஷன் அல்லவா எழுதச் சொன்னேன். நீ, ஏன், என்றும் இல்லாமல் இன்று இப்படி நடந்து கொண்டாய். ஒருவேளை உடம்பு சரியில்லையா?' என்றார்.

'அதெல்லாம் ஒன்றும் இல்லை சார், என் மனம்தான் சரியாக இல்லை. நான் வீட்டிற்கு போகிறேன். எனக்கு விடை கொடுங்கள்' என்றேன்.

ஏதோ ஆவேசம் வந்தவன் போல் வீட்டை நோக்கி ஓடினேன். என் அம்மா அடுக்களையில் பாத்திரங்கள் கழுவிக் கொண்டிருந்தாள். என்னையும் அறியாமல் 'அம்மா!' என்று உரக்கக் கத்திவிட்டேன்.

'என்னடா, கண்ணா, இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டாய். ஒருவேளை தலைவலியா?' என்றாள் பரிவுடன். நான் பதில் ஒன்றும் சொல்லாமல் அப்படியே நின்று கொண்டிருந்தேன்.

'என்னடா பேசாமல் இருக்கிறாய்' என்று என்னை நெருங்கி கேட்டாள் தாய்.

'அம்மா! நான் சமத்தாகயில்லையா பாடமும் நன்றாகத்தானே படிக்கிறேன். அப்படியிருக்க நீ ஏன் தினமும் அதையே திருப்பித் திருப்பி சொல்லுகின்றாய். எனக்கு உடம்பு ஒன்றும் இல்லையம்மா' என்றேன்.

'கண்ணா! நீயோ சிறியவன். உலக விஷயம் அறியாதவன். இப்போ உன் வேலை படிப்பது தான். அதைத்தான் நீ நன்றாக கவனிக்க வேண்டும்' என்றாள்.

படிப்பும் ஒருவாறாக முடிந்தது. வேலை தேடுவதில் முனைந்திருந்தேன். ஒரு நாள் சாப்பிட்டு விட்டு உட்கார்ந்துகொண்டு இருந்தேன். மெள்ள அம்மாவிடம் பேச்சைத் தொடங்கினேன். 'உன் கவலைகள் என்னம்மா' என்றேன்.

அம்மா தன் கதையை சொல்ல ஆரம்பித்தாள்.

'எனக்கு பன்னிரண்டு வயதிருக்கும். அச்சமயம்எங்கள் ஊரில் நாடகக் கம்பெனி ஒன்று நாடகங்களை நடித்துக்கொண்டிருந்தது. எனக்கு 'டிராமா' என்றால் ரொம்ப பிடிக்கும். நானும் என் பெற்றோர்களுடன் ஒரு நாள் நாடகத்தைப் பார்க்க சென்றிருந்தேன். சினிமாவைப்போல் மூணு மணி நேரத்திற்குள் அற்புதமான சீன்களுடன் ரொம்ப விரிவாகவும் சீக்கிரமாகவும் நடித்தார்கள். எனக்கு அன்று முதல் 'டிராமா'சபலம்கொஞ்சம்கொஞ்சமாக மனதில் ஊறிக்கொண்டே வந்தது.நானோ பெரிய பணக்கார வீட்டுப் பெண். என்னை கட்டாயம் டிராமாவில் சேர்ந்து நடிக்க என் பெற்றோர்கள் ஒப்பமாட்டார்கள் என்றும் தெரியும். மனமோ ஒரு நிலையில் இல்லாமல் தத்தளித்தது. ஆனால் புகழ் என்றும் நிலைத்திருக்கும். அதுவே என் வாழ்க்கையின் லட்சியம் என்று தீர்மானித்துக் கொண்டேன். மூன்று வருஷங்கள் ஆயின. எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்தேன். பெற்றோர்களுக்கு ஒரே செல்வி நான். காலேஜ் படிக்கணுமென்றேன். சரி என்றார்கள். சென்னை பிரஸிடென்ஸி காலேஜில் இடம் கிடைத்தது. காலேஜ் முதல் வருஷம் ஒருவாறாக முடிந்தது. இரண்டாவது வருஷம் படித்துக்கொண்டிருந்தேன். காலேஜில் எனக்குத் தெரியாதவர்களே இல்லை. 'ஸ்தாபக விழா' கொண்டாட வேண்டும் என்று எல்லோரும் சொன்னார்கள். கடைசியில் அதற்காக ஒரு 'மீட்டிங்'கூட போட்டு அன்றைக்கு விழாவின் போது என்ன என்ன செய்ய வேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தோம். சிறிய நாடகம்போட தீர்மானித்தோம். சின்ன வயதிலேயே தோன்றிய ஓர் நாடக அபிமானம் என்முன் தலையைதூக்கிப் பார்க்க ஆரம்பித்துவிட்டது. மனதில் ஒருவித ஆவல் உற்சாகமாக உண்டாகி விட்டது. வீட்டில் ஏதாவது சொன்னால் என்ன செய்வது. ஏனென்றால் சங்கத்தில் அங்கத்தினர்கள் இருபாலர்களும். இருவரும் சேர்ந்துதான் இத்தனை காலம் சங்கத்தின் நடவடிக்கைகளை எல்லாம் கவனித்து வந்திருக்கிறோம். இதற்கு மட்டும் நீங்கள் வேண்டாம் என்று ஒருவரை மற்றொருவர் சொல்ல முடியுமா? எப்படி முடியும்? இவ்வளவு தூரம் படித்து பகுத்தறிவு உள்ளவர்கள் ஆயிற்றே. படிப்பும்தான் சேர்ந்து ஒன்றாக படிக்கிறோம். எல்லா விஷயங்களிலும் ஒற்றுமையுடன் இருக்கும்போது இதில்

உட்கார்ந்திருப்பவர் :- என்ன சாஸ்திரிகளே! நீங்களும், குடுத்தனக்காரரும் காலையிலிருந்து ஏக இரைச்சல் போட்டுக்கொண்டிருந்தீர்களே! என்ன விசேஷம்?

பக்கத்து வீட்டுக்காரர் :- ஒரு மாசமா, எனக்கும் அவருக்கும் பேச்சு வார்த்தையே கிடையாதுங்காணும்! அதுதான்!

மட்டும் விட்டுக்கொடுப்பானே என்றது மனம். டிராமா 'அனார்கலி' போடுவதாக தீர்மானித்தோம். நான் நன்றாக பாடுவேன். மேலும் 'அழகி' என்றும் பெயர் பெற்றிருந்தேன். 'அனார்கலி' பாகத்தை நான் நடிக்க ஒப்புக்கொண்டேன். 'ஸலீம்' பாகத்தை சங்கக் காரியதரிசியே எடுத்துக்கொண்டார். ஒத்திகைகள் நன்றாக நடைபெற்றன. ஆண்டுவிழாவின் தினம் நெருங்கியது. ஊரில் உள்ளபெரியமனிதர்கள், என் பெற்றோர்களும்கூட வந்திருந்தனர். நாடகம் ஆரம்பிக்க ஒரே மணி நேரம்தான் பாக்கி இருந்தது. பூர்ண மேக்கப்புடன் காரிலிருந்து இறங்கி விடு விடு என்று நடந்து 'க்ரீன்' ரூமிற்குள் சென்றேன். காரியதரிசி சுந்தரவதனம் என்னை அழைத்தார். சென்றேன்.

'என்ன, மஞ்சுளா' எல்லாம் ஜோராக நடக்கும் என்று எதிர்பார்க்கிறேன். உங்கள் ஒத்துழைப்பு ரொம்ப முக்கியம்' என்றார்.

'சுந்தர், ஒத்திகையைக் காட்டிலும் இன்று பிரமாதமாக நடித்துப் புகழ் அடையலாம்'என்றேன்.

கதையே காதல் கதை. என் உள்ளமும் காதல் வசம்– அதுவும் சுந்தரிடம் லயித்திருந்தது. அனேக நாட்கள் அவர்பால் என் மனம் ஏக்கம் கொண்டது உண்டு.

'இன்றுஎனக்கு ரொம்ப பிடித்த தினம் சுந்தர்' என்று கூறிக்கொண்டே வந்துவிட்டேன். நாடகம் அருமையாக நடந்தேறியது. எங்கு திரும்பினாலும் ஒரே புகழ்மயம். என் பெயரை 'அனார்கலி' என்றே மாற்றிவிட்டார்கள். அன்றுமுதல் கண்ணா, என் வாழ்க்கையே மாறிவிட்டது. சுந்தரவதனத்துடன் சுற்ற ஆரம்பித்தேன். காலேஜூம் விடுமுறைக்காக மூடினார்கள். சந்திப்புகள் அதிகரித்தன. ஒருவரை மற்றொருவர் மனமார நேசித்தோம். என் பெற்றோர்கள் அவரை மணப்பதை சம்மதிக்கவில்லை. ஜாதி வித்தியாசம் பாராட்டினார்கள். அவர் மிக செல்வந்தர் வீட்டுப் பிள்ளை என்னைவிட சொத்துகள் ஏராளமாக இருந்தன. 'மஞ்சு! நீ என்னை நம்பமாட்டாயா. நாம்தான் படித்தவர்கள் ஆயிற்றே. பிழைக்கும் வழிதான் அரிதா' என்றார்.

'உங்களைவிட்டு இனி ஒரு கணமும் இருக்கமுடியாது சுந்தர். என்மனம் எப்படி அடித்துக் கொள்கிறது தெரியுமா' என்றேன்.

மறுவாரமே 'ரிஜிஸ்டர்' திருமணம் செய்து கொண்டோம். பணவசதி இருந்தது. காதலித்து மணம் புரிந்துகொண்ட இரு இளம் உள்ளங்கள் ஒன்றையொன்று தொடுவதற்கு துடித்தன. என் பெற்றோர்களைப்பற்றி கவலைப்படாமல் (அவர்களைநினைத்துதான் அந்நிலையில் எனக்கு அவர்களால் ஆகக்கூடிய காரியங்கள்தான் என்ன) 'நீலகிரி எக்ஸ்பிரஸி'ல் உதகையை நோக்கி இன்ப நாட்களை கழிக்க போய்க் கொண்டிருந்தோம்.

இரண்டு மாதங்களுக்கு இன்ப வாழ்க்கையில் மூழ்கியிருந்தோம். 'ஒரு நாள் அவருக்கு பம்பாயிலிருந்து உத்தியோகத்திற்கு 'ஆர்டர்' வந்தது. கூடிய சீக்கிரமே வீடு முதலிய வசதிகளை செய்து என்னை அழைத்துப் போவதாக சொல்லி என்னை அவருடையபெற்றோர்களிடம்விட்டுச் சென்றார். நாட்கள் சென்றன. வீடு கிடைக்கவில்லை என்று ஒவ்வொரு கடிதத்திலும் எழுதினார். உத்தியோகமோ பெரிய 'அமெரிக்கன் ஏரோப்ளேன்' கம்பெனியில். மாத சம்பளம் எடுத்த எடுப்பிலேயே ரூ 600 கொடுத்தார்கள். இப்பொழுது இன்னும் கூடவே அதிகமாக வாங்குவதாக எழுதினார். என் ஏக்கத்தையும், பிரிவாற்றாமையையும் கண்டு நான் போய் ஒருமுறை பார்த்துவருகிறேன் என்று போன மாமனார் திரும்பிவர ஒரு மாதம் ஆயிற்று. ஏன் இவ்வளவு நாட்கள். ஒருவேளை நீங்களும் சேர்ந்து வீடு தேடிப்பார்த்தேளா? கிடைத்துவிட்டதா என்றெல்லாம் கேட்டேன். அவர் கூடிய சீக்கிரம் கிடைத்துவிடும் என்று சொன்னார். அன்றிரவு தூக்கம் வரவில்லை. எங்கள் காதற் கடிதங்களை எடுத்துபடிக்க ஆரம்பித்தேன். அவரே என்னுடன் பேசுவது போலிருந்தது. திடீரென்று கதவு அடித்துக்கொண்டது. பாழும் காற்றுக்கு எப்பொழுது அடிக்கவேண்டும் என்று கூட தெரிகிறதில்லைஎன்று நினைத்துக் கொண்டே சென்று கதவை சரியாக திறந்துவைத்தேன். மணி 12 அடித்தது. மாமனாரின் அறையில் அழுகைக் குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து மாமனாரின் பேச்சு கொஞ்சம் பலமாக வந்தது. 'உன் பிள்ளை ரொம்ப நன்றாகயிருக்கிறான். தினம் குடி. சரஸசல்லாபங்கள் பலமாக அவனைச்சுற்றி பின்னிக்கொண்டிருக்கிறது. அவனிடம் ஒரு 'பார்ஸி' ஜாதிப் பெண் இருக்கிறாள். அவள் சொல்படி 'உன் பிள்ளை சுற்றுகிறான். இப்பேர்ப்பட்ட பிள்ளையை என்ன செய்வது. வீடு தான் அவன் எப்படி பார்க்கமுடியும். இதை எல்லாம் எப்படி மஞ்சுவிடம் சொல்வது' என்றார். அவைகளை நின்று கேட்டுக்கொண்டிருந்த இடத்திலேயே சிலையாக மாறினேன். மனிதன் நிலைதான்

என்ன? என்னிடம் எவ்விதம் நடந்து கொண்டாரோ அப்படியே இன்று மற்றொருவளுடன். என் வயிற்றில் அவரது சின்னம் வளர்ந்து வந்து கொண்டிருந்தது. அப்படியே அவ்விடத்தில் மயக்கமடைந்து விழுந்தேன்.

'மஞ்சுளா! மனதை ரொம்ப அலட்டிக்கொள்ளாதே. உன்னை நம்பிதான் ஒரு சிசு உன் வயிற்றில் வளர்ந்துவருகிறது. நீ கலவரப்பட்டால், கவலைப்பட்டால் ஏதாவது கெடுதல் ஏற்படலாம். உயிருக்கே ஆபத்து வந்தாலும் வரும் என்றாள்' நர்ஸ். என் நிலைமை கொஞ்சம் சரியாக ஆவதற்குமுன் என் மாமியார் பிள்ளையின்போக்கைக்கண்டு பித்தம் பிடித்தவள் போல் ஆகிவிட்டாள் மாமனாரும் மனம் நொந்தார். இச்சமயத்தில் குடும்பத்தில் மற்றொரு இடி ஏற்பட்டது. தான் வேலை விஷயமாக அயல்நாடு செல்வதாகவும், திரும்பிவர சில வருஷங்கள் ஆகும் என்றும் என் கணவர் கடிதம் எழுதினார்.

அவருடைய பெற்றோர்களுக்கு விஷயத்தை தெரியப்படுத்தினேன். உம். கெட்டது இங்கு போதாது போலிருக்கிறது. இன்னும் அயல் நாட்டில் என்ன பாக்கியிருக்கிறதோ என்று விசனப்பட்டார்கள். இரண்டு மாதங்களில் மாமியார் இறந்தாள். ஒரு புறம் பிள்ளையின் போக்கு, மறு புறம் என்னுடைய பரிதாபகரமான நிலைமை, இறந்த தன் மனைவியின் பிரிவாற்றாமை இவற்றால் மாமனாரும் இவ்வுலகை விட்டு அகன்றார். நான் பூர்ண கர்ப்பிணியாக ஆனேன். வீட்டு சமையல்காரி, வேலைக்காரர்கள்தான் எனக்கு உறவினர்களாக இருந்து வந்தார்கள். கடவுள் கிருபையால் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தேன். கடந்து சென்ற எனது ஒரு வருஷ வாழ்க்கையில் தான் என்னென்ன மாறுதல்கள் மின்னல் வேகத்தில் தோன்றி மறைந்தன. நினைக்கவே பயமாகயிருக்கிறது. சிநேகம். காதல், மணம், உல்லாஸ இன்பவாழ்க்கை. கைமேல் பரிசு. வயிற்றில் சிசு தோன்றுதல். கணவன் வேலை நிமித்தமாக பம்பாய் சென்றது. அங்கு அவரின் போக்கு. அதைப் பற்றி நான் பட்ட துயரம். மாமியார், மாமனார் பரிதாபமான முடிவுகள். என் பிரசவம். நாளா வட்டத்தில் ஊரில் பேச்சுவளர ஆரம்பித்தது. கையில் குழந்தை,

144106.



மனைவி:- நான் புடவைக் கடைக்குப் போய் ஒரு புடவை வாங்கப்போறேன்! நீங்க வேணுமானு—இந்தே நாழி எங்கேயாவது போயிட்டுவரேளா?''
கணவன்:- சரி! நான் இந்தப் பக்கத்து தியேட்டர்லே சினிமா பார்த்து விட்டு வந்துடறேன்!''

உற்றூர், உறவினர் கிடையாது. இளமைப் பருவம். வேலைக்காரர்களும் தங்கள் போக்கில் மாற ஆரம்பித்தார்கள். சரி. இனிமேல் அவ்விடத்தில் நம்மால் காலம் கடத்தமுடியாது. ஊரை விட்டு போவதுதான் வழி என்று தோன்றியது. பணமும் கரைந்தது. வீட்டையும் விற்றேன். ஒரு வயது குழந்தை உன்னை எடுத்துக்கொண்டு இவ்வூருக்கு வந்தேன். சிறு பெண்களுக்காக ஒரு பாட்டு பள்ளிக்கூடம் ஆரம்பித்தேன். பள்ளிக்கூடமும் வளர்ந்தது. நீயும் வளர்ந்துவிட்டாயடா கண்ணே. உனக்கு ஒரு வேலைகிடைத்து நீ இங்கேயே என்னுடன் வாழ்ந்தால் அதுவே எனக்கு போதும் கோபால்' என்ருள்.

'எங்கே காலேஜ் படித்தால் நானும் என் அப்பா மாதிரி ஆகி உன்போல் ஒருத்தியை பிடித்து இவ்வளவு தூரம் வரைக்கும் போய்விடுவேனே,என்றுஎன்னைப் பற்றி பயப்படுகிருயா அம்மா. அந்த பயமேவேண்டாம். எனக்கு வெளிச்சத்தை காண்பித்தாய். ஆனல் இருளை சொல்லாமலே நீக்கிவிட்டாய் இவ்வளவு நாட்களாக.உன்னையும் சந்தோஷப்படுத்த என்னல் இயன்றதை முயற்சித்துப் பார்க்கிறேன்' என்றேன்.

'ஏம்மா, அப்போ அப்பா என்ன வானர்?' என்றேன்.

'ஒரு தகவலும் இல்லையடா. வருஷம் பதினெட்டு ஆயிற்று. கடிதம் வரமுடியாது. ஏன் என்ருல் விலாஸம் இருவருக்கும் தெரியாது. பேப்பரில் செய்தி ஏதாவது கிடைத்தால்தான்' என்ருள்.

சீக்கிரமாகவே எனக்கு ஒரு கம்பெனியில் 'காஷியர்' வேலை கிடைத்தது. நாட்கள் பறந்தன. கம்பெனியில் எங்கள் 'ரிக்ரியேஷன்' கிளப்பின் முதல் ஆண்டு விழா வந்தது. ஒரு நாடகம் போட 'பிளான்' செய்தோம். அம்மாவும் எங்கள் நாடகத்தை பார்ப்பதற்காக வந்திருந்தாள். காதலி வேஷம் தாங்கி நடித்தேன். காதலர் கைவிட்டார் என்னை நாடகத்தில். ரொம்ப துயரப்படுவதைப்போல் நடித்து, ஒரு கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டேன். எல்லோரும் நாடகம் முடிந்துபோய்விட்டார்கள். நானும் சற்று வேகமாகவும், அவசரமாகவும் மேக்கப்பை கலைத்தவண்ணமிருந்தேன். அம்மா காத்திருப்பாள். நாடகம் எப்படி என்று கேட்க வேண்டும் என்று என் தாய் உட்கார்ந்துகொண்டிருந்த இடத்தை நோக்கி சென்றேன். என் தாய் என்னையே பார்த்தாள். கண் இமைகளை ஒரு கணம்கூட கொட்டவில்லை. அப்படி பார்த்தாள். ஏன் என்னைப் பார்த்துக்கொண்டேதான் இருந்தாள். என்தாய் இறந்தவளாகவே தோற்றமளிக்கவில்லை. மனம் அதிர்ச்சி அடைந்திருக்க வேண்டும். வேறு என்ன காரணம். உடம்பும் ஒன்றும் இல்லை. உயிர் உள்ள பதுமைபோல்தான் உட்கார்ந்து இருந்தாள். ஆனல் இவ்வுலகை மறந்துவிட்டு அப்பதுமையில் உணர்ச்சி இல்லை. உஷ்ணம் இல்லை. உயிரற்ற பதுமையாக மாறியிருந்தாள். அவளைக் கட்டி அணைத்து வீட்டிற்கு எடுத்துச் சென்றேன். இரவு எல்லாம் அவள் சடலத்தின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு அவளது வாழ்க்கையை திருப்பி நோக்கினேன். என்ன வாழ்வு வாழ்ந்தாள் என்தாய் என்று என்மனம் என்னை அரித்துக் கொண்டிருந்தது. இருள் நீங்கியது. வெளிச்சம் வரத் தொடங்கியது. ஆனல் என் உள்ளத்திலிருந்து இருள் இன்னமும் நீங்கவில்லை. எப்படி நீங்கமுடியும் நீங்களே சொல்லுங்கள்.

கூடைக் கொண்டை, எல்டி கொண்டை, பாம்பு கொண்டை, வெண்ணெய்ச் சுருள் ஜடை—நீலகிரியில் வாழும் பூர்வீகக் குடிகளாகிய தோதவ மங்கையர்கள் இன்றைக்கும் தங்கள் கூந்தலில் வெண்ணெய் தடவி சுருட்டி நீளமாக விட்டு விடுகிறார்கள்.





கூந்தலழகு

பிலோ ஹிருதயநாத்

சென்ற வார படங்களில் வெளியான ''கொஞ்சி கேரட்'' கொண்டை நீலகிரியில் வாழும் பூர்வீகக் குடிகளாகிய கோத்த மங்கையர்கள். ஒரு செடியின் இலைகளைச் சிறு கட்டாகக்கட்டி நூல் தடி அளவுக்கு உருண்டையாக உருட்டிக் கட்டி தங்கள் தலை அளவுக்கு வெட்டி. கூந்தலை அதில் சுருட்டி, கொண்டை ஊசி குத்திக்கொள்ளுகிறார்கள்

'ரிங் லெட்': ஆங்கிலேயர்கள் போட்டுக் கொள்வது. ''வலையினுள் சுருள் கொண்டை'': இதுவும் ஆங்கிலேயர்கள் போட்டுக்கொள்ளும் கொண்டை.

தண்டனை

ப.ரா.

★

குன்றின் உச்சியிலிருந்து பார்க்கும்போது, நாற்புறமும் இயற்கையின் பரிபூரண எழில் புலனாகிக் கண்களைக் குளிர்வித்தது.

சமீபத்தில் அமோகமாக பெய்திருந்த மழையால் பல தடாகங்கள் தண்ணீர் நிரம்பி நின்றன. குளம் காணப்படாத மற்ற சம வெளிகளில், பச்சைப் பசேலென்று இளங்காற்றில் தலையாட்டியது நெற் பயிர். வயல் வேலைகளில் ஈடுபட்டிருந்த விவசாயிகளின் பாட்டுக்குப் பின்னணி சங்கீதம்போல் பட்சிஜாலங்கள் நானாவித ஒலியெழுப்பியபடி அங்குமிங்கும் பறந்துகொண்டிருந்தன. மாடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் தன்னைக் கோபாலனின் அவதாரமாகப் பாவித்தவன்போல் புல்லாங்குழல் ஒன்றை வாயில் வைத்து கர்ண கடூரமான ஓசைகளை உண்டாக்கினான்.

இடதுபுறம் கண்ணுக்கெட்டிய தூரம்வரை வியாபித்திருந்தது ஓர் பெரிய தென்னந் தோப்பு. அதனூடேயிருந்து மெல்லெனத் தவழ்ந்து வந்தது தென்றல். இன்பகரமான ஓர் நறுமணம் காற்றில் கலந்து விரவியிருந்தது.

குன்றின் கற்பாறைகள் மீது ஆட்டுக்குட்டிகள் சில துள்ளி விளையாடும் காட்சி எங்கள் கவனத்தைக் கவர்ந்தது. கிராமத்து சூழ்நிலையில் பழகியிராதவர்களுக்கு வியப்பளிக்கும் வகையில் அவை லாவகமாகப் பாறையினின்று பாறைக்குத் தாவுவதும், ஒன்றோடொன்று முட்டிக்கொண்டு சண்டை பழகுவதுமாகக் களிப்பில் ஆழ்ந்திருந்தன. காமிரா நண்பர் வேதநாயகம் தங்களது குறும்புகளைப் பல 'போஸ்'களில் படமெடுப்பது அந்த ஆட்டுக்குட்டிகளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

'என்ன ஐயா, காற்றை மோப்பம் பிடித்துப் பெருமூச்சு விடுகிறீர்? இளநீர்காய் வேண்டுமென்றால் வாயைத் திறந்து கேட்பதுதானே?' என்றார் மிராசுதார் சதாசிவ முதலியார். நாங்களெல்லாம் அவரது அதிதிகள். அந்தப் பிரும்மாண்டமான தென்னந் தோப்பும், பல ஏக்கர் விஸ்தீரணமுள்ள நெல் வயல்களும் அவருக்குச் சொந்தம். சுருங்கச் சொன்னால், அந்தக் கிராமத்துக்கும் அதன் சுற்றுவட்டாரத்திற்கும் அவர் ஒரு அரசர் மாதிரி. சென்னையிலிருந்து வந்திருந்த எங்களுக்கு அவர் செய்ததும் ராஜோபசாரம்தான்!

'மன்னிக்கவேண்டும், முதலியார்வாள். சமையலை மோப்பம் பிடித்தவனிடம் காசு கேட்ட சமையற்காரனைப் போலல்லாமல், நீங்கள் குறிப்பறிந்து எங்கள் தேவையைப் பூர்த்திசெய்யக் கூடியவரென நான் அறியவில்லை. மலைமேலே ஏறிவந்த சிரமத்தால் தாகம் அதிகமாக இருக்கிறது. குடிக்கக் கொஞ்சம் இளநீர் பானம் கிடைத்தால் நன்றாகத்தான் இருக்கும்' என்றேன். இதர நண்பர்களும் தலையை ஆட்டி என் வேண்டுதலுக்குப் பக்கபலம் சேர்த்தனர்.

மேலேயிருந்தபடியே கம்பியில்லாத் தந்திபோல் முதலியாரின் கட்டளை பிறந்தது. கீழே நின்ற தென்னந்தோப்புக் காவற்காரர்கள் அதைச் செவியுற்று மூலைக்கொருவராக ஓடி, ஆளுக்கு ஒரு மரமாக ஏறிக்கொண்டனர். அப்புறம் சொல்வானேன்? அடுத்த சில நிமிஷங்களுக்குள்ளாக இளநீர் காய்கள், வெட்டரிவாள் எல்லாம் எங்கள் கண்முன்பு தோன்றின. சுவையும் குளிர்ச்சியும் மிக்க பானத்தை வேண்டியமட்டும் பருகினோம்.

'வழுக்கை வேண்டுமா?' என்று கேட்டார் முதலியார்.

'வேண்டாம், வேண்டாம் தலைமயிர் வளரும் மருந்துதான் தேவை' என்று அவசரமாகப் பதிலளித்தார் நண்பர் சேகரன். அதற்குள்ளாகவே அவர் கை தலையைத் தடவிக்கொண்டிருந்தது.

'அட பாவமே! அதைச் சொல்லவில்லை ஐயா. இந்தக் காய்க்குள்ளிருக்கும் முற்றாத தேங்காய்க்கு 'வழுக்கை' என்று பெயர். அது சாப்பிடுவதற்கு வெகு நன்றாய் இருக்கும்' என்று முதலியார் விஸ்தரித்தார்.



'ஓ! அதைத்தான் சொன்னீர்களா? எங்கே, கொஞ்சம் கொடுங்கள். ஒருகைபார்க்கிறேன்' என்று சேகரன் துணிவுடன்முன்வர 'வழுக்கை விருந்து' ஆரம்பமாயிற்று. அது முடிந்தபின் மற்றொரு முறை 'தாகசாந்தி.' பலியிடப்பட்ட இளநீர்க்காய்களின் உடல்கள் சின்னாபின்னமாக எங்களைச் சுற்றிக் கிடந்த காட்சியைக் காணச் சகிக்காமல் மெல்ல அங்கிருந்து நகர்ந்தோம். குன்று முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட வேண்டுமென்பது எங்கள் அவா.

அது எளிதான காரியமாக இல்லை. பாறைகள் பல செங்குத்தாக வழியை மறித்து நின்றன. ஒவ்வோரிடத்தில் கால் சருக்கினால் மறுகணம் அதபாதாளத்தில் விழுந்து எலும்பு நொறுங்கிக் கிடக்கவேண்டும். எதிர்பார்க்கக்கூடியபடியே முதலியார் சற்று ஸ்தூல தேகம் படைத்தவர். ஆட்டுக்குட்டிகளின் லாவகத்தை அவர் பெற்றிருக்கவில்லை. பாவம், மனிதர் மிகுந்த சங்கடப்பட்டார். ஆனால் பின்தங்க மட்டும் இசையவில்லை. குறைந்தபட்சம் எங்களையாவது அனுமதித்திருந்தாரானால், நாங்கள் நாலு பேருமாகச் சேர்ந்து அவரை 'அலக்'காகத் தூக்கிக் கொண்டு போயிருப்போம். அதற்கும் அவர் மறுத்துவிட்டு, மேல் மூச்சு வாங்க நடந்து வந்து கொண்டிருந்தார்.



'என்ன மிஸ்டர் வேதநாயகம், நல்ல 'ஸ்னாப்'புகள்எல்லாம் எடுத்துக்கொண்டீரா?' என்று நண்பரை வினவினேன். அவர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துச் சிரித்தார்.

அதன் அர்த்தம் எனக்குப் புரிந்தது. முதலியாரின் திணறலை ஒரு படம் எடுக்க வேண்டுமென்னும் பெரிய சபலத்துடன் அவர் போராடிக்கொண்டிருந்தார். ஆனால் மரியாதை பிரச்னை குறுக்கே நின்றது. இதுபற்றி மிகுந்த நகைச்சுவையுள்ள முதலியாருக்குத் தெரிந்திருந்தால் அவர் தக்ஷணமே முன்வந்து உற்சாகத்துடன் நண்பரைத் திருப்தி செய்திருப்பாரென்பதில் ஐயமில்லை. ஆனால் பெரிய மனிதரிடம் மென்மையான விஷயத்தைத் தெரிவிப்பது எப்படி என்றுதான் தயங்கினோம்.

குன்றைச் சுற்றி நேர்கோணமாக வளைந்து சென்றது விஸ்தாரமான ரஸ்தா. அவ்வளைவுக்கு நேரே ஒரு பனை உயரத்துக்குக் குன்றின் பகுதி ஒரே செங்குத்தாக நின்றது. அங்கிருந்து கீழே பார்த்தோம். வயிறு கலங்கியது.

தூரத்தில் 'பூம், பூம்' என்று ஹார்ன் ஒலி கேட்டது. அடுத்த நிமிஷம் சாலை வளைவில் தோன்றிய புத்தம்புதிய மோட்டார் பஸ் ஒன்று விரைந்து வந்து அந்த நேர்க்கோண திருப்பத்தைத் தாண்டிச் சென்றது. அது எழுப்பிய புழுதிப்படலம் அடங்கும்வரை பேசாது நின்றோம்.

‘அது ‘காளி மோட்டார் ஸர்வீஸை’ச் சேர்ந்த பஸ். இந்தப் பிரதேசத்தில் அதுதான் பெரிய போக்குவரத்து கம்பெனி. வெகு திறமையுடன் நிர்வகிக்கப்படும் பொதுஜனங்களின் பாராட்டைப் பெறுவது’ என்று விளக்கினுர் முதலியார்.

மறுபடியும் ஹார்ன் சப்தம். இப்போது எதிர்த் திசையிலிருந்து இன்னொரு பஸ் வந்து சர்வ ஜாக்கிரதையாக அந்த வளைவை கடந்துசென்று மறைந்தது.

சேகரன் தம் வழுக்கைத் தலையைத் தடவியபடி சொன்னுர்:—

‘இது ஒரு பயங்கரமான வளைவு என்றெண்ணுகிறேன். ஒரு பக்கத்திலிருந்து வரும் வண்டிகளுக்கு எதிர் பக்கம் தெரியவோ, தெரிந்தாலும்ஒதுங்கவோ மார்க்கமில்லையே. பஸ் டிரைவர்கள் வெகு விழிப்புடன் இருக்கும்வரை நல்லது. ஆயினும் மனிதன் மனிதன்தானே’ எப்போதாவது சிறிது அசிரத்தையாக வண்டியை ஓட்டி வந்து...’

‘நீங்கள் நினைப்பது சரி. அம்மாதிரியான சந்தர்ப்பங்களில் விபத்து நேரக்கூடியதென்பது மட்டுமல்ல. இதற்குள் நேர்ந்தே இருக்கிறது’ என்றுர் முதலியார். தன் புத்திநுட்பத்தை நாங்களெல்லாம் வியக்கிறோமா இல்லையா என்றறியச் சேகரன் ஒரு பார்வையை நாற்புறமும் செலுத்தினுர். எங்களைப் பாராதவர் போல் பார்ப்பதாக அவர் எண்ணம்!

இத்தருணத்தில்தான் இதுவரை எங்கள் கவனத்திற்குத் தப்பிவிட்ட அச் சிறு கல்மண்டபம் அவரது பார்வையில் சிக்கியது.

‘என்ன இது? இந்த மூளிக் குன்றின் மேல் யாரோ ஒரு மண்டபத்தை வேறு கட்டி வைத்திருக்கிறுர்களே!’ என்றுர் சேகரன் வியப்புடன்.

‘அது கட்டப்பட்ட விவரம் தான் பெரிய கதை ஐயா. இப்போது சொன்னேனே, ஒருசாலை விபத்து நேர்ந்ததென்று அதற்கும் இக் கல்மண்டபத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது’ என்றுர் முதலியார்.

‘அதாவது அவ்விபத்தில் மாண்டவர்களுக்கு நினைவுச் சின்னமாக இதைக் கட்டி. வைத்தார்களோ?’ என்று கேட்டபடியே காமிராவை ‘போகஸ்’ செய்தார் வேதநாயகம்.

‘அட போம் ஐயா. உம் கற்பனு சக்தி சர்வ சாதாரணமாக அல்லவா இருக்கிறது? இம்மண்டபம் விபத்தின் காரணமாக இருந்தவனுக்கு ஞாபகச் சின்னம்’ என்று முதலியார் ஒரு போடுபோட்டதும் எல்லோரும் திகைத்துப் போனேம். ‘இதேதடா விபரீதமாக இருக்கிறது? இப்படியும் எங்காவது உண்டா?’ என்ற சம்சயம் எங்கள் முகத்தில் பிரதிபலிப்பதை வெகு திருப்தியுடன் பார்த்து அனுபவித்தார் சதாசிவ முதலியார்.

பொறுமையின்மைக்கு பெயர் போன சேகரன் ‘என்ன? ஒரு பொதுஜன விரோதிக்கு கொலைகாரனுக்கு மரியாதையா?’என்று பொருமினுர்.

‘ஐயா. அந்த மனிதன் காலமாகி இப்போது பலஆண்டுகள் கடந்து விட்டன. அவனைப் பழித்து என்ன பிரயோசனம்? தற்சமயம் நீங்கள் செய்யக் கூடியதெல்லாம் எவ்விதமான காரணங்களுக்காக எத்தகைய முறையில் அவன் அக்குற்றமிழைத்தான் என்று புரிந்து கொள்ள முயல்வதுதான்’ என்று முதலியார் அவனுக்கு வக்காலத்து வாங்கிப் பேசினுர்.

‘கொஞ்சம் நில்லுங்கள். அவன் ஒரு பஸ் டிரைவர்தானே?’ என்று குறுக்கிட்டுக் கேட்டார் சேகரன். முதலியாரின் வெற்றிப் புன்னகை மீண்டும் அவர் முகத்தை வியாபித்தது.

‘மறுபடியும் தவறு செய்கிறீர்கள் அங்கே. அவன் பஸ் ஓட்டியுமல்ல, அந்தப்பஸ்ஸில் ஒரு பிரயாணி கூட அல்ல. முற்றிலும் வேற்று மனிதன்’.

‘பின் விபத்து எப்படி நேர்ந்தது?’

‘அதில்தானே இருக்கிறது விஷயம்! கதையைக் கேளுங்கள்! இந்த இடத்தை உங்களுக்குக் காண்பிக்கவேண்டும். கதையைச் சொல்லவேண்டும் என்பதற்கல்லாமல் பின் வேறு எதற்காக நானும் இவ்வளவு சிரமப்பட்டு இங்கே வந்திருக்கிறேனென்று எண்ணுகிறீர்கள்? வாருங்கள், அந்த மண்டபத்திலேயே போய் உட்கார்ந்து பேசலாம்’ என்று முதலியார் அழைக்க; நாங்களெல்லோரும் அதை நோக்கி நடந்தோம்.

உரிய காலத்தில் கதை ஆரம்பமாகியது.

• • •

‘என் தகப்பனுரிடம் ஊழியம் செய்து வந்த பண்ணையாட்களுள் முத்துக் குப்பன் ஒருவன், முக்கியமானவனும்கூட. அவனிடம் அவருக்கு மிகுந்த நம்பிக்கை. அவனும் வெகு நன்றி விசுவாசத்துடன் நெடுநாளாக உழைத்துவந்தான்.

நற்குணங்கள் பல படைத்த உத்தமனுயினும் முத்துக் கருப்பனிடம் ஒரே ஒரு குறை இருந்தது. அவன் பெரிய முன் கோபக்காரன்; முரடன். சினங்கொண்டு விட்டானுனல் கண்மண் தெரியாது காரியம் செய்துவிடுவான். எனவே நாள்தோறும் உதையும் திட்டுமாக அனுபவித்துக் கொண்டு காலந்தள்ளிய அவனது ஒரே மகன் திடீரென ஒருநாள் ஊரைவிட்டே ஓடிவிட்டபோது யாரும் ஆச்சரியப்படவில்லை.

முத்துக் கருப்பனின் மனைவி ஏற்கெனவே காலமாகி விட்டிருந்தாள். இப்போது முற்றிலும் காலியாகக் கிடந்த வீட்டில், கோபம் வந்தால் சட்டிப்பானைகளை நொறுக்கவேண்டும் அல்லது சுவரைத்தான் இடிக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டது முத்துக் கருப்பனுக்கு. தனிமை தன் முழு வன்மையுடன் அவனைத் தாக்கியது. பிரிந்த தன் மகனைப் பற்றிய கவலையும் வாஞ்சையும் மேலிட்டன. ஆனுல் பையனைத் தேடிப் பிடிக்க அவன் செய்த பெரு முயற்சிகள் பலன் தரவில்லை.

முத்துக் கருப்பனின் வாழ்வு தனிமைத் துன்பத்தில் உழலும் காலத்தில் அங்கொரு விசித்திர மாறுதல் தோன்றியது. சிறு காளைக் கன்று ஒன்று எப்படியோ அவன் வசம் சேர்ந்தது. ஓடிப்போன தன் மகனின் நினைவு வருமாறு ‘வேலன்’ என்று அதற்குப்பெயரிட்டு,அருமையாக வளர்க்கத் தொடங்கினுன். உண்மையில் அதைத் தன் மகன் போலவே பாவித்து அன்பைச் சொரிந்து வளர்த்தான் எனல் மிகையாகாது. ஆனுல் முன் கோபம் மட்டும் அவனிடம் அடங்கிவிட்டது. அத்தீக்குணத்தின் விளைவை அவன் அனுப

பவித்தே அறிந்துகொண்டுவிட்டான் போலும்!

வேலை நேரம் போக மற்ற பொழுதெல்லாம் 'வேலனின்' பராமரிப்பிலேயே கழிந்தது. நாள் தோறும் குளிப்பாட்டக் கொண்டுபோவான். மனிதனும் மாடுமாகச் சேர்ந்து குட்டையை குழப்புவார்கள். அதற்குத் திருப்தியான வகையில் சொரிந்து கொடுப்பதற்காகப் புலி நகம் போல் தன் நகங்களை வளர்த்திருந்தான். அன்றாடம் பச்சைப்புல் பிடுங்கி வந்து அதன் வாயில் கொடுப்பதும் அது படுத்துக் கொள்வதற்குக் கோணிகளை விரிப்பதும் முத்துக்கருப்பனுக்கு மிகவும் மகிழ்ச்சி தரும் கடமைகள். மொத்தத்தில் அவன் தன் உயிரையே அந்த ஜீவனிடம் வைத்துவிட்டான்.

வேலன் வளர்ந்து கன்றுப் பருவம் நீங்கிக் காளையாகிற்று. காளையென்றால் அசல் மயிலைக் காளை. உடல் வலிவும் நடைப் பொலிவும் கொண்டு துடுக்காய்த் திரிந்தது. பிரத்தியேகமாக ஒரு சிறு வில்வண்டி செய்வித்து வேலனை அதில் கட்டிப் பழக்கினான் முத்து. அதில் அவன் ஒருவன்தான் ஏறி உட்காரலாம். காளைக்கு அதிக கஷ்டம் கொடுக்கக் கூடாதல்லவா? அவசரத்துக்கு யாராவது வண்டியை உபயோகித்துக்கொள்ள வேண்டினால் கண்டிப்பாக மறுத்துவிடுவான். 'வேலனின் சந்தோஷத்துக்காகத்தான் நான் வண்டி செய்திருக்கிறேனே தவிர சவாரிக்காகவல்ல' என்ற அவன் பேச்சைக் கேலி செய்தவர்கள் ஊரிற் பலர் இருந்தனர்.

வாஸ்தவத்தில் வேலன் வண்டியிழுக்கும் வேலையை ஓர் உல்லாசப் பொழுது போக்காகவே எண்ணி மகிழ்வுடன் செய்தது. இரவு வேளையிலே அதை வண்டியில் கட்டிச் சாலையில் வெகு தூரம் வரை பவனி செல்வான் முத்து. அவனது தெம்மாங்குப் பாட்டுக்களைக் கேட்டுத் தலையை ஆட்டியபடியே, கழுத்துச் சதங்கைகள் ஒலி செய்ய வேலன் செல்லும். நிலா வெளிச்சம் வேறு

"விருந்தாளியெல்லாம் வராளே... இன்னிக்காவும் ஒரு பேப்பர் வாங்குங்கோளேன்!"

"போடி பைத்தியம் ... பைத்தியம் பேசாமே வா!"

இருந்துவிட்டாலோ, கேட்கவே வேண்டாம், அவர்களது குதூகலத்துக்கு!

இந்நிலையில்தான் இந்தப் பக்கத்துச் சாலைகளில் புதிதாகப் பஸ்கள் ஓட ஆரம்பித்தன. முந்தற்படியில் விடப்பட்டது ஒரே ஒரு பஸ்தான். அது காலையில் இவ்வழியாகப் போகும்; இரவில் திரும்பிவரும். மோட்டார் வண்டியைக் கண்ணாலேயே பார்த்தறியாத நாட்டுப்புற வாசிகளுக்கு அது ஓர் புதுமையாக அமைந்தது; அதற்கேற்றாற்போல, அந்தப் பஸ்ஸின் டிரைவரும் ஒரு கண்மூடித்தனமான பேர்வழி. கிராம வாசிகளை இன்னும் வியப்பிலாழ்த்தித் தன் பெருமையை நிலைநாட்ட வேண்டுமென்னும் முட்டாள்தனமான ஆசையால் தூண்டப்பட்ட அவன், லக்ஷியமில்லாத வேகத்தில் வண்டியைச் செலுத்துவான். ரஸ்தா நன்றாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. அவனுக்கு ஒன்றுதான். அந்தப் பஸ்ஸினடியில் சிக்கி உயிரிழந்த நாய்கள், ஆட்டுக்குட்டிகள் பல. ஆனால் அவனை ஏனென்று கேட்கும் தைரியம் யாருக்கும் இல்லை.

இதெல்லாம் முத்துக்கருப்பனுக்குத் தெரிந்த விவரங்கள் தாம். எனவே அவன் தன் வண்டியை விபத்தில் அகப்படாத வகையில் எவ்வளவோ ஜாக்கிரதையாகத்தான் ஓட்டினான். தூரத்தில் அந்தப் பஸ்வரும் ஒலி கேட்டால், கூடுமானபோது வண்டியைச் சாலையை விட்டே கீழிறக்கிவிடுவான். என்ன செய்து என்ன? பொல்லாத விதியொன்று இருக்கிறதே, அது பஸ் டிரைவரின் கைகளை இயக்கிய சைத்தானோடு சேர்ந்து சதி செய்து விட்டது.

ஒரு நாள் இரவு. கும்மிருள் உலகத்தைக் கவ்வியிருந்தது. வண்டிக்குள் ஹரிக்கேன் லாந்தரை ஏற்றி வைத்துக்கொண்டு பக்கத்தூருக்கு நாடகம் பார்க்கப் புறப்பட்டான் முத்துக் கருப்பன். வண்டி இந்தத் திருப்பத்துக்கருகில் வரும்போதுதான் மறுபுறமிருந்து பஸ் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அவன் வண்டியிலிருந்து குதித்தான்; வேலனின் மூக்கணாங்கயிற்றைப்பற்றி இழுத்து ரஸ்தாவின் ஓரம் சேர்க்க முயன்றான்.

வளைவில் திரும்பிய பஸ்ஸின் பிரகாசமான முன்புற விளக்குகளின்ஒளி கண்ணிற்பட்டதும் வேலன் சிறிது மிரண்டுவிட்டது. ஒரே துள்ளலில் கயிற்றை அறுத்துக்கொண்டு நடு ரஸ்தாவுக்குப் பாய்ந்தது. வண்டியும் முத்துக்கருப்பனும் பின் தங்கிவிட்டனர்.

கடுவேகமாக வந்து கொண்டிருந்தது பஸ். எனினும் ஒரு கணத்தில் 'பிரேக்' போட்டோ அல்லது வேகத்தைக் குறைத்தோ அந்த ஏழை மிருகம் உயிர்தப்ப டிரைவரால் அவகாசம் அளித்திருக்க முடியும். திமிர்பிடித்த அவனோ அப்படிச் செய்யவில்லை. மாடு தானாக விலகிவிட வேண்டுமென்று அவன் எதிர்பார்த்தான்.

விளைவு? இன்னொரு உயிர் பலி! பஸ் வேலனைத் தூக்கியெறிந்து மறுகணம் நன்றாக நசுக்கிச்சென்றது. தன் சொந்தக் குழந்தை போல் வளர்த்த மயிலைக்காளையின், கோர மரணத்தை முத்துக்கருப்பன் கண்ணாலேயே பார்த்தான். அவன் நெஞ்சம் வெடித்துப் போகாததுதான் ஆச்சர்யம்!

"ஏன் ஐயா, உனக்கு மூளையில்லை? மாட்டை அடக்க முடியாவிட்டால் வண்டியில் ஏன் கட்டிக்கொண்டு வருகிறாய்?" என்று திட்டிக்கொண்டே பஸ்ஸை நிறுத்தக்கூட நிறுத்தாமல் போனான் அந்த டிரைவர். அது முத்துவின் காதில் விழுந்ததோ என்னவோ!

ரத்த வெள்ளத்தில் கிடந்து மரண வேதனையால் துடித்துக் கொண்டிருந்த வேலனைக்கண்டு அவன் உள்ளமும் தீயில் விழுந்த புழுவெனத் துடித்தது. கோவெனக் கதறியழுவதைத் தவிர அந்நிலையில் அவனால் செய்யக்கூடிய தொன்றுமில்லை. சற்று நேரத்துக்குள்ளாகவே வேலனின் வேதனைகள் முடிவுற்றன. முத்துவின் முகத்தைப் பார்த்துத் தீனக்குரல் எழுப்பியவாறே அம்மிருகம் விடைபெற்றுக்கொண்டது.

அவன் உள்ளம் துயர மேகங்களால் கவியப்பட்டிருந்தது, திடீரென இடிபோல் வெடித்துக் குமுறியது. மின்னலொளியனைய வேகத்தில் அங்கு பிறந்தது ஓர் பைசாச வேட்கை.

ஆம், பழிக்குப் பழி! அங்கு சிந்திக்கிடந்த வேலனின் இரத்தத்துக்குப் பதில் இரத்தம்! இதே இடத்தில், இதே முறையில் அது நிறைவேறவேண்டும். மனிதத்தன்மையற்ற அந்தப் பஸ் ஓட்டியை மட்டுமல்ல, அப்பஸ்ஸையும்கூடச் சின்னாபின்னம் செய்ய வேண்டும்!

இதில் நிரபராதிகளான இன்னும் எத்தனை பேருக்கு அபாயமென்பதை ஒருகணம் முத்து சிந்திக்காமலில்லை. ஆனால் அந்த எண்ணத்தை மறுகணமே உதறித்தள்ளினான் அவன். பிற மனிதர்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க முடியாது. அந்தப் பாழும் பஸ்ஸில் ஏறிய குற்றத்துக்கு எல்லோருமாக அனுபவித்துத்தானகவேண்டும்.

இதற்குப்பிறகுபலநாட்கள்வரை முத்துக்கருப்பனை ஊரில் காண்பதே அரிதாகிவிட்டது. அவன் எங்கு போகிறான், என்ன செய்கிறான் என்பது யாருக்கும் தெரியவில்லை.

ஆனால் இந்தக் குன்றுக்கு மட்டும் உண்மை தெரிந்திருக்க வேண்டும். நாள் தவறாமல், சூரியன் அஸ்தமித்தவுடன் இங்கே அவன் தன் வேலையைத் தொடங்குவான். வேலையென்றால் அது சாதாரணமானதல்ல. கைகால் சோர்ந்து அறிவும் மயங்கும் வரை உழைப்பான். பின் இவ்விடத்திலேயே படுத்திருப்பான். உடலில் எவ்வளவுதான் வலுவுள்ள மனிதனாயினும், தன்னந்தனியாக, அத்தனை பெரியதொரு கற்பாறையைத் தக்க சாதனங்களின் உதவியால் மெல்ல மெல்ல நகர்த்திச் செல்வதற்குப் பெரும் மனோதிடமும் சலியாமையும் தேவை. முத்துவைச் சதாகாலமும் இயக்கிய பழிவாங்கும் உணர்ச்சி அதைச் சாதித்தது.

அதோ சாலையை அடுத்துச் செங்குத்தாக நிற்கும் பாறையைப் பார்த்தீர்களல்லவா? அதன் ஓரத்தில் ஓர் சிறு சரிவும் இருக்கிறது. ஓர் அங்குல இடைவெளியில் சமநிலை செய்து கொண்டு முத்துவால் நகர்த்தப்பட்ட அந்தப் பிரம்மாண்டமான கற்பாரை தன் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி நின்றது.

மயிலைக்காளையின் பரிதாப முடிவு நேர்ந்ததிலிருந்து சரியாக ஒரு மாதம்.

அதே பஸ் அதே டிரைவரால் செலுத்தப்பட்டு விரைந்து வந்து கொண்டிருந்தது. கிட்டத்தட்ட வேளையும் அதே வேளைதான். கையில் கடப்பாரை சகிதம் மேலே தயாராக நின்றான் முத்துக்கருப்பன். அவன் உள்ளத்தில் கடைசி நிமிஷப் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. பஸ்ஸில் நிரபராதியான எத்தனை ஜனங்கள் இருக்கிறார்களோ!

சைத்தானின் ஏவலுக்கு இன்னுமோர் வெற்றி. அநியாயக் கொலையுண்ட வேலன் கண்முன் நின்று 'அம்மா'வெனக் கதறுவது போன்ற ஒரு தோற்றம். ஆவேசத்தால் உந்தப்பட்ட முத்து பாறையின் அடியில் கடப்பாரையைப் புகுத்தி ஒரு எம்பு எம்பினான்.

வினாடிக்கு வினாடி கணக்கிடப்பட்டுச் செய்த வேலை அது. பஸ் கீழே வருவதற்கும் மேலிருந்து பாறை உருண்டு விழுவதற்கும்



பிரபல விளம்பர ஏஜன்ஸி அதிபராகவிருந்த லேட் ஸ்ரீ வெங்கடராவ் ஸிஸ்டாவின் பெண்களான குமாரி கோமளா, குமாரி லக்ஷ்மி இருவரும் 4-4-54 அன்று பம்பாய் ஜெய் ஹிந்த் காலேஜ் ஹாலில் ரூபகலாகேந்திரத்தின் 6-வது வருட விழாவின்போது நடத்திய பரதநாட்டிய, அபிநயக் கச்சேரிக்கு மத்திய அரசாங்க மந்திரி ஸ்ரீ வி. வி. கிரி தலைமை வகித்தார்.

சரியாக இருந்தது. அவ்வளவு திறமையுடன் அம்மாதிரி வேலையைப் பெரிய ராணுவ எஞ்சினீயர்கள்தான் செய்திருக்கமுடியும்!

பஸ்ஸின் எஞ்சின் வெடித்துப் பாகங்கள் நொறுங்கும் பேரொலி பிரயாணிகளின் தீனக்குரல்கள் வானை எட்டின. பஸ் நிலைதவறி மறு பக்கமிருந்த பெரும் பள்ளத்தை நாடிச் சென்று தலைகீழாக அதில் இறங்கியது. மேலே 'ஹோஹோஹோ' வென்று பேய்ச்சிரிப்புச் சிரித்தான் முத்துக்கருப்பன். ஒருவர் கூட உயிர் தப்பியிருக்கமுடியாது. அதிலும் முக்கியமாக அந்த டிரைவர்......

ஆனால் அத்தாற்காலிக மான பைசாச வெறிதீர்ந்த மறு நிமிஷமே தன் அறிவிழந்த கொடுஞ் செயலின் தன்மை அவனுக்கு விளங்கத் தொடங்கிற்று.

பள்ளத்தில் மோட்டார் விழுந்த இடம் ஒரே கருமையில் மூழ்கிக்கிடந்தது. இப்போது அங்கிருந்து ஒரு அரவமும் எழவில்லை. எல்லாம் சமாப்தியாகியிருந்தது. யார் யாரோ, எத்தனை குழந்தைகளோ, அபலை ஸ்திரீகளோ! இவ்விபத்தின் பரிதாப எதிரொலிகள் வேறெங்கிருந்தெல்லாம் ஒலிக்கப் போகின்றனவோ! குற்றத்தின் ரகசியம் வெளியானால் தன் கதிதான் என்னாகுமோ!

விவரிக்கமுடியாத ஒரு அச்சம் முத்துவின் நெஞ்சைக்கவ்வியது. அதே இடத்திலிருந்து தன்னையும் ஏதோ ஒரு சக்தி அப்பள்ளத்திற்குள் இழுக்க முயல்வது போல் உணர்ந்தான். இம்முறை அப்பிரயாணிகள் ஆவிகள் அவனைப் பழிவாங்க முற்பட்டால் ஆச்சரியமில்லை. எல்லாம் ஒரு பெரும் பயங்கர ஸ்வப்பனம்! அட கடவுளே!

தள்ளாடும் கால்களைப் பலவந்தம் செய்து திரும்பிப் பாராமல் அங்கிருந்து கிராமத்தை நோக்கி ஓட்டமெடுத்தான் அவன். குன்றைத் தாண்டிக்கொண்டு மறு பக்கமாய் இறங்கி அவன் எப்படித்தான் வீடுவந்து சேர்ந்தானோ தெரியாது. குடிசைக்குள் புகுந்து விளக்கைக்கூட ஏற்றாமல் படுக்கையில் விழுந்தான், இரவெல்லாம் தூக்கம் பிடிக்காமல் புரண்டான். பொழுதுவிடியும் சமயத்தில் தான் அவனது தன்னடக்கம் சிறிது திரும்பியது.

மெல்ல எழுந்து பல் விளக்கப் புறப்பட்டவனின் பார்வையில் கீழேவிழுந்துகிடந்த ஓர் தபால் கார்டு சிக்கியது. முந்திய தினம் மாலை தபாற்காரன் அதை அங்கே எறிந்துவிட்டுப் போயிருக்கவேண்டும். வெகு அபூர்வமாகக் கடிதங்கள் பெறும் முத்துக் கருப்பன் ஆவலோடு அதைப் பொறுக்கினான். முற்றிலும் பழக்கமில்லாத கையெழுத்து அவன் மகனுடையது என்று உடனே அவனுக்குப் புரியவில்லை. புரிந்தபோது ஆவலால் மார்பு படபடத்தது. இதர உணர்ச்சிகள் மறைந்தன.

சென்னையிலிருந்து எழுதப்பட்ட கடிதம் அது. "மதிப்பிற்குரிய தந்தையாரவர்கட்கு மகன் வேலன் அனந்தகோடி நமஸ்காரம். பதினைந்து வருஷங்களுக்குப் பின்வரும் இக்கடிதம் தங்களுக்குப் பெரு வியப்பளிக்கக் கூடும். நான் வீட்டை விட்டுப் பிரிந்தபின் எப்படியோ கப்பலேறி அக்கரைச் சீமைகளுக்குச் சென்றேன். பினாங்கு, சிங்கப்பூர் முதலான இடங்களில் முதலில் சேவகாவிருத்தி செய்து ஜீவித்தவன் விடாமுயற்சியாலும் இறைவன் கருணையாலும் விரைவாக முன்னுக்கு வந்து பெரிய வியாபாரியானேன். இப்போது பல லக்ஷம் பெறுமான சொத்துக்களுக்கு நான் அதிகாரியென்பதையறிய உங்களுக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்படுமென நம்புகிறேன். அயல்நாட்டு வாழ்க்கை அலுத்துவிட்டபடியால் வியாபாரத்தை இன்னொருவர் கைக்கு மாற்றிவிட்டுத் தாய்நாடு புறப்பட்டு நேற்று வந்த கப்பலில் சென்னையை அடைந்தேன். இங்கு பணமாற்றல் சம்பந்தமான சில முக்கிய விவகாரங்களைக் கவனித்துக்கொண்டு நாளை மாலை வரும் பஸ்ஸில் ஊர் வந்து சேருகிறேன். மற்றவை நேரில். இங்ஙனம் தங்கள் திருமுகம் காண விழையும் மைந்தன்—வேலன்" என்றிருந்தது அதில்.

முதன்முறை கடிதத்தைப் படித்த முத்துக்கருப்பனின் உள்ளம் ஆனந்தத்தால் பொங்கிப் பூரித்தது. மறுபடியும் வாசித்தான். 'நாளை மாலை வரும் பஸ்ஸில்....' என்ற வார்த்தைகள் அவன் மனதில் பதிந்து சில விநாடிகளில் நெருப்புத் தணலால் வரையப்பட்டவை போன்று ஜ்வலிக்கத் தொடங்கின. பேரிடிபோல் உண்மை புரிந்து அவன் தலைமேல் விழுந்தது.

அதே பஸ்! ஆண்டவனே, இது என்ன விபரீதம்!

முந்திய இரவு அவன் பலியிட்ட நிரபராதிகளான பிரயாணிகளுள் வேலனும் ஒருவன். மாட்டிற்குப் பழி வாங்கும் வஞ்சத்தில் மகனையும் ஒழித்துவிட்டான் முத்துக்கருப்பன். இந்தப் பாழும் கடிதம் மாலையிலேயே அவன் கையில் கிடைத்திருக்குமாகில் அவ்விபரீதம் தவிர்க்கப்பட்டிருப்பதுமன்றி இப்போது அவன் ஆனந்தக் கடலில் திளைக்கவேண்டியவன். ஆனால் முத்துதான் வீட்டிலேயே இருப்பதில்லையே. கடிதம் கிடைக்காததற்காக யாரைப் பழி சாற்றுவது?

'கண்ணிலான் பெற்றிழந்தான்' முத்துக்கருப்பனின் தலை சுற்றியது. இரத்தம் தலைக்கேறியது. சுவரைப் பிடித்துக்கொள்ள முயன்றான். பலனில்லை. உணர்ச்சிப் பெருக்கு அமானுஷ்யமான பலம் கொண்டு அவனை உந்திச் சென்று குடிசையின் மூலையில் தள்ளியது. அங்ஙனமே பிரக்ஞையிழந்தான். எங்கோ சிறு ஒளி வீசிய நம்பிக்கைத் தீபமும் அணைய பஸ் பள்ளத்தின் கருமையில் வீழ்ந்ததுபோல். அவன் உள்ளமும் மீளாத் துயரக் கடலில் மூழ்கிற்று. அதற்கு மேல் சுயப் பிரக்ஞையை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

அந்த அதிர்ச்சி சிலமணி நேரத்துக்குள்ளாகவே முத்துக்கருப்பனின்உயிரையும் கொள்ளை கொண்டு சென்றது. சாகுமுன் சற்றுநேரம் ஸ்மரணை வரப்பெற்றவன் அருகிலிருந்த அயலாரிடம் தன் பெரும் குற்றத்தை ஒப்புக்கொண்டான். 'எனக்கு ஆண்டவன் விதித்த தண்டனை இது' என்ற வார்த்தைகள் அவனது கடைசி மூச்சோடு வந்தன. பள்ளத்தில் சின்னாபின்னமாகச் சிதறிக் கிடக்கும் 'வேலனின் உடலோடு என் சடலத்தையும் அடக்கம் செய்யுங்கள்' என்ற அவனது வேண்டுகோளை அயலார் பூர்த்தி செய்ய முற்பட்ட நிலைமையில் முழு மனித உருவத்துடன் திடீரென வந்து நின்றான் வேலன். அனைதைப் பிணமாக இல்லாமல் தந்தையை அடக்கம் செய்யும் பவித்திரமான பொறுப்பை அவனே மேற்கொண்டான்.

உண்மை இதுதான். அவன் அந்தத் துர்க்கதி கொண்ட பஸ்ஸில் வரவில்லை. ஏதோ தவிர்க்க முடியாத சில காரணங்களால் பிரயாணம் தடைபட்டதால் அடுத்த நாள் ரயில் மார்க்கமாக வந்து சேர்ந்தான். அவனை வரவேற்றது தந்தையின் சடலமும் இந்தப் பரிதாபக் கதையும்தான். விதி அத்தனை நுட்பமாகத் திட்டமிட்டு வேலை செய்திருந்தபோது அதை யாரால் தவிர்த்திருக்க முடியும்?

வேலனிடம் பணம் இருந்தது. முறைப்படி தந்தையை அடக்கம் செய்ததோடல்லாமல், இதே குன்றின் மீது அவரது நினைவுச் சின்னமாக இம்மண்டபத்தைக் கட்டுவித்தான். 'கொலைகாரப் பாவிக்கு மரியாதைச் சின்னமா?' என்று பொங்கிய ஊர்க்காரர்களை அவன் பொருட்படுத்தவில்லை. சூக்ஷ்மமான அறிவு கொண்டு பார்க்கும்போது எவ்வளவு பெரும் மனோவேதனையும் ஆவேசமும் தன் தகப்பனை இயக்கிவைத்துக், கொடுஞ் செயல் புரியத் தூண்டியிருக்கவேண்டுமென வேலனால் உணர முடிந்தது.

அடுத்தபடியாக அவன் செய்த காரியம் அந்தப் பஸ் கம்பெனியின் சகல உரிமைகளையும் தானே விலைக்கு வாங்கிவிட்டதுதான். அதற்கும் அவனுக்குத் தக்க காரணம் இருந்தது. வியாபார நுட்பமறிந்த அவன் கையில் கம்பெனி செழித்து, இப்போது 'ஸ்ரீ காளி பஸ் ஸர்வீஸ்' ஆக விளங்குகிறது. தகுந்த பஸ் ஓட்டிகளைப் பொறுக்கும் விஷயத்தில் மட்டும் அவன் பிரத்யேகமான சிரத்தை எடுத்துக்கொள்வதையும் இங்கே குறிப்பிடலாம். தன் தந்தையின் சரித்திரம் அவனுக்கு ஓர் பெரிய படிப்பினையாக விளங்கியது."

• • •

முதலியார் கதையை முடித்தார். அவர் சொன்னதெல்லாம் உண்மையென ஆமோதிப்பது போல் தூரத்தில் வந்துகொண்டிருந்த இன்னொரு மோட்டார் பஸ்ஸின் ஹார்ன் 'பூம், பூம்' என ஒலி செய்தது.

இந்த அபூர்வமான கதையைக் கூறி முடித்து எங்களை மகிழ்வித்த ஸ்ரீ முதலியார் அடுத்தபடியாகப் பக்ஷண மூட்டைகளை அவிழ்க்கத் தொடங்கினார். அவர் நீடூழி வாழவேண்டுமென்று ஏகோபித்த பிரார்த்தனையோடு (இது சுயநலப் பிரார்த்தனையென்று சொல்லவேண்டியதில்லை!) நாங்கள் தின்பண்டங்களை ருசித்தோம்.

இன்றுவரை, அம்மண்டபத்தின் எழுச்சிக்குப் பின்னணியாக நின்ற முத்துக்கருப்பனின் வரலாறு எங்கள் மனதை விட்டகலவில்லை.

விவாஹம்

விஸ்வநாதன்—மங்களாம்பாள்

பிருத்வி இன்ஷ்யூரன்ஸ் மானேஜர் ஸ்ரீ வீ. கோபாலனின் சகோதரர் குமாரரும் தக்ஷிண ரயில்வேயைச் சேர்ந்த சிர. V. R. விஸ்வநாதனுக்கும், நல்லூர் ஸ்ரீ நாகரத்தினம் அய்யர் குமாரத்தி சௌ. மங்களாம்பாளுக்கும் தஞ்சையில் சமீபத்தில் விவாகம் நடந்தேறியது.



சென்னை திருவல்லிக்கேணி ஹைரோடில் அமைந்திருக்கும் செம்பிறை ஆஸ்பத்திரி ஏழாவது ஆண்டுவிழா சமீபத்தில் கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா தலைமையில் கொண்டாடப்பட்டது

வரகவி வேதாந்தம்

பரசுராம்

வரகவி வேதாந்தத்தை உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஏனெனில், காட்டிலே மலர்ந்து தனது இனிய சுகந்தத்தை காற்றிலே வீணுக்கி, இயற்கையின் நியதிக்குக்கட்டுப் பட்டுக் காய்ந்து கருகிப்போன ரோஜா மலர் அவர்.

தஞ்சை ஜில்லாவில் இன்னும் எத்தனையோ கிராமங்கள் போக்கு வரத்து வசதியின்றி சர்க்காருடைய 'ஹைவேஸ்' இலாக்காவிலுள்ள 'பிரம்மா'க்களின் கிருபைக்கும் பாத்திரமாகாமல், கப்பிரோட்டு நாகரிகம் கூட இன்னதென்று தெரியாமல், 'வயக்காட்டின்' மத்தியில் அமைந்துள்ள இந்த கிராமங்களிலிருந்து, சமீபத்திலுள்ள ரயிலடிக்குப் போய்ச் சேருவதென்பது, ஒரு ஜாமத்துக் கட்டை வண்டிப் பிரயாணம் செய்யாமல் ஆகாதகாரியம். இத்தகைய கிராமங்களில் ஒன்றுன குடிக்காட்டில் பிறந்து, வளர்ந்து அங்கேயே மறைந்தும் விட்டான் வரகவி வேதாந்தம்.

வேதாந்தத்திடம் எனக்கு முதலில் அவ்வளவாகப் பரிச்சயம் கிடையாது. நெல் கண்டு முதல் சமயம் ஒருநாள், களத்துமேட்டில், என் களத்துக்கு அடுத்த களத்தில் உட்கார்ந்து வேதாந்தம் தன் குடியானவர்களிடம் ஏதோ சர்ச்சை செய்து கொண்டிருந்தார். சர்ச்சை முற்றி சண்டையாக மாறி, முடிவில் 'அய்யருக்கு 'வாரம்' கொடுப்பதில்லை' என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள், குடியானவர்கள். வேதாந்தம் நயந்தும், பயந்தும் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். ஊஹூம்! குடியானவர்கள் மசிவதாக இல்லை. திடீரென வேதாந்தம் ஆவேசம் வந்தவர் போல ஒரு கவிபாடிஞர்.

"ஆரோக்கியன் மகனே,வாளி
அட பலே, சூசா! வாளி!
ஊரைப் பொன்ஞக்கி வைத்த
உன் தாயார் சவுறி வாளி!
சேறியில் நீங்க ளெல்லாம்
செயம் பெற வாள்வீராக!"

என்று பாடி முடித்தார்.

அங்கு நின்ற சேரிக் குடியானவர்களுக்கு தரையில் கால் பாவவில்லை. மகுடிக்காரன் வசப்பட்ட நாகம்போல, 'அய்யா கவி பாடுருக! அய்யா கவி பாடுருக!' என்று கூச்சலிட்ட வண்ணம், வேதாந்தத்தின் 'வாரத்'தைப் பிரித்து அளந்து கட்டிவிட்டார்கள்!

கவிஞர்களுக்கு முற்காலத்தில் மன்னர்கள் 'அட்சர லட்சம்' கொடுத்தார்கள் என்பதில் சிறிதும் சந்தேகத்துக்கு இடமில்லை. இதோ என் கண்முன் ஒரு கவி தன் வாக்குச் சாதுர்யத்திஞல் பகைமையை அடிமைக் கொண்டு விட்டானே!

இதன் பின்னர் நான் வேதாந்தத்திடம் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டேன். கையில் பேஞவும், பேப்பரும் என்னிடம் எப்போதும் தயாராக இருக்கும் —வேதாந்தம் அதிக காலம் ஜீவித்திருக்கவில்லை! அவருடைய இந்தக் குறுகிய ஜீவிய காலத்தில் அவர்பாடியகவிகளில் சிலவற்றை அவை பாடப்பட்ட இடம், காலம் முதலிய விவரங்களுடன் உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

• • •

ஒரு சமயம் வேதாந்தத்துடன் எங்கள் கிராமத்தை அடுத்த 'கட்டிவயல்' என்ற ஊருக்குப் போயிருந்தேன். அங்கும் வேதாந்தத்துக்குக் கொஞ்சம் நிலபலன்கள் உண்டு. வயல்களைப் பார்வையிட்டு விட்டுத் திரும்பப் பகல் உச்சியை நெருங்கிவிட்டது. எங்கள் இருவருக்கும் தாக வரட்சியால் நாக்கு உலர்ந்துவிட்டது.

வேதாந்தம் சொன்னுர்;"அதோ தெரிகிறதே, சிவன் கோயில், அங்கு ஒரு கேணி இருக்கிறது; போய் தாக சாந்தி செய்து கொள்வோம்" என்ருர். இருவரும் சிவன் கோயிலை அடைந்தோம். கோயிலில் கேணி இருந்ததென்னவோ வாஸ்தவம்! ஆனல் தண்ணீர் இறைத்துச் சாப்பிட தேவையான உபகரணங்கள் ஒன்றும் அங்கு காணப்படவில்லை.

வேதாந்தம் சிவன் சந்நதியில் வந்து நின்று கொண்டு,

"கட்டிவயல் சிவனே!
கயிறும், ஒரு குடமும்
இட்டால் அரைக் கணத்தில்
ஈகுவேன்"

என்று கவி பாடினுர்.

பின்னர், கோயில் இடிந்து, பாழடைந்து நிற்பதையும், சிவனுடைய பரிதாபமான நிலையையும் பார்த்துவிட்டுச் சிவபெருமானே சொன்னதாக ஒரு பதிலையும் கற்பனை செய்து கொண்டு

"சிட்டா கேள்! பஞ்சம்! ஒரு
மனைவி ஒரு மாடு, இருபாலர்,
வள்ளி, குஞ்சரிக்கும் காற்
பணத்துக்குள்!" என்ற பதில்

கவியைப் பாடினுர்.

(காற்பணம்=கோவிலுக்கு மான்யமாக விடப்பட்ட நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானம் தினம் ஒன்றுக்கு சராசரி அரை அணு என்ற பொருள்பட பாடினுர்)

• • •

"நமது கிராமமே ஒரு விசித்திரமானது. ஒவ்வொரு சமயம் நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது" என்ருர் வேதாந்தம், ஒரு நாள். அவர் தொடர்ந்து சொன்னுர்:

"இந்தக் காத்தான் இருக்கிருனே, இவன் ஒரு கல்யாணப் பித்து. வயது அறுபதை எட்டிவிட்டது. பிர்ம்மசாரியாகவே தன் ஆயுசில் பெரும் பகுதியை செலவழித்துவிட்ட இவன் தன் வாலிபத்தில் கொஞ்சநாள் கல்யாணம் செய்துகொள்ள ரொம்பவும்

'பிகு' செய்து கொண்டான்.மற்ற குடியானவர்களைக் காட்டிலும் தனக்குக் கொஞ்சம்'பசை' அதிகமாக உள்ளது என்ற கர்வத்தில் இந்த ஊரில் 'பெண் எடுக்க' முதலில் மறுத்துவிட்டான். பின்னர் அவன் மனசு மாறி 'கண்ணுலம் கட்டிக்கிட' ஆசைப்பட்டபோது அவனுக்கு ஊரார்பெண்கொடுக்க மறுத்தனர்! இப்படியாக அவன் வாழ்வு பாழாகிவிட்டது. ஆனுல் இன்னமும் கல்யாண ஆசை அவனைவிடவில்லை. 'ஏய், காத்தான்! கோவிலூர் வேளாருக்கு இருபது வயதில் ஒரு பெண் இருக்கிருள். போய்ப் பாரடா' என்ருல் கிளம்பிவிடுவான்.

'நமது குசவேளான் 'ஊமையன்' இருக்கிருனே அவன் ஏனே எப்போது பார்த்தாலும் ஒரு முட்டிக் கலயத்தை சுருக்குப்போட்டு தொங்கவிட்டுக் கொண்டே திரிகிருன், பார்! இரு தினுசுப் பைத்தியம்.

'கீழக்கரை கருப்பையா அம்பலம் இருக்கிருனே அவனுக்குச் சின்ன வயதில் யாரோ 'குறி' சொன்னுர்களாம், பெரிய புதையல் அவனுக்குக் கிடைக்கப் போகிறதென்று. அது முதற் முதற்கொண்டு எப்போதும் மண் மேடு கண்ட இடங்களை, எலிவளை பறிப்பதுபோல் தோண்டிக் கொண்டே இருப்பான் இவன்–இது புதையல் பைத்தியம்.

'நம் சுப்பையாவைத்தான் உனக்குத் தெரியும். மந்திரத்தால் மாங்காயை மரத்திலிருந்து கீளே விள வைச்சுடுவேன் என்று மார்தட்டுவான். முத்தளகு இருக்கிருனே அவன் எப்படித் தெரியுமோ, எவன் ஏமார்ந்திருப்பான் யாரை எப்படித் தந்திரத்தால் ஏமாற்றிக் காலம் கடத்தலாம் என்ற விசாரம்தான் சதா அவனுக்கு. இதுகள் இரண்டும் மந்திர தந்திர பைத்தியங்கள். நிற்க.

'வெள்ளையன் மகன் செல்லையா இருக்கிருனே அவனை கிராமத்தில் மாதத்துக்கு இரண்டே இரண்டு நாட்கள்தான் பார்க்கலாம். மற்ற நாட்களில் பேராவூரணி மாஜிஸ்திரேட் கோர்ட்டில்தான் பார்க்கலாம். சதா கோர்ட்டு விவகாரங்கள்தான் அவனுக்கு. இப். போது சட்டப் புத்தகத்தின் ஏடுகளை அலசிப் பார்த்துவிட்டதாகவேதான் அவன் நினைப்பு. கிராமத்தில் தங்கும் இரண்டு நாட்களிலும் அவன் பேச்சு 'செக்ஷன் 302, பின்னல் கோர்ட்டுக்குளே தண்டிச்சுட்டாக' என்ற தினுசில்தான் இருக்கும்.

'அந்த ஆறுதினுசு பைத்தியங்களுக்கும் சிகரம் வைத்தாற் போல சதா கவி பாடும் ஏழாவது தினுசுப் பைத்தியம் இருக்கவே இருக்கிறேன், நான்' என்பார்.

'இவை எல்லாவற்றையும் சேர்த்து ஒரு கவியாப் பாடுங்களேன்' என்று நான் கேட்டதற்கிணங்கி:

'கலியாணமொன்று, கட்டுக்
கவி யொன்று, முட்டிக் கலய
மொன்று
சலியா வழக்கொன்று, மந்
திரமொன்று, தந்திரமொன்று
தனமதற்கென்று,
எலியாய் பறித்திடுமொன்று–
குடிக்காட்டிலேழு பைத்தியமே!'
என்று பாடியேவிட்டார்.

• • •

'நம் கிராமத்துக் குடியானவப் பெண்களுக்கு 'ல'காரம் வாயில் நுழையாது. 'அடி, அளமேளு! பளகாரம் சாப்புட்டியா?' என்று தான் பேசுவார்கள். இவர்களைப் பற்றி ஒரு குட்டிக் கவி பாடுகிறேன் குறித்துக்கொள்' என்ருர் வேதாந்தம் ஒரு தினம்.

அவர் பாடிய கவி இதுதான்:

'ல'காரம், 'ள'காரமாக மாறித்
திரிவது– இவ்வூர் விகார வைசிய
மெல்லியர்க்கியல்பே!

• • •

'நம்ம அப்பண்ணையங்கார் பிள்ளையாண்டான் திருவேங்கடத்தைத் தெரியுமா உனக்கு?' என்று கேட்டார் வேதாந்தம்.

'பேஷாகத் தெரியுமே! ஆசாமிக்குகூட ஒரு 'மறை' 'லூஸ்' என்பதும் தெரியும்!' என்றேன் நான்.

வேதாந்தம் சொன்னர்: 'அவனுக்கு வாய்த்த மனைவியும் ஒரு 'லூஸ்' ஜாடிக்கு மூடி போடுவது போல! எப்படித்தான் அவனுக்கு அப்படிப்பட்ட பெண்ணைப் பார்த்து ஜோடி சேர்த்தார்களோ.

'ஒரு நாள் அவர்கள் வீட்டுக்கு திருவேங்கடத்தின் தூர பந்து ஒருவர் வந்திருந்தார். அவரைப் பார்த்ததுமே மிஸஸ் திருவேங்கடம் அன்று 'சமையல் டௌன் ஸ்ட்ரயிக்' செய்ய ஆரம்பித்து விட்டாள். குடத்தை எடுத்துக் கொண்டு காலை எட்டு மணிக்குக் குளத்திற்குப் போனவள், மணி பத்தாகியும் திரும்பினபாடில்லை. ஒரு 'சூளை' துணிகளை எடுத்துப் போய் தோய்த்தாள், தோய்த்தாள், தோய்த்துக்கொண்டேநின்றுள். திருவேங்கடத்துக்கு வயிறு கிண்ட ஆரம்பித்தது. மேலும், வந்த விருந்தாளி வேறு பழி கிடக்கிருன். இதை நினைத்துத் திருவேங்கடம் குளத்துக்குப்போய் மெள்ள மனைவியிடம், சீக்கிரம் வீடு திரும்பும்படி கேட்டுக் கொண்டான். ஆனல், அவள் பத்ரகாளி சொரூபம் எடுத்துக் குடத்தால் திருவேங்கடத்தை அடிக்கவே வந்துவிட்டாள். வேறு வழியின்றி வீடு திரும்பினன் திருவேங்கடம்.

'இந்தக் காட்சியின் பின் பகுதியை மறைவில் நின்று பார்த்த நம்ம நமிட்டு விஷம நாராயணன். கிச்சு ராமு மூவரும், திரும்புகால் திருவேங்கடத்தை மடக்கிக்கொண்டு குளக்கரையில் நடந்ததை ஆதியோடந்தமாய் சொல்லச் சொன்னர்கள். திருவேங்கடம் முதலில் வாய் திறக்க மறுத்தான். நாராயணன் அவனுக்குப் பலமாக ஒரு அறை கொடுத்து 'நடந்ததை நடந்தவாறு சொல்லாவிட்டால் இன்னும் 'பூசைக் குட்டி' கிடைக்கும்' என்று பயமுறுத்தவே, திருவேங்கடம் எல்லா விஷயத்தையும் கக்கிவிட்டான்.

'இந்தச் சம்பவத்தை ஒரு வெண்பா மூலம் பாடிக்காண்பிக்கிறேன் கேள்!' என்று ஆரம்பித்தார் வேதாந்தம்:

செப்புக் குடங்கொண்டு
சேயிழையாள் சாட,
'தப்பிதம் யான் செய்த'தெனத்
தாழ- இப்புவியில்
கண்டோர் உவக்கக் காறு
திருவேங்கடம்
வாய் விண்டான் அறையால்
விரைந்து!'

• • •

பொழுதுபோக்குக்காக வேதாந்தம் சில சமயம் கதைகள் கூடச் சொல்லுவார். அவர் ஒரு நாள் சொன்ன ரசமான கதை ஒன்றை சொல்லுகிறேன்:

ஒரு கோடீஸ்வரனுக்கு திருவேங்கடம், கண்ணுக்கினியான் என்று இரண்டு பிள்ளைகள். திருவேங்கடம் உதார குணம் படைத்தவன். அண்டி வந்தவர்களுக்கு இல்லை என்று அவன் சொன்னதில்லை. கண்ணுக்கினியானே குணத்தில் அண்ணனுக்கு நேர் எதிரிடை.

திருவேங்கடத்திடம் கவிபாடி பொருள் வாங்கிப்போகும் எண்ணத்தில் அமலன், விமலன் என்று இரண்டு கவிஞர்கள் அவர் வீட்டை நாடி வந்தார்கள். ஆனல் துரதிருஷ்டவசமாக திருவேங்கடம் வீட்டிலில்லை. கண்ணுக்கினியான் வழக்கம்போல கவிஞர்களுக்குக் கையை விரித்துவிட்டதோடு, ஒரு வேளை உணவு கூடப் போடாமல் விரட்டிவிட்டான்.

அமலன் ஆத்திரத்தில் ஒரு கவி பாடினன்:

தேன் பிறந்த வாயான் திரு
வேங்கடத்தானுடனே
ஏன் பிறந்தான் கண்ணுக்
கினியானே?

விமலன் சொன்னன்:
'வான் பிறந்த சீதேவியாருடனே
ஏன் பிறந்தாள் மூதேவி முன்?'
என்று முடித்தார் வேதாந்தம்.

• • •

இவ்விதம் கவிபாடி, கதை சொல்லி, எங்களுக்குக் களிப்பூட்டின பிறவிக் கவி வேதாந்தம் இன்று இயற்கை அன்னையின் மடியில் மறைந்து கிடக்கிருர். அவர் மறைவினல் எங்களுக்கும், தமிழ் நாட்டிற்கும் ஏற்பட்ட துயரம் சொல்லில் அடங்காது.

ஆபிஸ் ஸ்தாபிதம்: 1924
பிரபல ஜோதிஷர்
★

மகாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் பார்த்து எழுத ரூ 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ.2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை
★
பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்
தபோநிதி
தியாகராயநகர், மதராஸ்-17
தபால் பெட்டி 1417

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD
குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக்கண்டு ஏமாருதீர்
Dr. பிள்ளா பாப்ய்ய பாத்ருடு & பிரதர்,
19, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 85251
கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

ஓர் ஊரில் ஒரு செல்வன் இருந்தான். அவனிடம் அளவு கடந்த நிலங்களும், ரொக்கமும், நகைகளும் இருந்தன. அவ்வளவிருந்தும் அவன் நல்ல உணவு உண்ணமாட்டான்; நல்ல உடை உடுத்த மாட்டான்; ஒரு பைசா தானமும் செய்யமாட்டான். தினமும் காலையில் படுக்கையை விட்டெழுந்தவுடன் பணப் பெட்டியைத் திறப்பான். அதில் குவிந்து கிடக்கும் பணக் குவியலில் தன் இரு கைகளையும் நுழைத்துப் பொற் காசுகளையும், வெள்ளிக் காசுகளையும் அள்ளி எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு மகிழ்வான். இந்த இன்பம் தவிர வேறு இன்பம் அவனுக்குத் தெரியாது. பணம் ஒன்றுதான் அவன் அறிந்திருந்த கடவுள்.

இந்தப் பணக்காரன் வீட்டுக்கடுத்தாற்போல் ஓர் ஏழை குடியானவன், ஒரு குடிசை வீட்டில் வசித்து வந்தான். அன்றாடம் கூலி வேலை செய்து அவன் தன் பெரிய குடும்பத்தைக் காப்பாற்றி வந்தான். வேலை கிடைக்காத நாட்களில் அவன் குடும்பமே பட்டினி கிடக்கவேண்டியது தான். இருந்தாலும் அவன் தெய்வத்தை இகழவில்லை. எப்படியும் தன்னையும் தன் குடும்பத்தையும் கடவுள் காப்பாற்றுவார் என்ற முழு நம்பிக்கையுடன் அவன் தெய்வ வழிபாடு செய்து வந்தான்.

'இந்தப் புடவையை நான் கட்டினடால், பத்து வயசு குறைவாகவே என்னை மதிப்பிடலாம்னு எங்க அகத்துக்காரர் சொல்ருர்.'

'சரிதான், இப்போ உங்களுக்கு என்ன வயசாறது?'

'முப்பது ஆறது'

"இல்லை! இந்தப் புடவையை நீங்கள் கட்டிக் கொள்வதற்கு முன்னல் என்னென்று கேட்டேன்!"

ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு சோதிடன் வந்தான்; பணக்காரன் ரகசியமாகச் சோதிடனைத் தன் வீட்டுக்குள் அழைத்துச் சென்று தன் சாதகத்தை அவனிடம் காட்டி தனக்கு மேலும் செல்வம் பெருகுவதற்கு வழி உண்டா என்று ஆராய்ந்து கூறும்படி கேட்டான். சோதிடன் சிறிது நேரம் கணக்குப் போட்டுப் பார்த்து, "இன்னும் சிறிது காலத்துக்குள் உம் செல்வம் முழுவதும் உம் வீட்டுக்குப் பக்கத்தில் குடியிருக்கும் ஏழைக்குச் சென்று விடும். என் சோதிடம் ஒருக்காலும் பொய்க்காது" என்ருன்.

பணக்காரனுக்குப் பயம் எடுத்துக்கொண்டது. அவன்

சோதிடனைப் பார்த்து, "நீர் எனக்குக் கெட்ட பலனைச் சொன்னதால் நான் உமக்கு இனம் தரப்போவதில்லை. ஆனால் நீர் சொன்ன விஷயத்தை என் அண்டை வீட்டு ஏழைக்குச் சொல்லாமலிருப்பதாகச் சத்தியம் செய்வீரானால் நூறு வராகன் உமக்குத் தருகிறேன்" என்றான்.

சோதிடனுக்கு தான் சொன்ன சோதிடத்தில் நம்பிக்கையுண்டு. எப்படியும் அந்தப் பணக்காரன் கொஞ்ச காலத்தில் ஏழையாகிவிடுவானென்று அவனுக்குத் தெரியும். ஆதலால் வரும் வரும்படியை இழக்க விரும்பாமல் சோதிடன் பணக்காரன் கேட்ட உறுதிமொழியைச் சொல்லிவிட்டு நூறு வராகன்களையும் பெற்றுக்கொண்டு பணக்காரன் வீட்டை விட்டு வெளியே வந்தான்.

அப்போது பக்கத்து வீட்டு ஏழை தன் குடிவாயிலில் நின்று கொண்டிருந்தான். சோதிடன் அவனைச் சாடையாக அழைத்து ஊருக்கு வெளியே அழைத்துச்சென்று "அப்பனே! உனக்கு ஆண்டவனருள் விரைவில் கிட்டப் போகிறது. நீ பெருஞ்செல்வனாவாய். ஆதலால் உனக்கு எவ்விதத் துன்பங்கள் வந்தாலும், நீ இப்போதிருக்கும் குடிசையை விட்டு வெளியேறாதே" என்று சொல்லி விட்டுப் போனான்.

சோதிடன் போன பிறகு பணக்காரனுக்கு தன் பக்கத்து வீட்டு ஏழைமேல் கோபமும் பொறாமையும் உண்டாயின. அந்த ஏழையை அக்குடிசையை விட்டு வெளியேற்ற என்னென்னவோ முயற்சிகள் செய்தான். அதிகப் பணம் தருவதாகச் சொல்லி அக்குடிசையை விலைக்குக் கேட்டான். ஏழை அதற்கு இசையவில்லை. பயமுறுத்திப் பார்த்தான். அதற்கும் அவன் பணியவில்லை. இரவில் குடிசைக்கு நெருப்பு வைத்தான். அதைக் கண்டும் அவ்வேழை அக்குடிசையை விட்டு அகலவில்லை. சோதிடன் சொல்லில் அவ்வளவு நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டு விட்டது. எதற்கும் அசையாமல் குடியானவன் இருப்பதைக்கண்ட பணக்காரன் பயங்கொண்டு தன் சொத்துக்கள் எல்லாவற்றையும் விற்று, அவ்வளவு பணத்துக்கும் ஒரு வைரக் கல்லை வாங்கித் தன் முன் தலையில் முடிபோட்டு அந்துணியைத் தலையில் கட்டிக் கொண்டு "இனிமேல் என் செல்வம் எப்படி அந்தப் பிச்சைக்காரப் பயலுக்குப் போகும்?" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

"ஏதோ போட்டியிலே பெரிய பரிசு உங்களுக்கு விழுந்திருக்கு தாமே! என்னங்க?"

"ஆமாங்க! விழுந்திருக்குதுங்க! அதுதான் பினாலிலே சினிமாக்குப் போயிட்டு வர டிக்கெட் ஒண்ணு எனக்குக் கொடுக்கப் போறாங்க"

சில நாட்கள் சென்றன. ஒரு நாள் பணக்காரன் தன் ஊரிலுள்ள ஏரிக்குக் குளிக்கச் சென்றான். அப்போது ஏரியில் ஒருவருமில்லை. அதனால் அவன் தன் தலைப்பாகையை எடுத்துக் கரையில் வைத்துவிட்டுத் தண்ணீரில் முழுகிக்கொண்டிருந்தான். திடீரென்று ஒரு புயல் காற்றெழுந்தது. அத்துடன் இடியும் மின்னலும் மழையும் கலந்துகொண்டன. பணக்காரன் நடுத்தண்ணீரிலிருந்து கரையேறுவதற்குள் புயற் காற்று தலைப்பாகையை எங்கோ அடித்துக்கொண்டு போய்விட்டது. அதைக் கண்டு அப்பணக்காரன் மிக வருந்தினான். ஆனால் தன்னுடைய செல்வம் தனக்குப் பயன்படாது போய்விட்டாலும், சோதிடன் சொன்னபடி தன் அண்டை வீட்டுக்காரனுக்கும் கிட்டாது என்ற ஆறுதலுடன் வீடு வந்து சேர்ந்தான்.



பின்னும் சில நாட்கள் சென்றன. ஒரு நாள் அந்தக் குடியானவன் மீன் கடைக்குச் சென்று சில மீன்கள் வாங்கி வந்தான். அவற்றை அரிவாள் மணையிலிட்டு அரியும்போது ஒரு மீனின் வயிற்றிலிருந்து மிகுந்த பளபளப்புள்ள ஒரு வைரக் கல் வெளித் தெறித்தது. அந்தக் கல்லின் மதிப்பு அவனுக்குத் தெரியும். சோதிடன் சொன்ன வார்த்தை பலித்து விட்டதைத் தெரிந்து கொண்ட குடியானவன் அன்றிரவே தன் குடும்பத்துடன் வேற்றூருக்குப் புறப்பட்டு விட்டான். மேலும் சில மாதங்களுக்குள் அவன் பெரிய செல்வனாக விளங்கினான் என்று சொல்லத் தேவையில்லையல்லவா?

முதற் சிகிச்சை

☆

இதுவரையில் எலும்பு ஒடிந்தால் என்ன செய்வது, பூட்டு நழுவினால் என்ன செய்வது, சுளுக்கினால் கஷ்டப்படும்பொழுது என்ன செய்வது என்பதைப்பற்றி படித்திருப்பீர்கள். இந்த வகைகளில் இன்னும் ஒன்று பாக்கியிருக்கிறது. அதுதான் சதைகள் நீட்டப்படுதலும், கிழிக்கப்படுதலும்.

சதைகள் எந்த சமயங்களில் நீட்டப்படலாம் அல்லது கிழிக்கப்படலாம். நாம் உடற் பயிற்சி செய்யும்பொழுது சில சமயம் நமது சதைகள் நீட்டப்படலாம். சிலசமயங்களில் அதிக சிரமம் எடுத்துக்கொண்டு கசரத்து செய்தோமானல் நமது சதைகள் கிழிக்கப்படலாம்.

இதன் அடையாளங்கள் என்ன? சதைகள் நீட்டப்பட்டது என்று எதனுல் நிச்சயமாகச் சொல்லலாம்? அடிக்குட்பட்ட பாகத்தில் வலி அதிகமாயிருக்கும். இந்த வலி திடீரென்று வரும். மேலும் சுறுக்கென்று இருக்கும்.

அடிபட்ட அவயவம் வீக்கத்திற்கு உள்ளாகலாம். மேலும் நாம் அவயவத்தை உபயோகப் படுத்த முடியாதபடி வலி இருக்கும். அதுவும் தவிர அவயவத்தின் நரம்புகள் இழுக்கப்படுவதால் வேறு உபாதை இருக்கும். முதுகிலுள்ள சதைகள் நீட்டப்பட்டால் அடிக்குட்பட்டவனுல் நிற்கவும் சிரமமாயிருக்கும்.

இவ்வளவுதானு? வேறு ஏதாவது அடையாளம் இருக்கிறதா? அடிக்குட்பட்டவனுல் மேலும் கசரத்து செய்வது மிகவும் சிரமமாயிருக்கும். சிலசமயங்களில் அவனுல் மேலும் கசரத்து செய்யவே முடியாது.

இதற்கு முதற் சிகிச்சைஎன்ன செய்வது? வெகு சுலபம். முதற் சிகிச்சையும் அதிகம் கிடையாது. அடிக்குட்பட்டவனை முதலில் அவன் சௌகர்யப்படி உட்காரவோ அல்லது படுக்கவோ வைக்கவேண்டும். அடிக்குட்பட்ட பாகத்தை தாங்க மிருதுவான வஸ்துக்களை வைக்கவேண்டும்.

இதன் பிறகு அடிபட்டு அதிக நேரமாகாதிருந்தால் ஐஸ் ஒத்தடம் கொடுப்பது நலம். ஐஸ் அகப்படாவிட்டால் துணியை பச்சைத் தண்ணீரில் நனைத்து அதன்மேல் ஒத்தடமாகக் கொடுக்கலாம். அல்லது துணியை அடியின்மேல் கட்டி அதன்மேல் பச்சைத் தண்ணீர்விடலாம்.

அடிபட்டு அதிக நேரமாகியிருப்பதாக வைத்துக்கொள்வோம். இப்பொழுது என்ன செய்வது? வேறு விதமான சிகிச்சை இருக்கிறதா? அடிபட்டு அதிக நேரமாயிருந்தால் ஐஸ் ஒத்தடம் கொடுக்கக்கூடாது. இந்த சமயத்தில் வெந்நீர் ஒத்தடம்தான் கொடுக்கவேண்டும். இதை நன்கு கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

எலும்பு ஒடிதலுக்கும், அதனுடன் சேர்ந்த சில உபாதைகளுக்கும் பொது விதிகள் இருக்கின்றன அல்லவா? அதை இங்கு மீண்டுமொரு முறை வற்புறுத்துவது மிகவும் அவசியம்.

நாம் எப்பொழுதும் நம்மை டாக்டராகக் கருதக்கூடாது. டாக்டர் செய்யவேண்டியவற்றை நாம் செய்யக்கூடாது. இதை மீறிச் செய்தால் அதனுல் பலவேறு கஷ்டங்கள் உண்டாகலாம்

அடிபட்ட இடத்திலேயே அடிக்குட்பட்டவனுக்கு முதற் சிகிச்சை செய்வது நலம். அவசியம் நேரிட்டாலொழிய இடத்தை விட்டு அகற்றக்கூடாது. எலும்பு ஒடிதலுக்கு சிகிச்சை செய்யும் முன் புண், இரத்த உடைப்பு இவைகளை கவனிக்கவேண்டும்.

அடிபட்ட பாகத்தை எப்பொழுதும் ஸ்திரப்படுத்த வேண்டும். பாண்டேஜ் போடுவது மிகவும் அவசியம். மேலும் அதிர்ச்சி தாங்க மிருதுவான வஸ்துக்களை அடிபட்ட பாகத்தில் வைக்க வேண்டும்.

அடி மேலும் அதிகரிக்காமலிருக்க அடிபட்ட பாகத்தை முதலிலிருந்து தாங்கவேண்டும்.

மிகவும் முக்கியமானதென்னவென்றல் எந்த சமயத்திலும் எலும்பு ஒடிந்திருக்கும் என்று சந்தேகமிருந்தால் உடனே எலும்பு ஒடிதலுக்கான முதற் சிகிச்சை செய்வது மிகவும் நலம். அல்லது எலும்பு ஒடிதலுக்குள்ள அடையாளங்கள் கொஞ்சமிருந்தாலும் எலும்பு ஒடிதலுக்கான முதற் சிகிச்சையைத்தான் செய்ய வேண்டும். நாம் வேறு ஏதாவதாக இருக்குமா என்று யூகிக்கக்கூடாது. முதற் சிகிச்சையை எவ்வளவு சீக்கிரம் செய்கின்றேமோ அவ்வளவும் நல்லது.

ஹிந்தி உலகம் -हिन्दी जगत-

-பண்டிதஜி-

राजाजी की विदाई

*

राजाजी ने अब मद्रास राज्य के मुख्यमंत्री-पद से इस्तीफ़ा दे दिया है। अस्वस्थता के कारण ही उनको इस्तीफ़ा देना पड़ा। विधान-सभा के सदस्यों और सरकारी अधिकारियों से उन्होंने विदाई ले ली है। राजाजी की इस विदाई से राज्य की जनता खुश नहीं है। राजाजी जैसे उत्तम शासक के नेतृत्व से वंचित होने पर उसको दुख होना स्वाभाविक ही है। लेकिन अपने स्वास्थ्य-सुधार के लिए जब राजाजी ने अपना इस्तीफ़ा दिया, तब विधान सभा के सदस्य उसे अस्वीकार न कर सके।

विदाई के इस अवसर पर राजाजी की सेवाओं पर कुछ विचार करें, तो उनकी महत्ता हमें स्पष्ट होगी। सेवाओं के सही मूल्यांकन के लिए यह आवश्यक है कि हम ज़रा उन परिस्थितियों को याद कर लें, जिनमें राजाजी को दो साल पहले मद्रास राज्य के मुख्यमंत्री का पद स्वीकार करना पड़ा।

तब के सामान्य निर्वाचन के बाद राज्य की राजनैतिक परिस्थितियाँ बहुत चिन्ताजनक हो गयी थीं। सामान्य निर्वाचन में अप्रतीक्षित रूप से कांग्रेस की बड़ी बुरी हार हो गयी थी। विधान-सभा में कांग्रेस-दल को बहुमत नहीं मिला। कांग्रेस को अपदस्थ और अपमानित करने के लिए दूसरे दल सन्नद्ध थे। तब के पहले के कांग्रेस-शासन से जनता की प्रबल असंतुष्टि ही उस शोचनीय मनोभाव का मुख्य कारण था। स्वार्थ के लिए मौके का अच्छा उपयोग करके कम्यूनिस्ट दूसरे दलवालों के सहयोग से अपना मंत्रि-मंडल बनाने का प्रयत्न करते थे। कम्यूनिस्ट-शासन के ख़तरे से राज्य भर की जनता भयभीत थी। उस समय कुछ विवेकी सदस्यों ने सोचा कि राज्य को कम्यूनिस्ट-शासन से बचाने का एकमात्र उपाय है राजाजी का नेतृत्व मानकर चलना। कांग्रेसी सदस्यों ने भी यही सोचकर अपनी एक बैठक में, राजाजी से नेतृत्व ग्रहण करने की साग्रह प्रार्थना करते हुए सर्वसम्मति से एक प्रस्ताव पास किया। उस प्रस्ताव में यह भी बताया गया था कि मद्रास राज्य को कम्यूनिस्ट-शासन के ख़तरे से बचाने का यही एकमात्र उपाय है।

यद्यपि विधान-सभा के सदस्यों ने एक स्वर से यह प्रार्थना साग्रह की थी, तो भी लोगों ने सोचा कि अग्रनेता राजाजी, जो कभी भारत के गवर्नर-जेनरल के उच्चतम पद पर भी रह चुके हैं, राज्य के इस साधारण मुख्यमंत्री-पद पर रहना मंजूर नहीं करेंगे। इस कारण उनकी चिन्ता बनी रही। लेकिन कर्मवीर राजाजी के लिए पद कोई चीज़ नहीं; सेवा ही सबकुछ है। इसलिए राज्य और जनता की भलाई के लिए उन्होंने बड़ी उदारता के साथ सदस्यों की प्रार्थना स्वीकार कर ली। इस प्रकार दो साल पहले राजाजी मद्रास राज्य के मुख्यमंत्री हुए।

मुख्यमंत्री की हैसियत से जनता के कल्याण के लिए राजाजी की सरकार ने जो कुछ किया है, वह काफ़ी मशहूर है। शासन की अव्यवस्था और अधिकारी-वर्ग का भ्रष्टाचार दूर करने में राजाजी को अधिक देर न लगी। सामर्थ्य और सदाचार के लिए सुप्रसिद्ध राजाजी के नेतृत्व में भी अव्यवस्था और अनाचार कैसे चल सकता? शासन के इस सुधार से संतुष्ट अन्य गैर-कांग्रेसी सदस्य भी राजाजी की सरकार का समर्थन करने लगे। फिर एक-एक करके दूसरे कई मुख्य सुधारों को भी कार्यान्वित करने में राजाजी को कोई विशेष कठिनाई नहीं हुई।

रैशन के मामले में बहुत-से अनावश्यक नियंत्रणों को हटाकर वे जनता के बीच बहुत लोकप्रिय हो गये। अनावृष्टि, अतिवृष्टि और आंधी से पीड़ित लोगों को आवश्यक सामयिक सहायता देकर उन्होंने लोगों का कष्ट-निवारण किया। किफ़ायत से काम लेकर राज्य की दुर्बल आर्थिक स्थिति को सबल बनाया। तंजावूर जैसे कृषिप्रधान ज़िले में मीरासदारों और मजदूरों के संघर्ष और वैमनस्य के कारण जो अशान्ति फैली हुई थी, उसे एक विशेष कानून द्वारा दूर करके संतोष और सौजन्य के वातावरण में उत्पादन-वृद्धि को प्रोत्साहित करने का महत्वपूर्ण कार्य किया। उनके मंत्रीत्व-काल में मज़दूरों की समस्याएँ इतनी अच्छी तरह से हल होती थीं कि कभी कहीं कोई बड़ी हड़ताल नहीं हुई। सरकारी सेवकों की चिरकालीन शिकायतों पर सहानुभूति-पूर्ण विचार करके उन्होंने सेवकों के बच्चों को निःशुल्क शिक्षा और परिवार को निःशुल्क चिकित्सा की सुविधाएँ प्रदान कीं। बुनकरों के कष्ट-निवारणार्थ राजाजी ने जो महत्वपूर्ण कार्य किया है, वह भी सर्वविदित है। आंध्र राज्य का निर्माण अगर शान्ति और सद्भावना के साथ हो सका, तो उसके लिए भी राजाजी कम ज़िम्मेदार नहीं। मद्रास में मद्य-निषेध की इतनी सफलता का श्रेय भी राजाजी को ही है। सबसे बढ़कर राजाजी ने जिस अत्युत्तम कार्य के बीज बोये हैं, वह है शिक्षा-सुधार।

ऐसे महान नेता राजाजी ने आज हमारे राज्य के शासन से विदा लिया है। ईश्वर करे, वे स्वस्थ और चिरायु रहकर हमारा मार्गदर्शन करें।

विदा लेना விடைபெறுதல்
विदाई (பெ. பா.) பிரிவு
इस्तीफ़ा (ஆ. பா.) ராஜிநாமா
स्वास्थ्य (ஆ. பா.) ஆரோக்கியம்
अवसर (ஆ. பா.) मौका (ஆ. பா.) சந்தர்ப்பம்
मूल्यांकन (ஆ. பா.) மதிப்பீடு
सामान्य निर्वाचन (ஆ. பா.) பொதுத் தேர்தல்
चिन्ता (பெ. பா.) கவலை
चिन्ताजनक கவலையுண்டுபண்ணும்
अप्रतीक्षित எதிர்பாராத
हार (பெ. பா.) தோல்வி
बहुमत (ஆ. பா.) மெஜாரிட்டி
अपदस्थ करना பதவியிழக்கச் செய்தல்
सन्नद्ध தயாராய், ஆயத்தமாய்
शोचनीय வருந்தத்தக்க
सहयोग (ஆ. பா.) ஒத்துழைப்பு, கூட்டுறவு
ख़तरा (ஆ. பா.) ஆபத்து
भयभीत அரண்ட
बैठक (பெ. பா.) கூட்டம்
साग्रह பிடிவாதமான
सर्वसम्मति (பெ. பா.) ஏகோபித்த இணக்கம்
अग्र முன்னணி
उच्चतम மிக மிக உயர்ந்த
उदारता (பெ. பா.) பெரிய மனது, தாராள மனப்பான்மை
हैसियत (பெ. பா.) ஹோதா, முறை
अव्यवस्था (பெ. பா) சீர்கேடு
भ्रष्टाचार (ஆ. பா.) ஒழுங்கீனம்
कार्यान्वित करना நிறைவேற்றுதல்
नियंत्रण (ஆ. பா.) கட்டுப்பாடு
हटाना நீக்குதல்
अनावृष्टि (பெ. பா.) மழையின்மை
अतिवृष्टि (பெ. பா.) அதிக மழை
आंधी (பெ. பா.) புயல்
किफ़ायत (பெ. பா.) சிக்கனம்
कृषिप्रधान விவசாயத்தைப் பிரதானமாகக் கொண்ட
वैमनस्य (ஆ. பா.) மனத்தாங்கல்
फैलना பரவுதல்
वातावरण (ஆ. பா.) சூழ்நிலை
हल होना தீர்தல்
चिरकालीन வெகுநாளைய
शिकायत (பெ பா) குறை
सहानुभूतिपूर्ण அனுதாபம் மிகுந்த
निःशुल्क இலவசமான
प्रदान करना அளித்தல்
बुनकर (ஆ. பா.) நெசவாளர்
सर्वविदित எல்லோருக்கும் தெரிந்த
सद्भावना (பெ பா.) நல்லெண்ணம்
मद्य-निषेध (ஆ. பா.) மதுவிலக்கு
श्रेय (ஆ. பா.) பெருமை
बीज (ஆ. பா.) விதை
बोना விதைத்தல்
चिरायु தீர்க்காயுசுள்ள

जय हिन्द! जय हिन्दी!

குடும்ப வைத்தியம்

'குசசாமாமா'

சில சரும ரோகங்கள்

★

"படை மருந்து" என்று கண்ட விடங்களிலெல்லாம் விளம்பரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. எத்தனை ரகங்கள்தான் இப்படை மருந்தில்! ஆனால் இவை ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட வகையான சரும ரோகத்தில் தான் பயன்படக்கூடுமேயன்றி எல்லாவிதமான சருமரோகத்திலும் பயன்படுமா? படாதுதான்.

இடுப்பைச் சுற்றியும் ஒரு வகைப் படை வருவதுண்டு. முக்கியமாக ஸ்திரீகளுக்கு, அதிலும் 18 முழம் புடவையைச் சுற்றிச் சுற்றிக் கட்டுவோருக்குச் சரியாக தேய்த்துக் குளிக்குஞ் சீலமே இல்லாத அழுக்குப் பிரகிருதிகளுக்குத்தான் இது வருவது இயல்பு. கொஞ்சங் கொஞ்சமாக இப்படை வியாபித்துக் கொண்டே போய் இடுப்பு முழுவதையும் ஆக்ரமித்துக்கொள்ளும். நமைச்சலின் உபத்திரவம் அசாத்தியமாக விருக்கும். நாலு பேரிடையில் பேசிக்கொண்டிருக்கும்போது மானத்தை மறந்து சொரியச் செய்யும். இவர் உடுக்கும் புடவையுடன் சேர்த்துத் துவைத்துக் காயவைக்கப்படும் வேறு துணிகளின் மூலம் பிறருக்கும் இப்படை பரவும். இடுப்புக் கடுவன் என்றுஞ் சிலரால் குறிப்பிடப்படும் இந்நோய் உள்ளவர்கள், நமது குடும்பங்களில் உள்ள மிகச் சாதாரண பழக்கத்தை யொட்டி கலியாணம் முதலிய காலங்களில் வேறொருவர் உடையை "ஆசைக்காக" அணிவரேல், பிறகு இரவல் உடையைத் திரும்பக் கொடுக்கும்போது அத்துடன் இவ்விடுப்புக் கடுவனையும் சேர்த்துக் கொடுக்கும்படிதான் ஏற்படும். இப்படியாக இக்கடுவன் பகுஜன வியாபகம் பெறும்.

புழு வெட்டு என்று அழைக்கப்படும் மற்றொரு வகை சருமநோய் அநேகமாக இது நகக் கணுக்களை யொட்டிதானிருக்கும். தடித்ததான ஒரு வரம்பும் கட்டிக் கொண்டு சில சமயம் சீழ் பிடித்தும் இருக்கும். எனது அனுபவத்தில் இது அதிகமாகப் பெண்பாலரில்தான் வரக் கண்டிருக்கிறேன். ஒரே ஒரு ஆணுக்குத்தான் இந்நோய் அபூர்வமாக உண்டாயிருந்தது. இவருக்கு நகத்தை யொட்டிய சதையும் ஒருவிதம் ஸ்வரூபம் மாறி-விறகுச் சிதாள்போல் வளரத் தொடங்கியது.

தாடியைத் தினந்தோறும் மழுப்பிக்கொள்ளும் சீலம் சிலரிடமுண்டு. எவ்வளவிற் கெவ்வளவு மூர்த்தண்யமாக இதை மழுப்புகின்றனரோ அவ்வளவிற் கவ்வளவு மூர்த்தண்யமாகவே இத்தாடியும் வளர்ந்து எஃகுக் கம்பிகள்போல் உரம் பெற்றதாய்த் தீரும் பிறகு தினம் இருமுறை மழுப்பினாலும் போதாது என்ற நிலைக்கும் வந்துவிடும். இந்நிலையில் ஒட்டுவாரொட்டியாய் இவருக்கு இத்தாடிப் பிரதேசத்தில் ஒரு சரும நோய் உண்டாகும். இதை "பார்பர்ஸ் இட்ச்" என்றும் "ரேஸர் ஸெப்ஸிஸ்" என்றுமெல்லாம் பெயரிட்டழைப்பர். மயிர்க் கால்கள்தோறும் ஊசி, முனையளவு சீழ் கட்டி நிற்கும். குத்தல், வலிகளின் பாதை சொல்லி முடியாது. மறுநாள், மறுநாள் சீழ் வடிந்தோ உலர்ந்தோ விரணமாகி ஜலங் கசிந்து கொண்டு ஜுரமும் உண்டாகும். ஏதோ மருந்து தடவ உலர்ந்துவிடும். சகல ரோக நிவாரணியான சில ஊசி மருந்துகள் உற்ற துணையாய் உதவக்கூடும். இச்சிரங்குகள் காய்ந்து பொருக்கை உதிரும்.

ஒருவர்:—அடே! நீ இங்கேயா வேலை பார்க்கிறே, உன்னைப் பார்க்க றும் ஆறு மாசமா, எங்கெங் கெல்லாமோ சல்லடை போட்டு சலித்துவிட்டேன். இங்கேயாவது நீ கிடைச்சியே!

ஆனாலென்ன மறுநாள் தாடியை மழுப்பியதும் சிரங்கும் மறுபடி வந்துறும். அல்லது சிலநாள் இல்லாமலிருந்து பிறகு மறுபடியும் பழையபடியே வந்துவிடும். இது ஒரு ஓயாத வேதனைதான்.

பனைமரத்தின் மேற்புறம் போல் கருத்தும் தடித்தும் ஒரு வகைச் சருமரோகம். இதிலும் நமைச்சல் அதிகமிருக்கும். சொரிந்தால் ஒருவகை ஜலம் கசியும். ஜலம் படுமிடமெல்லாம் புண்ணாகும்.

இவ்விதமாகப் பலதரப்பட்ட ரோகங்களின் சிகிச்சை விஷயத்தில் கவனிக்கத்தக்கது ஒன்று. காளான் போன்ற ஒருவகைக் கிருமிகளின் விளைவாய் உண்டாகும் நோய்கள் சில. ஒட்டுவாரொட்டியாய்ப் பரவும் யாவும்

...வனதையே சேர்ந்தவைகளாயிருக்கும். இதற்காக உபயோகிக்கும் மருந்து இக்காளானையோ—அல்லது வளர்ந்து வந்திருக்கும் தழும்புகளையோ—பனைமரத்தின் மேற்புறம்போன்ற சருமத்தையோ — சிதாள்கள் போலும், மிருகங்களின் குளம்பு போலும் பரவி வரும் பாகங்களையோ அரித்துக்களையும் க்ஷாரகுணமுள்ளதாயும். பிறகு அவ்விரணத்தை ஆற்றக்கூடியதாயுமிருத்தல்வேண்டும். இதற்குக் கைகண்ட மருந்து "செரட்டைத் தைலம்" என்னும் மருந்துதான் அதிக விலை பிடித்ததல்ல. செய்து கொள்வதற்குச் சிறிது சிரமப்படவேண்டும்; செய்முறையைக் கவனமாகப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டியதும் அவசியம். பிறகு இச்செரட்டைத் தைலத்தை உபயோகிக்கும் பல விதங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். சிரமத்தைப் பாராது செய்து வைத்துக்கொண்டால் இம்மருந்து அனேகவிதத்தில் உதவுவதாகும்.

இச்செரட்டைத் தைலத்தைச் செய்யும் முறைக்குக் "குழித் தைல" முறை என்பர்.

முதலாவது இதற்கு வேண்டியது ஒரு மண் தோண்டி, இதன் அடியில் வெகு ஜாக்கிரதையாகச் சில வெகு வெகு சிறிய துவாரங்களைச் செய்யவேண்டும். குயவனிடம் முன் கூட்டியே சொல்லி வைத்து துடைப்பக்குச்சியால் குடத்தினடியில் இத்துவாரங்களைச் செய்வித்து பிறகு சூளையிலிட்டுக் கொளுத்தித் தரும்படி ஏற்பாடு செய்துகொள்ள முடியுமானால் அவ்வாறே செய்வித்தல் மிகவும் நல்லது.

மிகமிக மெல்லிய இரும்புக் கம்பிகளை சிறு துண்டுகளாக வெட்டிக்கொண்டு, இத்துவாரங்களின்மூலம் உள் நுழைத்து மறுபடியும் அடுத்துள்ள துவாரத்தின் வழியாக வெளியே நுழைத்து, இரு நுனிகளும் மண் குடத்தின் வெளிப்பக்கத்தில் இருக்கும்படி செய்து கொள்ளவும். பிறகு இந் நுனிகளையெல்லாம் ஒருவாறு ஒன்று கூட்டி, பானைக்கு வெளிப்புறத்தில் சுமார் இரண்டங்குல



நீளமுள்ளபடி ஏற்படுத்திக் கொள்ளவும்.

பிறகு, முற்றின தேங்காயின் ஓடுகள் (கொட்டாங் கொச்சி என்றும், செரட்டான் என்றும் இதைச் சொல்வர்) தேவையான வளவு சம்பாதித்து அவற்றை இடித்துத் தூளாக்கி மேற்படி மண் குடத்தில் முக்கால் பாகம் பூர்த்தியாகும் வரையில் அடைத்துக்கொள்ளவும். பிறகு குடத்தின் வாயைத் தக்கதொரு மண் தட்டினால் (இதை ஜானகி என்பர்) மூடிக் களிமண்ணைத் தேய்த்த துணியைச்சுற்றி சீலமண் செய்திடவும்.

பிறகு குடத்தின் அடிபாகத்துடன் பொருந்தி இருக்கத் தக்கதான ஒரு ஜாடியை எடுத்து, (இது கண்ணாடியல்ல. மண்ஜாடிதான்) அதன்மேல் முன் சொன்ன மண் குடத்தைக் கம்பிகள் ஜாடியின் உட்புறம் தொங்கும்படி வைத்துக் களிமண் பூசிக் கெட்டிப்படுத்திக்கொள்ளவும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட குடத்தையும் ஜாடியையும் களிமண் பூச்சுகள் நிழலில் உலரும்வரை ஒரு தினம் வைத்திருக்கவேண்டும். மாலையில் சுத்தமான ஓரிடத்தில் (குப்பை மேடு, ஸ்மசானம் போன்ற இடங்கள் கூடாது) பூமியைக் குழிக்கவேண்டும். இது, குழியினுள் குழியாக, இருக்க வேண்டும். அடியிலுள்ள குழி ஜாடியை வைத்திடுவதற்குப் போதுமானதாயும் அதன் மேற்குழி குடத்தை வைப்பதற்குப் போதுமானதாயுமிருக்க வேண்டும். இதுதான் கொஞ்சம் நச்சு வேலை.

பிறகு இதில் மேலே சொன்ன ஜாடியுடன் ஒன்றாய்ப் பிணைக்கப்பட்ட குடத்தை வைத்திடவும். குடம் சாய்ந்தோ சரிந்தோ இல்லாமல் நிமிர்ந்து இருத்தல் அவசியம். பிறகு படம் 4-ல் உள்ளது போல் குடத்தின் சுற்றுப் பக்கங்களிலும், அதன் மேலும் பூமி மட்டத்திற்கும் சற்று மேலாக விருக்க வரட்டிகளை அடுக்கிக் கொள்ளவும். பொடி செய்த செரட்டை ஒரு வீசை இருக்குமானால் சுமார் 100 வரட்டிகள் முதல் 120 வரட்டிகள் வரையில்

"இந்த சாதகப்படி உன் வாழ்க்கை ஒரே நிலையில் இருக்காதப்பா! சும்மா மேலும் கீழுமாவே ஓடிக்கிட்டிருக்கும்!"

"நீங்க சொல்லுவது அப்படியே உண்மைங்க, பொழுது விடிஞ்சு பொழுது போறவரைக்கும் எங்க கம்பெனி 'லிப்டி'லே ஏறிக்கிட்டும், இறங்கிக் கிட்டும் இருக்கிறதுதாங்க என் தொழிலே!"

இதற்குப் போதுமானதாகும். பிறகு தணலினால் பூமிக்கு மேலுள்ள வரட்டியைத் தீ மூட்டிவிட்டு அன்றிரவு விட்டு விடவும். மறுநாள் முழுவதும் கழிந்த பிறகு மாலையிலோ, அல்லது அதற்கும் மறுநாளோ–தீ எல்லாம் தன்னுறலாகத் தணிந்த பிறகு. சுற்றுமுற்றுமுள்ள சாம்பலை ஜாக்கிரதையாக எடுத்து விட்டுப் பிறகு மண் குடத்தையும் எடுக்கவும். ஒருக்கால் மண்ஜாடி மட்டும் அதன் குழியிலேயே நின்றுவிடும் மேற்குடத்தின் களிமண்பூச்சு நீங்கி ஜாடியிலிருந்து விடுபட்டதாய்த் தனியே வந்துவிடும். அப்பொழுது மண்ணோ சாம்பலோ ஜாடியில் விழாதபடி மிக ஜாக்கிரதையாகக் குடத்தையும் பிறகு ஜாடியையும் வெளியே எடுக்கவும். ஜாடியில் கருநிறமான எண்ணெய் இறங்கி இருக்கும். இந்த எண்ணெய்க்குச் செரட்டைத் தைலம் என்று பெயர். தனித்த இந்த எண்ணெய் படும் இடங்களில் எரிச்சலுண்டாகும். புண்ணாகிப் போகும். ஆயினும் கட்டுரையின் ஆரம்பத்தில் சொன்னதும் மற்றும் பல சரும ரோகங்களுக்கும் முறைப்படி உபயோகிப்பதால் இது நல்ல குணத்தைத்தரும். (1) அருகம்புல்லில் காய்ச்சிய தூர்வா தைலத்திலோ, (2) தனித்த தேங்காய் எண்ணெயிலோ (3) ஹிங்கு திரிகுண தைலத்திலோ (இதன் செய்முறை பன்முறை 'மித்திரனில்' வெளியாகியுள்ளது) (4) வாஸ்லைன் என்னும் பொருளுடனோ–ஒரு ஔன்ஸ் எடுத்து அதில் 10 முதல் 15 துளிகள் வரையில் செரட்டைத் தைலத்தைக் கூட்டி நன்குக் குலுக்கியோ குழைத்தோ சேரும்படிச் செய்து இடுப்புக் கடுவன் முதல் சகல சரும ரோகங்களிலும் மேல் பூச்சுக்கு உபயோகிக்கவும். ஒரே பூச்சில் நமைச்சல்குறைந்துவிடும்கசியுஞ்சலம் சீழ் முதலியவை காய்ந்து விடும். கிரமமாக படை முதலியவை அறவே ஒழிந்துவிடும். ஒருக்கால் செய்து வைத்துக் கொள்ளும் செரட்டைத் தைலம் வருஷக்கணக்கில் கையிலிருந்து பல பேருக்கும் உபயோகமாகும். செரட்டைத் தைலத்துடன் கூட்ட வேண்டிய எண்ணெய்தான் அவ்வப்போது சம்பாதிக்க வேண்டிய பொருளாகும்.

ஒன்றிரண்டுதரம் இதை உபயோகிக்கும்போது எரிச்சல் அதிகமாக உண்டாகி விரணமாகும்போல் தோன்றுமேல், மருந்தை நிறுத்தி ஒன்றிரண்டு தினங்கள் தேங்காய் எண்ணெயை மட்டும் பூசினால் குணமாகிவிடும். பிறகு செரட்டை எண்ணெயின் அளவைக் குறைத்து உடன் சேரும் எண்ணெயை அதிகமாக்கி–உபயோகிக்க அவ்வகை பாதைகள் ஏற்படாது. உபயோகிக்கும்போது ஏற்படும் அனுபவத்தையொட்டி செரட்டைத் தைலத்தின் அளவைக் கூட்டியோ குறைத்தோ இனப்படுத்திக் கொள்ளவும். ஒரே ஒரு பிணியாளிக்குத்தான் இச்செரட்டை தைலத்தை வேறு யாதொரு சாதனத்துடனும் கூட்டாமல் தனியாகவே உபயோகிக்க நேரிட்டது. அதனால் அமோக குணமும் உண்டாயிற்று.

குழந்தைகளுக்கு உபயோகிக்கும்போது மிக ஜாக்கிரதையாயிருத்தல்வேண்டும். தப்பித் தவறி கண்ணில் இத்தைலத்தை ஏற்க நேரிடுமாயின் தொந்தரவு விளையும். தாய்ப் பாலையோ பன்னீரையோ விட்டுக் கண்ணைக் கழுவுவதால் இந்த உபாதி உடனே நீங்கும். எதற்கும் ஜாக்கிரதையாக விருக்க வேண்டுமென்று எச்சரித்தல் என் கடமை. சிசுக்களுக்கு எக்காரணத்தாலும் இதை உபயோகிக்கவே வேண்டாம்.



ஆருடம்! ஜாதக பலன்!!

ஜனன கால விவரம் அல்லது முழுப் பெயர் சுமார் வயது. செய்யும் தொழில். கடிதம் எழுதும் நேரம் தேவை. 1 முதல் 5 எதிர் காலக் கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ 2.

ஒருவருஷத்திற்கு மாதவாரி பலன் ரூபா 6. முக்ய யோகாம்சங்களும் சுருக்கமான பலனுடன் ஒரு ஜாதக குறிப்புக்கு ரூ. 5. ஒரு தசைக்கு புக்திவாரி பலன் எழுத ரூ. 10. கிரஹசார தோஷம் நீங்கி, சகல நன்மைகளும் உண்டாவதற்கு "விஜய ரக்ஷணி கவசம்" 1-க்கு ரூ. 7-0-0. பிரத்யேக ரக்ஷை ரூ. 100. வி. பி செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist,
Triplicane : Madras-5



மதுரையில் சித்திரா பௌர்ணமியன்று ஸ்ரீ கள்ளழகர் குதிரை வாகனத்தில் வைகையாற்றுக்கு எழுந்தருளியபோது எடுத்த படம்.



பண்டித நேரு சிதம்பரத்துக்கு விஜயம் செய்தபோது காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில் பேசினார்; கூட்டத்தின் ஒரு பகுதியைக் காட்டும் படம் இது.

தையல் கலையும், விஞ்ஞான முறையும்

ஏ. சுகுமார், டி.எம். டி.சி.ஏ.(லண்டன்)

2

ஆடையின் முக்கிய தன்மை

கலையிலும், அல்லது தொழிலிலும் கடைசிவரையில் சிறந்ததும், சுலபமானதுமான வேலை வேறு இல்லையென்று நாம் நினைத்தபோதிலும், கஷ்டமான ஒரு சில விஷயங்கள் தையல் வேலையில் இருக்கத்தான் செய்கிறது. (திரும்பத் திரும்ப நான் சொல்லி வற்புறுத்துவதில்) துணியின் தன்மையும்,பாவனையுமன்றி கத்தரிக்கும் நுணுக்கமும் அலக்ஷியமாக விட்டுவிடுவதும் இருக்கத்தான் செய்கிறது.

நம்மைப்போல் பலர் பல கலைகளில் சம்பந்தப்பட்டவரை நோக்கும்போது, எதிர்பொருளின் ஜாமட்ரி விதிகளின் முறைப்படி, பொருளின் சம அளவை கவனித்து செய்ய இயலாமற்போனாலும், அதே சமயத்தில் அவர்கள் உபயோகிக்கும் பொருளின் தன்மையை அறிந்து தாங்கள் நினைத்தபடி செய்துவிடுகிறார்கள். தற்கால தையல் வேலையில் அவரவர்கள் உபயோகிக்கும் துணிகளின் இயற்கைத் தன்மைகளை அறிந்துக்கொள்ளாமல் அசட்டையாய் இருந்துவிடுகிறார்கள். அது அவரவர்களுடைய உணர்ச்சி, ஊக்கம், தக்க வழியுடன் பொறுமையான ஆராய்ச்சி செய்து இயற்கைத் தன்மையுடைய அல்லது குன்றிய பொருள்களுடன் வேலை செய்யும் மற்ற கலைகளைப்போல் விதிகளை அனுசரிக்க வேண்டியிருக்கிறது. (அதாவது செயற்கைப் பொருள்கள்) துணியின் முதன்மையான தன்மை, இயல்பு, செயற்கை விதிகள் நன்குக நுணுக்கமுடன், தெரிந்திருந்தாலும், அதனின் பூரண மேற்கண்ட பிரச்னைகளையும் நன்குக சரியான முறைப்படி கெடுதலில்லாமல் தொடர்பு கொள்ள தெரியவேண்டிவருகிறது.

ஒரு உடையை நிச்சயிப்பது

முதலில் தேவையான பொருளின் (உடலின்) சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரிவுகளின் மேற்பரப்பு அளவுகளை ஒன்று சேர்த்து திட்டமாக்கி ஒரு தேவையான பொருளாய் ஒன்று சேர்க்கும்போது உடையாக மாறுகிறது.

முதல் ஆராய்ச்சி

ஒரு சிற்பி தான் மனதில் எண்ணிய சிலையை தயாரிக்க பல முக்கிய ஸ்திர அங்கங்களாக பிரித்து அதன் உருவத்தை நிர்மாணிக்க அதற்குவேண்டிய பளிங்குக் கட்டிகளை (கற்களை) முதலில் ஆராய்ந்து தேர்ந்தெடுத்துக்கொள்பவர்போலும், ஒரு கத்தரிப்பவர் (கட்டர்) உடையை உண்டாக்க முதலில் அளவுகளை வரைந்துகொண்டு ஒவ்வொரு பிரிவுகளின் முக்கிய அளவுகளையும் ஆராய்ந்து தெரிந்துகொண்டால், ஒரு உடையை சிறந்த முறையில் தயாரிக்க அவர் திட்டங்களும், மாதிரியும் உதவுகிறது.

உதாரணமாக ஒரு பிரச்னையை கவனிப்போம்:—ஒருவேளை எளிய முறையில், ஒருவரின் மார்பகத்திலிருந்து புட்டத்தின் வரை கீழ்காணும் அளவுபடி மார்பு 40" (செஸ்ட்) இடுப்பு 40" (வெயிஸ்ட்) புட்டம் 40" (ஸீட்)-ம், மார்பிலிருந்து புட்டம் வரையிலும் 15" தாரமும், 1" அங்குலம் மேற்படி அளவுகளில் விட்டுக்கொடுத்தும், உடையை தயாரிக்கவேண்டுமென்று வைத்துக் கொள்வோம். ஒரு நீண்ட சதுர அதாவது 41"$\times$15" துணி மார்பிலிருந்து புட்டம் வரை செங்குத்தான வகையில், விரைப்பில்லாமல் கச்சிதமாக உபயோகிக்கக்கூடுமா?

நீண்ட சதுர துணி கூடுமானவரை முழு இடத்திலும் உபயோகிக்கவேண்டுமானால், அதற்கு உருவமற்ற துணிகளைக்கொண்டு சரியான இடங்களில் தகுந்த முறையில் உதவக்கூடும். ஏனெனில் படத்தின் அளவுப்படி அதன் நீளத்தைக் குறைத்துவிடுகிறது. அம்மாதிரி துண்டு துணியின் உதவியால் செங்குத்தான முறையில் கச்சிதமாகவும், சரியானபடி மார்பு அளவுகளில் படிந்துவிடுகிறது மட்டுமல்லாமல் செங்குத்தான அளவினால் மார்பு, இடுப்பு, புட்டம் முதலியவைகளுக்கும் எடுத்துக்கொள்ளமுடியும். அதன்படியே குறுக்களவிலும் கவனிக்கத்தக்கது. ஆனால் இது முறைப்படி இல்லை. அதனால் இம்மாதிரி துணியின் அளவினால் மேற்கண்ட பரப்பு அளவுகளுக்கு பற்றுக்குறையாகிவிடுகிறது.

படத்தில் காண்பதுபோல் முதலில் குறுக்கு பாகத்தின் மூன்று பிரிவுகளும் ஒன்றாய் இருப்பதில்லை. அதாவது (மார்பு, இடுப்பு, புட்டம்) நிகழ்ச்சியாக 1 என்ற மார்பின் பாகம் சாதாரணமாக 2 என்ற இடுப்பு 3 என்ற புட்டத்தின் பாகத்தைவிட முன்பக்கம் குறுக்களவில் அதிகமாகவே காணப்படுகிறது. (சுற்றளவு 1 (ரேடியஸ்) படம் 1, 10, 11 கோடுகளையும் கவனியுங்கள்) இடுப்பின் குறுக்கு பாகமும், மார்பு, புட்டம் இவையின் எந்த இரண்டு அங்குல (2") வெளி-அளவை உள்ளடைகிறதோ, அதே 5-லும், 6-லும் காட்டியபடி (40" மார்பளவும் 40" இடுப்பளவில் மேற்கொண்டு அப்படியே இருக்கும்) புட்டத்தின் குறுக்களவு 7-ல் உள்ளபடி படம் 2 இடுப்பு, மார்புகளின் குறுக்களவைவிட அதிகமாகவே காணப்படுகிறது. அதாவது 8, 9-ல் உள்ளபடி 7-10; கோடுகளை கவனிக்கவும்.

செங்குத்தான மேலளவுகள்

7-7; 8-8 9-9-ல் காட்டியபடி மூன்று குறுக்களவுகளின் பல மாறுதல்களைக் கூட செங்குத்தான மேலளவினால் காணலாம். இந்த மூன்று குறுக்களவும் சரியான வட்டமாகவும் (சர்கிள்) அல்லது கிட்டத்தட்ட வட்டமாகவும் இல்லை; அதனால் அதை நான்கு மூலை சதுர அளவுகொண்டு (புள்ளியிட்ட (சதுர) கோடுகளை கவனிக்கவும்) அதன் உருவத்தை உருவாக்கவேண்டியுள்ளது. மூன்று குறுக்களவுகளின் (சதுரங்களின்) நடுவில் காணும் நேரான நடு கோட்டை கவனிக்கும்போது, இடுப்பிற்காக, முக்கியமாக புட்டத்தின் பின்புறபாகம் அதிகமான சுற்றளவைக் காட்டுகிறது.

அதாவது முக்கியமாக இம்மாதிரி ஏற்றத்தாழ்வும், மேடு பள்ளங்களும் (மூன்று படங்களின் குறுக்குப் பாகத்தின் படம்) ஆராய்ந்து கணக்கிட்டு ஒரு உருவத்தின் மாதிரியை வரைந்து வித்யாசங்களை கண்டு வேலை செய்ய வேண்டும்.





பம்பாய்க் கடிதம்

★

"சினிமாப்படங்களை ஜனங்களுக்கு காண்பிக்கலாமென்று உத்தரவு கொடுக்கும் "மத்திய தணிக்கை போர்டை" அப்படியே தூக்கி எறிந்து, நியாயம் வழங்கும் ஒரு புதிய தணிக்கை போர்டை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்கிறேனா, இல்லையா, பாருங்கள்," என்று பெயர்பெற்ற நடிகரும் பட முதலாளியுமான ஸ்ரீ பிரேம்நாத் பம்பாயில் மார்பைத் தட்டிக்கொண்டு உறுமிக்கொண்டிருக்கிறார். காரணம் இதுதான்.

ஸ்ரீ பிரேம்நாத் சமீபத்தில் அவருடைய "கோல்கொண்டாவின் கைதி" என்னும் படத்தை பம்பாய் சென்ஸார் போர்டுக்கு காண்பித்தார். முதலில், சென்ஸார், அப்படத்தை ஆமோதிக்கவில்லை. பிறகு, மறுபடியும் அவர் கேட்டுக்கொண்டதன்பேரில், மத்திய சென்ஸார் போர்டின் ரிவைசிங் கமிட்டியார் சில சீன்களை எடுத்துவிட்டு காண்பிக்கலாமென்று உத்தரவிட்டனர். அப்படியே, ஸ்ரீ பிரேம்நாத் தம் படத்தை வெளியிட ஏற்பாடுகள் செய்தார். பிறகு இந்திய சர்க்காரின் மந்திரி ஸ்ரீ பி. வி. கேஸ்கர் ஸ்ரீ பிரேம்நாத்தை டெல்லிக்கு கூப்பிட்டனுப்பினர். அவரும், மற்ற மந்திரிமார்களும் அப்படத்தைப் பார்த்து இன்னும் அனேக சீன்களை எடுத்தெறிந்தால் படத்தை ஜனங்களுக்கு காண்பிக்கலாமென்று உத்தரவிட்டார்கள். மொத்தம் 24 சீன் கட்டங்களை எடுத்துவிடவேண்டுமென்று கட்டளையிட்டார்கள். இது மிகவும் அநியாயமென்று அறிந்து, இந்தியபட முதலாளிகளின் சங்கத்தார் ஸ்ரீ கேஸ்கரிடம்முறையிட்டு படத்தை ஜனங்களுக்கு காண்பிக்க உத்தரவு கேட்டார்கள். சர்க்கார் குறைந்தது 7 சீன்களையாவது எடுத்தால்தான், படத்தைக் காண்பிக்கலாமென்று தீர்மானித்துவிட்டார்கள்.

இந்தியா சுயராஜ்யம் அடைந்த பிறகு மக்களின் உண்மையான கஷ்

'மதுர்மிலா'வில் நிகர் சுல்தானாவும், மஹிபாலும்

ஏ வி. எம். 'அந்த நாளி'ல் சூர்யகலாவும், சிவாஜி கணேசனும்

ஸினே பிளேயாஸ் 'பிர் ஹா னி'ல் மீனுகுமாரி

டங்களையெல்லாம் தத்ரூபமாக இப்படத்தில் எடுத்துக்காட்டியிருக்கிறார் ஸ்ரீ பிரேம்நாத். அதனால்தான், சர்க்கார் இப்படத்தை சுலபமாக "பாஸ்" செய்ய மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். இந்தியா சுயராஜ்யம் அடைந்தும், மக்கள் எம்மாதிரி சுகமடைந்தார்கள் என்று ஸ்ரீ பிரேம்நாத் கேட்கிறார். இது சர்க்காருக்கு பிடிக்கவில்லை, தம் படத்தை பூராவாக சென்ஸார் "பாஸ் செய்யாததால், ஸ்ரீ பிரேம்நாத் ஹைகோர்ட்டில் சர்க்காருக்கு விரோதமாக வழக்கு தொடங்க ஏற்பாடுகள் செய்துவருகிறார்.

பிலிமிஸ்தானின் "நாஸ்திக்" என்ற படத்தையும் சென்ஸார் "பாஸ்" செய்யவில்லை.

தி. மா. ராமச்சந்திரன்.

நக்ஷத்திரமாக குறுக்குவழி!

பிரபல நக்ஷத்திரமாக விளங்க வேண்டும் என்றால் அதற்கான குறுக்கு வழி ஒன்று உண்டு. அதை அறிந்தவர் பிரெஞ்சு நடிகையான ஸிமோனே ஸில்வா.

இவர் அநேக படங்களில் எவ்வளவோ பிரயாசைபேரில் இடம் பெற்று சிரமப்பட்டு நடித்தும் புகழ்பெற முடியவில்லை, சென்ற வாரம் கான்ஸில் அநேக சினிமா நட்சத்திரங்கள் தங்கியிருந்த சமயத்தில் இவர் முக்காலே அரைக்கால் நிர்வாணத்துடன் படம் பிடிக்க அனுமதித்தார். அவ்வளவுதான் புகழ்பரவ ஆரம்பித்துவிட்டது.

இவர் இதுபற்றி கேட்கப்பட்டபோது மரிலீன்மன்றோ இம்மாதிரி முக்கால் நிர்வாணமாக காலண்டர் படங்களுக்காக படமெடுக்க அனுமதித்துதானே பிரபலமானார். நான் மீண்டும் இதையே பின்பற்றப் போகிறேன் என்றார்.

இவர் இம்மாதிரி மீண்டும் முக்கால் நிர்வாணமாக நிற்க அவசியமில்லாது போய்விட்டது. அவருக்கு ஹாலிவுட்டில் 7 வருஷ காண்ட்ராக்ட் கிடைத்துவிட்டது. சார்லி சாப்ளினின் ஸ்டுடியோவை வாங்கியவர்கள் இவரை நடிக்க ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள்.—நேபன்.

துரிதமாகப் படங்கள் தயாரிக்க எம் ஜி எம். முயற்சி

1954–55வது வருஷத்தில் மிகத் துரிதமாகப் படங்களைத் தயாரிக்க மெட்ரோ கோல்ட்வின் மேயர் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. துரிதமாகப் படமெடுக்கவேண்டுமென்றால் நமது முதலாளிகள் முதன் முதலாக டைரக்டர்களையும், நட்சத்திரங்களையும் தேடிச் செல்வார்கள். ஆனால் எம். ஜி. எம். கம்பெனியார் முதன் முதலாக 22 எழுத்தாளர்களை அமர்த்தி நல்ல கதைகளைத் தயாரிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த நாட்டுப் படங்கள் ஏன் உயர்தரமாயிருக்கின்றன என்பதை இதிலிருந்தே வாசகர்கள் ஊகிக்கலாம்.



சிதம்பரத்தில் அகில இந்திய எழுத்தாளர்கள் மகாநாட்டை பிரதம மந்திரி ஸ்ரீ நேரு ஆரம்பித்து வைத்தார்.



அண்ணாமலை நகரில் உப அத்யக்ஷகரின் விடுதியில் சாரணிகளின் மரியாதை அணிவகுப்பை நேருஜி பார்வையிட்டார்.

Regd. No. 2514

சுதேசமித்திரன் புத்தகசாலை

விக்டரி ஹவுஸ் :: மவுண்ட் ரோட் :: சென்னை.

அடியிற்கண்ட ரயில்வே பிளாட்பாரங்களில் எமது புத்தகசாலைகள் இருக்கின்றன.

ரயில்வே ஸ்டால்கள் :

1. பெங்களூர் க. மெண்ட்
2. செங்கற்பட்டு ஜங்.
3. கோயமுத்தூர் ஜங்.
4. கடலூர் என். டி.
5. திண்டுக்கல் ஜங்.
6. ஈரோடு ஜங்.
7. கரூர்
8. காசரகாட்
9. கும்பகோணம்
10. மதராஸ் பீச்
11. மதுரை ஜங்.
12. மானாமதுரை ஜங்.
13. மாயவரம் ஜங்.
14. ஒலவக்கோடு
15. பொள்ளாச்சி ஜங்.
16. ரெய்ச்சூர்
17. தாம்பரம்
18. தென்காசி ஜங்.
19. திருநெல்வேலி ஜங்.
20. திருப்பதி
21. திருப்பூர்
22. திருத்துறைபூண்டி ஜங்.
23. திருவாரூர் ஜங்.
24. திருச்சி கோட்டை
25. திருச்சி ஜங்.
26. தூத்துக்குடி
27. விழுப்புரம் ஜங்.
28. விருதுநகர் ஜங்.
29. விருத்தாசலம் ஜங்.

மேற்படி இடங்களில் எல்லாவிதமான இங்கிலீஷ், தமிழ் புத்தகங்களும் தினசரி, வாரப் பத்திரிகைகளும், அமெரிக்கா. இங்கிலாந்து முதலிய இடங்களில் பிரசுரமாகும் வாரப் பத்திரிகைகளும், மாதப் பத்திரிகைகளும் கிடைக்கும்.

மானேஜர்

சுதேசமித்திரன் புத்தகசாலை,

விக்டரி ஹவுஸ் மவுண்ட் ரோட், சென்னை.

☞ தலைமை காரியாலயத்திற்கு வருபவர்கள் **ELLIS ROAD** வழியாக வரும்படி கோரப்படுகிறார்கள்.

144106

Printed and Published by N. RAJAGOPALAN at the "Swadesamitran" Press, "Victory House", Mount Road, Madras, Editor: C. R. SRINIVASAN, B. A.